

ISSN 3093-5210

# எழுநா

இதழ் 35

ஜூன் 2025

## இயக்குநர் சபை

**கணேசானந்தன் சசீவன்**
ஆளுகை

**தில்லைநாதன் கோபிநாத்**
வெளியீடு

**கனகலிங்கம் சுகுமார்**
வளத்திரட்டல்

## வெளியீட்டுக்குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**விஜயதர்சினி தினேஸ்**
முகாமைத்துவம்/ கற்கைவட்டம்/
நிகழ்வுகள்/விநியோகம் / ஊடக ஒருங்கிணைப்பு

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
நகல் திருத்தம் / நூல் தயாரிப்பு

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம் / பரவலாக்கம் /
அச்சு ஒருங்கிணைப்பு

**தனுஜன் சுந்தரலிங்கம்**
ஆவணப்படம்

## தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

**ரவீந்திரன் கருப்பையா**
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

**பழனிவேலன் ஞானேசகர்**
அட்டை வடிவமைப்பு

**வேணி ஆனந்த**
சஞ்சிகை வடிவமைப்பு

**கௌரிகாந்தன் சித்தாந்தன்**
மெய்ப்புபார்ப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புப்பார்ப்பு

## வளவாளர்கள்

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு

**தங்கராஜா பிரபாகரன்**
மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**சுஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள்

**கணபதிப்பிள்ளை சர்வானந்தா**
விநியோகம்

## ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு

**தமிழ் ஊடகத் திரட்டு**
ஆவணப்படம்

**ஆதிரை வெளியீடு**
ஆவணப்படம்

**நிகரி**
ஆவணப்படம்

**நாளை வெளியீடு**
ஆவணப்படம்

## நிதிப்பங்களிப்பாளர்கள்

**கனகலிங்கம் சுகுமார்**
நூல் தயாரிப்பு / உசாத்துணை சேவை

**கதிர் சயந்தன்**
ஆவணப்படம்

**நடராஜா முரளிதரன்**
ஆவணப்படம்

## கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**நடராஜா முரளிதரன்**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

## கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

**கனகலிங்கம் சுகுமார்**
ஐக்கிய இராச்சியம்

**கணேசானந்தன் சசீவன்**
ஐக்கிய இராச்சியம்

**இ. பத்மநாப ஐயர்**
ஐக்கிய இராச்சியம்

**சதீசன் தனபாலசுந்தரம்**
ஐக்கிய இராச்சியம்

**எஸ்.கே.விக்னேஸ்வரன்**
கனடா

**இளங்கோ**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**
நோர்வே

**சுவர்ணலதா செந்தில்குமார்**
அவுஸ்திரேலியா

**தில்லைநாதன் கோபிநாத்**
அவுஸ்திரேலியா

**அசோக் யோகன் கண்ணமுத்து**
பிரான்ஸ்

## நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

**சிறகுகள் அமையம்**
யாழ்ப்பாணம்

**சத்தியமனை நூலகம்**
யாழ்ப்பாணம்

**கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
வவுனியா

**சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம்**
மட்டக்களப்பு

**'கா' கலை இலக்கிய வட்டம்**
மட்டக்களப்பு

**திரைப்படக் கழகம்**
மட்டக்களப்பு

**ஏறாவூர் வாசிப்புவட்டம்**
மட்டக்களப்பு

**தளம் கட்டமைப்பு**
திருகோணமலை

**கலை இலக்கிய வட்டம்**
பதுளை

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**
கொழும்பு

## விநியோகப் பங்காளர்கள்

**பனுவல் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

## அச்சுப்பதித்து விநியோகிப்போர்

**நாளை வெளியீடு**
கனடா



ISSN 3093-5210


# எழுநா

## இதழ் 35

**அட்டைப்படம்**
மறு ஆக்கம் செய்யப்பட்ட, பாப்லோ பிக்காசோவின் 'The Charnel House' எனும் ஓவியம்; மனிதப் புதைகுழி எனப் பொருள்தரக் கூடியது.
*Source: moma.org*


## கொற்றம் ஆய்வு துறைசார் ஆலோசகர் குழு

**ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**கந்தையா ரமணிதரன்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஸ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்



## தொடர்பிற்கு

மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

முகவரி:
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி

# உள்ளே...


காலனித்துவகால அரசியல்:
வர்க்கமும் சாதியும் — பகுதி 1,2 03
-ஆங்கில மூலம்: குமாரி ஜெயவர்த்தன
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

இடும்பன் பூசை 20
-தி. செல்வமனோகரன்

போரின் பின்னரான அறம்:
பறைதலும் பாடுதலும் 28
-மீநிலங்கோ தெய்வேந்திரன்

இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர்
அந்தரப் பிழைப்பு நாடகம்: சமூக
மாற்றத்துக்கான முன்னோடி அரங்க முயற்சி 36
-எம். எம். ஜெயசீலன்

நூதன உலகின் நுழைவாசலில் 45
-கார்த்திகேசு இந்திரபாலா

ஒற்றையாட்சி அரசின் தோற்றம்
— பகுதி 1,2,3 50
-ஆங்கில மூலம்: ஏ.ஜே. வில்சன்
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

தொல்பொருட்களின் தேதிக்கணிப்புகள்
(The Dating of Archaeological Artefacts) 72
-சிவ தியாகராஜா

பிள்ளைப்பேறும் குழந்தைகள்
சார்ந்த வழக்காறுகளும் 84
-எம். ஐ. எம். சாக்கீர்

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில்
வலிகாமம் — மல்லாகம் 90
-இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

கூத்து இன்றுவரை கிராமங்களில்
நிலைபெற்றிருப்பதற்கான காரணங்கள் — பகுதி 1 95
- சின்னையா மௌனகுரு

தமிழர்களும் தேசமும்: இந்திய — இலங்கைத்
தமிழர்களின் தேசிய அடையாள அரசியல்
மீதான ஒப்பீட்டு ஆய்வு — பகுதி 3 102
- சிவராஜா ரூபன்

மறுவாசிப்பில் நாவலர் 112
-நடேசன் இரவீந்திரன்

ஈழத்துப் பதிப்பாசிரியர்களும் பதிப்பு
நெறிமுறைகளும் : அறிமுகம் 119
- இளஞ்செழியன் சண்முகம்

அரைகுறை மனித உரிமை நடவடிக்கைகள்:
போருக்குப் பிந்தையகாலத்தில்
பொறுப்புக்கூறலைத் தவிர்த்தல் — இலங்கை
பகுதி 2,3 126
- ஆங்கில மூலம்: கேட் குரோனின் - ஃபர்மான்
தமிழில்: வின்சென்ட் போல் சந்தியாப்பிள்ளை

1921 தொடக்கம் 1949 வரையான
காலகட்டம்: ஒற்றையாட்சிக்குள்
சமவாய்ப்பு 142
- சி. அ. யோதிலிங்கம்

ஊக்கி (Uki): தொழில்நுட்பத்
துறைக்கு வடக்கின் மாற்று வழி! 150
- ஆங்கில மூலம்: ஜெகன் அருளையா
தமிழில்: த. சிவதாசன்

பொன்னர், சங்கர் — மரபும் மாற்றமும் 155
- அருணாசலம் லெட்சுமணன்

வடக்கு — கிழக்கு மாகாணங்களின்
சமூக நலத்துறையும் அவற்றின்
பொருளாதார ரீதியிலான பங்களிப்பும் 161
- அமரசிங்கம் கேதீஸ்வரன்

மூலோபாயப் பகுதி பற்றிய அடிப்படைத்
தகவல்கள் — பகுதி 3 167
- சுப்ரமணியம் சிவகுமார்

இலங்கை மலையகத் தமிழரின் கலைகளும்
சமூக உருவாக்கத்தில் அதன் பாத்திரமும் 174
- பொன் பிரபாகரன்



● கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. 'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

# காலனித்துவகால அரசியல்: வர்க்கமும் சாதியும்

பகுதி 1

'இலங்கையின் அரசியல் 1900 – 1981: பன்முகநோக்கு' என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்றுக் கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

***ஆங்கில மூலம்: குமாரி ஜெயவர்த்தன***

காலனித்துவ அரசியலில் வர்க்கமும் சாதியும் (*Class and Caste in National Politics*) என்னும் தலைப்பில் அமையும் இக்கட்டுரை *'Nobodies to Somebodies: The Rise of Colonial Bourgeoisie in Sri Lanka'* என்னும் நூலின் 18 ஆவது அத்தியாயத்தின் மொழிபெயர்ப்பாகும். 1833 முதல் 1948 வரையான காலத்தில் இலங்கையின் தேசிய அரசியலில் வர்க்கம், சாதி என்பனவற்றின் வகிபாகம் பற்றி ஆராயும் இக்கட்டுரையை பொருத்தம் கருதி இத்தொடரில் வெளியிடுகின்றோம்.

இலங்கை முதலாளிகளிடையே பழமைவாதிகள், மிதவாதிகள் என்ற இரு பிரிவினர் இருந்தனர். இவ்விரு பிரிவினரும் ஏகாதிபத்தியத்தில் தங்கியிருப்போராகவும் அதன் விசுவாசிகளாகவும் இருந்தனர். இவ்விடயத்தில் அவர்களிடையே பிரதான முரண்பாடுகள் என்று எவையும் இருக்கவில்லை. ஆயினும் இவ்விரு பிரிவினர்களிடையே அரசியல் விடயத்தில் சில பிளவுகள் ஏற்பட்டன. கொய்கம சாதியினரான சிங்கள முதலியார்கள் பிரிவு, ஏனைய சமூகங்களின் பழமைவாதிகளுடன் ஒன்று சேர்ந்து, இருந்துவரும் நிலையில் மாற்றங்கள் எதுவும் இல்லாமல், தமது நலன்கள் தொடர்ந்து பேணப்படுவதையும் பாதுகாக்கப்படுவதையும் விரும்பினர். இப்பழமைவாதிகள் கொய்கம, கராவ, சலாகம, துராவ, வகும்புர, நவண்டன ஆகிய சாதிகளில் இருந்தும் பிறசாதிகளில் இருந்தும் தோன்றிய புதுப்பணக்காரர்களை வெறுத்தனர். இச்சாதிகளில் இருந்து தோன்றிய புதுப்பணக்காரர்கள் ஏகாதிபத்திய ஆட்சி என்ற வரைசட்டகத்துள் நின்றுகொண்டே கொய்கம முதலியார் வகுப்பின் 'நிலமானிய'ப் பகட்டையும், அவர்கள் அனுபவித்த சலுகைகளையும் கேள்விக்கு உட்படுத்தியதோடு அல்லாமல், தமக்கும் சமத்துவ அந்தஸ்தைக் கோரினர்; மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகத்தையும், ஆண்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படும் வாக்குரிமையுடன்கூடிய அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தையும் கோரலாயினர்.

ஐரோப்பாவில் புதிதாக எழுச்சி பெற்ற முதலாளித்துவ வகுப்பு நிலமானிய வகுப்பின் சலுகைகளுக்கு எதிராகவும், சர்வாதிகார முடியாட்சிக்கு எதிராகவும் போராட வேண்டி ஏற்பட்டது. தமது வர்க்கத்தின் அரசியல் உரிமைகளையும் அரசியல் பங்கேற்பையும் இவர்கள் கோரினர். தமது பொருளாதாரநிலையை ஸ்திரப்படுத்திக்கொண்டதும் புதிய பணக்காரர்கள் தமக்கு அரசியல் உரிமை வேண்டும் என்று கூறத் தொடங்கினர். இருந்தபோதும் இலங்கையில் அரசியல் மட்டத்தில் தேசியவாத இயக்கம் தோன்றவில்லை. காரணம், முதலாளித்துவ வகுப்பு சாராம்சத்தில் சமரசப் போக்குடையதாயும் பிரித்தானிய ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்காததாயும் இருந்தது. முதலாளித்துவ வகுப்பால் முன்னெடுக்கப்பட்ட இயக்கங்கள் கூடிய அரசியல் பிரதிநிதித்துவத்தையும் எழுச்சி பெறும் புதிய முதலாளிகளுக்கு சமத்துவமான வாய்ப்புகளை வழங்குவதையுமே கோரிக்கைகளாக முன்வைத்தன. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சமூகச் சீர்திருத்தத்தையும் கோரின. அவர்களின் எதிர்ப்புக்குரிய பிரதான இலக்காக முதலியார் வகுப்பு இருந்தது. முதலியார்கள் பெற்றிருந்த சலுகைகளும், சுதேசிகளுக்கு காலனிய நிர்வாகத்தில் உத்தியோகப் பதவிகள் வழங்கியபோது, முதலியார் வகுப்பு அதனைத் தனது ஏகபோகமாக ஆக்கியதும், சட்டசபைப் பிரதிநிதித்துவத்தை முதலியார் வகுப்புக்குக் கொடுத்ததையும் புதிய பணக்காரர்கள் எதிர்த்தனர்.

காலனித்துவப் பின்னணியில் மதிப்புமிக்க தொழில்களில் வாய்ப்புகள் கிடைத்தன. ஆங்கிலக்கல்வியைப் பெறுவதன்மூலம் இத்தொழில்களைப் பெற்று சமூகப்படித்தரத்தில் உயர முடிந்தது. வெளிநாடு சென்று கல்வி கற்றும் செல்வந்த வகுப்பினர் இப்பதவிகளைப் பெற்றுத் தம் சமூக அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள முடிந்தது. இதனால் யாவருக்கும் உத்தியோகங்களில் சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற குரல் எழுந்தது. கல்விகற்ற முதலாளித்துவ வகுப்பினரும் சட்டம், மருத்துவம் போன்ற உயர்தொழில்களில் புகமுடிந்ததேயன்றி பிறவகையான உத்தியோகங்களில் புக முடியவில்லை. பறங்கியர் தவிர்ந்த பிற இனத்தவர்களான சுதேசிகளிற்கு அரசாங்க உத்தியோகங்கள் வழங்கப்படவில்லை. பறங்கியரும் எழுது வினைஞர்களாகவும், கீழ்நிலைப் பதவிகளிலுமே இணைத்துக் கொள்ளப்பட்டனர். உயர்பதவிகள் அவர்களுக்கும் வழங்கப்படவில்லை.

புதிய பணக்காரர் வகுப்பினர் சொத்துகளைச் சேர்ப்பதன்மூலம் சமூகநிலையில் உயர்ந்தனர். ஆயினும் கல்விமூலம் உயர்பதவிகளைப் பெற்றுத் தமது சமூக அந்தஸ்தை உயர்த்த முடியவில்லையே என்ற மனக்குறை அவர்களுக்கு இருந்தது. கண்டியின் உயர்குலப் பிரபுக்கள் வம்சம் தமது சமூக மதிப்பை கல்வியாலும் உத்தியோகத்தாலும் மேலும் உயர்த்த வேண்டும் என்று ஆசைப்படவில்லை. இதுபோன்றே பழைய நிலஉடைமைக் குடும்பங்களைச் சேர்ந்த சிங்களவரும், முஸ்லிம்கள், போராக்கள், செட்டிகள் போன்ற குழுக்களும் உயர்தொழில்கள் மூலம் தம்மை

உயர்த்த வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குள் இருக்கவில்லை. ஆனால் சிங்களவர்களிடையும், தமிழர்களிடையும் தோன்றிய குட்டி முதலாளி வகுப்பினருக்கு பொருளாதார முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் போதியளவு இல்லாதநிலையில் கல்வியொன்றே சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரே ஒரு வழியாக இருந்தது. கல்வி முன்னேற்றம் ஏற்பட்டபோது உத்தியோகங்களிற்கு ஆட்களைச் சேர்ப்பதில் பாரபட்சம் காட்டப்படக்கூடாது என்றும் தொழில்களில் திறமைக்கு முதன்மை அளிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது. மொறட்டுவவைச் சேர்ந்த அலக்சாண்டர் தர்மரட்ன என்ற நியாயத்துரந்தரர் 1890 இல் ஒரு முக்கியமான விவாதத்தைத் தொடக்கினார். படித்த இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று தர்மரட்ன கூறினார். பிரித்தானிய உத்தியோகத்தர்களின் கர்வத்தையும், தமக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற பாவனையையும் தர்மரட்ன கேலி செய்தார். கவர்னர் பதவி, குடியேற்ற நாட்டுக் காரியதரிசி பதவி, இராணுவத் தளபதி பதவி போன்ற ஒருசில பதவிகள் பிரித்தானியர் வசம் இருக்க வேண்டும் என்று கூறிய தர்மரட்ன பூரண அரசியல் சுதந்திரத்தைக் கோரவில்லை என்பது கவனிக்கத்தக்கது. ‘தகைமை, திறமை, அடைவும் தேர்ச்சியும் ஆகியவற்றால் தம்தரத்தை வெளிப்படுத்திய சுதேசிகளுக்கு உரிய பதவிகளை வழங்கலாம்’ என்பதே தர்மரட்னவின் கருத்தாகும். சிவில் சேவைப் பரீட்சைக்கு சிங்களமும் தமிழும் பாடங்களாக வைக்கப்பட வேண்டும் என்றும் தர்மரட்ன குறிப்பிட்டார்.

சட்டத்துறையில் உள்ள நிலைமையைச சுட்டிக் காட்டி நியாய துரந்தரர்களது கருத்தை எடுத்துக் கூறிய தர்மரட்ன “நூற்றுக்கணக்கான சிங்களவர்கள், தமிழர்கள், பறங்கியர்கள், கல்வி, திறமை, நேர்மை, செல்வம் என்பவற்றைக் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் நீதித்துறைப் பதவிகளை நிரப்புவதற்குப் பொருத்தமானவர்கள்” என்றும் “ஏனைய காலனிகளில் இலங்கை நியாய துரந்தரர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதில்லை; இலங்கையில் அரச வழக்கறிஞர் பதவிக்கு இலங்கையர்களை நியமிக்க வேண்டும்” என்றும் தமது கருத்துகளைக் கூறினார்.

இலங்கையில் உத்தியோகத்தர்களாயிருந்த ஐரோப்பியர்கள் விசேட சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருந்தனர். தமக்குப் பாரபட்சம் காட்டப்பட்டதை கல்விகற்ற முதலாளித்துவ வகுப்பு உணர்ந்தது. இதனால் அவர்கள் மத்தியில் அதிருப்தி உணர்வு வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை தர்மரட்னவின் கருத்துகள் எடுத்துக்காட்டுகின்றன. அரசுத்துறையில் பணியாற்றும் கீழ்நிலைப் பணியாளர்களும், எழுதுவினைஞர்களும் மிகவும் குறைந்த சம்பளத்தையே பெறுவதையும், பிரித்தானிய உத்தியோகத்தர்களின் ஆடம்பர வாழ்க்கையையும் ஒப்பிட்டு தர்மரட்ன நையாண்டி செய்தார். “பிரித்தானியாவில் இந்த உத்தியோகத்தர்களுக்கு குதிரையோ, பயணிப்பதற்கு வண்டியோ கிடைப்பதில்லை. இவ்வளவு எண்ணிக்கையான வேலையாட்களை அவர்களால் அங்கு வைத்திருக்க முடியுமா? இங்குள்ளதுபோல் அங்கு வைன் குடித்துக் களிக்கலாமா?” என்று கிண்டல் செய்தார். இளம் உத்தியோகத்தர்களான பிரித்தானியர்களுக்கு சட்டப்படிப்பு இல்லாவிடினும் நீதிவான் உத்தியோகம் கொடுக்கப்படுகிறது. ‘ஐரோப்பிய நீதிபதிகள் ஒரு ஐரோப்பியனுக்கு எதிராக தீர்ப்பு வழங்கி சுதேசி ஒருவனுக்கு நியாயம், வழங்கிய’ உதாரணங்கள் குறைவு. பாடசாலை விடுதிகளில் சுதேசிப் பெண் பிள்ளைகள் ‘ஐரோப்பிய பெண் பிள்ளைகளுடன் உடன் இருந்து உணவு உட்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. இவை போன்ற பல அநீதிகளை தர்மரட்ன சுட்டிக்காட்டினார் (தர்மரட்ன, 1890). சமத்துவ வாய்ப்புகள் இன்மை, பாரபட்சம் காட்டுதல் என்ற இரு விடயங்களும் புதிய பணக்காரர்களிற்கு அதிருப்தியை ஏற்படுத்தியவை. வழமையான இந்த முறைப்பாடுகளைவிட இன்னொரு முறைப்பாடும் இவர்களால் முன்வைக்கப்பட்டது. இது முதலாளித்துவ வகுப்புக்கு உள்ளே ஏற்பட்ட அரசியல் பிரதிநிதித்துவம் என்ற சிக்கல் வாய்ந்த பிணக்கு ஆகும். அரசியல் பிரதிநிதித்துவம் என்ற இந்தப் பிணக்கை சாதிச்சச்சரவாக அல்லது சாதிப் போராட்டமாக சிலர் விளக்க முயன்றனர். ஆகையால் இது பற்றித் தனியாகப் பார்ப்போம்.

## சட்டசபைப் பிரதிநிதித்துவம் தொடர்பான சர்ச்சைகள்

சட்டசபைப் பிரதிநிதித்துவம் 1833 முதல் 1912 வரை ஏறக்குறைய எவ்வித சீர்திருத்தமும் இல்லாமல் தொடரப்பட்டது. புதிய பணக்காரர்களினால் எழுப்பப்பட்ட முக்கிய சச்சரவாகவும் சண்டையாகவும் இது விளங்கியது சட்டசபையில் 15 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் 9 பேர் உத்தியோகத்தவர்களாவர். 6 பேர் உத்தியோகத்தவர் அல்லாதோராவர். உத்தியோகத்தவர் அல்லாதோரை கவர்னர் நியமிப்பார். வெவ்வேறு குழுக்களில் இருந்தும் ‘பிரதான வர்த்தகர்களையும்’, ‘சுதேசிகளின் உயர் வகுப்பினரையும்’ கவர்னர் நியமித்தார். 1889 வரை சிங்களப் பிரதிநிதி ஒருவர் இருந்தார். அவ்வாண்டு முதல் கண்டியச் சிங்களவர் ஒருவரும், கரைநாட்டுச் சிங்களவருக்கு மேலதிகமாக நியமிக்கப்பட்டார். 1830களில் இருந்து 1889 வரை சிங்களவரைப்

பிரதிநிதித்துவம் செய்தவர்கள், 1889 இல் நியமிக்கப்பட்ட கரைநாட்டுச் சிங்களவர் ஆகியோரின் பெயர்கள் அடங்கிய பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பிலிப்ஸ் பண்டிதரட்ண | (1839 - 43) |
| யே.ஜி. டயஸ் | (1843 - 60) |
| ஹென்றி (ஹரி) டயஸ் | (1861 - 65) |
| ஈ.எச். டெகியாகம | (1865 - 75) |
| யேம்ஸ் டி அல்விஸ் | (1875 - 78) |
| யே.பி. ஒபயசேகர | (1878 - 81) |
| ஏ.எல்.டி. அல்விஸ் | (1881 - 88) |
| ஏ.டி.அல்விஸ் செனிவிரத்ன | (1888 - 1900) |
| எஸ். கிறிஸ்ரோபல் ஒபயசேகர | (1900 - 11) |

இப்பட்டியலில் உள்ளவர்களில் டெகியாகம தவிர்ந்த பிறயாவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். ஒன்றிற்குள் ஒன்று திருமணம் செய்துகொள்ளும் உறவுக் குழுமமான இந்தக் குடும்பத்தில் இருந்தே மஹா முதலியார் என்ற பதவிக்கும் ஆட்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். இக் குடும்பத்தினர் அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுமாவர் இவர்களுள் யே.ஜி. டயஸ், ஹரி டயஸ் என்போர் சகோதரர்கள். இவர்களின் சகோதரி ஒருவரைத் திருமணம் செய்தவர், உறவுக்காரரான ஜேம்ஸ் டி அல்விஸ்; ஜே.பி. ஒபயசேகர, அவரின் சகோதரர் எஸ். சி. ஒபயசேகர ஆகியோர் டயஸ் சகோதரர்களின் உறவினர்களாவர். இவ்விதம் பட்டியலின் ஐந்து உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒருவர் மிகநெருங்கிய உறவினர்களாய் இருந்தனர். சட்டசபை நியமனம்பெற்ற சிங்கள உறுப்பினர்கள், நில உடைமையாளர்களான இந்தக் கொவிகம நிலப்பிரபுத்துவ அந்தஸ்தை தமக்கு வரித்துக்கொண்டதோடு 'முதல் தர கொவிகம' என்று தம்மைக் கருதலாயினர்.



ஜேம்ஸ் டி அல்விஸ்
Image Source: [illegible]

"சட்டசபையின் சிங்களவருக்கான ஆசனம் என்பது எமது குடும்பத்துக்குரியது என்றாகிவிட்டது. இப்படியிருந்தபோது அவர்கள் ஒரு வெளியாளான தெகியாகம என்ற கண்டியைச் சேர்ந்த புறர்டரை நியமித்தார்கள். அவருக்கு ஆங்கிலத்தில் ஒரு வார்த்தைதானும் பேசவராது. அவர் கல்வி அறிவில் குறைந்தவராயினும் அடக்கம் உடையவர். அவர் கவர்னரிடம் சென்று தம்மை நியமிக்க வேண்டாம் என்று சொன்னார். கவர்னர் அவருடைய முதுகில் தட்டிக்கொடுத்துச் சொன்னார் 'எனது பிரியமான தெகியாகம அவர்களே, உம்மையொத்த ஒருவர்தான் எங்களுக்கு சட்டசபை நியமனத்திற்குத் தேவை!' கவர்னர் தெகியாகமவையே நியமித்தார். இருந்தாலும் மீண்டும் அந்த ஆசனம் எங்கள் குடும்பத்து யேம்ஸ் டி அல்விஸ்க்கு வந்தது. அதையடுத்து யே.பி. ஒபயசேகரா.... அதற்குப்பின் அல்பேர்ட். டி அல்விஸ் என்ற எமது இன்னொரு உறவினர்."

லயனல் வெலிங்டன் டியூக் சேரம் எழுதிய கடிதம் ஒன்றில் உள்ள பகுதி (குணரத்ன 1986: 39:40. மேற்கோள்).

60 வருடங்களுக்கு மேலாக சிங்களவருக்கான சட்டசபை ஆசனத்தை தம் குடும்பச்சொத்தாக வைத்துக்கொண்டிருந்த இக்குழுமத்திற்கு, முதலாளித்துவத்தின் புதுப்பணக்காரர் பிரிவில் இருந்து எழுந்த எதிர்ப்பு இயல்பானதொன்றே. 1878 இல் இப்பதவி வெற்றிடமானபோது புதுப்பணக்காரர் பிரிவு தம்மவரில் ஒருவரை இப்பதவிக்கு நியமிக்கும்படி சிபார்சு செய்து கோரிக்கைவிட்டது. இக்கோரிக்கை கவனிப்பைப் பெறாமல் போனதும் அடுத்த 30 வருடகாலத்தில் பதவி வெற்றிடம் ஏற்பட்ட ஒவ்வொரு தருணத்திலும் இப்பிரிவினர் கரைநாட்டுச் சிங்களவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தகுதியானவர்கள் என்று சிபார்சுடன் கோரிக்கைகளை வைத்து, நியமனத்தை தம்மவருக்கு வழங்கும்படி வாதாடிவந்தனர். இவர்கள் சிபார்சு செய்தவர்கள் மிகுந்த கல்வியறிவு படைத்தவர்களாயும் கராவ முதலாளித்துவப் பிரிவைச் சார்ந்தவர்களாயும் இருந்தனர். பல தடவைகளில் இந்த எதிர்ப்பு இயக்கம் கசப்புணர்வும் தீவிரமும் மிக்கதாய் இருந்தது. வரலாற்றாசிரியர்கள் சிலர் இதனை கொவிகம - கராவா சாதிச்சண்டையாக விளக்கம் கொடுத்தனர். தர்மரட்ன 1890 இல் வெளியிட்ட சிறுநூல் 'கரா - கொய் போட்டி' (*Kara - Goi Contest*) என்ற தொடரைத் தலைப்பில் கொண்டிருந்தது.

முதலியார் குழுமத்திலிருந்த சட்டசபையின் சிங்கள ஆசனத்திற்கு நியமிக்கப்பட்டோருக்கும் புதுப்பணக்காரர் சிபார்சு செய்தவர்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் வெளிப்படையானவை. முதலியார்களின் பிரதிநிதிகள் ஆளுமைக்

கவர்ச்சியற்றவர்கள், அவர்களின் ஒரே ஒரு 'தகுதி' குடும்பத் தொடர்புகள் ஆகும். அவர்களுக்கு எதிராக நிறுத்தப்பட்டவர்கள் உயரிய கல்வியும், திறன்களும் உடைய இளைஞர்கள்; வெளிநாட்டில் பட்டம் பெற்றவர்கள். பிரித்தானியர்கள், நல்ல குடும்பப் பின்னணியையும், சட்டசபையில் அதிகம்பேசாது, வாய்திறக்காமல் இருக்கக்கூடியவர்களையும் நியமிக்கவே விரும்பினர். புதிய பணக்காரார்கள் செய்த முறைப்பாடுகள் நியாயமானவை. யே.ஜி. டயஸ் சிங்களவர் பிரதிநிதியாகச் சட்டசபையில் 17 வருடங்கள் இருந்தார். 'இவரைப் பற்றிக் குறிப்பிட்டுச்சொல்ல எதுவும் இல்லை. இவரது சகோதரர்களின் விவேகமும், புத்திக்கூர்மையும் இவரிடம் காணப்படவில்லை' என்று வெயின்மன் குறிப்பிட்டிருக்கிறார். டெகியாகம 1865 முதல் 1875 வரை நீண்டகாலம் உறுப்பினராக இருந்தார். இப்பத்து வருடகாலத்தில் அவர் சட்டசபையில் வாய் திறந்ததில்லை. ஆனால் ஒரே ஒரு தடவை மட்டும் அவர் பேசினார். 'இப்பேச்சுதான் உலகின் சட்டசபையின் சரித்திரத்தில் உறுப்பினர்களில் ஒருவர் பேசியிருக்கக்கூடிய மிகச்சிறிய உரை. ஒரு தீர்மானத்திற்கு அவர் 'ஐ ஒல் சோ' (I also) என்ற சொற்களைக்கூறி வழிமொழிந்தார் (வெயின்மன், 1947. P. 1011). இருந்தபோதும் முதலியார் குழுமத்தின் சில புத்திசாலிகளான உறுப்பினர்கள் தம்திறமையை சட்டசபையில் வெளிப்படுத்தத் தவறவில்லை. ஹென்றி டயஸ் மிகச் சிறந்த நியாய துரந்தரராக விளங்கியவர்: பின்னர் உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் இருந்தார். யேம்ஸ் டி அல்விஸ் ஒரு புலமையாளராகவும், எழுத்தாளராகவும் விளங்கினார். 'அக்காலத்தில் பெரும் ஆளுமைகளுள் ஒருவர்' (மேலது: 11).

முதலியார் குழுமத்திற்கும், கராவப் பணக்காரர்களுக்கும் இடையிலான சண்டை அரசியல் அரங்கில் இடம்பெற்ற சாதிச்சண்டையாகத் தோற்றலாம். இது உண்மையல்ல. முதலியார் வகுப்பு 'முதல் தர கொவிகம சாதியின் அறியப்பட்டோராக' (First Class Govigama Somebodies) இருந்தனர். அவர்களின் சமூக அந்தஸ்து நில உடைமையையும், சாதியின் உயர்படி இருப்பையும் ஆதாரமாகக்கொண்டது. பணக்காரர்களான கராவ 'அநாமதேயங்கள்' (Nobodies), பணத்திலும் கல்வியிலும் முதலியார் வகுப்பைவிட முன்னணிக்கு வந்திருந்தனர். அத்தோடு காணிகளை பெருமளவில் கொள்வனவு செய்து காணி உடைமையாளர்களும் ஆயினர். முன்பு காணி உடைமை என்றால் அது முதலியார்களுக்கு உரிய சிறப்பாக இருந்தது. இப்பின்னணியில் இவ்விரு தரப்பினருக்குமான சண்டையை நுணுகி ஆராய்ந்தால் உருவத்தில் சாதிச்சண்டையாக தென்படும் இச்சண்டை உள்ளடக்கத்தில் ஒரே வர்க்கத்தின் இரு பிரிவினருக்கிடையிலான முரண்பாடு என்பதைக் கண்டுகொள்ளலாம்.

முதலாளித்துவ வகுப்பின் பழைய பிரிவினர் நில உடைமையால் வரும் சமூகத்தகுதியைக் கொண்டு சலுகைகளை அனுபவித்து வந்தனர். புதுப்பணக்காரர்கள் தொடக்கத்தில் வர்த்தக நடவடிக்கைகள்மூலம் பணத்தைச் சேர்த்து, அப்பணத்தைக்கொண்டு உயர் சமூகத்தகுதிக்குத் தேவையான காணி உடைமையையும் ஏனைய அடையாளச்சின்னங்களையும் பெற்றுக்கொண்டனர். இதனால் பழைய முதலாளிகளிற்கு ஏற்பட்ட பகைமையுணர்வும் போட்டியும் இரு தரப்பாருக்கும் இடையிலான மோதல்களுக்குக் காரணமாயிற்று.

## வர்க்கமொன்றிற்கு உள்ளே நடந்த மோதல்

சட்டசபையில் சிங்களவருக்கான ஆசனம் தொடர்பான பெரும்மோதல் 1878 ஆம் ஆண்டில் புதிய முதலாளி வகுப்பால் தொடக்கி வைக்கப்பட்டது. அவ்வாண்டில் யேம்ஸ் டி அல்விஸ் இறந்ததால் இப்பதவி வெற்றிடமாயிற்று. இந்த ஆசனம் அதற்குப் பின்னர் 1881, 1888, 1895, 1900, 1905 ஆகிய ஆண்டுகளில் வெற்றிடமாகிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இம்மோதல் மீண்டும் மீண்டும் இடம் பெற்றது. 1878 இல் முதல் தடவையாக முயற்சியாளர்குழு சட்டசபை நியமனம் தமது தரப்புக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரியபோது மொரட்டுவவின் கராவ முதலாளியாகிய ஜோர்ஜ் அலெக்சாண்டர் தர்மரட்னவை முன்னிறுத்தியது. பிரித்தானியாவில் கல்விகற்ற தர்மரட்ன 1874 இல் பாரிஸ்டராக தொழில்புரியும் தகைமையை பெற்றார். இவரது தந்தை எச்.ஏ. தர்மரட்னவும் 1820களில் இங்கிலாந்துச் சென்று கல்விகற்றவர். பின்னர் இலங்கையில் அரசாங்கத் திணைக்களங்களில் பணியாற்றினார். 1878 இல் ஜி.ஏ. தர்மரட்னவின் பெயர் சட்டசபை நியமனத்திற்காகச் சிபார்சு செய்யப்பட்டவேளையில் கராவ சாதியினரில் அதி உயர் கல்வித்தகைமை உடையவராக அவர் கருதப்பட்டார். அக்காலத்தில் முன்னணியில் திகழ்ந்த முதலாளிகளும், நிலச்சொத்துகளின் உடைமையாளர்களுமான சுசூ சொய்சா, சாள்ஸ் டி சொய்சா, வெரொனிஸ் பீரிஸ், லின்டாமுலாகே யாக்கோப் டி சில்வா என்ற நான்கு பேர்கள் ஜி.ஏ. தர்மரட்னவின் நியமனத்தை முன்வைத்து ஆதரித்தனர். இந்நான்கு முதலாளிகளும் தமது ஆரம்ப மூலதனத்தை சாராயக்குத்தகை வியாபாரம்மூலம் தேடிக்கொண்டனர். பின்னர் பெருந்தோட்டங்களிலும் முதலீடு செய்தனர். பெரும்செல்வம் என்ற தகுதி மட்டுமல்லாமல் பிறதகுதிகளையும் அவர்கள் தேடிக்கொண்டனர். கிறிஸ்தவத்தை தழுவுதல், மேற்குமயமாதல்மூலம் நாகரிகத்தை விரைந்து ஏற்றல் ஆகிய தகுதிகளையும் பெற்றனர். இந்நான்கு பேரும் தர்மரட்னவின் சார்பில் குடியேற்ற

நாட்டுக்காரியதரிசிக்கு விண்ணப்பம் செய்தனர். சட்டசபையின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு அதி உச்சமான தகுதிகளைப்பெற்ற ஒருவர் என்றால் அது தர்மரட்னதான் என்று தம்விண்ணப்பத்தில் குறிப்பிட்டதோடு தர்மரட்னவின் தந்தையார் பிரித்தானிய அரசாங்கத்தில் விசுவாசம்மிக்க உத்தியோகத்தராகப் பணியாற்றியவர் என்பதையும் பதிவு செய்தனர். இருப்பினும் இப்புதிய வர்க்கத்தின் இம்முயற்சி தோல்வியில் முடிந்தது. பழைய முதலாளி வகுப்பின் மிக விருப்புக்குரிய குடும்பத்தின் உறுப்பினரான ஜேம்ஸ் பீட்டர் ஒபயசேகர 1878 இல் சட்ட சபைக்கு நியமிக்கப்பட்டார்.

சிங்களவருக்கான சட்டசபை ஆசனத்தை கிறிஸ்தவ, கொய்கம, முதலியார் குடும்பம் ஒன்றின் ஏகபோகமாக ஆக்கும் கொள்கை தொடரப்பட்டது. இது சிங்கள சமூகத்தின் பிறபகுதியினர் மத்தியில் அதிருப்தியை உண்டாக்கியது. பணக்காரர்களான கிறிஸ்தவ முதலாளிகள் மட்டுமல்லாது எல்லா வர்க்கங்களையும் சேர்ந்த பௌத்தர்களும் தம் அதிருப்தியை வெளியிட்டனர். 1881 இல் களுத்துறையில் புறக்டராகப் பணியாற்றிய ஏ.எல்.டி. அல்விஸ் சட்டசபைக்கு நியமிக்கப்பட்டார். இது வெளிப்படையான பாரபட்சமான செயலாகக் கருதப்பட்டது. அல்விஸ் ‘பழைய தலைமுறையின் மிகச் சிறந்த கனவான். ஆயினும் குடும்பத் தொடர்பு என்ற விடயம்தான் அவரைத் தெரிவு செய்ததில் பிரதானம் பெற்றது என்பது யாவரும் அறிந்த ஒன்று’ என்று வெயின்மன் (1947: 11) குறிப்பிட்டார். 1883 முதல் 1890 வரை கவர்னராக இருந்த சேர் ஆர்தர் கோர்டன் இதனைத் திட்டமிட்டே செய்து வந்தார்; பிரித்தானிய அரசுக்கு ஒத்துழைப்பை வழங்கும் முதலியார் குழுவிற்கு நியமனங்களைத் தொடர்ந்து வழங்குவதே அவரது கொள்கை என்பது தெளிவாகத் தெரிந்தது. “பிரித்தானியருக்கு முதலியார்கள் பதவியில் இருந்து விசுவாசத்துடன் சேவை செய்த குடும்பம் என்பதுதான் முக்கியம். அறிவிலும் திறமைகளிலும் மட்டமானவர்கள் என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதல்ல.” என்று கே.எம்.டி. சில்வா குறிப்பிட்டுள்ளார் (1973: 243)

1880களின் பத்தாண்டுகாலத்தில் முதலாளிகளின் கழகங்களும், உயர்தொழில் துறையினரின் சங்கங்களும் உருவாக்கப்பட்டன. இவற்றில், பல இனங்களையும் பல சாதிகளையும் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். 1882 இல் இலங்கை விவசாயக்கழகம் (Ceylon Agricultural Association) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. நாட்டின் முன்னணி முதலாளிகளில் ஒருவரான சாள்ஸ் டி சொய்சா இக்கழகத்தின் தலைவராக இருந்தார். அக்காலத்தின் முக்கிய முதலாளிகளான பி. ஆனல்ட் டயஸ், எல்.யூசி. டி. சில்வா, வி. யாக்கோப் டி மெல், எச். யெரொனிஸ் பீரிஸ் ஆகியோர் உள்ளடங்கிய முக்கிய பிரமுகர்களும் இக்கழகத்தின் செயற்குழுவில் உறுப்பினர்களாக இருந்தனர். பொ. இராமநாதன் (சட்டசபை உறுப்பினர்) ஹெக்டர் வான் குல்யன்பேர்க் மற்றும் யோன் பெர்குசன் (இவ்விருவரும் முன்னணிப் பத்திரிகைகளின் உடைமையாளர்கள்), பிரான்சிஸ் பெவன், எவ்.சி. லூஸ், எஸ்.ஆர்.டி. பொன்சேக, லூயிஸ் டி சொய்சா, பொ. குமாரசுவாமி ஆகியவர்களும் செயற்குழு உறுப்பினர்களாக இருந்த பிரமுகர்களாவர். 1888 இல் இலங்கை விவசாயிகள் கழகம் இலங்கைத் தேசியக் கழகம் (Ceylon National Association) என்று பெயர் மாற்றம் பெற்றது. இப்பெயர்மாற்றம் கழகத்தை ஓர் அரசியல் நிறுவனமாக ஆக்கும் துணிச்சலான செயல் எனக் கூறப்பட்டது. ஆனால் சாள்ஸ் டி சொய்சா இதனை ஏற்றுக்கொள்ளவில்லை; அவர் பதவி விலகினார். பெயர்மாற்றத்தை வால்டர் பெரேரா, டெல்கே சாள்ஸ் பீரிஸ், எஸ்.ஆர்.டி. பொன்சேக ஆகியோர் பிரேரித்தனர் (ஜயசேகர 1970: 126). 1890களில் யேம்ஸ் பீரிஸ் (யாக்கோப் டிமெல்லின் மருமகன்), சி.எம். பெர்னாண்டோ (சாள்ஸ் டி சொய்சாவின் மருமகன்) ஆகிய இளந்தலைவர்கள் இலங்கைத் தேசியக் கழகத்தில் மிகத்துடிப்போடு செயற்பட்டனர் (த சேர்ச் லைட், கிறிஸ்மஸ் இதழ், 1916).

1888 இல் சட்டசபையின் சிங்களவருக்கான ஆசனம் வெற்றிடமானபொழுது புதிய பணக்காரர்குழு தம்மவர் ஒருவருக்கு நியமனம்பெறும் முயற்சியில் மீண்டும் தோல்விகண்டது. கவர்னர் பழைய கொள்கையில் விலகாமல் நின்று, அலக்சாண்டர் டி அல்விஸ் செனிவிரத்தின என்ற நியாய துரந்தரரை சட்டசபைக்கு நியமித்தார். இவரும் குறிப்பிட்ட முதலியார் குடும்பத்தின் உறுப்பினரே ஆவர். 1889 இல் கண்டியச் சிங்களவருக்கு ஒரு பிரதிநிதியும், முஸ்லிம்களுக்கு ஒரு பிரதிநிதியும் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு சட்டசபைப் பிரதிநிதிகள் எண்ணிக்கையைக் கூட்டியதுதான் இக்காலத்தின் ஒரேயொரு முக்கிய மாற்றம். நியமிக்கப்பட்டோரின் பதவிக்காலம் 3 இல் இருந்து 5 ஆக உயர்த்தப்பட்டது. விரும்பினால் ஒருவரை மீண்டும் நியமனம் செய்யலாம் என்றும் விதிக்கப்பட்டது. அரசாங்கத்தின் கொள்கை காரணமாக புதிய முதலாளிகள் மத்தியில் ஏற்பட்ட கசப்புணர்வின் தீவிரத்தை, இக்காலத்தின் கண்டன நூல்களின்மூலம் தெரிந்து கொள்ளலாம். இவை சாதியச் சொல்லாடலைக் கொண்டிருந்தன. இருப்பினும் இவை பணமும் கல்வியும் இருந்தபோதும் அடிப்படை ஜனநாயக உரிமைகள்கூட மறுக்கப்பட்டதால் எழுந்த விரக்தியின் வெளிப்பாடு என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். ஜி.ஏ. தர்மரட்ன, “எழுந்தமானமானது;

திருப்தியற்றது." என்று கண்டித்ததோடு "சட்டசபையை, தேர்தல்மூலம் தெரியும் முறையின்படி திருத்தியமைத்தல் வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

"இலங்கையின் சட்டசபையின் சிங்களப் பிரதிநிதித்துவத்திற்கு நியமிக்கப்பட வேண்டியவருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் என்ன? என்பதைப் பிரசுரம்செய்து பகிரங்கப்படுத்த வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம். இங்கிலாந்து சென்று கல்விகற்றவர்களும், உயர்ந்த கல்வித்தகைமைகளை உடையவர்களுமான சிங்களக் கனவான்கள் பலர் வேட்பாளர்களாக முன்வந்தபோதும் அவர்களை ஒதுக்கிவிட்டு கொவிகம சாதிக் கனவான்களே பல்லாண்டுகளாக இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர். 'கராவக்களுக்கும் இந்தக் கொவிகமக்களுக்கு இடையிலான பணக்கார அந்தஸ்து பற்றிய வேறுபாட்டை நாம் விளக்கமாகத் தந்துள்ளோம். அத்தோடு இங்கிலாந்தில் கல்விகற்றவர்களாக கொவிகமவைவிட அதிக எண்ணிக்கையிலான கராவ இருக்கின்றனர்." (தர்மரட்ன, 1890: 63-64. ரூ. 74).

தர்மரட்னவின் கடுங்கோபம் இங்கே வெளிப்படுகிறது. ஏ.டி. அல்விஸ் செனிவிரத்தின வெளிநாடு சென்று படித்தவரல்லர்; ஏனைய போட்டியாளர்கள் அளவுக்குப் பணக்காரரும் அல்லர். 1849 இல் பிறந்த செனிவிரத்தின சென்ற் தோமஸ் கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். 1883 இல் கொழும்பு முனிசிப்பல் சபை உறுப்பினரானார். 39 வயதில் நியாயதுரந்தரர் வேலையைச் செய்யத் தொடங்கினார் (றைட், 1907: 102). பிரித்தானியர்கள் செனிவிரத்தினவை அடக்கமும், விசுவாசமும் உள்ள டாம்பீகமற்ற பேர்வழியாகக் கருதி 1888 இல் அவரைச் சட்டசபை உறுப்பினராக நியமித்தனர். புதிய பணக்காரர்கள், செனிவிரத்தின மட்டமான திறன்களை உடைய ஒருவர் என்பதையும், தாம் பிரேரித்தவர்களின் மேதாவித்தனத்தையும், உயர்தகைமைகளையும் ஒப்பீடுசெய்து காட்டினர். தர்மரட்னவின் நூலின் கருத்துகள் சாதிய உள்ளடக்கத்தையுடையனவாகப் பார்க்கப்பட்டன. அவர் 'முதல்தர கொவிகம'க்களின் பாசாங்கினை எடுத்துக்காட்டினார். புதிய பணக்காரர்களின் கோரிக்கைகளை முன்வைத்தார். கராவ சாதியினர் சத்திரிய வம்சத்தினர் என்பதை தம்நூலில் விவரித்துச் சொல்கிறார். கொவிகம தாழ்ந்த நிலையினரான சூத்திரர்கள் என்றும் குறிப்பிட்டார். அவர் ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம் ஆகிய உயர் லட்சியங்கள் பற்றியும் எழுதியுள்ளார். குறிப்பாக தொழில்வாய்ப்புகளில் இனவாத பாரபட்சம் காட்டப்படுவதை எதிர்த்தார். பிரித்தானிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பொருளாதார, சமூகச் சலுகைகளைச் சுட்டிக்காட்டி விமர்சித்தார். வரிகளைக் குறைக்க வேண்டும்; சுதேச முயற்சியாளர்களுக்கு கடன்வசதிகள் கொடுக்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை விடுத்தார். அவ்வகையில் சுதேசிய வர்த்தக முதலாளித்துவத்தின் உள்ளக் குமுறல்களை தர்மரட்ன வெளிப்படுத்தினார்.

தர்மரட்னவின் சிறுநூல் பிரஞ்சுப் புரட்சி, அடம்சிமித், முதலாளித்துவ சிந்தனையாளர் என்பன பற்றிக் குறிப்பிடுகிறது. இது அவரது கோரிக்கைகளின் வர்க்க உள்ளடக்கத்தினை எடுத்துக்காட்டுவதாகும். முதலாளித்துவச் சீர்திருத்தங்கள் விரைவாகப்பரவி முன்னேறும் என்ற நம்பிக்கையையும் அவர் தெரிவித்தார். அரசாங்க உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பற்றிக் கூறுமிடத்து அவர் சாதி என்பதைப் பேசாது பொதுவாகவே பேசுவது முக்கியமானதொரு விடயம். "முதலியார்கள், ரட்டே மஹாத்தயாக்கள், முகாந்திரங்கள் ஆகிய பதவிகளில் இருப்போர் சிங்களவர்களே ஆதலால் அவர்களுக்கு குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது." என்று அவர் எழுதினார். வறுமையின் தாக்கத்திற்கு உள்ளான பகுதிகளில் தானிய வரி, வீதி வரி போன்றவற்றில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்றும் 'செவிடர், ஊமை, ஊனமுற்றோர், பிச்சைக்காரர்' ஆகியோருக்கு உதவிகள் வழங்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். அவர் நூலில் இருந்து மேற்கோளாகத்தரப்படும் பின்வரும் பகுதி எழுச்சி பெற்றுவரும் முதலாளித்துவ வர்க்கத்தின் உலகப்பார்வையை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது.

"தவறான சட்டங்களை இயற்றுதல், நீதியற்ற வரி விதிப்பு, அறவிட்ட வரிப்பணத்தைத் தவறான முறையில் செலவிடுதல் ஆகியவற்றால் நேர்ந்த துன்பங்கள்தான் பிரஞ்சுப் புரட்சிக்குக் காரணமாக இருந்தன. ஆளும்குழுவின் உறுப்பினர்களான சிலர், ஆளப்படுவோர் தங்களுக்காகவே உருவாக்கப்பட்டவர்கள்; ஆளுவோரின் நன்மைக்காகத்தான் அவர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கின்றனர். அறிவற்றவர்களான பலர் கபடபுத்தியுள்ள சிலர் உண்டு கொழுப்பதற்கு உழைத்துக் கொடுக்கத்தான் இருக்கிறார்கள் என்றும் கருதுகின்றனர். சனப்பிரதிநிதிகள் சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் மக்களுக்காகத்தான் அரசாங்கம் இருக்கின்றது என்ற எமது கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகிறேன். (தர்மரட்ன, 1890)"

விவாதமுறையில் அமையும் தர்மரட்னவின் கருத்துகள் உள்ளடக்கத்தில் புதிய முதலாளித்துவ வகுப்பின் பொருளாதார, அரசியல், சமூகக் கோரிக்கைகளையும், அவர்தம் மனக்குறைகளையும் வெளிப்படுத்துவனவாய் இருந்தன. புதிதாக எழுச்சிபெற்ற முதலாளித்துவ வகுப்பு அரசியல்ரீதியில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக ஒன்று திரளவில்லை. ஆயினும் முதலியார் வகுப்பின் ஆழவேரூன்றிய நலன்களைக் கேள்விக்கு உட்படுத்தியும், தமக்கு இழைக்கப்படும் அநீதிகளைச் சுட்டிக்காட்டியும் எதிர்ப்பை வெளியிட்டது.

## 1895 முதல் 1910 வரை தொடர்ந்த அரசியல் மோதல்கள்

பகுதி

2

பழமைவாதிகளுக்கும், காலனித்துவ ஆட்சியாளர்களுக்கும் எதிராகக் குரல் கொடுக்கவும், எழுச்சிபெறும் புதிய முதலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளை முன்வைத்து வாதம் செய்வதற்கும் ஆற்றல் உடையவர்களான ஆளுமைமிக்க புதிய தலைவர்கள் பலர் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றினர். இவர்களில் பெரும்பான்மையினர் உயர்தொழில்களில் சிறப்பெய்தியவர்கள்; சாராயக்குத்தகை முதலாளிகளதும், பெருந்தோட்டங்களினதும், காரீயச் சுரங்கங்களினது முதலாளிகளதும் புத்திரர்களாகவும், மருமக்களாகவும் விளங்கினர். சிலர் பிரித்தானியாவிற்குப்போய் சட்டம், மருத்துவம் ஆகிய துறைகளில் உயர்பட்டங்களைப் பெற்று நாடு திரும்பியவர்களாய் இருந்தனர். அக்காலத்தில் உலகில் மிகவும் முன்னேறிய நாடான பிரித்தானியாவில் வாழ்ந்து அச்சமூகத்தின் மனப்பாங்குகளையும் நடத்தை முறைகளையும் உள்வாங்கியவர்களாய் இருந்தனர். பிரித்தானியா 1832 ஆம் ஆண்டுகாலத்துச் சீர்திருத்தங்களுக்கு முன்னர் என்ன நிலையில் இருந்ததோ அப்படியான பின்னடைவான நிலையில் இலங்கை இருப்பதை நாடு திரும்பிய இவர்கள் கண்டனர். தம்மிடம் பணம் இருந்தும், வெளிநாட்டுப் படிப்பு இருந்தும் தாம்திட்டமிட்டு ஒதுக்கப்படுவதையும் அடிப்படை அரசியல் உரிமைகளான வாக்குரிமையும், பிரதிநிதித்துவ உரிமையும் திட்டமிட்டமுறையில் மறுக்கப்படுவதையும் கண்டனர். அத்தோடு முதலாளித்துவ வகுப்பின் பழமைவாதப் பிரிவினர், அரசியல் நிலப்பிரபுத்துவ சமூக மனப்பாங்குகளை வெளிப்படுத்துவதையும் தமக்குப் பாரபட்சம் காட்டுவதையும் தம்மைக் கண்டிப்பதையும் தொழிலாகக்கொண்டு நடந்து கொள்வதையும் கண்டு மனம் கொதித்தனர்.

சட்டசபையில் சிங்களவருக்கான பிரதிநிதியை 1895 இல் மீண்டும் நியமிக்கும் தருணம் நெருங்கிக் கொண்டிருந்தது. இதற்கான போட்டி வேட்பாளர்களின் ஆதரவுப்பிரசாரம் 1894 இல் தொடங்கியது. இத்தடவை ஜேம்ஸ் பீரிஸ், சி.எம். பெர்னாண்டோ என்ற இருவர் முதலியார் குழுமத்திற்கு எதிரான போட்டியாளர்களாக முன்வந்தனர். இவர்கள் இருவரும் புதிதாக எழுச்சி பெற்றுவரும் முதலாளித்துவ வகுப்பின் மிகச்சிறந்த பிரதிநிதிகளாக இருந்தனர். 19 ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற டிமெல், டி சொய்சா என்ற இரு முதலாளிகளின் குடும்பங்களுக்குள் திருமணம் செய்வதன்மூலம் முக்கியஸ்தர்களாயினர். ஜேம்ஸ் பீரிஸ் (1856-1930), தெல்கே மார்ட்டினஸ் பீரிஸ் என்பவரின் மகன். ஜேம்ஸ் பீரிஸின் தந்தை 1850களிலும் 1860களிலும் பிரபலமான சாராயக் குத்தகைக்காரர் (பின்னர் வியாபாரத்தில் நொடித்துப்போனார்). அவரின் பாட்டன் ஆகிய பாணந்துறையைச் சேர்ந்த தெல்கே டேவிட் பீரிஸ் குத்தகைக்காரர், கப்பல் சொந்தக்காரர், நில உடைமையாளர் என்ற வகையில் 1820க்கள் முதல் 1840க்கள் வரை பிரகாசித்தவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் சென்ற் யோன்ஸ் கல்லூரியில் அரசாங்கப் புலமைப்பரிசில் பெற்றுப் படிப்பதற்காக ஜேம்ஸ் பீரிஸ் பிரித்தானியாவுக்குச் சென்றார். அங்கு கற்று 1882 இல் சட்டத்துறையில் முதலாம் வகுப்புச் சித்தி பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலையின் சட்ட மாணவர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். பிரித்தானியாவில் சிறிதுகாலம் நியாயதுரந்தரராக தொழில்செய்த பின் இலங்கைக்கு வந்து 1887 இல் சட்டத்தொழிலில் ஈடுபடத் தொடங்கினார் (கெபிள் மற்றும் சூரியசேன 1950: அத்தியாயம் 11). 1889 இல் ஜேம்ஸ் பீரிஸ், கிறேஸ் டி மெல் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இப்பெண்மணி யாக்கோப் டி மெல் என்ற பிரபல வர்த்தகரின் புத்திரியாவார். யாக்கோப் டி மெல், யேம்ஸ் பீரிஸின் வெளிநாட்டுக் கல்விச் செலவுக்கு உதவி செய்தவர். யாக்கோப் டி மெல்லின் தந்தை (கிறேஸ் டி மெல் உடைய பாட்டன்) பிரபல்யம்பெற்ற சாராயக் குத்தகைக்காரராக இருந்தவர் (ஈ பெர்னாண்டோ, 1989:78). ஜேம்ஸ் பீரிஸ் சாதாரண குடும்பத்தில் தோன்றியவராயினும், டி மெல் குடும்பத்துப் பெண்ணை மணந்து பெற்றுக்கொண்ட சீதனச் சொத்துகளால் செல்வந்தரானார். இச்செல்வம் அரசியலில் இறங்குவதற்கு அவருக்கு உதவியது.

சாள்ஸ் மத்தியூ பெர்னாண்டோ (1866-1909), 1895 இல் சட்டசபை நியமனத்திற்கு போட்டியாளராக பிரேரிக்கப்பட்ட இன்னொரு பிரமுகர். இவர் அன்ட்ரூ பெர்னாண்டோவின் (சிறு வர்த்தகர்) மகன் ஆவார். பீரிஸ் போன்றே பெர்னாண்டோவும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் சென்ற் யோன்ஸ் கல்லூரியில் அரசாங்கப் புலமைப்பரிசில் பெற்று, படிப்பதற்குச் சேர்ந்தார். சட்டத்தில் பட்டமும் (Law Tripos), எல்.எல்.பி பட்டமும் பெற்று 1888 இல் லண்டனில் நியாயதுரந்தரராகப்

பணியாற்றினார். இலங்கை திரும்பிய சி.எம். பெர்னாண்டோ இலங்கை தேசிய கழகத்தின் செயலாளராக 1892 முதல் 1895 வரை கடமையாற்றினார். 1897 வரை நியாயதுரந்தரராகப் பணியாற்றிய பின் பதில் மாவட்ட நீதிபதியாகவும் அரச நியாயதுரந்தரராகவும் பணியாற்றினார். சாள்ஸ் டி சொய்சாவின் புத்திரியும் முன்னோடிகளான முதலாளிகள் யெரொனிஸ் சொய்சா, செவலியர் யுசி டி சில்வா ஆகியோரின் பேர்த்தியுமான யேன் மரியா டி சொய்சாவை திருமணம் செய்ததன் மூலம் சி.எம். பெர்னாண்டோ பெரும் செல்வத்திற்கு அதிபதியானார். முன்னேறி வரும் கராவ சாதியின் பெருமைக்குரிய தலைமக்களாக யேம்ஸ் பீரிஸ், சி.எம். பெர்னாண்டோ ஆகிய இரு நியாயதுரந்தரர்களும் விளங்கினர். இவர்கள் இருவரும் பிறப்பால் அல்லது திருமண பந்தத்தால் 19 ஆம் நூற்றாண்டின் நான்கு பெரும் வர்த்தக முதலாளித்துவக் குடும்பங்களான தெல்கே பிரிஸ், வருஷ கென்னடிகே சொய்சா, விதானலாகே டி மெல், லிண்டா முலாகே டி சில்வா ஆகியவற்றுடன் பிணைக்கப்பட்டிருந்தனர்.



ஜேம்ஸ் பீரிஸ்
Image Source : en.wikipedia.org

கரைநாட்டுச் சிங்களவர்களுக்கான பிரதிநிதித்துவத்தினைக் கோரும் வேட்பாளர்களாக ஜேம்ஸ் பீரிஸ், சி.எம், பெர்னாண்டோ ஆகிய இருவரும் நிறுத்தப்பட்டனர். இப்பிரேரணை சிறந்த திட்டத்துடன் முன்வைக்கப்பட்டது. அவர்களது கொள்கைப் பிரகடனங்களில் ரயில் போக்குவரத்தை விஸ்தரித்தல், கல்வி வசதிகளை மேம்படுத்தல் ஆகிய பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இவர்களது எதிர்ப்போட்டியாளராகிய எஸ்.சி. ஒபயசேகர கிராமத் தலைமைக்காரர்களின் அதிகாரங்கள் கூட்டப்பட வேண்டும் என்ற விடயத்தை மட்டும் முக்கியத்துவப்படுத்தினார். பீரிஸின் கொள்கைப்பிரகடனம் தாம் முற்போக்கு சிந்தனையுள்ள முதலாளித்துவ வகுப்பின் கருத்துகளை ஆதரிப்பதாகவும் நிலப்புரபுத்துவ சலுகைகளையும், மனப்பாங்குகளையும் தாம் எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டது.

“அவர் பிறப்பு, விவாக பந்தம் என்ற இரு வழிகளிலும் சிங்களச் சமூகத்தில் சுதேசத் தொழில்களில் முன்னோடிகள் எனக் கருதப்படும் பிரிவினர்களுடன் தொடர்புடையவர். பரம்பரை உரிமைகள், குடும்பத் தொடர்பு ஆகிய விடயங்கள் நவீன முன்னேற்றத்திற்கு ஒவ்வாதனவாக இருந்தன (மேலது: 134).“

பீரிஸை ஆதரித்து நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவரின் வர்க்க அந்தஸ்தும், கல்வித்துறைச் சாதனைகளும் அழுத்திக் கூறப்பட்டன. கரைநாட்டுச் சிங்களவர்களுக்குள் ஆகக்கூடிய கல்வித்தகைமை பெற்ற ஒருவர் பீரிஸ் என்றும், எந்த ஒரு இலங்கையர்களும் இதுவரை அடையாத சிறப்பை பெற்றவர் என்றும் இக்கூட்டத்தில் பேசிய ஒருவர் குறிப்பிட்டார். இன்னொரு கூட்டத்தில் ஜேம்ஸ் பீரிஸிடம் உள்ள பெரும் செல்வம், அவருக்கு இருந்த குடும்பத் தொடர்புகள் பற்றிப் புகழ்ந்து பேசப்பட்டது. அவருக்கு ‘இந்நாட்டின் மிகப் பெரும் சொத்துடைமையாளர்களுடனும், வர்த்தகர்களுடனும் குடும்பப் பிணைப்பும் உறவும் உள்ளது’ என்று கூறப்பட்டது. புதிய முதலாளி வகுப்பின் இவ்வாறான பிரசார அழுத்தத்திற்கு அரசாங்கம் மசிந்துபோகவில்லை. வழமையான தனது கொள்கையையே அரசாங்கம் தொடர்ந்தது. ஏ.டி. அல்விஸ் செனிவிரத்னவின் நியமனத்தை நீடிப்பதன்மூலம் அவர் கரைநாட்டுச் சிங்களவர்களின் பிரதிநிதியாக 1900 ஆம் ஆண்டுவரை பதவி வகிக்க அரசாங்கம் வழி செய்தது. பிரித்தானிய அரசு 1900 ஆம் ஆண்டில் தானும் தன் கொள்கையை மாற்றவில்லை. இலங்கையின் மேற்தட்டு வர்க்கத்தின் ஆளுமைப்பலம் இல்லாத நபர்களைச் சட்டசபைக்கு நியமிப்பதை அரசாங்கம் விரும்பியதே அல்லாது, புதிய பணக்காரர்களில் இருந்து தோன்றிய கல்விகற்ற விமர்சன நோக்குடைய படிப்பாளிகளை நியமிப்பதில் அக்கறை காட்டவில்லை.

1900 ஆம் ஆண்டில் மீண்டும் வெற்றிடம் ஏற்பட்டபோது ஜேம்ஸ் பீரிஸ் மீண்டும் வேட்பாளராக முன்வந்தார். 20 ஆம் நூற்றாண்டு உதயமாகிய வேளையில்கூட தம் மனதை மாற்றிக்கொள்ளாத ஆட்சியாளர்கள் கரைநாட்டுச் சிங்களவர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக சொலமன் கிறிஸ்ரோபல் ஒபயசேகர என்பவரை நியமித்தனர். 1848 இல் பிறந்த ஒபயசேகர டி.பி.

எவ். ஒபயசேகர, சுசன்னா கொர்னிலியா பண்டாரநாயக்க தம்பதியரின் புத்திரராவார். இவர்களது குடும்பம் யேம்ஸ் டி அல்விஸ், பிலிப்ஸ் பண்டிதரட்ன, யே.பி ஒபயசேகர, யே.ஜி. டயஸ், ஹரி டயஸ் ஆகிய முன்னாள் சட்டசபை உறுப்பினர்களின் நெருங்கிய சொந்தக்காரக் குடும்பம் ஆகும். இக்குடும்பத்தினர் மாறிமாறி ஒன்றுக்குள் ஒன்றாக விவாகம் செய்துகொள்ளும் அகமண உறவு முறையைக் கடைப்பிடித்து வந்தனர். யேம்ஸ் டி அல்விஸின் மகள் எஸ்லின் மரியாவை ஒபயசேகர திருமணம் செய்தார். யேம்ஸ் டி அல்விஸின் மனைவி புளோரன்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, ஜே.ஜி. டயஸ், ஹரி டயஸ் ஆகிய இருவரதும் சகோதரியாவார். ஒபயசேகரவின் மூத்த சகோதரியான டெய்சி எஸ்லின், சொலமன் டயஸ் பண்டாரநாயக்க (1862-1946) அவர்களைத் திருமணம் செய்தார். சொலமன் டயஸை அரசாங்கம் 1895 இல் மஹா முதலியாராக நியமனம் செய்தது (சொலமன் டயஸின் மகன் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க 1956-58 காலத்தில் இலங்கையில் பிரதமராக இருந்தவர்). இவ்வாறாக சலுகை பெற்றிருந்த இக்குடும்பம் சட்டசபை ஆசனத்தை தனது ஏகபோக உடைமையாகக் கொண்டிருந்ததைக் கண்டு புதிய முதலாளித்துவ வகுப்பு மனக்கொதிப்புற்றது இயல்பான தொன்றாகும்.



மார்கஸ் பெர்னாண்டோ
Image Source : en.wikipedia.org

ஜேம்ஸ் பீரிஸ் ஆதரவாளர்களுக்கும் கிறிஸ்ரோபல் ஒபயசேகர ஆதரவாளர்களுக்குமிடையில், சட்டசபை ஆசனம் 1905 ஆம் ஆண்டில் மீண்டும் வெற்றிடமானபோது, கடும்வாக்குவாதம் ஏற்பட்டது. இரண்டு வேட்பாளர்களதும் தகைமைகளும், நடத்தைப்பாங்குகளும் மீண்டும் விவாதப்பொருள் ஆயின. எஸ்.சி. ஒபயசேகர நியாயதுரந்தரராக (புறக்டர்) இருந்தவர். உல்லாசமாக வாழ்க்கை நடத்தக்கூடிய அவருக்கு 'உயர் குடிப் பிறப்பு'டைய கனவான் என்ற தகுதி இருந்தது. றைட் எழுதிய நூலில் (1907: 521) அவர் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"இலங்கையின் தென்பகுதியின் பழமையும் புகழும் வாய்ந்த குடும்பம் ஒன்றின் குலக்கொழுந்து இவர். இக்குடும்பத்தின் உறுப்பினர்கள் உயர்பதவிகளை வகித்து வந்தவர்கள். சுதேச சமூகத்தின் தலைவர்களாக தலைமுறை தலைமுறையாக இருந்து வந்தவர்கள். விவசாயமும், கால்நடை வளர்ப்பும் இவரது பொழுது போக்கு. இலங்கையின் பல பாகங்களிலும் இவருக்கு பெருந்தோட்டங்களும், காணிகளும் உள்ளன. நகரத்தில் இவருக்கு 'ஹில் காஸ்ரில்' (Hill Castle) என்ற பெயரில் ஒரு பிரபலமான வாசஸ்தலம் இருக்கிறது. பதுளையில் இவருக்கு நாட்டுப்புற உறைவிடம் ஒன்று உள்ளது. அது உண்மையில் பழைய நிலமானியக் கனவான் ஒருவரின் மாளிகை என்றே கூறப்படத்தக்கது."

ஜேம்ஸ் பிரிஸ் உடைய உயர் தகைமைகள் கவனிப்பைப் பெறவில்லை. 1905 ஆம் ஆண்டில் எஸ்.சி. ஒபயசேகர நியமிக்கப்பட்டார். அத்தோடு 1908 இலும் அவரது நியமனம் நீடிக்கப்பட்டது. 'பழைய நிலமானியக் கனவான் ஒபயசேகர 1910 வரை கரைநாட்டுச் சிங்களவர்களின் பிரதிநிதியாகத் தொடர்ந்து பதவி வகித்தார். அது மட்டுமல்லாமல் 1911-12 காலத்தில் சட்டசபை சீர்திருத்தி அமைக்கப்பட்டபோதும் அவரது நியமனம் தொடர்ந்தது. அவர் 1917 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பதவி வகித்தார். தனது குடும்பத்தையும் முதலாளித்துவத்தின் பழமைவாதப் பிரிவையும் பிரதிநிதித்துவப்படுத்துபவராக எஸ்.சி. ஒபயசேகர 17 ஆண்டுகள் சட்டசபை உறுப்பினராக இருந்தார்.

இலங்கையில் இக்காலத்தில் சீர்திருத்தக்குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிவிட்டது. ஆனால் சட்டசபையில் சிங்களப் பிரதிநிதித்துவத்திற்கான உரிமையை ஒரு குடும்பத்திற்கே வழங்கிய அரசு அதை நீடிக்க விரும்பியதே அல்லாமல் இக்குரல்களிற்கு செவி சாய்க்கவில்லை. மஹா முதலியார் பரம்பரைக் குழுமத்தின் சுய அடையாளம், தாம் உயர்குடிப் பிறப்பாளர் என்பதாக இருந்ததென்பதும் முக்கியமானது. ஒபயசேகர குடும்பக் குழுமம் இலங்கைச் சமூகத்தின் மேதகு குடியாகவே தம்மைக் கருதியது. சாதியால், அந்தஸ்தால், பட்டங்களால், ராச கௌரவத்தால், கணிப்பால், நில

உடைமையால், மாளிகை வீடுகளின் உடைமையால், நகரச் சொத்துகளால், மலிவானதும் கூலி வழங்கத் தேவையற்றதுமான வீட்டு வேலைக்காரர் பட்டாளத்தை வைத்திருப்பதால், தம் குடியினர் ஒப்பாரும் மிக்காரும் அற்றவர்கள் என்று இவர்கள் கருதினர். ஆகையால் சிங்களவருக்கான சட்டசபைப் பிரதிநிதித்துவம் தமக்கே உரியது என்றும் எண்ணலாயினர். பணக்காரக் கராவக்களும், கொய்கம சாதிக்குள் இருந்து முளைத்த இதுவரை அறியப்படாதவர்களான பெருந்தோட்ட முதலாளிகளும், குத்தகைக்காரர்களும் முன்னரங்குக்கு வந்ததும் நிலைமை மாறலாயிற்று. குணரட்ண பின்வருமாறு எழுதுகிறார்:

“சட்டசபை விவாதத்தின்போது சேர் கிறிஸ்ரோபல் ஒபயசேகர, இவர்கள் வெறும் அநாமதேயங்கள். அறியப்பட்டவர்களாக ஆவதற்குத் துடிக்கிறார்கள் என்ற சொல்லம்பைச் சடாரென வீசினார். ‘அறியப்பட்டவர்கள்’ என்றதன்மூலம் அவர் தன்னையும் தன் உறவினர்களையுமே கருத்தில் கொண்டார் (1986:17).”

“புதிய பணக்காரர் வகுப்பினர் இரண்டு தலைமுறைகளுக்கு முன்னர் பந்தியில் இரண்டு வரிசை பின்னுக்கு உட்கார்ந்துகொள்வதில் திருப்திப்பட்டுக் கொண்டவர்கள். இப்போது அவர்கள் முன்வரிசைக்கு முந்திக்கொள்ளும் துணிச்சல் கொண்டுள்ளார்கள்” (மேலது: லுடோவைக்) என்று லுடோவைக்கை மேற்கோள் காட்டும் குணரத்தின புதுப்பணக்காரர்களின் இச்செய்கை முதலியார் வகுப்புக்கு எரிச்சல் ஊட்டுவதாக இருந்தது என்றும் தொடர்ந்து எழுதுகிறார். மது ஒழிப்பு பிரசார இயக்கத்தில் முன்னின்ற சேனநாயக்காக்களையும், ‘முறைகேடான வழிகளில் தம் செல்வத்தைத் திரட்டிக்கொண்ட’ கராவ குத்தகைக்காரர்களையுமே குத்திக் காட்டுவதாகவே இது அமைந்தது (ஜயசேகர 1970: 212-13).

## அரசியல் சீர்திருத்தமும் புதிய வர்க்கமும்

முதலியார்கள் குழுமத்தினர்தான் அறிவாளர் சமூகத்திற்குரிய பண்பட்ட இயல்புகள் இல்லாத ‘அநாமதேயங்கள்’ என்று புதுப்பணக்காரர்கள் கருதியதும், புதுப்பணக்காரர்கள் மத்தியில் இருந்து தோன்றிய ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் ‘தாரகைகள்’தான் உண்மையில் ‘அறியப்பட்டோர்’ என்று புதுப்பணக்காரர்கள் எண்ணியதும்தான் இந்த ‘அநாமதேயங்கள்’ என்ற சர்ச்சையின் நகைமுரண். புதிய பணக்காரர்களின் கோரிக்கைகள் தயவுதாட்சண்யமின்றி நிராகரிக்கப்பட்டுக்கொண்டிருந்த வேளையில்தான், 1907 ஆம் ஆண்டில் அரசியல் சீர்திருத்தக்கோரிக்கை எழுந்தது. தமது பெரும்சிறப்புடைய தனிநபர்களிற்கு இடங்கொடுக்காமல், நிறுவனமாகிப் போய்விட்ட முதலியார் குடும்பங்களுக்கு அரசாங்கம் சலுகை காட்டிக்கொண்டிருந்த வேளையில் அரசியல் சீர்திருத்தத்திற்கான பரவலான ஆதரவை வேண்டிப் பிரசாரம் தொடங்கப்பட்டது. அரசியல் சீர்திருத்தத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் நடைபெற்ற பிரசாரத்தை சாதியடிப்படையில் கொவிகமச் சாதியினருக்கும் கராவச் சாதியினருக்கும் நடந்த விவாதமாகவும் போட்டியாகவும் சிலர் விளக்கம் தந்துள்ளனர். உண்மை யாதெனில், புதுப்பணக்காரர்களான சீர்திருத்தவாதிகளுக்குள் எல்லாச் சாதிகளைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள்; எல்லா இனங்களையும் சேர்ந்தவர்களாகவும் இவர்கள் இருந்தனர். சீர்திருத்தத்தை எதிர்த்த பழமைவாதிகளுள்ளும் சமூகத்தின் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தோர் இருந்தனர். சீர்திருத்தவாதிகளின் பிரசாரம் ‘சிலோன் ஸ்ராண்டர்ட்’ என்ற பத்திரிகை வாயிலாக முதலில் தொடங்கப்பட்டது. இப்பத்திரிகை டி சொய்சா குடும்பம், என்.பி.டி. சில்வா, யோன் குளோவிஸ் டி சில்வா ஆகிய சாராயக்குத்தகை முதலாளிகளின் உடைமையாக இருந்தது. பின்னர் இதற்குப் பதிலாக ‘மோணிங் லீடர் (Morning Leader) என்ற பத்திரிகை சீர்திருத்தப் பிரசாரத்தைத் தொடர்ந்தது. இப்பத்திரிகையும் புதிய முதலாளிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்தது. இப்பத்திரிகை சமத்துவ உரிமைகள், அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவற்றை வலியுறுத்தித் தீவிரப்பிரசாரத்தில் இறங்கியது.

புதுப்பணக்காரர் என்ற புதிய வகுப்பினர் தமது பொருளாதார, அரசியல் நலன்களை முன்னெடுப்பதற்காக வேறு பல அமைப்புகளையும் உருவாக்கினர். செயற்பாடுகளை இழந்ததாய் இருந்த இலங்கைத் தேசிய கழகம் என்ற அமைப்பை ஜேம்ஸ் பீரிஸ் தலைமையில் புனரமைத்தனர். பிராந்தியங்களிலும் சீர்திருத்தம் கோரிய அமைப்புகள் உருவாகின. இக்காலத்தில் தான் சிலாபம் கழகம் (Chilaw Association) என்ற அமைப்பு உருவானது (இது கொறயா குடும்பத்துடன் தொடர்புடைய அமைப்பு). ஏனைய அமைப்புகள் குறித்தவகைப் பொருளாதார நலன்களின் அடிப்படையில் உருவானவை. 1905 இல் தொடங்கப்பட்ட காரீய

வர்த்தகர் சம்மேளனம் (Plumbago Merchants Union) இவற்றுள் ஒன்று (இச்சம்மேளனம் இதற்கு முன்பிருந்த 'பிளம்பாகோ டீலேர்ஸ் அசோசியேசன்' என்பதைக் கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக ஆரம்பிக்கப்பட்டது). 1907 இல், இச்சம்மேளனத்தில் 82 காரீயச் சுரங்க உடைமையாளர்கள் அங்கத்தவர்களாய் இருந்தனர். இதன் தலைவராக எச். பஸ்ரியன் பெர்னாண்டோவும், உப தலைவராக ஆர்.ஏ. மிறாண்டோவும் பணியாற்றினர். சம்மேளனத்தின் முக்கிய உறுப்பினர்களாக அமடோரிஸ் மென்டிஸ், யாக்கோப் டி மெல், என்.டி.பி. சில்வா, யூ.டி.எஸ். குணசேகர, டபிள்யூ.ஏ. பெர்னாண்டோ, யோன் குளோவிஸ் டி சில்வா, எச். யோசப் பீரிஸ், யோன் கொத்தலாவல (மூத்தவர்), டொன் ஸ்பேட்டர் சேனநாயக்க, டி.டி. பெத்திரிஸ் ஆகியோர் இருந்தனர். இவர்கள் கராவ, கொவிகம, சலாகம, வகும்புர ஆகிய சாதிகளைச் சேர்ந்தோராவர் (றைட் 1907; 588,624). சுதேச பெருந்தோட்ட முதலாளிகளின் அமைப்பாக தாழ்நில உற்பத்திகளுக்கான கழகம் (Low Country Products Association) 1908 இல் தொடங்கப்பட்டது. இக்கழகத்தில் ஜேம்ஸ் பீரிஸ், எச்.ஜே.சி. பெரேரா, ஈ.ரி.டி. சம்பாயோ, ஹென்றி எல். டி மெல், என். டி.பி. சில்வா, மார்கஸ் பெர்னாண்டோ, டொன் ஸ்பேட்டர் சேனநாயக்க என்போர் அங்கத்தவர்களாயிருந்தனர். இங்கும் கராவ, கொவிகம, துராவ, நவண்டன ஆகிய சாதிகளின் பிரதிநிதிகள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டதைக் காண்கிறோம். பல சாதிகளின் பிரதிநிதிகளான இவர்கள் தமது முதலீடுகளைப் பரவலாக்கிக் கொண்டுள்ளதையும் காண்கிறோம் (ஜயசேகர 1970: 149 மற்றும் 241-42).

பல்வேறு அமைப்புகளில் இருந்தும் மனுக்களும் விண்ணப்பங்களும் கிடைக்கத்தொடங்கியது (தாழ்நில உற்பத்திகள் கழகம், சிலாபம் கழகம், இலங்கைத் தேசிய கழகம் என்பன). தனிநபர்களான ஜேம்ஸ் பீரிஸ், எச்.ஜே. டி மெல், (இருவரும் கராவ சாதியினர்) எச்.ஜே.சி. பெரேரா (துராவ சாதி) ஆகியோரும் இவ்வாறான மனுக்களையும் விண்ணப்பங்களையும் அரசுக்கு அனுப்பினர். இவை முதலாளிகளான தோட்டச்சொந்தக்காரர், குத்தகைக்காரர், வர்த்தகர்கள், உயர்தொழில்களில் இருந்தோர் ஆகிய பலரதும் அபிலாசைகளைப் பிரதிபலிக்கலாயின. இது அரசியல் சீர்திருத்த இயக்கத்தில் புதியதொரு கட்டமாக அமைந்தது. முக்கிய சீர்திருத்தக் கோரிக்கைகளாவன: i) நிர்வாக சபைக்கு இரண்டு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் (Unofficial) நியமிக்கப்பட வேண்டும் ii) இனக்குழுமத்தை அடிப்படையாகக்கொண்ட பிரதிநிதித்துவமுறை ஒழிக்கப்பட வேண்டும் iii) சட்டசபைக்கு பிரதிநிதிகளை 'தேர்தல்' மூலம் தெரிவு செய்ய வேண்டும். இத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமை மட்டுப்படுத்தப்பட்டதாகவும் மத்தியதர வகுப்புக்கு உரியதாகவும் இருத்தல் வேண்டும்.

1907 ஆம் ஆண்டில் யாக்கோப் டி மெல் அவர்களின் மகனான எச்.ஜே. டி மெல் இனக்குழும அடிப்படையிலான பிரதிநிதித்துவம் பழமையானதும் தீங்கானதும் எனக் கண்டனம் செய்தார். சட்டசபையில் உத்தியோகச்சார்புடையவர்கள் பெரும்பான்மையாக இருக்கலாம். பிற உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களை தேர்தல்மூலம் தெரிவு செய்ய வேண்டும் என்றார் (மேலது 144). 1908 ஆம் ஆண்டில் ஜேம்ஸ் பீரிஸ் இது பற்றி ஒரு ஆலோசனையை முன்வைத்தார். உத்தியோகத்தர்கள் 13 பேரும் உத்தியோகப்பற்றற்றோர் 12 பேரும் இருக்கலாம் என்றும், இப் 12 பேரில் 7 பேர் பிராந்திய அடிப்படையில் வாக்காளர்களால் தேர்ந்து எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இக்கோரிக்கைகள் யாவும் மிதவாதப்போக்கை தெளிவாக எடுத்துக்காட்டுபவை. முதலாளித்துவ வகுப்பு, சுய ஆட்சியையோ, சர்வசன வாக்குரிமையையோ கேட்பதற்குத் தயாராக இருக்கவில்லை. இவ்வகுப்பு சட்டசபையில் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையைக்கூட விடுப்பதற்கு தயாராக இருக்கவில்லை என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது. காலனித்துவ ஆட்சியாளர்களின் ஜனநாயக விரோத மனப்பாங்கும், இலங்கையின் பழமைவாத சமூகப்பிரிவினரான 'அறியப்பட்டோரின்' (Somebodies) அகங்காரமும், பாசாங்குத்தனமும் முதலாளித்துவ வகுப்பின் புதிய பணக்கார வகுப்பிற்கு விரக்தியுணர்வை வளர்ப்பதாக இருந்ததையே இது எடுத்துக்காட்டுகிறது.

தமது கோரிக்கைகளை முன்வைத்து கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை மிதவாதிகள் ஆதரிக்கவில்லை. இது வெளிப்படையானது. எச். ஜே.சி. பெரேரா "இந்தியாவில் அண்மையில் நிகழ்ந்தது போன்ற விரும்பத்தகாத சம்பவங்களான கிளர்ச்சி, அமைதியின்மை என்பனவற்றை ஏற்படுத்தக்கூடாது" என்று கூறினார். புதிய முதலாளி வர்க்கம் இவ்வகையில் தனது வர்க்க

உணர்வுகளையே வெளிப்படுத்தியது. சுதேசிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கைத்தொழில்களும் வர்த்தக முயற்சிகளும் விரிவடைந்திருப்பதால், ‘முற்போக்குடைய அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களைச் செய்வதற்குரிய காலம்’ கனிந்துள்ளது என்று இவ்வகுப்பினர் கருதினர் (இலங்கை தேசிய கழகத்தின் கைந்நூல் 1929: 15 மற்றும் 22). பெரேரா இந்தியாவின் ‘இராஜதுரோக’ நடவடிக்கையாளர் போன்றவர் அல்லர். இருப்பினும் அவர் கடுமையான சொற்களில் தன் கருத்துகளை 1909 ஆம் ஆண்டில் தெளிவாகக் கூறினார்.



பொன். இராமநாதன்
Image Source : www.dailymirror.lk

பழைய இலங்கை மனப்பாங்கினரின் பழமைவாதம், பொறாமையுணர்வு, சாதியை முக்கியப்படுத்துதல், சில குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தவறு இழைக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை, பிறழ்வுப் போக்குடைய இனக்காழ்ப்பு ஆகிய இயல்புகளை அவர் சாடினார் (ஜயசேகர 1970: 158). அரசியல் சீர்திருத்தத்திற்கான பிரசார இயக்கத்திற்கு கவர்னர் சாதகமான பதிற்குறி எதனையும் காட்டவில்லை. புதியபணக்காரர்களான ‘கராவக்களின்’ பேராசைகளையே இவை வெளிப்படுத்துவன என்று அவர் குறிப்பிட்டார். பிரடரிக் பவுஸ் (Frederick Bowes) என்ற பிரித்தானிய அதிகாரி இப்பிரசார இயக்கம் ‘பணம் படைத்த தாழ்சாதிக் குழுக்களின் பொறாமையின் வெளிப்பாடு’ என்றும் ‘சட்டசபை ஆசனங்களை ஒரு பீரிஸிற்கும் ஒரு பெர்னாண்டோவுக்கும் கொடுத்துவிட்டால்போதும் அடுத்த ஐந்து வருடங்களுக்கு அரசியல் சீர்திருத்தம் பற்றிய பேச்சு இருக்காது’ என்றும் கூறினார் (மேலது: 164).

1911-12 காலத்தின் குறுமக்கலம் அரசியல் யாப்புத் திருத்தம் சில அற்பசலுகைகளை வழங்கியது. மிதவாதிகளின் கோரிக்கைகள் ‘அப்போது நிராகரிக்கப்பட்டிருந்ததைக் கண்டு கொதிப்படைந்தவர்கள் கண்டனம் செய்தனர். புதிய சட்டசபை, உத்தியோகத்தர்களே பெரும்பான்மையினராக இருக்கும் வகையில் அமைக்கப்பட்டது. 11 உத்தியோகச்சார்புடையவர்களும், 10 உத்தியோகப்பற்றற்றவர்களும் இச்சட்டசபையில் இருப்பர் என்றும், உத்தியோகப்பற்றற்றவர்கள் 10 பேரில் 7 பேர் வெவ்வேறு இனக்குழுமங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக நியமிக்கப்படுவர் எனவும் கூறப்பட்டது. 4 பேர் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதான வாக்குரிமையின்படி தெரிவு செய்யப்படவிருந்தனர். இவ்வாறு தெரிவு செய்யப்படுவோரில் ஐரோப்பியர் இருவர், பறங்கியர் ஒருவர், ‘படித்த இலங்கையர்’ ஒருவர் என்றவகையில் இனக்குழுக்களின் பிரதிநிதிகள் இருப்பர் என்றும் கூறப்பட்டது. சட்டசபையில் சீர்திருத்தம் பற்றிய விவாதம் முதலாளி வகுப்புக்குள் இருந்த இரு பிரிவினர் தமக்குள் மோதிக்கொள்வதற்கான சந்தர்ப்பமாக அமைந்தது. எஸ். சி. ஒபயசேகர சீர்திருத்த ஆலோசனைகளை எதிர்த்துப்பேசினார். தேர்தலின்மூலம் சிலரைத் தெரிவு செய்வதான சலுகையை லண்டனில் உள்ள காலனிகளுக்கான அலுவலகமே வழங்க முன்வந்த வேளையில் எஸ். சி. ஒபயசேகர அதனைக்கூட எதிர்த்தார். பிரித்தானியர்களான இலங்கை உத்தியோகத்தர்களும், எல்லா இனக்குழுமங்களைச் சேர்ந்த பழமைவாதிகளும் ஒபயசேகரவின் கருத்தை ஏற்கவில்லை. சட்டசபையில் நடைபெற்ற விவாதத்தில் ஒபயசேகர பழமைவாதக் கண்ணோட்டத்தை வெளியிட்டார். நாடு தேர்தல்மூலமான தெரிவுக்கு ‘இன்னும் பக்குவப்படவில்லை’ என்றார்.

சில அமைப்புகளையும், விரல்விட்டு எண்ணக்கூடிய சில கபடம்மிக்க நபர்களையும் கொண்டதும், தமது தீய நோக்கங்களை அடைவதற்காக செயற்படுவதுமான இந்த இயக்கம் பற்றி இராஜாங்கச் செயலாளருக்குச் சரியாக எடுத்துக்கூறப்பட்டிருந்தால் அவர் இந்த முடிவுக்கு வந்திருக்கமாட்டார். இந்தியாவில் நடந்ததுபோன்று இங்கேயும் அமைதியின்மையும் பிரச்சினையும் தோன்றும் என்று அவரை நம்பச் செய்துள்ளார்கள். அப்படி ஒன்றும் இங்கே நிகழப்போவதில்லை. இலங்கையரைப் போன்று விசுவாசம்மிக்க மனிதர்களைக் கொண்ட இடம் உலகில் எங்குமே கிடையாது. இலங்கையர்கள் தேர்தல் முறையை ஆதரிக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால்,

பெரும்பான்மையான சிங்களவர்களும் பிற இலங்கையர்களும் அதனை ஒரு வரப்பிரசாதம் என்று நினைக்கவில்லை. மாறாகப் பேராபத்து என்றே கருதுகிறார்கள் (ஹன்சார்ட், 28 செப். 1910: 312-13).

இவ்விதமாக பழமைவாதக் கண்ணோட்டத்தை மிகத்தெளிவாக ஒபயசேகர எடுத்துக்கூறியது பலரையும் கொதிப்படையச் செய்தது. அப்போது பதில் சட்ட அதிபதி நாயகமாக இருந்த வால்டர் பெரேரா, சீர்திருத்தத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த ஒருவர். அவர் ஒபயசேகரவிற்கு எதிராகக் காரசாரமான கண்டனத்தைத் தொடுத்தார். "ஒபயசேகரவின் மனப்பாங்கு, தேர்தல்முறையை உடனடியாகவே அறிமுகப்படுத்த வேண்டும், நியமனமுறையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதற்குப் பலம் சேர்க்கும் ஒன்றாகவே உள்ளது" என்று குறிப்பிட்டார். சட்டசபையில் இந்த விடயம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 11 பேர் தேர்தல்முறைக்கு ஆதரவாகவும் 5 பேர் எதிராகவும் வாக்களித்தனர். எதிராக வாக்களித்தோர்: ஐரோப்பியர் - 3 பேர், முஸ்லிம் உறுப்பினர் அப்துல் ரகுமான் மற்றும் ஒபயசேகர ஆகியோராவர்.

படித்த இலங்கையர் ஆசனத்திற்கான முதலாவது தேர்தல் 1911 ஆம் ஆண்டு நடைபெற்றது. இத்தேர்தல் முதலாளித்துவ வர்க்கத்தின் இரு பிரிவினர்களுக்கும் இடையிலான மோதலை மீண்டும் புதுப்பிப்பதற்கான சந்தர்ப்பமாக அமைந்தது. இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடையோர் மிகக்குறைந்த தொகையினராக (2,957) இருந்தனர். ஆங்கிலம் கற்ற இச்சிறுதொகை வாக்காளர்களுக்கு வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட்டது. பொ. இராமநாதன், மார்கஸ் பெர்னாண்டோ என்ற இரு வேட்பாளர்களே களத்தில் நின்றனர். பெர்னாண்டோ 'சுய முயற்சியால் முன்னேறிய மனிதர்' (Self made man) என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். பரீட்சைகளில் திறமையைக் காட்டிச் சாதனை படைத்தும், பெரிய இடத்து விவாக சம்பந்தம் மூலமும் பொருளாதார - சமூக அந்தஸ்தில் மிக விரைவாக உயர்ந்து சென்றவர். 1864 ஆம் ஆண்டில் அன்றூ பெர்னாண்டோ என்பவரின் மகனாகப் பிறந்த மார்க்கஸ் பெர்னாண்டோ சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது பாடசாலைக் கல்வியும் பல்கலைக்கழகக் கல்வியும் 'அதீத விவேகம் மிக்கவர், இவ்வாறான சாதனைகளைப் படைத்த இலங்கையர் வேறு யாருமில்லை' என்ற புகழ்ச்சிக்குரியதாக இருந்தது. லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரிக்குப் புலமைப்பரிசில் பெற்று, 1883 ஆண்டில் அங்கு சென்ற பெர்னாண்டோ 1888 இல் எம்.பி. (M.B) பட்டத்தையும் 1889 இல் எம்.டி. (M.D) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். 1891 இல் இலங்கை திரும்பியதும் இலங்கை மருத்துவக் கல்லூரியின் பதிவாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் கொழும்புப் பொதுமருத்துவமனையின் மருத்துவராக நியமிக்கப்பட்டார். 1891 ஆம் ஆண்டிலேயே இவரின் திருமணமும் நடைபெற்றது. சாள்ஸ் டி சொய்சாவின் மகள் மேரி பிரான்சிஸை பெர்னாண்டோ மணம் முடித்தார் (இதே ஆண்டில் இவருக்கு முன்பதாக இவரது தமையனார் சி.எம். பெர்னாண்டோ, சாள்ஸ் டி சொய்சாவின் இன்னொரு மகளை திருமணம் செய்தார்). மார்கஸ் பெர்னாண்டோவுக்கு ரூ 200,000 காசும் பிற சொத்துகளும் சீதனமாகக் கிடைத்தது. பெர்னாண்டோ பின்னர் பக்டீரியா ஆராய்ச்சி நிலையத்தின் (Bacteriological Institute) பணிப்பாளராக நியமனம் பெற்றார். இந்த நிறுவனம் டி சொய்சா குடும்பம் வழங்கிய நன்கொடைகொண்டு ஸ்தாபிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது (றைட், 1907:549-50). அக்காலத்தில் பெரிய இடத்து திருமணப் பந்தங்களைச் செய்து கொண்ட பிற உயர்தொழில் உத்தியோகத்தர்கள் போன்றே பெர்னாண்டோவும் பெருந்தோட்ட உடைமையாளரானார். உயர் தொழில்தகைமைகள், நில உடைமை, முக்கிய குடும்பங்களோடு உறவுமுறைத் தொடர்புகள் என்ற தகுதிகளைக் கொண்டிருந்த பெர்னாண்டோவைப் புதிய பணக்காரர் குழுமம் தமது வேட்பாளராகத் தேர்ந்து கொண்டது.

1911 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழரான பொ. இராமநாதன் சிங்களவரான மார்கஸ் பெர்னாண்டோவைத் தோற்கடித்தார். மேலோட்டமான பார்வையில் இந்நிகழ்வு படித்த சிங்களவர்களின் முற்போக்குச் சிந்தனையைக் காட்டுவதாகத் தோற்றலாம். ஒரு சிங்களவருக்குப் பதிலாக தமிழர் ஒருவருக்கு அவர்கள் வாக்களித்ததன் மர்மம் யாது? இந்த புதிரை விடுவிக்கும் விளக்கம் ஒன்று அடிக்கடி கூறப்பட்டு வந்துள்ளது. சிங்கள கொவிகம சாதியினருக்கும் கராவ சாதியினருக்கும் இடையிலான சாதிப்போட்டியின் விளைவே இதுவெனவும், கொவிகம சிங்களவர்கள், சிங்கள கராவ ஒருவரைவிட தமிழ் வேளாளர் ஒருவரைத் தேர்ந்து

கொள்வதற்கு விரும்பினர் (வேளாளர், கொவிகமவுக்குச் சமதையான தமிழ்ச் சாதி) என்பதாக இவ்விளக்கம் அமைந்தது. இந்த விளக்கத்தின்படி கொவிகம - கராவ என்ற சாதிகளிடையே கசப்புணர்வு தீவிரமாக இருந்தது. இத்தேர்தல் போட்டி பற்றிக் கருத்துரைக்கும் கே. எம்.டி. சில்வா "விறுவிறுப்பும் உயிர்ப்பும் கொண்டதான மிக வித்தியாசமான தேர்தல், சாதிப்போட்டி உச்சத்திற்குச் சென்றது (1973b:387)" என்று குறிப்பிடுகிறார்.

கொவிகம சாதியினரில் பலர் கராவமீது விரோதம் பாராட்டினர் என்பது உண்மைதான். ஆயினும் 1911 ஆம் ஆண்டுத் தேர்தல் முழுமையாகச் சாதியடிப்படையிலான போட்டியாக இருந்தது என்று கூறுவது தவறு. வேட்பாளர் இருவருக்கும் அரசியல் அடிப்படையில் பல வேறுபாடுகள் இருந்தன. இராமநாதன் இளமைக்காலத்தில் முற்போக்கான விடயங்களுக்காக குரல் கொடுத்தவர். இத்தேர்தல் நடந்தவேளை அவருக்கு 60 வயது ஆகியிருந்தது. அவர் ஒரு பழமைவாத அரசியல்வாதி என்பது நாடறிந்த தொன்றாகியிருந்தது. இதனால் அவர் எல்லாச் சமூகத்திலும் இருந்த பழமைவாதிகளுக்கு ஏற்புடைய ஒருவராக இருந்தார். இராமநாதனின் கொள்கைப் பிரகடனத்தில் எவ்விதமான தீவிர முற்போக்கு கருத்துகளும் இடம்பெறவில்லை. அவர் வரிச்சீர்திருத்தம், கிராமத் தலைமைக்காரர்களுக்குக் கூடிய சம்பளம், நாட்டில் உயர் கல்விக்கான வாய்ப்புகள் செய்யப்படுதல் ஆகிய விடயங்களை மட்டும் குறிப்பிட்டிருந்தார். பெர்னாண்டோவின் கொள்கைப் பிரகடனமும் தீவிரத்தன்மையைக் கொண்டிராதபோதும், முதலாளித்துவ வகுப்பின் தேவைகளைப் பிரதிபலிப்பதாக இருந்தது. அவர் ரயில் சேவைகளை விஸ்தரித்தல் பற்றியும், கைத்தொழில் கல்விக்கான வசதிகளை வழங்குதல் பற்றியும் குறிப்பிட்டார். தாம் கல்வியறிவால் மேம்பட்ட அறிவாளி வகுப்பைப் பிரதிநிதித்துவம் செய்வதாகவும் 'ஐக்கியப்பட்ட இலங்கைச் சமூகம், அரசியல் விடுதலை ஆகிய மக்களின் அபிலாசைகளையும் நம்பிக்கைகளையும்' பிரதிநிதித்துவம் செய்பவன் என்றும் தன்னைக் குறிப்பிட்டார் (ஜயசேகர 1970: 181-82). இராமநாதனுக்கு தேர்தலில் 1645 வாக்குகள் கிடைத்தன. அவர் 664 மேலதிக வாக்குகளைப்பெற்று சட்டசபையின் முதலாவது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரானார்.

1911 ஆம் ஆண்டுத் தேர்தல் சிங்களவர், தமிழர் என்ற இரு இனத்தவர்களிடையேயும் இருந்த பழமைவாதிகள் இன வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றுபட்டிருந்ததைக் காட்டுகிறது. இதன்பொருள் சிங்கள கொவிகம, சிங்களவரான கராவவைவிட தமிழ் வேளாளரை விரும்பி ஏற்றனர் என்பதன்று. பெரும்பாலான சிங்களப் பழமைவாதிகள் சீர்திருத்தவாதியான சிங்களவர் ஒருவரைவிடப் பழமைவாதியான தமிழர் ஒருவரையே விரும்பினர் என்பதே இத்தேர்தல் முடிவு எடுத்துக்கூறும் உண்மையாகும். அத்தோடு கண்டியின் உயர்குடி நிலப்பிரபுக்களும் இராமநாதனுக்கே தமது ஆதரவை வழங்கினர். இந்நிலப்பிரபுத்துவக் குடும்பங்களுக்கு சீர்திருத்தவாதியான பெர்னாண்டோவைவிட பழமைவாதியான இராமநாதனின் கருத்துகள் ஏற்கத்தக்கனவாய் இருந்தன. பௌத்தர்களும் பௌத்தர்களது நலன்களுக்காகவும் வாதாடிய இந்துவான இராமநாதனை ஆதரித்ததும், கிறிஸ்தவரான மார்க்கஸ் பெர்னாண்டோவை நிராகரித்ததும் இயல்பானதே. தமிழ் மத்தியதர வகுப்பும் இராமநாதனையே ஆதரித்தது. யாழ்ப்பாணத்தின் 440 வாக்குகளில் 410 வாக்குகள் இராமநாதனுக்குக் கிடைத்தன (வைத்திலிங்கம் 1977: 584).

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகியோர் மத்தியில் இருந்த பழமைவாதிகள் தமது வர்க்க நலன்களோடு ஒத்துப்போகக்கூடிய ஒருவரையே விரும்பினர். அத்தகையவர் இன்னொரு இனத்தை அல்லது சாதியைச் சேர்ந்தவராய் உள்ளார் என்பது இரண்டாம் பட்சமான காரணமாகும். பெர்னாண்டோ முதலாளித்துவ வகுப்பின் உயர்தொழில் பிரிவினர்களின் ஆதரவைப் பெற்றார். உயர்தொழில்களில் இருந்த கொவிகம சாதியினரும் பிறசாதியினரும் இராமநாதனைவிட பெர்னாண்டோ முற்போக்கான வேட்பாளர் என்பதைக் கண்டனர். ஈ.ஜி. ஜயவர்த்தன, டாக்டர் சி.ஏ. ஹேவவித்தாரண, எட்மண்ட் ஹேவவித்தாரண, ஜோர்ஜ் ஈ.டி. சில்வா, டி.டி. பெட்ரிஸ், எச்.ஜே.சி. பெரேரா ஆகியோர் பெர்னாண்டோவை ஆதரித்தனர். இறுதியாகக் குறிப்பிட்ட எச்.ஜே.சி. பெரேரா அக்காலத்தின் தலைசிறந்த நியாயத்துரந்தரராவார்; 1908 ஆம் ஆண்டில் அவர் சீர்திருத்தப் பிரசார இயக்கத்தை நடத்துவதில் முன்னணியில் நின்று செயற்பட்டவர். "பெர்னாண்டோ முன்னேற்றம், விடுதலை ஆகியவற்றை வேண்டி நிற்கும் சக்திகளை பிரதிநிதித்துவம் செய்கிறார் என்றும், கல்விபெற்ற வாக்காளர்கள் கீழைத்தேயத்தின் சிந்தனை முறையில் இருந்து தம்மை விடுவித்துக்

கொண்டவர்கள்” என்றும் பெரேரா கூறினார் (ஜயசேகர 1970: 181-82).

படித்த இலங்கையர் ஆசனத்திற்கான முதலாவது தேர்தல் 1911 ஆம் ஆண்டு நடைபெற்றது. இத்தேர்தல் முதலாளித்துவ வர்க்கத்தின் இரு பிரிவினர்களுக்கும் இடையிலான மோதலை மீண்டும் புதுப்பிப்பதற்கான சந்தர்ப்பமாக அமைந்தது. இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடையோர் மிகக்குறைந்த தொகையினராக (2,957) இருந்தனர். ஆங்கிலம் கற்ற இச்சிறுதொகை வாக்காளர்களுக்கு வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட்டது. பொ. இராமநாதன், மார்கஸ் பெர்னாண்டோ என்ற இரு வேட்பாளர்களே களத்தில் நின்றனர். பெர்னாண்டோ ‘சுய முயற்சியால் முன்னேறிய மனிதர்’ (Self made man) என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

புதுப்பணக்காரர்களான முதலாளி வகுப்பினர் தமக்குச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று தொடர்ச்சியாக விடுத்துவந்த கோரிக்கைக்கு 1912 ஆம் ஆண்டிலேயே பயன் கிடைத்தது. அவ்வாண்டில் சாள்ஸ் டி சொய்சாவின் இரண்டாவது மகன் ஏ.ஜே.ஆர். டி. சொய்சா கரைநாட்டுச் சிங்களவர்களிற்கான இண்டாவது பிரதிநிதியாக நியமனம் பெற்றார். முதலாவது பிரதிநிதியாக எஸ்.சி. ஒபயசேகர நியமனம் பெற்றார். பிரித்தானிய ஆட்சியாளர்கள் இவ்விதம் புதுப்பணக்காரர்களான முதலாளி வகுப்பின் இருப்பை ஏற்று அங்கீகரித்து அவர்களுக்கென ஒரு பிரதிநிதியை நியமனம் செய்தபோது, ஆட்சியாளர்கள் அவ்வகுப்பின் திறமை வாய்ந்த அரசியல் பிரசாரகர்களையும் ஆளுமைமிக்க நபர்களையும் ஒதுக்கிவிட்டனர் என்பது முக்கிய கவனத்திற்குரியது. ஜேம்ஸ் பீரிஸ், மார்கஸ் பெர்னாண்டோ போன்றவர்களை ஒதுக்கிவிட்டு அவர்களிலும் குறைந்த தகைமையை உடையவரான ஏ.ஜே.ஆர்.டி. சொய்சாவை அரசாங்கம் சட்டசபைக்கு நியமித்தது. 1869 இல் பிறந்தவரான ஏ.ஜே.ஆர்.டி. சொய்சா கொழும்பிலும், இங்கிலாந்திலும் கல்வியைத் தொடர்ந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் ரினிட்டி ஹாலில் இரு வருடம் படித்த சொய்சா தமது பல்கலைக்கழகக் கல்வியைப் பூர்த்திசெய்யாமல் 1890 இல் அவரது தந்தையார் இறந்தபோது நாடு திரும்பினார். குடும்பத்தின் பேரளவு சொத்துகளை நிர்வகிக்கும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். லிண்டா முலாகே டேவிட் டி சில்வா என்னும் பணக்கார சாராயக் குத்தகைக்காரரின் மகளை விவாகம் செய்தார். 1907 ஆம் ஆண்டில் அவருக்கு 3000 ஏக்கர் தேயிலை, ரப்பர், தெங்குத் தோட்டங்கள் இருந்தன (றைட் 1907: 543). இவ்வாறாக ஏ. ஜே.ஆர்.டி. சில்வா சாராயக் குத்தகையாளர்கள், பெருந்தோட்டச் சொந்தக்காரர்கள், சொத்துடைமையாளர்கள் என்ற வகையினரின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராக இருந்தார். அவர் ஆட்சியாளர்களின் கண்ணில் ஆபத்தான பேர்வழியாகத் தோற்றவில்லை என்பது முக்கியம். சொய்சா ஏன் நியமிக்கப்பட்டார் என்பதற்குரிய அரசாங்கத்தரப்புக் குறிப்பின்படி ‘அவர் எந்தவொரு விடயத்தையும் தர்க்கமுறையில் எடுத்துச்சொல்ல இயலாதவர்’ என்று கூறப்பட்டது. இது ஆட்சியாளர் பார்வையில் நல்ல தகுதியாக மதிக்கப்பட்டது. 1916 ஆம் ஆண்டில் ஏ.ஜே.ஆர்.டி. சொய்சாவின் சகோதரர் எல்.டபிள்யூ.ஏ. (வில்பிரட்) டி சொய்சா சிங்களவர் பிரதிநிதியாக சகோதரரின் இடத்திற்கு நியமிக்கப்பட்டார். 1884 இல் பிறந்த வில்பிரட் சொய்சா கொழும்பிலும், இங்கிலாந்தின் கிளவ் செஸ்டர் றோயல் விவசாயக்கல்லூரியிலும் கல்விகற்ற பின் நாடு திரும்பி குடும்பச் சொத்துகளை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றார். இவரும் தன் தமையனைப் போன்றே சர்ச்சைக்கு அப்பாற்பட்ட நபராக இருந்தார்.

1917 ஆம் ஆண்டில்தான் டாக்டர் மார்கஸ் பெர்னாண்டோவிற்கு சட்ட சபை நியமனம் கிடைத்தது. அவ்வாண்டில் கரைநாட்டுச் சிங்களவருக்கான பிரதிநிதியாக முதன்முதல் நியமனம் பெற்றார். அதன்பின் 1920-1925 வரை உத்தியோகப்பற்றற்ற நியமன உறுப்பினராக மாற்றியமைக்கப்பட்ட புதிய சட்டசபையில் நியமனம் பெற்றார். சட்டசபை உறுப்பினரான இக்காலத்தில் மார்கஸ் பெர்னாண்டோ முற்போக்கு சீர்திருத்தவாதி என்ற நிலையில் இருந்து விலகி வெகுதூரம் சென்றிருந்தார். அவரது அரசியல் எதிரியாக முன்னர் இருந்த பொ. இராமநாதனுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு 1919 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கைத் தேசிய

காங்கிரஸை ஆதரிப்பதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார். 1921 இல் காங்கிரஸின் கொள்கைகள் மாறியிருந்தன. 'பழமைவாதக் கராவ தலைவர்களான மார்கஸ் பெர்னாண்டோ போன்றவர்களே அதன் கூட்டங்களில் பங்குபற்றும் அளவுக்கு' காங்கிரஸ் மாறிவிட்டது (மேலது 484 மற்றும் 497). 1920க்களில் பெர்னாண்டோவுக்கு சேர் பட்டம் கிடைத்தது. அவர் தீவிர வலதுசாரிக் கருத்தியல் கொண்டவராக ஆகினார். சீர்திருத்தங்களையும், சர்வசன வாக்குரிமையையும் எதிர்ப்பதற்கு உருவாக்கப்பட்ட யூனியனிஸ்ட் கட்சியின் (Unionist Party) உபதலைவராக அவர் செயற்பட்டார். இக்கட்சியின் தலைவராக மஹா முதலியார் சேர். சொலமன் டயஸ் பண்டாரநாயக்க இருந்தார். மஹா முதலியார் குடும்பத்தின் ஏனைய முக்கியஸ்தர்களான பீலிக்ஸ் டயஸ், வெஸ்லி டி சேரம், டொனல்ட் ஒபயசேகரம் என்போரும் பழமைவாதிகளான அப்துல் ரகுமான், கேட் முதலியார், ஏ.ஈ. ராஜபக்ச ஆகியோரும் யூனியனிஸ்ட் கட்சியில் உறுப்பினர்களாக இருந்தனர். 'காங்கிரஸின் கருத்துகளோடு உடன்பாடில்லாத பலம்மிக்க அரசியல் சிந்தனைக்கூடம் ஒன்று இந்த நாட்டில் உள்ளது' (பண்டாரநாயக்க 1929: 290) என்பதை அரசியல் சீர்திருத்தம் பற்றி ஆராய வந்திருந்த டொனமூர் ஆணைக்குழுவினருக்கு எடுத்துக்காட்டுவதே இவர்களின் நோக்கமாக இருந்தது (பண்டாரநாயக்க 1929: 290).

ஜேம்ஸ் பீரிஸின் சரித்திரமும் ஏறக்குறைய மார்கஸ் பெர்னாண்டோவுடையதைப் போன்றே அமைந்தது. அவரும் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராகப் பேசியது கிடையாது; மிதவாத சீர்திருத்தங்களையே கேட்டார். முதலாம் உலகப்போர் நடந்த காலத்தில், இலங்கை தேசிய கழகத்தின் தலைவராக இவர் இருந்தார். அவர் அக்காலத்தில் சீர்திருத்தக் கோரிக்கைகளை கைவிடுவதற்கும் யுத்தம் முடியும் வரை இப்பிரச்சினையை ஒத்திப்போடுவதற்கும் சம்மதித்தார். பிரித்தானிய அரசின்மீது தான் கொண்டிருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தும் முகமாகவே இவ்வாறு செய்தார் (ஜயசேகர 1970: 4501). மனிங் சீர்திருத்தங்களின்படியான புதிய சட்டசபை 1920 இல் அமைக்கப்பட்டபோது, அச்சபையில் 14 உத்தியோகத்தர்களுக்கும் 23 உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களுக்கும் இடம் கிடைத்தது. ஜேம்ஸ் பீரிஸ் கொழும்பு நகரத்தின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டு, சட்டசபையில் தொடர்ந்து பதவி வகித்தார். அவ்வாண்டில் அவருக்கு சேர் பட்டம் கிடைத்தது. அப்பட்டம் கிடைத்தமையை அவர் பெரும்பேறாகக் கருதினார் போலும்; லண்டனில் உள்ள கொலிஜ் ஒவ் ஹெரல்ரிக்கு விண்ணப்பித்து பிரபுக்களுக்குரிய படை அணிகலன்களை அணிந்துகொள்ள விண்ணப்பித்தார். 1913 இல் ஜேம்ஸ் பீரிஸ் 'நிலப்பிரபுத்துவத்தின் சரிவு' பற்றிப் பேசியவர் (கெபிள் மற்றும் சூரியசேன 1950:82, ஜயசேகர 1970:425). இறுதிக்காலத்தில் பீரிஸ் மிகுந்த பழமைவாதியாக மாறினார். அவர் சர்வசன வாக்குரிமைக்கு எதிராகப் பேசினார். இலங்கைத் தேசிய காங்கிரஸின் அரசியல் சீர்திருத்தச் சிபார்சுகளை ஏற்றுக்கொள்ளாத ஜேம்ஸ் பீரிஸ் அவ்வமைப்பிலிருந்து விலகினார் (கெபிள் மற்றும் சூரியசேன 1950:88). கூடிய அளவிலான சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்த ஜேம்ஸ் பீரிஸ் பின்வருமாறு கூறினார்:

"நாடு சுயாட்சிக்கு இன்னும் பக்குவப்படவில்லை. பொதுத்திணைக்களங்களின் பொறுப்பையும் நாட்டின் பொதுவான நிர்வாகத்தினையும் ஒப்படைக்கக்கூடிய பயிற்சிபெற்ற தகுதியுடைய ஆட்களின் குழு இந்நாட்டில் உருவாகவில்லை (மேலது)."

சமத்துவம், முன்னேற்றம், சட்டசபைச் சீர்திருத்தம், வாக்களிக்கும் உரிமையைப் பரவலாக்கல் ஆகிய விடயங்களின் முன்னணிப் பிரசாரகர்கள் என்று சொல்லக்கூடியவர்களாய் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் விளங்கிய பெருமக்கள் இருவர் (மார்கஸ் பெர்னாண்டோ, ஜேம்ஸ் பீரிஸ்) பழமைவாதிகளின் பக்கத்தில் சேர்ந்துகொண்டு சுயாட்சி, சர்வசன வாக்குரிமை ஆகியவற்றை எதிர்ப்பவர்களாக விரைவில் மாறினர் என்பது தெளிவாகிறது. 1920களின் பிற்பகுதியில் புதுப்பணக்காரர்களதும் பழைய பணக்காரர்களான முதலியார் குழுமத்தினதும் அடிப்படை நலன்கள் ஒன்றுபடுவதையும் வேறுபாடுகள் மறைவதையும் காண்கிறோம். வடிகட்டிய பழமைவாதிகளின் முகாமுக்குள் மிதவாத சீர்திருத்தவாதிகள் இக்காலத்தில் புகுந்துகொள்வதையும் காண்கிறோம். 1920களின் பின்னர் முன்னைய காலகட்டத்தின் அரசியல் முரண்பாடுகள் முடிவுக்கு வருவதையும், வர்க்க நலன்கள் மேலோங்கி முரண்பாடுகள் உள்ளடங்கிப்போவதையும் காண்கிறோம். இக்காரணத்தினால் முதலாளி வர்க்கத்தின் முக்கிய பிரதிநிதிகள் சட்டசபையில் இடம் பிடித்துக்கொண்டனர். 1931 இல் சர்வசன வாக்குரிமை கிடைத்த பின்னரும் முதலாளித்துவ வகுப்பின் பிரதிநிதிகளே சட்டசபையை ஆக்கிரமித்தனர்.



தி. செல்வமனோகரன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்த துறையின் முதுநிலை விரிவுரையாளராக தி. செல்வமனோகரன் திகழ்கிறார் . இந்திய மெய்யியல் கற்கை புலத்தில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளார். இந்துக்கற்கை புலம் சார்ந்து காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், இலங்கையில் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாயன்மார் பாடல்கள், தமிழில் மெய்யியல் எனும் நூல்களை எழுதியுள்ளார். பெறுதற்கரிதான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார். 'சொற்களால் அமையுலகு' என்னும் இவரது நூல் கலை, இலக்கியம் சார்ந்த விமர்சன நூலாகும்.

# இடும்பன் பூசை

பின்காலனியச் சூழலில் ஈழத்துப்புலம் தனக்கான தனித்த அடையாளங்களை, அவற்றைப் பேணுதலுக்கான அக்கறையை கொண்டமைந்ததாக இல்லை. பொருளாதாரம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் 'மேனிலையாக்கம்' எனும் கருத்தாக்கத்தை நோக்கிய பயணத்தையே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் தன்னடையாளப் பேணுகை குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாகவே 'ஈழத்து நாட்டார் தெய்வங்கள்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமையப்பெறுகிறது. இதில் ஈழத்தில் மட்டும் சிறப்புற்றிருக்கும் தெய்வங்கள், ஈழத்தில் தனக்கான தனித்துவத்தைப் பெற்றிருக்கும் தெய்வங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தொடரானது தெய்வங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் வரலாறு, சமூகப் பெறுமானம், சடங்கு, சம்பிரதாயங்கள், தனித்துவம், இன்றைய நிலை, சமூகத்துக்கும் அதற்குமான இடைவினைகள் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. கள ஆய்வின் வழி நிகழ்த்தப்படும் இவ்வாய்வு விவரணம், வரலாறு எனும் ஆய்வு முறைகளின்படி எழுதப்படுகிறது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்களின் வழியும் நேர்காணல், உரையாடல், செய்திகள் என்பவற்றின் வழியும் பெறப்பட்டு சமூக விஞ்ஞானப் பார்வையினூடாக ஆக்கப்படுகின்றது.

## அறிமுகம்

இயற்கையின் மீதான ஆர்வம், அதிசயம், அச்சம் போன்றனவே அதனை வழிபடத் தூண்டின; இயற்கையின் இயல்பிறந்த ஆற்றல்கள்மீது மனிதரைக் கவனம் செலுத்தச் செய்தன. சடத்துவமான இயற்கை தானாகவே இயல்பிறந்த ஆற்றல்களை நிகழ்த்த முடியாது. இப்பிரமாண்டமான இயற்கையை இயக்க அதனிலும் ஆற்றல்வாய்ந்த சக்தி அல்லது சக்திகள் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட வலுப்பட இறைவன் பற்றிய பிரக்ஞை வலுப்பட்டது. இயற்கை வழிபாடு தெய்வ வழிபாடாயிற்று. இயற்கையின் இயல்பிறந்த ஆற்றல்களிலும் இறைவனது ஆற்றல்கள் மேலும் மேம்பட்டவை, கற்பனையாலும் எட்டமுடியாதவை, அதிலும் தன் தன் தெய்வத்தின் ஆற்றலே யாவற்றிலும் மேலானது என்ற கருத்துகள் மனிதகுல நாகரிக வளர்ச்சியோடு இணைந்து வலுவுற்று வளர்ந்தன.

இதனால் அவ்வவ்விறைவனைப் பற்றி பல்வேறு ஐதிகக் கதைகள் தோன்றின. அவை கால, தேச, வர்த்தமானத்திற்கேற்ப மேலும் மேலும் வளர்ச்சியுற்றன. இயற்கைப் பொருள்வழி இருந்த தெய்வம் விலங்கு, பறவை, மனிதவுருப் பெற்றது. வடிவம் அல்லது உருவம் முதன்னிலை பெறத் தொடங்கியது. விலங்கு - மனிதன், பறவை - மனிதன் என இணையுருவங்களுடன் மனித, ஆஜானுபாகுவான உருவங்களும்; அவற்றுக்கு நான்கு, தொடக்கம் பன்னிரெண்டு கைகள், ஒன்று தொடக்கம் ஆறு தலைகள் எனப் பல்வேறு 'அதீத' நிலைகளும் உருநிலைப்படுத்தப்பட்டன. அந்தத் தெய்வத்தை கேள்வியற்ற விசுவாசத்தோடு வழிபடும் அடியவர் பெறும் பேறுகள் என்பன முதன்மைப்படுத்தப்பட்டன.

இவற்றை மேலும் மேலும் வலுப்படுத்தப் பல்வேறு கதைகள் சொல்லப்பட்டன. அவை இதிகாசங்கள், புராணங்கள் எனச் செவ்விலக்கியங்களின் வழி மக்களின் மனதில் நிலைநிறுத்தப்பட்டன; சமயப்பிரசாரங்களின் பிரதான கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. அதிலும் இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள், சங்காரங்கள் என்பன விதந்துரைக்கப்பட்டன: கலை வடிவங்களாக்கப்பட்டு மக்கள் மத்தியில் மீள மீள நிகழ்த்தப்பட்டன. பொழுதுபோக்கு அம்சமாகவும், பிரசாரமாகவும், நம்பிக்கையாவும் இவை மக்கள் மனதில் நிலைத்துநிற்கச் செய்யப்பட்டு தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டன.

இந்தக் கதைகளானவை, கூத்தாக, கதையாக, பாடலாக பல்வேறு ரூபங்களில் பரவின. குறித்த ஒரு தெய்வத்தின் அல்லது நபரின் கதை பரவலாக்கமுறும் போது காலம், தேசம், பண்பாடு, தேவை அதன் அரசியல் என்பவற்றுக்கு ஏற்ப மாற்றமுறச் செய்யப்பட்டே வளர்க்கப்பட்டன. இதனால் காலவோட்டத்தில் அவை வேறுபட்ட தனிக்கதைகளுமாயின. அதேவேளை குறித்த பெயரில் வெவ்வேறு காலங்களில், இடங்களில் வெவ்வேறு கதைகள் தோன்றி உருப்பெற்று வளர்ந்தன என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இந்தியப் பாரம்பரியத்தில் தோன்றி, புராணக்கதைகளின் வழி தமிழகத்தில் நிலைபெற்ற கதைகளில் ஒன்றாகவே இடும்பனின் கதை காணப்படுகிறது. இந்த இடும்பன் பூசை பற்றிய ஆய்வில் திரு கோ. விஜிகரன், திரு. சி. துக்ஷாந் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்வி ரஜீவா ஆகியோர் துணைநின்றனர்.

## இடும்பன்

இடும்பர் எனும் சொல்லுக்கு ஒருவகை இராட்சதர், ஒருவகைச் சாதியார், செருக்கர், துயர் செய்வோர் (இடும்பை - துன்பம், தீமை, நோய், வறுமை, அச்சம்; இடும்பு - அகந்தை, கொடுஞ்செயல், தீங்கு) எனப் பொருள் சுட்டப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் பெரிய உருவம் (ஆஜானுபாகுவான தோற்றம்), நீண்ட கை - கால்கள் உடையவர்கள், பயங்கரமான தோற்றம் உடையவர்கள், கை அகட்டி நடப்பவர்கள், நன்றாக உண்பவர்கள் போன்றோரை இடும்பனுக்கு ஒப்பிடுவர். 'ஆளப் பார் இடும்பன் மாதிரி', 'இடும்பன் எண்டு நினைப்பு' போன்ற சொற்றொடர்களை இதற்கு உதாரணங்களாகச் சுட்டலாம்.

### இடும்பன் பற்றிய கதைகள்

இடும்பன் பற்றி பல்வேறு கதைகள் நின்று நிலவுகின்றன. ஆரம்பத்தில் சிறந்த சிவபக்தனாக இருந்த இராட்சசனான இடும்பன் பின்பு முருக பக்தனாகத் திகழ்ந்ததாகப் பொதுவில் கூறப்பட்டாலும் இதன்னின்றும் வேறுபட்ட கதைகளும் உண்டு.

1. **இராமாயணம்:** இராவணனால் கவரப்பட்ட சீதையைத் தேடிச் செல்லும் இராமன் சுக்கிரீவனின் உதவி பெற்று இலங்கையில் சீதை இருப்பதை அனுமன் மூலம் அறிகிறான். இராமன் சீதையை மீட்க சுக்கிரீவனின் படையோடு கரையை அடைகின்றான். கடல் குறுக்கிடுகிறது. பாலம் அமைக்க

வேண்டியநிலை ஏற்படுகிறது. அந்நிலையில் சுக்கிரீவனின் சேனை வீரர்களில் ஒரு அணியின் தலைவனாக இருந்து சேதுபந்தனத்தின்போது மலைகளைப் பிரித்துவந்த மாவீரர்களில் ஒருவனாக இடும்பன் காணப்படுகின்றான்.

2. **மகாபாரதம் -** இடும்பவனத்தில் இடும்பன் தன் தங்கையான இடும்பியுடன் வாழ்ந்து வந்தான். அவ்வனத்துக்கு வந்த பாண்டவர்களில் ஒருவனான பீமனைக் கண்டு இடும்பி காதல் கொள்கின்றாள். அவ்விடம் வந்த இடும்பன் “மானுடர்களை உண்ணும்படி உன்னை அனுப்பினால் நீ இவன்மீது காதல் கொள்கிறாயா?” என இடும்பியை ஏசியபோது பீமன் அவனை இடைமறிக்கின்றான். “அற்ப மானுடனே நீயும் இவள்மீது காதல் கொண்டுள்ளாயோ? அவ்வாறெனில் என்னோடு போர் புரிந்து வென்றபின் அவளைத் திருமணம் செய்” எனக் கூறினான். யுத்தம் நிகழ்ந்தது. இடும்பன் இறந்தான். பீமன் இடும்பியுடன் வாழ்ந்து கடோத்கஜன் எனும் மகனைப் பெற்றான்.

3. **பழனி தல புராணம்:** அகத்திய முனிவர் கந்தமலையின் சிகரங்களிற் சக்தி கிரி, சிவ கிரி என்னும் இரண்டையும் சக்தி - சிவமாகப் பாவித்துப் பூசித்துக் கந்தவேளின் உத்தரவின்படி அவற்றைப் பொதியமலைக்குக் கொண்டு வந்து பூசிக்கக்கருதி பெயர்த்து வந்தார். பூர்ச்சவனம் என்னும் தலத்திலே முருகனின் திருவருளினாலே அச்சிகரங்களை வைத்துவிட்டுப் பொதிகை நோக்கி வந்து கொண்டிருந்தார். சூரபன்மன் குலத்தோர்க்கு வில்வித்தை முதலிய வித்தைகளைப் பயிற்றுவித்த இடும்பாசுரன், முருகனால் சூரன் முதலானவர்கள் அழிக்கப்பட்டபோது, தன் மனைவி இடும்பியுடன் மகேந்திரபுரியைவிட்டு வன சஞ்சாரம் சென்றான். திருக்குற்றாலத்திற்கு அருகே அகத்திய முனிவரைக் கண்டு வணங்கினான். அகத்தியர் “திருக்கேதாரத்திற்குப் பக்கத்திலுள்ள பூர்ச்சவனத்திலே இருக்கும் இரு சிகரங்களையும் எடுத்துப் பொதிகை மலைக்குக் கொண்டு வருவாயானால் பெறற்கரிய பெரும்பேறடைவாய்” எனக்கூறி அவற்றை அடையும் வழிகளை உணர்த்தினார். அவன் அகத்தியர் கூறிய வழியே சென்று இரு சிகரங்களையும் கண்டு பூசித்து மூலமந்திரத்தை விதிப்படி உச்சரித்துத் தவம் செய்தான். அப்பொழுது பிரமதண்டம் புய தண்டாகவும் அட்ட திக்கு நாகங்கள் கயிறாகவும் தன் பக்கத்தில் வந்ததைக் கண்டு, பாம்புகளை உறிக்கயிறாக பிரமதண்டுடன் பிணைத்து இரு சிகரங்களையும் இருபக்கத்திலும் பிணைத்து, தோளிற் சுமந்து காவடி எடுப்பதுபோல் நடந்துசென்று பழனியை அடைந்தபோது, முருகன் திருவிளையாடலால் இடும்பனுக்குக் காவடி அதிபாரமாகத் தோன்ற, அந்த இடத்தில் இறக்கி வைத்து இளைப்பாறினான். காவடியைப் பின்பு தூக்க முயன்றபோது முடியாது போகவே சுற்றிப் பார்த்தான். சிவகிரியின் ஒரு சாரலிலுள்ள குரா மரநிழலிலே தண்டாயுதபாணியைக் கண்டு, அவன் யாரென அறியாது வழியை விடும்படி வற்புறுத்தினான். முருகன் தன் திருவிளையாடலைத் தொடக்கி “உன்னிடம் வலிமை இருந்தால் கொண்டு செல்” எனக் கூறினார். ஆத்திரமடைந்த இடும்பன் குரா மரத்தடியில் நின்ற தண்டாயுதபாணி மேல் பாய்ந்தபோது அவர் விலக, அவ்விடத்திலேயே வீழ்ந்திறந்தான். பிரமதண்டும் நாகங்களும் அஞ்சி அகன்று அகத்தியரிடம் செய்திசொல்லின. இடும்பியின் அழுகுரலுக்கிரங்கிய முருகன் இடும்பனை உயிர்பெற்றெழச் செய்தார். இடும்பன் எழுந்து முருகனை வணங்கி அம்மலையடியில் இருந்து குற்றேவல் புரிய வரம்கேட்க, முருகனும் அவ்வாறே அருளினார்.

இடும்பன் கதையுடன் தொடர்புடைய காவடி இன்று பல வடிவங்களில் எடுக்கப்படுகிறது. இடும்பன், தான் இரு மலைகளையும் எடுத்து வந்ததுபோல், தமது பாபச் சுமையை நீக்கக் காவடி எடுத்துவரும் அடியார்களுக்கு அருளும்படியும் வேண்டியதாகக் கூறப்படுகின்றது. இதன் பின்னர் முருகன் கோயில்களில் இடும்பனைப் பரிவார மூர்த்தியாக வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. இவ்வாலயங்களில் முருக மஹோற்சவம் முடிந்தபின் இடும்ப பூசை நடைபெறுவது வழக்கில் காணப்படுகிறது. தமிழகத்து சற்குருநாதர் கோயிலில், தான் இழந்த சக்திகளைப் பெற்ற பிரம்மா மகிழ்ந்து பிரம்ம தீர்த்தத்தை நிறுவியதாகவும் அங்கு சென்ற சிவபக்தனான இடும்பன், தன் பாவங்கள் யாவற்றையும் போக்க இக்குளத்தில் நீராடி வழிபட்டதாகவும் சிவன் மகிழ்ந்து அவருக்குத் திருவருள் புரிந்ததாகவும் கூறப்படுகிறது.

பழனி தல புராணம், அதனோடு ஒட்டிய ஐதிகக் கதைகள் மாத்திரமே முருகன் அடியாராக இடும்பனைக் குறிப்பிடுவது கவனத்திற்குரியதாகும். பொதுவில் இடும்பன் இராட்சதனாகவும், அதேவேளை ஞான

நாட்டமுடைய சிறந்த பக்திமானாகவும், காவல்தெய்வமாகவும், அச்சத்தோடு மக்கள் வழிபடும் தெய்வமாகவும் அமைந்துள்ளது.

## இடும்பன் கோயில்கள்

தமிழகத்தில் தஞ்சாவூர் காடுவெட்டி விடுதி, கீழ் மேட்டுப்பட்டி, இடும்பாவனம் என்பவற்றிலும் திருக்கன்றாப்பூர், குன்றக்குடி, திருப்பூரருகே இடுவம்பாளையம், பழனி போன்ற பல இடங்களில் இடும்பனுக்குத் தனிக்கோயில்களுண்டு. பிற கோயில்களில் பரிவார மூர்த்தியாகவும் முதன்மை கொடுக்கப்படுகின்றது.



பண்டத்தரிப்பு காலையடி இடும்பன் கோயில்

ஈழத்துப்புலத்தில் கொழும்பு வாழ் நகரத்தாரின் (செட்டிமாரின்) மூன்று கதிர்காம வேலாயுத சுவாமி கோயில்களிலும், யாழ்ப்பாணத்தில் பண்டத்தரிப்பு, உரும்பிராய் போன்ற இடங்களிலும் இரத்தினபுரி, நாவலப்பிட்டி, கொஸ்லந்தை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களிலும் பரிவார தெய்வமாக இடும்பன் தனிக்கோயில் பெற்றுக் காணப்படுகின்றான். திருகோணமலையில் இடும்பன்மலை என்று ஓர் இடம் உண்டு.

பண்டத்தரிப்பில் காலையடி எனும் இடம் உண்டு. ஆகம முறையிலமைந்த கோபுரத்துடன் கூடிய முருகனாலயமே காணப்படினும், இன்றும் அது இடும்பன் ஆலயம் என்றே அழைக்கப்படுகின்றது. மூலஸ்தானத்தில் மூலமூர்த்திக்கு அருகில் முன்பு இடும்பனாக வழிபடப்பட்ட வேல், இன்றும் வைத்துப் பூஜிக்கப்படுகிறது (தகவல்: ஆலய முன்னைய தலைவர், திருநாவுக்கரசு, வயது. 83).

கொழும்பு வாழ் நகரத்தார் சமூகம் கதிர்காமக்கந்தன் மீது அளவற்ற பக்தி உள்ளவர்கள் என்றும், நேர்த்திக்கடன் செலுத்தக் காவடி முதலானவற்றைக் கொண்டு கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்குக் கால்நடையாகவே (கரப்பாதை) செல்வதாகவும், அப்போது வழித்துணையாக இடும்பனை அழைத்துச் செல்வதாகவும், அதன் நன்றிக்கடனாகவே தமது கொழும்பு முருகன் கோயில்களில் இடும்பனைப் பிரதிஷ்டை செய்ததாகவும் அறிய முடிகின்றது.

மேற்படி நகரத்தார் கோயில்களில் மட்டுமே உருவவழிபாடு காணப்படுகிறது. ஏனைய கோயில்களில் பெரும்பாலும் வேல், சூலம், கல் என்பன வைத்தே வழிபடப்படுகின்றன. உரும்பிராய் அம்மன் கோயிலில் பரிவாரமாக உள்ள இடும்பன் முச்சூலம் மூன்றின் இணைந்த வடிவத்தினராகக் காணப்படுகின்றார். மையத்தில் இருக்கும் திரிசூலத்தில் இருந்து எதிர்த்திசைகளை நோக்கியதாக ஏனைய இரு திரிசூலங்களும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இடும்பன் தெய்வமாகக் கருதப்படுதாது முருகன் அடியாராகக் கருதப்பட்டுவரும் வழக்கம் மேனிலையாக்கக் கோயில்களில் காணப்படுகின்றது. உதாரணமாக யாழ்ப்பாணத்து மடாலயங்களில் ஒன்றான நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் மஹோற்சவ கால பதினேழாந் திருவிழா இடும்பவாகனத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

## இடும்பன் பூசை நடைபெறும் சந்தர்ப்பங்கள்

ஈழத்துப்புலத்தில் பொதுவாக தனிக்கோயில்களிலும் இடும்பனைப் பரிவாரமாகக் கொண்ட கோயில்களிலும், கிராமிய முறை, ஆகம முறை எனும் இருதளங்களிலும் பூசைகள் நடைபெறுகின்றன. தனிக்கோயில்கள் பெரும்பாலும் பிராமணரல்லாதாரின் நாட்டார் வழக்கிலான பூசைமுறையே நடைபெறும். மேனிலையாக்கம் செய்யப்பட்ட முருகன் கோயிலாக மாற்றம்பெற்ற மற்றும் பரிவாரமாக இடும்பன் இருக்கும் ஆகம முறை சார்ந்த கோயில்களில் ஆகம முறைப்படியான பூசைகளே நடைபெற்று வருகின்றன. ஆடிவேல் உற்சவங்கள் நடைபெற்று முடிந்ததன்பின் இடும்பனுக்கு சைவ, அசைவப் படையல் வைத்து வழிபடும்முறை ஆகம முறைப்படி அமைந்த கொழும்பு கதிர்காம

வேலாயுத சுவாமி கோயில்கள் மூன்றிலும் காணப்படுதல் குறிப்பிடத்தக்கது.

இதேபோல கொழும்பு, மலையகம், யாழ்ப்பாணம் (வடமராட்சி) போன்ற இடங்களில் கதிர்காம யாத்திரை செய்து தமது நேர்த்திக்கடனை முடித்து வந்தவர்கள் மட்ச - மாமிசம் காய்ச்சக்கூடிய நாளொன்றில் வீட்டில் இடும்பன் பூசை செய்வர்.

இவ்வாறு கோயில் சார்ந்து நடைபெறும் இடும்பன் பூசைகளைத் தவிர வாழ்வியல் சார்ந்தும் இடும்பன் பூசைகள் நடைபெறுகின்றன. அவை மகிழ்வுசார் சந்தர்ப்பத்திலும், துக்கம்சார் சந்தர்ப்பத்திலும் நடைபெறுகின்றன. குடிபுகுதல் (வீடு குடி பூரல்), கிணறு வெட்டி ஊற்றுக்காணல், குறித்த நேர்த்தியை நிறைவு செய்ததன் பின்னர், எடுத்த காரியம் சிறப்புற நடைபெற்றதன் பின்னர் என மகிழ்வுசார் பூசை நடைபெறும். இறப்பின் பின்னான அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய (31) நிகழ்வு நிறைவுற்ற பின்னர் நிகழ்வதாக துக்கம்சார் பூசை நடைபெறும்.

## இடும்பன் பூசை

மேலே குறிப்பிட்டதுபோல இடும்பன் பூசை என்பது இருவிதமாக நடைபெறுகின்றது.

1. கோயில் சார்ந்தது.
2. கோயில் சாராது, வாழ்வியலுடன் இணைந்தது.

இடும்பன் தனிக்கோயிற் கொண்டு இருக்கும் இடங்களில் தினம் விளக்கு வைத்தல், வாராந்தப் பூசை, வெள்ளியில் விளக்கு வைத்தல் மற்றும் விஷேட தின பூசை என்பன இடம்பெறுகின்றன. இங்கு நடைபெறும் விசேட தினப் பூசைகளில் சோறு, மட்சம், மாமிசம், மரக்கறி என்பன அவித்துப் படைக்கப்படும். பூசாரி தெய்வமாடி குறி சொல்லுதலும், பில்லி - சூனியம் - வசியம் முதலியன நீங்குதலும், கயிறு கட்டி திருநீறு இடுதலும் வழக்கமாக உள்ளது.

அதேவேளை நேர்த்தி வைத்த மக்கள் தாமாகவே படையலை வைத்து வழிபடலும், அவற்றை மக்களுக்கு அள்ளி வழங்குதலும் உண்டு. நாற்பது வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் உள்ள அல்வாய்ப் பிரதேசத்தில் இடும்பன் கோயில் காணப்பட்டதாகவும், அங்கு சோறு, மட்சம், மாமிசம் படையலிட்டபின் அவற்றை ஒன்றாக்கிக் குழைத்து திரணைகளாக்கி (பந்து போல உருண்டையாக்கி) யாவர்க்கும் வழங்கும் வழக்கம் காணப்பட்டதாகவும் தகவல் உண்டு (தகவல் - இ. இராஜேஷ்கண்ணன், முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) இக்கோயில் யுத்த காலப்பகுதியில் ஏதோ சில காரணங்களால் அகற்றப்பட்டுவிட்டதாக அறிய முடிகிறது. கொழும்பு கதிர்காம வேலாயுத சுவாமி கோயில்கள் மூன்றிலும் ஆடிவேலின் பின் இடும்பனுக்குப் படையலிட்டு அடியவர்க்கு வழங்கும் வழக்கம் காணப்படுகிறது. இங்கு ஆகமம்சார்ந்த பூசைமுறையே காணப்படினும் இத்தினத்தில் மட்டும் அசைவம் என்று சொல்லப்படும் மட்ச, மாமிசப் படையல் இடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## வாழ்வியல்சார் சடங்காக இடும்பன் பூசை

- மகிழ்வு சார் சடங்கு/ பூசை

### 1. கிணற்றில் ஊற்றுக் காணல்

வீட்டுவளவில் அல்லது தோட்டங்களில் கிணறு வெட்டுவர். கிணற்றை வெட்டும்போது அத்தொழிலைச் செய்பவர் காவல் தெய்வமான இடும்பனிடம் "எந்தச் சிக்கலுமின்றி கிணறு வெட்டி முடித்து நன்னீர் ஊற்று சிறப்பாகச் சுரக்க வேண்டும்" என வேண்டிக் காரியத்தைத் தொடங்குவார். கிணறு வெட்டும்போது ஊற்றுநீரைக் கண்டவுடன் அந்த நீரை காவோலையால் (காய்ந்த பனையோலையால்) மூடிவிடுவர். அடுத்த நன்னாள் பார்த்து, உரிய



உரும்பிராய் பரமேஸ்வரி கண்ணகை அம்மன் கோயிலிலுள்ள இடும்பன்

நேரத்தில் இடும்பன் பூசை செய்வர். கோழி ஒன்றின் கழுத்தறுத்து எறிவதோடு இரத்தத்தைக் கிணற்றில் தெளிப்பர். காவோலை எடுக்கப்பட்டுவிடும். பலியிடப்பட்ட கோழியை உண்ணும் வழக்கம் இல்லை. வேறு இறைச்சி, மட்சம் உள்ளிட்டவை சமைத்து கிணறு வெட்டிய தொழிலாளிகளுக்கும் தமது உறவுகளுக்கும் கொடுத்துண்பர்.



புலோலி, மந்திகைப் பிரதேசங்களில் இடும்பன் பூசை

**2. வீடு குடிபுகுதல் (வீடு குடி பூரல்)**

புதிதாகக் கட்டப்பட்ட வீடு குடிபுகும் சடங்கு நடைபெறுவதற்கு முதல் நாள் இரவு வீட்டின் மரவேலைகளைச் செய்த தச்சுத் தொழிலாளர்களால் வீட்டின் முகடு பிரித்து தச்சன் காளி விரட்டல் சடங்கு நிகழ்த்தப்படும். அதுபோல குடி புகுதல் நிகழ்வு நடைபெற்று நான்காம் நாள் அளவில் (அசைவம் புழங்கக்கூடிய நாளில்) அசைவ உணவுகள் சமைக்கப்பட்டு அவ்வீட்டைக் கட்டிய தொழிலாளர்களுக்கும் வேண்டிய உறவுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு விருந்து வைக்கப்படுதலே இடும்பன் பூசையாகச் சொல்லப்படுகிறது.

யாழ்ப்பாணம், மூளாய், பொன்னாலைப் பிரதேசங்களில் அத்தினத்தில் கோழி கழுத்தறுத்துப் பலியிடப்படுதலும் தலையை வீட்டுக் கூரையின் மேலால் எறிதலுமாகிய வழக்கம் காணப்படுகிறது (தகவல் - மயூரரூபன், எழுத்தாளர், வடமராட்சி). இதேவேளை யாழ்ப்பாணம், நுணாவில், மட்டுவில் கிராமங்களின் சில பகுதிகளில் இடும்பன் பூசை நடைபெறும் நாளில் சமைக்கப்படும் சைவ, அசைவ உணவுகள் யாவற்றிலும் சிறிது அள்ளி, வடலிப் பனையோலையால் பின்னப்பட்ட தட்டுவத்தில் இட்டு, குசினி அடுப்படியில் வைத்த பின்பே உணவு பரிமாறப்படுகிறது. அன்றிரவு ஆளரவம் அடங்கியபின் அத்தட்டுவத்தை சந்தி முடக்குகளில் அல்லது சுடலைக்கண்மையில் வைத்துவிட்டு வரும் வழக்கம் காணப்படுகிறது (தகவல் - செல்வி. ரஜீவா, நுணாவில், உதவி விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்).

பண்டத்தரிப்புப் போன்ற பிரதேசங்களில் பந்தமும் கொண்டு சென்று இவற்றைச் சந்தியில், ஆட்கள் புழங்காத இடத்தில் வைத்துவிட்டு தமது வீட்டடியில் எச்சிலைக் காறி உமிழ்ந்து, பின்பு கால் கழுவிவிட்டு வீட்டுக்குள் செல்லும் வழக்கமுள்ளதாகக் கொத்தனார் வேலை செய்யும் தர்மலிங்கம் குகன் (வயது, 37) பேபிச்சந்திரன் விஜயகுமார் (வயது, 48) போன்றோர் தெரிவித்தனர்.

கோயில் திருவிழா, கந்தசஷ்டி போன்ற காலங்களில் விரதம் முடிவுற்றதன் பின்பும் கோயில்களுக்கான பாதயாத்திரைகள், நேர்த்திக்கடன்கள் முடிவுற்றதன் பின்பும் அசைவ உணவு சமைக்கப்பட்டு உறவினருக்கும் நண்பர்களுக்கும் வழங்கப்படும்.

**• துக்கம்சார் சடங்கு/ பூசை**

இறப்பின் பின்னான அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நிறைவுற்ற பின்னர் நிகழ்வதாக துக்கம்சார் பூசை நடைபெறும். அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெற்று நான்காம் நாள் அளவில் (அசைவம் புழங்கக்கூடிய நாளில்) அசைவ உணவுகள் சமைக்கப்பட்டு, அவ்விறப்பு நிகழ்வு நடைபெற்றபோதும், பின்னான நாட்களிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் துணைநின்ற அனைவருக்கும், இரத்த உரித்துடைய உறவுகளுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டு விருந்து வைக்கப்படுதலே இடும்பன் பூசையாகச் சொல்லப்படுகிறது. செட்டிமாரிடமும்,

பாண்டியன் தாழ்வு போன்ற பிரதேசங்களிலும் இந்த வழக்காறு இருப்பதாக திரு. ச. முருகேசபிள்ளை (வயது, 60) குறிப்பிடுகின்றார்.

இங்கு இடும்பன் பூசை என்பது இடுப்பன் சாமிக்கான பூசையல்ல; அசைவ உணவு சமைத்து குறித்த காரியத்தில் கை கொடுத்த, துணைநின்ற, வழித்துணையாய் அமைந்த மனிதருக்கு அன்புடன் பரிமாறும் செயற்பாடாகவே அமைந்துள்ளது.

### இடும்பன் பூசைக்கான படையல்

இடும்பன் பூசை கோயில்களில் நடைபெற்றாலும் சரி, வீட்டில் நடைபெற்றாலும் சரி இடும்பனுக்கான படையல் தனித்துவமானது. கோயில்களில் பெரிய கிடாரங்களில் சோறு சமைக்கப்படும். ஆடு, கோழி, இறைச்சிகளும் கடலுணவுகளான நண்டு, இறால், கணவாய், மீன் என்பவற்றோடு பலவகையான, கிடைக்கக்கூடிய மரக்கறிகளும் சமைக்கப்பட்டு பனையோலைப்பாயில் படையல் வைக்கப்படும். சோறு மலைபோல் குவிக்கப்பட்டு கறிவகைகள் இடப்பட்டு, படையல் படைக்கப்படும். சில கோயில்களில் கள், சாராயம் போன்றவற்றைப் படைக்கும் வழக்கமுண்டு. வீடுகளில் நடைபெறும் இவ்வாறான பூசைகளில் சோறு, மரக்கறி, இறைச்சி வகைகளோடு புட்டு, கணவாய், இறால், மீன், பொரியல் - கறி உள்ளிட்ட பலவகையான உணவாக்கங்கள் அவரவர் வசதிக்கேற்ப ஆக்கப்படுதல் குறிப்பிடத்தக்கது. அதேபோல இப்பூசையில் பங்குபற்றுபவர்களுக்கு வேண்டிய மதுபான வகைகளும் வழங்கப்படும். இவை இன்று அநாகரிகச் செயற்பாடுகளாகக் கருதப்பட்டு தவிர்க்கப்பட்டு வருகின்றன.

### சில அவதானிப்புகள்

- இடும்பன் பற்றிய கதைகள் பலவிதமாக உள்ளன. பாரத, இராமாயண இடும்பன் இராட்சதன், காவற்காரன்; முருகனடியாராகச் சித்தரிக்கப்படும் இடும்பன் சிறந்த பக்தனாக, மலைகளைத் தூக்கவல்ல பேராற்றலானாக, வீரனாகக் காட்டப்படுகின்றார். காலந்தோறும் வந்த பல்வேறு கதைகளின் கூட்டு வெளிப்பாடாகவே இடும்பன் கதை அமைகிறது.
- இராட்சதன், வீரன், காவல் தெய்வம் என்பதனால்தான் என்னவோ அசைவ உணவும் மலைபோன்ற உணவுக்குவியலுமான படையல் வழங்கப்படுகிறது போலும்.
- நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களின் முருக வழிபாட்டோடு இடும்பன் வழிபாடு பின்னிப்பிணைந்திருக்கிறது. நல்லூரில் கந்தசஷ்டி காலத்தில் நவவீரர் பவனி இடம்பெறுதல்போல, கொழும்பு ஆடிவேல் விழாவில் முருகனின் திருத்தேர் முன்பு பிரம்புடன் இடும்பன் ஆடிப்பாடி வருகின்ற நிகழ்வு இடம்பெறும். பிரம்புடன் வருதல் என்பது இடும்பனுக்கு கொடுக்கப்படும் முதன்மை அதிகாரத்தின் குறியீடு எனலாம்.
- அதேவேளை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இடும்பன், வழிபடு தெய்வமாகவன்றி சுவாமியைக் காவும் வாகனமாகவே உள்ளான். கால்களை மடக்கி கனத்தினைத் தாங்கும் இராட்சதனாக - ஒரு வீரனாக - பக்தனாக - விசுவாசியாக - தொழிலாளர் வர்க்கத்தினனாகவே சித்திரிக்கப்படுகின்றான்.
- கலையியல் மரபில் இடும்பனுக்குத் தனிப்பங்குண்டு. மட்டக்களப்பில் ஆடப்படும் வடமோடிக் கூத்துகளில் ஒன்றாக ‘இடும்பன் போர்’ விளங்குகின்றது. அதுபோல நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் மகோற்சவத்தில் பதினேழாம் நாள் நடைபெறும் இடும்பன் வாகனத் திருவிழாவில் பூதநிருத்தம் எனும் நடனம் ஆடப்படுவது குறிப்பிடத்தக்கது. மத்தளத்தை தோளில் தூக்கியவாறு ஒற்றை காலில் ஆடி ஆடி வாசிப்பதை பூதநிருத்தம் என்பர். இவ்வாறாக பூத கண வாத்தியங்கள் முழங்க, பூத நடன சமர்ப்பணத்தோடு இடும்பன் மீது கந்தசுவாமி பவனி இடம்பெறும்.
- ஈழத்துப்புலத்தில் கதிர்காம யாத்திரை என்பது நீண்டகாலமாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வருகிறது. முதன்முதல் யாத்திரை போய் சிறப்பாக அதனை முடித்து வீடு திரும்பியவர் வீட்டில் இடும்பன் பூசை செய்தபிறகே அவர் மீள வீட்டுக்கு வெளியில் செல்லலாம் எனும் நடைமுறை வல்வெட்டியில் இருப்பதாக திருமதி கேசலிங்கம் தவமலர் (வயது, 78) குறிப்பிடுகின்றார். பல பிராந்தியங்களில் யாத்திரை செய்யும் தோறும் இப்பூசை இடம்பெற்று வந்துள்ளது. ஆயினும் இன்று யாத்திரை மரபும் இடும்பன் பூசையும் வழக்கிழந்து வருகின்றது.
- வெட்டுக்கிணறு வெட்டும் வழக்கம் இன்று அருகி குழாய்க்கிணறு முறையே பெருகிக்

காணப்படுகின்றது. அதுபோல கோழி பலியிடல் அருகி அதன்வழி இடும்பன் பூசையும் வழக்கிழந்து பொங்கல் படையலே எஞ்சி நிற்கின்றது.

- வீடு குடி புகுதல் நிகழ்வின் பின்னான மட்சம், மாமிசம் காய்ச்சுதல் நிகழ்வாக இடும்பன் பூசை நடைபெறுவது அருகி வருகின்றது. படையலுக்குப் பயன்படும் பனையோலையாலான தட்டுவம், பாய் என்பனவும் வழக்கிழந்து விட்டன. தற்காலத்தில் வாழையிலையும் உலோக, பிளாஸ்ரிக் தட்டுகளுமே பயன்படுத்தப்படுகின்றன.
- எல்லா மக்களாலும் பின்பற்றப்பட்டு வந்த இடும்பன் பூசை இன்று கைவிடப்பட்டு செட்டிமார், சிறுகுடி வேளாளர் போன்றோராலேயே சிறிதளவேனும் இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றது.
- இடும்பனுக்கான படையல் என்பது, குறித்த பிராந்திய மக்களின் பண்பாட்டோடு இணைந்து உணவு முறை, குடிவகைசார்ந்த வெளிப்பாடாகவும் கொடுத்துண்கின்ற பண்பாட்டின் வெளிப்பாடாகவும் அமைகிறது.
- இன்று இடும்பன் பூசை எனும் சொல்லாட்சி அசைவ உணவை உண்ணுதல் என்பதனைக் குறிக்கும் சொல்லாக, கிண்டலாக மாறியுள்ளமை கவனத்திற்குரியது.
- காளியோடு இணைந்திருக்கும் இடும்பன் வழிபடு தலங்கள் புதிய தளக்கோலங்களுக்கு உரியனவாக அமைந்துள்ளன. காளி, பிள்ளைகளைப் பிடித்துண்ணுபவளாகவும், அவளைக் கட்டுப்படுத்தும் தெய்வமாக நகரத்தார் இடும்பனை வழிபட்டதாகவும், பயன்பெற்றதாகவும், தமிழகத்தில் ஓர் ஐதிகக்கதை உண்டு. மகாபாரதத்தில் இடும்பன் மனிதர்கள் உள்ளிட்ட உயிர்களை உண்பவனாகவே சித்திரிக்கப்படல் முரண் நகையாகும்.
- ஈழத்தில் காளியோடு இணைந்த இடும்பன் வழிபடுதலங்களில் (மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்) பில்லி சூனியம், செய்வினை, வசியம் என்பன நிகழ்த்துகைகளாக உள்ளன. இது இடும்பன் வழிபாடு, நாகரிகமற்ற ஒன்று எனக் கருத வாய்ப்பளிக்கின்றது.
- இடும்பன் பூசை என்பது ஒரு வழிபாடு என்பதைவிட, குறித்த காரியத்தில் துணை நின்ற யாவர்க்கும் அவர் விரும்பும் உணவை, குடி வகையை விருந்தாக அளித்து நன்றி செலுத்தும் நிகழ்வு என்றே கருத வேண்டியுள்ளது. இன்னும் நுணுகியுரைக்கின் மகிழ்விலும் துக்கத்திலும் கூட இருந்தவர்களுக்கு அன்பை வெளிப்படுத்துவதாகவும் வீடு, கிணறு உருவாக்கத்தில் அர்ப்பணிப்புடன் உழைத்த உழைப்பாளிகளுக்கு நன்றி சொல்லும் வகையில் நிகழும் நிகழ்வாகவுமே இடும்பன் பூசை அமைந்துள்ளது.

## நிறைவுரை

ஈழத்தில் நின்று நிலவுகின்ற நாட்டார், ஆகமமரபு வழி தனித்தனியேயும், இரு மரபும் இணைந்தநிலையிலும் வழிபடு தெய்வமாக இடும்பன் காணப்படுகின்றான். இடும்பன் பற்றிய கதைகள் பல இடும்பன்கள் இருந்தமையை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை அவனை இராட்சதனாக, மாமிச உண்ணியாக சித்திரிப்பதில் ஒன்றுபடுகின்றன.

இடும்பன் தனிக்கோயில் கொண்டவனாக, பரிவாரத் தெய்வமாக காணப்படுகின்ற அதேவேளை, இன்று அவனது கோயில்கள் பல காணாமல் போயின அல்லது மேனிலையாக்கம் பெற்றன. ஆஜானுபாகுவான உருவமுடைய சிலை - விக்கிரக வழிபாடு காணப்படும் அதேவேளை வேல், கல், சூல வழிபாடும் உள்ளன. உரும்பிராயில் மட்டும், மூன்று திரிசூலங்கள் இணைந்து, இருபக்கமும் மேலும் நோக்கிய வண்ணம் அமைக்கப்பட்டு, வழிபடப்படுவதைக் காண முடிகிறது.

சனங்களின் உணவியல் பண்பாட்டோடு கலை மரபோடும் இணைந்த இத்தெய்வம் அரூபநிலையிலும் வழிபடப்படுகிறது. இடும்பன் பூசை ஒரு தெய்வ வழிபாடாக மட்டுமன்றி உழைப்பாளர்களை - குறித்த தொழில்களைச் செய்யும் மக்களை, அவர்களின் பணியைக் கௌரவித்து, மரியாதை செய்வதாகவும், நன்றி தெரிவிப்பதாகவும் அமைந்துள்ளது. ஆயினும் நாகரிகம் என்ற போர்வையில் இன்று இப்பண்பாடும் பூசையும் மிகவிரைவாக வழக்கிழந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



● மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

# போரின் பின்னரான அறம்: பறைதலும் பாடுதலும்

இலங்கையின் சமகாலச் சூழலில் மூன்று விடயங்கள் தவிர்க்கவியலாமல் செல்வாக்குச் செலுத்துகின்றன. முதலாவது மூன்று தசாப்தகால யுத்தம்; இரண்டாவது போரின் முடிவின் பின்னரான இயங்கியல்; மூன்றாவது பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவுகளும். இவை மூன்றும் தன்னளவிலும், இலங்கைச் சமூகத்திலும் ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள் அனைத்தும் கவனிக்கப்படவுமில்லை, கருத்தில் கொள்ளப்படவுமில்லை. சமகாலத்தைப் பொருள்கொள்ளல் என்பது வெறுமனே அன்றாடக் கதையாடல்களுக்குரியவற்றுடனோ அல்லது பொதுப்புத்தியில் எப்போதும் நிலைத்திருக்கும் விடயப்பரப்புகளுடனோ மட்டும் நின்றுவிடுவதல்ல. இலங்கைச் சமூகப் படிநிலையில் நலிந்தோரின் கதைகள் சொல்லப்பட வேண்டும்; அதுசார் வினாக்கள் எழுப்பப்பட வேண்டும். இலங்கையின் சமகாலம் குறித்த பெரும்பான்மையான எமது உரையாடல்கள் கவனம் குவிக்கத் தவறும் விடயங்களையும் அமைதியாகக் கடந்து செல்லும் களங்களையும் 'சமகாலத்தைப் பொருள்கொள்ளல்: கவனம்பெறா அசைவியக்கங்கள்' எனும் இத்தொடர் பேசமுனைகிறது.

## தொடக்கக் குறிப்புகள்

இலங்கையில் போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. போருக்குப் பிந்தைய இக்காலப்பகுதியில் தமிழ்ச்சமூகம் எதிர்நோக்கிய முக்கிய சவால் அறம் பற்றியது. அது அரசியலில், ஆக்க இலக்கியத்தில், பொருளாதாரத்தில், அன்றாட சமூக அசைவியக்கத்தில் என அனைத்திலும் தாக்கம் செலுத்திய ஒன்றாக - இன்னும் சரியாகச் சொல்வதாயின் விமர்சனத்திற்குரியதாக - இருந்து வந்திருக்கிறது. ஒருவருக்கு அறமாகத் தெரிகின்ற ஒன்று இன்னொருவருக்கு அறமாகத் தெரிவதில்லை. ஒருவர் அறமற்றதாகக் கருதும் ஒரு செயலை இன்னொருவர் அறம் என்ற வியாக்கியானத்தோடு நியாயப்படுத்துகிறார். இதுவே போருக்குப் பிந்தைய கடந்தகால அனுபவமாகும்.

நாட்டின் வடக்குக் கிழக்கில் போருக்குப் பிந்தைய ஒன்றரைத் தசாப்தகாலத்தில் மேற்கொண்ட பல்வேறு களஆய்வுகளில் பல்வேறு தரப்பினர் பல்வேறு சூழ்நிலைகளில் அறம் என்கிற வினாவைத் தொடர்ச்சியாக எழுப்பிய வண்ணம் இருந்தனர். இதில் பெரும்பான்மையானவை அரசியல் அறம் சார்ந்த கேள்விகள். ஆனாலும் அதற்குமப்பால் சமூகம்சார்ந்த, பொருளாதாரம்சார்ந்த அற நிலைப்பாடுகள், விழுமியங்கள், நெறிமுறைகள் குறித்த வினாக்கள், விசாரணைகள் மக்களிடமிருந்து எழுந்துள்ளன. ஆனால் அவை கவனத்திற்குரியனவாக அமையவில்லை. அக்கேள்விகளை, விசாரணைகளை இக்கட்டுரை கவனத்திற்கொள்கிறது.

இரண்டு கேள்விகளுடன் இதைத் தொடங்குவது பொருத்தம். போருக்குப் பிந்தைய சமூகங்களில் அறம்சார் சிக்கல்கள் ஏன் குறிப்பாக சர்ச்சைக்குரியதாகின்றன என்ற வினா முக்கியமானது. இரண்டாவது, அறம்சார் வேறுபட்ட வியாக்கியானங்கள் எவ்வாறு சமூகத்தின் மீள்எழுச்சியைப் பாதிக்கின்றன. இவ்விரண்டு வினாக்களும் சற்று விரிவான விளக்கத்தை வேண்டுவன.

போருக்குப் பிந்தைய சமூகங்கள் பெரும்பாலும் கடுமையான மோதல்களின் காலகட்டங்களிலிருந்து உருவாகின்றன; உடைந்த சமூகங்கள், சிதைந்த நம்பிக்கை மற்றும் நீதி மற்றும் ஒழுக்கம் பற்றிய முரண்பாடான கதைகளை விட்டுச்செல்கின்றன. ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட காரணிகளால் அறம் என்பது சிக்கலுக்குரியதாகிறது. இதற்கு அடிப்படையாக நான்கு காரணிகளை நாம் இனங்காணலாம்.

1. தார்மீகத் தெளிவின்மை மற்றும் அதிர்ச்சி: போர் பெரும்பாலும் சரிக்கும் தவறுக்கும் இடையிலான கோடுகளை மங்கலாக்குகிறது; ஏனெனில் போர்க்காலங்களில் உயிர்வாழ்வது என்பது தனிநபர்களையும் குழுக்களையும் அமைதிக்கால நெறிமுறை விதிமுறைகளுக்கு முரணான செயல்களைச் செய்யக் கட்டாயப்படுத்தக்கூடும். எடுத்துக்காட்டாக, சியரா லியோன் உள்நாட்டுப் போரில் (1991-2002) குழந்தைப் போராளிகள் பாதிக்கப்பட்டவர்களாகவும் குற்றவாளிகளாகவும் இருந்தனர்; இது பொறுப்புக்கூறல் மற்றும் மறுவாழ்வு முயற்சிகளைச் சிக்கலாக்கியது. இலங்கை நிலவரத்தில் விடுதலைப்புலிகள் சிறுவர்களைப் போராளிகளாகப் பயன்படுத்தியமை, தற்கொலை குண்டுவெடிப்பு மற்றும் கட்டாய ஆட்சேர்ப்பு ஆகிய குற்றச்சாட்டுகள் அக அறச்சங்கடங்களை உருவாக்கியதால், போர் தார்மீகக் கோடுகளை மங்கச் செய்தது. அதே நேரத்தில் முள்ளிவாய்க்கால் படுகொலை போன்ற அரசு அட்டூழியங்கள் அறம்சார் அவலத்தின் இன்னொரு பக்கத்தை எடுத்துரைத்தன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடு மற்றும் அரசாங்க வன்முறைக்கு இடையில் சிக்கிய தமிழ்ப் பொதுமக்கள், உயிர்வாழ்வினால் இயக்கப்படும் தார்மீக சமரசங்களை எதிர்கொண்டனர்; பொறுப்புக்கூறலைச் சிக்கலாக்கினர்.

2. போட்டியிடும் கதையாடல்கள்: வெவ்வேறு குழுக்கள் - பாதிக்கப்பட்டவர்கள், குற்றவாளிகள் மற்றும் பார்வையாளர்கள் - நீதி மற்றும் பொறுப்புக் குறித்து மாறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ளனர். நிறவெறிக்குப் பிந்தைய தென்னாபிரிக்காவில், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம் தண்டனை நடவடிக்கைகளுக்கான கோரிக்கைகளுடன் மறுசீரமைப்பு நீதியைச் சமநிலைப்படுத்துவதில் சவால்களை எதிர்கொண்டது, மன்னிப்புக்கும் பழிவாங்கலுக்கும் இடையிலான பதட்டங்களை எடுத்துக்காட்டுகிறது. இலங்கையில் தமிழ்ச் சமூகத்திற்குள், விடுதலைப் புலிகள் மீதான மாறுபட்ட கருத்துகள் - சிலரால் சுதந்திரப் போராளிகளாகவும், மற்றவர்களால் ஒடுக்குமுறையாளர்களாகவும் - அறம்சார் பதட்டங்களை உருவாக்குகின்றன.

வெளிப்புறமாக, சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்தும் அரசின் 'வெற்றி' மற்றும் போர்க்குற்றங்களை மறுப்பது பற்றிய கதையாடல்கள் இதை இன்னொரு தளத்திற்கு நகர்த்துகின்றன.

3. வளப் பற்றாக்குறை: போருக்குப் பிந்தைய சமூகங்கள் பெரும்பாலும் வரையறுக்கப்பட்ட வளங்களை எதிர்கொள்கின்றன. புனரமைப்பு, சுகாதாரப் பராமரிப்பு அல்லது இழப்பீடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதில் கடினமான தேர்வுகளைக் கட்டாயப்படுத்துகின்றன. போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்பு சிங்களவர்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளது. தமிழ்ப் பகுதிகளில் நில அபகரிப்புகள், புத்த விகாரைகளின் கட்டுமானம் மற்றும் தொல்லியல்துறை மூலம் அரசு ஆதரவுடன் 'சிங்களமயமாக்கல்' மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்ச் சமூகங்களுக்கான வரையறுக்கப்பட்ட வளங்கள் பொருளாதார மீட்சிக்கு எதிராக நீதிக்கு முன்னுரிமை அளிப்பதைவிட அறம்சார் விவாதங்களை அதிகரிக்கின்றன.

4. நிறுவனரீதியான அவநம்பிக்கை: போர் பெரும்பாலும் நிர்வாகக் கட்டமைப்புகளை அழித்து, அறம்சார் முடிவெடுப்பதில் சட்டபூர்வமான தன்மை இல்லாத ஒரு வெற்றிடத்தை விட்டுச்செல்கிறது. குறிப்பாக போரின் முடிவு ஒரு தரப்புக்கு வெற்றியைத் தருகின்றபோது தோல்வியடைந்த தரப்பின் மக்கள்கூட்டம் நிறுவனரீதியாக ஒதுக்கப்படுகிறது. அதிகளவான இராணுவப் பிரசன்னம், கண்காணிப்பு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தன்னிச்சையான கைதுகள் மற்றும் போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் இல்லாமை உள்ளிட்டவற்றைத் தமிழ்ச் சமூகம் எதிர்கொள்கிறது. இது அரசு நிறுவனங்கள் மீதான நம்பிக்கையைச் சிதைத்து, அறம்சார் நிர்வாகத்தை மழுப்பலாக்குகிறது.

## அகமுரண்பாடுகள்சார் அறம்

2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவடைந்ததிலிருந்து இலங்கையில் உள்ள தமிழ்ச் சமூகம், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில், ஆழமான அறம்சார் சவால்களை எதிர்கொண்டுள்ளது. போருக்குப் பிந்தைய சூழலில் தார்மீகத் தெளிவின்மை, போட்டியிடும் கதையாடல்கள் மற்றும் திட்டமிட்ட ஓரங்கட்டல் ஆகியவை பல்பரிமாணரீதியில் அறம் என்கிற விடயத்தை ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக மாற்றியுள்ளது. தமிழ்ச்சமூகத்தில் நிலவும் அக முரண்பாடுகளைப் புற முரண்பாடுகள் மேவியுள்ளதால், அகமுரண்பாடுகள் சார்ந்த விடயங்கள் பேசப்படுவது குறைவு. இந்த விடயங்கள் மூன்று முக்கியமான தளங்களில் சிக்கலானவை. இதனாலேயே தமிழ்ச் சமூகம் அறம்சார் அம்சங்களைச் சவாலுக்குட்படுத்தும் உள் முரண்பாடுகளுடன் போராடுகிறது:

1. விடுதலைப்புலிகளின் மரபு மற்றும் பொறுப்புக்கூறல்: விடுதலைப் புலிகளின் எதேச்சதிகாரத் தந்திரோபாயங்கள், எதிர்ப்பை அடக்குதல் மற்றும் அவர்களின் அரசியல் எதிராளிகளை - தமிழர்களை குறிவைத்தல் உட்பட்டவை ஒரு சிக்கலான சித்திரத்தை வழங்குகின்றன. இது அவர்களின் போராட்டத்தை மகிமைப்படுத்துவதற்கும் அவர்களின் துஷ்பிரயோகங்களை ஒப்புக்கொள்வதற்கும் இடையிலான அறம்சார் கேள்விகளை எழுப்புகின்றன. எடுத்துக்காட்டாக, 1980களில், போட்டியாளர்களான தமிழ்ப் போராளிக் குழுக்களை விடுதலைப்புலிகள் ஒழித்தது; இது சமூகத்திற்குள் தொடர்ந்து பிளவுகளை உருவாக்கியது. இந்த முரண்பாடுகள் ஒரு பகிரப்பட்ட அறம்சார் கட்டமைப்பைச் சுற்றி ஒன்றிணைவதற்கான முயற்சிகளைச் சிக்கலாக்குகின்றன.

2. சாதி மற்றும் பாலினம்: சாதிப் படிநிலைகள் மற்றும் ஆணாதிக்க விதிமுறைகள் போன்ற உட்சமூகக் கட்டமைப்புகள், அறம்சார் பதட்டங்களை உருவாக்குகின்றன. போருக்குப் பிந்தைய காலத்தில், தமிழ்ப் பெண்கள், குறிப்பாக முன்னாள் போராளிகள், களங்கம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, 49% பேர் பதட்டத்தையும் 42% பேர் மனச்சோர்வையும் அனுபவிக்கின்றனர். இது பெரும்பாலும் சமூக எதிர்பார்ப்புகளால் அதிகரிக்கிறது. தமிழ்ச் சமூகத்திற்குள் சாதி அடிப்படையிலான பாகுபாடு, ஒற்றுமையை மேலும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. அதேவேளை போருக்குப் பிந்தைய சமூகத்தில் சாதிய மீளெழுச்சி சிக்கலான சமூகக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

3. புலம்பெயர்ந்தோர்/ உள்ளூர் முன்னுரிமைகள்: புலம்பெயர்ந்த தமிழரில் ஒரு தொகுதியினர், சர்வதேச பொறுப்புக்கூறல் மற்றும் இனப்படுகொலை அங்கீகாரத்தை

வலியுறுத்துகின்றனர். ஆனால் உள்ளூரில் தமிழ் மக்கள் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருத்தாலும்கூட பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நில உரிமைகள் போன்ற உடனடித் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். இந்த வேறுபாடு கவனத்திற்குரியது. இது யாருடைய நலன்கள் முக்கியமானவை, யார் யாருக்காகப் போராடுவது போன்ற அறம்சார் விவாதங்களை உருவாக்குகிறது.

இந்தப் பின்புலம் மிகவும் முக்கியமானது. இம்மூன்று விடயங்களும் இன்றும் தமிழ் மக்களின் அறம்சார் செயலின்மைகளின் மையமாக உள்ளன. ஒரு சமூகமான எமது கடந்தகாலத்தை சுயவிமர்சன நோக்கில் பார்ப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோமா என்ற வினாவை இங்கு எழுப்புவது முக்கியமானது. போரின் முடிவின் 16 ஆண்டுகளின் பின்னர் ஈழத்தமிழரின் வாழ்வியலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றதா என்பதை யோசித்தால் அரசியல் அரங்கிலும் பொருளாதார அரங்கிலும் அதற்கான பதிலைப் பெறுவது சிரமம் என்பதை நாமறிவோம். அதற்கப்பால் அறம்சார்ந்த சமூகமாக, அகமுரண்பாடுகளை அடையாளங்கண்டு ஏற்றுக்கொண்ட சமூகமாக நாம் இல்லை என்பதே இன்றைய முக்கிய சவாலாகும். இது விரிவாகப் பேசப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் பேசுவதற்குச் சிரமமான சங்கடமான ஒரு விடயமாகும்.

தமிழ்த் தேசியத்தின் எதிர்காலமும் தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலமும் பற்றிய தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்குக் கடந்தகாலம் பற்றிய தெளிவான புரிதல் தேவை என்பதையும், விடுதலைப் புலிகளைப் பற்றிய விவாதங்கள் தவிர்க்க இயலாதன என்பதையும் நாம் ஏற்கவேண்டும். அதேவேளை நடந்து முடிந்த அனைத்தையுமே விடுதலைப் புலிகளின் சாதனைகளாகவோ மாறாக அவர்களது குற்றங்களாகவோ நோக்குகின்ற தன்மையினின்று விடுபடுவதும் முக்கியமானது. இது முக்கியமான ஒரு சமூகச் சவாலாகும். அறம் குறித்த பார்வைகள் இங்கு ஆழமான நேர்மையான பார்வையை வேண்டி நிற்கின்றன.

விடுதலைப் புலிகளை போராட்டத்தின் மையச்சக்தியாக ஆக்கிய அகக் காரணிகளையும் புறக் காரணிகளையும் விளங்கிக் கொள்வது முக்கியமானது. தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையான பலவீனங்களை, மூர்க்கத்தனமான, நேர்மையற்ற நியாயப்படுத்தல்களைத் தவிர்த்து நோக்க வேண்டியுள்ளது. இதை வழிப்படுத்துவதற்கு அறம்சார்ந்த பார்வை முக்கியமானது. ‘இன ஒற்றுமை’ என்ற கருத்தாக்கம் விடுதலைப் புலிகளின் தோற்றத்திற்கு மிக முந்தியது. இது தமிழ்த்தேசிய அரசியலின் முக்கிய கருவியாகும். இது அகமுரண்பாடுகளை மறைத்து தமிழர் என்ற பொது இனத்துவ அடையாளத்துக்குள் அனைத்தையும் கரைக்கும் ஒரு தந்திரமாகவே செயற்பட்டது என்பது உண்மை. அதேவேளை மாற்று அரசியல் ஒன்று உருவாவதற்கெதிராகப் பழமைவாதம் ‘தமிழர் ஒற்றுமை’ என்ற கருவியைப் பலவாறாகவும் பயன்படுத்தி வந்துள்ளது. அதன்விளைவாக, மக்கள் அரசியல் என்ற கருத்தாக்கம் தமிழ் அரசியற் பரப்பில் வேரூன்றத் தவறியது. அதைவிடவும் சாதி, பால், பிரதேசம் என்பன சார்ந்த முரண்பாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அப்பிரச்சினைகளை இல்லை என மறுப்பதுடன் அவற்றைப் பற்றிப் பேசுவது தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் என வாதிப்பதும் தமிழ்த் தேசியவாதிகட்கு வழமையாகிவிட்டது. அவற்றை மறுத்ததால் அவை இல்லாமல் போய்விடவில்லை. இன்று அவை, முன்பு நாம் அறிந்திருந்த அதேயளவு உக்கிரத்துடன் தொடருவதை நாம் அறிவோம்.

ஒரு தேசிய இனத்தின் விடுதலையை அதன் அக முரண்பாடுகளைப் புறக்கணித்து வெற்றிகரமாக முன்னெடுக்க இயலாது என்பதை இனியாவது நாம் உணர வேண்டும். தேசியத்தினுள் செயற்படும் உயர் வர்க்க, சாதிய, ஆணாதிக்க, பிரதேச மேலாதிக்கச் சிந்தனைகள் சரிவரக் கையாளப்படாதபோது, அவை ஏற்படுத்தும் விளைவுகள் போராட்டத்தை மட்டுமன்றித் தேசிய இன அடையாளத்தையும் கடுமையாகப் பாதிக்க இயலும் என்பது நம் கவனத்துக்குரியது. விடுதலைப் புலிகளின் போரின்போது தமது உயிர்களை ஈந்தோரும் வேறுபலவாறான தியாகங்களைச் செய்தோரும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளுமே. அவர்களது வர்க்கப் பின்னணியைச் சேர்ந்தோரே இன்று தமது வீடுகட்டும் நிலங்கட்கும் தொழில்கட்கும் மீள இயலாமல் அல்லற்பட்டுக்கிடப்போரில் பெரும்பாலானோராக உள்ளனர். இவை ஒவ்வொன்றும் ஆழமாகப் பேசப்படவும் விவாதிக்கப்படவும் வேண்டும். விடுதலைப் போராட்டம் என்பது அறம்சார்ந்தது என்ற புரிதலை நோக்கி நகர்தலும் அதை ஆழமாக

விமர்சன நோக்கில் பார்க்கப் பழகுதலும் இன்றைய சூழலில் தவிர்க்கவியலாதது.

### சமூக அசைவியக்கங்களில் அறம்சார் கேள்விகள்

போருக்குப் பிந்தைய ஈழத்தமிழ்ச் சமூகத்தின் அறம் குறித்த பார்வைகள் மிகவும் சிக்கலானவை. போரின் வீரமரபையும் விடுதலைப்போராட்டத்தையும் மையப்படுத்திய அறம்சார் பார்வை ஒருபுறமும், சமூகத்தின் பண்பாடு, மாண்பு, மானம், மரியாதை நோக்கிலான அறம்சார் பார்வை மறுபுறமுமாக கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஏராளமான வினாக்கள் எழுப்பப்பட்டு வந்துள்ளன. ஆனால் இவ்வினாக்கள் ஒரு விடயத்தைத் தொடர்ச்சியாகத் தவறவிடுகின்றன. அது களயதார்த்தம் பற்றியது; அம்மக்களின் வாழ்நிலை பற்றியது. நீண்டகாலமாகப் பழக்கப்பட்ட சிந்தனைமுறை பற்றியது. ஆழமாக ஊறிப்போன பண்பாட்டு வரைமுறைகள் பற்றியது.

முன்னாள் போர் வலயங்களுக்கு மக்கள் மீளக்குடியேற்றப்பட்டு சில ஆண்டுகள் கடந்திருந்த நிலையில் கள ஆய்வுக்காக கிளிநொச்சியில் இருந்து அரச பேரூந்தில் பயணமொன்றை மேற்கொண்டிருந்தேன். ஒரு தரிப்பிடத்தில் பேரூந்து நின்றது. இரண்டு நடுத்தர வயதுப் பெண்கள் பேரூந்தில் முன்பக்கமாக ஏறினார்கள். அவர்களின் தோற்றம் ஏழ்மையை உறுதிசெய்தது. வாடி மெலிந்த தேகம், ஆனால் முகத்தில் நம்பிக்கையும் எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்புகளும் இருந்தன. யாரிடமும் எதுவும் பேசாமல் அமைதியாக நின்றிருந்தார்கள். எனக்குப் பின்னால் இரண்டு ஆண்குரல்களின் உரையாடலைத் தற்செயலாகக் கேட்கக் கிடைத்தது. அந்த உரையாடல் இவ்வாறு தொடர்ந்தது:

“இதுகள் அடக்க ஒடுக்கமாக வீட்டில் இருந்திருக்கலாம். போராடப் போறம் என்று போய் எல்லாத்தையும் சீரழிச்சு இண்டைக்கு நடுத்தெருவில நிக்கிதுகள்.”

“இவயின்ர அப்பா, அம்மாவைச் சொல்லோனும். அவையள் எல்லோ கண்டிச்சிருக்கோணும்”.

“அப்படிச் சொல்லேலா, இவையளுக்கு அறிவெங்க போனது.”

“இதுகள் இயக்கத்துக்குப் போகேக்க 16 வயதுகூட இராது”.

“எல்லாம் முடிஞ்சுபோச்சு. இப்ப இவையளுக்கு யாருமில்லை”.

இதற்கு மேல் அந்த உரையாடலைக் கேட்க மனமில்லாமல், அவ்விடத்தில் இருந்து எழுந்து பேரூந்தின் பின்னால் நடக்கத் தொடக்கினேன். அப்போது அக்குரல்களுக்கு உரியவர்கள் யார் என்பதை அறியும் நோக்கில் அவர்களை நோட்டமிட்டேன். அக்குரல்களிற்குரியவர்கள் கிட்டத்தட்ட 60 வயதை உடையவர்கள்; உள்ளூர்க்காரர்கள்; சாரமும் பழைய சேர்ட்டும் அணிந்திருந்தார்கள். அவர்களுக்கு இப்பெண்களை நன்கு தெரிந்திருந்தது என்பதையும் என்னால் உணர முடிந்தது.

இந்நிகழ்வு அறம்சார் கேள்விகள் பலவற்றை எழுப்புகிறது. முதலாவது, இந்தப் பெரியவர்களின் விமர்சனத்தை எவ்வாறு எடுத்துக்கொள்வது. அந்தப் பெரியவர்கள் வெளிநபர்கள் அல்லர். அவர்களும் போரால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து, மீளக்குடியேறி அதேசமூகத்தில் வாழ்பவர்கள். அவர்களின் கருத்துகள்தான் அச்சமூகத்தின் பொதுக்கருத்து என்று எடுத்துக்கொள்வதா? அல்லது இரண்டு தனிநபர்களின் கருத்து என்று ஒதுக்கிவிடுவதா? விடுதலைப் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவு இருந்தது என்ற கருத்தை இந்த உரையாடல் தகர்க்கிறது. அவ்வாறு இருந்திருக்குமாயின், இவ்வாறான குரல்கள் எழுந்திருக்காதல்லவா? விடுதலைப் போராட்டம் குறித்த மக்களின் எண்ணவோட்டம் என்னவாக இருந்தது? இன்றும் பெண்கள் குறித்த எம்சமூகத்தின் பார்வை என்ன?

இரண்டாவது, முன்னாள் போராளிகள் இவ்வாறு அனாதரவாய் விடப்பட்டமையை எவ்வாறு புரிந்துகொள்வது. உலகெங்கும் கோலாகலமாக ஈழத்தமிழர்கள் நிகழ்வுகளைச் செய்கிறார்கள். மாவீரர் தினங்கள், மே 18 எனப்பல நிகழ்வுகள் நடக்கின்றன. மில்லியன் கணக்கான பணம் சேர்க்கப்படுகிறது. ஆனாலும் வன்னி நிலப்பரப்பில் வாழும் ஒரு தொகுதி மக்கள் இவ்வாறு திக்கற்றவர்களாக விடப்பட்டிருப்பதை எவ்வாறு புரிந்து கொள்வது? இவ்விடத்தில் அறத்தின் அளவுகோல் என்ன? வன்னியில் ஒருதொகுதி மக்கள் அன்றாட வாழ்வுக்கே அல்லலுறும்போது, இவ்வாறான கொண்டாட்டங்கள் அறமா? அல்லது இரண்டையும் பிரித்துப் பார்க்க வேண்டுமா? பொறுப்புக் கூறவேண்டியவர்கள் புலம்பெயர்ந்த தனிமனிதர்களா? அமைப்புக்களா? அல்லது விடுதலைப்புலிகளின் கட்டமைப்புகளைத் தொடர்ந்து பேணுகிறோம் என்று அறிவித்துக் கொண்டவர்களா?

இந்த உதாரணம் அறம்சார்ந்த அம்சங்களின் சிக்கல்தன்மையைப் புலப்படுத்துகிறது. அதேவேளை இந்தக் கேள்விகளுக்கு நாம் சமூகமாக முகம் கொடுத்தாக வேண்டும். இந்த மனநிலை ஈழத்தமிழரிடம் இல்லை என்று அப்பால் நகர்ந்துவிட முடியாதபடியே நிகழ்வுகள் நடக்கின்றன. அதை நாம் ஏற்றாக வேண்டும். போரின் வடுக்களைச் சுமந்த ஒரு சமூகத்தின் அடிப்படை அறம் யாது? அதன் அளவுகோல்கள் என்ன? அவை சரியானவையா? போன்ற பதிலில்லாக் கேள்விகள் இன்றும் எம்மிடமுண்டு.



Image Source : groundviews.org

மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டபோது உயர் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வாழ்ந்துவந்த காலப்பகுதியில் அம்மக்கள் குறித்த ஏராளமான கதைகள் உலாவின. அவை கதைகள் என்பதைவிட நிகழ்வுகளின் பொதுமைப்படுத்தல்கள் என்று சொல்வது பொருத்தம். அவ்வாறான ஒரு கதைதான் ‘மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களில் வலுவற்றோர் இராணுவத்தால் வலுக்கட்டாயமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்’ என்பது. இந்தக்கருத்து பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது. குறிப்பாக புலம்பெயர்தேசங்களில் இது பாரிய பேசுபொருளானது. இது மிகக்கொடுமையான ஒன்று என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் இதன் செயற்படு தன்மையைப் புரிந்துகொள்வது முக்கியம் என்று நினைத்தேன். எனது பணியிடத் தேவையின் பொருட்டு, இந்த விடயத்தை இன்னும் கொஞ்சம் விரிவாக, அதன் ஆழ - அகலங்களை விளங்கிக்கொள்வதற்காக வன்னிக்குச் சென்றேன்.

எனக்கு நன்கு பழக்கமான மனிதாபிமானப் பணியாளர்கள் பலரைச் சந்தித்தேன். அவர்கள் எல்லோரும் சொன்ன ஒரு விடயம், ‘இது பேசப்படுவதைவிட மிகச் சிக்கலான ஒன்று’. ஒற்றைப் பரிமாணத்தில் இதைப் பார்க்க முடியாது. அதேவேளை பலர் இது குறித்து விரிவாகப் பேசுவது சரியாக இராது என்று கருதினர். இன்னும் சிலர், இராணுவப் பிரசன்னத்தை அகற்றுவதற்கு இந்தக் கதையாடல் அவசியமானது, எனவே இப்போது சொல்லப்படுகின்ற அதேகதையாடல் தொடர வேண்டும் என்று விரும்பினர். பெரும்பாலானோரது கருத்து, ‘இந்த அதிர்ச்சி வைத்தியம் ஏற்படுத்தும் கவனயீர்ப்பு ஈழத்தமிழரின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டத்திற்கு முக்கியமானது’ என்பதாகும். அவர்கள் குறித்த விடயத்தை ஆழமாக ஆராயாமல் இப்படியே விட்டுவிடுவது நல்லது என்று கருதினர்.

சிலருக்கு அதில் மாற்றுக்கருத்து இருந்தது. உண்மை முக்கியமானது. அதேவேளை திரிக்கப்பட்ட உண்மை, நன்மையைவிடத் தீமையையே அதிகம் செய்யவல்லது என்று அவர்கள் கருதினர். ஒரு நண்பர் என்னிடம் சொன்னார், “நான் உங்களை இதனோடு தொடர்புடைய சிலரிடம் அறிமுகப்படுத்துகிறேன். அவர்களுடன் நீங்கள் பேசுங்கள். பிறகு நீங்களே முடிவெடுங்கள்.” அதன்படி பலருடன் பேசக் கிடைத்தது. அதில் ஒரு உரையாடல் மட்டும் இன்றும் மனதை உலுக்கும் ஒன்றாக இருக்கிறது. அதைமட்டும் இங்கு பதிவுசெய்ய விரும்புகிறேன்.

அது வன்னியின் மத்தியில் அமைந்துள்ள ஒரு வீடு. அதை வீடு என்று சொல்வதைவிட தங்குவதற்காக அமைக்கப்பட்ட ஒரு தற்காலிக இருப்பிடம் என்று சொல்வது பொருத்தம். மரம், தடிகள், தகரம் கொண்டு அமைக்கப்பட்டது. அங்கு ஒரு பெண்ணும் ஒரு குழந்தையும் இருந்தார்கள். அந்தப் பெண்ணுக்கு அவ்வளவு வயதல்ல. 25 வயதினைத் தாண்டியிருக்காது. அப்பெண் மிகவும் வெளிப்படையாகவும் துணிச்சலாகவும் பேசினார். வாழ்க்கை குறித்த அச்சவுணர்வு அப்பெண்ணிடம்

இருக்கவில்லை. அப்பெண் சொன்னவற்றைச் சுருக்கமாகத் தருகிறேன்:

“நான் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தேன். சண்டை மீண்டும் தொடங்கிவிட்டது. இயக்கம் மீண்டும் ஆள்சேர்க்கத் தொடங்கியிருந்தது. என்னையும் கூட்டிப்போய்விடுவார்கள் என்று அப்பா பயந்தார். கலியாணம் கட்டிவைத்தால் பாதுகாப்பு என்று கருதினார். எனக்குத் திருமணம் நடந்தது. எனது கணவர் சிறுவியாபாரமும் விவசாயமும் செய்துவந்தார். மெதுமெதுவாக இடப்பெயர்வுகள் தொடங்கின. திருமணமானவர்களையும் இயக்கத்தில் இணைக்கத் தொடங்கினர். அதிலிருந்து தப்புவதற்காக நான் கர்ப்பமானேன். எனது கணவரை அழைத்துச் சென்றுவிட்டார்கள். யுத்தம் நிறைவடைவதற்கு சில நாட்களுக்கு முன்பே அவர் திரும்பி வந்தார். நாம் ஒன்றாகப் பாதுகாப்புத்தேடி தொடர்ந்து நகர்ந்து கொண்டிருந்தோம். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் எங்கள்மீது விழுந்த குண்டில் எனது கணவர், எனது அப்பா, அம்மா என எல்லோரும் கொல்லப்பட்டார்கள். துரதிர்ஷ்டவசமாக நான் உயிர்தப்பிவிட்டேன். எனது குழந்தையை முகாமில் பெற்றெடுத்தேன். என் அம்மாவுக்கு சொந்தமான நிலத்தில் மீளக்குடியமர்ந்தேன். தரப்பாள் வீடுதான். எனக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. எனது பிள்ளையை யாரிடமும் விட்டுவிட்டு கனதூரத்திற்கு வேலைக்குப் போகவும் இயலாது. கொஞ்சக்காலம் நிறுவனங்களின் உதவியில் வாழ்ந்தேன். பின்னர் வறுமையில் வீழ்ந்தேன். எனக்கு எந்தவொரு உதவியும் கிடைக்கவில்லை. ஆண்துணையற்ற பெண்ணாக குழந்தையோடு வாழ்வது மிகவும் பாதுகாப்பற்றது. எனது சமூகமே என்னை ஒதுக்கியது. எனது ஊர் ஆண்களே என்னை அணுகினார்கள். உதவி செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் அதன் பின்னால் இருந்த நோக்கம் இரகசியமானதல்ல. ஒவ்வொரு இரவும் அச்சத்துடனேயே கழிந்தது. யாராவது இரவில் வலுக்கட்டாயமாக வந்துவிடுவார்களோ என்ற பதட்டம் இருந்தது. எங்கள் ஊர் ஆண்கள் ஒருபுறம் என்றால் இராணுவச் சிப்பாய்கள் மறுபுறம். அவர்களின் பார்வையும் விசாரணைகளும்கூட உறுத்தலாய் இருந்தது. ஒருநாள் குழந்தையுடன் நான் நடந்துசெல்லும்போது, தற்செயலாக எமது பகுதிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி என்னைக்கண்டார். என்னைப் பற்றி விசாரித்தார். குழந்தைக்கு உணவு வாங்கும்படி சிறுதொகைப் பணத்தைத் தந்துவிட்டுப் போனார். இப்போதும் அடிக்கடி அவர் என் வீட்டுக்கு வருகிறார். என்னை அவர்தான் பார்த்துக்கொள்கிறார். அவர் என்னிடம் வருவதால் ஏனைய இராணுவச் சிப்பாய்கள் என்னை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. நலவிசாரிப்புகள் இல்லை. அவ்வளவு பயம். எங்கள் ஊர் ஆண்களின் சொறிச்சேட்டைகள் இல்லை. நான் இப்போதுதான் பாதுகாப்பாக உணர்கிறேன்.”



Image Source : groundviews.org

இது ஆழமான அதேவேளை பேசப்படாத, பேசப்படவிரும்பாத ஒரு பேசுபொருளை உடையது. சமூக அறம், மானம், போன்ற மறைப்புகளுக்கு அப்பால் போரின் பின்னான சமூகங்களில் வாழ்வோரின் நித்திய போராட்டத்தின் ஒரு சிறுதுளிதான் இது. இந்த விடயத்தில் அறம்சார் உயர்நிலை என்ற பெயரில் அந்தப் பெண்ணைக் குற்றம் சொல்லமுடியமா? இதைப் பாலியல்தொழில் என்ற வரையறைக்குள் கொண்டுவர இயலுமா? அந்தப் பெண்ணையோ, அவரின் நடத்தையையோ மதிப்பிடும் அதிகாரத்தை யார் தந்தது? இவ்வாறு பல

கேள்விகளைத் தொடர்ச்சியாக நாம் எழுப்பிய வண்ணமே இருக்கலாம்.

போருக்குப் பிந்தைய சூழலில் அறம் என்பது எவ்வளவு சிக்கலானது என்பதைப் புரிந்துகொள்ள மேற்சொன்ன இரு உதாரணங்களும் போதுமானவை. இந்தப் பின்புலத்திலேயே தமிழ்ச் சமூகத்தின் அறம் பாடுதல், அறம் பறைதல் ஆகிய இரண்டையும் நோக்கியாக வேண்டும்.

போருக்குப் பிந்தைய சூழலில், பல குழுக்கள் தங்களது கொடுமைகளை, நஷ்டங்களை மற்றும் நினைவுகளை தம்மோடு சுமந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலையில் ஒருவரோ ஒரு குழுவோ "நாங்கள் அறமானவர்கள்" என்று கூறுவது மற்றவர்களுக்கு எரிச்சலையும், எதிர்ப்பையும் ஏற்படுத்தலாம். இது உணர்வுபூர்வமான எதிர்வினைகளை ஏற்படுத்தும். எனவே அறம்சார் உயர்நிலையை எடுப்பதென்பது சிக்கலானது. அதேவேளை இது பல சமயங்களில் அதிகாரமிக்கவர்களின் 'மதிப்பீட்டுச் சிதைவான பார்வை' (Biased perception) ஆக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம்; இது நீதிக்கு எதிரானதாகவும் இருக்கலாம். போரினால் சிதறுண்ட சமூகங்களில் பலநிலை உண்மைகள் (Multiple truths) உண்டு என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். போர்க்காலங்களில் நடந்த நிகழ்வுகள் குறித்து ஒவ்வொரு சமூகத்துக்கும், குழுவுக்கும் தங்கள் பார்வை இருக்கிறது. "நாங்கள்தான் நியாயம் பேசுகிறோம்" என்று ஒருபக்கம் சொல்வது, மற்ற உண்மைகளை நிராகரிப்பதாகவும், புறக்கணிப்பதாகவும் கொள்ளப்படும். "நாங்கள் அறத்தோடு இருக்கிறோம்" என்று ஒருவர் சொல்வது, உண்மையான வருத்தங்களையும், உணர்வுகளையும் பகிர்ந்துகொள்ள முடியாத சூழ்நிலையை உருவாக்கும். இது சமூகப் பிணைப்பைக் கடுமையாகப் பாதிக்கக்கூடும்.

## நிறைவுக் குறிப்புகள்

மோதல்களால் பாதிக்கப்பட்ட பிளவுபட்ட சமூகங்களில் போருக்குப் பிந்தைய சூழலில் அறம்சார் நிலைப்பாட்டை எடுப்பதானது பல முக்கிய சவால்களைக் கொண்டது. போருக்குப் பிந்தைய சமூகங்களில், வெவ்வேறு குழுக்களுக்கு இடையே ஆழமான நம்பிக்கையின்மை இருக்கும். அறவிழுமியம்சார் நிலைப்பாடு எடுக்க முயல்பவர்கள், ஒரு தரப்பினரால் சந்தேகத்துடன் பார்க்கப்படலாம் அல்லது அவர்களது நோக்கங்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்படலாம். இது ஒரு தரப்பை மற்றொரு தரப்பிடமிருந்து மேலும் தனிமைப்படுத்தலாம்.

போருக்குப் பிந்தைய சமூகங்களில், அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், மற்றும் பாதுகாப்பு ஆகியன முன்னுரிமையாக இருக்கும். இதனால், உயர்ந்த அற நிலைப்பாட்டை எடுப்பது பல சமயங்களில் அடிப்படைத் தேவைகளையே கேள்விக்குட்படுத்தும். இந்நிலையில் அறமா? உணவா" என்ற கேள்வி எழும்போது, உணவே பிரதானம். இந்த நிலைப்பாட்டை எடுத்தவர்களை அறமற்றவர்கள் என்று சொல்ல முடியுமா?

இலங்கைச் சூழலில் போருக்குப் பிந்தைய தமிழ்ச்சமூகம் மீது புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் ஒருபிரிவினர் வைக்கிற ஒரு குற்றச்சாட்டு, 'இவர்கள் அனைத்தையும் விட்டுவிட்டார்கள், மாறிவிட்டார்கள், விடுதலைப் போராட்ட உணர்வற்றவர்கள்.' இந்தப் பிரிவினர் சோறா, சுதந்திரமா? என்ற வினாவுக்கு சுதந்திரமே பிரதானம் என்பவர்கள். ஆனால் வன்னியில் மக்களைப் பொறுத்தவரை முதலில் சோறு. ஏனெனில் அன்றாட உயிர்வாழ்க்கையே அவர்களுக்குச் சவாலானதாக இருக்கிறது. மக்களின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாதபோது, அறம்சார் உயர்ந்த நிலைப்பாடு எடுப்பது 'பயனற்ற' அல்லது 'எதார்த்தமற்ற' ஒன்றாகவே கருதப்படுகிறது.

தமிழ்ச்சமூகமாக நாம் கேட்கவேண்டிய சில கேள்விகள் உண்டு. நாம் அறம்பாட முதல் இந்த வினாக்களுக்கு இதயசுத்தியுடன் பதில்தேட விளைவது பயனுள்ளது:

போருக்குப் பிந்தைய இலங்கையில் தமிழ்ச் சமூகத்திற்கு, ஏன் அறம்சார் சிக்கல்கள் சர்ச்சைக்குரியதாக இருக்கின்றன?

தமிழ்ச் சமூகத்தின் சமூக மற்றும் அரசியல் மீட்சிக்கு எவ்வகையான உள் மற்றும் வெளிப்புற அறப்பிரச்சினைகள் சவால் விடுகின்றன?

தமிழ்ச் சமூகத்திற்குள் உள்ள அக முரண்பாடுகள் அறம்சார் நெறிமுறைகளை எவ்வாறு கேள்விக்குள்ளாக்குகின்றன?

அறம்சார் முன்னுரிமைகளை வடிவமைப்பதில் நீதி, நல்லிணக்கம் மற்றும் வள ஒதுக்கீடுகள் எவ்வகையான பங்கை வகிக்கின்றன?

தமிழ்ச் சமூகத்திற்குள் ஒற்றுமை மற்றும் குணப்படுத்துதலை வளர்ப்பதற்கு, தமிழ்ச் சமூகம் இந்த அறம்சார் சவால்களை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்?



● எம். எம். ஜெயசீலன்

எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

# இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம்: சமூக மாற்றத்துக்கான முன்னோடி அரங்க முயற்சி

மலையகத் தமிழரின் சமூக, அரசியல் விடுதலைக்காகத் தன் வாழ்வின் பெரும்பாகத்தை அர்ப்பணித்த நடேசய்யர் குறித்த ஆய்வுகள் அவரது பங்களிப்பை அறிமுகப்படுத்தல், அவற்றை மதிப்பிடுதல் என்ற தளங்களில் முன்னோடி முயற்சிகளாக விளங்குகின்றன. இருந்தபோதிலும் அவை குறிப்பிட்ட சில மட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன. நடேசய்யரின் மூல ஆவணங்கள் பல கிடைக்கப்பெறாத காலத்தில், கிடைக்கப்பெற்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும், சில புதிய மூலங்களைக் கண்டறிந்தும் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் அவற்றுள் நடேசய்யரின் மொத்தப் பங்களிப்புகளும், அவரின் கருத்தியல் தளத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்களும் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படாத நிலையே தொடர்கிறது. அந்தவகையில், ஏற்கனவே கிடைக்கப்பட்டுள்ள நூல்களையும் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள நூல்களையும் மதிப்பிடுவதன் மூலம் நடேசய்யரின் பங்களிப்புகளையும், அவர் காலத்து சமூக, அரசியல் அசைவையும் கண்டுகொள்ளவும் நடேசய்யர் பற்றிய ஆய்வுகளில் நிலவும் இடைவெளியை நிரப்பவும் எதிர்கால ஆய்வுகளுக்கான திசைகாட்டல்களை வழங்கவும் 'கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை' எனும் இத் தொடர் எழுதப்படுகிறது.

பெருந்தோட்டங்களின் இருண்ட வாழ்வை வெளியுலகத்துக்கு வெளிச்சமிட்டுக்காட்டி, அவ்வாழ்வு பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்துதல் நடேசய்யரின் சமூக, அரசியல் இயக்கத்தின் முக்கியமான அங்கங்களுள் ஒன்றாக விளங்கியுள்ளது. தோட்டத் தொழிலாளரிடையே சீர்திருத்தச் சிந்தனைகளைப் பரப்பி, அவர்களைச் சமூக, அரசியல் சக்தியாகக் கட்டியெழுப்புவதும் இந்திய மக்களிடையே தோட்டத் தொழிலாளர்களின் யதார்த்த வாழ்வை எடுத்துரைத்து, இலங்கைக்குத் தொழிலாளர்களாகப் புலம்பெயர்பவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதும் அதன் அடிப்படை நோக்கங்களாக இருந்துள்ளன.

மேற்படி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக திட்டமிட்டவகையில் துண்டுப்பிரசுரங்கள், சட்டவழிகாட்டி நூல்கள் முதலானவற்றை வெளியிட்டுள்ள நடேசய்யர், பத்திரிகைகளிலும் அவை குறித்துத் தொடர்ந்தும் எழுதி வந்துள்ளார்; தோட்டங்களுக்குள் உள்நுழைவதற்கிருந்த தடைகளைமீறி மக்களிடத்தில் பிரசங்கங்கள் செய்துள்ளார்; மீனாட்சியம்மாளின் பாடல்களைச் சிறுபிரசுரங்களாகப் பதிப்பித்து வெளியிட்டும் அவரைக்கொண்டு பாடல்களைப் பாடுவித்தும் விழிப்புணர்வையும் போராட்ட உணர்வையும் வளர்த்தெடுக்க முயன்றுள்ளார். இத்தகைய தொடர்முயற்சிகளின் ஓர் உத்தியாகவே 'இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம்' எனும் நூலை எழுதியுள்ளார். அந்நாடகத்தின் முன்னுரையில் இடம்பெறும், "இலங்கையில் உள்ள தோட்டங்களில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்களுடைய உண்மையான நிலைமையை எடுத்துக்காட்ட வேண்டியே இந்நாடகம் எழுதப்பெற்றுள்ளது" என்ற நடேசய்யரின் தன்னிலை விளக்கமும் 'இந்நாடகத்தின் நோக்கம்' என்ற பகுதியில் இடம்பெறும், "இந்தியத் தொழிலாளர்கள், பிறநாடுகளில் அவஸ்தைப்படாதிருக்க வேண்டுமானால் அவர்களுடைய கேவலமான நிலமையை அவர்களுக்கும், தென்னிந்தியாவிலுள்ள அவர்களது உறவினர்களுக்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறியக்கூடியதாயிருக்க வேண்டும். தென்னிந்தியாவிலுள்ள கிராமவாசிகள் தங்களுடைய உறவினர்கள் அந்நிய நாடுகளில் கண்டுள்ள வாழ்க்கையைவிடத் தங்களுடைய வாழ்க்கை எவ்விதம் மேன்மையுடையது என்பதையும் அதனைத் தாங்கள் எவ்விதம் மென்மேலும் விருத்தி செய்துகொள்ளலாம் என்பதையும் அறியக்கூடியவிதமாய் பிரசாரம் செய்ய வேண்டியது அவசியமாய்விட்டது" என்ற கருத்துகளும் அதனை நேரடியாக வெளிப்படுத்திநிற்கின்றன.

துண்டுப்பிரசுரங்கள், பிரசங்கங்கள் முதலானவற்றைவிட நாடகங்கள் சமூக மாற்றச் செயன்முறையில் மிகுந்த பயனளிக்கும் என்ற நோக்கிலே இந்நாடக ஆக்கத்தை நடேசய்யர் மேற்கொண்டுள்ளார். "பொது ஜனங்களுடைய உணர்ச்சியைக் கிளப்ப மூவகைச் சாதனங்களுண்டு. பிரசுரங்கள் மூலம் உண்டாக்குவது முதலாவது. பத்திரிகைகளும் புஸ்தகங்களும் வேறு பிரசுரங்களும் ஒருவாறு பலங்கொடுக்கும் எனினும் போதிய அளவு கொடுக்கும் என எண்ணவிடமில்லை. நமது நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம். இனாமாய்த் துண்டுப்பிரசுரம் வெளியிட்டுப் பரப்புவதற்காகச் செலவாகும் தொகைக்குத் தக்கபலன் கிடைக்குமென்பதே சந்தேகம். பிரசங்கங்கள் மூலம் அறிவைப் பரப்புவது இரண்டாவது ஆகும். பிரசுரங்களைவிட பிரசங்கங்கள் அதிக உணர்ச்சியை உண்டாக்குமெனினும் அதுவும் போதிய பலனைக் கொடுக்கும் என்று எண்ண இடமில்லை. மூன்றாவதாக நமக்குள்ள சாதனம் நாடகமாகும். நமது நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் கோவில் திருவிழாக் காலங்களில் பள்ளு பாடிக் காப்புக் கட்டுவது என்ற புராதன வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. பூர்வீகமுறைப்படி பள்ளு நாடகம் நடத்தப்படாவிட்டாலும் அந்தப் பெயர்கொண்டு ஏதோ ஒரு பாட்டைப் பாடிக் காரியங்கள் முடிக்கும் வழக்கமிருக்கிறது. அவ்வித சந்தர்ப்பங்களில் பிறநாடுகளுக்குச் சென்றவர்களின் பரிதாப நிலையை உள்ளது உள்ளபடி காட்டக்கூடிய முறையில் நாடகங்கள் நடித்துக்காட்ட ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன் அவர்களுடைய செல்வநிலையை உயர்த்துவதற்கான காரியங்களும் கைக்கொள்ளப்படுமானால் இந்தியக் கிராமவாசிகள் கூடியசீக்கிரம் விருத்தியடைவார்கள் என்பது திண்ணம்" என்ற நடேசய்யரின் பிரகடனம், அவர் நாடக ஆக்க முயற்சியில் ஈடுபட்டமைக்கான தேவையை வெளிப்படுத்தி நிற்கிறது.

மீனாட்சியம்மாளும் தன்னுடைய பதிவுகளில் நாடகங்கள் பிரசாரத்துக்கு வலிமையான கருவியாகத் தொழிற்படுமாற்றைச்

சுட்டிக்காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக, இலங்கையில் இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு என்ற சிறிய பிரசுரத்தில் இடம்பெறும் மீனாட்சியம்மாளின், "இலங்கைத் தோட்டங்களில் வேலைசெய்யும் 8 லட்சம் இந்தியத் தொழிலாளர் நிலைமையைப் பற்றி சாதாரண சனங்கள் அறிய வேண்டியது மிக்க அவசியமாகிவிட்டது. இத்தகைய பிரசாரத்திற்கு நாடகங்களே தக்க சாதனங்களாகும். அந்நோக்கம் பற்றியே தோட்டத் தொழிலாளர் நாடகம் ஒன்று எழுதப்பெற்று வருகின்றது..." என்ற குறிப்புகளைச் சுட்டிக்காட்டலாம்.



Image Source : chakkaram.com

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நாடகங்கள் வலிமையான கருவியாக விளங்கி வந்தமையும் நடேசய்யருடைய கள அனுபவங்களும் மேற்படி நாடக ஆக்க உத்திக்குத் தூண்டுகோலாக விளங்கியுள்ளன எனலாம். மேடை நாடகங்களும் நாடக நூல்களும் இந்திய விடுதலைக் கருத்துகளை மக்கள் மத்தியில் பரப்புவதிலும் காலனிய ஆட்சியின் சுரண்டலையும் ஆதிக்கத்தையும் அம்பலப்படுத்துவதிலும் விடுதலைப் போராட்ட உணர்வை வளர்த்தெடுத்து மக்களை அணிதிரட்டுவதிலும் வலுவான பங்கினை வகித்தன. நாடகக் கம்பனிகள் பல தோற்றம்பெற்று, நாடகத்தை வலிமையான மக்கள் கலையாக்கின. தேசவிடுதலை, சமூக சீர்திருத்தம் ஆகியவற்றை மையப்படுத்திய தமிழ்நாடங்கள் பல அக்காலத்தில் மேடையேற்றப்பட்டன. சான்றாக, கிருஷ்ணசாமிப் பாவலர் குறித்த கு.சா. கிருஷ்ணமூர்த்தியின் பின்வரும் கருத்துகளைச் சுட்டிக்காட்டலாம்:

"காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டக் கனல் எங்கும் பரவியிருந்த அக்காலத்தில், மதுவிலக்குத் திட்டத்திற்கு உரமூட்டும் வகையில் பதிபக்தி நாடகத்தையும் கதர் இயக்கத்திற்கு ஆதரவாக கதரின் வெற்றி என்ற நாடகத்தையும் நாகபுரிக் கொடிப் போராட்டத்தை மையமாக வைத்து தேசியக்கொடி என்ற நாடகத்தையும் குதிரைப் பந்தயத்தால் எண்ணற்ற குடும்பங்கள் சீரழிவதை எடுத்துக்காட்டும் கவர்னர்ஸ் கப் என்னும் நாடகத்தையும் நடத்தி அரசாங்கத் தடை, அடக்குமுறைகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து எதிர்நீச்சல் போட்ட தேசபக்த மாவீரர் பாவலர் ஆவார்" (தமிழ் நாடக வரலாறு, *1989: 141*).

இந்திய விடுதலைப் போராட்ட நகர்வுகளை ஓர் இதழியலாளனாகவும் சமூக, அரசியல் செயற்பாட்டாளனாகவும் நுட்பமாக அவதானித்தும் விடுதலைப் போராட்ட வளர்ச்சிக்குப் பங்களித்தும் வந்த நடேசய்யர், நாடகங்கள் விடுதலைப் போராட்டத்திலும் சமூக சீர்திருத்தத்திலும் செலுத்திவந்த தாக்கத்தினைக் காணத்தவறியிருக்க மாட்டார். அத்துடன் பத்திரிகை, துண்டுப்பிரசுரம், பிரசங்கம் எனப் பலதளங்களிலும் தோட்டத் தொழிலாளரின் துயர வாழ்வையும் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வுக் கருத்துகளையும் வெளிப்படுத்திவந்த நடேசய்யர், அவற்றின் போதாமைகளை - மட்டுப்பாடுகளை அவதானித்திருப்பார் - அறிந்திருப்பார். இந்தப் பின்புலமே அவரை நாடக ஆக்க முயற்சியில் ஈடுபடத் தூண்டியுள்ளது எனலாம்.

நடேசய்யர் நாடக ஆக்கத்தில் ஈடுபட முன்னரே இலங்கைவாழ் இந்தியரிடையே நவீன நாடக ஆற்றுகை முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. இலங்கை இந்தியர் சங்கம் அத்தகைய நாடக ஆற்றுகையொன்றை **1920** ஆம் ஆண்டே நிகழ்த்தியுள்ளது. அது குறித்த செய்தி ஆதி திராவிடன் பத்திரிகையில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது:

"இலங்கை இந்தியர் சங்கம்

நாளது **9.11.20** தீபாவளியன்று இரவு மேற்படி சங்கத்தின் ஆதரவின்கீழ் 'பொதுநிதிக்காக' சங்கத்தினங்கத்தவர்கள் கோவிந்தன் என்னுமோர் சிறிய சரிதையை நவீன நாடகமுறையில் நடித்துக் காண்பித்தார்கள். அன்று தினம் அந்நாடகத்தினை கண்ணுற திரளான ஜனங்கள் குழுமியிருந்தார்கள். தவிரவும் மேற்படி சங்கத்தினங்கத்தவர்களால் இதுவே முதலாவதாக நடத்தப்பட்டபோதிலும் யாதொரு குறைவின்றி விஜயஞ் செய்திருந்த கனவான்கள் யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாகவும் சந்தோஷசாகரத்தில்

மூழ்கடிக்கும்படியாகவும் ஒவ்வொரு ஆக்டர்களும் அவரவர்கள் ஆக்டை மிகவும் திறமையுடன் நடித்துக் காண்பித்தார்கள்" (ஆதி திராவிடன், 2020: 268).

இந்நாடகத்தின் பொருண்மை குறித்து அறியமுடியவில்லை. ஆனால், நாடகம் பார்த்த கனவான்களைச் சந்தோஷ சாகரத்தில் மூழ்கடிக்கும்படியாக நடித்தார்கள் என்ற குறிப்பு, இந்நாடகம் பொழுதுபோக்குத் தன்மையை மிகுதியாகக் கொண்டிருந்திருக்கும் என்ற ஊகத்துக்கு இட்டுச் செல்கிறது. இந்நிலைக்கு மாறாக நடேசய்யரின் நாடக ஆக்கமானது, சமூக மாற்றத்தை இலக்காகக் கொண்டமைந்துள்ளது. இந்நாடகம் வெளிவந்த காலத்து இலங்கையின் நாடகப் போக்கில் இதிகாச புராணக் கருத்துகளை நாடகமாக்குவதே முதன்மையான போக்காக விளங்கியுள்ளது. அதனால் சமூக பிரச்சினைகளைப் பேசி, சமூக மாற்றத்துக்கான கருவியாக நாடகக் கலையைக் கைக்கொண்ட முன்னோடி முயற்சிகளுள் முதன்மையான ஒன்றாக நடேசய்யரின் இந்நாடக ஆக்கம் அமைகிறது.

இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம் 1937 ஆம் ஆண்டு, கொழும்பு கமலா பிரஸ்ஸினால் வெளியிடப்பட்டுள்ளது. தனிப்பிரதி ஒன்று 50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்நாடக நூலை அரிதின்முயன்று அந்தனி ஜீவா 2018 ஆம் ஆண்டு மறுபதிப்பாக வெளிக்கொணர்ந்துள்ளார்.

நடேசய்யர் இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகத்தை 1937 ஆம் ஆண்டுக்கு முன்னரே வெளியிடத் திட்டமிட்டுள்ளார் என்பதை இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும் (1928) என்ற நூலில் இடம்பெறும் பின்வரும் விளம்பரத்திலிருந்து அறியமுடிகிறது:

"வெளிவருகின்றது! வெளிவருகின்றது!

'சுந்திரம் அல்லது அந்தரப்பிழைப்பு'

கௌரவ கோ. நடேசய்யரால் இயற்றப்பெற்றது

உடனே ஆர்டர் செய்யுங்கள்

தனிப்பிரதி விலை சதம் 30, 4 புத்தகங்களின் விலை ரூபா 1.00.

ஆரு. முத்தையா அம்பலம்

154, செட்டித்தெரு, கொழும்பு"

இவ்விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ளபடி, 'சுந்திரம் அல்லது அந்தரப்பிழைப்பு' என்ற நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை. சிறிய இடைவெளிக்குப் பின்னர் வெளிவந்துள்ள 'இலங்கைத்தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு' நாடகத்தை அந்நூலாகக் கொள்ளலாம். நாடக நூலைத் திட்டமிட்டபடி வெளியிடமுடியாமற் போனதாலேயே நாடகத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களை மட்டும் முதலில் தனிப்பிரசுரங்களாக வெளியிட்டுள்ளனர்.

இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு நாடகத்தில் உள்ள பாடல்கள் யாவும் மீனாட்சியம்மாளால் இயற்றப்பட்டவையாகும். அந்நூலின் முன்பக்கத்திலேயே "இந்நாடகத்திலுள்ள பாடல்கள் சந்தச்சரபம் உடுமலை முத்துசாமிக் கவிராயர் அவர்கள் மாணவியும், ஆசிரியரின் பெண்சாதியுமான ஸ்ரீமதி கோ.ந. மீனாட்சியம்மாளால் இயற்றப்பட்டவை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தச்சரபம் உடுமலை முத்துசாமிக் கவிராயர் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தை மையமாகக் கொண்டு நிகழ்த்தப்பட்ட மேடை நாடகங்கள் பலவற்றுக்குத் தேசப்பக்திப் பாடல்களை எழுதியவராவார். அதனால் மீனாட்சியம்மாளின் பாடலாக்க முயற்சிகளுக்கும் இந்நாடகத்தில் பாடல்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தியமைக்கும் உடுமலை முத்துசாமிக் கவிராயரின் தாக்கமும் காரணமெனலாம்.

நாடகத்துக்கென மீனாட்சியம்மாளால் எழுதப்பட்ட பாடல்களுள் தேர்ந்தெடுக்கப்பட்டவை, 'இலங்கையில் இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு' என்ற தலைப்பில் இருபாகங்களாக 1931 ஆம் ஆண்டு சகோதரி பிரஸினால் வெளியிடப்பட்டுள்ளன. அப்பிரசுரங்களுக்கு மீனாட்சியம்மாள் எழுதியுள்ள முன்னுரைக் குறிப்புகளில் இப்பாடல்கள் நாடகத்துக்கென்று எழுதப்பட்டவை என்பதையும், தோட்டத் தொழிலாளர் பற்றிய நாடகமொன்று எழுதப்பட்டு வருகிறது என்பதையும் குறிப்பிட்டுள்ளதுடன் இந்நூல்களை வாங்கி, நாடகநூல் வெளிவருவதற்கு ஆதரவு தருமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மீனாட்சியம்மாளின் பாடல்கள் நாடகத்தின் கதை நிகழ்வுகளுக்கு ஏற்ப அமைந்துள்ளன. அக்கால நாடக மரபையொட்டி வசனங்களும் பாடல்களும் இணையாக இடம்பெற்றுள்ளன. அப்பாடல்களைத் தனிப்பிரசுரமாக வெளியிடப்பட்டபோது, நாடகத்திலுள்ள

அனைத்துப் பாடல்களும் பிரசுரிக்கப்படவில்லை. அதேவேளை, அப்பிரசுரத்தில் உள்ள பாடல்களுள் ஒன்று, நாடகத்தில் உள்ளடங்கியிருக்கவில்லை.

இந்நாடகத்தில் உள்ள பாடல்களுள் சில, உண்மையாக இடம்பெற்ற நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டுள்ளன என்பதை, இலங்கையில் இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு நூலின் இரண்டாம் பாகத்துக்கு எழுதிய முன்னுரையில், “இதில் ஆங்காங்கு தோட்டங்களில் நடைபெற்றுள்ள உண்மைச் சம்பவங்கள் இசைக்காக சிற்சில திருத்தங்களுடன் பாடப்பெற்றிருக்கின்றன” எனப் பதிவு செய்துள்ளார், மீனாட்சியம்மாள். அத்துடன் அத்தகைய பாடல்கள் எந்தத் தோட்டத்தில் இடம்பெற்ற உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டன என்ற குறிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. சான்றாக, “இலங்கைக்கு வந்து பலவருஷம் உழைத்து ஒருவாறு சிறிது பொருள் தேடிய ஓர் தொழிலாளியின் குடும்பம் எவ்விதம் அந்தரப்பட்டு, தேடிய தேட்டமெல்லாம் இழந்த வரலாற்றைச் சொல்லிப் புலம்பல். இது பூண்டலோயா பகுதியிலுள்ள ஓர் தோட்டத்தில் நடைபெற்றது” என்ற பதிவைக் குறிப்பிடலாம். நாடகமாக வெளிவந்தபோது, நாடகத்தினுள் இத்தகைய குறிப்புகள் இடம்பெறவில்லை. ஆனால், ‘இந்நாடகத்தின் நோக்கம்’ என நடேசய்யர் எழுதியுள்ள குறிப்பில், “இந்நாடகத்தில் காட்டப்பெறும் ஒவ்வொரு விஷயமும் நடைபெற்ற சம்பவங்களினின்றுமே தொகுக்கப் பெற்றவையென்பதை நாம் சொல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம்” எனப் பதிவுசெய்துள்ளார்.

நாடகத்தில் இடம்பெறுகின்ற செய்திகளுள் கணிசமானவை, நடேசய்யரின் இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும் என்ற சட்டவழிகாட்டி நூலில் விபரணங்களாய் இடம்பெற்றுள்ளன. அந்நூலில் இந்தியாவில் ஆள் சேர்த்தலும் மண்டபம் காம்பும், மண்டபம் காம்ப்பிலிருந்து தோட்டம் சேர்வது, தோட்ட வாழ்க்கை, ஊருக்குத் திரும்புதல், தொழிலாளர் சங்கங்கள் எனும் ஐந்து அத்தியாயங்களில் விபரிக்கப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையான அம்சங்கள் பாத்திரங்களின் கூற்றுகளாகவும் பாடல்களாகவும் நாடகத்தில் இடம்பெற்றுள்ளதுடன் அந்நூலில் விபரிக்கப்பட்டுள்ள சட்டநடைமுறைகளுக்கு மாறாக நடைமுறை யதார்த்தம் விளங்குகின்றமை நாடகத்தின் மைய இழையாகப் பின்னப்பட்டுள்ளது. அவ்வாறே நடேசய்யர் *1931* ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட ‘நீ மயங்குவதேன்’ எனும் அகயெழுச்சி நூலில் இறுதியாக உள்ள, ‘திரு. இராமசாமி சேர்வையின் சரிதத்தில்’ இடம்பெறும் செய்திகளுள் சில, நாடகத்தின் இரண்டாவது அங்கத்தில் இடம்பெற்றுள்ளன. சட்டம் திருவிழாக்கள் முதலான பொதுநிகழ்வுகளில் ஆள்திரட்டும் செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடாது என்று விதித்திருந்தபோதிலும் ஆள்கட்டிகள் திருவிழாக்களில் எவ்வாறு சூழ்ச்சிகரமாக ஆட்களைத் திரட்டுகிறார்கள் என்பது ஆள்கட்டி அழகனது செயற்பாடுகள் மூலம் நாடகத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதன்போது இடம்பெறும் ராமசாமி என்ற சிறுவனுடன் தொடர்புடைய செய்திகள், நீ மயங்குவதேனில் இடம்பெறும் திரு. இராமசாமி சேர்வையின் சரிதத்துடன் ஒத்துப்போகின்றன. இராமசாமி சேர்வையின் சரிதம் உண்மையாக நிகழ்ந்தது என்பதை அதன் இறுதியில் நடேசய்யர் சுட்டிக்காட்டியுள்ளார். இது நாடக நூலில் இடம்பெறும் செய்திகள் உண்மைச் சம்பவங்களை அடியொற்றி உருவாக்கப்பட்டவை என்பதற்கு மற்றுமொரு சான்றாகும்.

நாடகத்தில் இடம்பெறும் சில செய்திகள், மலையக வாய்மொழிப் பாடல்களுடன் ஒத்துப்போவதை அவதானிக்க முடிகிறது. சான்றாக, கங்காணி - கணக்கன் ஆகியோருடைய சூழ்ச்சிகள் - குரோதங்களால் தோட்டத் தொழிலாளர் பல்வேறு இன்னல்களுக்கு உட்படுகின்றனர், தோட்டத்துரையின் செயற்பாடுகளுக்குக் கங்காணி, கண்டாக்கு முதலானோரின் தூண்டுதல்கள் காரணமாக இருக்கின்றன முதலானவை நாடகத்தில் இடம்பெற்றுள்ளன. இவற்றின் சாரத்தை,

“தோட்டப் பிரளியில்லே

தொர மேலே குத்தமில்லே

கங்காணி மாராளே

கனபிரளி யாகுதையா”

என வெளிப்படுத்தியுள்ளது ஒரு நாட்டார்பாடல். கொழுந்தினை நிறுக்கும்போது, தம்மோடு முரண்பாடு கொண்டவர்களுக்கு நிறையைக் குறைத்தலும் தமக்கு வேண்டிய நபர்களுக்கு நிறையைக் கூட்டுதலும் தோட்டங்களில் நிகழ்ந்துள்ளன. நாடகத்தின் ஒரு காட்சியில் குப்பாயி என்ற பாத்திரத்தின் கொழுந்துக்கூடை *15*

றாத்தல் காட்டுகிறது. ஆனால், நிறுக்கும் கங்காணி, "10 ராத்தல்" என்கிறான். குப்பாயி, "என்னய்யா 15 ராத்தல் தெரியுதே" என்கிறபோது, கணக்கப்பிள்ளை, "தண்ணிக்கும் கூடைக்கும் கழிச்சிருக்கு போ இந்தா துண்டு" என்று அப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருகிறான். இதனை,

"ஓடி நெரே புடிச்சு
ஒரு கூடே கொழுந்தெடுக்க
பாவி கணக்கப்புள்ளே
பத்து ராத்த போடுறானே"

என வெளிப்படுத்தியிருக்கிறது ஒரு வாய்மொழிப்பாடல். இவையாவும் இந்நாடகச் செய்திகள் கற்பனையாகப் புனையப்பட்டவையல்ல, அவை நடைமுறை யதார்த்தத்தின் பதிவு என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகமானது மூன்று அங்கங்களையும் 26 காட்சிகளையும் கொண்டுள்ளது. முதல் அங்கத்தில் 11 காட்சிகளும் இரண்டாம் அங்கத்தில் 08 காட்சிகளும் மூன்றாம் அங்கத்தில் 07 காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. முதல் அங்கத்தில் இலங்கைத் தோட்டங்களுக்குப் புதிய தொழிலாளர்கள் தேவைப்படுகின்றபோது பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள், கங்காணி - கண்டாக்கு முதலானோரின் சூழ்ச்சிகள் - அவர்களுக்கிடையேயான போட்டிகள், கங்காணி - கண்டாக்கு ஆகியோருக்கிடையேயான குரோதங்களால் தொழிலாளர் படுகின்ற இன்னல்கள், பெரிய கங்காணியின் நடவடிக்கைகள், தொழிலாளர்மீதான சுரண்டல்கள் முதலானவை பேசப்பட்டுள்ளன.

இரண்டாம் அங்கத்தில் இந்தியாவில் ஆள்திட்டும் செய்திகள் இடம்பெற்றுள்ளன. கங்காணிகள் சூழ்ச்சிகரமாகத் திருவிழாக்களிலும் சந்தைகளிலும் ஆட்களைத் திரட்டும்விதம், அவர்களுடைய தரகர்களின் செயற்பாடுகள், கங்காணிகளின் போலியான ஆசை வார்த்தைகள், அவற்றை நம்பி தொழிலாளர்களாகப் புலம்பெயர்தல், இலங்கைக்கு ஆள்கட்டுவதற்குக் கங்காணிகள் செய்யும் சூழ்ச்சிகள், மண்டபம் காம்பில் இடம்பெறுகின்ற அரச நடைமுறைகள் முதலானவை அவற்றில் இடம்பெற்றுள்ளன.

மூன்றாவது அங்கத்தில் தொழிலாளர்களாக இலங்கை வந்தவர்கள் படுகின்ற அவஸ்தைகள் - துயரங்கள், தொழிலாளர் சட்டங்கள் நடைமுறையில் பயனற்றவையாக - நடைமுறைப்படுத்தப்படாதவையாக இருத்தல், தொழிலாளர்கள் ஒன்றுகூடி தமக்கான சங்கங்களை அமைத்து விடுதலைக்குப் போராட வேண்டிய அவசியம், தொழிலாளர்களாக இலங்கைக்கு வரவுள்ளவர்களைத் தடுத்தல் முதலான விடயங்கள் இடம்பெற்றுள்ளதுடன் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுவரும் விழிப்பும் அவர்களிடையே முகிழ்க்கும் ஸ்தாபனரீதியான செயற்பாடுகளும் பேசப்பட்டுள்ளன.

இலங்கைக்குத் தொழிலாளர்கள் சுயவிருப்பின் அடிப்படையில் வரவில்லை. கங்காணிகளதும் ஆள்கட்டிகளதும் ஆசை வார்த்தைகளை நம்பியே அவர்கள் வருகிறார்கள் என்பது நாடகத்தில் அழுத்தமாக முன்நிறுத்தப்பட்டுள்ளது. கங்காணிகளும் ஆள்கட்டிகளும் கூறும் ஆசைவார்த்தைகளை மீனாட்சியம்மாள் பின்வருமாறு தொகுத்துரைத்துள்ளார்:

"கேளுங்கள் கேளுங்களே இலங்கை வந்தால்
கீர்த்தி யுடன் பணமும் சேர்த்து வரலாம்
குபேரப் பட்டண மது அங்கே
குடி யேறினால் நம்ம மிடிதீரும்
சிங்கார மாளிகையுண்டு அதிலே
சிறந்தநல் லைட்டுகளும் பைப்புகளுண்டு
பாங்கான மோட்டார்களுண்டு அதிலேறி
பார்முழுதும் பார்த்துவர வசதியுண்டு
துரைமார்கள் நேசமுங்கொண்டு அதனால்
துட்டு சேர்க்க நல்ல தொரு மார்க்கமு முண்டு
சம்பளங்களதிக முண்டு நல்ல
சம்பாத்யம் செய்துகொள்ள வழிகளுண்டு
அந்தி பகலாயிங்கே நித்தம் நித்தம்
அலைந்து திரிந்து மனம் வருந்துகிறீர்
புந்தி நிரையக் கஞ்சியு மில்லாமல்
புலம்ப வேண்டாம் மனம் கலங்கவேண்டாம்
சோடி வேட்டி வாங்கித்தருவேன் நல்ல
சொகுசான பிராந்தி வுஸ்கி ஜின் முதலான
வாடிக்கைக் குடிகளெல்லாம் நித்தமும்
வகை வகையாக நானும் வாங்கித்தருவேன்
நித்த மொரு கலியாணம் செய்யவுந்தான்
நேர்த்தியான பெண்களையும் சேர்த்துத்தருவேன்
பொன் குவியல் குவியலாக இலங்கையில்
பூமி முழுது மெங்கு பார்த்தாலும்
நவரத்னம் விளையும் நாடு அங்கே போனால்
நரேந்த்ர பதியைப்போல் நாமும் வாழலாம்
உண்மையை உரைத்தேன் நான் இன்னம்
உள்ள தெல்லாம் சொல்ல நா வொன்று போதாது"

இலங்கைக்கு வருகின்ற வழியிலும் - வந்த பின்னரும் இவை எல்லாம் போலி வார்த்தைகள்,

கங்காணிகளின் தந்திரங்கள் என்று மக்கள் உணர்ந்துகொள்கிறார்கள். அதனை இந்திய மக்களுக்கு முன்னரே உணர்த்தும் முயற்சியை மேற்கொண்டுள்ள இந்நாடக நூல், தொழிலாளர்களாக இலங்கைவந்து ஏமாற்றமடைய வேண்டாம் என்பதை வலியுறுத்தியுள்ளது.

பெரிய கங்காணிகளும் சில்லறைக் கங்காணிகளும் தொழிலாளர்களை எவ்வாறெல்லாம் சுரண்டுகிறார்கள், தொழிலாளர்கள்மீது எத்தகைய அத்துமீறல்களைப் பிரயோகிக்கிறார்கள், தொழிலாளர்களை எவ்வாறு ஏமாற்றுகிறார்கள் முதலானவற்றை நடேசய்யர் இந்நாடகம் முழுதும் பதிவு செய்துள்ளார். வேலைக்கு ஆள் திரட்டுவதற்கு வழங்கப்படுகின்ற நிதியை மனைவிக்கு நகைகள் வாங்குவதற்கும், தன் உறவினர்களுக்கு விருந்துவைத்து கொண்டாடுவதற்கும் பயன்படுத்தும் கங்காணிமார்கள், தொழிலாளர் ஒருவருக்குச் சட்டப்படி தோட்டம் கொடுக்கும் 15 ரூபாவையும் சுரண்டிக்கொள்கிறார்கள்.

வேலைநேரம், உணவு இடைவேளை என்பன சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் உணவு இடைவேளை இன்றியும் வேலைநேரம் கடந்தும் தொழிலாளர்கள் வேலைசெய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளனர். அந்த உரிமை மீறலையும் உழைப்புச் சுரண்டலையும் வெவ்வேறு காட்சிகளில் எடுத்துரைத்துள்ள நடேசய்யர், சட்டத்தைமீறி அச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கான காரணிகளையும் வெளிப்படுத்தியுள்ளார். சான்றாக, நல்லசுப்பன் கங்காணி கண்டக்டருடனான உரையாடலொன்றில், “தொரை வங்களாவிலிருந்து ‘கோக்கி’ இரண்டாளு, நாலு ஆளு வேணுமெண்ணு கேக்கிறான். ஆள் கொடுத்தா எந்தக் கணக்கிலே போடரது. உங்களுக்கும் மாட்டுப்பட்டிக்கும், அதுக்கும் இதுக்கும் 6 ஆள் வேணும். எனக்கும் அட்டனுக்குப்போக, பில்லறுக்கன்னு 5 ஆள் வேணும். இப்படியெல்லாம் இருக்கச்சே எப்படி வேலைப்பார்க்கிறது. யார் கணக்கில் போடுகிறது?” எனக் கூறுகிறான். இவ்வாறு துரை, கண்டக்டர், கங்காணி முதலானோருக்குப் பணிவிடை செய்வதற்கு அனுப்பப்படுபவர்களின் கணக்குக்காகவே உணவு இடைவேளை இன்றியும் வேலைநேரம் கடந்தும் - சட்டத்தைமீறி தொழிலாளர்கள் வேலைவாங்கப்படுகின்றனர் என்பதைக் கங்காணியின் கூற்றாகவே நடேசய்யர் எடுத்துக்காட்டியுள்ளார். கங்காணிகளின் சுரண்டல்களுக்கு உள்ளாகி, அவர்களின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டிருந்த தொழிலாளர்களிடையே விழிப்புணர்வும் கங்காணிகள்மீதான எதிர்ப்புணர்வும் ஏற்பட்டுவருதல் நாடகத்தின் இறுதிப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. தொழிலாளர் எழுச்சியை முடக்கும்வகையில் கங்காணியொருவர், “தொழிலாள சகோதரரே, நான் உங்கள் சிநேகிதன். நான் உங்களுடன் வேலை செய்யும் ஊழியன்... இப்பொழுது உங்களுக்குப் போதனை செய்ய வந்திருப்பவர்கள் வேலைகொடுக்க மாட்டார்கள். சம்பளம் கொடுக்க மாட்டார்கள்...” என்றபோது தொழிலாளி ஒருவர், “கங்காணி யடோ, என்ன சாமர்த்தியம்” என்கிறார். மற்றொரு தொழிலாளி, “தலப்பாவைவிட்டு தொரை சப்பாத்து போட உத்தரவு கொடுத்தா இதுவா பேசுவாய்?” என்கிறார். இவை தொழிலாளரிடம் ஏற்பட்டுவந்துள்ள விழிப்புணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றன. “சக்கரை சக்கரையா வக்கணை பேசுங் கங்காணி தந்திரமெல்லா மிப்போ அந்தர மாச்சு” என்ற பாடலும் தொழிலாளர் விழிப்பின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

துண்டுமுறை நீக்கத்துக்கான கங்காணிகளின் எதிர்வினையும் துண்டுமுறை நீக்கத்துக்குப் பின்னரும் தொழிலாளிகளின் கடன்கள் நீங்காமையும் கங்காணிகள் சூழ்ச்சிகளாலும் அராஜகத்தாலும் கடன்களை வசூலித்து வருகின்றமையும் அதற்குப் பெருந்தோட்ட இயக்கம் உடந்தையாக இருக்கின்றமையும் நாடகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சான்றாக, நல்லசுப்பன் கங்காணி துரையிடம், “இந்தத் துரை வந்தபின்னே சம்பளத்தை ஆள் கையில் கொடுக்கிறது. ஆள் நோட்டீஸ் கொடுத்தால் கங்காணியில்லாமலே வாங்கிக் கொள்ளரது. இப்படியெல்லாம் செய்தால் தோட்டத்தில் ஆள் தங்குமா?... கடன் கட்டினா பத்துச்சீட்டு தாரேன் எண்டு தொரை சொல்ரதில்லை. அன்றைக்குப் பெத்தானை கணக்குத் தீத்தீங்க எனக்குந் தெரியாது. எனக்கு ரூபா எழுநூறு போச்சு” எனத் தோட்டத் தொழிலாளர் நன்மையைக் கருதி உருவாக்கப்பட்ட சட்டத்தால் தானும் தோட்டமும் பாதிக்கப்படுவதாகக்கூறி, அச்சட்டத்தை மீறிச் செயற்படுமாறு துரையை வலியுறுத்துகிறான். அத்துடன் தோட்டம்விட்டுச் செல்பவர்களிடம் எஞ்சியுள்ள சிறிய சொத்துகளையும் தன் அடியாட்களை ஏவிவிட்டுப் பறித்துக்கொள்கிறான். நாடகத்தின் மூன்றாம்

அங்கத்தின் இரண்டாம் காட்சியில் தோட்டம்விட்டுச் செல்பவர்களின் சொத்துகளைக் கங்காணி ஆட்களை வைத்து கொள்ளையடிக்கும் நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது. இவற்றின்மூலம் துண்டுமுறை நீக்கச்சட்டம் நடைமுறையில் முழுப்பயனைத் தரவில்லை என்ற விமர்சனத்தை நடேசய்யர் முன்வைத்துள்ளார். அவரின் துண்டுப்பிரசுரங்களிலும் இவ்விமர்சனத்தைக் காணமுடிகிறது.

தொழிலாளர் தொடர்பான சட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மண்டபம் காம்பில் உள்ள குமாஸ்தா, அச்சட்டங்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் காட்சியை வைத்துள்ளார், நடேசய்யர். அதில் குறைந்தபட்ச சம்பளச் சட்டம் (1927) கொண்டுவந்த பிறகு நடைமுறையிலிருக்கும் மேற்பகுதி, நடுப்பகுதி, சமதரைப் பகுதி என்ற மூன்று பகுதிகளுக்கும் வழங்கப்படுகின்ற சம்பள விகிதங்கள், வேலை நாட்கள், அரிசி வழங்குதல், துண்டுமுறை இல்லாமை - கடன் இல்லாமை, தோட்டங்களுக்குச் சென்றடையும் வரை செலவு இல்லாமை, பிரச்சினைகளை அறிவிப்பதற்கு உள்ள வழிமுறை, மீண்டும் நாடு திரும்புவதற்கு உருவாக்கப்பட்டுள்ள நடைமுறை முதலானவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இச்சட்டங்கள் யாவும் நடைமுறையில் பின்பற்றப்படாமையும், சட்டங்கள் பற்றிப் பேசும் தொழிலாளர்கள் பல்வேறு வகையில் வஞ்சிக்கப்படுகின்றமையும் மூன்றாம் அங்கத்தில் இடம்பெற்றுள்ளன. அக்கொடுமைகளிலிருந்து விடுபடவே ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும், தொழிற்கட்சி பலம்பெற வேண்டும் முதலானவை நாடகத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

'நாடகப் பாத்திரங்களும் சீன்கள் விபரங்களும்' என்ற தலைப்பில் நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்களையும் பாத்திரங்களின் தோற்றத்தை - ஒப்பனைகளையும் சுட்டிக்காட்டியுள்ள நடேசய்யர், ஒவ்வொரு காட்சியின் தொடக்கத்திலும் நிகழ்வு இடம்பெறும் களத்தையும் களத்தின் பின்னணியையும் குறிப்பிட்டு, பாத்திரங்களின் தோற்றத்தை விபரித்துள்ளார். பாத்திரங்களின் தோற்றம், அவற்றின் செயற்பாடுகள், உளப்பாங்கு முதலானவற்றை நடேசய்யர் வெகுநுட்பமாகப் பதிவுசெய்துள்ளதைக் காணமுடிகிறது. சான்றாக, நல்லசுப்பன் கங்காணியின் பாத்திர வார்ப்பைச் சுட்டிக்காட்டலாம். நல்லசுப்பன் தோட்டத்துத் துரையைச் சந்திக்கவரும் காட்சி, "தோட்டத்துப் பெரியகங்காணி நல்லசுப்பன் என்பவர் வேலைக்காடு சுற்றிக்கொண்டு ஆபீஸ் பக்கம் துரையைக்கண்டு பேச வருகிறார். தலையில் கங்காணி தலைப்பாகை, கையில் ஓர் குடையும் சிறு தடியும். காலில் செருப்பு, மேலே பழைய கம்பளிக்கோட்டு, முழங்கால் வரை தூக்கிக் கட்டப்பெற்ற வேஷ்டியுடன் வருகிறார்" என விபரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வந்தவன் காரியாலயத்தில் துரையைச் சந்திக்கின்றபோது, "காலில் போட்டிருந்த செருப்பைக் கழற்றி ஒளித்தும் பயபக்தியுடன் கையிலிருந்த குடையையும் கம்பையும் ஆபீஸ் வெளிச்சுவற்றின் ஒருபுறத்தில் சாத்தியும் வைத்துவிட்டு துரை முன், ஜன்னல் பக்கம் வந்து குனிந்து, சலாங் துரையே" எனத் தன் பணிவை வெளிப்படுத்துகிறான். துரையுடனான உரையாடல் முடிந்து துரை சென்றபின்னர், எழுதுவினைஞரிடம், "என்ன கிளாக்கரய்யா! தொரப்பய என்னமோ சொல்லிப்போரானே..." எனத் தன் வெறுப்பை வெளிப்படுத்துகிறான். அவன் தொழிலாளர்களுடன் இருக்கும்போது, அவர்களின் தலைவனாக இருக்கிறான். அதன்போது அவனின் தோற்றம், செயற்பாடு, வார்த்தைகள் எல்லாம் ஆதிக்கத்தின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன.

நாடகத்தில் பேச்சுமொழி மிக இலாவகமாகக் கையாளப்பட்டுள்ளது. வெள்ளைத்துரை பேசும் உடைந்த தமிழ், சாதாரண தொழிலாளர்களின் பேச்சுத் தமிழ், பெருந்தோட்டத் தொழிற்களங்களில் பயன்படுத்தப்படும் தமிழ், அரச அதிகாரிகள் பயன்படுத்தும் நிர்வாகத் தமிழ், பணிவைக் காட்டும்போதும் ஆதிக்கத்தை வெளிப்படுத்தும்போதும் கையாளப்படும் தமிழ் எனச் சூழலுக்கு ஏற்பவும் பாத்திரங்களுக்கு ஏற்பவும் பேச்சுமொழியை அழகியல்பூர்வமாக நடேசய்யர் பயன்படுத்தியுள்ளார். அவ்வாறே மீனாட்சியம்மாளும் தன் பாடல்களில் பேச்சுமொழியை யதார்த்தம் குன்றாதவகையில் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.
தோட்டத்தொழிலாளரின் யதார்த்த நிலைமையை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கும் இந்நாடகம் பின்வரும் மூன்று முக்கிய விடயங்களை அழுத்தமாக வலியுறுத்த முனைந்துள்ளது:

1. இந்திய மக்கள் கங்காணிகளின் ஆசைவார்த்தைகளை நம்பி தொழிலாளர்களாக இலங்கை வருவதைத் தடுத்தல்.
2. இலங்கையில் தொழிலாளர்களாக அல்லல்படுபவர்களுள் இந்தியாவுக்குச் சென்று வாழ்வை வளமாக அமைத்துக்கொள்ளக்கூடியவர்கள் இந்தியாவுக்குச் செல்லல்.

3. மீதமிருக்கின்ற தொழிலாளர்கள் ஒன்றுகூடி தமக்கான சங்கங்களை அமைத்து தம் விடுதலையை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

நாடகத்தின் நிகழ்ச்சிகள் இவற்றை வெளிப்படுத்தியுள்ளதுடன் நாடகத்தின் இறுதியில் தொழிலாளர் ஒருவரின் குரலாகவே அவற்றை எடுத்துரைத்து, நாடகத்தை வாசிப்போர் - பார்ப்போர் இடையே உணர்வுபூர்வமாகப் பதியவைக்க முனைந்துள்ளார், நடேசய்யர்.

நாடகத்தின் கதையும் காட்சிகளும் அக்கால அரசியல் போக்குகள் மீதான எதிர்வினைகளற்று, பெருந்தோட்ட இயக்கம், தொழிலாளர் வாழ்வு, கங்காணி - கண்டாக்கு ஆகியோரின் செயற்பாடுகள், இந்தியாவில் ஆள்திரட்டும் முறைமை, தொழிலாளரிடையே ஏற்பட்டுவரும் விழிப்பு ஆகியவற்றையே மையப்படுத்தியுள்ளன. டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் இந்தியத் தொழிலாளர் வாழ்வில் ஏற்படுத்திய பாதிப்புகள், சுதேசிய சிங்கள ஆட்சியாளர்கள் இந்தியருக்கு எதிராக முன்னெடுத்துவந்த செயற்பாடுகள், இலங்கைவாழ் இந்தியரின் அரசியல் நகர்வுகள் ஆகியன பற்றி நாடகத்தில் பேசப்படவில்லை.

இலங்கைக்கு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட பின்னர் (1931), இலங்கைவாழ் இந்தியர் இலங்கைப் பிரஜையாகத் தம்மை பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்பதை நடேசய்யர் பலதளங்களிலும் வலியுறுத்தி வந்துள்ளதுடன் சுதேசிய சிங்கள ஆட்சியாளர்களின் இந்திய எதிர்ப்புக்கான எதிர்வினைகளையும் நிகழ்த்திவந்துள்ளார். இலங்கைவாழ் இந்தியர் தம் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு, அவர்கள் யாவரும் தம்மை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்பது நடேசய்யரின் அரசியல் நகர்வாக இருந்துள்ளது. இவற்றின் வெளிப்பாடுகளை இந்நாடகத்தில் காணமுடியவில்லை. அதனால் இந்நாடகம் வெளிவந்துள்ள ஆண்டிலில்லாமல் அதற்குச் சில வருடங்கள் முன்னரே - மேற்படி அரசியல் பிரச்சினைகள் அழுத்தம்பெற முன்னரே - எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக்கொள்ளலாம். 1928 ஆம் ஆண்டுக்குரிய இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும் நூலில் இடம்பெறும் இந்நாடகம் பற்றிய விளம்பரம், இந்நாடகத்துக்கென்று எழுதப்பட்ட பாடல்கள் மட்டும் தனிப்பிரசுரங்களாக 1931 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டமை ஆகியவையும் இம்முடிவுக்கு வலிமை சேர்க்கின்றன.

இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு நாடகமனது, பிரசார நோக்கத்துக்காகவே எழுதப்பட்டதாகும். அப்பிரசாரம் ஒடுக்குமுறைக்கு உள்ளாகிவந்த இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளரின் விடுதலையை - நலனை மையமிட்டுள்ளது. அதனால் இந்நாடகத்தின் நிகழ்ச்சிகளும் கதை நகர்வும் எடுத்துரைப்பு உத்திகளும் சமூகமாற்றத்துக்கான கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்பயன்படுத்துகை, பிற்காலத்தில் பேசப்பட்ட சமூகமாற்றத்துக்கான அரங்கு, ஒடுக்கப்பட்டோர் அரங்கு முதலானவற்றுடன் ஒத்த அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளன. க. சிதம்பரநாதன் அவர்கள் ஒடுக்கப்பட்டோருக்கான மாற்று அரங்கு - தளைநீக்க அரங்கு குறித்து உரையாடும்போது, "இந்த ஒடுக்குமுறை சமூகத்துள் தாழ்வுச் சிக்கலுக்குட்பட்டு தமது ஆற்றலிலேயே தமக்கு நம்பிக்கையின்றிச் சுருங்கிப் போயிருக்கும் மக்களைத் தாழ்வுச் சிக்கலிலிருந்து விடுவித்து சுயாதீனமான மனிதர்களாக விழிப்படையச் செய்வதற்கான ஒரு அரங்கு தேவை. பரந்துபட்ட மக்கள் தம்மீதான ஒடுக்குமுறை வடிவங்களைப் பற்றி தாமே அறிந்துகொள்ள வேண்டும். தமது அடக்குமுறைக்கு எதிராகத் தாமே குரலெழுப்புதல் வேண்டும். விழிப்பு இன்றி விடுதலை சாத்தியமில்லை. எனவே, மக்கள் தாமாகவே முன்வந்து கலந்துகொள்ளவும் உறவுகொள்ளவும் தம்மை வெளிப்படுத்திக்கொள்ளவும் செயற்படவும் உரிய அரங்காக இது இருக்க வேண்டும்..." (சமூக மாற்றத்துக்கான அரங்கு, 1995: 122) எனக் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய சமூக மாற்றத்துக்கான அரங்கு குறித்த தெளிவுடன் நடேசய்யர் தன் நாடகத்தை எழுதியுள்ளதுடன் அதன் அரங்கக் கூறுகளை அதற்கேற்ப திட்டமிட்டுள்ளதையும் கண்டுகொள்ள முடிகிறது. ஆனால், அந்நாடகம் மேடையேற்றப்பட்டமை குறித்த செய்திகள் கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும் சமூக மாற்றத்துக்கான அரங்க வரலாற்றில் - சமூக மாற்றத்துக்கான நாடக ஆக்க வரலாற்றில் இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம் முன்னோடியானதும் முதன்மையானதுமான முயற்சிகளுள் ஒன்றாக விளங்குகிறது. அந்நாடகத்தைத் தவிர்த்துவிட்டு, தமிழில் சமூக மாற்றத்துக்கான அரங்கு குறித்த உரையாடல்களை முழுமைப்படுத்த முடியாது.



● கார்த்திகேசு இந்திரபாலா

பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

# நூதன உலகின் நுழைவாசலில்

'வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்' எனும் இத்தொடர் 'ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்' பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

**- கார்த்திகேசு இந்திரபாலா-**

## நவீன உலகை அண்மித்தல்

இருபதாம் நூற்றாண்டின் உதயத்தை உலக வரலாற்றில் ஒரு புது யுகம் தொடங்குவதைக் குறிக்கும் நிகழ்வாகக் கொள்ளலாம். மேற்குலகிலும் பிற இடங்களிலும் 19 ஆம் நூற்றாண்டின் தொழிற்புரட்சி எவ்வளவுதான் மாற்றங்களைக் கொண்டுவந்தபோதிலும் அந்த நூற்றாண்டு 1900 இல் முடிவடைந்தபோது, இன்று நாம் நவீன வாழ்வின் அத்தியாவசியப் பொருட்களாகக் கருதும் பல முன்னேற்றமான உபகரணங்கள் புழக்கத்தில் இருக்கவில்லை. இவை 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து துரிதமாகப் பெருந்தொகையான மக்கள் கைகளுக்கு வந்து, அந்த நூற்றாண்டு 2000 இல் முடிவடைந்தபோது, ஒரு புது உலகின் தோற்றத்துக்கு உதவின. வரலாற்றில் அப்படியான நூற்றாண்டு முன்னொருபோதும் இருக்கவில்லை.

உலக நிலை 1901 இல் எப்படி இருந்தது? யாழ்ப்பாணத்தின் நிலை எவ்வாறு காணப்பட்டது? இன்று பொதுப்பயன்பாட்டில் உள்ள எத்தனையோ பொருட்களும் பொதுவசதிகளும் அன்று இருக்கவில்லை. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் விரைவாக ஏற்பட, அவை பற்றிய அறிவும், அவற்றின் விளைவாக உற்பத்தியாக்கப்பட்ட பொருட்களும் ஒரு சில ஆண்டுகளுள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்து நவீன உலகைக் காண உதவின.

## போக்குவரத்து

யாழ்ப்பாணம் வெளியுலகுடன் தொடர்புகொண்டு மாற்றமடையப் பெரிதும் உதவிய முன்னேற்றம் போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்ட மேம்பாடாகும். இது தொடர்பாக 19 ஆம் நூற்றாண்டில் இருந்தநிலை அதற்குமுன் பலகாலமாக இருந்த நிலையே.

உள்ளூர்ப் போக்குவரத்து 19 ஆம் நூற்றாண்டில் பெரும்பாலும் கால்நடையாகவே இருந்தது. வசதியுடையோர் மாட்டு வண்டியைப் பயன்படுத்தினர். செல்வந்தரும் ஐரோப்பிய அதிகாரிகளும் குதிரை, குதிரை வண்டி, பல்லக்கு ஆகியவற்றைப் பயன்படுத்தினர். யாழ்ப்பாணத்துக்கு வெளியே தமிழ்நாட்டுக்கு அல்லது கொழும்புக்குச் செல்லப் பொதுவாகச் சிறு பாய்க்கப்பல் அல்லது தோணி பயன்பட்டது. சில சந்தர்ப்பங்களில் கொழும்புக்குப் பல்லக்கில் சென்றனர். போக்குவரத்து 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எப்படி இருந்தது என்பதை விளங்கிக்கொள்ள யாழ்ப்பாணத்துக்கு வந்த முதலாவது அமெரிக்கரின் அனுபவங்கள் உதவுகின்றன. யாழ்ப்பாணத்துக்கு வந்த முதலாவது அமெரிக்கர் சாமுவெல் நியூவெல் (Samuel Newell) என்பவராவார். இவர் 1813 ஒகஸ்ட் 28 இல் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்லப் புறப்பட்டார். முதலில் சென்னையை நோக்கிச் சென்ற பாய்க்கப்பல் ஒன்றில் ஏறி இராமேஸ்வரத்துக்குப் போய், அங்கிருந்து இன்னொரு கப்பலில் பயணித்து செப்டம்பர் 7 இல் யாழ்ப்பாணத்தை அடைந்தார். சில வாரங்களின்பின் யாழ்ப்பாணத்தில் இருந்து காலியை நோக்கிப் பயணிப்பதற்குத் தரைவழியாகப் பல்லக்கில் செல்ல விரும்பினார். ஒக்டோபர் 22 இல் அவருடைய பயணம் தொடங்கியது. பல்லக்கை மாறிமாறித் தூக்கிச் செல்ல 12 பேரும் பொருள்மூட்டையைச் சுமந்து செல்ல இருவரும் இருந்தனர். காட்டுவழியாகப் பெரும்பாலும் இரவுப் பொழுதில் தீவட்டிகளுடன் பயணித்தனர். இவர்கள் கொழும்பு வழியாக நவம்பர் 3 இல் காலியை அடைந்தனர். மேலும் அதிசயிக்க வைக்கும் நிகழ்வு என்னவெனில், காலியில் நியூவெல் பல்லக்குக் கூட்டத்தினரைத் திருப்பி அனுப்பிவிட்டு, கால்நடையாகக் கொழும்புக்குத் திரும்பிச் சென்றார் (130 கிலோமீட்டர்/ 80 மைல்)!

யாழ்ப்பாணத்துக்கு வந்த இரண்டாவது அமெரிக்கர் எட்வேட் உவறென் (Edward Warren). இவர் கொழும்பில் இருந்து 1816 ஜூலை 1 இல் பல்லக்கில் புறப்பட்டு ஜூலை 11 இல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். அவருடன் அமெரிக்காவில் இருந்து வந்த புவர் தம்பதிகள் (Rev. and Mrs. Daniel Poor) கொழும்பில் இருந்து கப்பலில் கற்பிட்டி வழியாக யாழ்ப்பாணம் சென்றனர். இவர்களுடன் வந்த மற்ற இரு அமெரிக்க மிஷனரிமார் (Richards and Meigs) கொழும்பில் இருந்து நேராகக் கப்பலில் யாழ்ப்பாணம் சென்றனர்.

இந்தநிலைமை யாழ்ப்பாணத்தில் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை மாறவில்லை எனலாம். அக்கட்டத்தில் மேற்குலகில் போக்குவரத்துச் சாதனங்களைப் பொறுத்துப் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. முதலில், மிருகங்களின் உதவி இல்லாது ஓடும் வண்டியாக ரயில் வண்டி என வழங்கும் தொடர்வண்டி தொழிற்புரட்சியின்போது உருவாக்கப்பட்டது. பின்னர், 1885 அளவில் 'சைக்கிள்' வண்டி செம்மைப்படுத்தப்பட்டு, 1990 அளவில்

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பொதுப்பயன்பாட்டுக்கு வந்தது. அதேகாலமளவில் 'மோட்டார்' வண்டியும் உருவாக்கப்பட்டு மேலும் செம்மையாக்கப்படும் நிலையை அடைந்தது.

இப்புரட்சிகர மாற்றங்கள் வெகுவிரைவில் இலங்கைக்கும் வந்தன. ரயில் வண்டி 1864 இல் கொழும்பில் இருந்து மலையகத்தை நோக்கி ஓடத்தொடங்கியது. இதன்பின் ஜப்பானில் உருவாக்கப்பட்ட ஒரு புது வண்டி, நூற்றாண்டின் இறுதி அளவில் அறிமுகமாக்கப்பட்டது. அது தான் ரிக்ஷா (Rickshaw) வண்டி. இதன்பின், 1896 இல், சைக்கிள் வண்டியும் அறிமுகமாக்கப்பட்டது.

புதிய நூற்றாண்டு உதயமாகியபோது, அதாவது 1901 இல், உலகின் மிகப்பெரிய நகராக விளங்கிய லண்டனின் வீதிகளில் பெருமளவில் குதிரை வண்டிகளும் குதிரைகளுமே காணப்பட்டன. உலகின் பிற பெருநகரங்களிலும் இதே நிலைமைதான் காணப்பட்டது. கொழும்பில் குதிரை வண்டிகளுடன், மாட்டு வண்டிகள், சைக்கிள், ரிக்ஷா ஆகியவையும் காணப்பட்டன. 1902 இல் நீராவியால் இயக்கப்பட்ட ஒரு வண்டி அறிமுகமாக்கப்பட்டது. விரைவில், 1905 இல், பெற்றோல் மூலம் இயங்கிய முதலாவது மோட்டார் வண்டி கொழும்புக்கு வந்தது. நாட்டின் சில பாகங்களுக்கு ரயில் வண்டியும் கொழும்பில் இருந்து சென்றுவந்தது.

யாழ்ப்பாணத்தில் 1901 இல் பெருமளவில் மாட்டுவண்டிகளே பயன்பாட்டில் இருந்தன. நகரப்புறத்தில் சில குதிரைவண்டிகள், குதிரைகள், ரிக்ஷா ஆகியவையும் காணப்பட்டன. யாழ்ப்பாணம் முதல் தடவையாக ஒரு மோட்டார் வண்டியைக் கண்டது 1905 இல் ஆகும். அந்த ஆண்டு ஏப்ரல் 23 இல் நுவரெலியாவில் இருந்து சில ஐரோப்பியர் ஒரு மோட்டார் வண்டியை ஓட்டிகொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்தனர் என அறியக்கிடக்கின்றது. அதே ஆண்டு ஒகஸ்ட் 1 இல் கொழும்புடன் யாழ்ப்பாணத்தை இணைக்கும் ரயில் பாதையும் திறக்கப்பட்டது. இதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் ரயில் வண்டி யாழ்ப்பாணத்துக்கு அறிமுகமாகி இருந்தது. காங்கேசந்துறையில் இருந்து சாவகச்சேரி வரை ஓடும் ரயில் சேவை 1902 இல் தொடக்கப்பட்டது.

## பிற நவீன சாதனங்கள்

இவ்வாறு முன்னேற்றமான போக்குவரத்து வசதிகள் யாழ்ப்பாணத்தை மேம்படுத்தி, வெளியிலிருந்து செல்வாக்கு விரைவாகவும் இலகுவாகவும் பரவுவதற்கு வழிவகுக்க, மேற்குலகத் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஒன்றன்பின் ஒன்றாக யாழ்ப்பாணத்தை வந்தடையத் தொடங்கின. ஆனால் இவை பொதுமக்கள் வாழ்க்கையில் மாற்றங்களைக் கொண்டுவர நீண்டகாலம் எடுத்தன.

புதிய நூற்றாண்டு தொடங்கியபோது உலகின் பல பாகங்களில் நவீனமயமாக்கத்தின் ஒரு முக்கிய அறிகுறியாக விளங்கியது மின்சக்தியின் பயன்பாடாகும். மின்சக்தியை ஒளி உற்பத்திக்குப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் விளைவாக, 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலில் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பெருநகரங்களின் முக்கிய வீதிகளுக்கு விளக்கேற்ற மின்சக்தி பயன்படத் தொடங்கியது. எனினும் 1901 இல் மிகவும் சிறிய அளவிலேதான் நியூயோர்க், லண்டன் போன்ற நகரங்களிலேகூட வீடுகளுக்கு ஒளி கொடுக்க மின்சக்தியைப் பயன்படுத்த முடிந்தது.

இலங்கையில் மின்சக்தியின் பயன்பாடு மெதுவாகவே இடம்பெற்றது. கொழும்பு புறக்கோட்டையில் 1902 இல் ஒரு மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டது. அதைத் தொடர்ந்து படிப்படியாக மின்சக்தியின் பயன்பாடு வளரத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தில் மின்சக்தி பரவலாகப் பொதுமக்கள் வாழ்க்கையில் இடம்பெற நீண்டகாலம் எடுத்தது. சில தனியார் இடங்களிலும், வணிகத்தலங்களிலும் (தற்காலிகப் படக்காட்சிக் கொட்டகை போன்றவை), சில கல்லூரிகளிலும் மின்சக்தி உற்பத்தி இயந்திரங்கள் (Generators) சில மணி நேரத்துக்குப் பயன்பாட்டுக்கு வந்தன. யாழ்ப்பாணக் கல்லூரியில், எடுத்துக்காட்டாக, 1930களில் இரவு நேரத்தில் விடுதிச்சாலைகள், நூலகம், வகுப்பறைகள், ஆசிரியர் இல்லங்கள் ஆகியவற்றுக்கு மின்சக்தி வழங்கத் தொடங்கியிருந்தனர்.

நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு முக்கிய தொழில்நுட்ப ஆக்கம், ஓடும்படம் (Movies). முதலில் மௌனப்படமாக இருந்து, 1927 இல் இருந்துதான் பேசும்படம் தயாரிக்கப்பட்டது. இலங்கையில் 1901 இல் ஓடும்படம் அறிமுகமாகியது. கொழும்பில் 1903 இல் ஒரு கொட்டகையில் முதலாவது படம் காட்டப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் அதிக தாமதம் இன்றி இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மௌனப்படங்கள் காட்டப்பட்டிருக்கலாம். 'நளதமயந்தி' (1921) போன்ற படங்கள் யாழ்ப்பாணத்தில் காட்டுவதற்குப்

பொருத்தமானவையாக இருந்திருக்கும். பேசும்படம் அறிமுகமாகியபின் 1931 இல் முதலாவது தமிழ்ப்படம் (காளிதாஸ்) வெளிவந்தது.

இன்னொரு முக்கியமான 20 ஆம் நூற்றாண்டுத் தொழில்நுட்ப ஆக்கம் வானொலி ஆகும். முதலாவது வானொலி ஒலிபரப்பு ஒல்லாந்தில் 1919 இலும், அமெரிக்காவில் 1920 இலும் நடந்தது. உலகப் பிரசித்திபெற்ற 'British Broadcasting Corporation' (BBC) தனது முதல் ஒலிபரப்பை 1922 இல் நடத்தியது. கொழும்பில் 1923 இல் ஒரு பரிசோதனை நடத்தப்பட்டபின், 1925 இல் கொழும்பு வானொலி (Colombo Radio) ஒலிபரப்பைத் தொடங்கியது. எனினும் வானொலி யாழ்ப்பாணத்தில் செல்வாக்குச் செலுத்தப் பல ஆண்டுகள் சென்றன.

## ஒலிப்பதிவுத் தட்டுக்களும் 'பாட்டுப் பெட்டியும்'

யாழ்ப்பாணத்தை, இலங்கையின் பிற பாகங்களுடன், நவீன உலகுக்கு அழைத்துச் சென்ற விசித்திரமான தொழில்நுட்பப் படைப்புக்களுள் முதன்மையானது 'கிராமபோன்' (Gramophone) எனப் பெயர்பெறும் சாதனமாகும். இது ஒலிப்பதிவினை மீண்டும் அதே ஒலியாக வெளிப்படுத்தி உயிர்பெறச்செய்த புதுமையான இயந்திரம் ஆகும். பிரபல அமெரிக்க ஆக்கத்திறனாளி தோமஸ் அல்வா எடிஸன் (Thomas Alva Edison) 1877 இல் ஒலியை ஒரு தட்டில் பதிவு செய்து அதனை மீண்டும் வெளிப்படுத்துவதில் வெற்றிகொண்டதன் விளைவாகப் பிற தொழில்நுட்பவியலாளர்கள் முயன்று 'கிராமபோன்' சாதனத்தை உருவாக்கினர்.

தொலைபேசியும் திரைப்படமும் இலங்கை மக்களை வந்தடையுமுன் இந்த ஒலிப்பதிவு இயந்திரமாகிய 'பாட்டுப் பெட்டி' பலரை அதிசயிக்க வைத்துப் பாட்டுக் கேட்டு இன்புற உதவிய கருவியாக அமைந்தது. அமெரிக்காவில் ஆக்கப்பட்டு ஒரு சில ஆண்டுகளில், 1900 இல், 'கிராமபோன்' கொழும்பை வந்தடைந்தது. சிங்களப் பாடல்கள் 1903 இல் இசைத்தட்டுகளில் பதிவுசெய்யப்படத் தொடங்கின.

'கிராமபோன்' பெட்டியின் வருகை, தென்னிந்தியா - இலங்கை நிலப்பகுதியில் சமூகத்திலும் பண்பாட்டிலும் ஒரு புதிய காலப்பகுதியின் தொடக்கத்தைக் குறித்து நிற்கின்றது. சுருங்கக்கூறின், இது ஒரு புதிய 'பொதுமக்கள் பண்பாட்டை' (Mass culture) தோற்றுவித்தது. இப்பண்பாடு பின்னர் திரைப்படத்தின் வருகையோடு தமிழ்நாட்டை மூழ்கடித்து, அரசியலில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியது. இந்த வரலாற்றுப் போக்கில் யாழ்ப்பாணம் ஒரு தனித்துவமான வகையில் செல்லாது, தமிழ்நாட்டுப் பொதுமக்கள் பண்பாட்டையே ஏற்றுக்கொண்டது. இலங்கையின் தென்பாகத்தில் 'கிராமபோன்' வேறொரு முக்கிய வகையில் பயன்பட்டது. அங்கு, பௌத்த தலைவர் அநகாரிக தர்மபால மாட்டுவண்டியில் 'கிராமபோன்' பெட்டியை ஏற்றி, நாட்டுப்புறத்துக்குச் சென்று, இரவிரவாக ஊர்மக்களுக்குப் பௌத்தமதப் பிரசாரம் செய்ய இப்புதிய கருவியைப் பயன்படுத்தினார்.

புதிய பொதுமக்கள் பண்பாட்டின் தோற்றத்தை விளங்கிக்கொள்ள 19 ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இசைத்துறை எப்படி இருந்தது என்பதை அறிவது உதவும். பாரம்பரியமாகப் பேணப்பட்டுவந்த கர்நாடக இசை உயர்வர்க்கத்தினர் ரசித்துவந்த கலையாக விளங்கியது. பொதுமக்கள் அதில் ஈடுபடாது, பாமரர் இசையை ரசித்தனர். இசை வித்துவான்கள் தங்கள் இசைக்கருவிகளுடன் பல்நிறக் கோலங்களைக்கொண்ட பசும் கம்பளங்களில் உட்கார்ந்து பலமணி நேரம் பாடியும் இசைக்கருவி வாசித்தும் மகாராஜாக்களை (மைசூர் மகாராஜா, தஞ்சாவூர் நாயக்கர்) மகிழ்வித்த காலம் 'கிராமபோன்' வருகையுடன் மாறியது.

மன்னர்கள் மட்டுமல்ல, வசதிபடைத்த உயர்வர்க்கத்தினரும் தங்கள் பெரும் இல்லங்களின் இருக்கை அறைகளில் அழகாக அலங்கரித்து வைக்கப்பட்ட இசைப்பெட்டியில் இருந்து பரவும் இன்னிசையைக் கேட்டனர். வேண்டிய நேரம் இசையை ரசிப்பதற்கு உதவும் இப்புதிய வசதியை வலியுறுத்தும் வகையில், பிரபல இசைக்கலைஞர்களை வீட்டுக்குள் அழைத்து அவர்கள் பாட்டைக் கேட்டுச் சுவைக்கலாம் என்ற கருத்தைக் 'கிராமபோன்' விளம்பரங்கள் வெளிப்படுத்தின. அதுமட்டுமன்றி, மீண்டும் மீண்டும் விரும்பிய பாடலைக் கேட்டு ரசிக்க 'கிராமபோன்' உதவுகின்றது என்பது விளம்பரங்களில் அழுத்தப்பட்டது.

அமெரிக்காவின் 'Gramophone Company' இந்தியச் சந்தையைத் தன்வசமாக்கும் நோக்குடன் 1901 இல் கொல்கத்தாவில் ஒரு கிளையை நிறுவியது. இந்த நிறுவனம் தயாரித்த இசைத் தட்டுகளின் வணிகப் பெயர் (Brand name) His Master's Voice (HMV) என்ற பிரசித்தி பெற்ற பெயராகும். HMV தமிழ் இசைத் தட்டுகள் 1905 இல் வெளிவரத் தொடங்கின. Gramophone Company, 1911 அளவில் குறிப்பிடத்தக்க அளவு தமிழ் இசைத்தட்டுகளை

வெளியிட்டிருந்தது. இவற்றின் பொருள் பெரும்பாலும் கர்நாடக இசையே. மரபுவழியாகப் போற்றப்பட்ட தேவாரம், திருப்புகழ், தாயுமானவர் பாடல்கள் ஆகியவையும் காவடிச் சிந்து, கும்மி போன்ற நாட்டார் பாடல்களும் அரிச்சந்திர நாடகம், இராமாயண நாடகம் ஆகியவற்றில் இருந்து பாடல்களும் நகைச்சுவைப் பாடல்களும் (இவை வேடிக்கைப் பாட்டு எனப்பட்டன) இவற்றுள் அடங்கின. அத்துடன், நாதஸ்வரம், ஜலதரங்கம், புல்லாங்குழல், ஆர்மோனியம், வயலின் ஆகிய கருவிகளின் இசையும் தட்டுகளில் வந்தன. இத்தொடக்க காலத்தில் 'கிராமபோன்' ஓரளவு விலையுயர்ந்ததாக இருந்தது. இதனால் நடுத்தர வகுப்பினரே இதனை நுகர்வோராக இருந்தனர்.

ஆனால் மேலும் பல வணிகக் குழுக்கள் (மலிவான பொருட்களை உற்பத்திசெய்த ஜப்பானியர் உட்பட) 'கிராமபோன்' உற்பத்தியில் ஈடுபட, விலையும் குறையத் தொடங்கியது. இதனால் 1920களில் 'கிராமபோனின்' விலை முன் இருந்த விலையின் அரைவாசிக்குக் கீழ் வீழ்ந்தது.

தமிழ்நாட்டில் பொதுமக்கள் பண்பாடு என்று வர்ணிக்கத்தக்க, கற்றோரும் கல்லாதோரும் ரசிக்கும் இசை, நடனம், நாடகம் ஆகியவற்றின் உதயம் 'கிராமபோனின்' வருகையுடன் தொடங்கியது. முதல் தடவையாக, இசைக்கலைஞர்கள் பொதுமக்கள் போற்றும் 'நட்சத்திரங்கள்' ஆகினர். இந்தப் போக்குத் திரைப்படம் வந்த பின் மேலும் வலுப்பெற்றுத் தமிழ்நாட்டின் அரசியலில் மிகுந்த தாக்கத்தை உண்டுபண்ணும் அளவுக்கு வளர்ந்தது. இந்த வளர்ச்சி இசைத்தட்டுகள் மூலமாக மட்டுமன்றி அச்சு ஊடகம் (Print media) மூலமாகவும் ஏற்பட்டது.

இசைத்தட்டுகளின் பாட்டுகள் சிறு நூல்களாக அச்சிடப்பட்டு மலிவாக விற்கப்பட்டன (பின்னர் திரைப்படப் பாட்டுகளும் இவ்வாறு அச்சிடப்பட்டன). இதனால் பொதுமக்களிடையே பிள்ளைகளும் இளைஞர்களும் பாடல்களை மனப்பாடம் செய்து பாட முடிந்தது. சுதேசமித்திரன் போன்ற நாளிதழ்களிலும் ஆனந்தவிகடன் போன்ற சஞ்சிகைகளிலும் புதிதாக வெளியிடப்படும் பாடல்கள் பற்றி விமர்சனங்கள் எழுதப்பட்டன. பிற்காலத்தில் பிரபல ஊடக எழுத்தாளராக விளங்கிய 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி 1930 இல் ஆனந்தவிகடனுக்கு இப்படியான பாட்டு விமர்சனங்களை எழுதித் தன் ஊடக எழுத்தாளர் வாழ்க்கையைத் தொடங்கியிருந்தார். இவை எல்லாம் 'கிராமபோன்' ஊக்குவித்த பொதுமக்கள் பண்பாட்டை வளர்க்க உதவின.

இவ்வாறு தமிழ்நாட்டில் 'கிராமபோன்' தோற்றுவித்த பொதுமக்கள் பண்பாடு யாழ்ப்பாணத்துக்கும் பரவியது. இதற்கு, யாழ்ப்பாணத்துக்கு வந்துசென்ற தமிழ்நாட்டு நாடகக்கலைஞர்கள் சிலர் உதவினர். இவர்களுள் இருவர் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

தமிழ்நாட்டு நாடகக்குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து நாடகங்களை மேடையேற்றிச் செல்லும் வழக்கம் நீண்டகாலமாக இருந்து வந்தது. அப்படியாக 1920களில் யாழ்ப்பாணத்துக்கு வந்த இரு பிரபல நடிகர்கள் பின்னர் 'கிராமபோன்' இசைத்தட்டு நட்சத்திரங்கள் ஆகினர். ஒருவர் கே.பி. சுந்தராம்பாள் (1917 இல் இருந்து பல ஆண்டுகள் இலங்கையில் வசித்தவர்; பிற்காலத்தில் 'ஔவையார்' போன்ற படங்களின் நடிகர்); மற்றவர் எஸ்.ஜி. கிட்டப்பா. இவர்கள் வெவ்வேறு நாடகக்குழுக்களைச் சேர்ந்தோராய், யாழ்ப்பாணத்தின் ஊர்களில் நடித்துப் புகழ் பெற்றிருந்தனர். இது பற்றி என் தந்தையார் பலமுறை எனக்குக் கூறியுள்ளார்.

இசைத்தட்டுத் தயாரிப்பாளர்கள் புகழ்பெற்ற சிறந்த பாடகர்களை அணுகியபோது, 'கிராமபோன்' என்ற விசித்திர சாதனத்துக்காகப் பாடுவதற்கு அவர்கள் தயங்கினர். அத்தகைய சூழலில், சிறந்த கலைஞர்களாகப் புகழ்பெற்றிருந்த நாடக நட்சத்திரங்களையும் இசை வளர்த்த தேவரடியார் (தேவதாசி) குடும்பங்களைச் சேர்ந்தோரையும் அழைத்துப் பாடவைப்பதில் அவர்கள் வெற்றிகண்டனர். இச்சூழ்நிலையில் சுந்தராம்பாளும் கிட்டப்பாவும் இசைத்தட்டுப் பாடகர்கள் ஆகுவதற்கு வாய்ப்பைப் பெற்றனர். விரைவில் இவர்கள் நட்சத்திரங்கள் ஆகினர். தமிழ்நாட்டைப் போல் யாழ்ப்பாணத்திலும் இவர்களுடைய இசைத்தட்டுப் பாடல்கள் பொதுமக்கள் விரும்பி ரசித்தவையாக இருந்திருக்கும் என நினைக்கின்றேன்.

இவ்வாறு தொடங்கிய பொதுமக்கள் பண்பாடு பின்னர் ஒலிபெருக்கி (Loudspeaker) பொதுப்பயன்பாட்டுக்கு வந்ததும், கோயில்களிலும் திருமண வீடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் இசைத்தட்டுப் பாடல்களை ஊர்மக்கள் அனைவரும் கேட்கும் நிலைக்குக் கொண்டுவந்தது. பொதுமக்கள் பண்பாடு தோன்றுவதற்குப் 'கிராமபோன்' பெரிதும் உதவியது.



● எஸ்.கே. விக்னேஸ்வரன்

எஸ்.கே. விக்னேஸ்வரன், எழுபதுகளின் பிற்கூறுகளில் சிறுகதை எழுத்தாளராக ஈழத்தின் எழுத்துத்துறைக்குள் அறிமுகமானவர். வடமராட்சியிலுள்ள அம்பன் கிராமத்தைச் சேர்ந்த இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதுடன் மட்டுமன்றி, இலக்கியம், அரசியல் சார்ந்த கட்டுரைகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் வரும் முக்கியமான எழுத்துகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். தொண்ணூறுகளில் கொழும்பிலிருந்து வெளியான ‘சரிநிகர்’ வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் கனடாவில் வெளியான ‘தீபம்’ வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்தவர். சரிநிகரில் தொடராக வெளிவந்த அவரது மொழிபெயர்ப்பு நூலான ‘குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே’ என்ற பெற்றோருக்கான வழிகாட்டிநூல் இன்றுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இப்போது தாய்வீடு இதழில் அவரது ‘பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே’ என்ற இன்னொரு மொழிபெயர்ப்பு நூல் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே சரிநிகரில் வெளிவந்து பாதியில் நின்றுபோன மொழிபெயர்ப்பு நூலான, ‘தலைமறைவு வாழ்க்கை’ என்ற, மறைந்த மதிப்புக்குரிய றெஜி சிறிவர்த்தன அவர்களது நூல், அண்மையில் வெளியாகியுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (MBA) பட்டம்பெற்ற இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்

# ஒற்றையாட்சி அரசின் தோற்றம்

## 1

பேராசிரியர் ஏ.ஜே வில்சன் அவர்கள் (1928 – 2000) உலகறிந்தத அரசியல், பொருளாதார, வரலாற்று அறிஞர்; எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் மருகர். பட்டப்படிப்பின் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்த வில்சன் அவர்கள், அங்கு அரசியல் விஞ்ஞானத்துறையை ஆரம்பித்து, பேராசிரியராகக் கடமையாற்றினார்; பல்வேறு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பணியாற்றினார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களில் ஒன்றுதான் ‘The Breakup of Sri Lanka: The Sinhalese – Tamil Conflict’ எனும் நூல். இலங்கையின் அரசியல் வரலாற்றின் பல முக்கியமான பக்கங்களை விரிவாகப் பேசும் இந்த நூல், அரசியற் செயற்பாட்டாளர்களுக்கும் அரசியல் வரலாற்றாளர்களுக்கும் ஒரு கைநூலாகக் கொள்ளுமளவுக்கான முக்கியமான விவரங்களைத் தருவதாகவும், இலங்கை இனப்பிரச்சினையின் தீவிரத்தன்மைக்கான அடிப்படைக்காரணிகளைத் தெளிவாக, வரலாற்றுரீதியாக விவரிப்பதாகவும் அமைகின்றது. இந்த நூல் ‘உடைவுண்ட சிறீலங்கா: தமிழ் – சிங்களப் பிளவு’ எனும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு எழுநாவில் தொடராக வெளிவருகிறது.

இலங்கை பிரித்தானியாவினதும் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பெனியினதுமான இரட்டைக் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி 1802 ஆம் ஆண்டில், முதலாவது பிரித்தானிய முடிக்குரிய காலனியாக மாறியது. அந்த ஆண்டு, ஜனவரி முதலாம் திகதி ஃபிரடெரிக் நோர்த் ஆளுநராகப் பதவியேற்றார். காலனிகளுக்கான வெளியுறவுச் செயலாளர் ஹென்றி டன்டாஸ் - அவருக்கு வழங்கப்பட்ட பிற அதிகாரங்களுடன் மேலாக - சர்ச்சைக்குரிய விஷயங்களில் அவருக்கு ஆலோசனை வழங்கும் ஆலோசகர்கள் குழுவொன்றை நிறுவுமாறு அறிவுறுத்தினார். ஆளுநரின் சட்டமன்ற அதிகாரங்கள் தேவையான சில விதிகளுக்கு உட்பட்டு அப்படியே இருந்தன. வெளியுறவுச் செயலாளர் 1801 மார்ச் 13 அன்று ஆளுநருக்கு அனுப்பிய தனது அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கிறார்:

"அதிக மதிப்புக்காகவும், சிலவேளைகளில் நாட்டில் அதிகளவான திருப்தியை அளிப்பதற்காகவும்..... அனைத்துப் பெரிய முக்கியமான நிகழ்வுகளிலும் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். கூடவே இந்த விளக்கத்தின் அனைத்துச் சட்டங்களும் நடவடிக்கைகளும் பிரகடனப்படுத்தப்படுவதற்கும், அவற்றைச் செயற்படுத்துவதற்கும் ஏதேனும் ஒரு வடிவம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதன்மூலம் அவை கவுன்சிலில் ஆளுநரால் நிறைவேற்றப்பட்டன அல்லது உத்தரவிடப்பட்டன என்பது புரிந்துகொள்ளப்படும்".

இருப்பினும், "முழுமையான சட்டமன்ற அதிகாரமும் ஆளுநரிடம் மட்டுமே இருக்கவேண்டும்" என்றும், "அதேவேளை உள்நாட்டில் கொண்டுவரப்படும் திருத்தம், ஆட்சிமையத்தின் (அதாவது இங்கிலாந்தின்) உறுதிப்படுத்தல் அல்லது நிராகரிப்புக்கு உட்பட்டது" என்றும் வெளியுறவுத்துறைச் செயலாளர் கவனமாகச் சுட்டிக்காட்டினார். ஆளுநர் தனது ஐந்து ஆலோசகர்களைக்கொண்ட குழுவில் வாக்கெடுப்புக்கான கேள்விகளை வைக்கவோ அல்லது அவர்களின் ஆலோசனையின்படி செயற்படவோ தேவையில்லை; உடன்படாத எந்த உறுப்பினரும் ஒரு நிமிடம்கூட எத்தகைய கருத்து வேறுபாடும் கொள்ளமுடியாது. இதனால் ஆலோசகர்கள் குழு ஓர் ஆலோசனை அமைப்பாக மட்டுமே செயற்பட்டதுடன் ஆளுநருடன் சட்டமன்ற அல்லது நிர்வாக அதிகாரத்தைக் குறைந்தபட்ச அளவுக்குக்கூடப் பகிர்ந்துகொள்ள முடியவில்லை.

இந்த நேரத்தில் சில சொற்றொடர்களிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இது ஆளுநரின் முடிவுகளுக்கு மறைமுகமாக அதிகவலுவைக் கொடுப்பதாக அமைந்திருந்தது. முந்தைய ஆட்சியின்கீழ் - அதாவது பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம், பிரிட்டிஷ் அரசாங்கம் என்பவற்றின் இரட்டைக் கட்டுப்பாட்டுடன் இராணுவ ஆட்சி இருந்தபோது - ஆளுநரின் உத்தரவுகள், 'பிரகடனங்கள்' (ஒரே ஒரு அதிகாரத்திலிருந்து வெளிப்படும் அறிவித்தல்கள்) என வெளியிடப்பட்டன, ஆனால் முடிக்குரிய காலனி அந்தஸ்தின் வருகையோடு அரசியலமைப்புச் சொற்கள் மாற்றப்பட்டன. ஆளுநரின் முடிவுகள் 'ஒழுங்குமுறைகள், கவுன்சிலின் ஆணைப்படி' என்றும் 'அவரது மேன்மை தங்கிய கட்டளைப்படி' என்றும் வெளியிடப்பட்டன. ஆனால், இந்த மாற்றம் ஏற்பட்டபோதிலும், சட்டரீதியானதும் அரசியலமைப்பு ரீதியானதுமான நிலைப்பாடு வேறுபட்டதாக இருக்கவில்லை: "இலங்கை ஆளுநர் இன்னமும் அதன் சட்டமன்ற உறுப்பினராகவே இருந்தார். ஆயினும், சட்டமன்ற அதிகாரம் பொதுவாக அரசாங்கச் சபையிலுள்ள ஆளுனராலேயே நடைமுறைப்படுத்தப்பட்டது. இது ஒரு வகையான காலனித்துவ 'பிரிவி கவுன்சில்' (தனியுரிமை சபை). எனவே, அனைத்து மைய அதிகாரங்களும் தலைமை நிர்வாகியான இலங்கை ஆளுநரின் கைகளில் குவிந்திருந்தன என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. 1823 இல் ஆளுநர் பார்ன்ஸ் (Barnes) வரையான காலம்வரை பின்பற்றப்பட்ட இந்தக்கொள்கை அனைத்து ஆளுநர்களுக்கும் ஒரே மாதிரியாகவே இருந்தது.

1805 இல், நோர்த் (Frederic North) இற்கு அடுத்ததாகப் பதவிக்கு வந்த தோமஸ் மெயிற்லாண்டின் (Maitland) நியமனம், தனியொரு அதிகாரியின் கைகளில் மேலும் அதிகாரத்தைக் குவிப்பதாக அமைந்தது. காலனித்துவ அலுவலகம் மெயிற்லாண்டை துருப்புகளுக்கான கட்டளைத் தளபதியாகவும், இலங்கையின் ஆளுநராகவும், இலங்கைக்கான தலைமைத் தளபதியாகவும் நியமித்தது. நோர்த்

இந்த அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை (அது ஜெனரல் டேவிட் டக்ளஸ் வேமிஸிடம் (Dougla Wemyss) இருந்தது). அவர், தான் கஜானாவின் (அல்லது கருவூலம் - Treasury) காசாளர் பதவிக்குக் குறைக்கப்பட்டதாக புகார் கூறியிருந்தார். இது எதிர்காலத்தில் வந்த ஆளுநர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. காலனித்துவ அலுவலகத்திடமிருந்து மெயிற்லாண்டிற்கு சிறிய தலையீடு இருந்தது; உள்நாட்டில் காலனிகளுக்கான வெளியுறவுச் செயலாளர் பதவி, யுத்த முயற்சிகளுடன் இணைக்கப்பட்டது. இதன்விளைவாக நெப்போலியனுடன் போரை நடத்துவதில் வெளியுறவுச் செயலாளரின் முயற்சிகள் குவிந்தன. தவிரவும், ஆளுநருக்கு ஆலோசனை வழங்க, உள்ளூர் விவகாரங்கள் தொடர்பான போதுமான அறிவு, வெளியுறவுச் செயலாளருக்கு இருக்கவில்லை. துணைச் செயலாளரான எட்வர்ட் குக், காலனித்துவ அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பெரும்பாலான விஷயங்களில் எந்த தீர்ப்புகளையும் உருவாக்க முடியாது என்றும், ஆளுநர் மெயிற்லாண்ட் சரியானவர் என்று தான் நம்புவதாகவும் ஒப்புக்கொண்டார். இந்தக்கட்டத்தில், விஷயங்களை மேலும் சிக்கலாக்கும் வகையில், செயலாளர் பதவி குறுகிய இடைவெளியில் கைமாறியது.

கவர்னர் மெயிற்லாண்ட் தனது கைகளில் அதிகாரக் குவிப்பை மேலும் அதிகரித்தார். அவர் தீவின் பிரமாண்டமான ஆளுநர் சுற்றுப்பயண முறையைத் தொடங்கினார். அங்கு அவர் தனக்காக விஷயங்களைக் கற்றுக்கொண்டார்; மனுக்களைப் பெற்றார். கூடவே வெளிப்பகுதிகளில் உள்ள விவகாரங்களின் உண்மையான நிலை குறித்த தகவல்களையும் திரட்டிக்கொண்டார். அரசாங்க முகவர்களை மக்களின் உண்மையான பிரதிநிதிகளாகக் கருதுகின்ற நடைமுறை மெயிற்லாண்டால் தொடங்கப்பட்டது. 1808 - 9 ஆம் ஆண்டில், ஆளுநர்கள் (பிற்கால அரசாங்க அதிபர்கள்) தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்டங்களில் வசிப்பவர்களின் தேவைகளைப் பற்றி அறிந்துகொள்ளவும், வழக்கமான நேரங்களில் சுற்றுகளை மேற்கொள்ளவும், அவர்கள் கவனித்தவற்றை அல்லது அவர்களின் பயணங்களின்போது அவர்கள் பெற்ற எந்த உளவுத்தகவல்களையும் பதிவு செய்யும்படி கேட்டு உத்தரவுகளையும் வழிகாட்டல்களையும் பிறப்பித்தார். இந்தப் பதிவுகளும் உத்தரவுகளும் 'ஆளுனர்கட்கான சிறந்த வழிகாட்டிகள்' என்று அழைக்கப்பட்டன. இவ்வாறாக, மையப்படுத்தல் என்பது காலனித்துவ அரசாங்கத்தின் நோக்கமாகவே மாறும்போக்கு அதிகரித்து வந்தது.

1815 இல் நடந்த கண்டி இராச்சியத்தின் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், 1831 வரை பிரச்சினைகளைத் தீர்க்காமல் விட்டுவைத்திருந்தது. ஆளுநர் கண்டிப்பகுதிகளை கண்டிய சட்டத்தின்படி, தேவையான மாற்றங்களுடன் ஆட்சி செய்தார். ஆட்சி, 'சட்ட விதிமுறைகள்' மூலமாகச் செய்யப்பட்டதாக அல்லாமல், 'சபையின் ஆணை' மூலமாகப் 'பிரகடனம்' செய்யப்படுவதன் மூலமாக நடந்தது. இருப்பினும், 1831 இல் ஆளுநர் றொபேரட் வில்மோட் ஹோர்ட்டனுக்கு (Sir. Robert Wilmot Horton) ஒரு கமிஷன் வழங்கப்பட்டது. இந்தக் கமிஷன் முதல் முறையாக தீவை ஒன்றாக ஒருங்கிணைத்து, ஒற்றை ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்ததுடன். ஹோர்ட்டனை 'இலங்கையில் உள்ள எங்கள் குடியேற்றங்களின்' ஆளுநராகவும், தலைமைத் தளபதியாகவும், ஓர் அரசாங்க ஆலோசனைச்சபையைக் கொண்டவராகவும் இணைத்தது. அவருக்கு, 'நமது தீவின் ஒழுங்கு, அமைதி, நல்லாட்சி என்பவற்றுக்கான சட்டங்களை உருவாக்கவும், இயற்றவும், நியமிக்கவும், ஆணையிடவும், மேற்கூறிய 'அரசாங்கச்சபையின் ஆலோசனையுடனும் ஒப்புதலுடனும்' அதைச் செய்வதற்கான அதிகாரமும் வழங்கப்பட்டது. இவ்வாறுதான் தீவின் வெவ்வேறு பிரதேசங்களுக்கென்று அல்லாமல், எல்லாவற்றையும் ஒருங்கிணைத்த ஒற்றைப் பிரதேசத்திற்கான மையப்படுத்தப்பட்ட அரசியல் ஆட்சிமுறை இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன் பின்னாக வந்ததுதான் கோல்புரூக்கமரூன் அறிக்கை. லெப்டினன்ட் கேர்ணல் டபிள்யூ.எம்.ஜி. கோல்புரூக், டிசம்பர் 24, 1831 திகதியிடப்பட்ட தனது அறிக்கையின் பிரிவுகளில், மிக இறுக்கமான மையப்படுத்தலைப் பரிந்துரைத்திருந்தார். முழுத்தீவும் ஆளுநராலும், அவரது கவுன்சிலாலும் நிர்வகிக்கப்பட இருந்தது. மாகாணங்களின் எண்ணிக்கை, பதினாறிலிருந்து ஐந்தாகக் குறைக்கப்பட்டது. ஒவ்வொன்றும் ஒரு அரசாங்க அதிபரின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

மாகாணங்களின் எல்லைகளை மறுவரையறை செய்ததன் பின்னணியில் இருந்த சிந்தனை, கண்டி மலைவாழ் சிங்களவர்களின் தனிமைப்படுத்தலைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அவர்களின் தனித்துவமான தன்மைகள், ஆங்கிலேயர்கள் நினைத்தபடி, ஒரே மாதிரியான தேசத்தையும், ஒரே மாதிரியான நிர்வாக முறையையும் உருவாக்குவதற்கு ஒரு தடையாக அமைந்திருந்தன.

கண்டியச் சிங்களப் பகுதிகளை அவர்களின் பூர்வீகத் தலைவர்களின் செல்வாக்கிலிருந்து விடுவிப்பதில் பிரிட்டன் உறுதியாக இருந்தது என்று குறிப்பிட்டு வரலாற்றாசிரியர் விஜய சமரவீர இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார். கண்டிச் சிங்களவர்களும் தாழ்நிலப் பிரதேசச் சிங்களவர்களும் ஒரே மாதிரியான அமைப்பாக ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்று கோல்புரூக் விரும்பினார். இது கண்டியச் சிங்களத் தலைவர்களின் அதிகாரத்தை நீக்கும் என்பதால், ஒரே மாதிரியான அரசாங்க அமைப்பைக் கொண்டுவரலாம் என்பது கோல்புரூக்கின் தீர்வாகும். கண்டியத் தலைவர்கள் தங்கள் பகுதிகள் தனித்தனியாக நிர்வகிக்கப்பட்டால் அவர்கள் தொடர்ந்து தமது செல்வாக்கைப் பயன்படுத்துவார்கள் என்று அவர் வாதிட்டார்.

நிர்வாகத்தையும் சட்டமன்றக் கவுன்சில்களையும் அமைப்பதற்கான கோல்புரூக்கின் பரிந்துரை மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு பங்களிப்பாகும். சட்டமன்றம் ஒரு பரிந்துரைக்கப்பட்ட அமைப்பாக இருக்கும் என்றாலும் காலப்போக்கில் அது தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமாகப் பரிணமிக்க இருந்தது. அப்போது அது, தீவின் ஆட்சி குறித்து ஆளுநருக்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாக இருந்தது. இருப்பினும், இறுதியில் ஆளுநரே தீவின் அரசாங்கமாகத் தொடர்ந்து இயங்கி வந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலங்களிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், இரண்டு கவுன்சில்களும் விரிவாக்கப்பட்டன. சட்டமன்றம் மேலும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. டொனமூர் கமிசனின் பரிந்துரைகள் 1931 இல் நடைமுறைக்கு வரும்வரை, ஏகாதிபத்திய அதிகாரிகள் தேர்தல் கொள்கையைப் படிப்படியாக அறிமுகப்படுத்தினர். ஆனால் சட்டமன்றத்தின் இன அமைப்பில்



ஃபிரடெரிக் நோர்த்
Image Source: en.wikipedia.org

தாழ்நிலச் சிங்களவர்கள், கண்டிச் சிங்களவர்கள், வடக்கு மாகாணத்தின் இலங்கைத் தமிழர்கள், மேற்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் சேர்ந்தவர்கள், இந்தியத் தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள் உடன், கூடவே ஐரோப்பியர்களும் என்று சமநிலையைப் பராமரித்தனர். ஆனால் 1912 ஆம் ஆண்டில் ஆளுநர் சேர். ஹென்றி மக்கலம் (Sir. Henry McCallum), 1920 ஆம், 1923 ஆம் ஆண்டுகளில் ஆளுநர் சேர். வில்லியம் மானிங் (Sir William Manning) ஆகியோரால் அரசியலமைப்பில் பழிவாங்கும் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோதும், 1923 ஆம் ஆண்டில் காலனித்துவ அரசாங்கத்தை, சட்டமன்றத்தில் ஒரு சிறுபான்மைச் சூழ்நிலையில் விட்டுச்சென்ற ஆளுநர், தீவின் அரசாங்கத்திற்குத் தொடர்ச்சியான பொறுப்பாளராக இருந்தார்.

1920 ஆம் ஆண்டின் அரச அறிவுறுத்தல்களின் பிரிவு 13, பத்து வகையான மசோதாக்களுக்கு, முக்கியமாக ஏகாதிபத்திய அக்கறைகொண்ட மசோதாக்களுக்கு, தனது ஒப்புதலை வழங்க வேண்டாம் என்று ஆளுநருக்கு உத்தரவிட்டது. தீவின் பொதுநிர்வாக அமைப்பின்மீது அவர் உறுதியான கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக்

கொண்டார். மேலும் 1920, 1923 ஆம் ஆண்டுகளில் அரசியலமைப்புகள் அவருக்குச் சில குறிப்பிட்ட மேலதிக அதிகாரங்களை வழங்கின. நாட்டின் அமைதி, ஒழுங்கு, நல்லாட்சி என்பவற்றிற்காக இறுதிச்சந்தர்ப்பத்தில் சட்டம் இயற்றுவதற்கு இந்த அதிகாரம் அவருக்கு உதவியது. உண்மையில், ஒரு நடவடிக்கை 'மிக முக்கியமானது' என்று ஆளுநர் கருதினால், 'சட்டமன்றத்தில் உள்ள சிறுபான்மையினரான பன்னிரண்டு உத்தியோகபூர்வ உறுப்பினர்களின் வாக்குகளுடன் அதைச் அவர் சட்டமாக இயற்ற முடியும்.

1833 ஆம் ஆண்டு கோல்புரூக்கின் சீர்திருத்தங்களுக்கும், 1912 இல் மக்கலம் கொண்டுவந்த அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கும் இடையிலான ஆண்டுகளில், நிர்வாகம், பொருளாதாரம், கல்வி, அரசியல் ஆகிய துறைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. கோல்புரூக் பொதுச்சேவைகளில் இருந்த பதவிகளைக் குறைக்கவேண்டுமெனப் பரிந்துரைத்தார். காலனித்துவ அரசாங்கம், அதைச் செயற்படுத்தியது. அதாவது மாகாணங்களை மறுவரையறை செய்வதன் மூலமாக - அதுவரை பதினேழாக இருந்த மாகாணங்களை ஐந்தாகக் குறைப்பதன் மூலமாக - அதுவரை தனித்துவமாக இருந்த கண்டியச் சிங்கள மலைவாழ் மக்களின் தனித்தன்மை சிதைந்துபோகும் வகையில், பொதுசேவைகள் அமைப்பை மாற்றி அமைத்தது. இருப்பினும், பெரிய மாகாணங்களாக இருப்பதன் காரணமாக அவற்றின் சட்டபூர்வ பிரதேசங்களும் எல்லைப்பகுதிகளும், புறக்கணிக்கப்படும் நிலை எழுந்தபோது, அவை நிர்வாக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட முடியாதவை என்பது நிரூபிக்கப்பட்டது. இதன் காரணமாக 1873 இல் வடக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு ஒரு புதிய வடமத்திய மாகாணம் உருவாக்கப்பட்டது. பின்னர் 1886 இல் ஊவா மாவட்டம் மத்திய மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு 'ஊவா மாகாணம்' என்று பெயரிடப்பட்டது. அதன்பின், 1889 இல், சப்ரகமுவ மாகாணம், மேற்கு மாகாணத்திலிருந்து பிரிந்து அது தன்னை ஒரு தனியான மாகாணமாக மாற்றிக்கொண்டது.



தோமஸ் மெயிற்லாண்ட்
Image Source: en.wikipedia.org

கோல்புரூக்கிற்குப் பின்னான ஆண்டுகளில் பொருளாதாரரீதியாகக் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்பட்டன. முதலில் கோப்பியும், பின்னர் தேயிலை, ரப்பர், தென்னை ஆகியவற்றுக்கான தோட்டங்களும் உருவாக்கப்பட்டு அவை புலம்பெயர்ந்த பிரிட்டிஷ் தோட்டக்காரர்களுக்கான வணிகப்பயிர்களாக மாறின. அதைத்தொடர்ந்து இறக்குமதி - ஏற்றுமதி வர்த்தகம், தலைநகரான கொழும்பை தனது செயற்பாட்டிற்கான மையமாக மாற்றிக்கொண்டது. அதற்காக வீதிகளும் மற்றும் ரயில் பாதைகளும் அமைக்கப்பட்டு அவை இந்தத் தோட்டங்களை இணைத்தன. இந்த முன்னேற்றங்கள் தனிமைப்பட்டிருந்த கண்டியச் சிங்களவர்களின் தனித்துவத்துள் மேலும் ஊடுருவுவதாய் அமைந்தன. 1848 ஆம் ஆண்டு நடந்த பாரிய கண்டிக்கலவரம், கண்டியின் சிங்களத் தலைவர்கள் தங்கள் தனித்துவத்தை வலியுறுத்துவதற்கான கடைசி முயற்சியாக

அமைந்த ஒன்றுதான். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில், கடைசியாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த, இலங்கைத் தமிழர்கள் பெரும்பாலும் வசிக்கும் தீவின் வடக்குப்பகுதி, நாட்டின் பிறபகுதிகளுடன் இணைக்கப்பட்டது. இது முதலில், கொழும்பிலிருந்து இலங்கைத் தமிழர்களின் வடக்குத்தலைநகரான யாழ்ப்பாணத்திற்கும், பின்னர், 1896 - 1903 ஆம் ஆண்டுகளில், தீவின் வடக்கே உள்ள காங்கேசன்துறைக்கும் ரயில் பாதை அமைக்கப்பட்டதன் மூலம் முடிவுக்கு வந்தது.

தொடர்புமுறையில் ஏற்பட்ட இந்த மாற்றங்கள், முதலாவதாக, தாழ்நிலச் சிங்கள வர்த்தகர்களுக்கும் கண்டிச் சிங்கள மக்களுக்கும் இடையேயான அதிக வணிகத்தொடர்பைக் குறிக்கின்றன. இரண்டாவதாக, யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கையையும் அவர்கள் அரசாங்க ஊழியர்களாகவோ தொழில்முறைத் தொழில்களில் அல்லது சிங்களப்பகுதிகளில் தொழில்முனைவோராகவோ வாய்ப்புகளைத் தேடத் தொடங்கியதையும் குறிக்கின்றன. குறிப்பாக, இந்த இரண்டு வகையினரும் கொழும்பில்தான் சந்தித்துக் கொள்கின்றார்கள். நாட்டின் அரச நிர்வாகக்குழு, சட்டமன்றக்குழு, காலனிய ஆளுநர் அலுவலகம் என்று எல்லாமே கொழும்பில் இருந்து செயற்பட்டமை காரணமாக, அது நகரத்திற்கு அதிக முக்கியத்துவத்தை அளிப்பதாக இருந்ததுடன், நிர்வாக இயந்திரத்தின் அதிகாரத்தையும் அதிகரிக்கச் செய்தது. இதுதான் கொழும்பு பின்வந்த காலங்களில், தன்னளவில் ஒரு சுயநலப்போக்கை வளர்த்துக் கொள்வதற்கும், மற்றையப் பகுதிகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளத் தயக்கம் காட்டுவதற்கும் வழிவகுத்த போக்குக்கான ஆரம்பமாகவும் அமைந்தது.

கல்வியில் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. கோல்புரூக்கின் முயற்சிக்குப்பிறகு ஒரு வருடம் கழித்து, இலங்கைத் தீவில் 13,891 குழந்தைகள் பாடசாலைகளில் படித்தனர். ஆனால் முக்கால் நூற்றாண்டுக்குப்பிறகு, அதாவது 1906 இல், ஆகலும் 276,691 பேர் மட்டுமே படிப்பவர்களாக இருந்தனர். 1905 இல் 554 அரச பாடசாலைகளும் 1,582 அரச உதவிபெறும் பாடசாலைகளும் இருந்தன. 1834 ஆம் ஆண்டில் 1,167,700 ஆக இருந்த தீவின் மக்கள்தொகை, 1906 ஆம் ஆண்டில் 3,984,985 ஆக உயர்ந்தது. அதே ஆண்டுகளில், வருவாய் ரூ. 1,145,340 இலிருந்து ரூ. 112,516,914 ஆக அதிகரித்தது. மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தின் செயற்பாட்டு மையம் கொழும்பிலேயே தொடர்ந்தது இருந்து வந்தது. வேறு பிரதேசங்களிலான மாற்று மையங்கள் வளர்ச்சியுறுவதில் வெற்றிபெறவில்லை

கல்வி வளர்ச்சியும், பொருளாதாரத்தில் ஏற்பட்ட செழிப்பான நிலைமையும் அதிகரித்து வந்தமையானது, பெரும்பான்மைச் சிங்களப் பௌத்தர்கள், சிறுபான்மை இந்துக்கள், முஸ்லிம்கள் மத்தியில் மத மறுமலர்ச்சிக்கான வளர்ச்சியை ஊக்குவித்தது. இனரீதியாகவும் மதரீதியாகவும் பிளவுபட்ட இந்தக் குழுக்களின் பன்முகத்தன்மை கொண்ட கலவையின் காரணமாக இயல்பாகவே எழுகின்ற ஒரு விளைவாகவே, தங்களுக்கான தனித்தனியான செயற்கையான தேசியவாதக் குடை அமைப்புகளின் உருவாக்கம் ஏற்படுகிறது. இந்த நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் எல்லோரும், சொத்துகளைக் கொண்டவர்களும், தொழில்முறைசார்ந்து உயர்நிலையில் உள்ள வகுப்பினர்களாகவுமே இருந்தனர். ஆனால், சமூகத்தின் கீழ்மட்ட அடுக்குகள் இதனால் உடனடியாகப் பாதிப்புக்கு உள்ளாகவில்லை.

கிராமப்புறங்கள் இந்த பரபரப்புக்குள் அகப்படவில்ல. அதற்குப்பதிலாக, தாழ்பிரதேச உற்பத்தியாளர் கூட்டமைப்பு (Low Country Products Association), யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசதி படைத்த தமிழர்களைக் கொண்ட 'யாழ்ப்பாண சங்கம்', 'சிலாபம் சங்கம்' (கொழும்புக்கு வடக்கே உள்ள சிலாபம் மாவட்டத்தில் இருந்த பெரும்பாலும் தெங்கு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள்), மேற்கு மாகாணத்தில் உள்ள தொழில்முறை வகுப்பினரையும் வணிக வகுப்பினரையும் உள்ளடக்கிய 'இலங்கைத் தேசிய சங்கம்' (Ceylon National Association) போன்ற வணிகத்துடன் சம்பந்தப்பட்ட தொழில்சார் அமைப்புகளால் (1907 இல் ஆரம்பிக்கப்பட்டவை) 'பிரார்த்தனை'களுக்குப் பதிலாக, கோரிக்கை மனுக்கள், நினைவுச்சின்னங்கள் என்பவை வெளியுறவுத்துறைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 1917 மே 17 அன்று, 'இலங்கை

நிர்வாகத்திலும் அரசாங்கத்திலும் மக்களுக்குப் பயனுள்ள பங்கை வழங்கும் சீர்திருத்தத்தைப் பெறுவதற்கும், அவர்களின் அரசியல், பொருளாதார, சமூகநிலை தொடர்பான கேள்விகளை ஆராய்வதை ஊக்குவிப்பதற்கும்' என்ற நோக்கங்களுடன் உயர்குடியினர்களது (Ceylon Reform League) 'சிலோன் சீர்திருத்தக் கழகம்' என்ற அமைப்புத் தொடங்கப்பட்டது. டிசம்பர் 15, 1917 அன்று, மேற்சொன்ன இந்தக் கழகத்தாலும், சங்கத்தாலும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் குறித்த பொதுமாநாடு கூட்டப்பட்டது. பின்னர் டிசம்பர் 13, 1918 அன்று கொழும்பில் உள்ள பொதுமண்டபத்தில் அரசியலமைப்புச் சீர்திருத்தம் குறித்த இரண்டாவது மாநாடு கூடியது.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் வெவ்வேறு இனக்குழுக்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்த பல்வேறு ஆங்கிலம் படித்த பிரபுக்களின் பரந்த கூட்டணியை உருவாக்குவதில் உச்சத்தை அடைந்தன. இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்று அழைக்கப்பட்ட அதன் முதல் அமர்வு, 1919 டிசம்பர் 11 அன்று கொழும்பில் நடைபெற்றது. ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, இந்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை நோக்கிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் வசதியான மையமாக கொழும்பு இருந்ததே அதற்கான காரணம்.

குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக மட்டுமே ஒன்றிணைந்திருந்த, தம்மளவில் பிளவுபட்டிருந்த இந்த உயர்தட்டினர்கள் (Elites) கிளர்ச்சி செய்வதற்காக இணங்கிய அடிப்படைக்காரணங்கள் இவை: பொதுச்சேவைகளின் இலங்கைமயமாக்கலைப் பெறுவது; நிர்வாக மற்றும் சட்டமன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவது, அதன் விளைவாக ஆளுநரின் அதிகாரங்களைக் குறைப்பது; ஒவ்வொரு இனக்குழுக்களும் (நமது நோக்கங்களுக்காக முஸ்லிம்களின் மதக்குழு உட்பட) ஒப்புக்கொள்ளப்பட்ட பிரதிநிதித்துவப் பங்கைப்பெறும் இனரீதியாகச் சமநிலையான சட்டமன்றம் என்பவை. 1833 முதல் 1931 வரையும் அதற்குப் பிறகும், டொனமூர் அரசியலமைப்பு (1931-47), சோல்பரி அரசியலமைப்பு (194-78)

உள்ளூராட்சி நிறுவனங்களின் மறுமலர்ச்சியை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் பலவீனமாக இருந்ததுடன், எவ்வகையிலும் பயனற்றவை என நிரூபிக்கப்பட்டன. அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கான செயற்பாட்டாளர்களின் செயலூக்கமின்மையால் இவை பயனற்றுப்போயின. மறுபுறம், காலனித்துவ அதிகாரிகள், இந்த நிறுவனங்களை கருத்துருவாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாகவே பார்த்தனர்.

என்பவற்றின் காலங்களில், உயரடுக்கினர்களுக்கு இடையே இருந்த சர்ச்சை, அரசாங்கத்தின் கட்டமைப்புகள் குறித்ததாக அல்லாமல், பிரதிநிதித்துவத்தின் அளவு குறித்தே இருந்தது.

உண்மையில், இந்தப்போட்டி, பதவிகளையும், அரசு வேலைவாய்ப்புகளில் கொள்ளையடிக்கப்பட்ட சொத்துகளில் ஒரு பங்கைப் பெறுவதற்குமான போராட்டமாகவே இருந்தது. மிகப்பெரிய தொழில்வழங்கும் 'முதலாளியாக' இருந்த கொழும்பு, இனங்களுக்கிடையேயான போட்டியின் மையமாக மாறியது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் மறுமலர்ச்சியை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் பலவீனமாக இருந்ததுடன், எவ்வகையிலும் பயனற்றவை என நிரூபிக்கப்பட்டன. அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கான செயற்பாட்டாளர்களின் செயலூக்கமின்மையால் இவை பயனற்றுப்போயின. மறுபுறம், காலனித்துவ அதிகாரிகள், இந்த நிறுவனங்களை கருத்துருவாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாகவே பார்த்தனர். 1866 ஆம் ஆண்டில் கொழும்பிலும், கண்டியிலும், 1867 ஆம் ஆண்டில் காலியிலும், நகராட்சிமன்றங்கள் நிறுவப்பட்டன. கண்டி, காலி ஆகியவை கொழும்புக்குப் பிறகு முக்கியத்துவம் வாய்ந்த நகர மையங்களாக இருந்தன. தவிரவும், 1889 ஆம் ஆண்டில் ஆளுநர் சேர். ஹெர்க்குலஸ் ரொபின்சன் (Sir. Hercules Robinson: 186-572), கிராமியக்குழுவுக்கான அதரப்பழமையான

நிறுவனத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஒரு சட்டத்தை இயற்றினார். மாகாண, மாவட்டப் பாதைகளுக்கான குழுக்கள், உள்ளூர் சுகாதார சபை (Boards) போன்ற பிற உள்ளூர் அமைப்புகள் ஏற்கனவே இருந்தன. 1876 இல், சிறுநகரங்களில் உள்ளூர் சபைகள் நிறுவப்பட்டன. ஆனால் இவை எதுவும் எதிர்பார்த்த பலனைத்தரவில்லை. தெற்கு மாகாணத்திற்கான ஓர் அரசாங்க அதிபர், 1905 ஆம் ஆண்டுக்கான தனது நிர்வாக அறிக்கையில், வேறு பிற விடயங்களுடன் இவ்வாறு குறிப்பிட்டார்:

“பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் தன்மைகொண்ட எந்த நடவடிக்கைகளுக்கும் இலங்கை இன்னும் முதிர்ச்சியடையவில்லை என்று நான் அஞ்சுகிறேன். வேட்பாளர்கள் முற்றிலும் பொதுநோக்கங்களுடன் தேர்தலுக்கு வருவது மிகவும் அரிதாக உள்ளது. தவிரவும், சிறந்த வேட்பாளரையோ அல்லது மக்களின் நலன்களைச் சிறப்பாகக் கவனிக்கும் ஒருவரையோ பெறுவதற்காக வாக்காளர்கள் முன்வந்து தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வதற்காக ஆர்வமூட்டப்படுவதும் இல்லை.....”

வெவ்வேறு தேசியக் குழுக்களிடமிருந்து ஓர் இனக்கலவையை உருவாக்கும் முயற்சிகள் பிரித்தானியாவிடம் இருந்தபோதிலும், 1920 - 30 ஆம் ஆண்டுகள் பிரச்சினைக்கான முதல் அறிகுறிகளைக் கண்டன. போட்டியிடும் இனக்குழுக்கள் தங்களுக்கான இடங்களுக்கான இனரீதியான பங்கீட்டில், ஒவ்வொன்றும் கொண்டிருக்க வேண்டிய பங்கு தொடர்பாகக் கருத்து வேறுபாடு கொண்டிருந்தன. சிறுபான்மைக் குழுக்கள் சிறப்பாகப் பிரிக்கப்பட்ட சமூகரீதியான வாக்காளர்கள்மூலம் தங்கள் பதவிகளைப் பெறவிரும்பினர். ஆனால் சிங்களப் பெரும்பான்மையினரோ தங்கள் இயற்கையான உரிமையாக, பிராந்தியரீதியான பிரதிநிதித்துவத்தைக் கோரிநின்றனர். போட்டியும் எதிர்ப்புகளும் மிகவும் கூர்மையாகிவிட்டதால், ஆங்கிலேயர்கள் கட்டமைக்க முயற்சித்த ஒற்றையாட்சி அரசியலுக்குள் சிதைந்து கொண்டிருந்த சமூகரீதியாக ஏற்பட்டுள்ள பிரிவுகளை ஒன்றாக வைத்திருக்கும் நோக்குடன், காலனிகளுக்கான மாநிலச் செயலாளர், டெவன்ஷயர் டியூக், 1923 ஜனவரி 11 அன்று இலங்கை ஆளுநர் சேர். வில்லியம் மானிங்கிற்கு அனுப்பிய ஒரு கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்:

“காலனியில் நிலவும் நிலைமைகளையும், மக்கள்தொகையின் தொகுப்பையும் கருத்திற் கொண்டு, தொகுதிகளை உருவாக்கும் ஏற்பாடுகள் எதுவாக இருந்தாலும், பிரதிநிதித்துவம் காலவரையின்றி சமூகரீதியாக இருக்க வேண்டும். மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களும் பிராந்தியத் தொகுதிகளால் திருப்பி அனுப்பப்பட்ட வடிவத்தில் இருந்தால், அவர்கள் சாராம்சத்தில் சமூகரீதியான பிரதிநிதிகளாக இருப்பார்கள்...”

இதற்கு முன்னரே, 1922 மார்ச் 1 அன்று, ஆளுநர் மானிங் வெளியுறவுத்துறை செயலாளருக்கு அனுப்பிய ஒரு கடிதத்தில், “எந்தவொரு சமூகமும் தனது விருப்பத்தை, மற்றச் சமூகங்கள்மீது திணிக்க முடியாது” என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். மானிங்கின் அறிவிப்பை, 1930களிலும் 1940களின் முற்பகுதியிலும், இலங்கைத் தமிழர்களும் அவர்களின் முக்கிய அரசியல் கருவியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசினரும் சட்டமன்றத்தில் சமச்சீர் பிரதிநிதித்துவத்திற்காகப் போராடுவதற்கு ஒரு ஆதரவுத்தளமாகப் பயன்படுத்தினர். சட்டமன்றத்தில் 50 சதவீத இடங்கள் சிங்களப் பெரும்பான்மையினருக்கும், மீதமுள்ள 50 சதவீத இடங்கள் சிறுபான்மையினருக்கும் இடையில் பிரிக்கப்பட வேண்டும் என்ற இனரீதியான சூத்திரம் இதுவாகும்.

சிங்களவர்களது தலைமையானது தங்கள் எண்ணிக்கையின் மேன்மையைக் குறைக்கும் எந்தவொரு முயற்சியையும் கடுமையாக எதிர்த்தது. இலங்கை சீர்திருத்தப் பிரதிநிதிகள்குழு, 1923 ஏப்ரல் 12 அன்று வெளியிடப்பட்ட ஒரு குறிப்பாணையில் தங்கள் நிலைப்பாட்டை தெளிவாக விளக்கியது:

“சட்டமன்றத்தில் சிங்களப் பிரதிநிதித்துவத்தைக் கட்டுப்படுத்தும் ஆளுநர் மானிங்கின் திட்டத்தை, எந்தக் கொள்கையையும் அடிப்படையாகக் கொள்ளாமல், சட்டமன்றத்தில் சிங்களப் பிராந்தியப் பிரதிநிதிகளின் சாத்தியமான ஆதிக்கத்தைத் தடுக்கும் நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு ‘அதிகாரச் சமநிலையை’ நிறுவும் முயற்சியாக பிரதிநிதிகள்குழு கண்டனம் செய்கிறது. சில விளங்கிக்கொள்ள முடியாத காரணங்களுக்காக ஏற்படும் இந்தத் தற்செயல் நிகழ்வு, நீதி - நியாயங்களை விலையாகக் கொடுத்தேனும்கூடத் தவிர்க்கப்பட வேண்டிய ஒரு பயங்கரமான தீமையாகக் கருதப்படுகிறது.”



பரோன் ஜெயதிலக
Image Source : en.wikipedia.org

*சிங்கள இனத்தின், சிறுபான்மையினரை ஏற்றுக்கொள்ளவும் சமரசம் செய்யவும் விரும்பாத போக்கின் மொத்த விளைவுதான், இலங்கைத் தேசிய காங்கிரசின் உடைவு ஆகும். காங்கிரசின் நிறுவனத் தலைவரான சேர். பொன்னம்பலம் அருணாசலம், 1921 இல், இது முக்கியமாக சிங்களவர்களின் ஒரு பகுதியையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்றும், பல்வேறு சமூகங்களுக்கிடையேயான பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு உணர்வுகளை அழித்துவிட்டது என்றும்கூறி, அதன் அணியிலிருந்த பதவிகளிலிருந்து வெளியேறினார்.*

*மீண்டும் தனக்கென ஒரு மறுசீரமைப்பு நடவடிக்கையை முன்னெடுத்த அருணாசலம், சக இலங்கைத் தமிழர்களிடையே, ஒரு பின்னணிப் படையாளாக நின்று எதிர்த்துப் போராட முயன்றார். அவர், 1923 ஆம் ஆண்டு, 'இலங்கைத் தமிழ் லீக்' என்ற புதிய அரசியல் அமைப்பை நிறுவியதுடன், தமிழ்ச்சமூகத்தின் அரசியல் பரிணாம வளர்ச்சியில் பின்னாளில் வரப்போகும் அரசியல் நிகழ்வுகளை எதிர்பார்த்து, தன் இலட்சியத்தையும் குறிக்கோளையும் முன்வைத்தார். தனது வாழ்க்கையின் இறுதிக்காலங்களில், 'தமிழ் லீக்கிற்கு' அவர் ஆற்றிய உரையில், தமிழ் மக்கள் எதை நோக்கிச் செயற்பட வேண்டும் என்று அவர் நினைத்தார் எனபதை அவர் இவ்வாறு முன்வைத்தார்:*

*"நாம் இலங்கை முழுவதும் இந்த இலட்சியங்களை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும், பரப்ப வேண்டும், மேலும் தமிழ் ஈழம் என்று நாம் பெருமையாக அழைக்கும் ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் ஊக்குவிக்க வேண்டும். நாம் ஒரு மக்கள் கூட்டமாக, நமது தனித்துவத்தைப் பாதுகாக்கவும், நமது பாரம்பரியத்திற்கு தகுதியானவர்களாக இருக்கவும் விரும்புகிறோம். நாம் எம்மை 'மீன், இறைச்சி, கோழி ஆகவோ அல்லது வேறெந்த அர்த்தமற்ற ஒன்றாகவோ' நம்மை ஆக்கிவிடும் உலோகாயத இச்சைகளால் ஈர்க்கப்படவில்லை. அதற்காக நாம் சுயநலவாதிகளாக இருந்து தமிழ் சமூகத்திற்காக மட்டுமே பாடுபட வேண்டும் என்று அர்த்தமல்ல. தமிழர்களுக்காகச் செய்ததைவிட இலங்கை முழுவதுக்குமான நலனுக்காக நாங்கள் அதிகமாகச் செய்துள்ளோம்... இருப்பினும், நாங்கள் பின்தங்கியவர்களாக இருப்பதைக் கடுமையாக எதிர்க்கிறோம். நாங்கள் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வலிமையுள்ளவர்களாகவும், பொதுநலனுக்காகவும் பாடுபடும் உறுதிகொண்டவர்களாகவும் இருக்க விரும்புகிறோம்."*

*இந்த அறிக்கையில் அருணாசலம் தமிழர் அரசியல் ஒற்றுமைக்காகப்பாடுபட்டார் என்பதில் எந்த விதத்திலும் சந்தேகமில்லை. ஆனால், அவர் தமிழ் ஈழம் பற்றிப் பேசிய சூழலைக் கருத்தில்கொண்டு, அவர் உண்மையில் ஒரு தனி இறையாண்மை கொண்ட தமிழ் அரசுக்கு அழைப்புவிடுத்ததாகக் கூற முடியுமா? என்று ஊகிக்க மட்டுமே முடியும் (இந்த வார்த்தைகள், இப்போது இதை எழுதும் நேரத்தில், பரவலாக அறியப்பட்ட தனித் தமிழ் அரசுக்கு முன்மொழியப் பயன்படுத்தப்பட்ட தலைப்பை வெளிப்படுத்துகின்றன). எப்படியிருந்தாலும், ஒப்பீட்டளவிலான தமிழ்ச் சமூகத்தின் செழிப்பும், நடுநிலையான ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் தொடர்ந்து இருப்பதும், இந்தச் சந்தர்ப்பத்தில் பிரிவினைவாதக் கோரிக்கைக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கவில்லை.*

இந்தக் காலகட்டத்தில் ஓரளவு வலியுறுத்தப்படுகின்ற ஒரு விடயம் என்று சொல்வதானால், அது, 1918, 1919 ஆகிய ஆண்டுகளில் சிங்கள - பௌத்த இயக்கத்தை ஒழுங்கமைப்பதில் இலங்கையின் முதற் பிரதமரான டொன் ஸ்ரிபன் சேனநாயக்காவின் மூத்த சகோதரரான பிரான்சிஸ் ரிச்சர்ட் சேனநாயக்க (1884-1925) ஆற்றிய அரசியற் பங்களிப்புப் பற்றியது என்றே சொல்லவேண்டும். இந்த இயக்கம் சேனநாயக்கர்களிடமிருந்து, முரண்நகையாக அவர்களின் பிரதான எதிரியான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவிடம் பின்னர் பரிசாக அளிக்கப்பட்ட ஓர் இயக்கமாகும். இது, பல்வேறு ஆங்கிலம்பேசும் குழுக்களை ஒரு தேசிய காங்கிரஸாக ஒருங்கிணைக்கும் முயற்சியில், மேற்கத்தியமயமாக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தவாதிகளது முயற்சிகளுக்குச் சமாந்தரமாக, குறிப்பிடத்தக்க அளவுக்கு அவர்களுக்கு இணையாக இருந்து செயற்பட்டது. டி.இ. ஸ்மித் (D.E. Smith) என்பவர், 1950களின் சக்திவாய்ந்த அமைப்பான ‘அகில இலங்கை பௌத்த காங்கிரசின்’ தோற்றத்தையும், 1918 இலிருந்து அதுவரையான காலத்தில் சி.ஏ. ஹேவவிதாரண, எஃப்.ஆர். சேனனாயக்க, பரோன் ஜெயதிலக போன்றவர்களின் அதற்கான முயற்சிகளையும் ஆய்வுக்குட்படுத்தியிருந்தார். அவர்கள் ‘பௌத்த வாலிபர் சங்கம்’ (Young Men’s Buddhist Association) என்றை ஓர் இயக்கத்தைத் தொடங்கினர். இது 1924 இல் ‘அகில இலங்கை பௌத்த சங்கங்களின் சமாசம்’ (All Ceylon Congress Of Buddhist Associations) என்ற பெயரைப் பெற்றதாக மாறியது. பின்னர் அது 1940 இல் ‘அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்’ (All Ceylon buddhist Congress) என்று தனது பெயரை மாற்றிக்கொண்டது. 1955 இல் கொண்டுவரப்பட்ட ஒரு பாராளுமன்றச் சட்டத்தின்மூலம், இப் ‘பௌத்த காங்கிரஸ்’ சட்டரீதியான ஓர் அமைப்பாக இணைக்கப்பட்டது. இந்த அமைப்பிற்காக ஏற்கனவே அதனால் வகுக்கப்பட்டிருந்த நோக்கங்களை அவதானிக்கும்போது, அது கொண்டிருந்த உண்மையான அடிப்படைச் சிந்தனைகள் எப்படிப்பட்டவை என்பது பற்றிய சில கருத்துகளைப் புரிந்துகொள்ள முடியும்:

2 “...பௌத்த மதத்தையும், அதன் மீதான பௌத்தர்களின் ஆர்வத்தையும் மேம்படுத்துதல், வளர்த்தல், பாதுகாத்தல் என்பவற்றுடன் பௌத்தர்கள் கொண்டுள்ள உரிமைகளையும் சலுகைகளையும் பாதுகாத்தல்.”

இவை அனைத்தும், அருணாசலமும் அவரது சக சீர்திருத்தவாதிகளும் ‘இலங்கை தேசிய காங்கிரஸைக்’ கூட்டுவதற்காக, ஒரு மதச்சார்பற்ற, தேசிய அரசியலை நோக்கி செயற்பட்டுக் கொண்டிருந்த அதேவேளையில் நடந்த விடயங்கள்.

இந்தப் பௌத்த இயக்கம் வேரூன்றி ஒரு வருடம் கழித்து, சகோதரர்களான எஃப்.ஆர்., டி.சி., டொன் ஸ்டீபன் சேனநாயக்க ஆகியோர் பரோன் ஜெயதிலகவுடன் சேர்ந்து, சிங்களக் கிராமங்களில் சிங்கள மகாஜன சபைகளை (மாபெரும் சிங்கள மகாஜன சபை - The Great Sinhalese People Association) உருவாக்கத் தொடங்கினர். அவர்களுக்கும் இலங்கை தேசிய காங்கிரசுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகக் கூறப்பட்டாலும்கூட, அவர்களது சபைகள் தங்கள் நடவடிக்கைகளின்போது சிங்களவர்களைப் பயன்படுத்துவதையே வலியுறுத்தின. சட்டமன்றத் தேர்தல்களில் கிறிஸ்தவர்களுக்குப் பதிலாக அவர்கள் பௌத்த வேட்பாளர்களையே ஆதரித்தனர்.

இப்படிப்பட்ட ஒரு நிலையில், அருணாசலம் வெறுமனே ஓர் ஒற்றை எண்ணம் கொண்ட மனிதராகவே செயற்பட்டார் என்றும், காளான்களாக எழுந்துவரும் இனத்தை மையமாகக் கொண்ட பௌத்த - சிங்களக் குழுக்களின் இந்த வளர்ச்சியைக்கூட அவர் கவனிக்கவில்லை என்றும் ஒருவரால் விவாதிக்க முடியும். பொது வாழ்க்கையிலும், அரசாங்கத்தின் உட்சபைகளிலும் அனுபவம் வாய்ந்த ஒரு மூத்த அரசு ஊழியராக, ‘நிலம், இனம், நம்பிக்கை’ என்பவை தொடர்பாக எழுந்துவரும் இயக்கப்போக்கின் தொடக்கத்தை அடையாளம் காணக்கூடிய புத்திசாலித்தனம் அவருக்கு நிச்சயம் இருந்திருக்க வேண்டும். அப்படியிருந்தும், அவர் (அதைப் பெரிதுபடுத்தாமல்) அப்படி இருந்தற்கான ஒரு சாத்தியமான காரணம் என்னவென்றால், பிரிட்டன் சர்வசன வாக்குரிமையை வழங்கும்



**டொன் ஸ்டீபன் சேனநாயக்க**
Image Source : en.wikipedia.org

என்றோ அதைத் தொடர்ந்து, சிங்களவர்களுக்குப் பெரும்பான்மையான பிரதேசங்களை வழங்கும் என்றோ அவர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என்பதே.

கூடவே, இன்னொரு விடயத்தையும் சொல்லலாம். அதாவது, அவர், தன்னை இந்தச் சிறிய உள்நாட்டுக்குள் நடக்கும் சில்லறை மோதல்களுக்கு அப்பாற்பட்ட ஒருவர் என்று நம்பினார் என்பது. அப்படியிருந்தாலும், அவர் தான்சார்ந்த தன்னுடைய சமூகத்திற்குப் போதுமானளவு பாதுகாப்பை உறுதி செய்வதற்குப் பெரிதாக எதையும் செய்ததாகத் தெரியவில்லை என்றே தோன்றுகிறது. ஒருவேளை, (அரசியல் அமைப்பை) வடிவமைக்கும் சிங்கள அரசியற் தலைவர்கள் தன்மீது நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்று அவர் கொண்டிருந்த நம்பிக்கை காரணமாக, அவர் ஏமாற்றப்பட்டிருக்கலாம்.

அருணாசலத்தின் சகோதரர் சேர். பொன்னம்பலம் ராமநாதன் அவர்கள் புத்திசாலித்தனமும் மிகுந்த சாதுரியமும் மிக்க ஒருவர். அவர் சரியான நேரத்தில் சிங்களவர்களுடனான கூட்டணியைக் கைவிட்டு, இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைத் தளராமல் வெளிப்படுத்தும் ஒருவராகத் தன்னை மாற்றிக்கொண்டார்.

சட்டமன்றப் பிரதிநிதித்துவத்தில் இனரீதியான விகிதங்கள் தொடர்பான தனது நிலைப்பாட்டில் அவர் மிக உறுதியாக இருந்தார். டொனமூர் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட சர்வஜன வாக்குரிமை முறைமையை நீடிப்பதை அவர் எதிர்த்தார். இந்தச் சர்வஜன வாக்குரிமை என்பது சிங்களப் பிராந்தியங்களின் பெரும்பான்மையை நிறுவனமயமாக்குவதைக் குறிக்கும்; இது இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்பதை அவர் நன்கு புரிந்து கொண்டிருந்தார்.

18 ஜூலை 1930 தேதியிட்ட காலனிகளுக்கான வெளியுறவுச் செயலாளருக்கு ராமநாதன் எழுதிய 50 பக்கக் குறிப்பாணை அல்லது நினைவூட்டற் குறிப்பில், இன சமூகங்களுக்கிடையே இருந்த நல்லுறவைச் சீர்குலைக்கும் என்று தான் கருதிய 'டொனமூர் பரிந்துரை'களின் மூன்று அம்சங்கள் குறித்து விரிவாகத் தெரிவித்திருந்தார். பிராந்தியரீதியிலும், சமூகரீதியிலுமான பிரதிநிதித்துவக் கோரிக்கைகள் குறித்து, ஆளுநர் மனிங்கிற்கு, காலனிகளுக்கான வெளியுறவுச் செயலாளர் (The Duke of Devonshire) 22 ஜனவரி 1924 அன்று அனுப்பியிருந்த அறிக்கையிலிருந்து, அவரது ஒப்புதலுடன் தனது குறிப்பாணையில் அவர் இவ்வாறு மேற்கோள் காட்டியிருந்தார்:

"......மறுபுறம், இந்த அதிகாரபூர்வமற்ற உறுப்பினர்கள் முழுக்க முழுக்கப் பிராந்தியரீதியிலான தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்களாக இருந்தால், சிங்கள சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளே (சில சமயங்களில் அவர்களின் எண்ணிக்கையின் அளவுக்குக்குரியதை விடவும் அதிக விகிதாசாரத்தைக் கொண்டவர்களாக), அரசாங்கம் உட்பட்ட சட்டமன்றக்குழுவின் ஏனைய எல்லாப் பிரிவுகளையும்விட பெரும்பான்மையாக இருக்கும்நிலை ஏற்படும். எனவே, இவ்வாறு பிரதிநிதித்துவம் பிராந்திய அடிப்படையில், முழுமையானதும் எளிமையானதுமான முறையில் பின்பற்றப்படுவது சிங்களவர்கள் தவிர்ந்த அனைத்து சமூகங்களாலும் கடுமையாக எதிர்க்கப்படும் என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும் அவர்களின் முக்கிய நலன்களின் அடிப்படையில், பிரதிநிதித்துவத்திற்கான பிராந்திய அடிப்படையிலான நடைமுறையில் கடுமையான வரம்பு தேவை என்பதை அவர்கள்

உண்மையிலேயே நம்புகிறார்கள் என்பதில் எனக்கும் திருப்தியே . ...”

உண்மையில், சர்வஜன வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு சொத்துகள், கல்வித்தகுதிகள் என்பவற்றை முட்டுக்கட்டையாக முன்நிறுத்தித் தனது வாதத்தை ராமநாதன் முன்வைத்தார்; அத்தகைய வாக்குரிமை சட்டமன்றத்தில் சிறந்த வசதி படைத்த, அதிகளவில் கல்வி கற்றிருக்கும் சிறுபான்மை சமூகங்களுக்கு பயனளிக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். அதேநேரத்தில் சர்வஜன வாக்குரிமை அவர்களின் நிலையை மோசமாகப் பாதிக்கும் என்பதால் ராமநாதன் இந்தக் குறிப்பாணையில் இப்படி ஒரு கேள்வியை முன்வைத்தார்:

“அப்படியானால், இலங்கையில் உள்ள பெரும்பான்மையான மக்கள் தங்கள் சொந்த விவகாரங்களைச் சரியாக நிர்வகிக்கக் கற்றுக்கொள்ளவில்லை என்பதும்....அந்த மக்களில் மிகக்குறைந்த சதவீதத்தினர் மட்டுமே தொடக்கக் கல்வியைப் பெற்றுள்ளார்கள் என்பதும் (நடைமுறை யதார்த்தமாக) நிலவுகையில் அவர்களில் உள்ள பல்வேறு இனங்களின் கதி என்னவாக இருக்கப்போகிறது? உலகளாவிய தொடக்கக் கல்வியோ, வணிகமுறைகளில் சிறந்த பயிற்சியோ வழங்கப்படாத மக்களுக்கு வழங்கப்படும் சர்வஜன வாக்குரிமை நிச்சயமாக, ஊக வணிகர்களும், சூழ்ச்சியாளர்களும் நிறைந்த ஓர் அமைப்பாகச் சட்டசபையை மாற்றும். அவர்கள் போலுக்குப் பணம் செலுத்துவதற்காகப் பீட்டரைக் கொள்ளையடிக்கும் நிலமையையே அது உருவாக்கும்.”

இறுதியாக, இது முழுக்க முழுக்கச் சிங்கள அமைச்சர்களைக்கொண்ட ஒற்றைத் தன்மைவாய்ந்த வகையிலான ஒரு சபை உருவாகுவதிலேயே போய் முடியும் என்று ராமநாதன் உறுதியாக நம்பினார். அது இலங்கைத் தமிழ்ச்சமூகத்தின் நலன்களுக்குச் சேதம் விளைவிக்கும் என்பதை அவர் நன்றாகவே புரிந்து வைத்திருந்தார். அவர் மேற்குறிப்பிட்ட தனது குறிப்பாணை அறிக்கையின் 35வது பக்கத்தில் இவ்வாறு கூறினார்:

“மாநில கவுன்சிலின் 58 உறுப்பினர்களில், 35 பேர் ஒன்றிணைய ஒப்புக்கொண்டால், ஒவ்வொரு குழுவிலும் தங்கள் சொந்த வட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான பிரதிநிதிகள் இருக்கும் வகையில் குழுக்களின் அமைப்பை அவர்களால் தீர்மானிக்க முடியும். மேலும் இது செய்யப்படும்போது, குழுக்களின் அமைச்சர்கள் அந்த வட்டத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள். இது அரசாங்கத்தின் இயந்திரத்தைக் கட்டுப்படுத்தும்; கூடவே கவுன்சிலுக்கு 30 அல்லது 35 உறுப்பினர்களைக்கொண்ட ஒரு வலுவான ஆட்பலம் அல்லது முக்கூட்டு இருந்தால், அவர்கள் அல்லது அத்தகைய முக்கூட்டு இலங்கையை ஆட்சி செலுத்தும்.’

டொன் ஸ்டீபன் சேனநாயக்க, பரோன் ஜெயதிலக போன்ற ஓர் இரட்டையர் குழுவைப் பற்றி, அவர் ஏன் யோசிக்கவில்லை? என்று ஒருவர் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. டொனமூர் திட்டம் நடைமுறைக்கு வந்தால், இலங்கையை அச்சுறுத்தும் தீமைகளுக்கு ராமநாதன் தனது தீர்வாக, பிரதிநிதித்துவ அமைப்பில் ‘அதிகாரச் சமநிலை’ உறுதி செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்:

“பெரும்பான்மை, சிறுபான்மைச் சமூகங்களுக்குத் தேவையான, போதுமான பிரதிநிதித்துவத்தின் அளவைக் கருத்திற் கொள்ளும்போது, ஒன்று அல்லது இரண்டு கட்சிகள், மீதமுள்ளவற்றைவிட அதிகமாக வாக்களித்து அவர்களை ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்பதற்காக, ‘டெவன்சையர் பிரபு’ (Duke Devonshire) ‘அதிகார சமநிலை’ என்று அழைக்கப்படும் நன்கு அறியப்பட்ட கொள்கையையும் கருத்திற் கொண்டிருந்தார் ...

“ஆனால் இந்த வெளிப்பாட்டையோ அல்லது ‘அதிகார சமநிலையையோ’ டொனமூர் கமிசன்களின் திட்டத்திற்குப் பயன்படுத்த முடியாது. ஏனென்றால் அவர்கள் இனரீதியான பிரதிநிதித்துவத்தை ஒழித்து, உலகளாவிய பிராந்தியப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்... இந்தத் திட்டத்தில் சமநிலைப்படுத்த எதுவும் இல்லை. மாறாக, ஆளுநர் மனிங்கும், டெவன்ஷயர் பிரபுவும், 1923 ஆம் ஆண்டு (பிரிட்டிஷ்) அமைச்சரவையுடன் இணைந்து கூட்டாகச் சிந்தித்து முன்வைக்கப்பட்ட, மன்னரால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் அதிகாரத்தின் இறுதிச் சரிப்படுத்தலை, அது இல்லாமலாக்கிவிட்டது. ..”

சுருக்கமாகச் சொன்னால், கலப்படமற்ற உலகளாவிய வாக்குரிமையும் அதன் விளைவுகளும் தனது சொந்த சமூகத்திற்கும் ஏற்பட்டுவிடுமோ என்று ராமநாதன் அஞ்சினார். ஆனால் அவரும் அவரது சகோதரர் சேர். பொன்னம்பலம் அருணாசலம் ஆகிய இரண்டு சகோதரர்களும், தம்மைக் கெட்டித்தனமாகப் பயன்படுத்திக்கொண்ட சிங்கள சீர்திருத்தவாதிகளுக்குத் தங்கள் ஆதரவை வழங்கினர். சிங்கள சீர்திருத்தவாதிகளுக்கு இனி இவர்கள் தேவையில்லை என்று தெரிந்திருந்தும், அவர்களது அரசியல் மேடையில் இருந்து தாம் வெளியேற்றப்படுவோம் என்பதை அறிந்திருக்காமல், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தலைமைப் பாத்திரங்கள் காரணமாக, இந்தச் சகோதரர்கள் மகிழ்ச்சி அடைந்திருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.

1920களின் முற்பகுதியில், சேனநாயக்க சகோதரர்களான இளைய டொன் ஸ்டீபனும் மூத்த பிரான்சிஸ் ரிச்சட்டும், (மூத்த சேனநாயக்கவான இவர் அதே ஆண்டே அகால மரணமடைந்தார். இருந்திருந்தால் இவரே இலங்கையின் முதலாவது பிரதமராக இருந்திருப்பார்.) அருணாசலம் அவர்களால் எதிர்காலத்திற்காக வளர்த்தெடுத்து இருக்கக்கூடிய இலட்சியங்களை எதிர்த்தனர். கிடைக்கக்கூடிய ஆதாரங்களிலிருந்து அருணாசலம் தீவின் முதன்மைத் தேசியவாதத் தலைவராக இருக்கவே விரும்பினார் என்று முடிவுசெய்வது பொருத்தமாகவே இருக்கும். இதனால், எஃப்.ஆர். சேனநாயக்க, அருணாசலத்தை "தனது முக்கியத்துவம் குறித்து மிகைப்படுத்தப்பட்ட கருத்தைக் கொண்ட ஒரு சுயநலவாதி என்றும், அரசியலில் ஒரு தீவிரவாதி" என்றும் கண்டனம் செய்தார்.

டொனமூர் சீர்திருத்தங்களில் இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல, தமிழ்பேசும் மக்கள்தொகையின் மற்றப் பிரிவினரான முஸ்லிம்களும்கூட அதிருப்தி அடைந்திருந்தனர். முஸ்லிம் அரசியல் கருத்துகளின் மதிப்புக்குரிய தலைவரான டி.பி. ஜாயா (இவர் மலாய் வம்சாவளியைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும்), 'டொனமூர் கமிசன், இனரீதியான பிரதிநிதித்துவம்' என்பவை தொடர்பான தனது தீர்மானத்தை முடிவாக முன்வைக்கும்போது குறிப்பிட்டார்:

"....முழு முஸ்லிம் சமூகமும் காங்கிரசுக்கு எதிராக இருந்த ஒருநேரத்தில் நான் காங்கிரசில் சேர்வதற்காக, எனது வழியிலிருந்து வெளியேறினேன். [...] எனது மதிப்பிற்குரிய நண்பர்களிடம் நான் சொல்ல முடியும், தேர்தல்களின்போது நான் காங்கிரஸைக் கைவிட்டால் எனது சமூகத்தின் ஆதரவைப் பெறமுடியும் என்று எனக்குக் கூறப்பட்டது. நான் சுயநல நோக்கங்களால் தூண்டப்பட்டிருந்தால், நான் காங்கிரசைக் கைவிட்டிருப்பேன்...."

இலங்கைத் தமிழ், முஸ்லிம் எதிர்ப்பைத்தவிர, கண்டி - சிங்கள பிரபுக்களிடையேயும் சலசலப்புகள் இருந்தன. அவர்கள் பின்னர் தங்கள் கீழ்நாட்டுச் சிங்களச் சகாக்களுடன் கைகோர்த்தனர். மறுபுறம், கண்டிச் சிங்களத் தலைவர்கள் 1927 இல் ஆணைக்குழுவின் முன் தோன்றியபோது வடக்குக் - கிழக்கு மாகாணங்களின் தமிழ்ப் பகுதிகள், தாழ்நில சிங்கள மாகாணங்கள் (மேற்கும், தெற்கும்) என்பவற்றுடன் கண்டிய சிங்கள மாகாணங்களையும் இணைத்ததாகக்கொண்ட ஒரு கூட்டாட்சி அரசியல் அமைப்பைப் பரிந்துரைத்தனர்.

1831 ஆம் ஆண்டு கோல்புரூக் ஆணைக்குழுவின் வருகைக்கு கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, இலங்கை அரசியலமைப்புக் குறித்த ஒரு சிறப்புக் கமிசன் ஒன்று நியமிக்கப்பட்டது. (டொனமூர் கமிசன் என்று குறிப்பிடப்பட்ட) இந்தக் கமிசனில் அதன் தலைவரான டொனமூருடன் (Earl of Donoughmore), சேர். மேத்யூ நாதன், சேர். ஜெஃப்ரி பட்லர், டாக்டர் டி. டிரம்மண்ட் ஷீல்ட்ஸ் ஆகிய வேறு மூன்று உறுப்பினர்களும் இருந்தனர். திரு. பி.ஏ. கிளட்டர்பக் செயலாளராக இருந்தார். 1927 ஆகஸ்ட் 6 ஆம் திகதி ஆணையத்திற்கு வழங்கப்பட்ட விதிமுறைகளடங்கிய குறிப்பு, "இலங்கைக்குச் சென்று தற்போதுள்ள அரசியலமைப்பின் செயற்பாடுகள், அவை தொடர்பாக எழுந்திருக்கக்கூடிய நிர்வாகத்தின் சிக்கல்கள் குறித்து அறிக்கை அளிப்பது; நடைமுறையில் உள்ள கவுன்சில் ஒழுங்கில் ஏதேனும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமா? என்பதை முடிவு செய்வதற்கான ஏதாவது முன்மொழிவுகள் இருக்கின்றனவா என்பவற்றை



சேர். ஐவர் ஜென்னிங்ஸ்
Image Source : en.wikipedia.org

அறிவிப்பது” என்று தனது நோக்கங்களைத் தெரிவித்திருந்தது. ஆணைக்குழு 1927 அக்டோபர் 27 அன்று இங்கிலாந்தை விட்டு வெளியேறி, நவம்பர் 18 அன்று இலங்கைக்கு வந்து, 1928 ஜனவரி 18 வரை தீவில் தங்கி, ஜூன் 26, 1928 அன்று தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

ஒரு வகையில், டொனமூர் ஆணைக்குழுவினர் பல்லினத்தன்மையால் ஏற்படும் பிரச்சினைகளை வேறுவிதமாகப் பார்க்க முனைந்தனர். அவர்கள் அதை ‘அரசியல் உடலத்தின்’ முக்கியத்துவத்தையே விழுங்குகின்ற ஒரு நோய் என்று அழைத்தனர். அவர்களின் அறிக்கையின் 31 ஆம் பக்கத்தில் அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்:

“... (அங்கே)..மக்கள் தொகையினர் ஒரே மாதிரியானவர்களாக இல்லை என்பது மட்டுமல்ல, அவர்களிடையே நிலவும் பல்வேறு வகைப்பட்ட கூறுகள் காரணமாக, ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையும் சந்தேகமும் கொண்டவர்களாக இருக்கின்றனர். இலங்கையில் நிலவும் தேசபக்தி என்ற கருத்து, தேசியத்தைப் போலவே இனரீதியானது என்றும், நாட்டின் சிறந்த நலன்கள், அந்நாட்டு மக்களது ஒரு குறிப்பிட்ட பிரிவின் நலனுடன் சம்பந்தப்பட்டவையாக உள்ளன என்றும் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் இது. இந்தக் கண்ணோட்டத்தில் இருந்து, முழுப்பொறுப்புள்ள ஓர் ஒற்றை அரசாங்கத்திற்கான கோரிக்கையை ஆய்வு செய்தோமானால், அதற்கான ஆதரவாளர்கள் எப்போதும் பெரிய சமூகங்களை உருவாக்குபவர்களில் இருந்து வருபவர்களாகவே இருப்பார்கள். கூடவே அவர்கள் வெளிப்புறக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டால், அவர்களால் தம்மிடமிருந்து கருத்து வேறுபாடு கொண்ட அனைவரின்மீதும் தங்கள் விருப்பத்தைத் திணிக்க முடியும் என்பது தெளிவாகும். மறுபுறம், சிறுபான்மைச் சமூகங்களை உருவாக்குபவர்கள், வேறு எந்தவகையிலும் ஒன்றுபட்டு இருந்தாலும், இந்த முன்மொழிவுக்கு தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதில் உறுதியாக இருக்கின்றனர்......”

இந்தச் சிக்கலில் இருந்து விடுபடுவதற்கான நியாயமான வழியாக, ஆணையாளர்களுக்குச் செய்யக்கூடியதாக இருந்ததெல்லாம், (அ) ஒரு பாரபட்சமான சட்டம் அறிமுகப்படுத்தப்படும்போது, ஆளுநருக்கு அதிகாரங்களை ஒதுக்கி வைப்பதைத் தீர்வாக வழங்குவது - அதை அவர்கள் செய்தார்கள்; (ஆ) சிறிய சிறுபான்மையினருக்கான பிரதிநிதித்துவத்தில் அதிக முக்கியத்துவம் காட்டுவது - இதில் அவர்கள் ஆளுநரால் பரிந்துரைக்கப்படும் உறுப்பினர்களின் வரையறுக்கப்பட்ட ஒதுக்கீட்டை மட்டுமே வழங்குவது என்ற மிகப்பெரிய தவறைச் செய்தனர்; (இ) தெரிவில் நியாயத்தன்மையை உறுதி செய்வதற்கான ஒரு சுயாதீன பொதுச்சேவை ஆணையத்தைக் கொண்டிருத்தல் - இந்தப் பணி ஓரளவுக்கு மட்டுமே செயற்படுத்தப்பட்டது.

இருப்பினும், டொனமூர் திட்டங்களைச் செயற்படுத்துவது என்று வரும்போது, அந்தத் திட்டத்தின் உண்மையான செயற்பாடு விரும்பத்தக்கதாகவே இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இறுதியில் அதிகாரம் ஆளுநரிடமும் மூன்று பிரிட்டிஷ் ‘அரச அதிகாரிகள்’ கைகளிலும் குவிந்திருந்தது: பொதுச்சேவைகள், வெளிவிவகாரங்கள், பாதுகாப்பு என்பவற்றுக்குப் பொறுப்பான தலைமைச் செயலாளர்; வரவு செலவுத் திட்டம், கணக்கியல், நிதி விவகாரங்களுக்குப் பொறுப்பான நிதிச் செயலாளர்; சிவில் சட்டம், ஒழுங்கு, நீதி,

சட்ட வரைபு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டச் செயலாளர் ஆகியோரே அந்த மூவரும் ஆவர்.

சட்டமன்றம் - மாநில கவுன்சில் - ஏழு நிர்வாகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு குழுவும் தேர்ந்தெடுக்கும் அதன் தலைவர், அக்குழுவுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சரானார். கொமிசனர்கள் இவ்விடத்தில் ஒரு தவறு செய்ததாகத் தோன்றியது. 1920கள் முழுவதுமான நிதிக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக, குறிப்பாகப் பொது ஊழியர்களை அது நடாத்திய விதம், உட்படுத்திய விசாரணை முறைகள், ஏற்படுத்திய அவமானங்கள் போன்றவற்றை அவர்கள் கடுமையாக விமர்சித்திருந்தாலும்கூட, இப்போது அவர்களால் முன்மொழியப்பட்ட ஏழு நிர்வாகக்குழுக்களிலும் ஏழு 'நிதிக்குழுக்களை' உருவாக்கினர்; இந்த நிர்வாகக்குழுக்களில் தாங்கள் நடாத்தப்பட்டமுறை குறித்து பல பொது ஊழியர்கள் கசப்புடன் புகார் கூறினர்.



டொனமூர்
Image Source : i0.wp.com/thuppahis.com

நிர்வாகக்குழுக்களின் தலைவர்கள் (அமைச்சர்களாக ஆனவர்கள்) கொள்கையின் முக்கிய விஷயங்களுக்கு கூட்டாகப் பொறுப்பு வகிக்கின்ற, ஒருமித்த எண்ணம் கொண்டவர்களாக, ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் போலச் செயற்படவில்லை. ஒவ்வொருவரும் அவரவர் வழியில் சென்றனர், தம்மை நினைவுகூரக்கூடிய வகையிலமைந்த ஓர் கட்டிடத்தை உருவாக்குவதில் ஒவ்வொருவரும் ஆர்வமாக இருந்தனர்; செயற்பாடுகள் கணிசமான இடைவெளிகள் நிறைந்தவையாகவும், ஒரேமாதிரியான வேலையை ஒருவரைப் பார்த்து நகல்போல இன்னொருவர் செய்வதாகவும் இருந்தது. ஏழு அமைச்சர்களும் மூன்று அரசு அதிகாரிகளும் சேர்ந்து அமைச்சரவையை அமைத்தனர். இருப்பினும் ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்டத்தின் கட்டுப்பாடு இல்லாதவகையிலேயே அவர்கள் இந்த அமைச்சரவையை அமைத்திருந்தனர்; ஆளுநர் கல்டெக்கொட் 1938 இல் எழுதியதுபோல, அமைச்சர்கள் குழு 'நீலப்பென்சிலை மட்டுமே' பயன்படுத்தியது (அதாவது, ஏனோதானோ என்று நடந்தது - மொர்). அரசியலமைப்பின் கடைசி ஆண்டுகளில், இலங்கை ஆளுநரான சேர் ஹென்றி மாங்க்மேசன் மூர், மாநில சபையின் தலைவரும், அமைச்சர்கள் குழுவின் துணைத்தலைவருமான (தலைமைச் செயலாளர்தான் சபையின் முன்னாள் தலைவர்) டொன் ஸ்ரிபன் சேனநாயக்கவை, ஒருவகையில் பிரதமராகவே பார்க்கத் தொடங்கியிருந்தார். இந்த அரசியலமைப்பு மாற்றங்கள் கொழும்புக்கு மேலும் அதிகாரம் குவிவதை முன்னறிவிப்பவையாகவே இருந்தன. கூடவே, மாநிலத்துறைகளில் ஏதாவது விஷயங்களைச் செய்ய விரும்பும் தொகுதியினர், அங்கு செல்ல வேண்டியிருந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களது வழக்கமாக வார இறுதி வருகைகள்மூலம் தமது தொகுதிகளைக் கவனித்துக் கொண்டார்கள் என்பது உண்மைதான் என்றபோதும், கொழும்பிலேயே இந்த விடயங்களைக் கூடியளவு விரைவான, நியாயமான வேகத்தில் செய்யக்கூடியதாக இருந்தது.

தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயிக்கும் முறையானது, சிங்கள மக்கள் தொகைரீதியாக அதிக செறிவுள்ள தென்மேற்குப் பகுதிக்கு அதிக இடங்களை வழங்கியது. டொனமூர் ஆணைக்குழு, ஒரு தொகுதியின் மக்கள்தொகையை 70,000 முதல் 90,000 வரை அதிகரிப்பதன்மூலம் தொகுதிகளை மறுவரையறை செய்யுமாறு பரிந்துரைத்தது. இதன்பொருள் என்னவென்றால், தென்மேற்கு பகுதியிலும் அதைச் சுற்றியும் மிகப்பெரிய தொகுதிகள் இருக்கும் நிலை ஏற்படும். மீண்டும் ஒருமுறை கொழும்பின் முக்கியத்துவம் - அது இந்தப் பகுதியில் இருப்பதால் - அதிகரித்தது. இதன்விளைவாக, ஒருவகை உள்ளகரீதியான காலனித்துவம் உருவாகியிருந்தது. அதன் புறநகர்ப்பகுதிகள், கொழும்பின் வணிகர்கள்

மற்றும் இடைத்தரகர்களால் அதிகளவில் சுரண்டப்பட்டன. இன்னொரு வகையில் சொல்வதானால், கொழும்பில் ஒற்றையாட்சியின் முக்கியத்துவம் அரசியல்ரீதியாக நிலைநிறுத்தப்பட்டதுடன், நகரத்தின் பொருளாதார நடவடிக்கைகள் 'விழுதுகள்' போல மிகப்பரவலாகப் பரவியிருந்ததால், எந்த வெளிப்புறச்சக்தியும் அதைச் சுவாலுக்கு உள்ளாக்குவது என்பது கடினமாக இருந்தது. இந்த நிலைபற்றி, டொனமூர் ஆணைக்குழுவினர் இவ்வாறு குறிப்பிட்டதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை:

''மத்திய அரசாங்கத்தின் வளர்ச்சியடைந்த வகையிலமைந்த அமைப்புமுறையுடன் ஒப்பிடும்போது, மாகாண அரசாங்கத்தின் பழமையான அமைப்புமுறை மிகவும் கவனத்துக்குரிய ஒன்றாகத் தெரிகிறது.... கொழும்பில் வாழ்கின்ற படித்த மேற்கத்தைய மயமயமாக்கப்பட்டுள்ள வகுப்பினர்களுக்கும், கிராமங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள, அவர்கள் ஒரு குடாவாகப் பிரிக்கப்பட்டிருப்பது போன்ற பாரிய இடைவெளி, ஒருவகையிலும் நம்பமுடியாத அளவுக்கு வியப்புக்குரிய ஒரு முரண்நிலையை உருவாக்கிவிட்டுள்ளது."

இவ்வாறு அதிகளவில் மையப்படுத்தப்பட்டிருக்கும் அரசியலுக்கு மாற்றாக, மாகாண சபைகள்மூலமாக ஒருங்கிணைப்பு அமைப்புகளை உருவாக்குவதற்கு ஏற்ற சாத்தியமான அம்சங்களை ஆராய முயற்சிக்க வேண்டும் என்று டொனமூர் ஆணைக்குழுவினர் பரிந்துரைத்தனர். "மத்திய அரசின் சில நிர்வாகச் செயற்பாடுகளை ஒப்படைக்க முடியும்", "பொதுப்பணிகள், தகவல் தொடர்பு, நீர்ப்பாசனம், விவசாயம், மருத்துவம், சுகாதார சேவைகள், கல்வி, நிதி, பொது நிர்வாகம் தொடர்பாக பெரிய (எனது அழுத்தம் - ஆர்) அதிகாரங்கள் இருக்க வேண்டுமா?" என்பது குறித்துப் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கூறினர்.

இருப்பினும், "தீவின் கட்டளைச் சட்டங்கள் (Ordinances), (அந்தச்) சட்டங்களின் அதிகாரத்தின்கீழ், மத்திய அரசால் உருவாக்கப்பட்ட விதிகள், ஒழுங்குமுறைகள் என்பவற்றுக்கு" உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். கூடவே, மத்தியின் பொது வருவாயிலிருந்து நிதி வழங்க வேண்டும் என்றும், மாகாண சபைகளுக்கு நேரடி வரிவிதிப்புமூலம் தங்கள் வருவாயில் கணிசமான பகுதியைத் திரட்ட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் பரிந்துரைத்தனர். தவிரவும், இலங்கைச் சட்டமன்ற உறுப்பினர்கள் நாட்டிலுள்ள பல்வேறு பல்லினக் குழுக்களின் உடல், மன நிலைமைகளைப் பற்றி அறிந்து கொள்வதும் விரும்பத்தக்கது என்றும் ஆணைக்குழுவினர் கருதினர். இந்த நோக்கத்தின் அடிப்படையில் அவர்கள் இன்னுமொரு கூட்டாட்சி அம்சத்தை முன்மொழிந்தனர். அதாவது, சட்டமன்றக் கூட்டங்கள் கண்டியிலும் (மலைநாடான கண்டி, சிங்களவர்களின் முக்கிய நகரம்), யாழ்ப்பாணத்திலும் (வடக்கு இலங்கைத் தமிழர்களின் முக்கிய நகரம்) நடத்தப்பட வேண்டும். இது உறுப்பினர்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருக்க உதவும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆனால், இந்தக் கூட்டாட்சிப் பரிந்துரைகள் எவையும் - மாகாண சபைகளோ அல்லது கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் அமைந்த சட்டமன்றக் கூட்டங்களோ - செயற்படுத்தப்படவில்லை. அப்படி நடந்திருந்தால், அவற்றால், பிற்காலங்களில் தீவில் எழுந்த நோய்களைக் குறைப்பதற்கு உதவ முடிந்திருக்கக்கூடும்.

மறுபுறத்தில், சிங்களத் தலைமை, சிறுபான்மை இனக்குழுக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள எந்த விருப்பத்தையும் காட்டவில்லை. ஏழு நிர்வாகக்குழுக்களாகப் பிரிக்கப்பட்ட டொனமூர் அமைப்பு, சிறுபான்மை இனப்பிரதிநிதிகளுக்கு டொனமூர் நிர்வாகக்குழுவான அமைச்சர்கள் குழுவிற்கான தேர்தலில் பங்கேற்க சில வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டது. 1931 ஆம் ஆண்டு நடந்த முதலாவது பொதுத்தேர்தலுக்குப் பிறகு, இனச் சிறுபான்மையினரின் இரண்டு பிரதிநிதிகளாக ஒரு இந்தியத் தமிழரும், ஒரு முஸ்லிமும், அமைச்சர்கள் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1931 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை வடக்கு மாகாணத் தமிழர்கள் புறக்கணித்தனர்; எனவே, வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நான்கு இடங்களுக்கு எந்த வேட்பாளரும் போட்டியிடவில்லை. பின்னர் இந்தப் புறக்கணிப்பு 1934 இல் வாபஸ் பெறப்பட்டது.

வடக்கு மாகாணத் தமிழர்கள் பங்கேற்றிருந்தால், மாகாணத்திலிருந்து குறைந்தபட்சம் ஒரு தமிழராவது சபையில் இடம் பெற்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது என்றாலும் உண்மையில் இது கேள்விக்குரியது. ஏனென்றால், கிழக்கு மாகாணத்தில் உள்ள இரண்டு தமிழ் இடங்களுக்கும் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அமைச்சரவைக்குத் தேர்ந்தெடுக்க இரண்டு கிழக்கு மாகாணத் தமிழர்கள் இருந்தனர். ஆயினும் இந்த இருவரும் அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

அமைச்சர்கள் குழுவில் இருந்த அந்த இரண்டு சிறுபான்மை இனப் பிரதிநிதிகளும், அரசியலமைப்பை மேலும் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற ஒருமித்த கோரிக்கையைக் காலனிகளுக்கான வெளியுறவுத்துறைச் செயலாளரிடம் முன்வைக்கும் முயற்சியில், தங்களது சிங்கள சகாக்களுடன் ஒத்துழைக்கவில்லை. எதிர்காலத்தில் கொண்டுவரப்படும் சீர்திருத்தப்பட்ட எந்தவொரு அரசியலமைப்பிலும், சிறுபான்மையினருக்குச் சரியான பாதுகாப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதையே இந்த இரண்டு அமைச்சர்களும் உறுதிப்படுத்த விரும்பினர். இத்தகைய மாறுபட்ட கருத்துகளைத் தவிர்க்க, 1936 பொதுத்தேர்தலுக்குப் பிறகு ஒரு பரந்த சிங்கள (Pansinhala) அமைச்சர்கள் குழு தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன்மூலம் அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக ஒரு செயற்கையான, பொதுக்கருத்துப் பெற்றுக்கொள்ளப்பட்டது. கூடவே இதன்மூலம், இந்த 'அகன்ற சிங்கள' சபையானது, கிடைக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட எல்லா வளங்களிலும், பொதுச் சேவைகளுக்கான நியமனங்களிலும் முடிந்தளவுக்குப் பெரும்பான்மை இனத்தவர்களுக்குகே அவை கிடைக்ககக்கூடிய விதத்திலான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. ஆயினும் வெள்ளையர்களுக்கோ, இந்த நடவடிக்கைகள் எவையும் பாரபட்சமானவை என்பதற்கான போதுமான சான்றுகளாகப் படவேயில்லை.

இருப்பினும், பிரச்சினை தொடர்பாக இன்னும் பல அடிப்படையான கேள்விகள் இருந்தன. சர்வஜன வாக்குரிமை, பிராந்தியரீதியாக அமைக்கப்பட்ட தேர்தற் தொகுதிகள் மூலமான சிங்கள இனப் பெரும்பான்மையினரின் ஆட்சி என்பவை அறிமுகப்படுத்தப்பட்டன. இனப் பெரும்பான்மையினரின் பிரதிநிதிகளிடம், சிறுபான்மை இனத்தினரைச் சமரசம் செய்து மீளிணைத்துக் கொள்ளும் அதேவேளை, தங்கள் சொந்தத் தொகுதியினரான பெரும்பான்மை மக்களை எவ்வாறு திருப்திப்படுத்துவது என்ற கேள்வி எழுந்தது. சர்வஜன வாக்குரிமை உருவாக்கப்பட்ட ஆண்டுகளில் இந்தப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை; அதற்குப் பதிலாக, 1505 ஆம் ஆண்டு முதல் மேற்கத்தியர்களான போர்த்துகீசியர்கள் வந்ததிலிருந்து காலனித்துவச் சக்திகளின் ஒடுக்குமுறை காரணமாகப் பாதிக்கப்பட்ட சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வைச் சரிசெய்யத் தாம் முயற்சிப்பதாகக் கூறி, சிங்களத் தலைவர்கள் தங்கள் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வந்தனர். இரண்டு பெரிய இனக்குழுக்களின் உயரடுக்கினருக்கும் இடையேயான 'சமூக கூட்டுறவு' தொடர்பாகச் செய்யப்படும் ஓர் ஆய்வு முயற்சியினூடாக, முன்னர் இருந்த உரசல்களையும், கசப்புகளையும் தடுத்திருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கவே செய்தது. ஆனால், மாறாக, 'தனித்தனியான சுயாட்சி'யோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் பெரும்பான்மை இன சமூகத்தின் உயரடுக்கினரால் கடுமையாக எதிர்க்கப்படுவதே நடந்தது.

இனரீதியாக ஒரே இனத்தவர்களைக் கொண்ட குழுவை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைச் சிங்கள அமைச்சர்கள் குழு தெரிவித்தபோது, (அதன் நோக்கம் பற்றிய) சந்தேகமோ ஊகிக்கும் திறமையோ அற்ற ஆளுநரான சேர். அன்ரூ கல்டேகொட், அது தொடர்பாக எத்தகைய மறுத்துரைப்புமின்றி வாளாவிருந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம், இந்த அமைச்சர்கள் குழுவின் (193-16) கோரிக்கைகளை, அவர்களிடையே எந்தவகையான உடன்பாடோ கருத்து ஒருமித்ததன்மையோ இல்லாத காரணத்தால், ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது என்று அவர்கள் கூறினர்.

சோல்பரி கமிஷன், 'பெரும்பான்மையினரின் செயல், சிறுபான்மையினருக்குத் தீங்குவிளைவிக்கும் வகையில், தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான ஒரு கொள்கையை வெளிப்படுத்தியிருப்பதாகவே குறிப்பிடப்படலாம்' என்று கூறியது. அதேநேரத்தில் கமிஷனின் உறுப்பினரான சேர். பிரடெரிக் ரீஸ், சில ஆண்டுகளுக்குப் பிறகு, "சிங்களவர்கள் ஆதிக்கத்தையே நோக்கமாகக்

*கொண்டுள்ளனர் என்பதை சிறுபான்மையினர் இயல்பாகவே முன்னெப்போதையும்விட அதிகமாகவே புரிந்துகொண்டிருந்தனர்" என்று குறிப்பிட்டார். தவிரவும், டொன் ஸ்ரிபன் சேனநாயக்காவின் அரசியலமைப்பு ஆலோசகராகச் செயல்பட்ட சேர். ஐவர் ஜென்னிங்ஸ் எழுதினார்: "1936 ஆம் ஆண்டு சிங்களவர்களைக்கொண்ட 'பரந்தசிங்கள' அமைச்சரவையைவிடக் குறைவான, அவர்களைத் திருப்திப்படுத்தும் எதையும் கற்பனை செய்வது கடினம். இவை அனைத்தும், எங்களுக்கு 1921 இல் இலங்கை தேசிய காங்கிரஸ் சிதைவுண்டபோது சேர். பொன்னம்பலம் ராமநாதன் வெளிப்படுத்திய கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் விடக்கூடிய நிலைமையைக் கடினமாக்கிவிட்டுள்ளது:*

*"இந்த [சிங்களத்] தலைவர்கள், அமைச்சகங்கள், அதிக சம்பளம், ஏராளமான ஆதரவுடனான சுயராச்சியம் என்பவற்றிற்கான சாத்தியங்களைக் கண்டபோது, சிறுபான்மைச் சமூகங்கள் போதுமான பிரதிநிதித்துவத்தையும், நிர்வாகத்தில் அவர்கள் பங்குபெற்றுக் கொள்வதையும் தவிர்க்கவே முயன்றனர்."*

*1954 இல் சேர் பிரடெரிக் ரீஸ் துல்லியமாக இதுபற்றி இவ்வாறு எழுதினார்: "டொனமூர் ஆணைக்குழுவினர்கள் பிராந்தியப் பிரதிநிதித்துவத்துக்கு ஆதரவான ஒரு முடிவுக்கு வந்ததற்கான காரணம், ஒருவகையில் ஒரு பாரம்பரியக் கட்டமைப்பில் மேற்கத்திய யோசனையொன்றின் தாக்கம் எப்படி அமையும் என்பதைப்பற்றிய முழுமையான உணர்திறன் அவர்களிடம் இருக்கவில்லை என்பதாலாக இருக்கக்கூடும்."*

*முன்மொழியப்பட்டிருந்த ஒற்றையாட்சி அரசியல்முறைமை காரணமாக ஏற்படக்கூடிய பரந்துபட்ட மக்கள் கிளர்ச்சிகளைச் (அல்லது எழுச்சிகளைச்) சுட்டிக்காட்டக்கூடிய ஏராளமான சான்றுகள் இருந்தபோதிலும், ஏகாதிபத்தியவாத விசாரணை நடுவர் ஒரு மிக இலேசான, ஒருவகை அலட்சியப்போக்கையே கடைப்பிடிக்க விரும்பினார். 1937 நவம்பர் மாதம், காலனிகளுக்கான வெளியுறவுச் செயலாளர் ஓசம்ஸ்பி கோர் (Ormsby Gore), ஆளுநர் கல்டெகட்டிடம், ஏனைய பலவிடயங்களுடன் சேர்த்து (1) மேலதிக விளக்கங்களுக்காக, ஆளுநருக்கான விசேட அதிகாரங்கள் (2) நிறைவேற்றுக்குழுக்களும், மாநில சபைகளும் (3) சிறுபான்மைச் சமூகங்களும் அவர்களின் பிரதிநிதித்துவமும் (4) வாக்குரிமை - ஆகியவற்றையும் கவனத்துக்கு உட்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.*

*இந்த நேரத்தில் கல்டேகொட் அவர்கள், ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களாலும் அவரது தமிழ் ஆதரவாளர்களாலும் தொடங்கப்பட்டிருந்த சமச்சீரான பிரதிநிதித்துவத்திற்கான ('ஐம்பதுக்கு ஐம்பது' என்று அழைக்கப்பட்டது - சட்டமன்றத்தில் 50 சதவீத இடங்கள் சிங்களப் பெரும்பான்மையினருக்கு ஒதுக்கப்படுவதையும், மீதமுள்ள 50 சதவீதம் சிறுபான்மை சமூகங்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவதையும் இது குறிக்கிறது.) பிரசாரத்தின் தாக்கத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பெரும்பான்மைச் சிங்கள இன மக்களின் 'கோபத்தை'க் கட்டுப்படுத்த இதுவே ஒரே வழி என்று பொன்னம்பலம் நம்பினார். ஆயினும், அவரது இந்தத் கோரிக்கையின் தர்க்கத்தால் கல்டேகொட்டோ அல்லது சோல்பரி ஆணைக் குழுவினர்களோ ஈர்க்கப்படவே இல்லை. கூடவே, இந்த அதிகாரத்தின் ஆணவத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற ஓர் உறுதியான வழியைப் பரிந்துரைப்பதற்கு இந்த ஏகாதிபத்திய நடுவர்களும் தயாராக இருக்கவில்லை. சுதந்திரங்களுக்கான சாசனம், நீதித்துறையின் சுதந்திரத்தைப் பேணுவதற்கான அதிகபட்சப் பாதுகாப்பு போன்ற விடயங்கள் பயனுள்ள சோதனைகளாக இருந்திருக்க முடியும். ஆனால் கல்டேகொட்டும் சோல்பரி ஆணைக்குழுவினர்களும் வித்தியாசமாகச் சிந்தித்தார்கள். நிறைவேற்றுக்குழு அமைப்பை, சற்று மாற்றியமைக்கப்பட்ட ஓர் அமைச்சரவை அரசாங்கத்துக்கு மாற்றுமாறு, கல்டேகொட் பரிந்துரைத்தார். சமச்சீர்ப் பிரதிநிதித்துவத்திற்கான கோரிக்கைக்கு அவர் தனது முழுமையான எதிர்ப்பையும் தெரிவித்தார். ஆனால், டொனமூர் அரசியலமைப்புக்குப் பின்னான அரசியலமைப்பு உருவாக்குதலில் ஈடுபட்டவர்களுள், ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கைக்குப் பதிலான ஒரு மாற்றாக சிறுபான்மையினது பிரதிநிதித்துவத்தில் ஒரு வகையான அதிகப்படுத்தல் (Weightage) என்ற யோசனையை முதன்முதலில் கொண்டுவந்தவரும் அவர்தான். கல்டேகொட்டின் இந்தப் பரிந்துரை பின்னர் அரசியலமைப்புத் திட்டத்தை வகுக்கும்படி அமைச்சர்கள் குழுவிடம் கேட்கப்பட்டபோது, சேர். ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டு மாற்றப்பட்டது. 1943 மே 26 அன்று மாட்சிமை தங்கியவரது (பிரித்தானிய மன்னர்) பிரகடனத்தில்*

குறிப்பிடப்பட்டுள்ள வகையில், அது மாநிலச் சபையின் அதிகாரிகள், சபாநாயகர் அல்லது பிற தலைமை அதிகாரிகளைத் தவிர்த்து, சபையின் உறுப்பினர்களில் 75 சதவீத உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றால், அந்தத் திட்டத்தைச் செயற்படுத்த முடியும் என்று பிரித்தானியா ஒப்புக்கொண்டது. இதற்கிடையில், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரும் மாநில கவுன்சிலின் தலைவருமான சேர். டொன் பரோன் ஜெயதிலகா 1943 இல் புது டில்லியில், இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் செல்வதற்காகப் பதவி விலகியபோது, 'பரந்தசிங்கள' அமைச்சர்கள் குழுவில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அவருக்குப் பதிலாக, இலங்கைத் தமிழரான (சேர். பொன்னம்பலம் அருணாசலத்தின் மகன்) அருணாசலம் மகாதேவா, முதன்மையான இலங்கைத் தமிழ் யாழ்ப்பாணத் தொகுதியின் மாநில சபை உறுப்பினராக, தேர்ந்தெடுக்கப்பட்டார். மகாதேவாவின் தெரிவை, அவர்களது மனமாற்றத்திற்கான ஒரு சான்றாகக் கொள்ளமுடியாது. இன ஒற்றுமை தொடர்பான குற்றச்சாட்டைத் திசை திருப்புவதிலேயே சபை ஆர்வமாக இருந்தது.

1943 மே 26 ஆம் திகதியப் பிரகடனத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைய ஓர் அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சியில் அமைச்சரவை இப்போது இறங்கியது. சேர். ஐவர் ஜென்னிங்ஸ் ஆலோசகராகவும், சட்ட வரைவாளராகவும் செயற்பட்டார். அமைச்சர்களது வரைவுத் திட்டம் (அமர்வு அறிக்கை - XIV, 1944) என்று அழைக்கப்பட்ட அந்த அறிக்கையின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், பொது ஊழியர்கள், நீதிபதிகள் போன்ற வேலைகளுக்கான ஆட்சேர்ப்பை மேற்கொள்ளவும், நியமிக்கவும் சுயாதீன அமைப்புகள் பொறுப்பாக இருக்கும். இவற்றின்மூலம், சிறுபான்மைச் சமூகங்களுக்கான பல்வேறு பாதுகாப்புகள், அரசியலமைப்பில் எந்தவொரு திருத்தத்தையும் இயற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்படும் ஒரு கடுமையான அரசியலமைப்பு, இனச் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்திற்கான எடையை வழங்கும் பிரதிநிதித்துவத் திட்டம் ஆகியவை இந்த வரைபில் அடங்கியிருந்தன. 101 உறுப்பினர்களைக்கொண்ட இந்தச் சபையில் இலங்கைத் தமிழர்களுக்கு 1214 இடங்களும், இந்தியத் தமிழர்களுக்கு 108 இடங்களும், முஸ்லிம்களுக்கு 64 இடங்களும் வழங்கப்பட்டிருக்கும். இருப்பினும், சுதந்திரம் அடைந்த சில மாதங்களுக்குள், டொன் ஸ்டீபன் சேனநாயக்காவின் அரசாங்கம் (194-752) 1948 ஆம் ஆண்டுக் குடியுரிமைச் சட்டத்தையும், 1949 ஆம் ஆண்டு இந்திய மற்றும் பாகிஸ்தானிய குடியிருப்பாளர்கள் (குடியுரிமை) சட்டத்தையும் இயற்றியது. இவை இரண்டும் பிரதிநிதித்துவத்துக்கான நிலைமையை முற்றிலுமாக மாற்றியமைத்தன. சிங்கள அரசியல் விஞ்ஞானி ஐ.டி.எஸ். வீரவர்த்தன, 'சிறுபான்மையினர்களும் குடியுரிமைச் சட்டமும்' என்ற தலைப்பில் எழுதிய ஒரு கட்டுரையில், இந்தியர்களின் வாக்குரிமைப் பறிப்பு "அனைத்துச் சிறுபான்மையினருக்கும் மறுக்கப்பட்ட ஓர் உறுதிமொழியே" என்று சரியாகவே குறிப்பிட்டிருந்தார். தவிரவும், "சோல்பரி அரசியலமைப்பின் தார்மீக அடிப்படை ஒற்றையாட்சி அரசாக இருந்து வருகிறது." என்றும் குறிப்பிட்டிருந்தார்.

வளர்ந்து வரும் அரசியற் சூழ்நிலை குறித்த வீரவர்த்தனவின் யதார்த்தமான மதிப்பீடு இதுவாக இருந்தபோதும், பிரதிநிதித்துவத்தில் அதிக முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பது சிறுபான்மைச் சமூகங்களுக்கு இன்னும் அதிக சிறப்பாக இருக்கும் என்று நம்பிய சோல்பரி ஆணையாளர்கள், உண்மையில் ஏமாற்றப்பட்டிருந்தனர். அவர்களின் அறிக்கையின் பத்தி 270 இல், அவர்கள் இவ்வாறு எழுதினார்கள்:

"இந்தத் திட்டத்தின் செயற்பாட்டை விளக்குவதற்குப் புள்ளிவிவரங்கள் எங்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் எங்களுக்கு முன் வந்த பல சாட்சிகளின் உதவியுடன் நாங்கள் அதை ஆராய்ந்தோம். இதன் விளைவாக, தேர்ந்தெடுக்கப்பட்ட 95 இடங்களில், 58 சிங்கள வேட்பாளர்கள், இலங்கைத் தமிழர்கள் 15, இந்தியத் தமிழர்கள் 14, முஸ்லிம்கள் 8 பிரதிநிதித்துவம் செல்லும் என்றும், 6 பரிந்துரைக்கப்பட்ட இடங்களுடன் 101 பேர் கொண்ட சபையில் 43 பேர்களைக் கொண்ட சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் இருக்கும் என்றும் அதன் பரிந்துரைப்பாளர்கள் மதிப்பிடுகின்றனர்".

இத்தகைய திட்டத்தின்கீழ், சிறுபான்மையினரின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் ஒரு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டால், சிறுபான்மை குழுக்கள் ஒன்றிணைந்து, இனப் பெரும்பான்மையினர் தங்களைத் தடுப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளைத் தடுக்கலாம் என்று

நிச்சயமாக வாதிடலாம். சிறுபான்மையினர் ஒற்றுமையாகச் செயற்பட முடிவு செய்திருந்தால், சட்டமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவது சிங்களப் பெரும்பான்மைக்குக் கடினமாக இருந்திருக்கும்.

இருப்பினும், இது நடக்கவில்லை. சுதந்திரத்திற்குப் பிந்தைய தசாப்தங்களில், சிங்களவர்கள்சார்ந்த 'தேசிய' கட்சிகள் (சிங்களவர்களைப் பெரும்பான்மையகக் கொண்ட தொகுதிகளில் போட்டியிடும் கட்சிகள் என்று பொருள் கொள்கிறோம்.) இந்தியத் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்த பிறகு, அவர்களுக்குச் செல்லவிருந்த 814 இடங்களை இணைத்து, பின்னர் இனப் பெரும்பான்மையினருக்குச் சாதகமான வாய்ப்புகளை வழங்கும் சட்டத்தை இயற்றியதற்கான சான்றுகள் உள்ளன.

இது மட்டுமே ஒரு வழியாக இருக்கவில்லை. சோல்பரி கமிஷன், பிரதமரைக்கொண்ட முறைமையிலான ஓர் அரசாங்கத்தினை வழங்கியது. இதன் காரணமாக, ஒரு பிரதமர் அவரின்கீழ் இயங்கும் அமைச்சரவை இலாகாக்கள், பொதுச் சேவைகள், பொதுத் துறைகளுக்கான முக்கியமான நியமனங்கள் உள்ளிட்ட அனைத்தினதும் ஆதரவைப் பெறுகிறார். அவரே, கௌரவங்களும் பட்டங்களும் பதவிகளும் வழங்கும் ஒரு பேரூற்றாகவும் மாறுகிறார். சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த முன்னணி உறுப்பினர்களை, அரசாங்கப் பதவிகளில் இணைத்துக் கொள்வதற்கு இதைவிடச் சிறந்த வழி எதுவும் இல்லை.

இந்தியத் தமிழர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின்கீழ், சிறுபான்மை இனக்குழுக்களுக்கு இருந்த கூடுதல் இடங்களுக்கான ஏற்பாடு இல்லாமலாகிவிட்டது. இது அரசியலமைப்பில் இருந்த, இணக்கப்பாட்டுடன் கூடிய செயற்பாடுகள் மூலமாக உருவாகியிருக்கக்கூடிய, நல்லிணக்கச் சூழலையும் சீர்குலைவுக்கு உள்ளாக்கியிருந்தது. 'வெஸ்ட்மின்ஸ்டர்' (*Westminster*) மாதிரியைத் தழுவுவதில் தீவு வெற்றிபெறும் என்று சோல்பரி ஆணையர்கள் நம்பியதற்கு நான்கு காரணங்கள் இருந்தன:

1. அரசியலமைப்பின் பிரிவு 29 (2) 'அமைச்சரின் வரைவுத் திட்டத்தி'லிருந்து எடுக்கப்பட்டு, சிறுபான்மையினருக்குக் கூடுதல் பாதுகாப்பை வழங்க ஆணைக்குழுவினர்களால் மறுசீரமைக்கப்பட்டமை. பிரிவு 29 (2) இனை, ஒட்டுமொத்தமாக ஓர் உரிமைகள் குறித்த மசோதா எப்படி இருக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் பார்த்தால், அது முற்றிலுமே வலுவிழந்த ஒரு வடிவமாகும். இலங்கை நாடாளுமன்றம், வேறெந்த இன, மதக் குழுக்களுக்கும் இல்லாத வகையில், ஒரு குறிப்பிட்ட இன அல்லது மதக் குழுவிற்கு மட்டும் எதிராகவோ பாரபட்சமாகவோ சட்டம் இயற்றுவதைத் தடுத்தது. ஒரு சக்திவாய்ந்த பௌத்த அழுத்தக் குழுவான 'பௌத்த ஜாதிக பலவேகய', பிரிவு 29 (2) (*d*) இன் விதிமுறை, “ரோமன் கத்தோலிக்கர்களின் கருத்துகளைத் திருப்திசெய்வதற்காக இறுதி வரைவின்போது இலேசாகத் திருத்தப்பட்டது' என்று குற்றம் சாட்டியது. இறுதியாக, பிரிவு 29 (2), 1972 இல் ஒரு புதிய குடியரசுக்கான சுதந்திரமான அரசியலமைப்பு இயற்றப்பட்டபோது நீக்கப்பட்டது. புதிய அரசியலமைப்பின் *VI* ஆம் அத்தியாயத்தில் 'அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்' என்ற அறிக்கை அமுலுக்கு வந்தது. ஆனால் பிரிவு 18 (2) இல் உள்ள ஒரு முழுமையான அறிக்கையால் அதன் மதிப்பு இவ்வாறு குறைக்கப்பட்டது:

அடுத்துவந்த 1978 அரசியலமைப்புச்சட்டமும், உச்சநீதிமன்றத்திற்கு இதேபோன்ற அதிகாரங்களை வழங்கியது (பிரிவுகள் 1206). கோட்பாட்டளவில், இந்த நீதிமன்றம் 19728 அரசியலமைப்பின் போதான நீதிமன்றத்தைவிட, அரசியல் தலையீட்டிலிருந்து அதிகளவு சுதந்திரமாக இருந்தது. இருப்பினும், அடிப்படையில் நீதிமன்றத்தின் முடிவுகள் விவாதத்திற்குத் உள்ளாக்கப்படக் கூடியவையாக இருந்ததன் விளைவாக, நாட்டின் உச்சநீதிமன்றம் அரசியல்ரீதியாக சர்ச்சைக்குரிய ஒன்றாக மாறிவிட்டிருந்தது.

2. பெரும்பான்மைக் குழுவினரின் தலைவர், இனச் சிறுபான்மையினர்களுக்குச் சாதகமாகச் செயற்படுவார் என்று சோல்பரி ஆணைக்குழுவினர் நம்பிக்கை கொண்டிருந்தனர். உண்மையில், பிரிட்டன், டொன் ஸ்டீபன் சேனநாயக்காவுக்கு அதிகாரத்தை மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளது என்று அவர்கள் நம்புவதற்கான காரணம் அவர்களிடம் இருந்தது. தவிரவும், அவர் இலங்கையில் பிரிட்டிஷ் நலன்களுக்கு ஒரு பாதுகாப்பான நண்பர் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். தங்கள் அறிக்கையில் அவர்கள் இவ்வாறு எழுதினர்:

“மேற்கத்திய மாதிரிகளைப்போன்று இலங்கையில் கட்சிகள் உருவாகும்வரை, பெரும்பான்மைக்குழுவின் தலைவர், அரசாங்கத்தை அமைக்கும்போது, சிறுபான்மையினர்களின் பிரதிநிதிகளுக்கு அரசாங்க இலாகாக்களில் ஒரு பகுதியை வழங்குவார் என்றும், அந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில், அவர்களைச் சேர்ந்த குழுவின் அல்லது குழுக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கலந்தாலோசித்துச் செயற்படுவார் என்றும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.”



சேர். அன்ரூ கல்டேகொட்
Image Source : www.britishempire.co.uk

சேனநாயக்காவால்கூட தனது அமைச்சரவையில் இடம் பெறுவதற்கான பிரதிநிதிகளுக்காக இலங்கைத் தமிழர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பெரும்பான்மையான இலங்கைத் தமிழர்களைக் கொண்ட யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு வெளியே உள்ள தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு தனிநபர்களை (மன்னாரும், வவுனியாவும் - இந்த இரண்டு இலங்கைத் தமிழர்களும் ஒன்றில் விசித்திரமானவர்கள் அல்லது சுயநலவாதிகள்.) இலாகாக்களை ஏற்பதற்காக அவர் நியமித்தார். 1948 ஆம் ஆண்டில், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் சேவைகளைப் பெறுவதில் அவர் வெற்றி பெற்றார். ஆனால் 1956 முதல் இன்றுவரை எந்தவொரு இலங்கை அரசாங்கத்திலும், தமிழர் ஆதிக்கம் செலுத்தும் வடக்கு மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் இலங்கைத் தமிழர்கூட இருக்கவில்லை.[1]

3. இடதுசாரிக் கருத்துகளின் வளர்ச்சி ஏற்கனவே இன அல்லது மத ஒற்றுமைக்கான ஒரு கரைப்பானாக உள்ளது என்று சோல்பரி ஆணைக்குழுவினர்கள் நம்பினர். ஆயினும், அவர்களின் நம்பிக்கைகளை நனவாக்குவதற்கான எந்த வாய்ப்பும் கிட்டவில்லை. கட்சிகள், இன, மத அடிப்படையில் ஒன்றிணையும் முனைப்பிலேயே இருந்தன; ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை சுதந்திரக் கட்சி, தமிழ் கூட்டாட்சிக் கட்சி (இப்போதைய தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஓர் அங்கம்), தொழிற்சங்கங்களை அடிப்படையாகக்கொண்ட இந்தியத்தமிழ் அரசியல் அமைப்பான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பவற்றுடன் இன அடிப்படையில் ‘வர்ணம் பூசப்பட்ட’ பல சிறிய கட்சிகள் என்றவகையில் இருந்தமை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இடதுசாரிக்கட்சிகள்கூட சிங்கள - பௌத்த சார்பு நிலைப்பாடுகளை ஏற்றுக்கொண்டிருந்தன; இவற்றில், ஒருகாலத்தில் இனப்பிரச்சினையில் தாராளவாத அணுகுமுறையைக் கொண்டிருந்த ட்ரொட்ஸ்கிச, கம்யூனிஸ்ட் கட்சிகளும்கூட அடங்கும்.

4. இறுதியாக, பொதுச் சேவைகள் ஆணையகம், நீதித்துறைச் சேவைகள் ஆணையகம், இரண்டாவது சபையான செனட்சபை ஆகியவை, ஆளுநருக்கு ஒதுக்கப்பட்ட விருப்புரிமை அதிகாரங்களைக் கொண்டு (உள் சுயராச்சியத்தின் வரையறுக்கப்பட்ட கட்டமைப்பில்), சுயாதீனமாக இயங்கும் என நம்பக்கூடிய நியமனங்களைக் கொண்டிருக்கும் என்று சோல்பரி ஆணைக்குழுவினர் எதிர்பார்த்தனர். ஆனால், பின்னர் வைற்ஹோல் (Whitehall) இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து இருக்க வேண்டும் என்று முடிவு செய்ததன் காரணமாக, ஆளுநர் அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ், ஒரு மாநிலத் தலைவராக ஆக்கப்பட்டார். அதன்பின்னர் அவர் தனது பிரதமரின் ஆலோசனையின்படி வழிநடத்தப்படும் ஒருவராகச் செயற்பட வேண்டியிருந்தது.

இதனால், சோல்பரி ஆணைக்குழுவினால் கற்பனை செய்யப்பட்ட ஒற்றையாட்சி அரசு, தமது தவறான வரலாற்று நியாயங்களின் அடிப்படையில், தமக்கானவை எனக்கருதிய உரிமைகளைக் கோரிநின்ற இனப் பெரும்பான்மையினரிடமிருந்து பெரும் அலைபோலத் திரண்டுவந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக, அதன் பாதுகாப்புப் பொறுப்புகளிலிருந்து பறிக்கப்பட்டது. அதன் இடத்தில், முதலில் அமைச்சரவையின் சர்வாதிகாரமும் (1948-77) பின்னர் (ஜனாதிபதி ) நிறைவேற்றதிகாரம் கொண்ட குடியரசுத் தலைவரின் (1977) அதிகாரமும் என மாற்றப்பட்டமையானது, இலங்கைத் தமிழ் இனச் சிறுபான்மையினரை, அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குப் பரிச்சயமற்றிருந்த ஒரு பெரும்பான்மை இனத்தவரின் தயவில் இருக்கவேண்டிய நிலைக்குத் தள்ளிவிட்டிருந்தது.

ஒற்றையாட்சி அரசின் வரலாற்றுரீதியான தோற்றங்கள், சமூக மட்டத்தில், மொழியின் ஒருமைப்பாட்டையும் மதப் பெரும்பான்மை வாதத்தையும் அங்கீகரிப்பதாகும். பிரிட்டனில் ஒற்றையாட்சி அரசு தோன்றியபோதும் இது நடந்தது. ஆனால் அந்தக்கருத்து காலப்போக்கில் மாற்றமடைந்துள்ளது. ஒற்றையாட்சி அரசு பல சந்தர்ப்பங்களில் மதச்சார்பற்ற கருத்தை ஏற்றுக்கொண்டு, ஒற்றைமொழியைக் கொண்டதாகவோ அல்லது அரசு அங்கீகரித்த ஒரு பெரும்பான்மை மொழிக்குப் பதிலாக, பன்மொழிப் பயிலுகையை ஏற்றுக்கொண்டதாகவோ இருக்கிறது. உண்மையில் ஒற்றையாட்சி அரசின் கருத்து சில சந்தர்ப்பங்களில் கூட்டாட்சி அரசுக்கான விடயங்களாகவும் மாற்றப்பட்டுள்ளது. அரசுகளது முயற்சிகளின் முதன்மையான குறிக்கோளாக இருப்பதெல்லாம் தேசிய ஒற்றுமையைப் பேணுவதேயாகும்.

ஏகாதிபத்திய ஆட்சியாளரின் வசதிக்காக, இலங்கை ஒரு மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி நிறுவனமாக மாற்றப்பட்டது. பல 'இனங்களையும்', மதங்களையும் கொண்ட அத்தகைய ஓர் அமைப்பை, ஒரு நடுநிலையான ஏகாதிபத்தியசக்தி போன்ற ஒரு வெளியாரின் மேற்பார்வையின்கீழ் ஒன்றாக வைத்திருக்க முடியும் என்றாலும், ஏகாதிபத்தியசக்தி பின்வாங்கியதன் பின்னாக, தனித்துவமான குழுக்களின் 'இனம்', மொழி, மதம் போன்ற பாரம்பரியக் கருத்துகள் மீண்டும் தங்களை உறுதிப்படுத்திக்கொள்ளத் தொடங்குகின்றன. வெளியேறும் சக்தியால் விட்டுச்செல்லப்பட்ட மேலோட்டமான தேசிய ஒற்றுமை பராமரிக்கப்பட வேண்டுமென்றால், அரசியல் ஆளுமை, அரசியல்ரீதியான இணக்கப்பாடு என்பவை அவசியம். ஆனால் அதற்குப் பதிலாக அதிகாரம் மாற்றப்பட்ட குழுவும் அதன் தலைவர்களும் சிங்கள மன்னர்களின் காலத்திற்குச் செல்ல விரும்பினர். நவீன ஒருமைப்படுத்தப்பட்ட பிரிட்டனை (இதற்கான) ஒரு மாதிரியாகப் பயன்படுத்தினர். இந்தக்கருத்தை வலுப்படுத்த வரலாற்றுரீதியான புராணங்களும் புனைவுகளும் மீண்டும் உருவாக்கப்பட்டன. இருப்பினும், ஆதிகாலம் பன்முகத்தன்மை கொண்டது. மேலும் சிங்கள - பௌத்த இனப் பெரும்பான்மை நவீன உடைகளில் கடந்த காலத்தைப் புதுப்பிக்க முயன்றதுபோலவே, தமிழ் சிறுபான்மையினரும் தம்பங்கிற்கு இலங்கையில் ஒரு காலத்தில் ஒரு தனித்தமிழ் இராச்சியம் இருந்ததை மறுபரிசீலனை செய்யத் தொடங்கினர். 1947 பொதுத்தேர்தலுக்குப் பிறகு, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் காலனிகளுக்கான வெளியுறவுச் செயலாளருக்கு ஒரு தந்தி அனுப்பியது. வேறு பல விடயங்களுடன், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் கோரிநிற்கும் ஒரு தந்தியாக அது இருந்தது. இந்தக் கோரிக்கையை, தமிழ் காங்கிரஸின் தேசியவாதப் பிரிவின் தலைவராக 1947 நவம்பரில், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மேலெழுந்து வந்தபோது மேலும் தெளிவாக எடுத்துரைத்திருந்தார். அதாவது, ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு வடிவம் ஒன்று உருவாக்கப்படும் போதுதான், தமிழ்ச் சமூகத்தின் கோரிக்கைகள் அதன்கீழ் நிறைவேற்றப்படுதல் சாத்தியமாகும் என்பதுதான் அது.

தமிழ் சமஷ்டிக் கட்சி (Tamil Federal Party) 1949 டிசம்பர் மாதம் முறைப்படி ஓர் அரசியற் கட்சியாகத் தொடங்கப்பட்டது. இலங்கை சுதந்திரம் அடைந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 1951 ஏப்ரல் 13, 14, 15 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடந்த அதன் முதலாவது தேசிய மாநாட்டில், முன்வைத்த கோரிக்கைகளில் அது மிகத்தெளிவாக இருந்தது. தனது முதல் தீர்மானத்தில், கனடா, இந்தியா, சுவிட்சர்லாந்து, சோவியத் யூனியன் ஆகிய வெற்றிகரமான 'பன்முக, பன்மொழி நாடுகள்' என்ற கவனத்தை மாநாடு ஈர்த்தது. அவை ஒரு கூட்டாட்சி அரசாங்க அமைப்பை நிறுவுவதன்மூலம் தங்கள் 'சிக்கலான பிரச்சினைகளை'த் தீர்த்துக்கொண்டன. அதுபோலவே 'தமிழ் மக்களுக்குரிய, சவாலுக்கு இடமில்லாத வகையிலான தேசிய உரிமையையும்', சிங்கள மக்களுடனான கூட்டாட்சி ஒன்றியத்திற்கான அவர்களுக்குரிய உரிமையையும் விருப்பத்தையும்' வலியுறுத்தச் செய்ததுடன், அதன்பின் இருபத்தேழு மாதங்களே வாழமுடிந்த டொன் ஸ்ரீபன் சேனநாயக்காவின் ஓர் 'இறையாண்மை கொண்ட ஒற்றையாட்சி அரசு' என்ற அவரது செல்வாக்குமிக்கதாக இருந்த கருத்தைச் சவால் செய்யவும், ஒரு புதிய கட்சி எழுந்தது.

**அடிக்குறிப்பு**

1. 1965–70 இல் பதவியேற்ற அரசாங்கத்தில், டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டணியில் இணைந்த தமிழ் சமஷ்டிக் கட்சி, உள்ளாட்சி அமைச்சராக பணியாற்ற எம். திருச்செல்வத்தை பரிந்துரைத்தது. திருச்செல்வம் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி. அல்ல; அமைச்சரவையில் இடம்பெறுவதற்காக அவர் செனட்சபைக்கு நியமிக்கப்பட்டார்.



● சிவ தியாகராஜா

கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE800CE, The Tamils of Lanka – A Timeless Heritage, Archaeological Excavations at the Jaffna Fort, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.

# தொல்பொருட்களின் தேதிக்கணிப்புகள்

## (The Dating of Archaeological Artefacts)

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டுவரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையில் மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் 'பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்' எனும் இக்கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பவற்றின் பரந்த காட்சிப் பதிவாக விளங்கும்.

தொல்லியலாய்வின் முக்கியமானதொரு அம்சம் அகழ்வுகளில் கண்டுபிடிக்கப்படும் தொல்பொருட்களின் வயதைக் கணிப்பிடுவதாகும். இக்காலத்தில் கதிரியக்கப் பரிசோதனைகளான கதிரியக்கக்கரிம வயதுக்கணிப்பு (Radiocarbon Dating), வெப்பேற்று கதிரொளிவீச்சு கணிப்பு (ThermoLuminescence: TL), ஒளிக்கிளர்ச்சியூட்டிய கதிரொளிவீச்சு கணிப்பு (Optically Stimulated Luminescence: OSL) ஆகிய ஆய்வுகள்மூலம் இத்தொல்பொருட்களின் வயது கணிப்பிடப்படுகிறது. இப்பரிசோதனைகளை மேற்கொள்ளும் ஆய்வுகூடங்கள் இலங்கையில் இல்லை. இந்தியாவில் வெப்பேற்றக் கதிரொளி வீச்சு, ஒளியேற்றக் கதிரொளிவீச்சு ஆய்வுகூடங்கள் உள்ளன. கதிரியக்கக் கரிம வயதுக்கணிப்பு ஆய்வுகூடம் அங்கும் கிடையாது. கதிரியக்கக் கரிம ஆய்வுகளுக்கு தொல்பொருட்களை அமெரிக்க அல்லது பிரித்தானிய ஆய்வுகூடங்களுக்கு அனுப்பியே அவற்றின் வயதைக் கணிப்பிடுவார்கள்.

கந்தரோடை ஆய்வுகளில் 1970 ஆம் ஆண்டில் அமெரிக்க பென்ஸில்வேனிய பல்கலைக்கழக அருங்காட்சியக ஆய்வாளர்கள் அகழ்ந்தெடுத்த தொல்பொருட்கள் கதிரியக்கக் கரிம ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு அறிவியல்ரீதியான காலக்கணிப்புகள் வெளியிடப்பட்டன. முன்பெல்லாம் யாழ்ப்பாண அகழ்வுகளில் கண்டெடுக்கப்படும் தொல்பொருட்கள், பிற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு தேதி கணிக்கப்பட்ட அதேமாதிரியான பொருட்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டே (Crossmatch Dating) தேதி கணிக்கப்பட்டு வந்திருக்கின்றன. சமீபகாலங்களில்தான் புதிய முறையிலான தேதிக்கணிப்புகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

*1.*

**இரகுபதியின் மட்கல நிகரொழுங்கு**
**(The Ragupathy Sequence)**

**யாழ்ப்பாண மட்பாண்ட அடுக்குத் தேதிக்கணிப்பு**

யாழ்ப்பாணத் தொல்லியல் அகழ்வுகளில் எல்லா அடுக்கமைவு மட்டங்களிலும் (Stratified Layers) காணப்படும் ஒரு பொருள் பண்டைய மட்கலன்களாகும். இந்தக் கணிப்பில் மட்கல வகைகளின் நுணுக்கமான பகுப்பாய்வும், அவ்வகைகள் சில காலகட்டங்களில் ஒன்றுடன் ஒன்று கவிந்திருக்க முடியும் (Overlapping) என்பதற்கான முன்னறிவும் அவசியமானது. வெவ்வெறு அடுக்கமைவு மட்டங்களில் இந்த மட்பாண்டங்கள் அல்லது கலவோடுகளுடன் காணப்படும் நாணய வகைகளுடனோ, அல்லது ஏற்கனவே பிற இடங்களில் தேதி கணிக்கப்பட்ட அதேவகையான மட்பாண்டங்களுடனோ ஒப்பீட்டாய்வு (CrossMatching) செய்யும்போது நம்பகரமான ஒரு தேதியை அடைய முடிகிறது. இத்திகதியை அறிந்த மட்பாண்டங்கள் உள்ள அடுக்கமைவு மட்டங்களில் காணப்படும் மற்றைய தொல்பொருட்களுக்கும் இந்த மட்பாண்டங்களின் வயதுப்பரப்பின் கால எல்லையைக் கொடுப்பது இந்த ஆய்வுமுறை. இந்த ஆய்வுமுறையை யாழ்ப்பாணத் தொல்லியலாய்வில் அறிமுகப்படுத்திய கலாநிதி பொன்னம்பலம் இரகுபதியின் பெயரால் இக்கணிப்பு முறை 'இரகுபதியின் மட்கல நிகரொழுங்கு' என வழங்கப்படுகிறது.



**கலாநிதி பொன்னம்பலம் இரகுபதியின் யாழ்ப்பாண மட்பாண்டங்களின் நிகரொழுங்கு**
**Image Source: P. Ragupathy**

மட்பாண்ட வகைகளின் நிகரொழுங்கையும், அவற்றின் வயதையும் கொண்டு, அந்த அகழ்வு மட்டங்களில் காணப்படும் மற்றைய தொல்பொருட்களின் வயதைக் கணிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. எகிப்தில் தொல்லியல் அகழ்வுகளை மேற்கொண்ட பிரித்தானிய

அகழ்வாராய்ச்சியாளரான ஸேர் பிளின்டேர்ஸ் பீற்றி (Sir Flinders Petrie) இந்த முறையைக் கொண்டே அங்கு தொல்பொருட்களின் வயதைக் கணிப்பிட்டார் (Petrie, W.M.F. 1931).

எகிப்திலும் எல்லா மட்டங்களிலும் பலதரப்பட்ட மட்பாண்டங்கள் காணப்படுவதால் இந்த ஆய்வுமுறை உபயோகிக்கப்பட்டது. இதன் காரணமாக பீற்றியை 'மட்பாண்டங்களின் தந்தை' (Father of Pots) என அழைப்பார்கள். இன்றைக்கும் எகிப்தில் அகழ்வுகளை மேற்கொள்ளும் தொல்லியலாளர்கள் தொல்பொருட்களின் தோராயமான காலக்கணிப்பை இந்தமுறையைக் கொண்டு அறிகிறார்கள் (Tyldesley, J. 2005: 160). கலாநிதி இரகுபதி நவீனமயமாக்கப்பட்ட 'பீற்றி முறை'யை (Petrie System) அடிப்படையாகக் கொண்டு - மட்பாண்டங்களின் வயதைக்கொண்டு அதே அடுக்கமைவிலுள்ள மற்றைய தொல்பொருட்களின் வயதைக் கணிப்பிடும் இந்த ஆய்வுமுறையை - தனது ஆய்வுகளில் பயன்படுத்தியிருக்கிறார் (Ragupathy, P. 1987: 914).

**மட்கல வகை 1**
**ஆரம்ப பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்கலன் அல்லது ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்புசிவப்பு மட்கலன்**
**காலம்: கி.மு. 1500 - கி.மு. 300.**

இந்த வகையான மட்கலன்களின் விளிம்பு மழுங்கலாகவும் (Blunt Rim), விளிம்பிலிருந்து தொடரும் பகுதி ஆரம்பத்திலிருந்து சற்று வளைந்தோ அல்லது நேராகச் சென்று அடிப்பாகம் சடுதியாக உள்வளைந்த முறிவளைவு (Carination) கொண்டோ காணப்படும். இவை குடுவைகளாகவோ (கிண்ணங்கள்), ஆழ்ந்தகன்ற தட்டங்களாகவோ காணப்படும். இக்கலன்களின் உட்பக்கம் பளபளப்பான கறுப்பு நிறமாகவோ, அல்லது மந்தமான கறுப்பாகவோ இருக்கும். இந்த மட்பாண்டங்களின் வெளிப்பக்கம் பெரும்பாலும் சிவப்பு நிறமாகவும், சில சமயங்களில் சாம்பல் நிறமாகவும் காணப்படும். இக்கலன்களின் கழுத்துப்பகுதியின் வெளிப்புறத்தில் குறுகலான கறுப்புநிற பட்டைக்கோடு சுற்றவரக் காணப்படும். இந்த மட்பாண்டங்களில் காணப்படும் இரட்டை வண்ணம், சூளையில் சுடும் தொழில்துறை நுட்பத்தினால் ஏற்பட்டதாகும் (Ragupathy, P. 1987: 9).

தென்னாசிய சூழமைவில் கறுப்புசிவப்பு மட்பாண்டம் சிந்துவெளி மையங்களில் ஆரம்பமாகி, இந்திய துணைக்கண்ட மையங்களில் பரவி, தென்னிந்திய பெருங்கற்கால மட்பாண்டமாகப் பரிணமித்திருக்கிறது. மேற்குறிப்பிட்டுள்ள ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் தென்னிந்தியப் பெருங்கற்கால அகழ்வுகளில் கண்டெடுக்கப்படுகின்றன (Gururaja Rao 1972: 258-261; Soundara Rajan, 1969: 69-89; Sahney, V. 1965: 172-175). யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது இலங்கையின் பெருங்கற்கால மையங்களிலெல்லாம் இந்தவகையான மட்பாண்டங்கள் காணப்படுகின்றன (Deraniyagala, S.U. 1972: 118, 48-169; Begley, V. 1981: 84-93; Sitrampalam, S.K. 1980; Pushparatnam, P. 1993).

சிந்துவெளி அகழ்வுகளில் முதன்முதலாகக் கண்டெடுக்கப்பட்ட இந்த மட்பாண்டங்களுக்கு 'கறுப்புசிவப்பு மட்பாண்டம்' என்ற பெயரைக் கொடுத்தவர் பிரித்தானிய தொல்லியலாய்வாளரான ஸேர். மோட்டிமர் வீலர் ஆவார். "இந்த மட்பாண்டம் தனித்துவமான உருவத்தையும் கட்டுமானப்பொருளையும் கொண்டு, மெல்லச் சுற்றும் சில்லில் வனையப்பட்டு, மெருகேற்றப்பட்டு, மட்பாண்டத்தைத் தலைகீழாகப் புரட்டி சூளையில் சுடவைத்தபடியினால் அதன் உட்பக்கம் கறுப்பாகவும், வெளிப்பக்கம் பெருமளவில் சிவப்பாகவும், கறுப்பு அதன் மேற்பாகத்தில் (கழுத்துப்பக்கம்) வரையறுக்கப்பட்டும் காணப்படுகிறது"

*"The pottery is distinctive in shape and fabric, it is turned on a slow wheel, polished and is characteristically black inside and more often black and red outside, with black confined to the upper part of the vessel, resulting from 'inverted firing'* (Wheeler, 1947).

எமது ஆய்வில் இவ்வகையான மட்பாண்டங்கள் யாழ்ப்பாணத்தில் ஐந்து மையங்களில் கண்டெடுக்கப்பட்டன. இரு மையங்களில் - ஆனைக்கோட்டையிலும், களபூமியிலும் இவை பெருங்கற்கால ஈமப்படையல்களுடன் காணப்பட்டன. கந்தரோடையில் இவ்வகையான மட்கலன்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. மண்ணித்தலையிலும், வேலணையிலும் இவை குறைந்த அளவில் காணப்பட்டன. இந்த வகையான மட்கலன்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆரம்பகால மையங்களில் காணப்பட்டு பொதுயுகத்திற்கு (கிறிஸ்தாப்த காலம்) முன்னரே மறைந்துபோய் விடுகின்றன (Ragupathy, P. 1987: 9).

இவ்வகையான மட்கலன்களில் இரு உட்பிரிவுகள் காணப்படுகின்றன:

மட்கல வகை 1 - உட்பிரிவு 1: மெலிந்த மழுங்கலான விளிம்பு கொண்ட மட்கலன்கள்.

மட்கல வகை 1 - உட்பிரிவு 2: மட்டமான விளிம்பு கொண்ட மட்கலன்கள்.

### மட்கல வகை 2
### மற்றவகை கறுப்புசிவப்பு மட்கலன்கள்
### காலம்: கி.மு. 700 - கி.பி. 300.

ஆரம்பகால மெலிந்த விளிம்பு கொண்ட அல்லது கூர்மையான முறிவளைவு கொண்ட கறுப்புசிவப்பு மட்கலன்களைவிட மேலும் மூன்று வகையான கறுப்புசிவப்பு மட்கலன்கள் மத்திய பெருங்கற்காலத்திலிருந்து பொதுயுகத்தின் ஆரம்ப நூற்றாண்டுகள்வரை யாழ்ப்பாண மையங்களில் காணப்படுகின்றன.

உட்பிரிவு 2.1: பெருங்கற்கால, வளைந்த விளிம்பு கொண்ட கறுப்புசிவப்பு மட்கலன்கள் வரலாற்று உதயகால, ஆதி வரலாற்றுக்காலத்தில் தயாரிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டன.

உட்பிரிவு 2.2: தடிப்பான விளிம்பு கொண்ட கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள். இவை பொதுயுகத்தின் ஆரம்ப ஆண்டுகளில் (கி.பி. 100-300 ஆண்டுக்காலங்களில்) பாவனையில் இருந்தவை.

உட்பிரிவு 2.3: இந்த மட்பாண்டங்களின் விளிம்பில் சுற்றவர பள்ளத்தடம் (Groove) காணப்படும். இந்த பள்ளத்தடத்தில் கறுப்புசிவப்பு நிறங்கள் காணப்பட்டபோதிலும் இவை பாரம்பரியமான கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் என்பது தெளிவாக நிறுவப்படவில்லை. இம்மாதிரியான மட்கலன்கள் மத்திய காலம்வரை தயாரிப்பில் இருந்திருக்கின்றன.

201-112, 201-718 ஆண்டுகளில் நடைபெற்ற யாழ்ப்பாணக்கோட்டை அகழ்வுகளில் குழிகளின் அடி மட்டங்களிலிருந்து இவ்வகையான கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் கிடைத்திருக்கின்றன. இவ்வகை பெருங்கற்கால மட்கலன்கள் கி.மு. 700 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 200 ஆம் ஆண்டுவரை அங்கே தயாரிப்பில் இருந்ததாகக் கணிக்கப்பட்டிருக்கிறது (Thiagarajah, S. 2022: 24-25).

### மட்கல வகை 3
### ஆரம்பகால சிவப்பு மட்கலன்கள்
### காலம்: கி.மு. 1200 - கி.மு. 300.

முழுவதும் சிவப்பு நிறமான இம்மட்பாண்டங்கள் மற்ற வகையான கறுப்புசிவப்பு மட்கலன்களுடன் கந்தரோடை, ஆனைக்கோட்டை, களபூமி ஆகிய பெருங்கற்கால மையங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் காணப்படுகின்றன. இவை கி.மு. 1200 ஆம் ஆண்டிலிருந்து கி.மு.300 ஆம் ஆண்டுக்காலம் வரை தயாரிப்பில் இருந்திருக்கின்றன.

இந்த ஆரம்பகால சிவப்பு மட்கலன்களில் நான்கு வகையான உட்பிரிவுகள் காணப்படுகின்றன.

உட்பிரிவு 3.1: தடித்து, உருண்டு, வெளியே தள்ளிக்கொண்டு புடைத்து நிற்கும் விளிம்பைக் கொண்ட சிவப்பு நிற மட்கலன்கள்.

உட்பிரிவு 3.2: கழுத்து நீண்ட அல்லது சற்றுக் குறைவான கழுத்துள்ள சிவப்புநிறப் பானைகள்.

உட்பிரிவு 3.3: கழுத்தில்லாத சிவப்புநிறக் குண்டுச்சட்டிகள்.

உட்பிரிவு 3.4: சிவப்பு நிற வட்டில்வகைப் பாண்டங்கள்.

### மட்கல வகை 4
### யாழ்ப்பாண 'ரௌலெற்ரெட்' கலன்கள்
### காலம்: கி.மு. 500 - கி.பி. 300.

'ரௌலெற்ரெட்' கலன்கள் பொதுயுகத்திற்கு முற்பட்ட ஆயிரத்தாண்டில் கிரேக்கஉரோம இந்தியத் துணைக்கண்ட வர்த்தகத்தின் தனித்துவமான அடையாள உருவங்களாக (Iconic Markers) கணிக்கப்படுகின்றன. இவ்வகைக் கலன்கள் கிண்ணங்களாகவும், தட்டுக்களாகவும் காணப்படுகின்றன. தூய்மையான மெருகேறிய களிமண்ணிலாலான இக்கலன்களின் உட்பக்கம் பளபளப்பான கறுப்பு நிறமாகவும், வெளிப்பக்கம் மினுமினுக்கும் குங்குமப்பூ நிறமாகவும் காணப்படும். கலன்களின் உட்பக்கத்தில் காணப்படும் நேர்த்தியான கோலங்கள் 'ரௌலெற்றுகள்' எனப்படும். அதன் காரணமாக இவை 'ரௌலெற்ரெட்' கலன்கள் என அழைக்கப்படுகின்றன. ஏராளமான ரௌலெற்ரெட் கலவோடுகள் கந்தரோடையிலும், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணக்கோட்டை, பூநகரி மற்றும் கடற்கரை மையங்களிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

இக்கலன்களில் ஆதியான பாண்டங்கள் பொ.யு.மு. 500 ஆம் ஆண்டுக்காலத்திலிருந்து கிரேக்க மாலுமிகளால் கொண்டுவரப்பட்டவை. கி.மு. 300 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 300 ஆம் ஆண்டுவரை 600 ஆண்டுகளாக உரோமாபுரி வர்த்தகத்தின் முக்கியமானதொரு ஏற்றுமதிக்கலனாக இது

விளங்கியிருக்கிறது (Krishnan & Coningham 1997: 925).

தமிழ்நாட்டில் அரிக்கமேட்டில் அகழாய்வை மேற்கொண்ட பிரித்தானிய தொல்லியலாய்வாளர் மோட்டிமர் வீலர் இம்மாதிரியான ரௌலெற்ரெட் மட்பாண்டங்கள் உரோம 'அறிற்றைன்' பாண்டங்களுடனும், உரோம மதுச்சாடிகளுடனும் ஒரே அகழ்வு மட்டத்தில் காணப்பட்டபடியினால் இவை உரோம மட்பாண்டங்கள் என முடிவெடுத்தார் (Ford Et Al. 2005: 911).

காலப்போக்கில் இதை நிகரொத்த (Duplicate) ரௌலெற்ரெட் மட்பாண்டங்கள் அரிக்கமேட்டிலும், இலங்கையில் அநுராதபுரத்திலும் தயாரிக்கப்பட்டன. இவை கி.மு. 200 ஆம் ஆண்டிலிருந்து அரிக்கமேட்டில் தயாரிக்கப்பட்டதாக ஆய்வாளர் விமலா பெக்லி கணித்துள்ளார் (Begley 1983; Schenk 2006). இவை 'உள்ளூரில் தயாரிக்கப்பட்ட போதிலும், அதன் அலங்கார வடிவில் மத்தியதரைச் செல்வாக்குக் காணப்படுகிறது' என்றார் (Begley, V. 1983, 1988).

அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட ரௌலெற்ரெட் மட்பாண்டங்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்டவை என நுண்ணாய்வுகள் (Micro analysis) தெரிவிக்கின்றன. இந்தக்கலன்களில் பாவிக்கப்பட்ட களிமண் சமீபத்திலுள்ள ஆற்றிலிருந்து பெறப்பட்டது என்பதையும் இந்த நுண்ணாய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த மட்பாண்டங்களின் காலம் கி.மு. 500 ஆம் ஆண்டு முதல் - கி.பி. 300 ஆம் ஆண்டுவரை எனக் காலக்கணிப்பு ஆய்வுகள் தெரிவிக்கின்றன (Krish nan & Coningham 1997: 925).

இரகுபதி தனது 1987 ஆம் ஆண்டின் ஆய்வுகளில் கந்தரோடையைத் தவிர ரௌலெற்ரெட் மட்பாண்டங்கள் காணப்பட்ட இடங்களெல்லாம் கடற்கரையை அண்டிய மையங்கள் எனக் கூறியுள்ளார். இவற்றில் கந்தரோடையில் காணப்பட்ட பெருந்தொகையான கலவோடுகள், இது ஒரு பெரிய வர்த்தக மையமாகவும் இருந்திருக்கவேண்டும் என எண்ணச் செய்கின்றன. இந்த மட்பாண்டங்கள் ஆரம்பகால கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், மற்ற வகையான கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், ஆரம்பகால சிவப்பு மட்கலன்கள், தடித்த விளிம்புக்கலன்கள் ஆகியவற்றுடன் வெவ்வேறு மட்டங்களில் காணப்படுவதால் இவற்றின் ஆரம்பகாலம் கி.மு. 500 ஆம் ஆண்டுக்காலம் எனக் கொள்ளலாம். ஆனைக்கோட்டையில் கண்டெடுத்த



யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் கண்டெடுத்த மத்தியதரை நாடுகளுக்குரிய (கிரேக்கம் - ரோமாபுரி) பொ.யு.மு.500–பொ.யு. 300 காலத்தைய 'ரௌலெற்றெட்' மட்பாண்டங்கள்.
ஒரு சிறு குழியில் கண்டெடுத்த பலவகையான மட்பாண்ட ஓடுகள் அக்காலத்தில் பெருகியிருந்த ஒரு வர்த்தகப் பண்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.
Image Source: Dept. of History, University of Jaffna.

ரௌலெற்ரெட் மட்கலத்தில் கி.பி. இரண்டாம் அல்லது மூன்றாம் நூற்றாண்டிற்குரிய பிராமி எழுத்துப்பதிவுகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்தில் கண்டெடுத்த ரௌலெற்ரெட் மட்பாண்டங்களை ஒன்பது உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம் (Ragupathy, P. 1987:13):

உட்பிரிவு 4.1: இந்தக் கலன்களின் இரு பக்கமும் கறுப்பு நிறமானது. ஒரு பக்கத்தில் மட்டும் ரௌலெற் பதிவுகள் உள்ளன.

உட்பிரிவு 4.2: கலன்களின் இரு பக்கமும் சாம்பல் நிறம், ஒரு பக்கத்தில் ரௌலெற் பதிவுகள் உள்ளன.

உட்பிரிவு 4.3: ஒரு பக்கம் குங்குமப்பூ நிறத்திலும், மறுபக்கம் சாம்பல் நிறத்திலும், சாம்பல் நிறப் பக்கத்தில் ரௌலெற் பதிவுகளும் காணப்படுகின்றன.

உட்பிரிவு 4.4: ஒரு பக்கம் குங்குமப்பூ நிறத்திலும், மறுபக்கம் கறுப்பு நிறத்திலும், குங்குமப்பூ நிறப் பக்கத்தில் ரௌலெற் பதிவுகள் உள்ளன.

உட்பிரிவு 4.5: மென்மையான சாம்பல்நிற கலன். அதன் இழைமானம் (Fabric) ரௌலெற்ரெட் கலன்களை நிகர்த்தது.

உட்பிரிவு 4.6: மென்மையான இழைமானம் கொண்ட கலன். குங்குமப்பூநிற வெளிப்பக்கம். சாம்பல் நிற உட்பக்கம்.

உட்பிரிவு 4.7: மென்மையான இழைமானம் கொண்ட கலன். இரு பக்கமும் குங்குமப்பூ நிறமானது.

உட்பிரிவு 4.8: உட்பக்கம் பளபளப்பான கறுப்பு நிறம். வெளிப்பக்கம் சாம்பல்நிற திட்டுக்கள் கொண்ட குங்குமப்பூ நிறம். தட்டையான விளிம்பு.

உட்பிரிவு 4.9: உட்பக்கம் சாம்பல் நிறம். வெளிப்பக்கம் சாம்பல் நிறத் திட்டுக்கள் கொண்ட குங்குமப்பூ நிறம். விளிம்பின் உச்சி தட்டையாக உள்ளது.

### மட்கல வகை 5
### தடித்த விளிம்பு கொண்ட சிவப்புக்கலன்கள்
### காலம்: கி.மு. 500 - கி.பி. 1200.

யாழ்ப்பாண அகழ்வுகளில் அதிகமாக எல்லா மையங்களிலும் காணப்படும் தடித்த விளிம்பு கொண்ட சிவப்புநிற மட்பாண்டங்கள் இதுவாகும். பெருங்கற்கால புதையல்களில் கறுப்பு சிவப்பு மற்றும் சிவப்பு நிற மட்பாண்டங்களோடு காணப்படும் இக்கலன்கள் பொதுயுக ஆரம்பகாலங்களிலும், மத்திய காலங்களிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. ஏறக்குறைய 1700 ஆண்டுக்காலமாக உபயோகத்திலிருந்த இந்த மட்கலன்கள் யாழ்ப்பாண அரசு ஆரம்பமான காலத்தில் மறைந்து போகின்றன.

பல வகையான வடிவங்களையும், பல வகையான இழைமானங்களையும் கொண்ட இக்கலன்களின் விளிம்புகள் ஒரே சீராகத் தடித்தும், புறவளைவு கொண்டும் காணப்படும். இரகுபதி இக்கலன்களை மூன்று வகையாகப் பிரிக்கிறார்:

1. சேமிப்புச் சாடிகள், 2. கிண்ண வடிவில், மற்றும் வட்டில் வடிவிலுள்ள குண்டுச்சட்டிகள், 3. அரிசி சுத்தம் செய்யும் வட்டில்கள். இவ்வகையான பாத்திரங்கள் 2000 ஆண்டுகளுக்கு மேலாக பாவனையில் இருந்தபடியினால் இவற்றை மட்டும் கொண்டு இவற்றின் காலத்தைக் கணிப்பது இயலாத காரியம். இது இடம்பெறும் அடுக்கமைவு மட்டத்தில் காணப்படும் மற்றைய தொல்பொருட்களையும் கொண்டே இதன் காலத்தைக் கணிப்பிட முடியும்.

அகழ்வுகளில் இவ்வகையான மட்கலன்கள் இடம்பெறும் காலப்பகுதிகளின் அடுக்கமைவில் (Stratified Layer) காணப்படும் கூட்டிணைப்புகள் இவை:

1. ஆரம்பத்தில் பெருங்கற் பண்பாட்டு மையங்களில் முறிவளைவு கொண்ட கறுப்பு சிவப்பு மட்கலன்களுடன் (மட்கல வகை 1) இவை காணப்பட்டன.

2. அடுத்த அடுக்கமைவில் இவை முறிவளைவு கொண்ட கறுப்புசிவப்பு மட்பாண்டங்களுடனும் ஆரம்பகால ரௌலெற்ரெட் மட்பாண்டங்களுடனும் காணப்படுகின்றன.

3. பொதுயுகத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் இந்த மட்கலன்கள் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களுடனும் ரௌலெற்ரெட் மட்பாண்டங்களுடனும் காணப்படுகின்றன.

4. சற்றுப் பிற்காலத்தில் (மேல் அடுக்கமைவு) 3 ஆம் - 5 ஆம் நூற்றாண்டுகளில் இவை கறுப்பு சிவப்பு மட்பாண்டங்களுடன் காணப்படுவது மட்டுமல்லாது, இக்கலன்களிலும் கறுப்புசிவப்பு வகைகள் காணப்படுகின்றன.

5. வரலாற்று இடைக்காலத்தில் (Medieval Period) இவை சீன, இஸ்லாமியக் கலன்களுடனும், அக்காலத்தைய நாணயங்களுடனும், ஒரே அடுக்கமைவில் காணப்படுகின்றன.

6. சில மையங்களில் அதற்கும் மேலான அடுக்கமைவில் இந்தக்கலன்கள் மட்டுமே காணப்படுகின்றன. சில சமயங்களில் 11 ஆம் - 12 ஆம் நூற்றாண்டுக்காலத்தைய நாணயங்கள் அவற்றோடு காணப்படுகின்றன.

7. இம்மட்கலன்களின் இறுதிக் காலத்தில் (பொ.யு. 1200) அவற்றோடு வரிப்பள்ள விளிம்பு கொண்ட மட்கலன்கள் (வகை 8) காணப்படுகின்றன. (Ragupathy, P. 1987: 11).

### மட்கல வகை 6
### சீன - இஸ்லாமிய பீங்கான், கற்கலன்கள்
### காலம்: கி.பி. 800 - 1200.

யாழ்ப்பாண மையங்களில் 9 ஆம் - 13 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் சீனாவிலிருந்தும், அரேபிய - பாரஸீக - சஸானிய நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட பலவகையான பளிங்கியல் மெருகூட்டப்பட்டதும், அல்லாததுமான பீங்கான்களும், கற்கலன்களும் காணப்படுகின்றன (Carswell, J. 1977-78).

இவ்வகையான கலன்கள் காணப்படும் அடுக்கமைவு மட்டங்களிலுள்ள மற்றைய தொல்பொருட்களின் காலத்தைக் கணிப்பதற்கும், யாழ்ப்பாணத் தொல்லியல் மையங்களின்

மேல்மட்ட திகதியை மதிப்பிடவும் இக்கலன்கள் உதவுகின்றன. கலாநிதி இரகுபதி இக்கலன்களை கீழ்க்காணும் உட்பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார் (Ragupathy, P. 1987: 11).

உட்பிரிவு 6.1: கற்கலன் - பச்சைநிற பளிங்கு மெருகு (Glazed)

உட்பிரிவு 6.2: கற்கலன் - இருண்ட மண்ணிற மெருகு.

உட்பிரிவு 6.3: கற்கலன் - இலேசான மண்ணிற மெருகு.

உட்பிரிவு 6.4: கற்கலன் - உட்பக்கம் மஞ்சள்நிற மெருகு, வெளிப்பக்கம் மண்ணிற மஞ்சள் மெருகேற்றப்பட்டது.

உட்பிரிவு 6.5: கற்கலன் - இஸ்லாமிய நீலபச்சை மெருகு.

உட்பிரிவு 6.6: கற்கலன் - பழுப்புச்சிவப்பு கண்ணாடி மெருகு.

உட்பிரிவு 6.7: கற்கலன் - மெருகேற்றப்படாதது.

உட்பிரிவு 6.8: பீங்கான் - வெண்ணிறம்.

உட்பிரிவு 6.9: பீங்கான் - மெல்லிய மஞ்சள் நிறம்.

உட்பிரிவு 6.10: பீங்கான் - வெண்ணிறம் அல்லது மெல்லிய மஞ்சள் - பலவித கோலங்களால் அணிசெய்யப்பட்டது (கீழே படம் பார்க்கவும்).



**தொல்லியளாளர் பேராசிரியர் ஜோன் கார்ஸ்வெல் யாழ்ப்பாணத்தில் கண்டெடுத்த ஆறாம் வகை (6-10) சீன பீங்கான் வகைகள்.**
Image Source: John Carswell

**மட்கல வகை 7**
**தடித்த பள்ள விளிம்பு கொண்ட கலன்கள்**
**காலம்: கி.பி. 1300.**

இந்த வகையான மட்பாண்டங்கள் தடித்த விளிம்பு கொண்ட மட்கலன்களுக்கும், பள்ள விளிம்பு கொண்ட மட்கலன்களுக்கும் இடைப்பட்ட காலத்தவை. இவ்வகையான மட்பாண்டங்கள் வடமராச்சியிலும், பச்சிலைப்பள்ளியிலும் 11 ஆம் - 13 ஆம் ஆண்டுக்காலத்திற்குரிய நாணயங்களுடன் காணப்பட்டன. பாரம்பரியமாக தடித்த விளிம்பு கொண்ட பாத்திரங்களை வனையும் குயவர்கள் புதிதாக அறிமுகமாகிய பள்ள விளிம்பை இதில் புகுத்தியதன் காரணமாக இக்கலன்கள் வனையப்பட்டிருக்கலாம் என கலாநிதி இரகுபதி அபிப்பிராயம் தெரிவிக்கிறார்.

உட்பிரிவு 7.1: தடித்த விளிம்பில் சுற்றவர ஆழமான ஒருவரிப் பள்ளம் (Groove).

உட்பிரிவு 7.2: தடித்த விளிம்பில் சுற்றவர இரு பள்ளவரிகள்.

உட்பிரிவு 7.3: தடித்த விளிம்பில் சுற்றவர மூன்று பள்ளவரிகள்.

உட்பிரிவு 7.4: தடித்த விளிம்பில் சுற்றவர நான்கு பள்ளவரிகள்.

(Ragupathy, P. 1987: 11).

**மட்கல வகை 8**

**பள்ள விளிம்பு கொண்ட கலன்கள்**

**காலம்: கி.பி. 1300 முதலாக.**

தடித்த விளிம்பு கொண்ட சிவப்புநிற மட்பாண்டங்களை அடுத்து யாழ்ப்பாணத் தொல்லியல் மையங்களில் அதிகமாகக் காணப்படும் மட்பாண்டங்கள் இவையாகும். இவ்வகையான பள்ள விளிம்பு கொண்ட மட்பாண்டங்கள் சில இடங்களில் இன்றுவரை காணப்படுகின்றன. இதன் பாவனைக்காலங்களில் இலங்கையின் மத்தியகால நாணயங்கள், யாழ்ப்பாண இராச்சிய நாணயங்கள், டச்சுக்கார நாணயங்கள், ஆரம்பகால பிரித்தானிய நாணயங்கள் என்பன இவற்றுடன் காணப்பட்டன.

இருபாலையில் கைவிடப்பட்ட ஒரு குயவர் மண்குன்றை ஆய்வு செய்தபோது, வெவ்வேறு மட்டங்களில் வெவ்வேறு வகையான மட்கலன்கள் காணப்பட்டன. மேல்மட்டங்களில் சாதாரண

விளிம்புகளில் பள்ளங்கள் கொண்ட கலன்களும், அடி மட்டங்களில் தடித்த விளிம்பு கொண்ட சிவப்பு மட்பாண்டங்களும் காணப்பட்டன. இந்த ஆய்வில் ஒரு வகையான மட்பாண்டங்கள் மற்றொரு வகையுடன் மேற்கவிந்திருப்பதை (Overlapping) காணக்கூடியதாகவும், தடித்த விளிம்பு கொண்ட மட்பாண்டங்களின் மேல்வரம்பை அறியக்கூடியதாகவும் இருந்தது (Ragupathy, P. 1987:11).

2.

## கதிரியக்கக் கரிம தேதிக்கணிப்பு

தொல்லியல் அகழ்வுகளில் கண்டுபிடிக்கப்படும் தொல்பொருட்களின் வயதைக் கணிப்பிடும் ஆய்வு முறைகளில் மிக நம்பகரமானதாக கதிரியக்கக் கரிம ஆய்வுமுறை கூறப்படுகிறது. இன்றைய விரைவுபடுத்தப்பட்ட கதிரியக்கக் கரிம ஆய்வுகள் (Ams) இற்றைக்கு முன் 35,000 ஆண்டுகள்வரையான தொல்பொருட்களின் தெளிவான, நம்பத்தகுந்த வயதுகளை 60 ஆண்டு வேறுபாட்டிற்குள் அறியத்தருகின்றன.

உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் கரிமச் (Carbon) சேர்மானமுடைய உயிர்வேதி அணுத்திரண்மங்களைக் (Organic Molecules) கொண்டிருக்கின்றன. மனிதர்கள், மிருகங்கள், தாவரங்கள் அனைத்திலும் கரிமத்தின் மூன்று வகையான - கரிமம் 12, கரிமம் 13, கரிமம் 14 எனப்படும் ஓரகத்தனிமங்கள் (Isotopes) காணப்படுகின்றன.

இவற்றில் கரிமம்14 கதிரியக்கம் (Radioactive) கொண்டது. வானவெளியில் உள்ள ‘கொஸ்மிக்’ கதிர்கள் நைற்றொஜின் வாயுவை இணைப்பதால் இந்தக் கதிரியக்கக் கரிமம் உண்டாகிறது. வானவெளியில் காணப்படும் இக்கரிமம் பிராணவாயுவுடன் இணைந்து கரியமிலவாயுவாகி, அதை தாவரங்கள் உள்வாங்கிக்கொள்கின்றன. மற்றைய உயிரினங்கள் தாவர உணவை உட்கொள்ளுமிடத்து இந்தக் கதிரியக்கக் கரிமம்14 அவர்களின் உடலில் தங்கிவிடுகிறது. அவ்வாறு உயிரினங்கள் உயிர்வாழும்வரை கரிமம்14 அன்றாடம் உடலில் சேர்ந்துகொண்டே வருகிறது.

கதிரியக்கக் கரிம தேதிக்கணிப்பு ஒரு உயிரினத்தின் உடல் திசுவிலுள்ள கரிமம்12 (C12) க்கும், கரிமம்14 (C14) க்கும் இடையிலுள்ள வீதத்தொடர்பை அளவிடுவதன்மூலம் கணிக்கப்படும் ஆய்வு. ஓர் உயிரினம் உயிராக இருந்தபொழுதில் கரிமம்12, 100 சதவீதத்திலும், கரிமம்14, 100 சதவீதத்திலும் காணப்படும். அந்த உயிரினம் இறந்த பின்னரும் கரிமம்12 அப்படியே 100 சதவீதம் அந்த உயிரினத்தில் இருக்கும். ஆனால் கரிமம்14, கதிரியக்கக் கரிமம் ஆனபடியினால் சிறிது சிறிதாக உருக்குலைந்து (Beta Decay) 5,730 ஆண்டுகளில் இறந்துபோன அந்த உடலிலோ, தாவரத்திலோ அதன் அளவு அரைவாசியாகிப் போய்விடும். இப்படியே ஒவ்வொரு 5,730 ஆண்டுகள் கழிய கரிமம்14 மேலும், மேலும் அரைவாசியாகிக்கொண்டே போகும்.

அந்த உயிரினம் இறந்து போய் 5,730 ஆண்டுகளின் பின்னர் இந்த வீதத்தொடர்பு:

கரிமம்12 : கரிமம்14 - 100:50 ஆக இருக்கும்.

உயிரினம் இறந்து 11,460 ஆண்டுகளின் பின்னர் இந்த வீதத் தொடர்பு (Ratio):

கரிமம்12 : கரிமம்14 - 100:25 ஆகிவிடும்.

இந்த விகிதத் தொடர்பின் அடிப்படையில் அந்தக் கரிமச்சேர்க்கைப் பொருளைக் கொண்டு உயிரினம் இறந்துபோன காலத்தைக் கணிப்பிட முடிகிறது.

இப்படியே அந்த உயிரினம் இறந்து 45,840 ஆண்டுகளின் பின்னர், இறந்துபோன அந்த இனத்தின் உடலில் கரிமம்14 இன் அளவு, உயிரோடு இருந்த காலத்திலிருந்த அளவிலிருந்து அறுபத்து நான்கில் ஒரு பாகம் மட்டுமே - அதாவது 2 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படும். எனவே 40,000 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துபோன உயிரினங்களின் காலக்கணிப்பை அளவிடுவதற்கு வேறு ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்படும்.

அகழ்வுகளில் கண்டெடுக்கப்படும் உயிரற்ற மட்பாண்டங்களினதோ, அல்லது உலோகப் பொருட்களினதோ வயதை இந்தமுறையைக் கொண்டு கணிப்பதற்கு அப்பாண்டங்களில் ஒட்டியிருக்கும் இறந்துபோன நுண்தாவரங்களின் (Organic Matter) வயதைக் கணிப்பதன்மூலம் அறிந்து கொள்ள முடியும்.

### விரைவுபடுத்தப்பட்ட கரிமப் பகுப்பாய்வு (Accelerator Mass Spectrometry: AMS)

இப்புதிய முறையான கரிமத்தின் பகுப்பாய்வில், பகுப்பாய்வு இயந்திரத்தினுள்ளே செலுத்தப்படும்

கரிமத்தை அந்த இயந்திரம் பகுப்பாய்வு செய்து அந்தக் கரிமப் பொருளில் எத்தனை கரிமம்14, எத்தனை கரிமம்13, எத்தனை கரிமம்12 அணுக்கள் இருக்கின்றன என்பதைச் சரியாக அளவிட்டுக் காட்டிவிடும். இதன்காரணமாக கரிமம்12: கரிமம் 14 இற்கு இடையிலான மிகச்சரியான விகிதத்தையும், பரீட்சார்த்தப் பொருளின் சரியான வயதையும் கணக்கிட முடிகிறது.

## கந்தரோடை அகழ்வின் கதிரியக்கக் கரிம ஆய்வுகள்

1970 ஆம் ஆண்டு ஜீன் - ஜீலை மாதங்களில் கந்தரோடையில் அறிவியல்பூர்வமான அகழ்வாய்வை மேற்கொண்ட அமெரிக்க பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத்தின் அருங்காட்சியகத் தொல்லியலாளர்கள், அங்கே கண்டெடுத்த தொல்பொருட்களை அமெரிக்காவில் மியாமியிலுள்ள கதிரியக்கக் கரிம ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அக்காலத்தைய இலங்கை அரசு இத்தொல்லியலாய்வின் கண்டுபிடிப்புகளில் எதுவிதமான அக்கறையும் காட்டவில்லை. அத்தொல்லிலாய்வைத் தலைமை தாங்கிய விமலா பெக்லியின் அறிக்கை இன்றுவரை அரசினால் பிரசுரிக்கப்படவில்லை.

1977 ஆம் ஆண்டில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்திற்கு ஆணையாளராக நியமிக்கப்பட்ட பிரபல தொல்லியராளரான சிரான் தெரனியகல, 1970 ஆம் ஆண்டில் கந்தரோடை அகழ்வுகளில் பங்குபற்றிய பென்னெற் புறொன்ஸனைத் தொடர்புகொண்டு கந்தரோடையில் கண்டெடுத்த தொல்பொருட்களின் கதிரியக்கக் கரிம கணிப்புத் திகதிகளைப் பெற்றுக்கொண்டார். இந்தத் திகதி அறிவிப்பு 08.02.1982 திகதியிட்ட இலங்கைப் பத்திரிகை *Weekend* இலும், பின்னர் கலாநிதி இரகுபதியின் 1987 ஆம் ஆண்டின் யாழ்ப்பாணத் தொல்லியலாய்வு நூலிலும் வெளியானது.

இத்தொல்லியல் பொருட்களில் P2515, P2525 என அடையாளமிட்ட கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் முறையே கி.மு. 1290±60 ஆண்டையும், 980±220 ஆண்டையும் தந்திருக்கின்றன. இக்காலக் கணிப்பின்படி இற்றைக்கு 3350 ஆண்டுகளுக்கு முன்னரே இம்மட்பாண்டங்களை உபயோகித்த பெருங்கற்கால மக்களின் குடியேற்றங்கள் கந்தரோடையில் நிகழ்ந்திருக்கின்றன (Ragupathy, P. 1987:205, Thiagarajah, S. 2016: 42).

3.

## வெப்பேற்றுக் கதிரொளிவீச்சுக் காலக்கணிப்பு (Thermo Luminescence (TL) Dating)

வெப்பேற்றுக் கதிரொளிவீச்சுக் காலக்கணிப்பானது மட்பாண்டங்கள், பீங்கான்கள், சுட்ட செங்கட்டிகள், சுட்ட ஓடுகள் ஆகிய திடப்பொருட்களின் முழுமையான வயதைக் கணிப்பிடும் ஆய்வுமுறை. தொல்லியல் ஆய்வுகளிலும், நில அமைப்பியல் ஆய்வுகளிலும் இந்தவகையான காலக்கணிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. வெப்பேற்றுக் கதிரொளிவீச்சுக் காலக்கணிப்பில் இற்றைக்கு முன் 500 ஆம் ஆண்டிலிருந்து 250,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்பொருட்களின் வயதைக் கண்டுபிடிக்க முடிகிறது.

## செயல்முறைத் தத்துவம் (The Principle)

கதிரொளிவீச்சுக் காலக்கணிப்பின் அடிப்படைத் தத்துவம் மட்பாண்டங்கள், பீங்கான்கள், செங்கற்கள், ஓடுகள் ஆகியன செய்யப்படும் மண்ணில் இயற்கையாகக் காணப்படும் குவாட்ஸ், வெஃல்ஸ்பார் (Feldspar), கல்சைற் (Calcite) போன்ற படிகக்கற்கள், அதே மண்ணில் காணப்படும் கதிரியக்க உலோகங்களான யூரேனியம், தோறியம், பொற்றாசியம் ஆகியன வெளிவிடும் இலெக்றோன் கதிர்களை (Electrons) உறிஞ்சி எடுத்து அவற்றில் சேகரித்து வைப்பதில் தங்கியிருக்கிறது.

மண்ணிலிருந்து செய்யப்பட்ட மட்கலன்களையோ, செங்கற்களையோ சூளையிலிட்டுச் சுடும்போது அவற்றிருக்கும் கதிரியக்க இலெக்றோன்கள் அனைத்தும் அப்பாத்திரத்திலிருந்தோ, செங்கல்லிலிருந்தோ முற்றாக வெளிவந்து அப்பொருளின் 'தொல்லியல் கடிகாரம்' பூஜ்யத்தில் போய் நிற்கிறது (The Archaeological Clock Is Set To Zero). சமையல் பாத்திரங்களுக்கு, அவற்றைக் கடைசியாக அடுப்பில் வைத்து எரித்த சமயம், பூஜ்யமாகக் கொள்ளப்படும்.

இப்பாத்திரங்களோ அல்லது செங்கட்டிகளோ கடைசியாக நெருப்பில் எரிபட்டு அவற்றிலிருந்த இலெக்றோன் கதிர்கள் அனைத்தும் நீக்கப்பட்டபின்னர் நிலத்தினுள் புதையுண்டிருந்த சமயம், மீண்டும் நிலத்திலிருக்கும் கதிரியக்க உலோகங்களான யூரேனியம், தோறியம், பொற்றாசியம் ஆகியன வெளிவிடும் இலெக்றோன் கதிர்களை உறிஞ்சி எடுத்து, அவற்றில் சேகரித்து வைத்துக்கொள்கிறது. இவற்றோடு வெளி உலகில்

உள்ள ‘கொஸ்மிக்’ கதிர்களும் உறிஞ்சி எடுக்கப்படுகின்றன.

தொல்லியல் அகழ்வுகளில் இப்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டு ‘வெப்பேற்றுக் கதிரொளிவீச்சு’க் காலக்கணிப்பிற்கான ஆய்வுகூடத்தில் ஆய்வு செய்யப்படும்போது - அப்பாண்டங்கள் ‘மைக்கிறோவேவ்’ போன்ற ஓர் இயந்திரத்திலிட்டு சூடாக்கப்படுகின்றன. அப்படிச் சூடாக்கும்போது அவற்றிலிருந்து வெளிக்கிளம்பும் அல்பா, பீற்றா, காமா துணுக்குகள் (Alpha, Beta And Gamma Particles Alpha, Beta And Gamma Particles) ஒளிக்கதிர்களாக வெளிவருகின்றன. அந்த இயந்திரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் இலெக்றொன்களை, எண்ணும் கருவி (Electron Counter) கணக்கிடுகிறது. ஒரு கட்டத்தில் அப்பாண்டத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த அனைத்து இலெக்றோன்களும் வெளியான பின்னர், ஒளிக்கதிர்கள் நின்று போய், எண்ணும் கருவியும் மேலே நகராமல் நின்றுவிடும். எண்ணும் கருவி காட்டும் இலெக்றோன்களின் தொகை அப்பாண்டத்தின் சேமிக்கப்பட்ட மொத்த ஒளிக்கதிர் அளவு (The Accumulated Dose) ஆகும்.

மிகப் பழைமையான பாண்டங்களில் அதிக அளவு கதிர்கள் சேமிக்கப்பட்டிருப்பதனால், அதிக அளவு இலெக்றோன்கள் வெளிவரும்.

அந்த தொல்பாண்டம் கண்டெடுக்கப்பட்ட குழியிலிருந்து வெளிவரும் இலெக்றோன்கள் அதனை அளவிடும் கருவியைக்கொண்டு (Modified GeigerMuller Counter) கணக்கிடப்படுகிறது. அதோடு வெளியுலகக் கொஸ்மிக் கதிர்களும் சேர்க்கப்படுகின்றன. ஒரு ஆண்டில் அப்பாண்டம் அதன் ‘ஒரு மில்லிகிராம் நிறைக்கு’ எவ்வளவு ஒளிக்கதிர்களை உறிஞ்சுகிறது எனக் கணக்கிடப்பட்டு, பரீட்சார்த்தப் பாண்டத்தின் நிறைக்கேற்ப அது எடுத்துக்கொண்ட ஒளிக்கதிர் அளவு கணக்கிடப்படும். இது அப்பாண்டம் ஆண்டொன்றிற்கு உறிஞ்சப்பட்ட ஒளிக்கதிர் அளவு ஆகும். இந்த அளவுகளைக்கொண்டு அப்பாண்டத்தின் வயது கணிக்கப்படும்.




நிலத்தில் மண்ணிலிருக்கும் குவாட்ஸ் போன்ற படிகக் கற்கள் அங்கிருக்கும் சில கதிரியக்க மூலப்பொருட்களிலிருந்து உதிரும் இலைக்றோன்களை உள்வாங்கி அவற்றை சேமித்து வைக்கின்றன. அப் படிகக்கற்கள் கொண்ட தொல்பொருட்களை சூடாக்கும் பொது அவற்றிலிருக்கும் இலைக்றோன்கள் ஒளிக் கதிர்களாக வெளிவருகின்றன. இந்த ஒளிக்கதிர்களின் அளவை அளவிடமுடிகிறது.



அநுராதபுர அகழ்வில் கண்டெடுத்த இக்கல ஓட்டில் தமிழ்ப்பிராமி எழுத்தில் ‘தயா குவ’ (தயாவின் குடம்) என்ற வாசகம் காணப்படுகிறது. வேப்பேற்றுக் கதிரொளி வீச்சு இதன் காலத்தை கி.மு. 700-500 எனக் கணிப்பிட்டிருக்கிறது.

Image Source : S.U. Deraniyagala.

$$\text{பாண்டத்தின் வயது} = \frac{\text{சேமிக்கப்பட்ட மொத்த ஒளிக்கதிர் அளவு}}{\text{ஆண்டொன்றிற்கு உறிஞ்சப்பட்ட ஒளிக்கதிர்}}$$

இந்த வயது உண்மையில் அப்பொருள் அகழ்ந்தெடுக்கப்பட முன்னர் கடைசியாகச் சூடாக்கப்பட்ட காலமாகும்.

## உண்மைத்தனமும் நேர்மைத்தகவும்

இந்த ஆய்வின் உண்மைத்தனம், அந்தப் பரீட்சார்த்தப் பாண்டம் கண்டெடுத்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சூழலிலுள்ள கதிரியக்கத்தை சரியாக அளவிடுவதில் தங்கியிருக்கிறது. பெரும்பாலும் இத்தொல்பொருள் காலக்கணிப்பு, உண்மையான வயதிலிருந்து 15 சதவீத

வேறுபாட்டிற்குள்ளேயே இருக்கும். அதே தொல்லியல் குழியில் கண்டெடுத்த பல தொல்பொருட்களை இந்தமுறையில் காலக்கணிப்பு செய்து அவற்றின் சராசரியைக் காண்பதன்மூலம் இந்த வேறுபாட்டை 7-10 சதவீதமாகக் குறைக்க முடியும். இதன்காரணமாக இக்கணிப்பின் மூலம் ஒரு தொல்பொருளின் வயதைக் கொடுக்கும் போது வயது - வேறுபடக்கூடிய எல்லைகளைக் கொடுப்பதும் வழக்கம் (Thiagarajah, S. 2016: 44). இந்த ஆய்வின்மூலம் பெறப்படும் ஒரு பாண்டத்தின் வயதுக்கணிப்பு அப்பாண்டத்தைக் கொண்டுவரும் குழுவின் நேர்மையிலும் தங்கியிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் புதிதாக வனைந்த ஒரு சீன மட்கலனுக்கு செயற்கையாக கதிரியக்கக் கதிர்களை ஏற்றிய பின்னர் அதை காலக்கணிப்பிற்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். ஆய்வுகூட கதிரொளிவீச்சுக் காலக்கணிப்பில் அக்கலன் மிகப்பழமையான வயதைக் கொடுத்திருக்கிறது. பின்னர் அக்கலன் நியூயார்க்கில் ஏலவிற்பனைக்குச் சென்றபோது, அக்கலன் செய்யப்பட்ட களிமண் அதன் வயதுக்காலத்தில் சீனாவில் இருக்கவில்லை என்ற உண்மை வெளிவந்து அக்கலன் ஏலத்திலிருந்து நீக்கப்பட்டது.

*4.*

## ஒளிக்கிளர்ச்சியூட்டிய கதிரொளிவீச்சுக் காலக்கணிப்பு (Optically Stimulated Luminescence (OSL) Dating)

### செயல்முறைத் தத்துவம் (The Principle)

மேலே வெப்பேற்றுக் கதிர்வீச்சுக் காலக்கணிப்பில் கூறப்பட்ட அதே அடிப்படைத் தத்துவம் இந்த ஆய்வு முறையிலும் பயன்படுத்தப்படுகிறது. மட்பாண்டங்கள், பீங்கான்கள், செங்கற்கள், ஓடுகள் ஆகியன செய்யப்படும் மண்ணில் இயற்கையாகக் காணப்படும் குவாட்ஸ், வெஃல்ஸ்பார் (Feldspar), கல்சைற் (Calcite) போன்ற படிகக்கற்கள், அதே மண்ணில் காணப்படும் கதிரியக்க உலோகங்களான யூரேனியம், தோறியம், பொற்றாசியம் ஆகியன வெளிவிடும் இலெக்றோன் கதிர்களை (Electrons) உறிஞ்சி எடுத்து அவற்றில் சேகரித்து வைப்பதில் தங்கியிருக்கிறது.

மண்ணிலிருந்து செய்யப்பட்ட




நிலத்தினுள் புதையுண்டிருக்கும் போது கதிரியக்கக் கதிர்களை (Gamma rays, Beta particles, Cosmic rays) உறிஞ்சிக் கொள்ளும் வெஃல்ஸ்பார் படிகக் கல்.
மண்ணிலிருந்து செய்யப்படும் மட்கலன்கள், செங்கட்டிகள், ஓடுகள் அனைத்திலும் இப் படிகக்கற்கள் (crystals) காணப்படுகின்றன.

மட்கலன்களையோ, செங்கற்களையோ சூளையிலிட்டுச் சுடும்போது அவற்றிருக்கும் கதிரியக்க இலெக்றோன்கள் அனைத்தும் அப்பாத்திரத்திலிருந்தோ, செங்கல்லிலிருந்தோ முற்றாக விலகிப்போய் அப்பொருளின் தொல்லியல் கடிகாரம் பூஜ்யத்தில் பதிவாகிறது (The Archaeological Clock Is Set To Zero). சமையல் பாத்திரங்களுக்கு அவற்றை கடைசியாக அடுப்பில் வைத்து எரித்த சமயம்தான் பூஜ்யமாக எடுக்கப்படும்.

இப்பாத்திரங்களோ அல்லது செங்கட்டிகளோ கடைசியாக நெருப்பில் எரிபட்டு அவற்றிலிருந்த இலெக்றோன் கதிர்கள் அனைத்தும் நீக்கப்பட்ட பின்னர் நிலத்தினுள் புதையுண்டிருந்த சமயம் மீண்டும் நிலத்திலிருக்கும் கதிரியக்க உலோகங்களான யூரேனியம், தோறியம், பொற்றாசியம் ஆகியன வெளிவிடும் இலெக்றோன் கதிர்களை உறிஞ்சி எடுத்து அவற்றில் சேகரித்து வைத்துக் கொள்கிறது. இவற்றோடு வெளி உலகில் உள்ள ‘கொஸ்மிக்’ கதிர்களும் உறிஞ்சியெடுக்கப்படுகின்றன.  இந்த மட்கலன்களில் சேமிக்கப்பட்டிருக்கும் மொத்த ஒளிக்கதிர் அளவு வெப்பேற்று முறையில் அக்கலன்களைச் சூடாக்கி வெளிக்கொணரப்படு

கின்றதை இதற்கு முந்திய காலக்கணிப்பு முறையில் பார்த்தோம். இந்த முறையில் சூடாக்குவதற்குப் பதிலாக குறிப்பிட்ட அலை அளவுகளைக் கொண்ட வெண்ணிற ஒளியைப் பாச்சி (Specific Wavelengths Of Light) அதில் சேமிக்கப்பட்டிருக்கும் இலெக்றோன்களை வெளிக் கொண்டுவருவார்கள்.

இலெக்றோன்கள் வெளிவரும்போது ஒளிக்கதிர்களாகவே வெளிவரும். இந்த ஆய்வு முறை ஆங்கிலத்தில் 'optical Bleaching' எனப்படும்.

மற்றும்படி அனைத்துக் காலக்கணிப்பு முறையும் வெப்பேற்றுக் கணிப்பில் கூறியவாறே நடைபெறும். இக் காலக்கணிப்பு முறையில் ஒரு தொல்பொருளின் காலக்கணிப்பு இற்றைக்குமுன் 500 ஆம் ஆண்டிலிருந்து 500,000 ஆம் ஆண்டுக்காலம் வரை 10 சதவீத வேறுபாட்டிற்குள் கணிப்பிட முடிகிறது.

**உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்**


1. Begley, V. (1981). Excavations at Pomparippu 1970. Ancient Ceylon, (4), May 1981, Colombo.
2. Begley, V. (1983). Arikamedu reconsidered. American Journal of Archaeology, 87, 461-481.
3. Begley, V. (1988). Rouletted ware at Arikamedu: A new approach. American Journal of Archaeology, 92, 427-440.
4. Carswell, J. (1978). China and Islam: A survey of the coast of India and Ceylon. Transactions of the Oriental Ceramic Society, 42 (1977-1978).
5. Deraniyagala, S. U. (1972). Archaeological explora tion in Ceylon, Kollan Kanatta, Vilpattu. Ancient Ceylon, (2), December 1972, Colombo.
6. Deraniyagala, S. U. (1972). The citadel of Anuradha pura 1969: Excavation in the Gedige area. Ancient Ceylon, (2), Colombo.
7. Deraniyagala, S. U. (1992). Prehistory of Sri Lanka: An ecological perspective. Sri Lanka Department of Archaeological Survey, Colombo.
8. 8. Deraniyagala, S. U. (1996). Pre and protohistor ic settlement in Sri Lanka. In XIIth Congress - Proceed ings of the International Union of Prehistoric and Protohistoric Sciences, Forli, Italy, 8-14 Sept. 1996, Vol. 5, Section 16, 277-285.
9. Gururaja Rao, B. K. (1972). The megalithic culture in South India. University of Mysore, India.
10. Krishnan, K., & Coningham, R. A. E. (1997). Microstructural analysis of samples of rouletted ware and associated pottery from Anuradhapura, Sri Lanka. In E. R. Allchin & B. Allchin (Eds.), South Asian Archaeology 1995 (Vol. 2, pp. 925-937). Oxford and IBH, New Delhi.
11. Moorti, U. S. (1994). Megalithic culture of South India. Ganga Kaveri Publishing House, Varanasi.
12. Petrie, W. M. Flinders. (1931). Seventy years in archaeology. London. (Reprint 1969): Greenwood Press, Westport.
13. Possehl, G. L. (1994). Radiometric dates for South Asian archaeology. An Occasional Publication of the Asia Section, University Museum, University of Pennsylvania, Philadelphia.
14. Ragupathy, P. (1987). Early settlements in Jaffna: An archaeological survey. Mrs. Ragupathy, Madras.
15. Sahney, V. (Later Vimala Begley). (1965). The black and red ware in the Iron Age of South India (Ph.D. thesis). University of Pennsylvania.
16. Schenk, H. (2006). The dating and historical value of rouletted ware. Zeitschrift für Archäologie Außereu ropäischer Kulturen, 1, 123-153.
17. Sitrampalam, S. K. (1980). The megalithic culture in Sri Lanka (Ph.D. thesis). Deccan College, Poona.
18. Soundara Rajan, K. V. (1969). Megaliths and black and red ware. In Seminar Papers on the Problems of Megaliths in India, Varanasi.
19. Thiagarajah, S. (2016). Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE - 800 CE. Kumaran Book House, Colombo-Chennai.
20. Tyldesley, J. (2005). Egypt. BBC Books, London.
21. 21. Wheeler, R. E. M., Ghosh, A., & Deva, K. (1946). Arikamedu: An IndoRoman trading station on the east coast of India. Ancient India, 2, 17-124.
22. Wheeler, R. E. M. (1947). Brahmagiri and Chandra valli: Megalithic and other cultures in Mysore State. Ancient India, 4, 180-310 (1947-48).
23. Wheeler, R. E. M. (1966). Civilizations of the Indus Valley and beyond. Thames and Hudson, London.



● எம். ஐ. எம். சாக்கீர்

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையைச் சேர்ந்த முஹம்மட் சாக்கீர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் பெற்றவர் தற்போது மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக பணிபுரிகிறார். வரலாறு, பண்பாட்டு ஆய்வு, நாட்டாரியல், ஆவணப்படுத்தல் போன்ற துறைகளில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 21வது வயதில் ‘சம்மாந்துறை பெயர் வரலாறு’ என்ற ஆய்வு நூலை வெளியிட்டார், சம்மாந்துறை பெரியபள்ளிவாசல் வரலாற்று ஆவணப்படம் போன்றவற்றிற்கு வசனம் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் இன்கிலாப் சஞ்சிகை மீளுருவாக்க குழுவின் முன்னோடியான செயற்பாட்டாளரான இவர் 2019 இல் வெளியான சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும் எனும் நூலின் பதிப்பாசிரியர்களிலொருவரும் கட்டுரையாசிரியருமாவார். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, கலை, பண்பாடு, முதலான கருபொருள்களில் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

# பிள்ளைப்பேறும் குழந்தைகள் சார்ந்த வழக்காறுகளும்

கிழக்கிலங்கை இலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசமாகும். இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் பண்பாட்டுக்கூறுகள் மட்டக்களப்புத் தமிழர்களின் பண்பாட்டுக்கூறுகளோடு பல விடயங்களில் ஒத்ததாகவும் வேறுப்பட்டும் காணப்படுவதோடு பிற முஸ்லிம் பிராந்திய கலாசாரகூறுகளிலிருந்தும் தனித்துவமாகக் காணப்படுகின்றன. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் கிழக்கின் பூர்வ பண்பாட்டுக்கூறுகளினை தமது மத நம்பிக்கைக்கு ஏற்ப மதத்தின் அடிப்படைக்கூறுகளில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பண்பாட்டுக்கட்டமைப்பை தகவமைத்துக் கொண்டனர். இப்பண்பாட்டுப் மறுமலர்ச்சியின் கூறுகளினை கலந்துரையாடுவதாக ‘கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டசைவுகள்’ என்ற இக்கட்டுரைத்தொடர் அமையும். இதன்படி, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தாய்வழி குடிமரபு முறை, முஸ்லிம் குடிவழிமரபில் உள்ள மாற்றங்கள், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள் அவற்றில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், பாரம்பரிய பரிகார முறைகள், உறவுமுறைகள் மற்றும் குடும்ப அமைப்புகள், உணவுமுறைகள், ஆடை அணிகலன்களும் மரபுகள், வீடுகள் மற்றும் கட்டடக்கலை மரபுகள், பாரம்பரிய அனுஷ்டானங்கள், கலைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தத் தொடர் பேசவுள்ளது.

பிள்ளைப்பிறப்பு தொடர்பாக பல்வேறு சமூகங்களிடையே பலவிதமான வழக்காறுகள் காணப்படுகின்றன. புராதன எகிப்து தொடக்கம் இச்சம்பிரதாயங்கள் காணப்பட்டுள்ளன. பிள்ளை தரிப்பதும், பிள்ளை பெறுவதும் ஒரு பெண்ணிற்கான சமூக அத்தஸ்தை உயர்த்துவதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. தமது குலத்தையும் இனத்தையும் விருத்திசெய்யும் பெண்கள், அதிக பிள்ளைபெறும் பெண்கள் நன்கு மதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பிள்ளைகளைச் செல்வங்களில் ஒன்றாகக் கருதி வந்துள்ளனர். பிள்ளைப்பேறு தொடர்பான தனித்துவமான வழக்காறுகள் கிழக்கிலங்கை முஸ்லிம்களிடமும் காணப்படுகின்றன:

- இசாக்கால நடைமுறைகள்
- குடாமண் ரொட்டி
- தலைப்பிள்ளைச்செப்பு
- பிள்ளைப்பேறு
- முதலாவது அதான் சொல்லுதல்
- மருத்துவிச்சி வாழ்த்து
- இனிப்புப் பகிர்தல்
- ஏழாம் நாள் முடி இறக்குதல்
- பெயர்சூட்டுதல்
- அகீகா விருந்து
- நாற்பதாம் நாள் கொண்டாட்டம்
- தொட்டில் கட்டுதல்
- மாமநூல் போடுதல்
- பல்லுக்கொழுக்கட்டை

## நேர்ச்சை யாத்திரைகள்:

பிள்ளைப்பேறு இல்லாதவர்களும், தீராநோயுள்ளவர்களும் அவ்லியாக்கள் எனப்படும் இஸ்லாமிய மார்க்க அறிஞர்களின் கராமத்துகள்மூலம் நிவர்த்தி பெறவேண்டி, அவர்களின் கப்றுகளை (அடக்கத்தலங்களை) ஸியாரத் செய்வது, அவர்கள்மூலமாக வஸீலாத் தேடுவது, நேர்ச்சைகள் செய்வது, தொட்டில், பண முடிச்சுகள் கட்டுவது போன்றவற்றைச் செய்துவந்தனர். சம்மாந்துறையில் காட்டவுலியா, வீரையடியப்பா, கலந்தரப்பா, குருந்தையடியப்பா, கோஸப்பா, சீலக்கரை மஸ்தார், மஸ்தார் வாப்பா, பூசிரங்கன்னி நாச்சியார், கண்கத்தியப்பா போன்ற இறைநேசர்களாக மதிக்கப்பட்டவர்களின் ஸியாரங்கள் இருந்திருக்கின்றன. இன்று அவற்றுள் சிலதே எஞ்சியுள்ளன. சிலர் பாவா ஆதம் மலை, தப்தர் ஜெயிலானி, கதிர்காமம், இறக்காமம் சேகு ஒலியுல்லா ஸியாரம், கல்முனைக்குடி, நாகூர் போன்ற தூரஇடங்களுக்கு யாத்திரைகளும் செய்துவந்துள்ளனர். அதேநேரம் காளிகோயில், கோரக்கர் கோயில் தீ மிதிப்புகள், திருவிழாக்களுக்கும் செல்லும் சிலர் அக்காலத்தில் கோழிகளையும், கால்நடைகளையும் நேர்ச்சையாகக் கொடுக்கும் வழக்கமும் இருந்திருக்கிறது.

## இசாக்கால நடைமுறைகள்

மாதவிடாய்க்காலம் தாமதித்த பெண்கள், கர்ப்பமுற்றிருப்பதை அறிவதற்காக குடும்பப்பரிகாரி, மருத்துவிச்சி ஆகியோரிடம் நாடிபிடித்துப் பார்க்கச் செல்வார்கள். பாரம்பரிய வைத்தியர்களான இவர்கள் நாடித்துடிப்பு, ஏனைய குணங்குறிகளைக் கொண்டு கர்ப்பம் தரித்ததை உறுதிப்படுத்துவார்கள்.

பெண்களின் கர்ப்பகாலத்தை இசாக்காலம், எசாக்காலம் (*Pregnancy cravings*) என்று அழைப்பார்கள். இக்காலத்தில் புளி, சாம்பல், போன்றவற்றை பெண்கள் விரும்பி உண்பார்கள். உப்புக்கொச்சிக்காய் துவையலும் இவர்களுக்கு மதினிமார்களால் அரைத்துக் கொடுக்கப்படுவதுண்டு. உப்பு, பச்சைக் கொச்சிக்காய், புளி, மாங்காய், கருவாடு, வெங்காயம் போன்றவற்றைத் தணலில் சுட்டு அம்மியில் அரைத்து திரளையாகக் கொடுப்பார்கள்.

பெண்கள் தங்களின் கர்ப்பகாலத்தில் தங்களை மிகுந்த கரிசனையோடு கவனித்துக்கொள்வார்கள். இக்காலத்தில் கிணற்றில் நீர் அள்ளுதல் போன்ற பாரமான வேலைகளைத் தவிர்த்துவிடுவார்கள். அன்றையகால திருமண நடைமுறைகளினால் பெண்கள் பதின்மூன்று, பதினான்கு வயதிலேயே முதல்பிள்ளையைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாகக் காணப்பட்டுள்ளனர். இந்நடைமுறை எண்பதுகளின் இறுதிவரை அதிகம் காணப்பட்டுள்ளது. தற்காலத்தில் இவ்வாறான திருமணங்களும், இளவயதுக் கர்ப்பம் தரித்தல்களும் மிக அரிதாகவே நிகழ்கின்றன. சூரிய, சந்திர கிரகணக்காலங்களில் பெண்கள் வீட்டுக்கு வெளியில் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். கிரகணம் முடியும்வரை வீட்டில் எதையும் சமைப்பதையும் தவிர்த்து வந்துள்ளனர். கிரகண நாட்களில் மீன் அறுப்பது போன்ற காரியங்களையும் செய்யாமல் இருப்பார்கள்.

கிரகணத்தின் பின்னர் குளித்துவிட்டு உணவு உண்பார்கள். ஆற்றிலே மூழ்கிக் குளிக்கமாட்டார்கள். மருதாணி உள்ளிட்ட அலங்காரங்கள் செய்யமாட்டார்கள்.

பகட்டுச் சிகப்பு, பச்சை உள்ளிட்ட நிறங்களில் ஆடை அணிவதைத் தவிர்ப்பார்கள். அதேபோல உடலழற்சியை ஏற்படுத்தக்கூடிய சிலவகை கடல் மீன்கள், தக்காளி, கத்தரி, போன்ற உணவுகளையும், பப்பாசி, பாலா, அன்னாசி போன்றவற்றையும் சிறிதுகாலம் தவிர்த்துவருவார்கள்.

அதேபோல பூனைக்கு அடித்தல், பூனையைக் கொல்லுதல் போன்றவை அங்கவீனமான பிள்ளைப்பேற்றிற்கு வழிவகுக்கும் என்றும் நம்பினார்கள். இரவு நேரங்களிலும், மதியவேளைகளிலும் பிரயாணம் செய்வதைத் தவிர்ப்பார்கள்.

## குடாமண் ரொட்டி

கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமமான சம்மாந்துறையில் குடாமண் ரொட்டி எனப்படும் மண்ரொட்டி கர்ப்பிணித்தாய்மாரினால் உண்ணப்பட்டு வந்துள்ளது. இது அங்குள்ள குடாவட்டை எனப்படும் வயற்பிரதேசத்தில் இருந்து பெறப்படும் ஒருவகை வெண்களிமண்ணால் (மாலாமண்) செய்யப்படுவதாகும். இம்மண்ணைத் திரட்டி அள்ளிக்கொண்டு வருவார்கள் அம்மண்ணை நீரூற்றிக் கழுவி சல்லடைகளை நீக்குவார்கள். பின்னர் தரையில் ஒரு பெரிய சீலையை விரித்து அதில் வட்டவட்டமான தட்டைகளாகக் கழுவிய களிமண்ணை ஊற்றி ரொட்டி போன்று வெயிலில் உலர்த்தி எடுப்பார்கள்.

பின்னர் இதனைச் சிறுசிறு துண்டுகளாக உடைத்துச் சாப்பிடுவார்கள். சிலர் இதனை நெருப்புத்தணலில் வாட்டி அதனை உட்கொள்வார்கள். இப்பழக்கம் இக்காலத்தில் மிகவும் அருகிவிட்டது எனினும், கடந்த பத்தாண்டுகள்வரை இப்பழக்கம் கிராமங்களில் பயிலப்பட்டு வந்துள்ளது.

இது, இரும்புச்சத்துக் குறைபாட்டை உண்டாக்கக்கூடிய தொற்றுகளை ஏற்படுத்தக்கூடியது என்ற விழிப்புணர்வின் பின்னர் இவ்வழக்கம் நீங்கியுள்ளது. இதேபோன்ற மண் உண்ணும் வழக்கம், பல ஆபிரிக்க நாடுகளிலும் தற்காலத்தில் புழக்கத்தில் இருக்கின்றது. அவர்கள் மண்ணுடன் கொழுப்பு மற்றும் உப்புச் சேர்த்து இதனைத் தயாரிக்கின்றனர்.

## தலைப்பிள்ளைச் செப்பு

திருமணமான பெண் முதலாவது கர்ப்பம் தரித்து ஆறு மாதங்களின் பின்னர், அவருக்கு மாப்பிள்ளையின் வீட்டிலிருந்து சீர்களைக் கொண்டுசெல்வார்கள் இது ‘தலைப்பிள்ளைச் செப்பு’ என்று அழைக்கப்படுகின்றது.

இதற்காகக் கொழுக்கட்டை (Dumpling), லவரி, முதலிய ஆவியில் வெந்த பண்டங்களை எடுத்துச் செல்வார்கள். சீர்களில், கர்ப்பிணிக்கு விருப்பமான உணவுப்பண்டங்களுடன் பழங்களும் காணப்படும். இவற்றில் ‘பிள்ளைக்கொழுக்கட்டை’ என ஒரு கொழுக்கட்டையும் எடுத்துச் செல்லப்படும். அது ஒரு பெரிய கொழுக்கட்டையினுள், இன்னுமொரு சிறிய கொழுக்கட்டையை வைத்து, அவித்துச் செய்யப்பட்டிருக்கும். இதன்போது ஒற்றைப்படையான எண்ணிக்கையைப் பேணிக்கொள்வார்கள். பண்டங்கள், பழங்கள், செப்புப் பெட்டிகள் அனைத்தும் ஒற்றைப்படையாகக் காணப்படும்.

## பிள்ளைப்பேறு

மேலைத்தேய மருத்துவத்தின் அறிமுகத்திற்கு முன்னர், பிள்ளைப்பேறு வீடுகளிலேயே நடைபெற்றது. அனுபவம்மிக்க பரம்பரைபரம்பரையாகப் பயிற்றுவிக்கப்பட்ட பெண்களே பிரசவம் பார்த்தனர். 1980களின் இறுதிப்பகுதிவரை இந்நடைமுறை முஸ்லிம் கிராமங்களில் பயிலப்பட்டே வந்துள்ளது. மருத்துவிச்சிமார் பிள்ளைப்பேறு, பிரசவம் பார்த்தல், காது குத்துதல், ஏழாம்நாள் மற்றும் நாற்பதாம்நாள் முடியிறக்குதல் போன்ற பெண்கள், குழந்தைகள் சம்பந்தப்பட்ட பிரத்தியேகமான தேவைகளை நிறைவேற்றினர். இதற்காக அவர்களுக்குக் காணிக்கைகளும் வழங்கப்படுவதுண்டு. இவர்களை பண்டைய மகப்பேற்று நிபுணர்களாகக் குறிப்பிடுவதில் எந்தக்குறையும் இருக்காது. இவர்களின் பங்கு சமூகத்தில் பெரிதும் மதிக்கப்பட்டது. பெரும்பாலும் மருத்துவிச்சிகளாக, பரிச்சயம்பெற்ற மூதாட்டிகளே காணப்பட்டனர்.

அயலிலுள்ள பெண்களும், சொந்தக்காரப் பெண்களும் அழைக்கப்படுவார்கள். பிரசவிக்கும்

பெண்ணைச்சுற்றி திரைச்சீலை கட்டப்படும். கர்ப்பிணித்தாய்மார்களின் பிள்ளைப்பேற்றைத் தூண்டுவதற்காகக் குளுமக்காயம் என்றழைக்கப்பட்ட மருந்துக்கலவையிலான கவளம், கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஊட்டப்பட்டது. வேர்க்கொம்பு, வசம்பு, கடுகு, வெள்ளைப்பூடு, முருங்கைப்பட்டை, பெருங்காயம் ஆகிய பதார்த்தங்களைக் காயவைத்து, இடித்து, வேலிப்பருத்திச்சாற்றோடு அம்மியில் அரைத்து, உருட்டி உலர்த்தப்பட்டு, இக்கவளம் தயாரிக்கப்பட்டது. இது குமட்டலை ஏற்படுத்தக்கூடியது (Shamsedene A.T. 1888:18) என்பதோடு, தொப்புள்கொடி இலகுவாகக் கர்ப்பப்பையிலிருந்து கழன்றுவருவதற்கு உதவக்கூடியது. மருத்துவிச்சிகள் தொப்புள்கொடியை அறுத்துவிடும் பொழுது ‘லா இலாஹா இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்’ (வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ்வைத்தவிர வேறில்லை) என்று உச்சரிப்பார்கள். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாக இருந்தால் ஏழு முறையும், பெண்குழந்தையாக இருந்தால் ஒன்பது முறையும் உச்சரிப்பார்கள். இவ்வேளையில் வீட்டில் கூடியிருக்கும் உறவினர்கள் ஒரு தட்டத்தில் நாணயங்களையும் பணமுடிச்சுகளையும் போடுவார்கள். இதனை மருத்துவிச்சிக்கு அன்பளிப்பாகக் கொடுப்பார்கள்.

பிரசவம் முடிந்தபின்னர் தாயின் தலையில் ஒரு கட்டும், இடுப்பில் ஒரு கட்டும் போடுவார்கள். கெட்டசக்திகள் பிள்ளையையும் தாயையும் அண்டாமல் இருக்கவேண்டும் என்பதற்காகப் படுக்கையைச்சூழ லாடம், பாக்குவெட்டி, ஆணிகள் போன்ற இரும்புப்பொருட்களையும் தும்புத்தடி, செருப்புப் போன்றவற்றையும் வைப்பார்கள். நாற்பதுநாட்கள் வரும்வரையும் இதைக்கடைப்பிடிப்பார்கள்.

பிள்ளை பிறந்ததும் மருத்துவிச்சிகள் பிள்ளையைத் துடைத்து தகப்பனின் கையில் கொடுப்பார்கள். தகப்பனார் பிள்ளையின் முகத்தைப் பார்த்து புன்னகைத்தபின் வலது காதில் அரபியில் அதான் (பாங்கு) சொல்வார்:

*“அல்லாஹூ அக்பர் அல்லாஹூ அக்பர்*
*அல்லாஹூ அக்பர் அல்லாஹூ அக்பர்*
*அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ்*
*அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ்*
*அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்*
*அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்*
*ஹய்ய அலஸ்ஸலாஹ் ஹய்ய அலஸ்ஸலாஹ்*
*ஹய்ய அலல்ஃபலாஹ் ஹய்ய அலல்ஃபலாஹ்*
*அல்லாஹூ அக்பர் அல்லாஹூ அக்பர்*
*லா இலாஹ அல்லாஹூ”*
*“அல்லாஹ் மிகப் பெரியவன் அல்லாஹ் மிகப் பெரியவன் - 2*
*வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறுயாருமில்லை என்று நான் சாட்சி பகர்கிறேன் - 2*
*முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் நான் சாட்சி பகர்கிறேன் - 2*
*தொழுகையின்பால் வாருங்கள் - 2*
*வெற்றியின்பால் வாருங்கள் - 2*
*அல்லாஹ் மிகப் பெரியவன் - 2*
*வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறுயாருமில்லை”*
*பின்னர் இடது காதில் இகாமத் சொல்வார்:*
*“அல்லாஹூ அக்பர் அல்லாஹூ அக்பர்*
*அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ்*
*அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லல்லாஹ்*
*ஹய்ய அலஸ்ஸலாஹ் ஹய்ய அலல் பலாஹ்*
*கத் காமதிஸ் ஸலாஹ் கத் காமதிஸ் ஸலாஹ்*
*அல்லாஹூ அக்பர் அல்லாஹூ அக்பர்*
*லாஇலாஹ இல்லல்லாஹ்”*

பாங்கு மற்றும் இகாமத் சொல்வதை குழந்தையின் தந்தை அல்லது குடும்பப் பெரியவர் ஒருவர் சொல்வார். இதன்பின்னர் மருத்துவிச்சி கவிவாழ்த்தைப் பாடி அன்பளிப்பைப் பெற்றுச் செல்வார். வீட்டுவாசலில் பத்திரக்கொத்துக் கட்டப்படும்.

## தஹ்னீக்

குழந்தைக்கு முதலாவது பாலூட்டுவதற்கு முன்னர், மெல்லப்பட்ட பேரீச்சம்பழத்தின் சிறிதளவை மேலண்ணத்தில் தடவி விடுவார்கள் அது கிடைக்காதபட்சத்தில் தேன் ஒரு துளி வைக்கப்படும். இதனைக் குடும்பத்தில் மதிப்புமிக்க ஒரு பெரியவர் செய்வார். இதன்மூலம் அவரின் நற்குணங்கள் குழந்தையை அடையும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. குழந்தை பிறந்ததும் உறவினர்களுக்கு அறிவிக்கும்பொருட்டு குழந்தையின் தகப்பனும், மைத்துனரும் கற்கண்டு, உலர்ந்த திராட்சை,

இனிப்புகள் அடங்கிய சிறிய பொதிகளை வீடுவீடாக வழங்கி வருவார்கள். இந்நடைமுறை தற்காலத்தில் வெகுவாக அருகி வருகின்றது.

### கண்ணூறு கழித்தல்

குழந்தைகளிலிருந்து தீயபார்வைகளை விலக்க, அரிசி மையினால் கறுப்புப் புள்ளியொன்று கன்னத்தில் இடப்படும். அல்லது கறுப்புநிற நூல் ஒன்று கைகளில் அல்லது கழுத்தில் கட்டிவிடப்படும். கெட்டசக்திகள், கண்ணூறு என்பவற்றின் விளைவைத்தடுக்க தாய்மாமனால் பின்னப்பட்ட ஏழு நிற நூல்களைக் குழந்தைக்கு அணிவிப்பார்கள். இது மாமநூல் என அழைக்கப்பட்டது. சிலர் அச்சிரம் ஓதி ஈடுப்பில் அரைஞாண்கொடி கட்டுவார்கள். இதில் கறுப்புநிற நாடவும், மெழுகுசீலையில் ஓதி எழுதப்பட்ட அட்சரங்களும் காணப்படும்.

### பத்தியம்

பிரசவத்தின் பின்னர், பிரசவவலியைக் குறைக்க கர்ப்பிணித் தாய்மார்களுக்கு திராட்சை ரசம் அல்லது வெள்ளைச்சாராயம் அருந்தக்கொடுக்கும் வழக்கமும் காணப்பட்டு வந்துள்ளது. பிள்ளைபெற்ற தாய்மாருக்கு, கோழிக்குஞ்சு அல்லது நாட்டுக்கோழியை வாசனைத்திரவியங்கள் சேர்த்து அவித்தெடுத்த பானமும் வழங்கப்படும். இதனை விறாத்து (Broth) என்பார்கள்.

பெண்கள் மிகுந்த கவனத்துடன் பராமரிக்கப்படுவார்கள். அவர்கள் சிலநாட்களுக்கு வீட்டைவிட்டு வெளியில் செல்லமாட்டார்கள். முதல் மூன்று நாட்களுக்கு மென்மையான உணவுகள் பரிமாறப்படும். வெள்ளைப்பூண்டு, கருவாடு, வெந்தயம் சேர்த்து மிளகாணம் காய்ச்சிக் கொடுக்கப்படும். இது கிழக்கில் பிரபல்யமான பத்திய உணவாகும். இதற்காக விரால், கணையான், சுங்கான் போன்ற நன்னீர்மீன்களின் கருவாடுகள் பயன்படும்.

பிரசவத்தின் பின்னர் தாய்ப்பால் சுரப்பதற்காக பாலாணம் கொண்ட கறிகளும், பொன்னாங்கன்னி உள்ளிட்ட இலைக்கறிவகைகளும், கடல்மீன்களில் பாற்சுறா, பத்தியமீன் என்பனவும் சமைக்கப்படுவதுண்டு. பாலூட்டும்காலம் முடிவடையும்வரை பிள்ளைக்கு அஜீரணம் ஏற்படுத்தக்கூடிய உணவுகளைத் தாய் தவிர்த்துவரப் பணிக்கப்படுவதுண்டு. பலாப்பழம், பாலைப்பழம், பப்பாசிக்காய் போன்றவற்றைத் தவிர்த்து வருவார்கள்.

### ஏழாம் நாள் முடி இறக்குதல்

குழந்தை பிறந்து ஏழாவது நாள் ஆண், பெண் இரு குழந்தைகளுக்கும் தலைமுடி முற்றாக மழிக்கப்படும். இதற்காக குடும்ப மருத்துவிச்சிகள் அழைக்கப்பட்டு, அவர்களே குழந்தைகளுக்கு முடி இறக்கி, பக்குவமாக நீராட்டிப் புத்தாடை அணிவித்து, தாயிடம் கொடுப்பார்கள். மருத்துவிச்சிக்கு அன்பளிப்பாகப் புதிய ஆடையும் பணமும் கொடுப்பார்கள். குழந்தையின் மழிக்கப்பட்ட முடியைச் சேகரித்து, அதனை நிறுத்து, அதன் நிறைக்குச் சமனான தங்கத்தை அல்லது அதன் பெறுமதியை ஏழைகளுக்குக் கொடுப்பார்கள். அதன்பின்னர் குழந்தைக்குப் பெயர் சூட்டுவார்கள். மழிக்கப்பட்ட முடியினை ஒரு வெள்ளைத்துணியில் கட்டி ஆறு அல்லது ஓடும்நீரில் போட்டுவிடுவார்கள்.

### பெயர்சூட்டுதல்

குடும்பப் பெரியவர் ஒருவர் அல்லது ஆலீம் ஒருவரால் பெயரின் பொருளும், பெயரும் சபையில் கூறப்பட்டு பிள்ளையின் வலதுகாதில் சலாம் சொல்லப்பட்டு, பெயர் மூன்றுமுறை உச்சரிக்கப்படும். அதன்பின்னர் உறவினர்கள் குழந்தையைப் பெயர்சொல்லி அழைக்கத்தொடங்குவார்கள்.

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் ஆட்பெயர்கள் தொடர்பாக மக்கட்பெயராய்வு என்ற கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

### அகீகா விருந்து

குழந்தை பிறந்ததும், அக்குழந்தையின் பெயரால் ஏழாம் நாள் ஆடு அறுத்துக் கொடுப்பது வழக்கமாக இருக்கின்றது. ஆண் குழந்தை என்றால் ஒரு வயது பூர்த்தியான இரண்டு ஆண் ஆடுகளும், பெண் பிள்ளையாக இருந்தால் ஒரு வயது பூர்த்தியான ஒரு ஆண் ஆடும் அறுத்துக் கொடுக்கப்படும். ஏழாம் நாள் கொடுக்கமுடியாவிட்டால் 14, 21 ஆம் நாட்களிலும் அல்லது பராயமடைவதற்கு முன்னர் ஒரு நாளிலும் கொடுக்கலாம். இதற்காகத் தெரிவுசெய்யப்படும் ஆடுகள் நோயற்றவையாகவும், அங்கவீனமற்றவையாகவும் இருக்கவேண்டும். அவற்றின் உடலில் காயங்கள், தழும்புகள், குறிகள் என்பவை இருக்கக்கூடாது. அறுக்கப்பட்ட ஆட்டின்தோல் நீக்கப்பட்டு

இறைச்சி வெட்டி எடுக்கப்படும். இதன்போது என்புகள் உடையதாவண்ணம் இறைச்சியைப் பிரித்தெடுக்க வேண்டும் என்றும் சொல்வதுண்டு.

அகீகாவாக அறுக்கப்பட்ட ஆட்டின் இறைச்சியை உற்றார், உறவினர்களுடன் பகிர்வார்கள். அல்லது அவ்விறைச்சியைப் பிரியாணியாகச் சமைத்து, அவர்களை அழைத்து விருந்து வைப்பார்கள். இரண்டுநடைமுறைகளும் வழக்கத்தில் உள்ளன.

## நாற்பதாம் நாள் முடி இறக்குதல்

பிள்ளை பிறந்து நாற்பதாம் நாள் முடி இறக்குதல் ஒரு வைபவமாகவே நடைபெறும். தாய் புதிய ஆடைகள் அணிந்து கொள்வார். பிள்ளைக்கு மருத்துவிச்சியினால் முடி இறக்கி, உடல் கழுவி, புத்தாடைகள் அணிவிக்கப்படும். கழன்று விழுந்த தொப்புள்கொடி மற்றும் முடி என்பன புதைக்கப்படும். இத்தினத்தில் மாமியார், மதினிமார்களுக்கு விருந்தும் ஏற்பாடு செய்யப்படும்.

பெண்பிள்ளைகளாக இருந்தால் காது குத்துவதும், ஆண்பிள்ளைகளாக இருந்தால் சுன்னத் செய்வதும் இதேநாளில் இடம்பெறும். ஆரம்பகாலங்களில் ஆண்பிள்ளைகளுக்கு 6 - 8 வயதில் சுன்னத் செய்யப்படுவதுண்டு. அது ஒரு திருமண விழாபோலக் கொண்டாடப்படும். காதுகுத்தலை மருத்துவிச்சிகளே செய்வார்கள். தற்காலத்தில் வைத்தியர்களிடம் செல்வதுண்டு. பிள்ளையும் தாயும் நாற்பதுநாள் முடியும்வரை வீட்டைவிட்டு வெளியேறாமல் இருக்கச் சொல்வார்கள்.

அன்றையகாலங்களில் நாற்பதாம்நாள் நெருங்கிய உறவினர்கள் அழைக்கப்பட்டு விருந்து பரிமாறப்படும். அன்று மாலை நிய்யத் சோறு சமைக்கப்பட்டு பள்ளிவாசல் லெப்பை முஅத்தின் ஆகியோரை அழைத்து தலைப்பாத்திஹா ஓதுவார்கள். அதன்பின்னர் ஆலிம், பிள்ளையின் பெயரைச்சொல்லி அழைத்து மீண்டும் காதில் அதானும் இகாமத்தும் சொல்வார். அதன்பின்னர் உறவினர்கள் அனைவரும் பிள்ளைக்குத் தங்க ஆபரணங்கள், பணம், பொருட்களை அன்பளிப்பாக வழங்குவார்கள். பெண்பிள்ளைகளுக்கு தங்கத்தினாலான அரைமூடியுடன் அறுநாக்கயிறும், ஆண்பிள்ளைகளுக்கு வெள்ளி அறுநாக்கயிறுடன் தம்பித்துணையன் - குஞ்சுபிடி மாங்காயும் அணிவிக்கப்படும். பிள்ளைக்கு முதலாவது உணவு ஊட்டுதல் ஆறுமாதத்தில் இடம்பெறும். முதலாவதாக ஸம் ஸம் தண்ணீரும், பின்னர் பாலில் மசிக்கப்பட்ட சிறுதளவு சோறும் ஊட்டப்படும். பின்னர் பழச்சாறும், கஞ்சி வடித்த நீரும் ஊட்டப்படும்.

பிள்ளைக்குப் பல் முளைத்ததும் அடுத்த வைபவமாக பல்லுக்கொழுக்கொட்டை சொரிதல் நடைபெறும். உறவினர்கள், அயலவர்களின் சிறிய பிள்ளைகள் இவ்வைபவத்திற்கு அழைக்கப்படுவார்கள். இது முற்றிலும் சிறுவர்களுக்கான வைபவமாகவே நடாத்தப்படும்.

பல்முளைத்த குழந்தை உண்ணுவதற்கு ஏற்றவகையில் சிறியசிறிய கொழுக்கட்டைகள் அரிசி மாவினால் பல வண்ணங்களில் அவித்தெடுக்கப்படும். பல்லிமிட்டாய், கற்கண்டு, உலர்ந்த திராட்சைகள், இனிப்புகள் போன்றவை தயார் செய்யப்படும். அவற்றோடு அரிசிமா ரொட்டியும் சுட்டெடுப்பார்கள். மாலைவேளைகளிலேயே இது நடைபெறும் சிறுவர்கள் அனைவரையும் ஒரு பாயில் வட்டமாக அமரவைப்பார்கள். நடுவில் வெள்ளைத்துணி விரிக்கப்பட்டு அதில் முதற்பல் முளைத்த குழந்தை உட்காரவைக்கப்படும். பின்னர் இன்னமொரு வெள்ளைத்துணியால் பிள்ளையை மூடி பிள்ளையின் தலையின்மீது ஒவ்வொரு பண்டமாக தாய், தந்தை, உறவினர்கள் ஆகியோர் ஒவ்வொருவராகச் சொரிவார்கள். இறுதியாகச் சில்லறை நாணயக்குற்றிகளையும் சொரிவார்கள். சூழ அமர்ந்திருக்கும் சிறுவர்கள் போட்டிபோட்டுக் கொண்டு நாணயங்களையும், இனிப்புகளையும் இரு கைகள் நிறையும்மட்டும் சேகரித்துக்கொள்வார்கள்.

இதன்பின்னர் எஞ்சிய கொழுக்கட்டைகள் அனைவருக்கும் பரிமாறப்படும். அரிசிமா ரொட்டியைக் கைகளினால் உடைத்து வெள்ளைச்சீலை விரிக்கப்பட்ட சுளகில் வைத்து அதனை பிள்ளையின் தலையை மூன்றுமுறை சுற்றி, வாயிலுக்கு வந்து அனைவருக்கும் பகிர்வார்கள். இந்நடைமுறை தற்காலத்தில் இன்னும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இவ்வாறு கீழைக்கரை முஸ்லிம்களின் பிள்ளைப்பேறு, குழந்தைகள்சார் பண்பாட்டசைவுகள் தனித்துவமானவையாக, பிரதேசச் சிறப்பியல்புகளுடன் காணப்படுகின்றன. இவற்றை இன்னும் மீநுணுக்கமாகப் பதிவுசெய்து, பகுப்பாய்வு செய்யவேண்டியுள்ளது.



● இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M. SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார். தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் – மல்லாகம்

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.

**லெ**யுசிக்காமின் வலிகாமப் பிரிவைக் காட்டும் நிலப்படத்தில் பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுத் தொடர்பாகக் காணப்படும் தகவல்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளையும் சென்ற கட்டுரையில் பார்த்தோம். இந்தக் கட்டுரையில், மல்லாகம் கோவிற்பற்றுத் தொடர்பாக நிலப்படத்திலுள்ள விவரங்களை ஆராயலாம்.

மல்லாகம் கோவிற்பற்று, அதன் நீளப்பாட்டு அச்சு மேற்கு - கிழக்காக இருக்கும்படி வலிகாமப் பிரிவின் நடுப்பகுதியை அண்டி அமைந்துள்ளது. இதற்குள் மல்லாகம், அளவெட்டி, ஏழாலை - ஈவினை, புன்னாலைக்கட்டுவன், சூராவத்தை ஆகிய ஐந்து துணைப்பிரிவுகள் இருப்பதை நிலப்படத்தில் உள்ளடங்கியுள்ள பட்டியல் தெளிவாகக் காட்டுகிறது. அளவெட்டி, இதன் மேற்கு அந்தலையில் உள்ளது. நடுப்பகுதியில் மல்லாகமும் கிழக்கில் ஏழாலை - ஈவினையையும் குறித்துள்ளனர். புன்னாலைக்கட்டுவனின் பெயரையோ எல்லைகளையோ நிலப்படம் குறித்துக் காட்டவில்லை. அது, புன்னாலைக்கட்டுவன் தவிர்ந்த நான்கு பிரிவுகளை மட்டுமே எல்லை குறித்துக் காட்டுகிறது (படம்1). புன்னாலைக்கட்டுவன் ஊரின் அமைவிடத்தைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, புன்னாலைக்கட்டுவன், துணைப்பிரிவு நிலப்படத்தில் ஏழாலை - ஈவினை எனக் குறித்துள்ள பகுதிக்குள் அடங்கியிருக்கும் எனலாம். ஏழாலை - ஈவினைத் துணைப்பிரிவின் தெற்கு எல்லையை அண்டிச் சூராவத்தைத் துணைப்பிரிவு உள்ளது.

## எல்லைகள்



படம்-2: லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட மல்லாகம் கோவிற்பற்றின் படம்.

மல்லாகம் கோவிற்பற்றுக்குக் கடலேரி அல்லது கடல் முகப்புக் கிடையாது. இது நாற்புறமும் நிலத்தாற் சூழப்பட்டது. இதன் வடக்கு எல்லையில் தெல்லிப்பழைக் கோவிற்பற்றும் கிழக்கில் புத்தூர்க் கோவிற்பற்றும் தெற்கில் கோப்பாய், உடுவில் ஆகிய கோவிற்பற்றுகளும் மேற்கில் பண்டத்தரிப்பு, சங்கானை ஆகிய கோவிற்பற்றுகளும் உள்ளன (படம்2).



படம்-1: லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மல்லாகம் கோவிற்பற்றுப் பகுதி.

ஒல்லாந்தர்காலத்து மல்லாகம் கோவிற்பற்று, தற்காலத்தில் தெல்லிப்பழை, உடுவில் ஆகிய இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் பிரிந்து காணப்படுகின்றது. இன்றைய காங்கேசந்துறை வீதிக்கு மேற்கேயுள்ள பகுதி தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்குள்ளும், அவ்வீதிக்குக் கிழக்கேயுள்ள பகுதிகள் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குள்ளும் அடங்குகின்றன. அதேவேளை, உள்ளூராட்சி நிர்வாக அமைப்பில், இதன் மல்லாகம், அளவெட்டி ஆகிய பகுதிகள் வலிகாமம் வடக்குப் பிரதேச

சபையின் ஒரு பகுதியாகவும்; ஏழாலை, ஈவினை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகள் இன்றைய வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் ஒரு பகுதியாகவும் உள்ளன.

## வீதிகள்

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி, மல்லாகம் கோவிற்பற்றினூடாகச் செல்லும் மிக முக்கியமான வீதி, யாழ்ப்பாண நகரத்திலிருந்து தெல்லிப்பழை நோக்கிச் செல்லும் வீதியாகும். இது இக்கோவிற்பற்றை மல்லாகம் துணைப்பிரிவினூடாக ஊடறுத்துச் செல்கிறது. இவ்வீதி இன்றைய யாழ்ப்பாணம் - காங்கேசந்துறை வீதியின் தடத்தில் அமைந்தது என்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றில் மிக நீண்டகாலமாகவே இவ்வீதி முக்கியத்துவம் பெற்றிருந்ததால், மல்லாகத்தின் வளர்ச்சிக்கு இவ்வீதி பெரும் பங்காற்றியுள்ளது. மல்லாகப் பிரிவுக்குள் இவ்வீதியின் ஒரு புள்ளியிலிருந்து தொடங்கி மேற்கு நோக்கிச் செல்லும் ஒரு குறுகிய நீளம் கொண்ட வீதி மல்லாகம் தேவாலயத்துக்குச் செல்வதாக நிலப்படம் காட்டுகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் அல்லது ஒல்லாந்தர் காலத்தில் தேவாலயத்தை யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை வீதியுடன் இணைப்பதற்காக இந்த வீதியை அமைத்திருக்கக்கூடும். சங்கானையிலிருந்து தெல்லிப்பழைக்குச் செல்லும் வீதியும் மல்லாகம் கோவிற்பற்றுக்குள் அளவெட்டித் துணைப்பிரிவை ஊடறுத்துச் செல்கிறது. தற்காலத்தில் இவ்வீதி அளவெட்டிக் கிராமத்தின் வடக்கு எல்லையாக அமைவதைக் காணமுடிகிறது. அளவெட்டியின் எல்லையையோ வீதியின் அமைவிடத்தையோ துல்லியமாக வரையாததால் இவ்வேறுபாடு ஏற்பட்டிருக்கலாம்.

மேலே குறிப்பிட்ட வீதிகளைத் தவிர வேறு வீதிகள் எவற்றையும் மல்லாகம் கோவிற்பற்றுக்குள் நிலப்படம் காட்டவில்லை. இதனால், நிலப்படம் வரைந்த காலத்தில் வேறு வீதிகள் எவையும் இக்கோவிற்பற்றுக்குள் இருக்கவில்லை என்று பொருள்படாது. ஏற்கெனவே வேறிடங்களில் சுட்டிக்காட்டியதுபோல, அக்காலத்தில் இருந்திருக்கக்கூடிய ஏனைய வீதிகள் நிலப்படத்தின் நோக்கத்துக்கு முக்கியம் இல்லாதவையாக இருந்திருக்கக்கூடும்.

மேலே குறிப்பிட்ட சிறிய வீதியும் யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை வீதியும் சந்திக்கும் இடமே இன்றைய மல்லாகம் சந்தி எனத் தோன்றுகிறது. எனின், சிறிய வீதியின் மேற்கு நோக்கிய நீட்சியே இன்று மல்லாகத்திலிருந்து அளவெட்டிக்குச் செல்லும் வீதியாகும். இந்நிலப்படம் வரையப்பட்ட காலத்தில் இம்முழு வீதியும் இருந்திருந்தும், தேவாலயங்களை இணைக்கும் வீதிகளைக் காட்டுவதே நிலப்படத்தின் நோக்கமாக இருந்ததால் தேவாலயத்துக்கு மேற்கேயுள்ள பகுதி காட்டப்படவில்லையா அல்லது குறித்த வீதிப்பகுதி பிற்காலத்தில் அமைக்கப்பட்டதா? என்பது தெளிவில்லை. மல்லாகம் சந்தியிலிருந்து வீதிக்குக் கிழக்குப் பக்கமாக இன்றுள்ள எந்த வீதியும் நிலப்படத்தில் இல்லை.

### கட்டடங்கள்

போர்த்துக்கேயர் காலத்திலும் ஒல்லாந்தர் காலத்திலும் மல்லாகம் ஒரு கோவிற்பற்றாக இருந்ததால் அங்கே ஒரு கோவிற்பற்றுத் தேவாலயமும், அருகில் ஒரு தேவாலய இல்லமும் இருந்தன. இவற்றை நிலப்படம் காட்டுகிறது. இதைத்தவிரக் கட்டடம் என்ற வகையில் மல்லாகம் துணைப்பிரிவுக்குள் ஒரு யானைப் பந்தியையும் நிலப்படத்தில் காணமுடிகிறது.

### தேவாலயமும் தேவாலய இல்லமும்

மல்லாகத் தேவாலயமும் தேவாலய இல்லமும் தெல்லிப்பழைக்குச் செல்லும் வீதிக்குச் சற்றுத் தொலைவில் அதற்கு மேற்கே இருப்பதாக நிலப்படம் காட்டுகிறது. மேற்படி வீதியிலிருந்து தேவாலயத்துக்குச் செல்ல ஒரு இணைப்பு வீதி இருந்தது பற்றியும் ஏற்கெனவே குறிப்பிட்டோம். இது தற்போதைய மல்லாகம் - அளவெட்டி வீதியின் பகுதியாக இருக்கக்கூடும் எனவும் குறிப்பிட்டோம். இது சரியானால் ஒல்லாந்தர்காலத் தேவாலயம் மல்லாகம் - அளவெட்டி வீதியியை அண்டி இருந்தது தெளிவு. ஆனாலும், நிலப்படத்தின் அம்சங்கள் சரியான அளவுத்திட்டத்தின்படி குறிக்கப்படாததால் அந்நிலப்படத்திலிருந்து தேவாலயத்தின் துல்லியமான அமைவிடத்தை அறிய முடியாது.

மல்லாகம் தேவாலயம் போர்த்துக்கேயர் காலத்தில் தொடங்கப்பட்டு ஒல்லாந்தர் காலத்தில் கட்டி




**படம்-3: போல்தேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ள மல்லாகம் தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் காட்டும் படம்.**

பிரித்தானியர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மதப்பணியாற்றிய கிறித்தவ மிசன்கள் பழைய கோவிற்பற்றுத் தேவாலயங்களைப் பொறுப்பேற்றுத் திருத்திப் பயன்படுத்தியது குறித்து ஏற்கனவே இக்கட்டுரைத் தொடரில் குறிப்பிட்டோம். ஆனால், இம்மிசன்கள் எவையும் மல்லாகத் தேவாலயத்தைக் கையேற்றுத் திருத்தித் தேவாலயமாகப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை.

முடிக்கப்பட்டதாக போல்தேயஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். இது கற்களாலும் சுண்ணாம்புச் சாந்தினாலும் கட்டப்பட்டது என்றும் அவர் கூறுகிறார். தேவாலய இல்லமும் பல வளைவுகளுடன் கூடியதாக வடிவமைக்கப்பட்டிருந்தது என்றும், இதன் மேல் மாடிக்குச் செல்வதற்கு நீளமான படிக்கட்டுகள் இருந்ததாகவும் போல்தேயசின் நூலில் தகவல்கள் உள்ளன.[1] நூலிலுள்ள படமும், மல்லாகம் தேவாலயமும் தேவாலய இல்லமும் நிரந்தரமான கட்டடப்பொருட்களால் ஆனதாகவே காட்டுகிறது[2] (படம்3).

பிரித்தானியர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மதப்பணியாற்றிய கிறித்தவ மிசன்கள் பழைய கோவிற்பற்றுத் தேவாலயங்களைப் பொறுப்பேற்றுத் திருத்திப் பயன்படுத்தியது குறித்து ஏற்கனவே இக்கட்டுரைத் தொடரில் குறிப்பிட்டோம். ஆனால், இம்மிசன்கள் எவையும் மல்லாகத் தேவாலயத்தைக் கையேற்றுத் திருத்தித் தேவாலயமாகப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. இந்தப் பகுதியில் மதப்பணியாற்றிய அமெரிக்க மிசனைச் சேர்ந்தவர்கள் நீதிமன்ற வீதியில் 1817 ஆம் ஆண்டளவிலேயே ஒரு பாடசாலையை அமைத்ததாகவும், உள்ளூர் மக்கள் தொடர்ச்சியாகக் காட்டிய எதிர்ப்பினால் இந்த முயற்சி கைகூடவில்லை என்றும் தெரிகிறது.[3] பழைய ஒல்லாந்தத் தேவாலயமும் இவ்வீதியை அண்டியே அமைந்திருந்ததால் மேற்குறிப்பிட்ட பாடசாலை அத்தேவாலயம் இருந்த இடத்திலேயே உருவாகியிருக்கக்கூடுமா? என்பது ஆய்வுக்குரியது. எவ்வாறெனினும், பிரித்தானியர் காலத்தில் ஒல்லாந்தரின் தேவாலயமும் இல்லமும் கைவிடப்பட்டு இடம் தெரியாமல் அழிந்துவிட்டதாகவே தெரிகிறது. இவற்றின் எச்சங்கள் எவையும் இன்று காணக்கிடைக்கவில்லை.

## யானைப் பந்தி

வலிகாமத்தின் பல பகுதிகளில் யானைப் பந்திகள் இருந்தது குறித்து ஏற்கெனவே குறிப்பிட்டோம். மல்லாகத்திலும் ஒரு யானைப்பந்தி இருந்ததை லெயுசிக்காமின் நிலப்படம் குறித்துக் காட்டுகிறது. தெல்லிப்பழைக்குச் செல்லும் வீதிக்குச் சற்றுத் தொலைவில் அதன் மேற்குப் பக்கத்தில், மல்லாகம் கோவிற்பற்றுக்கும் தெல்லிப்பழைக் கோவிற்பற்றுக்கும் இடையிலான எல்லையை

அண்டி இது உள்ளது. இதை அணுகுவதற்கான வீதி எதையும் நிலப்படம் காட்டவில்லை. அத்துடன், இன்றும் இருக்கக்கூடிய ஏதாவதொரு நிலையான அம்சத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடியதாகவும் இல்லை. அமைவிடம் எந்த அளவுக்குத் துல்லியமானது என்றும் தெரியவில்லை. எனவே, இது எவ்விடத்தில் இருந்தது என்பதைத் துல்லியமாக அறிய முடியாதுள்ளது. குறிச்சிப் பெயர்கள், காணிப்பெயர்கள் முதலிய இடப்பெயர்களை நுணுக்கமாக ஆராய்ந்தால் இது தொடர்பான தகவல் ஏதாவது கிடைக்கக்கூடும்.

## குளங்கள்

நிலப்படம் மல்லாகம் கோவிற்பற்றுக்குள் அடங்கியதாக ஐந்து குளங்களை மட்டுமே காட்டுகிறது. இவற்றுள் பறையன் குளம், அழவலைக் குளம், பன்னாக்கைக் குளம், சங்கல்லைக் குளம் ஆகிய நான்கு குளங்கள் அளவெட்டித் துணைப்பிரிவுக்குள் உள்ளன. எஞ்சிய ஏழாலைக் குளம் ஏழாலை - ஈவினைத் துணைப்பிரிவுக்குள் உள்ளது. நிலப்படத்தின்படி மல்லாகம், சூராவத்தை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய துணைப்பிரிவுகளுக்குள் குளங்கள் இல்லை.

இன்றைய பதிவுகளின்படி பழைய மல்லாகம் கோவிற்பற்றுக்குள் அடங்கிய பகுதிகளுக்குள் 12 குளங்கள் இருக்கின்றன.[4] அமைவிடங்களையும் பெயர் ஒலிப்பு ஒற்றுமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நிலப்படத்திலுள்ள பன்னாக்கைக் குளத்தை தற்காலத்தில் பனாக்கைக் குளம் அல்லது பினாக்கைக் குளம் என அறியப்படும் குளத்துடன் இலகுவாக அடையாளம் காண முடிகிறது. அதேபோல நிலப்படத்தில் அழவலைக் குளம் என்ற பெயரில் குறித்துள்ள குளம், இன்று அழகொல்லைக் காட்டுக் குளம், அழகொல்லை வண்ணான் குளம் எனப்படும் இரண்டு குளங்களில் ஒன்றைக் குறிக்கிறது எனலாம். இவ்விரு குளங்களும் அருகருகே காணப்படுவதால் நிலப்படத்திலுள்ள அழவலைக் குளம் குறிப்பாக இரண்டில் எதைக் குறிக்கிறது என அறிவது கடினம்.

நிலப்படத்தில், ஏழாலை - ஈவினைத் துணைப்பிரிவில் காட்டியுள்ள ஏழாலைக் குளத்தின் அமைவிடம் இன்று ஏழாலைப் பகுதியில் உள்ள பெரிய தம்பிரான் குளத்துடன் ஒத்துவருகிறது. எனவே, நிலப்படத்தின் ஏழாலைக் குளமே அவ்விடத்தில் அமைந்த பெரிய தம்பிரான் கோவிலின் பெயரைத் தழுவிப் பிற்காலத்தில் பெரிய தம்பிரான் குளம் எனப் பெயர் பெற்றது எனலாம்.

ஏழாலையைப் பற்றிய நூலொன்றை எழுதிய தி.க. முத்துசாமி என்பவர் இந்தக் குளம் பழங்காலத்தில் நெடுங்கண்ணிக் குளம் எனப் பெயர் பெற்றிருந்ததாகக் கூறுகிறார். ஏழாலையின் தொடக்கக் குடியிருப்பு இந்தக் குளத்தை அண்டியே உருவாகிப் பின்னர் ஊரின் பிற பகுதிகளுக்கும் விரிவடைந்திருக்கவேண்டும் என்பது அவரது கருத்து.[5] ஊரில் உள்ள மிகப் பழைய ஏழு ஆலயங்கள் தொடர்பாகவே இவ்வூருக்கு ஏழாலை (ஏழு ஆலயங்கள்) என்ற பெயர் ஏற்பட்டது என்ற கருத்து உள்ளது. மேலே குறிப்பிட்ட ஏழு ஆலயங்களும் இக்குளத்தின் அயலிலேயே காணப்படுகின்றன. இந்த ஏழு ஆலயங்களில் ஒன்றே குளத்துக்குத் தற்காலப் பெயர் ஏற்படக் காரணமான பெரிய தம்பிரான் கோவில். இக்கோவிலே குளத்துக்கு மிக அருகில் அதன் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது.6

## குறிப்புகள்


1. *Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959), 320.*
2. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 291.*
3. மு. அருளையா, "யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (யா/அமெரிக்க மிசன்) பாடசாலையின் வரலாறு", 175 ஆவது ஆண்டு நிறைவு யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், 2007, 51.
4. விவசாய அபிவிருத்தித் திணைக்களப் பதிவுகளின்படி.
5. தி.க. முத்துச்சாமி, எங்களூர் ஏழாலயவூர் (ஏழாலை: திருமதி செல்லம்மா முத்துச்சாமி,1994), 25.
6. 6. முத்துச்சாமி, எங்களூர் ஏழாலயவூர், 27.



● சின்னையா மௌனகுரு

சின்னையா மௌனகுரு அவர்கள் இலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர்; அரங்க ஆய்வாளர், பயிற்சியாளர், இயக்குநர், பிரதி உருவாக்குநர், நடிகர், கூத்துக் கலைஞர் என்று பல தளங்களில் இன்றும் இயங்கிவருபவர்.ஈழத்து அரங்கத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்ட சிலரில் மௌனகுரு குறிப்பிடத்தக்கவர். 'இராவணேசன்', 'சங்காரம்' முதலிய புகழ்பெற்ற கூத்து நாடகங்கள் மௌனகுருவுக்கு தனியான அடையாளத்தை வழங்கின. இவர், 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம் – 1984, சடங்கில் இருந்து நாடகம் வரை – 1985, மௌனகுருவின் மூன்று நாடகங்கள் – 1985, தப்பி வந்த தாடி ஆடு – 1987, பழையதும் புதியதும் நாடகம் அரங்கியல் – 1992, சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் – 1992, சங்காரம் – ஆற்றுகையும் தாக்கமும் (நாடகம்) – 1993, ஈழத்து தமிழ் நாடக அரங்கு – 1993, கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் – நீலாவணன் – 1994, கலை இலக்கிய கட்டுரைகள் – 1997, சக்தி பிறக்குது – நாடகம் – 1997, பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபும் – 1997, ஈழத்து நாடக அரங்கு – 2 ஆம் திருத்திய பதிப்பு – 2004, தமிழ்க் கூத்துக்கலை – வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல் – 2010, கூத்து யாத்திரை – 2021, கூத்தே உன் பன்மை அழகு – 2021 போன்ற பலநூல்களை எழுதியுள்ளார்.

# கூத்து இன்றுவரை கிராமங்களில் நிலைபெற்றிருப்பதற்கான காரணங்கள்

## பகுதி 1

ஈழத்து மரபுவழி ஆற்றுகைக் கலைகளுக்கு ஒரு வரலாறும் வளர்ச்சியும் உண்டு. தென்மோடி, வடமோடி, சிந்துநடைக் கூத்துகள், வாசாப்பு, இசை நாடகம், பள்ளு, குறவஞ்சி, வசந்தன், மகுடி என அது பன்முகப்பட்டது. இவற்றுள் சில அருகிவிட்டன; சில கால ஓட்டத்துடன் நின்று போராடி நிலைக்கின்றன; சில மாறுகின்றன. காலந்தோறும் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகளும், அதனை உருவாக்கிய அரசியல், பொருளாதார, சமூக காரணங்களும் இம்மாற்றங்களுக்கு அடித்தளமாக உள்ளன. இந்த பல்வேறு வகைப்பட்ட ஆற்றுகை வடிவங்கள் தத்தமக்கென அழகியலையும், அமைப்பையும், வெளிப்பாட்டுத் திறனையும் கொண்டுள்ளன; ஒன்றிலிருந்து ஒன்று பெற்றும் வளர்ந்துள்ளன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வதும், அவை மாற்றம் பெற்றபோது அது சம்பந்தமாக நடந்த விவாதங்களை அறிவதும், இதன் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவருக்கும், அதனை மேலும் வளர்த்துச் செல்ல விரும்புவோருக்கும் உதவியாக இருக்கும். இப் பல்வேறு ஆற்றுகை வடிவங்கள் பற்றியும் அவை கல்வி உலகில் ஏற்கப்பட்ட பின்னணிகள் பற்றியும், அதனால் இந்த ஆற்றுகைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் அறிமுகம் செய்வதாக 'ஈழத்துத் தமிழரின் ஆற்றுகைக் கலைகள் : மரபும் மாற்றமும்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமைந்திருக்கும்.

## முன்னுரை

முந்திய கட்டுரையிலே கூத்திலே காணப்பட்ட பாதகமான அம்சங்கள் கூறப்பட்டன. அதன் பாதகமான அம்சங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்வோம்:

1. சாதி அமைப்பைப் பேணுகிறது (சாதி கலந்தாடும் வழக்கம் இல்லை).
2. பெண்ணுக்கு அதிலே வெளிப்படையாக இடமில்லை (பெண்கள் கூத்தாடக் கூடாது).
3. பகுத்தறிவுக்குப் புறம்பான கருத்துகளை விதைக்கிறது (தொன்மக் கதைகளில் கூறப்படும் நம்ப முடியாத நிகழ்வுகள்).
4. விளிம்புநிலைப் பாத்திரங்கள் அதிலே கேலி பண்ணப்படுகின்றன.
5. ஒரு நாடகத்துக்குரிய கட்டமைப்பும், பாத்திரப்படைப்பும் கூத்துப்பிரதிகளில் அதிகமாக இல்லை.
6. அதன் பிரதியும் ஆற்றுகையும் நிலமானிய விழுமியங்களைப் பேணுபவையாக உள்ளன.

இன்னும் பல உள்ளதாயினும், பிரதானமானவை இவைகளே.

இத்தனை பாதகங்கள் இருந்தும், இன்றும் இவை மக்களால் வரவேற்கப்படுகின்றன; ஊரிலே ஆடப்படுகின்றன. சிலநேரங்களில் போட்டிபோட்டுக் கொண்டு கிராமங்களில் கூத்துகள் நடக்கின்றன. இதற்கான காரணங்கள் யாவை? இந்த ஆய்வு எம்மை சமூக உளவியல் ஆய்வில் கொண்டுவந்து நிறுத்தும். இங்கே நான் பதினொன்று உபகாரணங்களை முன்வைக்கிறேன். இவை மாத்திரம்தான் காரணமல்ல, இன்னும் பல உள்ளன என்பதையும் வாசகர்கள் அறிய வேண்டும்.

அந்தப் பதினொன்றும் இவை:

1. தனிமனித உளவியல், சமூக உளவியல்
2. சாதியாக, சமூகமாக இணையும் தன்மை
3. அதன் கொண்டாட்டத்தன்மை
4. கிராமக்கல்விக்கூடமாக அது திகழ்தல்
5. சமூகத்தின் சகல தரப்பினருக்கும் அது பாலியல் திருப்தியைத் தரல்
6. திருமணத்திற்கு மாப்பிள்ளைகளையும் பெண்களையும் கண்டுபிடித்தல்
7. குழந்தைகளின் கும்மாளமும் மகிழ்ச்சியும்
8. பெற்றோர்கள் அடையும் பெரு மகிழ்ச்சி
9. ஊரிலே அனைவரையும் இணைத்துச்செல்லும் பாங்கு
10. உருவாக்கலில் முழு ஊரும் பங்கு கொள்ளுதலும், உள்ளூர் அறிவும்
11. குடும்ப, சாதி, மத, பிரதேச, இன அடையாளமாக அது அடையாளப்படுத்தப்படுதல்
12. காலத்தோடும், தொழிலோடும், சமூக அசைவியக்கத்தோடும் அது இணைந்திருப்பது

இவை ஒவ்வொன்றையும் சுருக்கமாகப் பார்ப்போம். முதல் ஐந்து காரணங்கள் இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றன. மீதி ஏழும் அடுத்த கட்டுரையில் விளக்கப்படும்.

### 1. தனிமனித உளவியல், சமூக உளவியல்

தனிமனிதருக்கென சில உளவியல்கள் உள்ளன. அதனை அவர்கள் வாழும் சமூகமும், அவர்களின் சொந்த அனுபவமும் அளிக்கின்றன. தனிமனிதர்கள் இன்னொரு மனிதரோடு அல்லது பலரோடு உறவாடுகின்றபொழுது, அவர்கள் சமூகமாக மாறுகிறார்கள். இந்த சமூக உறவாடல், அவர்களின் தனிமனித உளவியலில் பல தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இந்தவகையில், தமிழ் நாடகங்களோ கூத்துகளோ இன்னும் பெரிதாக உளவியல் கோணத்தில் அணுகப்படவில்லை. இந்தப் பின்னணியில் பார்க்கும்பொழுது, கூத்தில் ஈடுபடுகின்ற தனிமனிதருக்கு அவர்களுக்கான உடல் இன்பம், உள இன்பம் ஆகிய இரண்டு இன்பங்களையும் கூத்து தாராளமாக வழங்குகிறது.

கூத்தை நிகழ்த்துபவர், அதைப் பழக்கும் பயிற்சியாளர் என்ற இரு சாராருக்கும் இது ஒரு பெரும் உடற்பயிற்சியாக அமைகிறது. முக்கியமாக, கூத்துக்கலைஞனின் அங்கம், பிரத்தியங்கம் ஆகிய முழு உறுப்புகளுக்கும் பயிற்சி கிடைக்கிறது. ஒரு நாள் அல்ல, இரண்டு நாளல்ல — ஆறு மாதகாலப் பயிற்சி. இந்தத்



Image Source - www.battinews.com

கூத்தின் வலிமைப்பாட்டிற்கு இது ஓர் உதாரணமாகும். இவையெல்லாம் இப்போது இல்லை என்பதையும், இதைப் வாசிப்போர் மனதில் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சியான பயிற்சி, கூத்தனின் உடலை வலிமைப்படுத்துகிறது. இதனோடு கூத்தில் ஈடுபடுகின்ற கொப்பி பார்ப்பவர், பிற்பாட்டுக்காரர், தாளமிசைப்போர் ஆகியோருக்கும் இந்த உடல் வலிமை கிடைக்கிறது. உடல் மாத்திரமல்ல — மனிதர்களின் முக்கிய அடையாளம், அவர்களுக்குள்ளே இருக்கும் உளம்தான். அந்த உள மகிழ்ச்சியே வாழ்வின் சாரம். அந்த மகிழ்ச்சியை, கலைஞருக்கும், கூத்து உதவியாளர்களுக்கும், பார்ப்பவர்களுக்கும் இந்தக் கூத்து அளிக்கிறது.

பண்டையகாலங்களில் ஒரு கூத்தைப் பழகி முடிக்க ஆறு மாதங்கள் எடுக்கும். நான்கு மாதங்கள், அவர்கள் தினமும் இரவு 7.00 மணியிலிருந்து 12.00 மணிவரை கூத்துப்பழகுவார்கள். அடுத்த இரண்டு மாதங்கள், கிழமைக் கூத்தாக 8 வாரங்கள் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை அதனைப் பழகுவார்கள். ஆறாம் மாத ஆரம்பத்தில் ‘அடுக்குப் பார்ப்பார்கள்’. ‘அடுக்குப் பார்த்தல்’ என்றால் — கூத்துக்குரிய அலங்கார உடைகள் அணியாது, வெறும் உடுப்பில் ஒரு நாள் விடிய விடிய அந்தக் கூத்தை நடத்துவதாகும். இந்த ஆறு மாதகாலப் பயிற்சி, ஊருக்கும், ஆடும் கலைஞருக்கும், ஆட்டுவிக்கும் ஆட்களுக்கும் உடல், உள சுகங்களைத் தரும். ஒருவித போதைநிலைதான் — ‘கூத்துப் போதை’ என்பேன். அந்த நிலையில், ஏதோ ஒரு பெரும் எதிர்பார்ப்புடன் முழுக்கிராமமும் இருக்கும். ஊர்முழுவதும் இந்தக் கூத்தைப் பற்றியே பேச்சாக இருக்கும்.

## 2. சாதியாக, சமூகமாக இணையும் தன்மை

வரலாற்றுப்போக்கிலே தமிழரிடையே சாதி வேறுபாடும் சமூக வேறுபாடும் வந்து விடுகின்றன. அதிலிருந்து எவரும் தப்பவே முடிவதில்லை. நிலவிய நிலமானிய சமூக அமைப்பு அதனை மேலும் இறுக்கி வைத்திருக்கிறது. சாதி ஒருங்கிணைப்பு, சமூக ஒருங்கிணைப்பு என்பன ஓர் ஊரிலே மிக இறுக்கமாகக் காணப்படுகின்ற ஓர் அம்சமாகும். சாதிக்கு ஒரு கோவில் இருக்கும் தமிழர் சமூகத்தில் சாதிக்கு ஒரு கூத்தும் இருக்கிறது. சாதி கலந்து ஆடக்கூடாது என்ற கொள்கையோடு கூத்துகள் ஆடப்படுகின்ற பின்புலத்தை இதனை வைத்துக் கொண்டுதான் நாங்கள் விளங்கிக் கொள்ளலாம்.

சில கூத்துகள் சாதியின் பெயரால் அழைக்கப்படுகின்றன. குறைந்த சாதியினர் எனக் கணிக்கப்படும் சாதியினர் மத்தியிலே மிகச் சிறந்த கூத்துகள் வந்தமைக்கு ஆதாரங்கள் உண்டு. மிகச்சிறந்த ஆட்டக்காரர்கள் குறைந்த சாதியினர் என கருதப்பட்ட சாதியினரிடம் காணப்பட்டுள்ளனர். மிகச்சிறந்த அண்ணாவிமாரும் காணப்பட்டுள்ளனர்.

சாதி என்பது என்ன? ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்கின்ற சில குடும்பங்களின் இணைப்புதானே? சாதிக்கும் முன்னால் குடும்பம் என்பது முக்கியமாகப்படுகின்றது. குடும்பங்களின் இணைப்பே சாதியாகும். ஒரு குடும்பத்தில் ஒருவர் கூத்தாடினால் அந்தக் குடும்பம் மதிப்புக்குரிய குடும்பமாகிறது, இதனால் குடும்பத்திற்கு அங்கீகாரம் கிடைக்கிறது.

ஒரு சாதி கூத்தாடினால் அந்தச் சாதிக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கிறது. குறைந்த சாதியினர் எனக் கருதப்படும் ஒருவர் அரசன் வேடம் தாங்குகையில் அவர் பெருமிதம் அடைகிறார்.

அதனைப் பல சாதியினரும் பார்க்கிறார்கள், ரசிக்கிறார்கள்; இதனால் இணைகிறார்கள்; இதனால் ஒரு சாதி அங்கீகாரம் கிடைக்கிறது.

சில மதக்கூத்துகளை ஆடுகின்றபொழுது அந்த மதக்கூட்டம் ஒன்றாக இணைகிறது. கத்தோலிக்கக் கூத்துகள் இதற்கு உதாரணம். ஆடுபவர்களுக்கு சாதி கடந்த ஒரு மத அங்கீகாரம் கிடைக்கிறது, இது அவர்கள் மனதைத் திருப்திப்படுத்துகிறது.

மட்டக்களப்பில் மாத்திரமல்ல, தமிழர் மத்தியிலே கிராமங்கள் தோறும் சாதிகள் உள்ளன. ஒரு கிராமத்தைக் கூறினால் அது என்ன சாதிக்கிராமம் என இலகுவாகக் கூறிவிடுவார்கள். இவ்வண்ணம் கிராமங்கள் சாதிகளாக அமைந்து, அந்தக் கிராமத்தின் சாதியினர் முழுவதுமே அந்தக்கூத்தில் ஈடுபடுகின்றனர். இந்தக் கிராமங்களின் இணைப்பில் உருவானவைதான் பிரதேசங்கள். தங்கள் பிரதேசங்களின் பெருமையை, சிறப்பை, வெளி உலகுக்குக் காட்டுவதாக கூத்து அமைகின்றது. இவையெல்லாம் சேர்ந்துதான் இனமாக முகிழ்க்கின்றன. தமிழ் இனம் என்பதன் அடையாளம் இந்தக் கூத்தே. இவ்வகையில், குடும்பமாக, சாதியாக, மதமாக, ஊராக, பிரதேசங்களாக, இனமாக இணைகின்ற ஓர் இணைப்பினை இந்தக் கூத்துகள் தருகின்றன.

குடும்பமாக, சாதியாக, மதக் கூட்டமாக, கிராமமாக, பிரதேசமாக, இனமாக தமிழ்ச்சமூகம் விரிவடைய — அதற்குத்தக்க, கூத்துகளும் அந்தக் குழுமங்களை இணைக்கிறது என நாம் புரிந்துகொள்ளலாம்.

### 3. கூத்தில் காணப்படும் கொண்டாட்டத்தன்மை

கூத்து, மொத்தமாகப் பார்க்கும்போது ஒரு கொண்டாட்ட அரங்காகும். கூத்தைப் பார்ப்போர் அதன் கதை அமைப்பையோ அதன் உள்ளார்ந்த அர்த்தங்களையோ அதில் நடிகர்களும், அண்ணாவிமார்களும் உருவாக்கிய கற்பனைகளையோ நுணுக்கமாகப் பார்க்கமாட்டார்கள். கூத்தறிந்த சிலரே அப்படிப் பார்ப்பார்கள். ஏனையோருக்குக் கூத்து அரங்கேற்றம் அல்லது கூத்து ஆடுதல் என்பது ஒரு கொண்டாட்டம்தான்.

இந்தக்கொண்டாட்டம் இரவிரவாக நடைபெறும். மாலை 7.00 மணிக்கு அந்த வட்டக்களரியைச் சுற்றிக் குழந்தைகள் திரண்டுவிடுவார்கள். அந்த வட்டக்களரியும் அல்லது பின்னாளில் யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பிரதேசங்களில் உருவாகிவிட்ட ஒரு பக்கம் அடைக்கப்பட்ட அல்லது முற்பக்கம் அடைக்கப்பட்ட மேடைகளும், அதன் அலங்காரங்களும் ஒரு கொண்டாட்ட உணர்வை அனைவருக்கும் ஏற்படுத்திவிடும்.

ஏதோ நடக்கப்போகிறது என்ற உணர்வோடு குழந்தைகள் ஊரோடு எதிர்பார்த்திருப்பர். கூத்துக்குப் புறப்படும் வேடதாரிகளைத் தம் வீட்டிலேயே அவர்கள் உருவாக்குவார்கள். எனது சின்ன வயதில், என் பெரியப்பா கரப்பு உடுப்பை இடுப்பிலே அணிந்த வண்ணம், உரலின்மீது இருந்து, 'கமலாவதி' என்னும் கூத்துக்காக, பரமாகர மகாராஜாவாக அமர்ந்திருக்க, ஒப்பனையாளர் அவருக்கு ஒப்பனையிட்டதைப் பார்த்த ஞாபகம் வருகிறது.



Image Source - www.battinews.com

கரப்பு என்பது மீன்பிடிக்கப் பிரம்பினால் செய்யப்படும் ஓர் பொறி ஆகும். வட்ட வடிவமாகவும் கூம்பிய உருவில் மேலிருந்து ஆரம்பித்துக் கீழே பரந்து கணுக்கால்வரை விரிந்து செல்வதாகவுமே இது அமைக்கப்படும். அதனை இடுப்பில் கட்டிக்கொண்டு கதிரையில் உட்கார முடியாது. இருப்பதானால் உரலில்தான் இருக்க முடியும். உரலில் பிருஸ்டப் பாகத்தை வைத்து, உரலைச் சுற்றிக் கரப்பு உடுப்புப் பரவ ஒப்பனைக்காக அமர்ந்திருப்பார் கூத்தர். இதனைக் கிராமம் எங்கும் காணலாம்.



Image Source - www.battinews.com

முழுக்குடும்பமும் அவரைச் சுற்றி நின்றது. அவரை பரமாகர மகாராஜாவாக உருவாக்கும் முயற்சியில் அக்குடும்பம் ஈடுபட்டிருந்தது. சேலையை அவர் மனைவி வழங்கினார், ஒப்பனையை ஒருவர் செய்ய, இன்னொருவர் அவருக்கு உதவிக்கொண்டிருந்தார். அதை ஒப்பனை என்று அவர்கள் சொல்லவில்லை, 'மாத்துப் போடுதல்' என அழைத்தனர். மாத்து என்பது மாற்று என்பதன் பேச்சு வழக்கு. அதாவது இருக்கும் நிலையிலிருந்து இன்னொரு ஆளாக அந்தப் பாத்திரத்தை, அந்த ஆளை மாற்றிவிடுவது என்பது இதற்குப் பொருள்.

பெரியப்பா முருகுப்பிள்ளை பரமாகர மகாராஜாவாக உடல் தோற்றத்திலே, ஒப்பனையிலே மாறிக்கொண்டிருந்ததை எனது பத்தாவது வயதிலேயே பார்த்த ஞாபகம் இன்னும் மனதைவிட்டு அகலவில்லை. இவ்வண்ணமே ஒவ்வொரு குடும்பமும் தங்கள் குடும்பத்தில் நடிகர்களை அந்தப் பொதுமேடைக்காக ஒவ்வொரு வீட்டிலும் தயாரித்துக்கொண்டு இருந்தனர். அது ஒரு கொண்டாட்டமாகவே எனக்குத் தெரிந்தது — ஊர்க் கொண்டாட்டம்.

வேடம்கட்டி விடியவிடியக் கூத்து நடத்தியபோது, அந்தக்கூத்தில் வந்த நாடகக் கட்டமைப்பையோ நாடகத் தன்மையையோ யாரும் கவனிக்கவில்லை. அதன் ஆட்டத்தையும் அதன் பாட்டையும், அதன் பின்னணியில் ஒலித்த மத்தள ஒலியையும் சலங்கை ஒலியையும், கூட்டுக் குரலையும் பிற்பாட்டையும் ரசித்துக் கொண்டிருந்தனர். இருந்து பார்த்தோர் பலர்; பாயிலே படுத்துக்கொண்டு பார்த்தோர் பலர்; நடந்து திரிந்து கொண்டே பார்த்தோர் பலர்; ஒருவரோடு ஒருவர் உரையாடிக்கொண்டே பார்த்தோர் பலர்; இடைக்கிடை சற்றுத்தூரம் சென்று சாராயம், கள்ளு அருந்திவந்து பார்த்தோர் சிலர். சிறுவயதிலேயே எனக்கு அது பெரும் கொண்டாட்டமாகவே தெரிந்தது. இந்தக் கொண்டாட்டத்தன்மை தான் கூத்தின் மிகப் பிரதானமான பலமாகும்.

ஆறு மாதகாலம் கூத்துப் பழகும்போதே தினமும் அந்த ஆடலையும் பாடலையும் கேட்ட; கிழமைக்கூத்து ஆடும்போது, பகல் முழுவதும் அந்த ஆடலையும் பாடலையும் கேட்ட; வெள்ளுடுப்பு நிலையில் அடுக்குப்பார்த்தல் என்ற இறுதி ஒத்திகையில் ஓர் இரவு பூராகவும் அந்த ஆடலையும் பாடலையும் கேட்ட ஊர்மக்கள் பலருக்கு, அந்தக் கூத்துப்பிரதி மனப்பாடமாகவே இருக்கும். ஆனாலும், அந்தப் பிரதியை எவ்வாறு நிகழ்த்தப்போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பே அவர்களிடம் அதிகமாக இருக்கும். தெரிந்த கதை, தெரிந்த ஆடல், தெரிந்த முகம், தெரிந்த தாளக்கட்டுகள், இறுதி ஒத்திகையில் கூத்தை முழுமையாகப் பார்த்த அனுபவம் இருந்தும் ஒளியிலும், உடையமைப்பிலும் அது எவ்வாறு உருவாகப்போகின்றது என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருந்துகொண்டே இருக்கும்.

அந்தக் கொண்டாட்டத்தை நோக்கி மனம் ஆவல்பட்டுக் கொண்டிருக்கும். இந்தக்

கொண்டாட்டத்தன்மையினை ஊரிலே நடைபெறும் கோயிற் சடங்குகளிலே காணலாம். அங்கும், வருடம் ஒருதரம் அந்த ஊர்க்கோயில் அல்லது சாதிக்குரிய கோயில் திறக்கும். ஏழு நாட்கள், பத்து நாட்கள் அல்லது பதினெட்டு நாட்கள் எனச் சடங்குகள் நடைபெறும். ஒரு சாதி அல்லது சமூகம் அல்லது முழு ஊரும் அந்தச் சடங்கில் ஈடுபடும். அந்தச் சடங்கு வெறும் வழிபாடு மாத்திரம் அல்ல — அது ஒரு பெரும் கொண்டாட்டமும் ஆகும். இறுதிநாள் சடங்கு மிகப்பெரிய விழாவாக நடந்து முடியும். அது பலி கொடுத்ததாகவோ, பள்ளயமாகவோ, தீப்பாய்தலாகவோ அமையும். ஒரு வருடம், அந்தப் பெரும் கொண்டாட்டத்தை நோக்கி அந்தச் சமூகமும், அந்தச் சாதியும், அந்த ஊரும் காத்திருக்கும். ஏன் காத்திருக்கும் என்றால், அந்தக் கொண்டாட்டத்துக்குள் அவர்கள் அனைவரும் அடைகின்ற மகிழ்ச்சியே. இந்த மகிழ்ச்சியைத்தான் கூத்துக் கொண்டாட்டமும் தருகிறது.

ஆறு மாதகாலம் கூத்துப்பழகுதல் ஒரு கொண்டாட்டம் என்றால், அரங்கேற்றம் அன்று நடப்பது ஒரு கொண்டாட்டம் என்றால், அரங்கேற்றம் முடிந்தபின் வீட்டுக்கு வீடு ஆடிச்செல்வதும் ஒரு கொண்டாட்டம் தான். அன்று இரவு நடந்த கூத்தாகிய அந்தக் கொண்டாட்டத்தில் இணைய முடியாது வீட்டிலேயே இருக்கின்ற முதியவர்கள், நோயாளர்கள், பெண்கள் போன்றவர்களையும் கூத்தோடு இணைக்கின்ற ஊர்வலக் கொண்டாட்டம் அது. காலில் சதங்கை ‘ஜல் ஜல்’ என ஒலிக்க, சிறுவர்கள் பின்னால்வர, கூட நாய்களும் குலைத்த வண்ணம்தொடர, அது ஒரு கொண்டாட்ட ஊர்வலமாக இருக்கும். இவ்வண்ணமான கொண்டாட்டத்தன்மையினை ஏற்படுத்தி அனைத்து மக்களையும் இணைக்கின்ற ஒரு கலைவடிவமாக அல்லது ஓர் ஆற்றுகைவடிவமாக கூத்து இருந்தபடியினாலே அது சமூக அரங்காக மாறியது. இப்போது பெரும்பாலும் அது இல்லை என்பது தெரிகிறது. எனினும் கூத்து அன்று நிலைபெற்றமைக்கும், சில இடங்களிலாவது இன்று நிலைபெற்றிருப்பதற்கும் இந்தக் கொண்டாட்டத்தன்மையே காரணமாகும்.

### 4. கிராமக் கல்விக்கூடமாக அது திகழ்தல்

ஆங்கிலேயர் வந்த பின்னரே பாடசாலைகள் ஏற்பட்டு அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அதற்கு முன்னர் இந்த கூத்துகளே மக்களுக்குக் கல்வி புகட்டும் பங்கினை ஆற்றின. மட்டக்களப்பில் மாத்திரமல்ல, இந்தக் கல்விபுகட்டும் பாங்கு இலங்கைத் தமிழர் மத்தியிலே, அந்தக்காலத்தில் நடைபெற்ற அத்தனை கூத்துகளிலும் இருந்துள்ளது. இராமாயண, மகாபாரதக் கதைகள் அல்லது பழமரபுக் கதைகள், நல்ல மனிதனுக்கு வேண்டிய குணங்களைப் போதித்தன. தர்மம், நீதி, அற ஒழுக்கங்கள் என்பவற்றைக் கூத்தே புகட்டியது.

இந்த அற, ஒழுக்க, தர்மங்களைப் பற்றிய பார்வைகள் இப்போது மாறிவிட்டன. அவை பற்றிய விமர்சனங்களும் வந்துவிட்டன. ஆனால் ஒரு காலத்தில் இந்த அற, ஒழுக்க, நீதி என்பன கல்வியாக கூத்துகள்மூலம் மக்களுக்குக் கூறப்பட்டன. கிராமமக்கள் இந்தக் கூத்தினை ஒருநாள் மாத்திரம் பார்ப்பவர்கள் அல்ல; கூத்து உருவாகத் தொடங்கியதிலிருந்து அரங்கேறும்வரை, ஏறத்தாழ ஆறு, ஏழு, எட்டு மாதங்கள் தொடர்ச்சியாகப் பார்ப்பவர்கள். எனவே தொழில்நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் கூத்துமூலமே அவர்கள் அறிவைப் பெறுகின்றனர். கூத்தின்மூலமே அறக்கருத்துகளைப் பெறுகிறார்கள். பெரியவர்கள் மாத்திரமல்ல, சிறுவர்களும்கூட சிறுவயதில் இருந்தே இந்த அறிவினைப் பெறுகிறார்கள். இதனை ஒரு தொடர் கல்வியூட்டல் என நாம் அழைக்கலாம். இவ்வகையில், ஒரு காலத்தில், கிராமத்தில் வாழுகின்ற மிகச் சாதாரணமான, வறிய மக்களுக்கு கல்வியூட்டும் கல்விச்சாலைகளாக கூத்துகள் விளங்கின.

### 5. பாலியல் பகிரங்கமாகப் பேசப்பட்டது

கூத்தில் பாலியல் பாடல்கள், பாலியல் பகிடிகள் பகிரங்கமாக இடம்பெற்றன. அது உளமகிழ்ச்சியையும், உளத்திருப்தியையும் மக்களுக்கு ஏற்படுத்தின. பாலியல் பேச்சுகள் கிராமத்தில் சர்வ சாதாரணம். மத்தியதர வர்க்கத்தினரிடையே அவை பேசப்படக்கூடாதவை. அப்படிப் பேசுதல் ஒழுக்கமின்மையின்பால் வைத்துப்பார்க்கப்பட்டது. பாலியல் பேச்சுகள் அநாகரிகமானவை எனச் சமூகத்தால், அதிலும் படித்த சமூகத்தால் அன்று ஒதுக்கப்பட்டன. நமது தமிழ்மரபை எடுத்துக்கொண்டால், சங்ககாலம்

தொடக்கம் இற்றைவரை இலக்கியங்களில் பாலியல் பேசப்பட்டு வந்துள்ளது. அகம் என்றும், காதல் என்றும், காமம் என்றும், கைக்கிளை என்றும், பெருந்திணை என்றும் அது பல வகைப்படும். அக்காதல் செய்திகள் தமிழ் இலக்கியமரபில் பேரிடம் பிடித்துள்ளன. காமம் என்பது நோய் அல்ல; அது ஒரு இயல்பு எனத் தமிழ்மரபு கூறுகிறது. இங்கே ஊர்க் கூத்துகளில் இந்த பாலியல் பேச்சுகள் பாடலாகப் புறப்பட்டு முழுமக்களையும் கணநேரம் மகிழ்விக்கிறது. ஓர் ஆணைப்பார்த்து பெண் பாடுவதாக இப்படி ஒரு பாடல் வருகிறது:

*தூய தனம் இரண்டும் விறுவிறுப்பு - உன்*

*தொடுதலுக்கோ - அது பெருவிருப்பு*

ஒரு பெண் தன் காதலை வெளிப்படையாகக் கூறுவதை தமிழ்ப் பெருமரபு தடுக்கும். ஆனால் மக்கள் மரபிலே அது கூறப்படும். ஆண்டாளின் பாடல்கள் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். அந்த மக்கள் மரபை கிராமியக் கூத்துத் தருகிறது.

இந்திய நாகரிகத்தில் கோயில்கள் பலவற்றில் பாலியல் சிற்பங்கள் காணப்படுகின்றன. முக்கியமாக கஜுராவோ சிற்பங்களைக் குறிப்பிடலாம். மட்டக்களப்புக் கொக்கட்டிச்சோலை, பறாளை விநாயகர் கோவில் பழையதேரில் இத்தகைய பாலியல் சிற்பங்கள் இருந்துள்ளன. உடலுறவுச் சிற்பங்களும் காணப்படுகின்றன. ஏன் இது? பாலியல் என்பது பாதகமானது அல்ல; அது இயல்பு என்பதைப் படித்தவர்களைவிட பாமரர்கள் என்று அழைக்கப்படும் இந்தக் கிராமத்தவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

அலங்காரரூபன் எனும் கூத்துப் பனுவலில் விறகுதலையனாக வரும் அரசகுமாரன் ஒரு பெண்ணுடன் புணரும்போது நடத்தும் செயல்களை இவ்வாறு பாடுகிறான்:

*மாணிக்கச் செம்பொன் தெவிட்டு முலை*
*நாணிக்கப் பூவை பேணும் புட்ப முலை*
*மார்பை மார்போடணைத்து - அவளிரு*
*ஊனை ஊனிற் பிணைத்து - இனிச்சென்று*
*மாட்டக் கிடையாதோ - களி*
*மூட்டக் கிடையாதோ - பால்*
*புகட்டக் கிடையாதோ -*
*நாகபடம் நிகர் கடிதடத்திடை*
*ஆகம் படத் திடை வேகம் நோக்கியே*
*மூழ்கி மூழ்கித் தேறி*
*காம வெள்ளம் ஒழுகி மெழுகி திருமணம்*
*முடிக்கக் கிடையாதோ - புகழ்*
*படிக்கக் கிடையாதோ - மேனி*
*தடிக்கக் கிடையாதோ - தேன்*
*குடிக்கக் கிடையாதோ*

இதனைச் சமூகம் வரவேற்றிருக்கிறது; இரசித்திருக்கிறது; பாடியிருக்கிறது; மகிழ்ந்திருக்கிறது. ஆண் பாத்திரம் மாத்திரமல்ல, பெண் பாத்திரமும் பாலியல் பேசுகிறது. சாரங்கரூபன் நாடகத்தில், சாரங்கரூபனிடம் அவள் சிறியதாயார் சித்திராங்கி அவனை தன்னுடன் புணரவருமாறு வெளிப்படையாகக் கேட்கிறாள். இச்சொல்லாடல் மத்தியதர வர்க்கத்தினரைத் திடுக்கிடவைப்பவை. அதில்வரும் ஒரு பெண் பாத்திரம் ஆண் பாத்திரத்திடம் எனது இரண்டு கால்களின் நடுவே இருக்கும் மூடுண்ட பெட்டியினை உன்னிடம் இருக்கும் திறப்பையிட்டு திறந்து, அசைத்து இன்பம் தருவாய் என்று வேண்டுகின்றாள். அப்பாடல் இது:

*கட்டிப்பிடித்து இரண்டு காலின் நடுவேயிருக்கும்*
*பெட்டிதனிலே திறப்பைவிட்டு பேசிச் சர நகை புரிந்து*
*இட்டமுடன் மெல்ல அசைத்து இன்பம் அருளாய்*

இந்தப் பாலியல் உணர்வை இப்படிச் சுதந்திரமாக வெட்டவெளியில் எந்த நாடகமும் கூறாது. ஆனால் கிராமியக் கூத்துகள் தந்திருக்கின்றன. பூக்கோவின் பாலியல் பற்றிய தத்துவார்த்தக் கருத்துகளோடு இணைத்து ஆராய வேண்டியவை இவை. கூத்து ஆய்வுலகைக் காத்துநிற்கிறது. இதுவரை முன்சொன்ன காரணங்களில் ஐந்து காரணங்களே விளக்கப்பட்டுள்ளன. ஏனைய ஆறு காரணங்களையும் அடுத்த கட்டுரையில் விளக்குவோம்.

(தொடரும்)



● சிவராஜா ரூபன்

சிவராஜா ரூபன் அவர்கள் 1993 ஆம் ஆண்டு சிறுவனாக இருக்கும்போது ஈழத்திலிருந்து நோர்வேக்குப் புலம்பெயர்ந்தார். தற்போது கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு, நாடகம் மற்றும் ஊடகம் ஆகிய தளங்களில் இவர் செயற்பட்டு வருவதுடன் அரசியல், சமூகம், கலை, இலக்கியம் சார்ந்தும் எழுதி வருகிறார். ஈழம், தமிழகம், மற்றும் புலம்பெயர் ஊடகங்கள், இதழ்களில் இவரது எழுத்துக்கள் தொடர்ந்து வெளிவருகின்றன.

‘எதிர்ப்பரசியல்’, ‘அதிகார நலனும் அரசியல் நகர்வும்’ (உலக அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு), ‘எழுதிக் கடக்கின்ற தூரம்’ (கவிதைத் தொகுப்பு), ‘கலைப்பேச்சு’ (திரை நூல் அரங்கு) என்பன இவரது படைப்புகளாகும்.

# தமிழர்களும் தேசமும்: இந்திய – இலங்கைத் தமிழர்களின் தேசிய அடையாள அரசியல் மீதான ஒப்பீட்டு ஆய்வு

பகுதி 3

ஈழம் சார்ந்தும் ஈழப்பிரச்சினை சார்ந்தும் ஆங்கிலத்திலும் தமிழல்லாத பிற மொழிகளிலும் பல்வேறு நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. 2009 இற்கு பின்னர் வெளியாகிய அபுனைவு நூல்களை அவற்றின் சமூக – அரசியல் முக்கியத்துவம் கருதி தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கோடு ‘திக்குகள் எட்டும்’ என்ற தொடர் வெளிவருகின்றது. இத்தொடரின் மூலம் தமிழ் சூழலுக்கு தமிழல்லாத பரப்பில் நடைபெறும் ஈழம் சார்ந்த வெளிப்பாடுகள் அறிமுகமாகும்.

இலங்கை இனமுரண்பாட்டில் மேற்கின் சமாதான அணுகுமுறை, பனிப்போர் காலகட்டத்தின் சமாதானத் தலையீடுகளை ஒத்த ஓர் ஊடுருவும் தன்மையின் தொடக்கம் என உணர முடிகிறது. இந்தியா, அதன் தோல்வியடைந்த இராணுவத் தலையீட்டினை அடுத்து, சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னணியில், அடிப்படையாக மாற்றியமைக்கப்பட்ட புவியியல் சூழலுக்குள் அகப்பட்டுக்கொண்டது. இலங்கைத் தீவின் இனமுரண்பாட்டில் நேரடியாக ஈடுபடுவதை விலக்கிக்கொண்டது. இலங்கையை ஓர் இனத்துவ இணைவாக்கம்கொண்ட சந்தை ஜனநாயகமாக மாற்றும் ஒரு பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்குலகின் தலையீடுகளும் முயற்சிகளும் அமைந்தன."

தமிழர்களும் தேசமும் எனும் தலைப்பில் மாதுரிகா இராசரட்ணம் எழுதிய ஒப்பீட்டு ஆய்வு நூலின் இறுதி மூன்று அத்தியாயங்களையும் 'திக்குகள் எட்டும்' தொடரின் இந்தப் பகுதி அறிமுகப்படுத்துகின்றது. 'இலங்கையின் உள்நாட்டுப் போரின் தொடக்கம்', 'உள்நாட்டுப் போரின் முடிவு', 'தமிழ்த் தேசியம் இன்று' என்பன முறையே இறுதி அத்தியாயங்களின் தலைப்புகளாகும்.

### உள்நாட்டுப் போரின் தொடக்கம்

இலங்கையின் உள்நாட்டுப் போரின் பின்னணியில் பௌத்த - சிங்கள தேசியவாதம் மற்றும் தமிழ்த் தேசியவாத அரசியலின் போக்குகளை உருவாக்கிய கூறுகளை 'இலங்கையின் உள்நாட்டுப் போரின் தொடக்கம்' எனும் அத்தியாயம் பகுப்பாய்வு செய்கிறது. 1970களின் இறுதியிலிருந்து 2009 வரை நீடித்த உள்நாட்டுப் போர்ச்சூழலின் போக்கினைச் சர்வதேச தரப்புகளின் செயற்பாடுகளும் அணுகுமுறைகளும் எவ்வாறு வடிவமைத்தன என்பதையும் விளக்குகின்றது. அத்தோடு தேசியவாத சக்திகளை, குறிப்பாக பௌத்த - சிங்கள தேசியவாதத்தின் வளர்ச்சிக்கு ஆதரவாகச் சர்வதேச அணுமுறைகள் எத்தகு தாக்கங்களைச் செலுத்தின என்பதுவும் பேசப்படுகின்றது.

### தாராளவாத சமாதானம்

தாராளவாத சமாதானம்/ அமைதி (Liberal peace) என்ற சொல் ஜனநாயகம் மற்றும் சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்ட உலக ஒழுங்கினை உருவாக்கும் இலக்கினைக்கொண்ட சர்வதேச திட்டங்களைக் குறிக்கிறது. சர்வதேச சக்திகளின் இலங்கைத் தீவு மீதான தலையீடு இந்த அணுகுமுறையின் பாற்பட்டது. இது இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் கடுமையாகப் பாதித்தது. பின்பனிப்போர் காலத்தில் நாடுகளின் உள்ளக முரண்பாடுகள்மீது சர்வதேசம் அல்லது அமெரிக்கா தலைமையிலான துருவமுனைப்பட்ட சக்திகள் அதிக கவனம் செலுத்தத்தொடங்கின. குறிப்பாக தாராளவாத உலக ஒழுங்கிற்குத் தடையெனக் கருதப்பட்ட இன முரண்பாடுகள், உள்நாட்டு முரண்பாடுகளில் தலையிடுவதில் சர்வதேசம் முனைப்புக் கொண்டிருந்தது.

### ஐ.தே.க ஆட்சியும் தாராளவாத சந்தைமுறை அமுலும் விளைவுகளும்

1977 - 1994 வரையான காலப்பகுதியான 17 ஆண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி நீடித்தது. ஜே.ஆர். ஜெயவர்த்தனா இலங்கையின் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியலில் தொடர்ச்சியான பல முக்கிய மாற்றங்களைத் தொடக்கிவைத்தார். அரசினாற் கட்டுப்படுத்தப்பட்ட அரசால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி அரசியலிருந்து விடுபட்டு, சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தத் தொடங்கினார். இந்த மாற்றம் உலக வங்கி உட்பட்ட பிற நிதிக்கொடை நிறுவனங்களின் ஆதரவை ஈர்த்தது; மேலும், உதவித் தொகைகளின் விரைந்த பெருக்கம் உலகின் முன்னணி நன்கொடை பெறுநர் நாடாக இலங்கையை மாற்றியது. இந்த ஆதரவு இன முரண்பாடு தீவிரமடைந்து தமிழர் விரோதக் கலவரங்கள் உக்கிரமடையும் 1980களின் தொடக்கம் வரை நீடித்தது. அமெரிக்காவின் ரீகன் (Ronald Reagan administration) நிர்வாகம் உலகம் முழுவதும் கொம்யூனிச எதிர்ப்பினைத் தீவிரப்படுத்தியதால், இலங்கை அரசாங்கம் அமெரிக்காவின் வலுவான ஆதரவையும் பெற்றது. இதற்கிடையில், முந்தைய அரசுகளின் அணிசேரா இயக்கங்களின் (NonAligned Movement) உறுதிமொழிகளை இலங்கை அரசு கைவிட்டு, மேற்கின் பக்கம் திரும்பியது. இந்தக்காலம் இலங்கையின் சர்வதேச உறவுக்கும் உள்நாட்டு அரசியலுக்குமிடையிலான இடைவெளியின் தொடக்கமாகக்

கொள்ளத்தக்கது என்கிறார் மாதுரிகா. சர்வதேசரீதியில் இலங்கையானது தாராளவாத சந்தைமுறை மற்றும் கொம்யூனிச எதிர்ப்பு எனும் இருமுனைச் சர்வதேசக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டது. சமகாலத்தில் நாட்டின் உட்தளங்களில் பௌத்த - சிங்கள மேலாதிக்கத்தையுடைய அரச மற்றும் சமூகக் கட்டமைப்புகள் தீவிரப்படுத்தப்பட்டன. தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் - தமிழ் ஆயுதப்போராட்ட இயக்கங்களுக்கு எதிரான விரிவடைந்த இராணுவ நடவடிக்கைகள் - அரசாங்கத்தில் அதிகாரப்பிடியின் இறுக்கம் எனவாக உள்நாட்டு நிலைமைகள் தீவிரமடைந்தன.

1978 ஆம் ஆண்டில், ஐக்கிய தேசியக் கட்சி புதிய அரசியலமைப்பை நிறுவியது. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கான நிறைவேற்று அதிகாரத்தை மையமாகக் கொண்ட அரசியலமைப்பு மாற்றம் அது. ஜே.ஆர். ஜெயவர்த்தன அந்தப் பதவியில் அமர்ந்தார். சர்வதேச பொருளாதார நெருக்கடி, அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் தேர்தலிற் தமது வெற்றியைக் கடினமாக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் கணித்தனர். எனவே ஜனாதிபதி தன்னிச்சையாக முன்கூட்டியே தேர்தல் அறிவிப்பதை அனுமதிக்கும் அரசியலமைப்புச் திருத்தத்தை (மூன்றாவது திருத்தச் சட்டம்) நிறைவேற்றினர்.

திறந்த பொருளாதாரக் கொள்கை குறிப்பிடத்தக்க நன்மைகளை உருவாக்கியிருந்தாலும் (1977 - 1982 காலப்பகுதியில் ஒருவருக்கான சராசரி வருமானம் வருடாந்தம் 6 சதவீதம் உயர்ந்தது, 1970-77 காலங்களில் அது 3.5 சதவீதமாக இருந்தது.) இது பௌத்த - சிங்கள மதவாத ஆதரவாளர்களிடையே அதிருப்திகளை உண்டுபண்ணியது. பொதுநிறுவனங்கள் பலவற்றை மூடுதல், தனியார்மயமாக்கல், சமூக நலத்திட்டக் கொடுப்பனவுகளில் வெட்டு, தொலைக்காட்சிப் பாவனையின் விளைவான ‘மேற்கத்தியமயமாக்கல்’, நுகர்வோர் மற்றும் சுற்றுலா ஆகியவற்றின் தாக்கம், வளைகுடா நாடுகளுக்கு வேலையாட்களாகப் புலம்பெயர்தலின் அதிகரிப்பு, மற்றும் தமிழ் நிறுவனங்களின் வளர்ச்சி ஆகியவை தாராளவாத சந்தைப் பொருளாதாரத்தின் விளைவுகளிற் சிலவாகும்.

இக்காலத்தில் இன மோதல் தீவிரமடைந்தது. அதிகாரத்திற்கு வந்ததும், எழுச்சிபெற்றுவந்த தமிழர் ஆயுதக்கிளர்ச்சியை அடக்க, ஜெயவர்த்தன ‘தீவிரவாதிகளை’ அழிப்பதற்கெனத் தமிழர் தாயகத்தின் வடபகுதிக்குப் படைகளை அனுப்பினார். மேலும் 1978 ஆம் ஆண்டில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை அரசு (Prevention of Terrorism Act, PTA) நிறைவேற்றியது.

திறந்த பொருளாதாரக் கொள்கையானது சிங்கள அரசியற் தரப்பிற் தமிழர் எதிர்ப்பு மனநிலையை வலுப்படுத்தியது. 1983 ஜூலை கலவரங்கள் தமிழர்களின் பொருளாதார அடிப்படையைப் பாதித்தன. தமிழர் உள்நாட்டில் அகதிகளாக இடம்பெயரவும் வெளிநாடுகளுக்குப் புகலிடம் தேடிச் செல்லவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். தமிழர்களுக்கு எதிரான வன்முறையை அரசாங்கம் சட்டபூர்வமாக்கியது. மேலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் (TULF) அரசியல் நிலைமை மேலும் பலவீனமடைந்தது. கலவரங்களுக்குப் பிறகு போராளிக் குழுக்கள் வளர்ந்தன. ஆயுதமோதல் தீவிரமைந்தது. மேற்கத்திய நாடுகள் இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து ஆதரித்துவந்தன.

## இந்தியத் தலையீடு

தொடர்ந்து இந்த அத்தியாயம் 1980களில் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டினையும் செல்வாக்கையும் விவரிக்கிறது. அப்போது இந்தியா தமிழீழப் போராளி இயக்கங்களை ஆதரித்தது. பேச்சுவார்த்தைக்கான அழுத்தத்தினை இலங்கைக்குக் கொடுத்துவந்தது. அமெரிக்காவுடனான இலங்கையின் வலுப்பெற்றுவந்த உறவுக்கான எதிர்வினையாக இந்தியா தமிழீழப் போராளி இயக்கங்களுக்கு நிதியளித்து, பயிற்சிகளை அளிக்கத் தொடங்கியது. இது இலங்கையின் இராணுவ இலக்குகளை நோக்கிய போராளிகளின் தாக்குதல்கள் அதிகரிக்க வழிவகுத்தது. இதன் விளைவுகளில் ஒன்று, 1987 இல் நேரடி இந்திய இராணுவ தலையீட்டிற்கு வழிவகுத்த ஒரு பெரும் மனிதாபிமான நெருக்கடியை உண்டுபண்ணிய வரலாறாகும்.

1987 இல் கையெழுத்திடப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கை, மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரத்தை வழங்கி, வடக்கு - கிழக்கு (தமிழர் தாயகம்) மாகாணங்களை இணைப்பதன் மூலமும் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயன்றது. ஆனால் இலங்கை மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பு இல்லாததால் இறுதியில் அம்முயற்சி தோல்வியடைந்ததாக நூலாசிரியர் விவரிக்கின்றார். 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் சிங்கள அடையாளத்திற்கு அச்சுறுத்தலாகக் கருதப்பட்டது. ஒப்பந்தத்திற்கு எதிரான வன்முறைகளும் தூண்டிவிடப்பட்டன. அந்த வன்முறை மோதல்கள், தமிழர் எதிர்ப்பு உணர்வுகளை அதிகரித்தன.

### தமிழர் பிரதேசங்கள் சிங்களமயமாதல்

சர்வதேச ஆதரவோடு பௌத்த - சிங்களத் தேசியவாதம் வலிமை பெற்றது. சிறிலங்காவின் அரச உயரடுக்குகள் தமிழரின் ஆயுதப்போராட்டத்திற்கு எதிரான, அரசியல் உரிமைகளுக்கு எதிரான தமது போரை, சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் ஒரு பகுதியாகச் சித்திரிப்பதில் வெற்றிகண்டனர். சர்வதேச மாற்றங்கள், இறைமைசார் பெறுமானங்களின் குறைபாடுகளுக்கு மத்தியிலும் பௌத்த - சிங்கள அரசினைத் ஸ்திரப்படுத்த இந்த அணுகுமுறை வழிகோலியது.

1977 இல் ஐ.தே.கட்சியின தேர்தற் பரப்புரை அரசியற் சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கியது. ஐ.தே.க தலைவர் ஜே.ஆர் ஜெயவர்த்தன தன்னை பௌத்த மன்னன் அசோகாவின் நவீன உருவமாக நிறுவமுயன்றார். பழைய மகாவம்ச அரசாட்சியோடு தனது அரசாங்கத்தினை ஒப்பிட்டார். மகாவம்வம் என்பது சிங்களவர்களை இலங்கைத்தீவின் மூத்த குடிகளாக முன்னிறுத்தும் ஒரு பௌத்த மதம்சார் வரலாற்றுப் புனைவு.

சிறிலங்கா அரசு மகாவலி நீர்ப்பாசனத் திட்டம் போன்ற மேம்பாட்டுத் திட்டங்களில் கவனம் செலுத்தியது. இது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நோக்கமாக பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் சிங்கள மேலாதிக்கத்தை வலுப்படுத்தும் கருவியாகவே செயற்பட்டது. இந்தத்திட்டத்தின் மூலம் பெருமளவிற் புதிய சிங்களக் குடியேற்றங்களைத் தமிழர் பகுதிகளில் முன்னெடுத்தமையும் இன மோதலை மேலும் மோசமாக்கியது. தமிழ்ப் போராளி இயக்கங்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் அரச இயந்திரம் அதிகமதிகம் இராணுவமயமாக்கலுக்கு உட்படவும் வழிசமைத்தது. பயங்கரவாதம் என்ற கருத்தியல் தமிழர்களின் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கான கருவியாக அரச இயந்திரத்தினாற் கையாளப்பட்டது.

### எதிர்வினையாகத் தமிழ்த் தேசியவாதம்

பௌத்த - சிங்கள மேலாதிக்கத்திற்கு எதிர்வினையாகத் தமிழ்த் தேசியவாதம் உருவாகி வளர்ந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழரின் தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தில் முதன்மை வகிபாகம் கொண்டிருந்தது. புலம்பெயர் நாடுகளிலும் போராட்டத்திற்கான ஆதரவுத்தளத்தினை அவர்கள் உருவாக்கி விரிவுபடுத்தினர். விடுதலைப்புலிகளின் மூலோபாய உத்தியானது, இராணுவரீதியிலான போராட்டத்தையும் அரசியல் இயக்கத்தையும் உள்ளடக்கியது. அத்தோடு தமது பலத்தினைப் பேணுவதற்கும் வளர்த்தெடுப்பதற்கும் பராமரிப்பதற்குமான வலுவான வலைப்பின்னலையும் அவர்கள் உருவாக்கியிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்த தேசியவாத ஊற்று எவ்வாறு உருவாகியது என்பதை இந்த அத்தியாயம் ஆராய்கிறது. புலிகளின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி வரை விரிவாகச் சித்திரிக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பு தேசியரீதியிற் தமிழர்களை ஒருங்கிணைப்பதற்கு ஏதுவாக இரண்டு வலுவான திறவுகோல்கள் அமைந்தன. ஒன்று தனியரசை அமைப்பதே இனப்பிரச்சினைக்கான ஒரே தீர்வு என்ற மக்கள் ஆணையை வழங்கிய வட்டுக்கோட்டைத் தீர்மானம் (1976). இத்தீர்மானம் தமிழர் தேச உருவாக்கத்திற்கும் அதற்கான போராட்டத்திற்குமான நியாயத்தை வழங்குகின்றது. இது அதனை அடைவதற்குரிய மெய்யான தலைமைத்துவம் தாமே என்ற புலிகளின் நிலைப்பாட்டிற்கு வலுச்சேர்த்தது. தமிழர்களின் தன்னாட்சி உரிமை பற்றிய தெளிவான செய்தியை மக்கள் மத்தியிற் புலிகள் இயக்கம் பரப்பியது. அதனுடன் பௌத்த - சிங்கள அரசு தமிழர்கள் மீது செலுத்திய ஆதிக்க, ஆக்கிரமிப்பு அடக்குமுறைகளைச் சுட்டிக்காட்டித் தமது தனிநாட்டுப் போராட்டத்தை நியாயப்படுத்தினர். இதுவே

புலிகள் இயக்கம் தம்மை ஒரு தேசிய விடுதலை இயக்கமாக நிலைநிறுத்த அடிப்படையாக அமைந்தது. அத்தோடு தமது போராளிகளின் தியாகங்களை தங்களின் நியாயத்திற்கான அடிப்படையாகவும் கொண்டிருந்தனர். இரண்டாவது அம்சம் புலிகளின் அமைப்புசார் கட்டமைப்புகளும் செயல்வலுவுமாகும். அவர்கள் எவ்வாறு ஓர் அமைப்புசார் கட்டமைப்பை உருவாக்கிப் பேணினர் என்பதுவும் விவரிக்கப்படுகிறது. ஏனைய தமிழ் ஆயுத இயக்கங்கள் மற்றும ஆயுத இயக்கங்களுக்கிடையிலான சகோதரப் படுகொலைகள், அழித்தொழிப்புகள் பற்றிய தகவல்களும் இந்த அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளன.



இறுதி யுத்தத்தின்போது பொதுமக்கள்
Image Source : www.nytimes.com

### சர்வதேசத் தலையீடும் இராணுவமயமாக்கலும்

*1977 - 1994* வரையான காலப்பகுதிகளில் நிகழ்ந்த வலுவான சர்வதேசத் தலையீடுகள் இனப் பிரச்சினையைத் தீவிரமாக இராணுவமயமாக்கின. இந்தத் தலையீடுகள் இலங்கை அரசாங்கம் மற்றும் தென்னிலங்கைச் சமூகத்திற் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தைத் தீவிரமாக வலுவடையச்செய்தது. அதேநேரத்தில் சிங்களப் பெருந்தேசியவாதத்திற்கு எதிராகத் தமிழ் தேசியவாத இயக்கமும் எழுச்சி பெற்றது. மேற்கத்திய அணுகுமுறைகளும் செயல்களும் சிறிலங்கா அரசையும், தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான அதன் (அரசின்) போரையும் வலுப்படுத்தின. இந்தியாவின் தலையீடு ஆரம்பத்தில் தமிழ் ஆயுத இயக்கங்களை ஆதரித்தது. பின்னர் அவற்றுக்கு எதிராக மாறியது. ஆனால் இந்தியப் படைகள் தமிழ் இயக்கங்களை எதிர்த்துப் போரில் இறங்கியமை - வடக்கு, கிழக்கில் இந்திய இராணுவப் பிரசன்னம் - இந்திய, இலங்கை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த தமிழர் தன்னாட்சிக்கான இணக்கம் ஆகியவை பௌத்த - சிங்கள தேசியவாதத்தின் அடிப்படையை உறுதிப்படுத்துவதில் பங்களித்துள்ளன.

இலங்கையின் பௌத்த - சிங்கள அரசுக்கான மேற்கத்திய ஆதரவானது உலகளாவிய தாராளவாத ஒழுங்குருவாக்கத்தின் ஓர் அங்கமாக சுதந்திர சந்தை ஜனநாயகத்தை வலுப்படுத்தும் இலக்கினைக் கொண்டிருந்தது. இலங்கையில் மேற்கின் செல்வாக்கினைத் தடுப்பதும், இலங்கை மேற்கு நோக்கி நகர்வதைத் தடுப்பதும், தனது பிராந்திய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதும் இந்தியத் தலையீட்டின் மையமாக இருந்தது. இரண்டு இலக்குகளும் முற்றிலும் தோல்வியைத் தழுவியதாக நிறுவுகின்றார் நூலாசிரியர்.

சர்வதேசத் தரப்புகளுடன் உறவாடுவது பௌத்த - சிங்கள மற்றும் தமிழ்த் தேசியவாத திட்டங்களுக்கு தவிர்க்கமுடியாத தேவையாக மாறியது. இது தனித்தனியான உள்ளக (இனப் பெரும்பான்மைவாதம் - *Ethnic majoritarianism*) மற்றும் வெளியக (தாராளவாத அமைதி - *Liberal peace*) உரையாடல்களை உள்ளடக்கியது. தமிழர் போராட்டத்தினை ஒடுக்குவதை உலகளாவிய கொம்யூனிச எதிர்ப்பு (*Anticommunism*), பயங்கரவாத எதிர்ப்பு (*Antiterrorism*) மற்றும் தாராளவாத சந்தை ஒழுங்கு (*Liberal ordermaking*) உருவாக்க நிகழ்ச்சித்திட்ட வரைபுகளுடன் இணைப்பதன்மூலம் இனமுரண்பாட்டின் அடிப்படைகள் மறைக்கப்பட்டன. பின்னர், இன முரண்பாட்டின் இராணுவமயமாக்கலும் சர்வதேசமயமாக்கலும் ஆயுதப் போராட்டத்தின் போக்கினை மாற்றின. தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் தேசியத்தின் முதன்மைச் சக்தியாக உருவெடுத்து, நிலப்பிரதேச ஆள்புல உரிமை, சுயநிர்ணய உரிமைகளை மையக் கோரிக்கைகளாகக் கொண்ட இயக்கத்தை வழிநடத்தினர்.

## உள்நாட்டுப்போரின் முடிவு

இலங்கையின் உள்நாட்டுப்போரின் முடிவு என்ற இந்த அத்தியாயம், ஆயுத முரண்பாட்டினை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு, இனப்பன்மைத்துவ, திறந்த சந்தைப் பொருளாதார ஜனநாயகத்தினை உருவாக்குவதற்கான சர்வதேச முயற்சிகளை விரிவாக முன்வைக்கின்றது. அந்தவகையில் 1994 – 2009 காலப்பகுதியின் நிகழ்வுகள்மீது கவனம் செலுத்தப்படுகின்றது. காலவரிசையில் நிகழ்வுகளும், அகபுறச் சூழல்களும், விளைவுகளும் பேசப்படுகின்றன. சமாந்தரமாக இக்காலகட்டத்தின் சிங்கள - தமிழ் தேசியவாத அரசியலின் இயக்கவியலும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

## மேற்கின் சமாதான முயற்சிகள்

1994 இல் சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்ததையடுத்துச் சர்வதேசத் தலையீடு தொடங்கியது. சமாதானம் என்பது போரை முடிவுக்குக் கொண்டுவருவது மட்டுமல்ல; தமிழர்களின் கோரிக்கைகள், வரையறுக்கப்பட்ட பிராந்திய தன்னாட்சிமூலம் நிறைவேற்றப்படுதல் வேண்டுமென்பதில் சர்வதேசரீதியில் ஏற்பும் இணக்கமும் இருந்தது. 1994 முதல் போரின் முடிவுவரை, சிங்களத் தலைவர்கள் ஒருவகையான அதிகாரப்பகிர்வு (Devolution) குறித்துப் பிரஸ்தாபித்து வந்துள்ளனர். தமிழ்த்தரப்புத் தேசியவாத நடவடிக்கைகள் தாயகம், தேசியத்திற்கான ஆதரவை வெளிப்படுத்துவதிலும், பௌத்த - சிங்களத் தேசியவாதத்தால் அந்த இலக்கிற்கு ஏற்படும் தடைகளை முன்னிலைப்படுத்துவதிலும் கவனம் செலுத்தின.

இலங்கைக்கான மேற்கின் ஆதரவு, 1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அன்றைய புதிய ஜனாதிபதி குமாரதுங்காவின் நிர்வாகத்திற்குச் சாதகமாக அமைந்தது. ஆனால் தற்போது நோக்கும்போது மேற்கின் அந்த அணுகுமுறை பனிப்போர் காலகட்டத்தின் சமாதானத் தலையீடுகளை ஒத்த ஓர் ஊடுருவும் தன்மையின் தொடக்கம் என உணர முடிகிறது. அதே நேரத்தில், இந்தியா, அதன் தோல்வியடைந்த இராணுவத் தலையீட்டினை அடுத்து, சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னணியில், அடிப்படையாக மாற்றியமைக்கப்பட்ட புவியியல் சூழலுக்குள் அகப்பட்டுக்கொண்டது. இலங்கைத் தீவின் இனமுரண்பாட்டில் நேரடியாக ஈடுபடுவதை விலக்கிக் கொண்டது.

பேண்தகு/ நிலைகொள் (Sustainable) சமாதானத்தை உருவாக்கவும் அரசின் நிலைத்தன்மையைப் உறுதிப்படுத்தவும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவது சர்வதேசக் கோரிக்கையாக இருந்தது. தமது தாராளவாதக் கொள்கையை உள்வாங்கிய ஆட்சியை இலங்கையில் உருவாக்குவதும் மேம்படுத்துவதும் சர்வதேச நிலைப்பாடாக இருந்தது. விடுதலைப் புலிகளை ஓரங்கட்டும் முயற்சிகளைச் சர்வதேசம் செய்தது. விடுதலைப் புலிகள் ஆயுத வன்முறையிலும் எதிர்மறை இனவாதத்திலும் ஈடுபட்டதாக சர்வதேசம் கருதியது; சித்திரித்தது. இந்தக் கருத்துச் சிங்கள உயரடுக்குகளாலும் சில தமிழ்த் தலைவர்களாலும் முன்வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் களநீக்கம் செய்யப்பட்டு இலங்கையர்கள் அனைவரும் ஒன்றிணைந்த எதிர்காலத்திற்காகச் செயற்படமுடியும் என்றும் அத்தரப்பினர் பரப்புரை செய்தனர்.

## புலிகளை அழிக்கும் இலக்கு

புலிகளையும் அவர்களது அரசியல் ஆதரவுக்கூட்டுகளையும் ஓரம்கட்டித் தோற்கடிக்க வைப்பதற்கான சர்வதேச முயற்சிகள், இலங்கையை ஓர் இனத்துவ இணைவாக்கம் கொண்ட சந்தை ஜனநாயகமாக மாற்றும் ஒரு பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாக முன்னெடுக்கப்பட்டது. ‘சமாதானத்திற்கான போர்’ என்ற பதாகையின்கீழ் புலிகளுக்கு எதிரான போர் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டது. முதலாவது சந்திரிகா குமாரதுங்கா ஆட்சிக்காலத்தில் (1994 - 2002). இரண்டாவது மகிந்த ராஜபக்ச காலத்தில் (2006 - 2009). இரண்டு போர்க் கட்டங்களுக்குமிடையிலான காலம் (2002 - 2006) நோர்வே தலைமையிலான சமாதான முன்னெடுப்புகளைக் கொண்டிருந்தது. இக்காலம் போரிலிருந்து தற்காலிக ஓய்வை வழங்கியது. இந்தக் காலகட்டமே புலிகளை இராணுவ வழிமுறைகளில் மட்டுமல்லாமல் அரசியல் ரீதியில் ஒடுக்கவும் பலவீனப்படுத்தவும் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச முயற்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

பின்பனிப்போர் காலகட்டத்தில் இலங்கையின்

தேசிய இன முரண்பாட்டுச் சூழலில் சிங்கள - பௌத்த மற்றும் தமிழ்த் தேசியவாத இயக்கங்கள் வளர்ச்சியடைந்தன. இந்நிலை தாராளவாத சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான சர்வதேசத்தின் தீவிர முனைப்புகளைக் கொண்டிருந்தது. சர்வதேச தரப்புகள் இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினையை விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டமாகக் குறைமதிப்புச் செய்ததோடு, தேசியவாதத்தை ஒரு விளிம்புநிலைப் பிரச்சினையாகக் கருதினர். ஒரு பன்மைத்துவ தாராளவாத அரசை ஆதரிக்கும் 'பல்லினப் பெரும்பான்மை' மீதான சர்வதேச சக்திகளின் இந்த நம்பிக்கை, விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசை வலுப்படுத்தியது.

சிங்கள மற்றும் தமிழ் அரசியற் தலைவர்கள் தீவிர தேசியவாதத் தரப்புகளை அச்சுறுத்தலாகக் காட்டுவதன்மூலம் தாராளவாத சீர்திருத்தங்கள்சார்ந்து சர்வதேச நம்பிக்கையைப் பேணத் துணைநின்றனர். ஆயினும் தேசியவாத ஆதரவு மீதான நம்பிக்கை, தாராளவாத ஜனநாயகம் மற்றும் தேசியவாதக் கொள்கைகளுக்கு இடையிலான முரண்பாடுகளை உருவாக்கியது.

*1994* முதல் *2009* வரை, பௌத்த - சிங்கள தேசியவாதப் பரப்புரைகள் தமிழர்களின் கோரிக்கைகள் குறித்த சர்வதேச அழுத்தத்திற்கு எதிராக பெரும்பான்மை பௌத்த - சிங்கள அரசைப் பாதுகாத்தது; மகிந்த ராஜபக்சவின் எழுச்சிக்கு வலுவூட்டியதோடு, அவரது அதிகாரக்குவிப்பு, இராணுவ மற்றும் பெருந்தேசியவாத அரசாங்கத்தை ஆதரித்தது. இது தமிழர் தன்னாட்சிக்கு எதிரான சிங்கள இராணுவமயமாக்கலை ஆதரிக்கும் சிங்கள வாக்குவங்கியை ஒருங்கிணைத்தது. தமிழ்த் தேசியவாத முன்னெடுப்புகள் தேசியத்திற்கும் தன்னாட்சிக்கும் சர்வதேச ஆதரவை நாடின. இது தமிழர் மத்தியில் ஒரு வலுவான தேசிய அடையாளத்தை வளர்த்தது.

### ஊடகக் கட்டுப்பாடும் தணிக்கையும்

உள்நாட்டுப் போரின் போது ஊடகங்கள் அரசினால் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டன. போர்ப்பிரதேசங்களில் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்களின் பிரசன்னம் தடுக்கப்பட்டது. போர் நிலைமைகள் தொடர்பான செய்திகளிலும் கதையாடல்களிலும் தணிக்கைகள் விதிக்கப்பட்டன. றொய்ட்டர்ஸ், அசோசியேற்றட் பிரஸ், ஏஜென்சி பிரான்ஸ் பிரஸ் (Reuters, Associated Press, Agency France Presse) உட்பட்ட சர்வதேச செய்தி ஊடகங்கள் தலைநகர் கொழும்பை மையமாகக்கொண்டு இயங்க மட்டுமே அனுமதிக்கப்பட்டன. புலிகளை மிகக் கொடூரமானவர்களாகவும், அரசாங்கத்தை சீர்திருத்தங்களுக்கு ஆதரவான சக்தியாகவும் வெளியுலகிற்குக் காட்டுவதற்கு ஊடகத் தணிக்கையும், கட்டுப்பாடும் பெரிதும் பயன்பட்டன. போர் மற்றும் இனமுரண்பாடு தொடர்பான ஒருதலைப்பட்சமான தகவல்கள் வழங்கப்பட்டன.

இந்தப் புறநிலையிற் புலிகளும் புலம்பெயர் தேசங்களில் அவர்களின் ஆதரவு சக்திகளும் மாற்று ஊடகங்களை உருவாக்கினர். தமிழ்நெற் அவற்றில் ஒன்று. தமிழ்நெற் இலங்கை அரசாங்கத்தின் கதையாடல்களைச் சவாலுக்கு உட்படுத்தியதோடு, இலங்கை அரசின் ஒடுக்குமுறைகளுக்கான தமிழர் நிலைப்பட்ட எதிர்ப்பு, விமர்சனங்களுக்குரிய தளமாக இயங்கியது.

### பொங்குதமிழ்

பொங்கு தமிழ் எழுச்சிப் பேரணிகள் சமாதான காலத்தில் தமிழ்த் தேசிய இயக்கத்தின் முக்கிய அங்கமாக மாறியமை குறித்து இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்படுகின்றது. இப்பேரணிகள் *2001* இல் யாழ்ப்பாணத்தில் தொடங்கியது. இது தமிழர் தாயகத்தின் வடக்கு - கிழக்கு மக்களினதும் புலம்பெயர் தமிழர்களினதும் பெருந்திரளான பங்குபற்றலுடன் நிகழ்ந்தது. சமாதானத் தீர்வு, சுயநிர்ணய உரிமை, தாயகம், புலிகளின் ஏகபிரதிநிதித்துவம், தேசியம் ஆகிய கோரிக்கைகளைப் பரந்த அளவில் முன்வைத்தது. அரசியற் பரிமாணத்தை வெளிப்படுத்தியதோடு, சமூகத்தின் பல தரப்புகள், செயற்பாட்டாளர்களையும் இணைத்தது. இடைக்கால தன்னாட்சி நிர்வாகம் மற்றும் துணை இராணுவக்குழுக்களின் ஆயுதக்களைவு குறித்த கோரிக்கைகளையும் பொங்குதமிழ் முன்வைத்தது. புலிகளின் தூண்டுதல் என சர்வதேச சமூகத்தினால் இப்பேரணிகள் நிராகரிக்கப்பட்டாலும், தமிழ்த் தேசிய அடையாளத்தை மீள்நிறுவியதோடு, தமிழ்ச் சமூகக்குழுக்களையும் பரந்த அளவில் இந்நிகழ்வு ஒருங்கிணைத்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (TNA) உருவாக்கம் மற்றும் வகிபாகம் ஆய்வு

செய்யப்படுகின்றது. குறிப்பாகப் புலிகளின் இராணுவ வெற்றிகள் மற்றும் நோர்வேயின் அனுசரணையுடன் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அரசியற் பரிமாணங்களை முன்வைத்து த.தே.கூட்டமைப்பின் வகிபாகம் பேசப்படுகின்றது.

2001 இல் பல தமிழ்த் தேசியக்கட்சிகளின் கூட்டணியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழர்களின் கோரிக்கைகளை பிரதிநிதித்துவம் செய்யவும், விடுதலைப் புலிகளைத் தமிழர்களின் ஏக பிரதிநிதியாக ஆதரிக்கவும் இது உருவாக்கப்பட்டது. இந்நிலைப்பாடுகளின் அடிப்படையில் கூட்டமைப்பு ஒரு முக்கியமான தேர்தல் வெற்றியைப் பெற்றது. இது வடக்கு - கிழக்குத் தமிழர்களின் ஆதரவை வெளிப்படுத்தியது.

## விடுதலைப்புலிகளின் நிழல் அரசு

இந்த அத்தியாயம் விடுதலைப்புலிகளின் நிழல் அரசு (*De facto state*) குறித்தும் அது தமிழ்த் தேசிய அடையாளத்திலும் 'டயஸ்போறா' தமிழர்களின் ஈடுபாடுசார்ந்து ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்தும் ஆராய்கின்றது. புலிகளின் நிழல் அரசும் அதன் நிறுவனங்களும் 2002 ஆம் ஆண்டுக்குப்பின் விரைந்த வளர்ச்சியை அடைந்தன. தமிழீழப் பிரதேசங்களுக்கான சிவில் நிர்வாகவும் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான அரசியற் திட்டமாகவும் நிழல் அரசு செயற்பட்டது. புலம்பெயர் தமிழ் நிறுவனங்களும், செயற்பாட்டாளர்களும், துறைசார் நிபுணர்களும் வன்னியில் சமூக மற்றும் மனிதாபிமானப் பணிகள் சார்ந்து பங்களித்தனர். சமூக மேம்பாட்டுத் திட்டங்களை ஆதரிக்க உள்ளூர் நிறுவனங்களை நிறுவுவதிலும் பங்களித்தனர். புலிகளின் நிழல் அரசும் அதன் நிறுவனங்களும் புலம்பெயர் தமிழர்கள் மனிதாபிமானத் திட்டங்களிற் பங்கேற்க அனுமதித்தன. இது புலம்பெயர் தமிழர்கள் மற்றும் தாயகத்தில் உள்ள தமிழர்கள் இடையேயான ஓர் ஊடாட்டத்தையும் உணர்வுசார் இணைப்பையும் உருவாக்கியது. புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்புகள் பொருளாதார விளைவுகளை மட்டுமின்றி, பின் போர்க்கால அரசியல் வகிபாகத்தைப் பேணுகின்ற ஆழமான தேசிய உணர்வையும் சார்ந்ததாகும்.

விடுதலைப் புலிகளின் அழிவு தாராளவாத சமாதானத்திற்கும் பௌத்த - சிங்கள தேசியவாத ஒழுங்குக்கும் இடையிலான இடைவெளியை துல்லியமான வெளிப்படுத்தியது. தீவிரமான அரச அடக்குமுறைக்கு மத்தியிலும் தமிழ்த் தேசிய அடையாளம் நிலைத்திருக்கிறது; தமிழ் அரசியலின் முக்கிய அங்கமாக தாயகத் தன்னாட்சிக் கொள்கை உள்ளது. 2009 போர் முடிவிற்குப் பின்னர், இலங்கை அரசானது சர்வதேசத்தின் தாராளவாத மறுசீரமைப்பு, சீர்திருத்தக் கோரிக்கைகளைச் சமாளிப்பதிலும், பௌத்த - சிங்கள மேலாண்மைக்கு ஆதரவான உள்நாட்டு அரசியலைப் பேணுவதிலும் சவால்களை எதிர்கொண்டுள்ளது என நிறுவுகின்றார் மாதுரிகா இராசரத்தினம்.

## சமகாலத் தமிழ் தேசியம்

2009 போர் முடிவுற்ற பின்னரான காலத்தில் இலங்கைத் தீவின் இனமுரண்பாட்டுடன் தொடர்புடைய சர்வதேச அரசியல் மூன்று முக்கிய மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு, அரசியல் நீக்கம் செய்யப்பட்டதையடுத்து, 60 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழரசுக் கட்சியுடன் (*Federal Party*) தொடங்கிய தமிழ்த் தேசியத்தின் ஏக அமைப்புப் பிரதிநிதித்துவம் முடிவுக்கு வந்தது. தமிழ்த் தேசியம் மேற்கு நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்தவர்களால் இயக்கப்படும் ஓர் உலகளாவிய இயக்கமாக மாறியுள்ளது; தமிழ்த் தேசிய அடையாளம் ஒற்றைமைய முடிவெடுக்கும் அமைப்பு முறைமைக்கு மாறாக நாடுகடந்த தமிழ் அமைப்புகளின் வலைப்பின்னல்களைக் கொண்டதாக மாறியிருக்கின்றது என்பது முதலாவது மாற்றமாகும்.

இரண்டாவது, பிரித்தானியாவிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்த காலம் மற்றும் ஆயுதப் போராட்டத்தின் தொடக்கம் ஆகிய காலப்பகுதிகளுக்குப் பின்னர் முதன்முறையாகத் தமிழ்த் தேசியவாதத் தரப்புகள் சர்வதேச தாராளவாத ஒழுங்குகளை உருவாக்குகின்ற சக்திகளுடனும் அவற்றின் செயல்முறைகளுடன் இணைகின்றனர். இந்த மறுசீரமைப்பு போரின் இறுதி மாதங்களில் தொடங்கியது. அதாவது பௌத்த - சிங்கள ஒழுங்குக்கும் தாராளவாத மறுசீரமைப்புகள்சார்ந்த சர்வதேச கோரிக்கைகளுக்கும் இடையிலான முரண்பாடு துல்லியமாகியபோது இது நிகழத்தொடங்கியது. தமிழர்களுக்கு எதிரான இலங்கையின் நடவடிக்கைகள்சார்ந்து இலங்கைக்கு எதிராகச் சர்வதேசத்தின் கருத்து மாறியது. தாராளவாத

மறுசீரமைப்பிற்கான நம்பகமான தரப்பாக இலங்கையைத் தொடர்ந்து பார்க்கச் சர்வதேசம் தயங்கியது. பல சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் இனத்துவப் பன்மைத்துவ அரசை உருவாக்குவது குறித்தும், போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுமாறும் இலங்கையை வலியுறுத்தியுள்ளன.



ஜேர்மனியில் பொங்குதமிழ் - 2008
Image Source : tamilnation.org

மூன்றாவது தமிழ்நாடு சார்ந்தது. ஈழத் தமிழ்க் கோரிக்கைகளுக்கு சர்வதேச ஆதரவு கோரும் செயற்பாடுகளிற் தமிழ்நாட்டுத் தரப்புகள் ஈடுபட்டுள்ளன. இது சிலவேளைகளில் இந்திய வெளியுறவுக் கொள்கையுடன் முரண்படும் தன்மையுடையது. வெளியுறவுக் கொள்கைசார்ந்து தமிழ்நாடு மற்றும் இந்திய மத்திய அரசுக்கிடையில் முரண்நிலை நிலவினும் அவற்றுக்கிடையிலான உறவு, நிலையாக உள்ளது. தமிழ்நாடு - இந்திய மத்திய அரசுக்கிடையிலான நிலைகொள் அல்லது முதிர்ச்சிமிகு உறவு, ஈழத்தமிழர்சார் ஆதரவுச் செயற்பாட்டில் ஈடுபடத் தமிழ்நாட்டினை அனுமதிக்கின்றது. ஆனால் இலங்கை அரசு மற்றும் தமிழ் மக்களுக்கிடையிலான உறவுகள் இன்னும் பதற்றமாகவே உள்ளன.

### பின்போர்க்கால இலங்கையும் தாராளவாத சமாதானமும்

2009 இறுதிப்போரில் பொதுமக்கள் செறிந்த பகுதிகளில் தொடர் குண்டுவீச்சு மற்றும் விமானத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. பொதுமக்களுக்கு பாதுகாப்பான இடங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட ‘தாக்குதலற்ற வலயங்கள்’ கூட தொடர்ந்து குண்டு வீச்சுகளின் இலக்காக மாறியது.

2009 இல் போர் முடிவுக்கு வந்ததைச் சர்வதேச சமூகம் வரவேற்றது. ஆனால் சர்வதேச மனித உரிமைக்குழுக்கள் படுகொலைகளை விசாரிக்குமாறு கோரிக்கைகளை விடுத்தன. இது இலங்கைக்கும் மேற்குலகிற்குமிடையலான ஓர் இடைவெளியை அடையாளப்படுத்தியது. போர் முடிவுற்ற பின்னரும் தமிழ்ப்பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் நீடிக்கின்றது; சிங்களமயமாக்கல் நிகழ்கிறது. தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான அரசியற் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் தவிர்த்துவந்துள்ளது.

பேச்சுவார்த்தைகளுக்குரிய சர்வதேச அழுத்தங்களையும் இலங்கை அரசு நிராகரித்து வந்துள்ளது. பாதுகாப்புத்துறைக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ இருப்பும் தொடர்ந்து பேணப்படுகின்றது. இது தமிழ் மக்கள் மத்தியில் தொடர் அச்சத்தையும் நம்பிக்கையீனங்களையும் மேலோங்கச் செய்துள்ளது. சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியிலும் சீனா போன்ற நாடுகளுடன் உறவினை மேம்படுத்திக்கொண்டுள்ள இலங்கை, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் தொடர்பான சர்வதேச அழுத்தங்களைப் புறக்கணித்துவந்துள்ளது.

### பின் போர்ச் சூழலின் சவால்களும் வாய்ப்புகளும்

பின்போர்ச் சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கொள்ளும் சவால்கள், நிலவும் வாய்ப்புகள் குறித்தும் இறுதி அத்தியாயம் பகுப்பாய்வு செய்கிறது. கூட்டமைப்பானது தமிழத் தேசியக் கொள்கைகளுக்கும் இலங்கை அரசின் நிபந்தனைகளுக்கும் இடையில் ஓர் ஓட்டத்தைக் கொண்டுள்ளது. விடுதலைப் புலிகள் இல்லாத பின்போர்ச் சூழலில் தமிழ் மக்களின் நலன்களைப்

பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே அரசியற் கட்சியாக, அமைப்பாக த.தே.கூ செயற்படும் என்ற பரவலான எதிர்பார்ப்பு நிலவியது. தேசியவாதக் கோரிக்கைகள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் நிலைப்பாடுகளிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டாலும், அதன் வாக்காளர்கள் தமிழ்த் தேசியம்சார்ந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளக முரண்பாடுகள் குறித்தும் இந்த அத்தியாயம் விவரிக்கின்றது. குறிப்பாகப் போரை நடத்திய அரசின் பொறுப்புக்கூறல் மற்றும் போரின் விளைவுகள் குறித்த நிலைப்பாடுகளில் கூட்டமைப்பில் அங்கம் வகித்த, வகிக்கும் கட்சிகளின் தலைவர்களிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. கூட்டமைப்பு இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முயன்றது. ஆனால் அரச தரப்பு தொடர்ச்சியாகப் புறக்கணித்து வந்துள்ளது.

புலம்பெயர் தமிழர்கள் மற்றும் சர்வதேச தரப்புகளுடன் இணைந்து பொறுப்புக்கூறல் கோரிக்கைகளை முன்னெடுக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைத்துள்ளது. அதேவேளை சர்வதேச முயற்சிகளுக்கான ஆதரவுசார்ந்து இரட்டைநிலையுடனும் அது செயற்பட்டுள்ளது.

## முடிவுரை

இலங்கையில் தமிழர் தாயகம் மற்றும் தென் இந்தியாவின் தமிழகப் பகுதிகளின் தேசிய அடையாளம் மற்றும் அரசியல் வேறுபாடுகளை இந்தநூல் ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்கிறது. இலங்கையின் பௌத்த - சிங்கள மேலாதிக்கப் படிநிலைகள் இனவாதக் கட்டமைப்புகளைப் பேணும் நிலையில், இந்தியத் தேசிய வரையறையானது தமிழ் அடையாளத்திற்கு வழங்கியுள்ள ஏற்புமிகு அணுகுமுறையால், தமிழ்நாடு பெற்ற நன்மைகளும் விவரிக்கப்படுகின்றன.

ஈழத்தமிழ் அரசியலானது இலங்கையில் ஒற்றையாட்சியின்கீழ் சம உரிமை கோரியபோது, தென் இந்தியாவின் தமிழ் அரசியல், இந்து மதம் மற்றும் இந்தியத் தேசியவாதத்திற்கு எதிரான திராவிட இயக்கத்தால் வடிவமைக்கப்பட்டு வழிநடத்தப்பட்டது. காலநீட்சிமிக்க அரசியற் செயற்பாடுகள் மூலமே தேசிய அடையாளம் வளர்த்தெடுக்கப்படுகின்றது. இந்தியாவின் காங்கிரஸ் இயக்கமானது மொழி, இன, கலாசார மற்றும் பொருளாதார நலன்களை ஒருங்கிணைக்கும் வகையிற் செயற்பட்டது. இலங்கையின் பலவீனமான இனப்பன்மைத்துவ இயக்கங்கள் அதனைச் சாத்தியப்படுத்துவதிற் தோல்வியுற்றிருந்தன.

இலங்கையில் நிலைபெற்றுவிட்ட பௌத்த - சிங்களப் பெருந்தேசியவாதக் கதையாடல்களைச் சவாலுக்குட்படுத்த, அங்கு வலுவானதொரு பரந்த இனத்துவத் தேசிய இயக்கம் அவசியப்படுகின்றது. உள்ளிணைப்புத் தேசிய அடையாளத்தை (Inclusive national identity) உருவாக்குவதற்குரிய வலுவான அரசியற் செயற்பாடுகளும் தேவைப்படுகின்றன. ஒரு வலுவான பரந்த தேசிய அடையாள அரசியலின் (Panethnic political identity) வெற்றிடத்தில், பௌத்த - சிங்கள ஆதிக்கம்கொண்ட அரசியற் கட்டமைப்பில் தீர்வுகளைக் கண்டடையும் முயற்சிகள் பலவீனமானதாகவும் குறுகியதாகவுமே இருக்கும்.

இலங்கை அரசின் உயரடுக்குத் தலைவர்கள் தொடர்பாகவும், மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்தக்கூடிய அவர்களின் ஆற்றல், விருப்பம் போன்றவற்றை உரிய முறையில் மதிப்பீடு செய்யாமல் சர்வதேச சமூகம் அவர்களுக்கு ஆதரவினை வழங்கியமை தொடர்பாகவும் இந்நூலில் விமர்சிக்கப்படுகின்றது. வெறும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைவிட, பேண்தகு இனத்துவ ஒருங்கிணைப்பிற்கான அரசியல் இயக்க அணிதிரட்டல் மற்றும் கொள்கைசார் ஒருங்கிணைப்புப் பற்றியும் வலியுறுத்தப்படுகின்றது.

பௌத்த - சிங்கள மற்றும் தமிழ்த் தேசிய அரசியல் நிலைமைகளில் மாற்றங்களை உருவாக்குவதற்கு ஏதுவாக இராணுவமயமாக்கல் - பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நீக்குதல், சிங்களப் பெரும்பான்மையின் கட்டுப்பாட்டிற்கு வெளியே பரந்துபட்ட மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மிக முக்கியமானவை என அறிவுறுத்தப்படுகின்றது. இம்மாற்றங்கள் மட்டும் இன முரண்பாட்டிற்கான முற்றுமுழுதான தீர்வைத் தந்துவிடாது. ஆனால் தற்போதைய தேக்கநிலையிலிருந்து முன்னேறத் தேவையான புதிய அரசியல் இயக்கவியலை உருவாக்கும் என்றும் வலியுறுத்துகின்றது இந்நூல்.



● நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார். இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

# மறுவாசிப்பில் நாவலர்

இன்றைய இருப்பில் இயங்கும் சமூக சக்திகள் தத்தமக்கான நலன்களின் நோக்கில் கடந்த காலத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றன. மேலாதிக்கத் தமிழ்த் தேசியம், தலித்தியம், விடுதலைத் தேசியம் என்பவற்றின் கருத்தியல் தளங்களை அடிப்படையாக உடைய சமூக சக்திகள் இன்றைய இயக்கங்களாகச் செயற்படுகின்றன. எமக்கான நவீன வரலாற்றைக் கட்டமைத்த ஆளுமையாகிய ஆறுமுக நாவலர் குறித்து இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய கண்ணோட்டத்தில் மறுவாசிப்பை மேற்கொள்கின்றன; இதன்வழியாக, கடந்தகாலச் சமூக சக்திகள் வழிவகுத்துவிட்டிருந்த இயங்குமுறை அமைந்த அடித்தளங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன. இதேபோன்ற பின்னணிக்குரிய ஏனைய சமூகங்களில் இயங்கிய ஆளுமைகளுடன் எமது இயங்கு தளத்துக்குரிய ஆளுமைகளை ஒப்பிடுவதன் வாயிலாக செய்யப்பட்டவற்றையும், செய்திருக்கத்தக்கன எவை என்பதையும் மதிப்பீடு செய்வது அவசியமானது. இவற்றின் பெறுபேறுகள் எமக்கான எதிர்கால மார்க்கத்தை வடிவமைப்பதற்கு மிகமிக முக்கியமானவை ஆகும். "சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர் எனும் இத்தொடரானது நாவலரின் பங்களிப்புக் குறித்த மதிப்பீட்டின் வழியாக சமகால இயங்குமுறையைக் கணிப்பிட்டு, சுயவிமரிசனங்களுடன் புதிய பாதையையும், அதற்குரிய சரியான மார்க்கத்தையும் கண்டடையும் நோக்கில் எழுதப்படுகிறது.

இன்று நாம் கடந்தவாறிருக்கும் சமூகநியதிகளில் கடந்தகாலத்தின் தாக்கங்கள் உள்ளன. இப்போது எதிர்கொள்ளும் நெருக்கடிகளைக் களைந்தெறிந்து திடமான முன்னேற்றத்தை எட்டுவதற்குத் தடையாகச் சில தவறுகள் முன்னரே ஏற்படுத்தப்பட்டவையாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது. மறுதலையாக, கடந்தகாலத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆரோக்கியமான செயல்முறைகளைத் தொடர்ந்து வளர்த்தெடுக்க முனையாமல் திசைமாறிச்சென்ற இடைக்காலத்தின் வரலாற்று ஓட்டம் காரணமாகவும் இன்றைய பின்னடைவுகள் ஏற்பட்டிருக்கலாம்.

இன்றைய வாழ்வியலில் கணிசமான தாக்கத்தை விளைவித்த காலப்பரப்பான நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் எமது இருப்பு எவ்வாறு இருந்தது? அன்று நிலவிய இடர்பாட்டை மாற்றியமைத்து மேல்நிலை எய்தவென எடுக்கப்பட்ட எத்தனங்கள் எவை? அவற்றில் ஊடாடிய ஆரோக்கியமான அம்சங்கள், தவறான பண்புகள் என்பவை இன்றைய வாழ்நிலையில் எத்தகைய தாக்குறவுடன் உள்ளன? இத்தகைய கணிப்பினை அன்று செயற்பட்ட முதல்நிலை ஆளுமையாகிய ஆறுமுக நாவலரை முன்னிறுத்தி மேற்கொள்ள முயல்வோம்!

ஒன்றரை நூற்றாண்டுகள் கடந்த பின்னரும் குடியேற்றவாதத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டம் முன்னெடுத்தாக வேண்டியிருப்பது குறித்த ஈடுபாடு தொடர்ந்தபடிதானுள்ளது. அன்று பிரித்தானியக் காலனியாக இருந்தநிலை மாறியபோதிலும் சிங்களத் தேசத்தின் காலனியாகத் தமிழர் தாயகம் அடிமைப்பட்டதான கணிப்புப் பெரும்பான்மையான தமிழ்த் தேசியர்களிடம் உள்ளது. இந்தப் புரிதல் பிரித்தானிய ஏகாதிபத்தியப் பிணைப்பை நீடித்தபடி இருந்த டொமினிக்கன் அந்தஸ்துடன் கூடிய குடியரசாக இலங்கை இருந்தவரை தமிழ்த் தேசியர்களிடம் ஏற்பட்டிருக்கவில்லை. அவ்வகைப்பட்ட அரைச் சுதந்திர நாடாக இருப்பதில் சுகம்கண்ட ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து இயங்கி வந்த தமிழ்த் தேசியத்துக்கு உரியதான கொங்கிரஸ் - தமிழரசு என்ற பிளவுபட்ட இரு கட்சிகள் 1972 ஆம் ஆண்டில் பூரண சுதந்திரக்குடியரசு பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் ஒன்றிணைந்து ‘தமிழர் விடுதலைக் கூட்டணி’ என்று செயற்படலாயினர். முன்னதாகத் தமிழ்த் தேசியம் என்ற சொல்லைக்கூட அவர்கள் உச்சரித்ததில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பின் வடிவமாக அமைந்திருந்த தேசியம் முழு இலங்கையைக் குறிப்பதாக இருந்தது. எழுபதாம் ஆண்டுகளில் ‘சிங்கள ஏகாதிபத்தியத்தை’ எதிர்ப்பதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த தமிழ்த் தேசியம் காலப்போக்கில் ‘தேசியம்’ என்பதை உருச்சிதைத்தது. தேசியம் என்றாலே தமிழினத்துக்கானதாகப் புரிந்துகொள்ளப்படும் இன்றையநிலை ஏற்பட்டபோது, உலக ஏகாதிபத்தியத்தின் பகுதியாக அது இணைவு பெற்றுவிட்டமைக்கு அன்று விடுதலைத் தேசிய உணர்வற்று முன்னெடுக்கப்படுவதாய் அமைந்த முதல்கோணல் நடவடிக்கைகள் காரணங்களாகின.

ஏகாதிபத்தியத்திடம் இருந்து மீட்சிபெற முனைந்த சிங்களத் தேசியம், தம்மால் புறக்கணிக்கப்படுவதாக அமைந்த இடைவெளியைத் தமிழினத் தேசியத்துக்கு ஏற்படுத்தும் செயலொழுங்குகளைத் தவிர்த்து இயங்கி இருப்பின் மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் விருத்திபெற்று ஏகாதிபத்திய அணிக்குள் சங்கமமாவதனைத் தடுத்திருக்க இயலும். மேலாதிக்கத் தமிழ்த் தேசியத்தை ஒடுக்கியவாறு ஒன்றிணைந்த இலங்கைத் தேசத்தைக் கட்டமைத்தல் எனும் பேரில் முன்னெடுக்கப்பட்டு முப்பது வருடங்கள் நீடித்த யுத்தம் சிங்களத் தேசியத்தையும் ஏகாதிபத்தியக் கைப்பொம்மையாக இயங்க வழிப்படுத்தி உள்ளது. உலகவங்கி ஊடாக ஐக்கிய அமெரிக்காவும் அயலவர் என்ற உரிமையுடன் இந்தியாவும் தமக்குரிய மேலாதிக்க நலன்சார்ந்த விடயங்களையே சிங்களத் தேசியம் செயற்படுத்த இயலுமானதாக வழிப்படுத்தி உள்ள இன்றைய சூழல் என்பது ஏனைய இனத்தேசியங்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்ததன் விளைவு எனும் புரிதல் இன்னமும் சிங்களத் தேசியத்திடம் தேவையான அளவுக்கு ஏற்பட்டுவிடவில்லை.

ஏகாதிபத்தியம் தனது நேரடிக் காலனித்துவப் பிணைப்பை 1948 ஆம் ஆண்டில் கைவிடும்போது இங்குள்ள இனத்தேசியங்கள் ஒன்னுடனொன்று தமக்குள் மோதுவதற்கான ஏற்பாடுகளை விதைத்துச் சென்றிருந்தது. அதன் வலைக்குள் இடர்பட்டு இரு இனத்தேசியங்களும் சுயநிர்ணயப் பிரயோகத்தைப் பூரணவிடுதலை நோக்கி முன்னெடுக்க இயலாத தப்பாட்டங்களில் ஈடுபட்டன. ஏகாதிபத்தியத் தகர்ப்புடன் இனத்தேசியத்தின் சமூக - பொருளாதார - அரசியல் விடுதலையை வென்றெடுக்கும் இலட்சியம் முனைப்புடையதாக இருந்திருப்பின் ஏகாதிபத்திய அரவணைப்புக்குள் சென்றடைந்து

மேலும் தவறான பாதையில் இயங்குவதனைத் தமிழினத் தேசியம் தவிர்த்திருக்க இயலும். எம்மை ஆயுதநுகர்வில் சாகடித்து ஓய்ந்த பின்னர் வேறுகளங்களில் ஆயுத முழக்கங்களுக்கான வாய்ப்பு அந்த மரண வியாபாரிகளுக்குத் தடையின்றிக் கிடைத்து வருகிறது. இன்னமும் யுத்தங்களால் உலகைத் தமது கட்டுக்குள் வைத்திருக்க முனையும் ஏகாதிபத்தியப் பிணைப்பைத் துண்டிக்கவியலாத துர்ப்பாக்கிய நிலையிலேயே மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் உள்ளது. எமது நாட்டினுள் வாழும் ஏனைய இனத்தேசியங்கள் இடையே உள்ள உழைக்கும் மக்கள் முன்னெடுக்கும் விடுதலைப் போராட்டங்களுடன் கைகோர்க்காமல் பிரிவினை மனப்பாங்குடன் தனிவழி காணும் அரசியல்போக்கு ஏற்படுத்தி உள்ள பாதக விளைவுகள் பல; அவற்றில் இருந்து கற்றுக்கொள்ள மறுக்கும்போக்கு நீடிக்கிறது. அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் மிக மோசமான இனவாதம் தமிழர் தரப்பிடமே வெளிப்பட்டு இருந்தது.

தேசியவாதப் பிளவு மனப்பாங்கானது ஏகாதிபத்தியத்தின் கபட நாடகங்களுக்கு இரையாக்கிவிடும் என்பதற்கு இந்திய - பாகிஸ்தான் யுத்தக் கொண்டாட்டங்கள் அண்மைக்கால வெளிப்பாடாகும். ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலனுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு மாறாக ருஷ்யாவுடனும் சீனாவுடனும் நட்புப்பாராட்டும் இந்தியாவின் தலையில் அவசியமற்ற ஆயுதங்களை ஜனாதிபதி ட்ரம்ப் திணித்ததன் பேரில் பாகிஸ்தானுடன் வலிந்த யுத்தம் ஒன்றை இந்தியா மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஆயுத வியாபாரம் அமோகமாக நடந்தேறிய பின்னர் இருதரப்பாருக்கும் இடையே சமாதானம் ஏற்படுத்திய புனிதப்பாத்திரத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பாகவும் இந்தச் சந்தர்ப்பத்தை அமெரிக்கா பயன்படுத்திக் கொண்டுள்ளது. இவ்வகையில் கிடைத்த ‘வெற்றி’ தமக்கான மீளெழுச்சியைச் சாத்தியப்படுத்தப் போதுமானதல்ல என்பது ஏகாதிபத்தியத் திணை அறியாத ஒன்றல்ல. எவ்வளவு முயன்றும் இந்திய - சீன முரண்பாட்டை யுத்தமாக்கிவிட இயலவில்லை. முன்னதாக ஒடுக்கப்பட்ட தேசங்களாக இருந்து விடுதலையின் பின்னர் நிதானமாக வளர்ச்சித்திசையில் முன்னேறி வருகின்ற இருபெரும் தேசங்கள் எத்தகைய முரண்பாடுகளை முகங்கொண்டபோதிலும் சுய விருத்தியின் பொருட்டு வர்த்தக உறவை வளர்த்தெடுத்து வருவதாக மட்டுமன்றி, தம்மிரு நாடுகளின் எல்லையில் நிலைகொண்டிருந்த இராணுவங்களை விலக்கிக்கொண்டும் உள்ளன (அவசியமற்ற அந்தச்செலவை அபிவிருத்தி நோக்கித் திருப்பும் வாய்ப்பைப் பயன்படுத்தி உள்ளன). விடுதலைத் திணை அரசியலுக்கு உரியதாக மக்கள் சீனம் முன்னெடுக்கின்ற அரசியல் பிரயோகமானது மேலாதிக்கத் திணை அரசியலைத் தொடருகின்ற இந்தியாவை இவ்விடயத்தில் இணங்கிப்போக வழிப்படுத்தி இருக்கும் இந்த அம்சம் கவனிப்புக்கு உரியது; ஐக்கிய அமெரிக்காவுக்குப் பணிந்ததுபோலக் காட்டிக்கொண்டு அதனை மேவியவாறு உலகின் இரண்டாவது பொருளாதார வல்லரசாக விருத்திபெறும் எத்தனத்தில் இந்தியா!

## சைவத் தமிழின் ஐந்தாம் குரவர்

வெளியுலக வணிக நாட்டத்துடன் பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகள் ‘நாடுகாண் வீரர்களை’ உத்வேகமூட்டி அனுப்பியவாறு இருந்த வேளையில், தமது இருண்ட யுகப் பின்தங்கியநிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியனவாய் இருந்தன. அன்றைய சாகசப் பயணங்களை இலகுபடுத்தவும் வர்த்தக நலனுக்கான தொடர்பாடல் திறனை விருத்தி செய்ய முன்னெடுத்த அறிவியல் தேடல்களும் செயல்முனைப்புகளும் தொழில் புரட்சியைச் சாத்தியப்படுத்திய பின்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறில் ‘மேலைத் தேசம்’ என்ற திமிருடன் ஆளும் தரப்பாகத் தம்மை அடையாளம் காட்டினர். நான்கு நூற்றாண்டுகளின் முன்னர் அதியுச்சநிலைக்குரிய நாடுகள் எனப் பார்த்து வியந்த இந்தியா, சீனா, அரபுலகு என்பவற்றை ஒட்டச் சுரண்டி ஒட்டாண்டி நிலைக்கு ஆளாக்கியது தாமே எனும் உண்மையை மறந்து - மறைத்து, ‘ஆசிய உற்பத்திமுறைக்குரிய இந்தத் தேசங்கள் என்றென்றும் மூட நம்பிக்கைகளில் மூழ்கித் திளைத்த பிற்போக்கான வாழ்முறைகளைக் கொண்டிருந்தன, கொண்டிருப்பன’ என்றனர்.

தம்மைப்போல எம்மையும் நாகரிகப்படுத்தும் பொருட்டு கிறிஸ்தவ வேதாகமத்தை (பைபிளை) எம்மத்தியில் பரப்புரை செய்ய வேண்டியுள்ளது என, இறை தொண்டாற்றும் பாதிரிகளைக் கடல் கடந்து பயணப்பட ஊக்கப்படுத்தினர் மேலைத்தேச வணிக (வைசிய) ஆட்சியாளர்கள். கல்வி விழிப்புணர்வூட்டலுடன் இணைந்ததாக அவர்களது மதப்பரப்புரை அமைந்தது. இவ்வாறு அமெரிக்க மிசனரியால் நடாத்தப்பட்ட யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் தனது மாணவனாகக் கற்ற ஆறுமுகத்துடன் இணைந்து வேதாகமத்தைத் தமிழ்ப்படுத்தும் முயற்சியை பேர்சிவல் பாதிரியார் முன்னெடுத்திருந்தார்.

இலக்கிய நயத்தையும் இறை நம்பிக்கையையும் ஒருங்கே கொண்டுருந்த பைபிளை மொழிபெயர்ப்பது மகிழ்வூட்டும் விவகாரமாக ஆறுமுகத்துக்கு அமைந்திருக்கும். இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டு முக்கால் நூற்றாண்டுக்குப் பின்னர் மகாகவி பாரதிக்கும் அவ்வாறான ஒரு மொழிபெயர்ப்பை முன்னெடுக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்துள்ளது என்பதனை வி. சக்கரைச்செட்டியார் வாயிலாக அறிகிறோம் (பேர்சிவல் பாதிரியார் தமது மாணவருடன் இணைந்து மேற்கொண்ட தமிழாக்கம் மிகச் சிறப்பானதெனப் பாராட்டப்பட்டபோதிலும் பயன்படுத்தப்படவில்லை என்பர்). பிரெஞ்சு இந்தியாவாக அமைந்த பாண்டிச்சேரியில் பத்து வருடங்கள் 'தலைமறைவு' வாழ்வை முன்னெடுத்த பாரதி, அதனைத் தொடர விரும்பாமல் பிரிட்டிஷ் இந்தியாவுக்குத் திரும்பிய பின்னர் மொழிபெயர்க்கும் அந்த விருப்பம் குறித்துத் தனது நண்பரிடம் கூறியுள்ளார்.

"புதுவையினின்று பாரதியார் திரும்பியதும் நான் அவரைச் சந்தித்தபோது தாம் விவிலிய வேதத்தை (Bible) நூதனமுறையில் மொழிபெயர்க்க உத்தேசித்திருப்பதாகக் கூறினார். அப்பணிக்குச் ·ரீமான் திரு வி. கலியாணசுந்தர முதலியார் முதலான வேறு தமிழறிஞர்களுடன் நமது பாரதியாரும் பெரிதும் யோக்யதை படைத்தவரென்று கூறுவேன். அவர் மட்டும் இன்னும் சிலகாலம் உயிரோடு இருந்திருப்பின், அத்தகைய ஓர் பணியை தேசிய உணர்ச்சியுள்ள இந்திய கிருஸ்தவர்கள் அவர்பால் ஒப்புவித்திருப்பாரகள் என்பதில் ஐயமில்லை" (கடற்கரய் மத்தவிலாச அங்கதம் {பதிப்பாசிரியர்}, 2017. பாரதி விஜயம் - மகாகவியுடன் கூடி வாழ்ந்தவர்களின் குறிப்புகள், வி. சக்கரைச்செட்டியார், 'ராஜீய வாழ்வு'. சென்னை - 83. ப. 620). கல்வி - உயர் தொழில் வாய்ப்பு என்பவற்றை முன்னிறுத்தியவாறு வலிமைமிக்க கருவியாக மதமாற்ற நடவடிக்கையை ஏகாதிபத்திய அரசு கையாள்வதற்கு எதிராகக் காத்திரமான கருத்துகளைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தவர் பாரதி; ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு அடிநிலை மக்களையும் பரந்தளவில் அணிதிரட்டலுக்கு ஆட்படுத்தி இருந்த கட்டத்தை முதல் தடவையாக எட்டியிருந்த இரண்டாவது தேசிய எழுச்சிக்கான (1919 - 1922) சூழலில், அதனை ஆதரித்து வளர்ந்தபடியே எதிரியால் பயன்படுத்த இயலாத பண்புடன், மக்களுக்கான மத நம்பிக்கைத் தளம் சார்ந்து பைபிள் மொழிபெயர்ப்பைச் செய்யும் ஆவல் கொண்டவராக பாரதி இருந்துள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறில்தான், ஐரோப்பியர்களான தாமே முழு உலகையும் ஆளப்பிறந்த மக்கள் கூட்டத்தினர் எனக் கருதத் தொடங்கியதுடன் அதற்கெனக் கடவுளால் தேர்ந்தெடுத்துப் படைக்கப்பட்டு இருக்கிறோம் என்பதான எண்ணப்பாங்கினை உருவாக்கி வளர்க்க ஆரம்பித்திருந்தனர். அதே வெள்ளையர்கள் ஐக்கிய அமெரிக்காவில் குடியேறி நிரந்தரமாக வாழ்ந்துவந்த நிலையில் தமது ஐரோப்பியத் தாயகத்தில் இருந்து வீரசுதந்திரம் வேண்டிப் போராடி 1776 ஆம் ஆண்டில் விடுதலை பெற்றிருந்தனர்; அந்த ஐக்கிய அமெரிக்காவின் கிறிஸ்தவ மிசனரியினரிடம் காலனித்துவ எதிர்ப்புணர்வும் ஜனநாயக நாட்டமும் அப்போது மேலோங்கி இருந்த சூழலில், அவர்களால் ஆகர்ஷிக்கப்பட்டுக் கல்வி கற்ற ஆறுமுகமும் பைபிள் மொழிபெயர்ப்பை மேற்கொண்டது முற்றிலும் வேறுபட்ட கால - தேச நிலைமைகளுக்கு உரியது. இந்தக் கவர்ச்சியில் கிறிஸ்தவமயப்பட்டு, தான் தடம்புரண்டால் என்னவாகும், தாம் அதனை மீறித்தப்பினாலும் தமது உதவியுடன் தமிழாக்கப்பட்ட பைபிள் வேறுபலரைக் கிறிஸ்தவராக்கப் பயன்படுமாயின் அதனை ஏற்பது சரியானது தானா? என்ற கேள்விகள் ஆறுமுகத்தை வருத்தி இருக்க வேண்டும். இவ்வகையில் ஈடுபாட்டுடன் தமிழ்ப்படுத்திய ஆறுமுகம் கிறிஸ்தவராக மதம் மாறிவிடவில்லை என்பதனைப்போல உயர் சாதியினர் எனப்படுவோரில் பலர் மதமாற்றத்துக்கு இணங்க மறுக்கின்றனர் எனும் நிதர்சனத்தையும் அமெரிக்க மிசனரியினர் காணத் தவறவில்லை. ஆதிக்க சாதிப் பிரிவினருடன் அதீதமாக மெனக்கிடுவதோடு அடங்கிவிடாமல் ஒடுக்கப்பட்ட சாதிப் பிரிவினரைக் கல்வியூட்டி மத மாற்றத்துக்கு ஆட்படுத்துவதையும் இணைப்பது அவசியம் எனக் கருதினர்.

அவ்வாறு ஒடுக்கப்பட்ட மாணவர் மத்திய கல்லூரியில் சேர்க்கப்பட்ட போது, சைவத் தமிழ்ப் பண்பாட்டை பாதுகாக்கும் அவசியம் ஆறுமுகத்தை உந்தித்தள்ளியதன் பேரில், அங்கிருந்து வெளியேறிச் செயற்பட்டதன் வாயிலாக நாவலர் எனப் பரிணமித்தார் என்பதை அறிவோம். முந்திய நிலவுடைமைச் சமூக முறைமையில் உலகின் முதல்நிலை வல்லரசாகத் திகழ்ந்த தமிழ்ச் சைவத்தின் பரம்பொருள், உலகெலாம் ஓதுதற்கரியவன் என்ற பீடத்தினின்றும் வீழ்த்தப்படுவதனை, ஒருப்பட இயலாதென்று உணர்ந்த ஆறுமுக நாவலர்

சைவத்தின் மீளெழுச்சிக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார். புதிய மதம் நவீனப் பயன்பாட்டு வல்லமை பொருந்திய மொழிப்பிரயோகத்துடன் மேலெழுகிறது எனில் பழம் பெருமை வாய்ந்த தமிழின் மகிமையையும் மீட்டுயிர்ப்புச் செய்யும் பணி இணைக்கப்பட வேண்டும் என உணர்ந்தார். கவனம்பெறாமல் அழிந்தொழியும் ஓலைச்சுவடிகளை நவீன உலகின் நீடித்த உயிர்ப்புக்கு மடைமாற்றி அச்சு நூல்களாக்கினார்.

தமிழ் வணிக ஊடாட்டம் வாயிலாக அன்று ஆற்றலோடு இயக்கம் கொண்டிருந்த நாடுகள்தோறும் பரப்புரை செய்யப்பட்ட சைவத்தின் மேன்மை சமஸ்கிருதத்துடன் இணைக்கப்பட்டதாக இருந்தது. முன்னதாக வளவழிபாட்டு மேலாண்மைக்கு முந்திய அறிவியல் மனப்பாங்கு மேலோங்கியிருந்த தமிழ் தன்னூடாக அனைத்து மதங்களையும் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருந்தது; பக்திப் பேரியக்கம் வாயிலாகச் சைவம், வைணவம் ஆதிய வைதிக மதங்கள் மேலோங்க உதவும் கருவியாகவும் இருந்தது. பௌத்தத்துக்குப் பாளி, சமணத்துக்குப் பிராகிருதம், வைதிக மதங்களுக்குச் சமஸ்கிருதம் போல ஒருதனி மதத்துக்கான மொழியாகத் தமிழ் ஒடுங்கிப்போக இயலாத காரணத்தால் உலகமொழி ஊடாட்டத்தைப் பெறத் தவறியது; அன்றைய உலக மொழிகளாக பாளி, சமஸ்கிருதம் என்பனவே தொடர்பாடல் பயன்பாட்டில் இருந்தன.

முன்னதாகப் பிராமணருக்கும் சமஸ்கிருதத்துக்கும் தம்மை அறியாமல் முன்னுரிமை கொடுத்ததன் காரணமாகப் பட்ட அடி யாழ்ப்பாணத் தமிழர் அடிமனதில் உறைந்துள்ள ஒன்று; யாழ்ப்பாணத்தை மத்தியகாலக் கட்டமைப்பில் வடிவமைத்தபோதே தமிழ்த் தத்துவ நெறியான சைவசித்தாந்த மேலாதிக்கத்துடன் வாழ்வைத் தொடங்கியவர்கள் இரண்டொரு நூற்றாண்டுகளாக மாற்றுமொழியினரது மதத்துக்கு அடிமைப்பட நேர்ந்துள்ளது. நவீன உலகமொழியாக விருத்திபெற்றுவந்த ஆங்கிலம் எமது பண்பாட்டு அடித்தளத்தை முற்றாகத் தகர்க்க வாய்ப்புள்ளது எனக் கண்டபோது சைவத் தமிழைப் பேணும் பணியைப் பழைய பாணியில் முன்னெடுப்பது போதுமானதல்ல என்பதனை நாவலர் புரிந்துகொண்டார். ஆதிக்கநிலையில் பண்பாட்டுச் சிதைவை எட்டியிருந்த பிரபுக்களின் சிற்றின்பக் களியாட்ட நிறுவனங்களாகத் திகழ்ந்த கோயில்களின் சடங்காசாரக் கையாளுகைகளை விட்டொழிப்பது அவசியமெனக் கண்டார். வெற்றிபெற்ற புதிய வாழ்வியலுக்கான மிஷனரிமார்களது கிறிஸ்தவமதப் பரப்புரை நடைமுறைகளைப் பிரயோகிக்க முனைந்தார். முன்னதாகத் தத்துவத்தளத்தில் பௌத்தத்தை வெற்றிகொள்ள 'மறைவான பௌத்தர்' எனக்கூறத்தக்க வகையில் இயக்கம் கொண்டு அதன் அம்சங்களை உட்படுத்திய நுட்பத்தாலேயே வைதிகத் தத்துவத்தைச் சங்கரரால் மேன்மைபெற வைக்க இயலுமாக இருந்தது. நாவலரும் நவீன புரட்டஸ்தாந்தக் கிறிஸ்தவ நடைமுறைகள் சிலவற்றைக் கையேற்று இயங்குவதன் வாயிலாகவே கிறிஸ்தவத்தை வெற்றிகொள்ள வேண்டியவராக இருந்தார். இந்துக் கோயில்களின் பன்முகப்பணிகளில் கலை விருத்தியும் முதன்மைக்குரியதாகத் துலங்கியது; அதன் விருத்திக்கென அமர்த்தப்பட்ட தேவரடியார் பெண்களைக் காமக்களியாட்டத்தின் கருவிகளாக்கி இருந்ததனை எதிர்த்தார். நடனக்கலையைச் சின்னமேளம் எனக் கீழிறக்கம் செய்வதுடன், வாணவேடிக்கைக் களங்களாகக் கோயில்கள் மாற்றப்பட்டு இருப்பதனைக் கண்டித்து, மாற்றுச் செயற்பாடாக சமயப் பிரசங்கங்கள் - புராணப்படிப்பும் உரை விளக்கங்களும் என்பவற்றினூடாக மத விழிப்புணர்வு மேலோங்க வழிகாட்டினார்.

தமிழகத்தில் பெற்றிருந்த மேலாதிக்க உச்சத்தைப் பிராமணருடன் பங்குபோட்டதன் விளைவை ஏற்கனவே கண்டுணரந்து, அவ்வகைப் பாகப்பிரிவினை ஏற்படாத தனி ஆளுகைக்கு உரியதாக கட்டமைத்திருந்த யாழ்ப்பாணக்களத்தில் சைவசித்தாந்தம் மட்டுமே புழங்கும் தத்துவமாக நிலவுவதனை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை நாவலர் மேற்கொண்டார்; அதன் பிழிசாறாக அமைந்து மக்களுக்கானதாக மேற்கிளம்பிய கந்தபுராண படனம் நாவலரால் முன்னெடுக்கப்பட்டு, இன்றுவரை தொடர்வதனைக் காண்கிறோம். இலக்கியப் பரிச்சயமற்ற பாமர மக்கள் எனப்படுவோரும் கந்தபுராணப் பிரசங்கங்களைக் கேட்டு வளர்ந்ததன்பேரில் யாழ்ப்பாணம் 'கந்தபுராணக் கலாசாரக்' களம் என்ற அடையாளத்தைப் பெற இயலுமாயிற்று!

ஒரு கடவுள் மட்டுமே உண்மைப் பொருள் என்பதற்கு மாறாக சைவர்கள் பல கடவுளர்களை வழிபடுவதாகப் பாதிரிமார் பரப்புரை செய்தபோது, அவர்களது சுதா - பரிசுத்த ஆவி என்பவற்றைக் கூட்டுச்சேர்க்க அவசியமுடைய பிதாவைவிடவும் அதியுச்சப் பரம்பொருளான பதி மட்டுமே சர்வமல்லமை பொருந்திய ஒரே இறையெனக் கொண்டது சைவசித்தாந்தம் என எடுத்துரைத்தார்; அதனைப் பல்வேறு ரூபங்களில்

கொண்டாடும் மக்களுக்கான நடைமுறையை நியாயப்படுத்தும் கந்தபுராணத்தைப் பயன்படுத்தலானார். கந்தபுராணத்திலேயே காட்டப்பட்டவாறு, முருகன் தனியொரு கடவுளல்ல; சிவனின் ஒரு மூர்த்தமே அவரென எடுத்துரைக்க இயலுமாக அமைந்ததில், கிறிஸ்தவம் முன்னிறுத்துவதைக்காட்டிலும், சைவசித்தாந்தமே ஒரு கடவுள் கோட்பாட்டின் வெளிப்பாட்டை உடையதென்றார்!

வீரயுகக் காலத் தமிழில் காட்டப்பட்ட முருகனை மேவியதாக நிலப்பிரபுத்துவக் கொடுமுடிக்கு உரிய கடவுளாகச் சிவனைக் காட்ட நேர்ந்தது. ஆலமர் செல்வனும் பேசப்பட்டமையாலும், முருகனுக்கான பல அடையாளங்களை சிவனுக்கும் பொருத்த இயலுமாக இருந்தமையாலும், 14 ஆம் நூற்றாண்டின் பின்னர் ஆட்சியாளரது பரம்பொருளாக விஷ்ணு மேற்பட்டபோது, சைவ - வைணவச் சமரசத்தின் பொருட்டு, சிவனின் மைந்தனாகவும் விஷ்ணுவின் மருமகனாகவும் புராணிக்கப்பட்ட முருக வழிபாடு தமிழில் மேலோங்கும் அவசியம் ஏற்பட்டிருந்தது. அந்த முருகன் வேறெவருமல்ல, சிவனின் மூர்த்தமே என்று சொல்லும் வாய்ப்பையும் கந்தபுராணம் பயன்படுத்திக் கொண்டது. உலக மேலாதிக்கக் காலனித்துவக் கொடுமுடியில் சைவத்தை மீளெழுச்சிபெற வைக்கும் வகையில் இந்த அம்சங்களைச் சிறப்புறக் கையாண்ட நாவலர் பக்திப் பேரியக்கத்தின் நான்கு குரவர்களின் (நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்போரையடுத்த) வழித்தோன்றலாக, ஐந்தாம் குரவராகப் பின்னர் போற்றப்படலானார்!

### சாதியின் காவலர்

இலங்கைச் சட்டசபையில் ஒரு கிறிஸ்தவத் தமிழர் பிரதிநிதித்துவம் பெறுவதனை மறுத்து சைவத் தமிழரான சேர். பொன். இராமநாதன் தெரிவுசெய்யப்படுவதில் நாவலருக்கு இருந்த வகிபாகம் வரலாற்றில் ஆழப்பதிந்துள்ளது. எமக்கான 'இலக்கிய வழி' துலங்கும் வகையில் அதனைப் பதிவு செய்தவரான பண்டிதமணி கணபதிப்பிள்ளை, ஆறுமுக நாவலரூடாகக் கந்தபுராணக் கலாசாரம் எம்மிடையே அழுத்தம் பெற்றிருந்த வரலாற்றையும் எடுத்துக்காட்டியவர். அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படுவதனை மறுத்து சேர். பொன். இராமநாதன் கருத்துரைத்ததில், 'படிப்பறிவு அற்ற ஒருவர் அரசியல் தெளிவற்றவர்' எனும் எடுகோள் மட்டுமன்றி, மலிந்த கூலிகளாக வாழவைக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் உரிமை வழங்கக்கூடாது என்ற உணர்வுதான் உள்நோக்கமாக அமைந்திருந்தது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க இயலாது. ஆதிக்க சாதியினரது நலன்கள் பேணப்பட வேண்டுமென்ற அரசியல் செயற்பாட்டுக்கு உரியவரான இராமநாதனை அரசியலாளராக முன்னிறுத்திய நாவலரது சாதி அபிமானமும் இவ்விடத்தில் இணைத்துப் பேசப்படுவதனை அறிவோம்.

பக்திப் பேரியக்கம் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுக்கு உரியதான சமூக மாற்றத்தை ஏற்படுத்தி இருந்தது. சமூகம் ஒன்றின் அதியுச்ச மேலாதிக்கச் சக்தியாக நிலப்பிரபுத்துவம் விளங்குவதன் மத நிறுவன வெளிப்பாடுதான் ஒரு பரம்பொருள் ஏனைய அனைத்தையும் தனது கட்டுக்குள் ஆளுகை செலுத்துதல்; அத்தகைய மூல முழுமுதல் கடவுளான சிவனை ஏகப்பிரதிநிதியாக நாவலர் வலியுறுத்துவதில் கிறிஸ்தவப் பரப்புரையாளர்களை முறியடிக்கும் எத்தனம் மட்டுமே செயற்பட்டிருக்கும் எனக் கூறிவிட இயலாது. எமது சமூகத்தின் ஆதிக்கத் தரப்பினரது ஆளுகைக்குள் ஏனைய பகுதியினர் கட்டுப்பட்டு ஒழுக வேண்டும் என்ற அக்கறையும் இணைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அன்றைய ஆதிக்கத்தரப்பினரான காலனித்துவவாதிகளது பிடியைப் பண்பாட்டுத்தளத்தில் பலவீனப்படுத்துவதற்கான கருத்தியல் போராட்டத்துக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினர் முற்பட்டுவரும் வாய்ப்பு இருந்தநிலையில் நாவலர் செயற்பட்ட பாங்கு அமைந்திருப்பின் இன்றைய கணிப்புக்குரிய ஒருவராக ஆகியிருக்க மாட்டார். சமூக இயங்குதளத்தில் உலக மேலாதிக்க உச்சத்தைப் பலவீனப்படுத்தும் அம்சமாக ஆதிக்க சாதியினரின் மதமாற்றம் தடுக்கப்பட வேண்டிய வரலாற்றுக் கட்டம் அன்று நிலவியது; அதன்பேரில் சைவ ஆசாரங்களை விட்டுப் பிற மத அனுஷ்டானங்களை மேற்கொள்வதைக் கண்டிக்க வேண்டி இருந்தபோது ஒவ்வொரு சாதியினரும் அவரவரது சாதியாசாரங்களைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என வலியுறுத்துகிறவராக நாவலர் அமைந்தார்!

இவ்வாறு கூறும்போது சாதி வெறியர்களின் ஒடுக்குமுறைக்கருத்துகள் அனைத்துடனும் பூரண உடன்பாடு கொண்டிருந்தார் எனப் பொருள்கொள்ள இயலாது. ஆதிக்கச் சாதி நலன்சார்ந்த ஒருவர் தனது மத மேலாதிக்கம் நிலைநிறுத்தப்படும் நடைமுறைகளில் ஏனைய சாதியினர் குறுக்கீடு செய்வதற்கு எதிராக இருப்பார். செயலொழுங்கு தொடர்பான

விவகாரம் ஒன்றில் 'பள்ளர்' ஒருவர் இதழொன்றில் அபிப்பிராயம் தெரிவித்ததனை நிராகரித்து, 'கருத்துரைக்கும் தகுதிக்கு உரிய சாதியினரல்ல' எனும் மறுப்புரை எழுந்தபோது அதற்கு எதிராக மறு இதழில் எதிர் கருத்தை நாவலர் பதிவு செய்திருந்தார். அந்தச் சாதிப்பிரிவினரும் சைவ சமயத்தையே சேர்ந்தவர் என்ற வகையில் கருத்துரைக்க உரித்துடையவர் என்று கூறிய நாவலர், அதன் ஏற்புடைமைக்கான நூலாதாரங்களை வெளிப்படுத்தும் ஆற்றலுடன் திகழ்ந்தார். சமூக அமைப்பு மாற்றங்களின் தவிர்க்க இயலாமைகளை ஏற்றாக வேண்டியிருப்பதனை, சுரண்டும் அபிலாசையுடன் உள்ளவரது கண்ணோட்டத்தில் நாவலர் அணுகுபவராக இருக்கவில்லை; மாற்றத்துக்கான அங்கீகாரத்தை சைவ அனுஷ்டானங்கள் ஊடாகத் தேடினார் என்பதே கவனிப்புக்கு உரியது. மாறிவரும் நியதிகள் அனைத்தையும் நிராகரித்துப் பழமைவாதத்தை அப்படியே பேண விழைந்திருப்பின் 'புரட்டஸ்தாந்தச் சைவப்' பரப்புரை முயற்சியையும் அவர் கையேற்றிருக்க இயலாமல், வரலாற்றில் தடம்பதிக்கும் ஆற்றலைப் பெற இயலாதவராக ஆகியிருப்பார்!

### புதிய பண்பாட்டு எழுச்சிக்கான வித்தாகப் பண்பாட்டுத் தேசியம்

அண்ணமார் வழிபாட்டுக்கு உரிய பள்ளர் சாதியைச் சேர்ந்தவர் சிவவழிபாட்டு அனுஷ்டானம் குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கக்கூடாது என்பது தனிவழி மேலாதிக்கத் தேசியவாத நிலைப்பாடு; மதவாத அடையாள அரசியல் கூறுடையவராக அன்றி ஒன்றுபடுத்த வேண்டிய அனைத்தையும் அரவணைத்து இயங்கும் திணை அரசியல் நோக்குடைய நாவலருக்கு அண்ணமார் போன்ற தெய்வங்களைப் பரிவாரமாகக் கொண்டொழுகும் சிவன் பற்றிய புரிதல் முதன்மையானது. உயர்சாதிகள் எனப்படுவோரது சிறுதெய்வ வழிபாடுகளை நிராகரித்த நாவலர் ஒடுக்கப்பட்ட சாதிப்பிரிவினரது கடவுள் இருப்பை மறுத்து இயக்கம் எதனையும் முன்னெடுக்க இயலவில்லை. கோயில்களினுள் நுழையத்தக்கோரது சிறுதெய்வங்கள் அனைத்தையும் சிவனின் மூர்த்தங்களில் ஒன்றாகவோ, இராஜராஜேஸ்வரியாகவோ மாற்றும் அவசியம் அவருக்கு இருந்தது. கோயிலினுள் அனுமதிக்காமல், மலிந்த கூலிகளாகவும் நடாத்த வேண்டும், சைவராகவும் அங்கீகரிக்க வேண்டும் என்றால் அத்தகைய ஒடுக்கப்பட்ட மக்களின் தனித்த வழிபாட்டினை எப்படி விலக்க இயலும்? அவ்வாறு ஒடுக்கப்பட்டு இருந்த மக்களுக்கான கடவுளர்களை 'சிறுதெய்வங்களாக' நாவலர் வரையறுக்க முற்படவில்லை; புராணங்கள் வாயிலாக மதுரைவீரன், காத்தவராயன், கருப்பசாமி, அண்ணமார் போன்ற தெய்வங்கள் பரம்பொருளுடன் அல்லது அவருக்கான சமூகத்தளத்தின் கதை மாந்தர்களுடன் முடிச்சுப்போடப்பட்டு இணைக்கப்பட்டு உள்ளமையை எடுத்துக்காட்டாக முன்வைப்பதில் நாவலருக்குத் தயக்கமிருந்திருக்காது. காலனித்துவ ஒடுக்குமுறையின் பண்பாட்டு வெளிப்பாட்டுக்கு எதிராகப் போராட வேண்டியிருந்த வரலாற்றுக்கட்டத்தில் அத்தகைய சமாதானங்களுடன் பாரம்பரிய சைவ மீளுருவாக்கத்துக்கு அவசியப்பட்ட நடைமுறைகளை முன்னெடுத்த நாவலர் குறித்த தெளிவான கணிப்புப் பின்னர் தேசிய விடுதலைக்கான அரசியல் இயக்கச் செயற்பாட்டாளர்களாக இயங்கியோரிடம் இருந்தது.

இன்றைய அடையாள அரசியலுக்கான தலித்தியவாத நோக்குடன், ஆதிக்கசாதிக் கடவுளாகச் சிவனைக் கணித்து 'ஒடுக்கப்பட்டோர் சைவர்களல்ல' எனக் காணும் பிரிவினை மனப்பாங்கு ஐம்பதாம், அறுபதாம் ஆண்டுகளின் சாதியத் தகர்ப்புப் போராட்ட சக்திகளிடம் இருந்திருக்கவில்லை. அதன் காரணமாகவே சைவப் பெருங்கோயில்களினுள் பிரவேசிப்பதற்கான 'கோயில் நுழைவுப் போராட்டங்கள்' பிரதான வடிவத்தை இங்கே பெற்றிருந்தது.

தனக்குரிய வரலாற்றுக் கடமையில் திணை அரசியல் பண்பை நாவலர் வெளிப்படுத்தி இருந்ததைப்போன்றே விடுதலைத் தேசிய அரசியல் முன்னெடுப்பை மேற்கொண்ட இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சிகள் சாதியத் தகர்ப்பைச் சாதிவாத - வர்க்கவாதக் கண்ணோட்டங்களில் அணுகாமல், திணை அரசியல் செயலொழுங்குப் பிரகாரம் முன்னெடுக்கலாயினர்.

காலனித்துவக் கையாளுகைகளினால் அடையாள அரசியல் வடிவத்தை இந்தியாவின் சாதித் தளப் போராட்டங்கள் முப்பதாம் ஆண்டுகளில் இருந்து தோற்றம்பெற்று வளர்ந்ததைப்போல இங்கு இருந்திருக்கவில்லை என்பது பற்றிப் பேசிவந்துள்ளோம். பின்னர் எமக்கான மார்க்சியப் பிரயோக வாய்ப்பினை வழங்கிய நாவலரின் இத்தகைய வரலாற்றுப் பங்களிப்புக்கான சமூகத் தளக்கட்டமைவு பற்றிய தேடலை அடுத்த அமர்வில் அலசுவோம்!



● இளஞ்செழியன் சண்முகம்

இளஞ்செழியன், பழனி அருகிலுள்ள வயலூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் தனது இளங்கலைத் தமிழ்ப் படிப்பினை உடுமலைப்பேட்டை, அரசு கலைக் கல்லூரியில் பேராசிரியர் வ. கிருஷ்ணன் அவர்களிடம் பயின்று, பல்கலைக்கழக அளவில் எட்டாம் இடத்தினையும், அதனைத் தொடர்ந்து திருவாரூரில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் முதுகலை செவ்வியல் தமிழ் பாடத்தைப் பயின்று பல்கலைக்கழக அளவில் முதல் இடத்தையும் பெற்றுள்ளார். இவர் தேசிய தகுதித் தேர்வில் (NET) மூன்று முறை தேர்வாகியுள்ளார். 20222023 ஆம் கல்வியாண்டில் டில்லிப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரக்கூடிய இதழியல் துறையில் (Delhi School of Journalism) கௌரவ விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். இதுவரை ஐந்திற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். பத்திற்கும் மேற்பட்ட தமிழாய்வு சார்ந்த கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் போன்றவற்றில் பங்கேற்றுள்ளார். தற்போது கேரளத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் தமிழ்த்துறைத் தலைவரும் இணைப்பேராசிரியருமான முனைவர் ஹெப்சி ரோஸ் மேரி அவர்களிடம் ‘தொல்காப்பிய சேனாவரையம் மூலபாடத் திறனாய்வும் செம்பதிப்பும்’ எனும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு வருகிறார். தொடர்ந்து தமிழியல் ஆய்வுத்துறையில் இயங்கி வருகின்றார்.

# ஈழத்துப் பதிப்பாசிரியர்களும் பதிப்பு நெறிமுறைகளும்: அறிமுகம்

பண்டைய தமிழர்கள் பனைஓலைகளை எழுத்து ஊடகமாகப் பயன்படுத்தினர். காலப்போக்கில் ஓலைச்சுவடிகள் பழுதடைந்த காரணத்தால், அவை படியெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. அச்சு ஊடகங்கள் தோன்றியபிறகு, பழந்தமிழ் நூல்கள் அச்சாக வெளியிடப்பட்டன. இதற்காகப் பல பதிப்பாசிரியர்கள் ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து, பாடவேறுபாடுகளைக் கவனித்து, மூலபாடங்களை நிலைநாட்டி, பதிப்புப் பணிகளை மேற்கொண்டனர். குறிப்பாக ஈழத்துப் பதிப்பாசிரியர்கள், பதிப்புத்துறையில் முக்கிய பங்கு வகித்துள்ளனர். அவர்கள் பதிப்பித்த நூல்கள் இலக்கியம், இலக்கணம், இசை, சோதிடம், தருக்கம், வைத்தியம், வரலாறு போன்ற பலதுறைகளை உள்ளடக்கியவை. சுவடிகளின் குறியீடுகளை அடையாளம் காணும்திறன், பாட வேறுபாடுகளை அலசும் திறமை, மூலபாடத்தை உறுதிப்படுத்தும் திறமை போன்றவை இவர்களிடம் இருந்தன. இத்தகைய ஈழத்துப் பதிப்பாசிரியர்கள் பதிப்பித்த நூல்களில் அவர்கள் கையாண்ட பதிப்பு உத்திகள், நெறிமுறைகள் குறித்து ஆராய்வதாக ‘ஈழத்துப் பதிப்பாசிரியர்களும் பதிப்பு நெறிமுறைகளும்’ எனும் இத்தொடர் அமையவுள்ளது.

## முன்னுரை

தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்ககாலம் முதல் இன்றுவரை பதிப்பாசிரியர் பலர் பல்வேறு வகையான பதிப்புப் பணிகளைச் செய்து வருகின்றனர். பழந்தமிழ் நூல்களான தொல்காப்பியம், சங்க இலக்கியம் என்பனவான பல நூல்கள் வெளிவந்தமைக்கு பதிப்பாசிரியர்களின் பதிப்புப்பணியே காரணம் என்பதை எள்ளளவும் மறுக்க இயலாது. இவ்வாறான பதிப்பாசிரியர்களின் உழைப்பால்தான் பல்வேறு வகையான நூல்களும் இலக்கியங்களும் இன்றைக்கும் நம் கைகளில் தவழுகின்றன. தொடக்ககாலப் பதிப்பாசிரியர்கள் இப்பணியினை மேற்கொள்ளவில்லையெனில் சங்க இலக்கியம், ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம், கம்பராமாயணம், சிற்றிலக்கியங்கள் எனப் பலவற்றின் சிறப்பும் அதனைத் தோற்றுவித்த எழுத்தாளர்களின் பெருமையும் அவற்றிற்கு உரையெழுதிய உரையாசிரியர்களின் புலமையும் நமக்குத் தெரியாமலே மறைந்திருக்க வாய்ப்புகள் ஏராளம். பதிப்பாசிரியர்களின் ஆளுமைத்திறனின் மூலமே எத்தகைய சிறப்பு வாய்ந்த நூலாக இருப்பினும் அதன் சிறப்புகளை உணர்ந்துகொள்ள நம்மால் முடிகின்றது. ஒரு மொழியின் சிறப்பினையும் அதன் தனித்துவமான பண்புகளையும் புரிந்துகொள்ள இலக்கியங்கள் மிகவும் துணைபுரிகின்றன. அப்படிப்பட்ட இலக்கியங்களை உலகிற்கு வெளிக்காட்டியதில் நூலாசிரியர், உரையாசிரியரின் பங்கு எத்தகைய சிறப்பு வாய்ந்ததோ அதற்குத் துளியும் குறையாமல் சிறப்பு வாய்ந்தது பதிப்பாசிரியர்களின் பதிப்புப்பணி ஆகும்.

## ஈழமும் தமிழியலும்

தொடக்க காலகட்டத்தில் பல்வேறு வகைப்பட்ட படைப்பிலக்கியங்கள் ஈழத்தில் தோன்றின. அவற்றில் தனிச்செய்யுள்களை இயற்றுவதில் புகழ்பெற்றவர்களாக மட்டுநகர் பூபாலபிள்ளை, க. கணபதிப்பிள்ளை, நவநீதகிருஷ்ண பாரதியார் முதலானோர் விளங்கினர். காவியப் படைப்பாளர்களாக அரசகேசரி, வரத பண்டிதர், சதாசிவ ஐயர், முத்துக்குமாரர் முதலானோரும்; புராண ஆசிரியர்களாக கணேசபண்டிதர், சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார், சபாபதி நாவலர் முதலானோரும் குறிப்பிடத்தக்கவர்கள். சிற்றிலக்கியங்களாக மடல், உலா, குறவஞ்சி, பள்ளு, கலம்பகம் ஆகியவற்றினை இயற்றியோரும் ஈழத்தில் பலர். வடமொழி இலக்கியங்களை செய்யுள்வடிவில் தமிழில் மொழிபெயர்த்தோராக அ. குமாரசாமிப்புலவர் உள்ளிட்ட பலர் விளங்குகின்றனர். வசன நூலாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக ஆறுமுக நாவலர், வ. கணபதிப்பிள்ளை, நா. கதிரைவேற்பிள்ளை, ந.சி. கந்தையாபிள்ளை, அ. குமாரசாமிப்புலவர், சரவண முத்துப்பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை முதலான பலரையும் குறிப்பிடலாம். இசை நூலாசிரியர்களாக பரமானந்தப் புலவர், சுவாமி விபுலானந்தர், பிரான்சிஸ்குபிள்ளை, ஆவரங்கால் நமச்சிவாயப்புலவர், விநாயகமூர்த்திச் செட்டியார், பண்டிதர் சச்சிதானந்தர் முதலானோர் விளங்குகின்றனர்.

நாடகத்துறையில் கணபதி ஐயர், இணுவைச் சின்னத்தம்பி, முத்துக்குமாரகவிராயர், கந்தப்பிள்ளை, இன்னாசித்தம்பி, மயில்வாகனப் புலவர், பொன்னையாப் புலவர், சூசைப்பிள்ளை முதலான ஐம்பதிற்கும் மேற்பட்டோரின் எழுத்துகளைக் குறிப்பிடலாம். சோதிடத்தில் புலமைபெற்றவர்களாக போசராச பண்டிதர், சோமன், இராமலிங்கையர், சின்னத்தம்பி, வி. சபாபதி ஐயர் ஆகியோரையும்; திறன்மிக்க மருத்துவ எழுத்தாளர்களாக செகராசசேகரன், பரராசசேகரன், வரதபண்டிதர், நாகேசையர், சுப்பிரமணியம் முதலானோரையும் கூறலாம்.

தருக்கவியலாளர்களாக சிதம்பரம்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், சங்கர பண்டிதர், முருகேச பண்டிதர் போன்றோரைக் குறிப்பிடலாம். கணித நூல்களை இயற்றியவர்களாக காரிவையா, சுவாம்பிள்ளைப்புலவர், கறோல் விசுவநாதபிள்ளை, ஞானச்சகோதரர் பிலிப்பு S.S.J, இளையதம்பி, சின்னத்தம்பி போன்றோரையும்; மோற்றிமர் குலசேகரரை கப்பல் சாத்திர நூலாசிரியராகவும் குறிப்பிடலாம். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரை மொழி நூலாசிரியராகவும், புலவர் வரலாற்று நூல்களை இயற்றியவர்களாக சைமன் காசிச்செட்டி, அ. சதாசிவம்பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, அ. குமாரசாமிப்புலவர், சி. கணேசையர், இரத்தினேசுவர ஐயர், அ. சிவகுருநாதன் ஆகியோரையும் குறிப்பிடலாம்.

இலக்கண நூலாசிரியர்களாக கூழங்கைத் தம்பிரான், சவுந்தரநாயகம்பிள்ளை, அப்பாபிள்ளைப் போதகர், வ. குமாரசாமிப்புலவர், ச. ஜகநாத ஐயர், த. கைலாசபிள்ளை, நவநீத கிருஷ்ண பாரதியார், பொன் இராமநாதன் முதலானோரைக் குறிப்பிடலாம். சமயம்சார்ந்த கண்டன நூலாசிரியர்களாக ஆறுமுக நாவலர்,

விசுவநாதபிள்ளை, முத்துக்குமார கவிராயர், சி.வை. தாமோதரம்பிள்ளை, அ. குமாரசுவாமிப்புலவர், சங்கர பண்டிதர், சிலம்புநாதபிள்ளை, வல்வை வயித்தியலிங்கப்பிள்ளை, அருளப்ப முதலியார், காசிவாசி செந்தில்நாதையர் முதலானோரைக் குறிப்பிடலாம்.

பலர் ஈழத்தினைப் பற்றியும் அந்நாட்டின் வரலாற்றினை அறியும் பொருட்டும் பல்வேறு நூல்களை இயற்றியுள்ளனர். செகராசசேகரன், வையா ஐயர், மயில்வாகனப் புலவர், சிவானந்தன், க. சுந்தரம், கதிர்காமர், முத்துக்கிருஷ்ணர், இராசநாயக முதலியார், கணபதிப்பிள்ளை, வ. சின்னத்தம்பிப் புலவர், வி. கனகசபைப்பிள்ளை, சோமன், முத்துராசகவிராயர் முதலானோர் இயற்றிய நூல்களை ஈழத்தின் தொடக்ககால வரலாற்று நூல்களாகப் பார்க்க முடியும்.

இவற்றோடு அகராதிகள், நிகண்டுகள், கலைக்களஞ்சியங்கள் ஆகியவற்றை உருவாக்கிய ஆசிரியர்களாக பண்டிதர் சந்திரசேகரம், கு. கதிரைவேற்பிள்ளை, நா. கதிரைவேற்பிள்ளை, ச. சுப்பிரமணிய சாஸ்திரி, வி. கனகசபைப்பிள்ளை, சதாசிவம்பிள்ளை முதலானோரைச் சுட்டலாம்.

## ஈழத்துப் பழைய உரையாசிரியர்கள்

ஈழத்தினைச் சேர்ந்த உரையாசிரியர்களாக கூழங்கைத்தம்பிரான், அம்பிகைபாகர், அருளம்பலம், ஆறுமுக நாவலர், ஆறுமுகத் தம்பிரான், ஏகாம்பரப்புலவர், சி. கணேசையர், நா. கதிரவேற்பிள்ளை, ச. கந்தையாபிள்ளை, அ. குமாரசுவாமிப்புலவர், சங்கர பண்டிதர், சிவசிதம்பர ஐயர், சிவப்பிரகாச பண்டிதர், சுப்பிரமணிய சாஸ்திரி, ஞானப்பிரகாச சுவாமி, ஞானப்பிரகாச தேசிகர், நவநீத கிருஷ்ண பாரதியார், பொன்னம்பலப்பிள்ளை, ச. பூபாலபிள்ளை, ம.க. வேற்பிள்ளை முதலானோரைக் கருதலாம்.

## பழம் பதிப்பாசிரியர்கள்

தமிழ்ப் பதிப்புத்துறையில் ஈடுபட்டு மக்கி மண்ணோடு மண்ணாக மாறியிருக்கும் எத்தனையோ நூல்களை ஓலைச்சுவடிகளிலிருந்து காத்து நூலாக்கம் செய்த பழம் பதிப்பாசிரியர்களின் பணி என்றென்றைக்கும் நினைக்கத்தக்கது. பதிப்பாசிரியர் பதிப்பித்த அனைத்து நூல்களையும் குறிப்பது புறநிலை ஆகும்; அவர்தம் பதிப்பு நெறிமுறைகளைக் குறிப்பது அகநிலை ஆகும்.[1] இவ்வாய்வானது பதிப்பாசிரியரின் பதிப்புப் பணிகளை அகநிலையிலும் புறநிலையிலும் ஆராய்வதாக அமைகின்றது. பதிப்பாசிரியர்களைப் பற்றியும் அவர்தம் பதிப்பு நெறிமுறைகள் குறித்தும் அறிந்து கொள்வதன் மூலம் ஒரு சிறந்த நூற்பதிப்பின் மூலபாடத் திறனாய்வினையும் பதிப்பு வரலாற்றினையும் அறிந்து கொள்ள முடியும். பதிப்பு நெறிமுறைகள் என்பது மரபு வழிப்பட்ட வளர்ச்சியினை உடையதாகும். அந்த மரபு வழிப்பட்ட கோட்பாட்டு வளர்ச்சி என்பது, மூலத்தில் உள்ளதை மாறுதல் இன்றி ஆய்வு நிலையில் தெளிவுற வெளிப்படுத்தக்கூடிய மரபு வழிபட்ட பதிப்பு அறக்கோட்பாட்டினை பதிப்பாசிரியர்கள் பின்பற்றிய வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். உரையாசிரியர்கள் என்று கூறினாலே இறையானர் களவியல் உரை தொடங்கி இளம்பூரணார் உட்பட்ட தொல்காப்பிய பழைய உரையாசிரியர்களும், குறளுக்கு உரையெழுதிய பதின்மரும், சிலம்பு உரைகூறிய அரும்பத உரையாசியரும், அடியார்க்கு நல்லாரும் நினைவுக்கு எட்டுவதினைப் போல; பதிப்பாசிரியர்கள் என்றவுடன் நம் நினைவுக்கு எட்டுபவர்களாக உ.வே. சாமிநாதையர், ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, ச. வையாபுரிப்பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, சி. கணேசையர் முதலானோர் காணப்படுகின்றனர். பதிப்பாசிரியர்களை அவர்கள் பிறந்த இடத்தின் அடிப்படையில் வகைப்படுத்திப் பார்க்கும்போது தமிழுலகின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பதிப்பாசிரியர்கள் தோன்றியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. இத்தகைய வகைப்பாட்டினைப் பற்றியே 'சுவடிப்பதிப்பாசிரியர்கள்' என்ற நூலில் சி. இலட்சுமணன் வகைப்படுத்தியும் காட்டியுள்ளார்.

## ஈழத்துப் பதிப்பாசிரியர்கள்

தமிழரின் மற்றொரு தாய்வீடான ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பலர் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பதிப்புத்துறையின் வாயிலாக பல்வேறு வகையில் தொண்டாற்றியுள்ளனர். அவ்வகையில் ஏறத்தாழ முப்பதிற்கும் மேற்பட்ட பதிப்பாசிரியர்களை ஈழத்தின் பழம்பதிப்பாசிரியர்களாக அடையாளம் காண முடியும். ஈழத்துப் பதிப்பாசிரியர்களின் பதிப்புப் பணிகளை பொதுவாக இலக்கிய, இலக்கணப் பதிப்புப் பணிகள் என்று சுருக்கமாக கூறிவிட இயலாது. இலக்கியம் என்பதை இசை, சோதிடம், தருக்கம், நாடகம் முதலான பல்வேறுபட்ட துறைகளை அடக்கியாளும் ஒரு சொல்லாகக் கருத முடியும். பல துறை சார்ந்த நூல்களையும் பல்வேறு

வகைப்பட்ட பதிப்பு நெறிமுறைகளையும் கையாண்டு பதிப்பிக்க வேண்டியது இன்றியமையாதது. ஒரே வகைப்பாட்டினையோ அல்லது ஒரே மாதிரியான அளவுகோலையோ கொண்டு அனைத்து வகையான நூல்களையும் பதிப்பிப்பது என்பது கானல் நீரில் நீந்துவது போன்று யார்க்கும் இயலாத ஒன்றாகும். அந்தவகையில் ஈழத்துப் பதிப்புப்பணி என்பது பல்துறை ஆற்றல்மிக்க அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட பணி ஆகும். சுவடிகளுக்குள் காணப்பட்ட முத்தமிழைப் போற்றத்தக்கதாய் பதிப்பாக்கம் செய்தவர்களுள் ஈழத்துப் பதிப்பாசிரியர்கள் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆவர். படைப்பு, பதிப்பு, ஆய்வு என்னும் முப்பெரும் நிலைகளிலும் பட்டறிவும் மிகுந்த தேர்ச்சியும் பயிற்சியும் உடையவர்கள் ஈழத்துப் பதிப்பாசிரியர்கள். கோப்பாய் அம்பலவாண பண்டிதர், யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர், யாழ்ப்பாணம் - மானிப்பாய் அருணாச்சல சதாசிவம்பிள்ளை, ஆறுமுக நாவலர், கு. கதிரைவேற்பிள்ளை, புலோலியூர் நா. கதிரைவேற்பிள்ளை, வடகோவை சபாபதி நாவலர், சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர், திருகோணமலை த. கனகசுந்தரம்பிள்ளை, சி. கணேசையர், மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, சிறுப்பிட்டி சி.வை. தாமோதரம்பிள்ளை, மல்லாகம் வி. கனகசபைப் பிள்ளை, மட்டக்களப்பு விபுலானந்த அடிகள், ச. பவானந்தம் பிள்ளை முதலானோரை ஈழத்துப் பதிப்பாசிரியர்களாகக் குறிப்பிடலாம். ஈழத்துப் பதிப்பாசிரியர்களைத் தவிர்த்து தமிழ் இலக்கிய வரலாற்றினை எழுதுதல் என்பது யார்க்கும் இயலாத ஒன்றாகும். ஏனெனில், இவர்களது தமிழ்ப்பணி என்பது பதிப்புப்பணியும் சமயப்பணியும் இணைந்தது ஆகும்.

## சி.வை. தாமோதரம்பிள்ளை

சி.வை. தாமோதரம்பிள்ளை தம்முடைய வீரசோழியப் பதிப்புரையில் தமிழ்மொழி குறித்தும், தமிழுக்கும் வடமொழிக்குமான தொடர்புகள் குறித்தும்; தமிழ்மொழிக்கு ஆதியிலக்கணம் செய்தவர் மட்டுமே அகத்தியர், தமிழ் மொழியை உருவாக்கியவர் அல்ல என்பதையும்; பல்வேறு இலக்கியங்களின் மேற்கோள் பாடல்வரிகளை சான்றாதாரமாக்கி விளக்கிக்காட்டுகின்றார். அத்தோடு அன்றைய காலகட்டத்தில் மக்கள் மத்தியில் காணப்பட்ட தமிழர்கள் மீதான தொன்மங்களை வெளிப்படையாக மறுத்தும் வடமொழியில் திராவிடம் என்றச் சொல்லின் பொருள், கோடி மண்டலமே தவிர தமிழ் என்பது அன்று என்பதையும் விளக்கி தமது பதிப்புரையினை ஐம்பது பக்கத்திற்கும் மேற்பட்ட ஆய்வுரையாக அமைத்துச் சென்றுள்ளார். தமிழ்மொழியின் காலத்தை இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் சங்ககாலம், சங்கம் மருவிய காலம், காப்பிய காலம், பக்தியியக்க காலம், சிற்றிலக்கிய காலம் போன்ற இலக்கிய வகைகளால் பிரித்தும் மூவேந்தர் காலம், களப்பிரர் காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் என ஆட்சியாளர்களின் பெயர்களால் வகைப்படுத்தியுமே உள்ளனர். ஆனால் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தமிழ்மொழியின் காலத்தினை அபோத காலம், அஷர காலம், இலக்கணகாலம், சமுதாயக்காலம், சமண காலம் [2] எனப் பாகுபடுத்தி விளக்கியிருப்பது பதிப்பாசிரியர்கள் மிகச் சிறந்த வரலாற்று ஆய்வாளர்கள் என்பதை வெளிக்காட்டுவதாக அமைகின்றது. தனது பதிப்பிற்கு உதவிய தமிழ் அறிஞர்களோடு சமஸ்கிருத மொழி வல்லாளர்களின் பெயர்களையும் குறிப்பிடுவதை அவரது பதிப்பு அறமாகவே கருத இடமுள்ளது.

## உ.வே. சாமிநாதையர்

உ.வே. சாமிநாதையர் அவர்களின் முதல் பதிப்புகளைவிட அவருடைய அடுத்தடுத்த பதிப்புகளில் அவர் மேற்கொண்ட பதிப்பு வளர்ச்சிகளைக் காண முடியும். 'அவர் தொடக்ககாலத்தில் பதிப்பித்த சீவகசிந்தாமணியைவிட மணிமேகலைப் பதிப்பும், பத்துப்பாட்டைவிட குறுந்தொகையும் பல பாடவேறுபாட்டுப் பதிவுகளைப் பெற்றுள்ளன. பதிப்புப் பணியில் நன்கு திறமை பெற்ற பின்பு, அதனால் அடைந்த மொழித்திறனால் தொடர்ந்து வந்த பதிப்புகள் வளர்ச்சி காட்டின எனவும், அவற்றில் குறிப்புகள் மிகுதியாகி, விளக்கங்கள் அளவிற் பெருகி, பதிப்பு முதிர்ச்சியும், பதிப்புச் செய்திறனும், பதிப்புச் செம்மையும் கொண்டன' [3] என அன்னிதாமசு அவர்கள் குறிப்பிடுகின்றார்.

## இடைச்செருகல்கள்

பதிப்பாசிரியர்கள் அக்காலகட்டத்தில் சந்தித்த பல்வேறு இடர்பாடுகளில் குறிப்பிடத்தக்க ஒன்று இடைச்செருகல்கள் மிகுந்திருத்தல் ஆகும். எவையெவை மூலம், எவையெவை இடைச்செருகல் என்பதை எளிதில் அறிந்துகொள்ள இயலாத வகையில் இடைச்செருகல்கள்

மிகுந்திருந்தன. பதிப்புத்துறையில் நன்றாகப் புலமையும் ஆழ்ந்த அனுபவமும் பெற்றிருந்தவர்களும் இத்தகைய இடர்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தது. அந்த வகையில் உ.வே. சாமிநாதையர் தமது சுயசரிதையில் தான்கண்ட இடைச்செருகல் பற்றிக் குறிப்பிடும்போது, பாகவதச்சுவடிகளைப் பதிப்பித்த இராசகோபாலப்பிள்ளை அவர்களிடம், தான் பாகவத்சுவடிகளில் காணாத நூலாசிரியர் பெயர், வணக்கச்செய்யுள் ஆகியவை நூலில் இருப்பதாகவும், அவை எங்கிருந்து கிடைத்தன என தான் வினவியதாகவும், அதற்கு இராசகோபாலப்பிள்ளை "அந்த நூலை நான் பதிப்பிக்கவில்லை" என்றும் "என் பெயரைப்போட்டு யாரோ பதிப்பித்து விட்டார்கள்" என்றும் கூறியதாகக் குறிப்பிடுகின்றார். பிற்காலத்தில் செவ்வைச்சூடுவார் என்பவரே பாகவத்தின் ஆசிரியர் என்பதும், அச்சிட்டவர்களால் சேர்க்கப்பட்ட இடைச்செருகல்தான் 'சிந்தகத்து' எனும் வணக்கச்செய்யுள் என்பதும் தமக்குத் தெரியவந்ததாகவும் குறிப்பிடுகின்றார் [4]. இவ்வாறு பல்வேறு இடைச்செருகல்களைக் கண்டறிந்தும் அவற்றினை நீக்கி பதிப்பிக்க வேண்டிய கடைமை பதிப்பாசிரியர்களைச் சேர்ந்ததாகும்.

## பிற பதிப்பாசிரியர்களின் உதவியை நாடல்

பதிப்பாசிரியர் ஒரு நூலினை பதிப்பிக்க விரும்புகின்றார் எனில் அதற்கு பல்வேறு அறிஞர்களின் உதவியும் தேவையானதாக உள்ளது. தனது பதிப்பில் உள்ள பிழைகளைக் களைய வேண்டுமெனில் அதற்குப் பிற பதிப்பாளர்களின், அறிஞர்களின் புலமையும் இன்றியமையாததாகின்றது. சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் கலித்தொகையினை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பிக்க முற்படும்போது, கலித்தொகை முழுமைக்குமான மெய்ப்புத்திருத்தல் பணிக்காக உ.வே. சாமிநாதையரை நாடியுள்ளார். அப்பொழுது உ. வே.சா அவர்களும் அவருக்கு மெய்ப்புத்திருத்தல் பணியில் உதவியுள்ளார் என்பதையும் சுயசரிதம் வாயிலாக அறியமுடிகின்றது [5].

## பதிப்புத்துறையில் புது முயற்சிகள்

ஆரம்ப காலகட்டங்களில் பதிப்புத்துறையில் ஒரு நூலினைப் பதிப்பிக்கும்போது ஓலைச்சுவடிகளில் என்னென்ன செய்திகள் இருந்தனவோ அவற்றை அப்படியே பதிப்பிக்கும் நடைமுறைகள் வழக்கத்தில் இருந்தன. குறித்த நடைமுறைகளை



உ.வே.சாமிநாதையர்
Image Source : ta.wikipedia.org

மாற்றி முகவுரை எழுதும் வழக்கத்தைக் கொண்டுவந்தவர் உ.வே.சாமிநாதையர் ஆவார். முகவுரையில் நூலின் சிறப்பையும் அந்நூலால் இன்ன செய்திகள் தெரியவருகின்றன என்பதையும் வெளிப்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, மேற்கோள் விளக்க அகராதிகள் எனப் பலவற்றை புதியதாக உட்புகுத்தினார். அத்துடன் தம்முடைய ஆராய்ச்சி தொடர்பான செய்திகளையும், தம்மைப் பதிப்பிக்கத் தூண்டியவர்கள், பதிப்பிற்கு சுவடி கொடுத்து உதவியவர்கள், பதிப்பிக்கத் தூணாகத் துணைநின்ற நண்பர்கள் என அனைவரைப் பற்றியும் பதிப்பாசிரியர்கள் தங்களின் பதிப்புரையில் அல்லது பதிப்புகளில் குறிப்பிடத் தொடங்கியுள்ளனர்.

## பதிப்புரையின் கூறுகள்

பதிப்புப் பணியினை மேற்கொள்ளும் பதிப்பாளர்கள் காலந்தோறும் புதிய புதிய மாற்றங்களையும் சேர்க்கைகளையும் செய்துகொண்டே வருகின்றனர். அவற்றுள் படிப்பவர்களுக்கு பொருள் எளிதில் விளங்கும்

வகையில் சந்திபிரித்துப் பதிப்பித்தல், தாங்கள் பதிப்பித்த பதிப்புகளுக்கு முதன்மையாகத் தேவைப்பட்ட ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள், கடிதப்பிரதிகள் எவையெவை எனவும் அதனைத் தனக்குக் கொடுத்து உதவிய நல்லுள்ளங்கள் யாவர் என்பதையும் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். ஆரம்பகாலகட்டப் பதிப்புகளில் உரைமேற்கோள்களைத் தனியாகப் பிரித்துக்காட்டும் தன்மை காணப்படவில்லை. சி. வை.தா போன்றோர் மேற்கோள்களை இரட்டை மேற்கோள்குறிக்குள் அமைத்திருந்தபோதும் அதற்கான சரியான இடவிளக்கங்களைக் குறிப்பிடவில்லை. அதனால் மேற்கோள்களை தனித்துக் காட்டி இடஞ்சுட்டிப் பதிப்புகளை பதிப்பிக்கத் தொடங்கினர். இதனைப் பதிப்பின் அடுத்தகட்ட வளர்ச்சியாகக் கருத முடிகின்றது.

தொடக்ககாலப் பதிப்புகளை எடுத்துப் பார்த்தோமானால் சுவடிகள் எவ்வடிவத்தில் காணப்பட்டனவோ அதேவடிவத்தில் பதிப்பிக்கப்பட்டன. இதற்குச் சான்றாக தொல்காப்பிய எழுத்ததிகார மழவை மாகாலிங்கையர் பதிப்பைக் காணலாம். அப்பதிப்பிலிருந்து பிறகு வேறுபட்டு நூற்பாக்களும், உரைகளும், மேற்கோள்களும், எடுத்துக்காட்டுகளும், குறியீடுகள் மூலம் தனித்தனியாகக் காட்டப்பட்டன. இதனை "கற்போர் எளிதில் உணருமாறு பொருட்டொடர்பு நோக்கிச் சூத்திரச் சொற்களையும் அவற்றின் பொருட் சொற்களையும் பிரித்தும், நிறுத்தியும், படிப்பதற்குரிய அடையாளங்களிட்டும் பதிப்பித்துள்ளேன். எனது சேர்ப்பிற்கு முன்னும், பின்னும், முறையே { } இக்குறிகளை இட்டுள்ளேன்" [6] எனும் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையின் தொல்காப்பியப் பதிப்புரையிலிருந்து அறியலாம்.

உரைப்பகுதிகளைப் பிரித்து எழுதுதல், பதிப்புகளில் பாயிரமாக இருந்த பகுதிகளைப் பதிப்புரைகளாக மாற்றி எழுதுதல், இடைச்செருகல்களை நீக்கிப் பதிப்பித்தல், பிற பதிப்புகளுடன் ஒப்புநோக்கிப் பதிப்பித்தல்; உதாரணமாக அகராதி, அரும்பத விளக்கம், மேற்கோள் விளக்கம், ஆகியவற்றைச் சேர்த்தும் பதிப்புகளை வெளியிட்டுள்ளமை ஆகியவற்றைப் பதிப்புகளின் வளர்ச்சி நிலைகளாகக் காணமுடிகின்றது.

பண்டைய பதிப்பாசிரியர்கள் பின்பற்றிய பதிப்பு நெறிமுறைகள் பலவாகும். இந்நெறிமுறைகளைப் பின்பற்றி தமிழ்ப் பதிப்புத்துறை வளர்ச்சியில் சிறந்த பங்காற்றியோர்களாக ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, கா. நமச்சிவாயமுதலியார், உ.வே.சா, வையாபுரிப்பிள்ளை போன்றோரைக் குறிப்பிடலாம். இவ்வாறான பதிப்பாசிரியர்களின் பதிப்பு முயற்சியில் ஈழத்துப் பதிப்பாசிரியர்களின் பங்களிப்பு என்பது மிகப்பெரியது ஆகும். அவ்வகையில் தமிழ்ப் பதிப்புத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிப் படிநிலைகளைப் பின்வருவனவாகக் கொள்ளலாம்.

1. தொடக்ககாலப் பதிப்பு நிலைகளிலிருந்து மாறி, மூலபாடச் செய்யுள் தனியாகவும், உரை தனியாகவும் காட்டுகின்ற மரபும்; இவை இரண்டையும் தனித்தனி எழுத்து அளவிலும் வழங்குகின்ற வழமையும் ஏற்பட்டது எனலாம்.

2. விருத்தியுரையினைப் பதிப்பிக்கும்போது பதவுரை, பொழிப்புரை, அகலவுரை, வரலாற்றுப்பகுதியில் எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள் என்பவை தனித்தனியாக இனங்காணும் வகையில் அடையாளக்குறிகள் இட்டும் ஒவ்வொன்றிற்குமான இடைவெளிகள் விட்டும் பதிப்பிக்கப்பட்டன.

3. உரைமேற்கோள்கள் எடுத்தாளப்பட்ட நூல்களின் பெயர்கள் இடஞ்சுட்டி விளக்கப்பட்டுள்ளன.

4. இந்நூலானது மாணவர்களுக்குப் பயன்படக்கூடியதா, ஆய்வாளர்களுக்குப் பயன்படக்கூடியதா? என்பதான விளக்கங்கள் அந்நூலிலையே வழங்கப்பட்டன.

5. இந்நூற் பதிப்பிற்கான சுவடிகள் யாரால், எந்த நிலையில், எப்படி வழங்கப்பட்டன? என்பதான செய்திகள் தெளிவுற வழங்கப்படலாயின.

6. ஒரு நூலினைப் பதிப்பிக்கும்போது, அதற்கு முன்வந்த பிற பதிப்புகளிலிருந்து அந்நூல் எவ்வகையில் சிறப்புப் பெறுகின்றது என்பதான செய்திகள் அவ்வவ் பதிப்புகளிலேயே இடம்பெறலாயின.

7. முன்னைய பதிப்புகளிலிருந்த பிழைகள் சுட்டிக்காட்டப்பட்டு அதற்கான திருத்தங்கள் முறையான காரண - காரியத்தோடு விளக்கப்பட்டுள்ளன.

8. ஒரு நூலினைப் பதிப்பிக்க மேற்கொண்ட ஆய்வு முயற்சிகள் யாவும் தொகுப்பாகப் பதிப்புகளில் இடம்பெற்றன. அப்பதிப்பினைப் பயன்படுத்துவோர் எவ்வகையில்

அப்பதிப்பினைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கான பயன்பாட்டுக்குறிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

9. பதிப்பிற்கான பெயர்க்காரணங்கள் குறித்தும் அதற்கான இலக்கணப் பொருத்தங்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டன.

10. பாட வேறுபாடுகளும் வரலாற்றுக் குறிப்புகளும் அடிக்குறிப்புகளில் வழங்கப்பட்டன.

இவை மாத்திரமல்லாமல் பின்வருவனவான செய்திகளும் பதிப்புகளில் இடம்பெறலாயின:

- நூலுக்கான முகவுரை, பதிப்புரை, அணிந்துரை என்பன இடம்பெறலாயின.
- பின்வந்த பதிப்புகளில் முதல் பதிப்பு, இரண்டாம் பதிப்பு ஆகியவற்றின் முன்னுரைகள் இடம்பெறலாயின.
- அந்நூலின் தொன்மை, சிறப்பு, தேவை முதலான செய்திகள் இடம்பெறலாயின.
- அந்நூலில் இடம்பெற்றுள்ள தெய்வப் பெயர், மக்கட்பெயர், ஆட்சியாளர்கள், நாடுகள், நகரங்கள், ஊர்கள், நதிகள், தாவரங்கள், பறவைகள், விலங்கினங்கள் என்பனவான பல செய்திகளும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.
- இலக்கண, இலக்கிய நூல்களில் குறிப்புரைகள் இடம்பெறலாயின.
- செய்யுள் முதற்குறிப்பு அகராதிகள், மேற்கோள் விளக்க அகராதிகள், இடம்விளங்கா மேற்கோள் விளக்க அகராதிகள், அரும்பதவிளக்க அகராதிகள், அநுபந்தம் முதலியவான விடயங்கள் இடம்பெறலாயின.
- •ஒரு நூல் வெளிவருவதற்குப் பொருளுதவி செய்தவர்களின் பட்டியல்களும், ஆய்வியல் உதவிகள் செய்தவர்களின் பட்டியலும் தொழில்நுட்ப உதவிகள் செய்தவர்களின் பட்டியலும் இடம்பெறலாயின.

மேற்கண்டவாறாக தமிழ்ப்பதிப்புலகில் ஏற்பட்ட வளர்ச்சிநிலைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

## முடிவுரை

இவ்வாறு பதிப்புத்துறையில் கண்ணிற்குப் புலனாகாமல் எத்தனையோ வளர்ச்சிகள் பதிப்பாசிரியர்களால் காலந்தோறும் புகுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஈழத்துப் பதிப்பாசிரியர்களின் பதிப்பு நெறிமுறைகளை அவர்களது பதிப்பு நூல்களை வைத்துக்கொண்டு ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரையின் தன்மையானது அமைந்துள்ளது.

## துணைநூற்பட்டியல்


1. F.X.C. நடராசா, 1957, ஈழமுந் தமிழும், கலைமகள் வெளியீடு, கத்தோலிக்க அனாத அச்சகம், மட்டக்களப்பு.
2. ப. தாமரைக்கண்ணன், க, 2004, பதிப்புச்செம்பல் சி.வை. தாமோதரம்பிள்ளை (பதிப்புரைகளின் தொகுப்பு), 2 ஆம் பதிப்பு, குமரன் பப்பிளிஷர்ஸ், சென்னை.
3. உ.வே. சாமிநாதையர், 2022, என் சரித்திரம், நற்றிணைப் பதிப்பகம், சென்னை.
4. ச. வையாபுரிப்பிள்ளை, 2001, புறத்திரட்டு, 3 ஆம் பதிப்பு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
5. ச. வையாபுரிப்பிள்ளை, 1931, களவியற்காரிகை, 1 ஆம் பதிப்பு, சென்னை.
6. ச. வையாபுரிப்பிள்ளை, 1955, திவ்யப் பிரபந்தம் முதலாயிரம், 1 ஆம் பதிப்பு, சாது அச்சுக்கூடம், சென்னை.
7. ச. வையாபுரிப்பிள்ளை, 1944, நான்மணிக் கடிகை, 1 ஆம் பதிப்பு, சக்தி காரியாலயம், சென்னை.
8. சி. இலட்சுமணன், 2011, சுவடிப் பதிப்பாசிரியர்கள், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
9. ஆறுமுக நாவலர், நன்னூல் காண்டிகையுரை, வித்தியாநுபாலன யந்திரசாலை.


[1] சுவடிப் பதிப்பாசிரியர்கள், பக்.4.

[2] பதிப்புச்செம்பல் சி.வை.தா - வீரசோழியப் பதிப்புரை, ப.31.

[3] பதிப்பியல் - அன்னிதாமசு, ப.18.

[4] என் சரித்திரம் - உ.வே.சா., ப.559.

[5] என் சரித்திரம் - உ.வே.சா., ப.560.

[6] தொல்காப்பியம் - மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை.



● வின்சென்ட் போல் சந்தியாப்பிள்ளை

வின்சென்ட் போல் சந்தியாப்பிள்ளை (B.Sc., M.A, M.Phil) அவர்கள், 1966 இல், யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் உள்ள ஊறணி எனும் இடத்தில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை இளவாலை என்றியரசர் கல்லூரியில் பயின்றார். உயர்கல்வியை பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் கற்றார். கனடாவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நடத்திய தமிழியல் பட்டப்படிப்பில், 5 6 ஆண்டுகள் தமிழர் மெய்யியல், நாட்டார் வழக்காற்றியல், இலக்கியத் திறனாய்வு போன்ற பாடங்களைக் கற்பித்திருக்கிறார். கல்லூரிக் காலத்தில் நாத்திகம், மார்க்ஸிசம் போன்ற கருத்தியல்களில் ஈடுபாடு காட்டிவந்தார். பின்னர் கற்கைப் புலத்தினூடாக மெய்யியல், தத்துவம் என்பவற்றில் ஆர்வம் செலுத்தினார். தற்போது சோதிடம், ஹோமியோபதி, தமிழ்மொழி போன்றன தொடர்பாகக் கவனம் செலுத்தி வருகிறார்.

# அரைகுறை மனித உரிமை நடவடிக்கைகள்: போருக்குப் பிந்தையகாலத்தில் பொறுப்புக்கூறலைத் தவிர்த்தல் – இலங்கை

## பகுதி 2

ஈழத்தில் ஆயுதப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. பல தலைமுறைகளின் வாழ்க்கையை மாற்றியமைத்த போர், அதன் இறுதி இனப்படுகொலையுடன் மட்டுமே முடிந்துவிடவில்லை; மாறாக, போரின் பின்னரான ஈழச் சூழலில், அதன் பின்னடைவுகளும் அடிப்படைச் சிக்கல்களும் இன்னும் பல கோணங்களில் மேற்கிளம்பவே செய்கின்றன. இந்தப் பின்னணியில், போரின் பின்னரான ஈழத்து நிலவரம் குறித்து அலசுவதற்கு புதிய வெளிகள் தேவைப்படுகின்றன. ஆய்வுக் கட்டுரைகள், கள ஆய்வுகள் ஊடான தரவுகளுடன் போருக்குப் பிந்தைய ஈழச் சூழல் குறித்த விவரங்களையும் அதன் நீண்டகால விளைவுகளையும் விவாதிக்கக்கூடிய சிறந்த தளமாக இருக்கின்றன. ஆனால், அவை துரதிஷ்டவசமாக வெகுஜனத் தளத்தில் அதிகமாகக் கவனம் பெறவில்லை. அந்த வகையில், ஈழத்தின் பின் – போர்க்காலச் சூழல் குறித்து ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்த்து வெளிவருவதாக ‘பின் – போர்க்கால ஆய்வுகள்’ எனும் இத் தொடர் அமைகிறது.

*ஆங்கில மூலம்: கேட் குரோனின் - ஃபர்மான்*

## இலங்கையிலிருந்து கிடைத்த சான்றுகள்

இலங்கையின் பாதுகாப்புப் படைகள் போர்க்குற்றங்களையும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களையும் பாரிய அளவில் செய்துள்ளன என்பதற்கான சான்றுகள் 1983 - 2009 உள்நாட்டுப் போருக்குப் பின்னர் வெளிவந்தன. பத்தாண்டுகளுக்குப் பிறகும் ஏறக்குறைய 150,000 பேர் இன்னும் கணக்கில்வராமல் இருப்பதாக மனித உரிமை ஆர்வலர்கள் நம்புகிறார்கள். உயிர் பிழைத்தவர்களிடமிருந்தும் சர்வதேச சமூக உறுப்பினர்களிடமிருந்தும் பொறுப்புக்கூறலுக்கான அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. இந்தநிலையிலும் இந்தக் கொடுமைகளைச் செய்தவர்களை விசாரிக்கவோ அல்லது வழக்குத் தொடரவோ இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்துவிட்டது.

ஆயினும்கூட, போரை வென்றபிறகு அதன் ஐந்து ஆண்டுகால ஆட்சிக்காலத்தில், சர்வதேச அழுத்தம் கடுமையாக இருந்த தருணங்களில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகம் ஏராளமான மனித உரிமைக் கட்டமைப்புகளை உருவாக்கியது. அனைத்துக்கும் பொறுப்புக்கூறலுடன் தொடர்புடைய கடப்பாடுகள்தான் இருந்தன. ஆனால் போர்ச் சட்டமீறல்கள் குறித்து விசாரிக்கும் பணி எவருக்கும் கொடுக்கப்படவில்லை. இந்தக் கட்டமைப்புகள் அரசாங்கத்தின் தீவிர தேசியவாத உள்நாட்டுக் குழுவினரிடமிருந்து விமர்சனங்களைச் சந்தித்தன. நீதிக்காகக் குரல் கொடுப்பவர்களிடமிருந்து இந்த அமைப்புகளின் செயற்பாடுகளில் சந்தேகம் எழுப்பப்பட்டது. மேலே கோடிட்டுக்காட்டப்பட்டுள்ள புதிரை இலங்கையின் நடவடிக்கைகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன: ஒப்புக்கொள்ளுதல் குறித்த நன்மைகள் ஏதும் இல்லாவிட்டால் எதற்காக இந்தச் செலவுமிக்க மற்றும் சிரமமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்? சர்வதேச அழுத்தங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக இலங்கை எடுத்த அரைகுறை நடவடிக்கைகளை ஆவணப்படுத்துவதற்கு முன்பு, போர்க்குற்றங்கள் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கைகள் பற்றிய குற்றச்சாட்டுகளை நான் மதிப்பாய்வுசெய்ய விரும்புகிறேன். பின்னர் இந்த நடவடிக்கைகளுக்கான முதன்மையான பார்வையாளர்கள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் உறுப்பினர்கள் அல்லாதவர்கள்தான் என்பதற்கான ஆதாரங்களை முன்வைக்கின்றேன்.

### போர்க்குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகள்

#### நீண்ட போரின் முடிவு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு (LTTE) எதிரான இலங்கையின் யுத்தம் 2009 மே மாதத்தில் இரத்தக்களரியாக முடிவுக்கு வந்தது. நீண்டகாலமான இந்த மோதல் முழுவதும் அரசால் மனித உரிமைகள் மீறப்படுவதென்பது பொதுவான இயல்பாக இருந்தது. ஆனால் இறுதி நாட்களில் பொதுமக்கள் உயிரிழப்பு அதிர்ச்சியூட்டும்வகையில் அதிகரித்தது. இலங்கையின் வடக்குப் பகுதியான வன்னிப்பகுதியைக் கடந்து அரசாங்கப் படைகள் முன்னேறியபோது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் வாழ்ந்த 330,000 பொதுமக்கள் அவர்களுக்கும் இவர்களுக்கும் இடையில் சிக்கிக்கொண்டனர். இராணுவம் முன்னேறியதால் பீதியடைந்த பொதுமக்கள் மீண்டும் மீண்டும் இடம்பெயர்ந்தனர். இறுதியில் வங்காள விரிகுடாவிற்கும் நந்திக்கடலிற்கும் இடையிலான ஒரு குறுகிய நிலத்துண்டில் சிக்கிக்கொண்டனர். போரின் இறுதிச் சண்டை, முள்ளிவாய்க்கால் கிராமத்திற்கு அருகில் நடந்தது. இந்த நிகழ்வுகளின் நாட்களில் நாற்பதாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவமனைகள் மற்றும் யுத்தவிலக்கு மண்டலங்கள் என்று அழைக்கப்படுபவை மீது அரசாங்கம் 'ஷெல்' தாக்குதல் நடத்தியதன் மூலம் இது நிகழ்ந்தது.

போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கான போராளிகள் கொல்லப்பட்டனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் அரசாங்கக் காவலில் வைக்கப்பட்டனர். இந்தப் போர்க் கைதிகளில் சிலர் சித்திரவதை செய்யப்பட்டார்கள்; பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார்கள்; அல்லது சுருக்கமாக, கொல்லப்பட்டார்கள். அவர்களின் கொடூரமான தலைவிதிகள் வெற்றி பெற்ற இராணுவத்தின் துர்நாற்றம் வீசும் செல்போனில் எடுக்கப்பட்ட வீடியோக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏனையவர்கள் 'மறுவாழ்வு' முகாம்களில் போய் விழுந்தனர். அவர்களில் அவர்களில் பலரும் தங்கள் குடும்பங்களுக்கு, அல்லது வீட்டிற்குத் திரும்பவே இல்லை. முள்ளிவாய்க்காலில் வாழ்ந்திருந்து வெளிவந்த பொதுமக்களும் தடுத்து வைக்கப்பட்டனர். மோசமான நிலையை உடைய, சித்திரவதைகள் அதிகமாகவும் இருந்த ஒரு பரந்தவெளி முகாம் வலையமைப்பில் இவர்கள் அடைக்கப்பட்டனர். இதற்கிடையில், இலங்கை அரசாங்கம்

‘மனிதாபிமான நடவடிக்கை’ என்று இந்தத் துன்பநிகழ்வை அறிவித்தது. ஒரு வெற்றியும், அதற்காகப் புதிதாக அறிவிக்கப்பட்ட பொது விடுமுறையான வெற்றிக் கொண்டாட்ட நாளும் தயாராக இருந்தது.

தென்னிலங்கையில் உள்ள சிங்களக் குடிமக்களைப் பொறுத்தவரை ஒரு கொடுங்கனவு முடிந்துவிட்டது. தற்கொலைத் தாக்குதல் குறித்து எப்போதும் இருந்த பயம் இறுதியாக நீங்கிவிட்டது. தெற்கில் இருக்கும் மக்கள் பலர் எந்த தமிழர்களையும் இந்தக் காலங்களில் நேரில் சந்தித்ததில்லை. எல்.டி.டி, அரக்கர்கள் என்றே அவர்கள் நம்பினர். தமிழ்ப்போராட்டத் தலைவர்கள் பெருமளவில் கொல்லப்பட்டதைக் கண்டு நிம்மதியே அடைந்தார்கள். பொதுமக்களின் பாதுகாப்பிற்காக மிகுந்த கவனம் செலுத்தியே இறுதிப்போர் நடவடிக்கை நடத்தப்பட்டது என்ற அரசாங்கத்தின் உத்தரவாதங்களை தென்னிலங்கை மக்கள் சந்தேகிக்கவேயில்லை. போர் பற்றிய அரசின் அதிகாரபூர்வமான கதையாடலைக் கேள்விக்கு உள்ளாக்கவும் அவர்கள் விரும்பவில்லை.

## ஓர் இரத்தக்களரி பற்றிய வதந்திகள்

போர் முடியும் தருவாயில் இருந்ததால், பத்திரிகையாளர்களும் சமூக உதவிப் பணியாளர்களும் போர்க்களப் பகுதிக்குள் நுழைய முடியாதநிலை ஏற்பட்டது. ஆனால் முற்றுகைப் பகுதிக்குள் செயற்படும் மருத்துவர்களால் அது இயலுமாயிருந்தது. உயிரிழப்பு எண்ணிக்கைகள் தொடர்பான தகவல்களை ரேடியோமூலம் வெளியிட அவர்களால் இயலுமாயிருந்தது.

தப்பியோடிய பொதுமக்களின் சாட்சியங்கள் மற்றும் ஐ.நா. அதிகாரியின் நேரில் கண்ட சாட்சியத்துடன் இந்த எண்ணிக்கைகள் பொருந்தி வந்தன. பொதுமக்கள்மீது கண்மூடித்தனமான குண்டுவீச்சு மற்றும் மருத்துவமனைகள் மீதான தாக்குதல் என்பன யுத்தவிலக்கு மண்டலங்கள் குறிவைக்கப்படுவதைச் சித்திரித்தன.

பொதுமக்களின் மோசமானநிலை பற்றிய தகவல்கள் வெளிவரத் தொடங்கியதும் அந்தச் செய்திகளை இலங்கை கடுமையாக மறுக்கத் தொடங்கியது. இரு தரப்பினரும் செய்த துஷ்பிரயோகங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று மேற்கத்திய அரசாங்கங்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சிறப்பு அமர்வில் அழைப்புவிடுத்தன. ஆனால் 2009 மே மாதம் 27 ஆம் நாளன்று, ராஜபக்சே அரசு ஓர் இராஜதந்திர வெற்றியைப் பெற்றது. “மக்களின் விருப்பத்திற்கு எதிராகப் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான குடிமக்களை இலங்கை அரசு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவித்தது” என்று இலங்கை அரசு சொன்னது. மனித உரிமைகள் கவுன்சிலில் வரவேற்கப்பட்ட இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை வெற்றிகரமாக அது நிறைவேற்றியது. சர்வதேசச் சட்டங்கள் மீறப்பட்டதையும் அதற்கான பொறுப்புக்கூறலின் தேவை குறித்தும், மனித உரிமைகள் கவுன்சிலில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

## தெற்கு நோக்கிச் செல்லத் தொடங்கிய மேற்குடனான உறவு

போரின் கொடூரமான கடைசி நாட்களை, பணயக்கைதிகள் மீட்புப் பணியாக இலங்கை சித்திரித்ததை மனித உரிமைகள் கவுன்சில் உறுப்பினர்களில் பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தனர். ஆனால் பல மேற்கத்திய அரசாங்கங்கள் அதை ஏற்கத் தயாராக இல்லை. போருக்குப் பின்னர் மனித உரிமைகள் குறித்த இலங்கையின் கடும்போக்குப் பிடிவாதக்குணம் மேற்கத்திய நாடுகளுடனான அதன் உறவுகளை ஆழமாகப் பாதித்தது. பாரம்பரியமாக நன்கு அமைந்திருந்த அமெரிக்காவுடனான இருதரப்பு உறவுகள் 2007 இல் சரியத் தொடங்கின. பாதுகாப்புப் படையினரின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான கரிசனையுடன், அமெரிக்க காங்கிரஸ் பொருளாதார உதவியைக் குறைத்தது. இலங்கைக்கான இராணுவ உதவி மற்றும் ஆயுத விற்பனையை நிறுத்தியபோது, இந்தப் பாதிப்பு வெளிப்படையானது. 2010 ஆம் ஆண்டில் அமரிக்க காங்கிரஸ் அனைத்து மனிதாபிமான உதவிகளையும் நிறுத்தியது. பிரித்தானியத் தொலைக்காட்சியான ‘சேனல் 4’ இனுடைய ஆவணப்படமான “இலங்கையின் கொலைக்களங்கள்” என்பது திரையிடப்பட்டதைத் தொடர்ந்தே இப்படி நடந்தது. ஆவணப்படம் போர்க்குற்றங்களுக்கான தெளிவான ஆதாரங்களைக் காட்டியது. 2013 ஆம் ஆண்டில் மனிதாபிமான உதவி 8 மில்லியன் டொலர்கள் அளவு ஒதுக்கீட்டிலிருந்து 6 மில்லியன்களாகக் குறைக்கப்பட்டது.

முக்கிய பிற நன்கொடை நாடுகளுடனான இலங்கையின் உறவும் இதேபோல் பாதிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியம் ‘ஜிபிஎஸ் பிளஸ்’ சலுகையை இடைநிறுத்தியது. பல ஐரோப்பிய நாடுகள்

அவற்றின் இருதரப்பு மேம்பாட்டு உதவியைக் குறைத்தன. 2009 இற்கும் 2012 இற்கும் இடையில் 'பாரம்பரியமான மேம்பாட்டு உதவி வழங்கும் கூட்டாளிகளிடமிருந்து' (அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா, சர்வதேச மேம்பாட்டு வங்கிகள் போன்றன) வழங்கப்பட்ட தொகைகள் குறைந்துவிட்டன.

இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்பினராக இல்லாததால், நடத்தப்பட்ட அட்டூழியங்களை விசாரிக்க எந்தத் தானியங்கி சர்வதேசப் பொறிமுறையும் இருக்கவில்லை.

ஒரு சர்வதேச விசாரணைக்கு பதிலாக பலதரப்பு நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன:

1. நிலைமையை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பரிந்துரைத்தல்.
2. பாதுகாப்புக் கவுன்சில் ஒரு சிறப்புத் தீர்ப்பாயத்தை நிறுவுதல்.
3. பாதுகாப்புக் கவுன்சில் அல்லது மனித உரிமைகள் கவுன்சில் ஒரு சர்வதேச விசாரணையை உருவாக்குதல்.

மனித உரிமைகள் பற்றிய கரிசனைகள் காரணமாக மேற்கத்திய அரசாங்கங்கள் முன்னுரிமை வர்த்தகம் மற்றும் உதவியை வாபஸ் பெற்றதால், சீனாவுடனான இலங்கையின் நெருங்கிய உறவு வலுப்பெற்றது. இலங்கைக்கு எதிராக பாதுகாப்புக் கவுன்சிலில் நடவடிக்கை எடுக்கப்படுவதைச் சீனா தடுத்தது. இதனால் பொறுப்புக்கூறல் தொடர்பான முதன்மைக்களமாக மனித உரிமைகள் கவுன்சில் மாறியது.

## அரைகுறை நடவடிக்கைகள் அறிக்கைப் போர்கள்

போரின் இறுதிக்கட்டத்தின் போது சர்வதேச சட்டமீறல்கள் குறித்து விரிவான விவரங்களைக் கொண்ட ஓர் அறிக்கையை அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டது. "இலங்கை அரசாங்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் முயற்சி இது. ஜோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் இட்டுக்கட்டப்பட்ட கதைகள் இவை" என்று கூறி இலங்கை அவற்றை நிராகரித்தது.

இலங்கை திருப்பித் திருப்பி ஒரே பல்லவியையே பாடியது: அதில் ஒன்று "இலங்கையின் ஆயுதப்படைகள் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலும், அவர்களின் நலனைப் பாதுகாப்பதிலும் கவனமாக இருந்தன". இரண்டாவது, "இலங்கையின் உள்நாட்டு நீதித்துறை, தாங்கள் மனித உரிமைகள் மீறலுக்கு ஆளாவதாகக் கருதுபவர்களுக்குத் தேவையான அனைத்து உரிமைகளையும் வழங்குகின்றது."

ஆதாரங்கள் குவிந்தபோதும் இலங்கை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரு வருடம் கடந்தும் உள்நாட்டுப் பொறிமுறையில் பதில் எதுவும் இல்லை என்ற நிலை. இதனால் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மேற்கத்திய அழுத்தத்திற்கு அடிபணிந்து இலங்கையில் பொறுப்புக்கூறல் குறித்த நிபுணர்கள் குழுவை உருவாக்கினார். LTTE இனைத் தோற்கடிப்பதற்கான இறுதி முயற்சியில், "சர்வதேச சட்டத்தினை மீறிக் கடுமையான செயல்கள் நடந்துள்ளன" என்று இறுதியில் முடிவு செய்யப்பட்டது. முழுமையான சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் ஆரம்பத்திலிருந்தே, இலங்கை இதனை மறுத்தது. "ஓர் இறையாண்மை கொண்ட நாட்டின்மீது முன்னுதாரணமற்ற தேவையற்ற தலையீடு இது." என்று இலங்கை கூறியது.

அதேநேரத்தில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையம் (LLRC) என்ற அதன் சொந்தப் பொறிமுறையை இலங்கை உருவாக்கியது. விசாரணை தேவைப்படும் அளவிற்கு மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகள் எதுவும் இலங்கையில் இல்லை என்று ஆட்சியாளர்கள் கடுமையாக வலியுறுத்தியநிலையில், இந்த நடவடிக்கை ஆச்சரியமளிப்பதாக இருந்தது. வேறு என்ன? சர்வதேச அழுத்தத்திற்கு அடிபணிவதாக அரசியல் எதிரிகளிடமிருந்து குற்றச்சாட்டுகளை அது எதிர்கொண்டது. ஆனால், இலங்கையின் தலைநகரான கொழும்பில் உள்ள ஒரு சிவில் சமூக அமைப்பின் இயக்குநர் விளக்கியதுபோல், "ஐ.நா. தனக்கு எதிராக அணிதிரட்டுவதற்கான அறிகுறிகளை இலங்கை அரசாங்கம் கண்டிருக்கிறது". அதனால் வரக்கூடிய "போர்க்குற்ற நீதிமன்றத்திற்கு அஞ்சியதே, இந்தச் செயற்பாட்டிற்குக் காரணம்."

நீதிபோன்ற எதையும் எல்.எல்.ஆர்.சி வழங்காது என்பது விரைவில் தெளிவாகியது. LLRC இன் பணியில் ஈடுபட்டுள்ள ஒருவர் சுட்டிக்காட்டியதுபோல, அதன்பங்கு "ஒரு பொறுப்புக்கூறல் பொறிமுறையாக முன்னிறுத்தப்படவில்லை" மாறாக, "சமரசம் ஏற்படுத்துவதற்கு" என்றவகையில்தான்

நிறுவப்பட்டது. 2002 இல் போர் நிறுத்த ஒப்பந்தம் தோல்வியடைந்தது பற்றி விசாரிப்பதே இதன் பணியாக இருந்தது. மீண்டும் சமூக வன்முறை நிகழாமல் இருக்கப் பரிந்துரைகளை வழங்குவதுதான் இதன் நோக்கம். அரசாங்கம் ஊகித்ததுபோல, "சர்வதேச நடவடிக்கைக்கு ஓர் எதிர்நிலையாக" இருக்கும் வகையில் இந்த உத்தரவு அமைந்தது. போர்க்குற்றங்கள் எனக் கூறப்படுவதைக் கையாள்வதற்கு போதுமான அளவுக்குக் கிட்டவாக இந்த அமைப்பு இருந்தது. சமூகச் செயற்பாட்டாளர்கள், சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள் LLRC இன் ஆணையைப் பற்றி கடுமையாகப் பேசினர். குற்றம் சாட்டப்பட்ட, அட்டூழியங்களை விசாரிக்க அரசாங்கம் மறுத்ததற்கு ஒரு மறைமுகத்திரை அது என்றனர். பாதிக்கப்பட்டவர்களின் வழக்கறிஞர் ஒருவர் கூறியதுபோல், "அவர்களின் பணி அதை மூடி மறைப்பதாகும்."

உள்நாட்டு மற்றும் சர்வதேச சிவில் சமூகத்தைச் சேர்ந்த பலர் LLRC இன் பணிகளில் பங்கேற்க மறுத்துவிட்டனர். "போதுமான அதிகாரமின்மை, சுதந்திரத்திற்கான போதுமான உத்தரவாதங்கள் இல்லாதது மற்றும் சாட்சிகளுக்குப் பாதுகாப்பு இல்லாமை" பற்றிய கவலைகள் காரணமாக இப்படி மறுத்தனர். இருந்தபோதிலும் ஆயிரக்கணக்கான இலங்கையர்களிடமிருந்து சாட்சியங்களை எடுப்பதில் பதினெட்டு மாதங்களை LLRC உறுப்பினர்கள் செலவிட்டனர். பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் கூறியதைக்கேட்டு ஆணையர்கள் அதிர்ச்சியடைந்ததாகத் தெரிகிறது. சாட்சியங்களைக் "காதுகொடுத்துக் கேட்பது மிகவும் கடினம்" என்று LLRC ஊழியர்களில் ஒருவர் கூறினார்.

LLRC அதன் அறிக்கையை 2011 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வெளியிட்டது. இதில் இனங்களுக்கிடையேயான உறவுகள் பற்றிய விரிவான பரிந்துரை அணுகுமுறையும் அடங்கும். இதற்குக் கொழும்பு சிவில் சமூக உறுப்பினர்கள் தங்களை "மகிழ்ச்சிக்குரிய வகையில் ஆச்சரியப்படுத்தினர்" என்று LLRC இனர் கூறினர். அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் தரவுத்தளத்தை நிறுவவுவதற்கு LLRC கேட்டுக்கொண்டது.

அவர்கள் கேட்ட சாட்சியக்கதைகள் பாதுகாப்புப் படையினர் வேண்டுமென்றே செய்த செயல்களின் விளைவாகும் என்ற முடிவுவை LLRC உறுப்பினர்கள் எதிர்த்தனர். இந்த ஆணையத்தின் மிகவும் பிரபலமாக்கப்பட்ட கண்டுபிடிப்பு என்னவென்றால், இலங்கை இராணுவம் 'யுத்த விலக்கு மண்டலத்தில் பொதுமக்களை வேண்டுமென்றே குறிவைக்கவில்லை" என்பதாகும். வேறுவார்த்தைகளில் கூறுவதானால், அட்டூழியங்களுக்கான பொறுப்புக்கூறல் என்பதை இது முற்றிலுமாகத் தவிர்த்தது.

## விசாரணைக்கான இராணுவ நீதிமன்றம்

மார்ச் 2012 ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தொடர் அண்மிக்கையில் இலங்கைக்குள்ளிருந்தும், புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்தும் குரல்கள் எழுந்தன. அவர்கள் சர்வதேச விசாரணை தேவை என வாதிட்டனர். இராஜதந்திர முன்னணியில் கடுமையாக ஆட்சி பின்னுக்குத்தள்ளப்பட்டது. ஓர் இறையாண்மை கொண்ட நாடாக அதன் உரிமைகளையும் உள்நாட்டு அணுகுமுறைகளையும் மேலாதிக்கத்தையும் வலியுறுத்தியது நீர்த்துப்போனது. "எங்கள் சொந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனும் விருப்பமும் எங்களிடம் உள்ளது," என்று வெளியுறவு அமைச்சர் கூறினார். இந்த விஷயத்தை உள்நாட்டிலேயே கையாண்டு வருவதற்கான ஆதாரமாக அரசாங்கம் 'எல்எல்ஆர்சி' இனைச் சுட்டிக்காட்டியது. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டம் நெருங்க நெருங்க, அரசாங்கம் இந்த உத்தியை இரட்டிப்பாக்க முயன்றது. போர்க்குற்றங்கள் தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மையையும் தொடர்ந்தும் மறுத்தது. அதேவேளையில், 2011 ஒகஸ்டில், "பொதுமக்கள் இறப்பு விகிதம் ஒன்றுமே இல்லை" என்ற அதன்கூற்றுத் தவறானது என முதன்முறையாகப் பாதுகாப்பு அமைச்சகம் வெளிப்படுத்தியது.

மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க 'இராணுவ விசாரணை நீதிமன்றம்' கூட்டப்பட்டுள்ளதாக இலங்கை அறிவிக்க, இந்த ஒப்புதல் வாக்குமூலம் உதவியது. சர்வதேச சட்டமீறல்களில் ஈடுபட்டதாக முதன்மையான ஆதாரமாகக் கருதும் எவரையும் இராணுவ நீதிமன்றம் விசாரிக்கும் என்றது. ஆனால் மனித உரிமைகள் கவுன்சில் அமர்வு, சர்வதேச விசாரணையைப் பட்டியலிடாமல் நிறைவேற்றியபோது, இராணுவ நீதிமன்ற விசாரணை என்பதும் சத்தமில்லாமல் கடையை இழுத்து மூடியது. பல மாதங்களுக்குப் பிறகு,

போரின் இறுதிக்கட்டத்தின்போது எந்தவொரு பொதுமக்களின் உயிரிழப்புகளுக்கும் இராணுவம் பொறுப்பல்ல என்று விசாரணையில் கண்டறியப்பட்டதாக இராணுவம் அறிவித்தது. குறிப்பாக அந்தச் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: "மனிதாபிமான நடவடிக்கையின் அனைத்து நிலைகளிலும், இலங்கை இராணுவம் சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் போர்ச்சட்டத்தைக் கடைப்பிடித்து, நன்கு ஒழுக்கமான இராணுவப்படையாக நடந்துகொண்டது என்பதற்கான சான்றுகள் வெளிப்பட்டன."

## காணாமல் போனோருக்கான ஆணையம்

2013 மே மாததத்தில் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் நவநீதம் பிள்ளை அவர்கள், இலங்கைக்கு விஜயம் செய்வார் என அறிவித்தார். 2013 நவம்பரில் காமன்வெல்த் அரசுத் தலைவர்கள் கூட்டத்தை நடத்தும் நாடாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டதன் விளைவாக, இலங்கையின் மனித உரிமைகள் தோல்விகள், அதிகரித்த கவனம் பெற்றது. கூட்டத்திற்கு முன்னதாக, அமர்வைப் புறக்கணித்த கனேடிய அரசாங்கம் மற்றும் பலர், இலங்கையின் மோசமான மனித உரிமைகள் செயற்றிறன் குறித்துக் கவனத்தை ஈர்த்தனர். போர்க்குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படாமையே முதன்மையான மையமாகவும், தற்போதைய துஷ்பிரயோகங்கள் பற்றிய அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் ஒரு துணைப்பொருளாகவும் இருந்தது. பிள்ளையின் வருகை நெருங்கி வருவதால், போர்க்காலத்தில் காணாமல் போனவர்களை விசாரிக்க ஒரு புதிய ஆணையம் உருவாக்கப்படுவதாக ஜனாதிபதி ராஜபக்ஷ 2013 யூலையில் அறிவித்தார்.

சர்வதேச அழுத்தங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் இப்படி நிறுவனங்களை உருவாக்குவது இலங்கைக்கு வேலையாகப்போய்விட்டது என்று களத்தில் உள்ள சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினர். "அவை ஒரு பொய்ச் செய்தியாக, ஒரு மறைப்பாக, ஏதோ செய்யப்படுவது போன்ற தோற்றத்தைக்கொடுக்கும் ஒரு வழியாக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன" என்றார்கள். கமிஷன் ஒருபோதும் களத்தில் இறங்கும் என்று தாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றும் பலர் கருத்துத் தெரிவித்தனர். "முக்கியமான வார்த்தை 'அறிவிக்கப்பட்டது' என்ற சொற்தான்" என்று ஒரு நேர்காணல் செய்பவர் குறிப்பிட்டார். இன்னொருவர் இதை "CHOGM இனை நோக்கிய ஒரு சூழ்ச்சி" என நிராகரித்தார்.

## போதுமான நடவடிக்கையற்ற ஐந்து ஆண்டுகள்

மேலே உள்ள விவாதத்திலிருந்து, பொறுப்புக்கூறலுக்கான வெளிப்புற அழுத்தத்தால் தூண்டப்பட்டே இந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றும் உருவாக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. அவர்கள் அட்டூழியங்களுக்குப் பொறுப்பேற்கவில்லை என்றாலும், அவை அற்பமான சிறிய செயற்பாடுகளல்ல. இவற்றுக்கு இலங்கை அரசாங்கம் குறிப்பிடத்தக்க வளங்களை வாரி இறைத்தது. 2013 ஆம் ஆண்டு LLRC இற்கான செயல்திட்டத்திற்கு கிட்டத்தட்ட (1.3 பில்லியன் டொலர்) 1300 கோடி இலங்கை ரூபாய்கள் செலவாகும் என்று சொல்லப்பட்டது. இப்போதைய டொலர் மதிப்பீட்டில் ஏறக்குறைய $7.2 மில்லியன்கள் (கட்டுரை எழுதப்பட்ட ஆண்டில். இப்போது இது இன்னும் அதிகமானது). இலங்கைக்கான ஓர் ஆண்டின் ஒட்டுமொத்த வரவுசெலவான ரூ. 1.205 டிரில்லியனில், இது புறக்கணிக்கத்தக்க தொகை அல்ல. அடுத்த ஆண்டு, காணாமல் போனோர் ஆணையத்திற்காக அரசாங்கம் மேலும் 400 மில்லியன் ரூபாய்களைச் (2.6 மில்லியன் டொலர்கள்) செலவிட்டது.

மொத்தச் செலவினத்தில் ஏறக்குறைய 1 சதவீதம் என்பது ஒரு பெரிய செலவாகத் தெரியவில்லை என்றாலும், 2013 ஆம் ஆண்டில் இலங்கை தனது நீதித்துறைக்கு ரூ 5.4 பில்லியன் மட்டுமே ஒதுக்கியது என்பது குறிப்பிடத்தக்கது. வேறுவார்த்தைகளில் கூறுவதானால், அரசாங்கம் அதன் முழுநீதிமன்ற அமைப்பிற்கும் செலவிட்டதைவிடவும், ஒரு போலியான இடைக்கால நீதிப்பொறிமுறைக்கு மூன்றில் ஒரு பங்கை அதிகமாகச் செலவிட்டுள்ளது. இந்த நிறுவனங்களுக்காக இலங்கை செய்த செலவுகள், தப்பித்து மீண்டு வருவதற்காக பொறுப்புக்கூறல் வழிமுறைகளுக்கு, மற்றைய நாடுகள் செலவிட்டதற்கு இணையாகவே உள்ளன. உதாரணமாக, தென்னாபிரிக்கா 1995 ஆம் ஆண்டு, மிகவும் பாராட்டப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையத்திற்காக $18 மில்லியனை செலவிட்டது. நாட்டின் ஒட்டுமொத்த ஆண்டுச் செலவினமான $28 பில்லியனில் 6 சதவீதத்தை இது பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இதற்கு நேர்மாறாக, இலங்கையின் பொருளாதார அளவை

ஒத்ததாகவும், பட்ஜெட்டைக் கொண்டதாகவும் இருக்கும் கம்போடியா, பத்து வருடக் காலப்பகுதியில் சுமார் 18.6 மில்லியன் டொலர்களை கெமர் ரூஜ் தலைவர்களை வழக்குத் தொடரும் தீர்ப்பாயத்திற்காகச் செலவிட்டுள்ளது.

இந்த நிறுவனங்களை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் அரசியல்ரீதியாகவும் விலைகளைக் கொடுத்தது என்பதும் தெளிவாகத் தெரிந்தது. ராஜபக்சேவின் தேர்தல் உத்தி எப்போதும் அவருக்குரிய சிங்கள - பௌத்த மண்ணின் மைந்தர் என்ற நற்சான்றிதழ்களிலிருந்து தொடங்கும். மேலும் அது, அவரது குடும்பத்தினர் வெளிப்படையாக மேலாதிக்கவாதிகள் என்பதிலும், போர்க்குணமிக்க துறவிகள் அமைப்பான பொதுபலசேனா உட்பட பிற குழுக்களுடனான உறவுகளிலும் தங்கியுள்ளது. சிங்கள - பௌத்த மேலாதிக்கவாதிகள் பொறுப்புக்கூறல் நிறுவனங்களை உருவாக்குவதை கடுமையாக எதிர்த்தனர். LLRC அறிக்கை வெளியிடப்பட்டபோது, அது எவ்வளவு பலவீனமாக இருந்தாலும்கூட, அவர்கள் போர் வீரர்களாகக் கருதியவர்கள்மீது தாக்கம் வருகிறது என்ற அடிப்படையில் எதிர்த்தனர். கடுமையான தேசிய தேசபக்த இயக்கத்தின் பிரதிநிதிகள், ஆணையர்களின் தகுதி குறித்துப் பகிரங்கமாகக் கேள்வி எழுப்பினர். துறவிகள் தலைமையிலான கும்பல்கள் அதை செயற்படுத்துவது குறித்த பட்டறைகளுக்கு இடையூறு விளைவித்தன. ஒரு முக்கிய முன்னாள் ஆதரவாளர், “அரசாங்கம் மனித உரிமை நிறுவனங்களை உருவாக்குவது வெளிநாட்டவர்களின் காலடியில் விழுவது” என்று விவரித்தார். பரவலாகக் கருதப்படும் ஒரு கருத்தை வெளிப்படுத்துவதென்றால், அரசாங்கம் மனித உரிமை நிறுவனங்களை உருவாக்குவதை “வெளிநாட்டவர்களின் காலடியில் விழுவது” என்றும் “(இலங்கையை) பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றப் போராடியவர்களைக் காட்டிக்கொடுப்பது” என்றும் விவரித்தார்.

சர்வதேச மனிதாபிமானச் சட்டமீறல்கள் குறித்து உண்மையான விசாரணை எதுவும் நடத்தப்படாததை, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் கனடா ஆகிய அரசாங்கங்கள் அனைத்தும் எடுத்துக்காட்டின. சர்வதேச சிவில் சமூகத்திடமிருந்து கிடைத்த வரவேற்பு இன்னும் முக்கியமானதாக இருந்தது. மனித உரிமைகள்



Image Source - groundviews.org

கண்காணிப்பகம், “அறிக்கை, அரசாங்கப் படைகளின் மோசமான துஷ்பிரயோகங்களைப் புறக்கணித்ததுடன், நீண்டகாலப் பரிந்துரைகளை மீண்டும் மீண்டும் கொண்டு வந்து, பொறுப்புக்கூறலை மேம்படுத்தத் தவறிவிட்டது.” என்றது. “இலங்கையில் தோல்வியுற்ற உள்நாட்டு வழிமுறைகளின் நீண்டவரிசையில் சமீபத்தில் வந்த புதிய ஒன்று” என்று சர்வதேச மன்னிப்புச் சபை இதை விவரித்தது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்தபோது, ஆணையத்தின் பணிகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டபோது, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி வெளியுறவுச் செயலாளர் நிஷா பிஸ்வால், “நீதி மற்றும் பொறுப்புக்கூறல் பிரச்சினைகள் குறித்து முன்னேற்றம் இல்லாததை” கண்டித்தார். சர்வதேச அழுத்தங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக இலங்கை உருவாக்கிய நிறுவனங்கள், பொறுப்புக்கூறலைக் கோரும் அவர்களைத் திருப்திப்படுத்துவதில் முழுமையாகத் தோல்வியடைந்தன என்பதை இந்த எதிர்வினைகள் காட்டின. மேற்கத்திய நாடுகளிலும் சர்வதேச மனித உரிமைகள் சமூகத்திலும் விமர்சகர்களை மௌனமாக்குவதே இந்த அரைகுறை மனித உரிமை அமைப்புகளை அமைப்பதன் குறிக்கோளாக இருந்ததால்தான், அவை தோல்வியடைந்தன. ஆனால், பின்வரும் அடுத்தபகுதியில் காட்டுவதுபோல், இலங்கையின் நடவடிக்கைகள் மற்றைய இடங்களில் மிகவும் வித்தியாசமாகப் பார்க்கப்பட்டன.

### மூன்றாம் தரப்புப் பார்வையாளர்களுக்காக விளையாட்டு
### பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச அரசியல்

போரின் கடைசிக்கட்டங்களில் முக்கியமான ஆயுதங்களையும் ஆதரவையும் வழங்கிய சீனா, 2009 ஆம் ஆண்டுக்குள் இலங்கையின் மிகப்பெரிய, தனித்த உதவி செய்யும் நன்கொடையாளராக மாறியது. வாக்களித்த மொத்த $2.2 பில்லியனில் $1.2 பில்லியனை அந்த ஆண்டுக்குள்ளேயே வழங்கியது. இலங்கையின் வெளியுறவுச் செயலாளர் பாலித கோஹன்ன, நியூயோர்க் டைம்ஸ¬க்கு அளித்த பேட்டியில் கூறியதுபோல, "இலங்கையின் 'பாரம்பரிய மேற்கத்திய நன்கொடையாளர்கள்' சீனாவின் இத்தகைய நன்கொடையால் ஒரு மூலைக்கு ஒதுக்கப்பட்டனர்". மேற்கத்திய நாடுகளுடனான அதன் இருதரப்பு உறவுகளைப் போலல்லாமல், சீன உதவி மற்றும் உட்கட்டமைப்புக் கடன்கள் எந்தவகை நிர்வாக அல்லது சீர்திருத்த நிபந்தனைகளும் இணைக்கப்படாமல் வந்தன என்று ராஜபக்ச ஆட்சி கருதியது.

கோஹன்ன, "சீனப்பணம் விரும்பத்தக்கது, ஏனெனில் ஆசியர்கள் ஒருவருக்கொருவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று கற்றுக்கொடுக்க மாட்டார்கள்" என்றார். சீனாவை நோக்கிய இலங்கையின் திருப்பம் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான பரந்த பிராந்தியல் போட்டி இயக்கவியலிலும் பங்களித்தது. இந்தியாவுடனான பாரம்பரியமான நெருங்கிய உறவு, போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் விரிசல் அடைந்தது.

மனித உரிமைகளுக்காக இந்தியா வாதிடுவதும், இலங்கைத் தமிழர்களுக்கான சுயாட்சியை அதிகரிப்பதும் இதற்கு ஒரு காரணம். தமிழர் பிரச்சினைகளில் இந்தியாவின் அழுத்தத்திற்கு ராஜபக்சே தனது எதிர்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, தனது சிங்கள - பௌத்த தேசியவாத வாக்காளர்களிடையே ஆதரவைத் திரட்டினார். அதேநேரத்தில், அவர் தனது தெற்கு ஆதரவுத்தளத்தில் பாரிய உட்கட்டமைப்புப் திட்டங்களுக்கு நிதியளிக்க சீனக் கடன்களைப் பயன்படுத்தினார். இதில் அவரது சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் ஒரு விமான நிலையம் மற்றும் ஆழ்கடல் துறைமுகம் என்பன அடங்கும்.

அந்த ஆட்சி சீனாவுடனான உறவை விடாமுயற்சியுடன் வளர்த்துக்கொண்டது. எடுத்துக்காட்டாக, 2010 ஆம் ஆண்டு சீன எதிர்ப்பாளர் லியு சியாபாவோவுக்கான அமைதிக்கான நோபல் பரிசு விழாவை இலங்கை புறக்கணித்தது. 2011 ஆம் ஆண்டில், ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கை வெளிவந்த பிறகு, சீன வெளியுறவு அமைச்சர் இலங்கையின் சார்பாகப் பேசினார்.

இந்த விஷயத்தை உள்நாட்டில் தீர்த்து வைக்கும் இலங்கையின் திறனில் சீனா 'நம்பிக்கை' கொண்டுள்ளது என்றார். 'பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் நடவடிக்கைகளை' எடுப்பதைத் தவிர்க்குமாறு சர்வதேச சமூகத்திடம் சீனா அழைப்புவிடுக்கிறது என்றார்.

சீனாவின் உறுதியான இலங்கைக்கான ஆதரவும், மேற்கத்திய நன்கொடையாளர்களைச் சார்ந்திருப்பது குறைந்து வருவதும், பொறுப்புக்கூறல் அழுத்தத்திலிருந்து இலங்கைக்கு ஓரளவு நிம்மதியைத் தந்தன. போரின் கடைசி மாதங்களில் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் அல்லாத மக்களின் இறப்புகள், பொதுமக்களுக்கு எதிரான வன்முறையாகக் கருதப்பட்டாலும், அதற்கான சர்வதேச எதிர்வினை ஒப்பீட்டளவில் அமைதியாக்கப்பட்டது. இலங்கை LTTE இற்கு எதிரான போராட்டத்தை பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையாக வடிவமைத்ததன் விளைவாக அது இருக்கலாம்.

போருக்குப் பிந்தைய காலத்தில், மேற்கத்திய அரசாங்கங்கள் போர்க்குற்றங்கள் விசாரிக்கப்படாமல் ஏமாற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாதது குறித்து குரல் கொடுத்து வந்தநிலையில், பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் பொறுப்பை அவர்கள் தாங்களாகவே ஏற்கத்தயங்கினர். 2011 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அமெரிக்க வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட் அமெரிக்காவின் நிலைப்பாட்டைக் கோடிட்டுக்காட்டினார்: "இலங்கையர்கள் இந்தப் பிரச்சினைகளைத் தாங்களாகவே எடுத்துக்கொண்டு முழுமையாகத் தீர்வு காண்பது நல்லது என்று நாங்கள் நீண்டகாலமாகச் சொல்லிவருகிறோம்... எனவே அவர்கள் இனி என்ன செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்று பார்ப்போம்."

### கூட்டணியைத் தடுக்கும் ஓர் உத்தி

**பகுதி 3**

மனித உரிமைகள் கவுன்சிலில் எந்த அரசிற்கும் வீட்டோ அதிகாரம் இல்லை. அதன் நாற்பத்தேழு உறுப்பினர்கள் ஐ.நா. பொதுச்சபையால் மூன்று ஆண்டுகாலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மேற்கு ஐரோப்பிய மற்றும் பிற குழுக்கள் ஏழு இடங்களை மட்டுமே கொண்டுள்ளன. இதன்பொருள், எளிய பெரும்பான்மையால் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், அரசுகளின் கூட்டடான ஆதரவைப் பெற்றேயாக வேண்டும் என்பதாகும். இந்த இயக்கவியலைப் பயன்படுத்திக்கொண்டு, ராஜபக்சே ஆட்சி மனித உரிமைகள் கவுன்சில் ஒரு சர்வதேச ஆய்வு அமைப்பை உருவாக்க வலியுறுத்துவதைத் தடுக்க தீவிரப்பிரசாரத்தை மேற்கொண்டது. இலங்கையின் ராஜதந்திரம் மேற்கத்திய நாடுகள் அல்லாத மற்றைய உறுப்பினர்களை இலக்காகக்கொண்டது. பிரசாரம் இரண்டு கூறுகளைக் கொண்டிருந்தது.

முதலாவது அதன் உள்நாட்டு நிறுவனங்களைப்பற்றிப் பெரிதுபடுத்திப் பேசுவது. இரண்டாவது, அப்படிப்பட்டவற்றை விமர்சிப்பதை சட்டவிரோதமானது என்று வகைப்படுத்துவது. இதன்வழியாக மேற்கத்திய நாடுகளின் ஒடுக்குமுறைக்கு எதிராக வளரும் நாடுகளின் உலக ஒற்றுமை தூண்டப்படுகிறது. இந்த இரண்டு உத்திகளும் இலங்கையை ஆதரிப்பதற்கான காரணத்தையும், மனித உரிமைகள் கவுன்சிலில் சகநாடுகளுக்கு ஆதரவையும் வழங்க, இணைந்து செயற்பட்டன.

### உள்நாட்டுவழிமுறைகள்

உள்நாட்டு அணுகுமுறையின் முக்கியத்துவம், முக்கியமாக LLRC இனை நோக்கியே இருந்தது. இலங்கையின் தூதுக்குழுவின் தலைவர் மனித உரிமைகள் கவுன்சிலின் 2011 செப்டம்பர் மாத அமர்வில் உரையாற்றுகையில், LLRC உறுப்பினர்கள் 'மிகவும் கருத்தில்கொள்ளத்தக்க நிபுணர்கள்' என்று வலியுறுத்தினார்: "அவர்களின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைக்க அவர்களுக்கு நேரமும் இடமும் வழங்கப்பட வேண்டும்." 2012 மார்ச்சிலும் அமைச்சர்கள்மட்டக் கூட்டம் ஒன்றிலும் அவர் இதை எதிரொலித்தார்: "இலங்கை தனது அனைத்து மக்களுக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் பயனளிக்கும் ஒரு உள்நாட்டு நல்லிணக்க செயல்முறையை வெற்றிகரமாக நிறைவேற்றச் சிறப்பான நிலையில் உள்ளது." இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் உருவாக்கத்தைப் பற்றியும் அவர் எடுத்துரைத்தார். "அறிக்கை வெளியிடப்பட்ட இரண்டு மாதங்களுக்குப்பிறகு, (LLRC) பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இலங்கை தெளிவான மற்றும் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது" என்றார்.

2013 ஆம் ஆண்டில், இலங்கை மீண்டும் மனித உரிமைகள் கவுன்சில் முன்னால் வந்தபோது, அதன்பிரதிநிதிகள், 'உள்நாட்டில் வளர்க்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறை' பொறுப்புக்கூறல் பற்றியவைகளை பூர்த்திசெய்யப் போதுமானது எனத் தொடர்ந்து வலியுறுத்தினர். 'ஏதோ ஒருவகையில் குறையுடையவை' என்று கூறி, "நடந்துகொண்டிருக்கும் உள்நாட்டுப் பொறிமுறைகளை குறைத்து மதிப்பிட்டு, மதிப்பிழக்கச் செய்யும்" நடவடிக்கை கவுன்சிலின் தீர்மானம் என்று சவால்விட்டனர்.

2013 ஆகஸ்டில் தனது நாட்டுப் பயணம் குறித்த நவிபிள்ளையின் விமர்சன அறிக்கையைத் தொடர்ந்து, ஜெனீவாவிற்கான இலங்கைத்தூதர் மனித உரிமைகள் கவுன்சிலிடம் பின்வருமாறு கூறினார்: "பொறுப்புக்கூறலை நிவர்த்தி செய்வதற்கான பல வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுச் செயற்பாட்டில் உள்ளன." அவர் குறிப்பாகச் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட காணாமல் போனோர் ஆணையத்தைப்பற்றியும் குறிப்பிட்டார். "காணாமல் போனவர்கள் தொடர்பான அனைத்து வழக்குகளும் விரிவாக விசாரிக்கப்படுகின்றன" என்றார். 2014 மார்ச் மாத அமர்வுக்கு முன்னதாக, உயர் ஸ்தானிகரின் அறிக்கைக்கு, இலங்கை ஒரு நீண்ட எழுத்துபூர்வ பதிலை வெளியிட்டது. LLRC, இராணுவ விசாரணை நீதிமன்றம் மற்றும் காணாமல் போனோர் ஆணையத்தின் பணிகளை வலியுறுத்துவதோடு மட்டுமல்லாமல், 2006 ஆம் ஆண்டு நடந்த இரண்டு படுகொலைகள் மீதான விசாரணைகளையும் நடத்துவதாக அவர் எடுத்துக்காட்டினார்.

### மேற்கத்திய நாடுகளை விமர்சித்தல்

மேற்கத்திய நாடுகளின் பொறுப்புக்கூறல் பற்றிய அழுத்தத்தை 'சூனியக்காரிகளின் வேட்டை' போன்றது என்று கடுமையாக விமர்சிப்பதன்மூலம், இலங்கை தனது உள்நாட்டுப் பொறிமுறைகளை முன்னிலைப்படுத்த எடுக்கும் வழக்கமான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. நிபுணர்கள்குழு அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச விசாரணைக்கு

பிள்ளை அழைப்புவிடுத்தபோது, 2011 ஆம் ஆண்டளவில், இப்படிப்பட்ட இலங்கையின் தந்திரம் தொடங்கியது. ஜெனீவாவிற்கான இலங்கைத்தூதர் செனவிரத்ன உடனடியாக நவிபிள்ளையைக் கண்டித்தார்.

அதன்பிறகு சிறிது நேரத்திலேயே, செனவிரத்னவின் வாரிசான தமரா குணநாயகம், அம்னஸ்டி இன்டர்நேஷனல் மற்றும் பிறவக்காலத்து அமைப்புகளைப்பற்றிக் கூறினார். "எல்.எல்.ஆர். சி.யின் சட்டபூர்வமானதன்மையைக் கேள்விக்குட்படுத்துபவர்களின் உண்மையான நோக்கம், அரசின் இறையாண்மையின் கொள்கையை குறைத்து மதிப்பிடுவதாகும் என்பது தெளிவாகிறது." என்றார்.

2012 ஆம் ஆண்டில், தீர்மானம் குறித்த விவாதங்கள் நடந்து கொண்டிருக்கும்போது, "ஒரு சுதந்திர நாட்டின் மக்களின் நலன்களுக்காகச் செயற்பட அதன் தனிச்சிறப்பை விட்டுக்கொடுக்க அனுமதிப்பீர்களா?" என்று மனித உரிமைகள் கவுன்சில் உறுப்பினர்களிடம் இலங்கைக்குழுவின் தலைவர் கேட்டார். இலங்கையின் இராஜதந்திரிகள், தங்கள் சகநாடுகளுக்கு அடுத்ததாக இருக்க முடியும் என்று வலியுறுத்தினர். 2013 இல், "இன்று அது இலங்கை" என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க எச்சரித்தார். "நாளை, இந்தச்சபையில் உள்ள வேறு எந்தநாடாகவும் இருக்கலாம்" என்று பிறநாடுகளையும் துணைக்குக் கூப்பிட்டார். 2013 ஆம் ஆண்டு மனித உரிமைகள் கவுன்சில் வரைவுத் தீர்மானத்தை விவாதித்தபோது, இலங்கையின் தூதர் இது "அனைத்து வளரும் நாடுகளிலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்" என்று எச்சரித்தார். 2014 ஆம் ஆண்டிலும் இந்த எச்சரிக்கையை அவர் மீண்டும் வலியுறுத்தினார். மேலும் சர்வதேச விசாரணையை நியமிக்கும் திட்டமானது "இயல்பாக ஊடுருவும்தன்மை கொண்டது மற்றும் இலங்கை மக்களின் இறையாண்மையையும் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டையும் மீறுவதாகும்" என்றார்.

இலங்கை அத்துடன் நின்றுவிடவில்லை. இந்தச் சொல்லாட்சியை ஜெனீவாவிற்கு அப்பாலும் முன்னெடுத்தது. நியூயோர்க்கில் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி ராஜபக்ச, சர்வதேச அரங்கில் 'வளர்ந்துவரும் போக்கின்' ஒரு பகுதியாக இலங்கையின் மீதான 'இடைவிடாத துரத்தலை' பற்றிக் கண்டனம் செய்தார். "வளரும் நாடுகளின் உள்விடயங்களில், பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளின் பாதுகாவலர்கள் என்ற போர்வையில்" இது நடக்கின்றது என்றார். 2014 மார்ச் மாதத்து மனித உரிமைகள் கவுன்சில் அமர்வு நெருங்கி வரும்போது, துணைசஹாரா ஆபிரிக்க உறுப்பினர்களை நேரில் சந்தித்த ராஜபக்ச, 'நவஏகாதிபத்திய மனித உரிமைகள் அழுத்தங்களுக்கு எதிராக உலக ஒற்றுமையை வளர்க்க' அழைப்புவிடுத்தார். ஊடக அறிக்கையில், சர்வதேச விசாரணைக்கான மேற்கத்திய நாடுகளின் கோரிக்கைகளை 'கொடுமைப்படுத்துதல்' என்று குறிப்பாக வகைப்படுத்தினார். அது 'மல்யுத்த வீரர் ஒரு பள்ளி மாணவனுக்கு எதிராக விளையாடுவது போல' என்றார்.

### இந்த உத்தியின் வெற்றி (மற்றும் அதன் எல்லைகள்)

2012 மற்றும் 2013 இரண்டு ஆண்டுகளிலும், இலங்கையினால் ஒரு சர்வதேச விசாரணையைத் தடுக்க முடிந்தது. 2012 மார்ச் மாதத்தில் மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தொடருக்கான பணிகளை மேற்கொள்வதற்காக, அந்தநேரத்தில் LLRC அறிக்கை வெளியிடப்பட்டது. அமர்வுக்கு முன்னதாக வந்து விழுந்த இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் அறிவிப்பும் மற்றொன்றாக இருந்தது. 2013 ஆம் ஆண்டு விசாரணை நீதிமன்றத்தைப் பற்றி விவாதித்த இலங்கையின் சிவில் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர், "இது சில சர்வதேச செயற்பாட்டாளர்களின் கண்களை மூடிமறைக்கும் முயற்சியாக இருந்தாலும், பொறுப்புக்கூறலைக் கோருபவர்களுக்கான இலக்காக இல்லை" என்று ஒப்புக்கொண்டார். மாறாக, இன்னும் முடிவெடுக்காத மனித உரிமைகள் கவுன்சில் உறுப்பினர்கள் சிலரை அது இலக்கு வைத்தது. இலங்கை, 2012 மார்ச் மாதக் கூட்டத்தொடருக்கு முன்னதாக, இந்த அரசுகளில் சிலவற்றைத் 'தேர்ந்தெடுக்க' முடிந்தால், அது மனித உரிமைகள் அவைத் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தும்.

இலங்கையின் இராஜதந்திரிகள் அதன் உள்நாட்டு வழிமுறைகளைப்பற்றிப் பேசுவதாலும், மேற்கத்திய அழுத்தங்களுக்குச் சவால் விடுப்பதாலும், மனித உரிமைகள் கவுன்சிலின் பெரும்பான்மையினர் வெளிநாட்டுக்குழு ஒன்று விசாரணையை மேற்கொள்ள விரும்பவில்லை. 'ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாத கொள்கையை' இந்தியா கடைப்பிடிக்கும் என்ற அறிவிப்பு அத்தோடு வந்ததும், இதற்கு உதவியாக இருந்தது. புலம்பெயர்ந்த தமிழ் ஆர்வலரின் வார்த்தைகளில் சொன்னால், இலங்கைப்

பிரச்சினைகளில் "எப்படிப் பதிலளிக்க வேண்டும் என்பதற்கான சமிக்ஞையாக மற்ற நாடுகள் இந்தியாவை எதிர்நோக்குகின்றன".

ஐ.நா. வழங்கும் எந்தவொரு 'ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவி' குறித்தும் இலங்கைக்கு இறுதி முடிவை வழங்கும்வகையில் வாய்மொழித் திருத்தம் இருந்தபோதிலும், ராஜபக்ச ஆட்சி நீர்த்துப்போன தீர்மானத்தை நிறைவேற்றுவதில் தொடர்ந்தும் போராடியது. அது நிறைவேற்றப்பட்டிருந்தபோதிலும், மனித உரிமைகள் கவுன்சிலில் நடந்த பொதுவிவாதங்கள், 'உள்நாட்டு முறைகள் மற்றும் மேற்கத்திய தலையீடு' பற்றிய கதைகள் எவ்வளவு ஆழமாக ஊடுருவியுள்ளன என்பதை வெளிப்படுத்தின. 2012 ஆம் ஆண்டில் 'வேண்டாம்' என்று வழங்கப்பட்ட வாக்குகளுக்கான விளக்கத்தில், "வளரும் நாடுகளின் உள்நாட்டு வழிமுறைகளுக்கு சர்வதேச வழிமுறைகள் முன்னுரிமை அளிக்க வேண்டும்" என்று சொல்லப்பட்டது (உகாண்டா, இந்தோனேசியா). "இலங்கையின் உள்நாட்டுச் செயல்முறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்" என்றது தாய்லாந்து. "இலங்கைக்கு LLRC இனைச் செயற்படுத்த அதிகநேரமும் இடமும் வழங்கப்பட வேண்டும்" என்றும் பலர் (மாலத்தீவுகள், கிர்கிஸ்தான்) வாதிட்டனர். அந்தத் தீர்மானம் "தற்போது நடைபெற்று வரும் தேசிய முயற்சிகளைக் குறைத்து மதிப்பிடுகிறது; அது அபாயத்தை ஏற்படுத்தும்" என்று எதிராக வாக்களிப்பவர்களின் சார்பாக கியூபா வாதிட்டது. மற்றவர்கள், சர்வதேச சமூகத்தின் 'பக்கச் சார்புடைய அணுகுமுறையை' விமர்சித்தனர் (ஈக்வடார், பங்களாதேஷ்).

2013 மார்ச் மாத விவாதத்தின்போதும், இதேபோன்ற நடைமுறைப்போக்கு நிலவியது. இன்னும் ஒருமுறை, கடைசிநேரத்தில் தீர்மானத்தின் மொழிதல் பலவீனப்படுத்தப்பட்டது. ஆகவே அது இலங்கையை நடவடிக்கை எடுக்க 'ஊக்குவிக்கிறது'. மீண்டும் ஒருமுறை, 'வேண்டாம்' என்ற வாக்குகள் 'நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டு நல்லிணக்கச் செயல்முறையையே' வலியுறுத்தின. மேற்கத்திய நாடுகளின் பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கைகளின் 'பக்கச் சார்புடைய' தன்மையை இன்னும் ஒருமுறை விமர்சித்தனர் (வெனிசுலா, பெலாரஸ்) . உயர் ஸ்தானிகர் நவிபிள்ளை தனது இலங்கைப் பயண அறிக்கையை முறையாக வழங்கியதைத் தொடர்ந்து 2014 மார்ச் மாத விவாதத்தில், 'உள்நாட்டு முறைகள் மற்றும் மேற்கத்தியச்சார்பு' என்ற இலங்கையின் சொல்லாட்சியை பல உறுப்புநாடுகள் கிளிப்பிள்ளைகள்போலத் திருப்பிச் சொல்லின. நவிபிள்ளையின் 'பாரபட்சமான அணுகுமுறை' (பாகிஸ்தான்) மற்றும் இந்த செயல்முறையின் 'அரசியல் மயமாக்கல்' (வெனிசுலா) ஆகியவற்றைப் பலர் விமர்சித்தனர். நவிபிள்ளை கோரிய 'சர்வதேச விசாரணை என்பது உள்நாட்டுச் செயல்முறையை குறைவுபடுத்தும்' என்ற கவலையை வெளிப்படுத்தினர் (நமீபியா, இந்தியா, இந்தோனேசியா) . வளரும் உலக ஒற்றுமைக்கு அழைப்புவிடுத்த ஜனாதிபதி ராஜபக்சவின் இராஜதந்திர தாக்குதலைத் தொடர்ந்து, குறைந்தபட்சம் இரண்டு ஆபிரிக்க நாடுகளாவது 'சர்வதேச விசாரணையைக் கட்டாயமாக்கும்' தீர்மானத்தை ஆதரிக்கும் தங்கள் எண்ணங்களைக் கைவிட்டன.

ஆனால் இலங்கையின் அதிர்ஷ்டம் தொடரவில்லை. 2014 மார்ச் மாதம் 27 ஆம் நாள், நாற்பத்தேழுக்கு, இருபத்தி மூன்று வாக்குகள் ஆதரவாகப்பெற்ற நிலையில், மனித உரிமைகள் கவுன்சில் 25/1 தீர்மானத்தை நிறைவேற்றியது. மனித உரிமைகள் மீறல்கள், அத்துமீறல்கள் மற்றும் தொடர்புடைய குற்றங்கள் குறித்து உயர் ஸ்தானிகர் 'ஒரு விரிவான விசாரணையை மேற்கொள்ள வேண்டும்' என்று அது கோரியது.

இந்தத் தீர்மானம் இலங்கைக்கு ஓர் இழப்பாக இருந்தது. ஆனாலும் ராஜபக்ச அரசாங்கம் வெற்றிகரமாக அதைத் தாமதப்படுத்தியுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு (கட்டுரை எழுதப்படும் வரையில்) போருக்குப் பிந்தைய நீதி வழங்கல் மீதான எந்தவொரு சர்வதேச நடவடிக்கையும் எடுக்கப்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. வலுவான சர்வதேசத்துக்கு வழங்கவேண்டிய பதிலையும் அது தடுத்தது. ஒரு தமிழ் ஆர்வலர் புலம்பியதுபோல, 'சர்வதேச சமூகத்தின் உறுப்பினர்களை நேர்மையற்ற உள்நாட்டு தீர்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கச் செய்யும் இந்த ஆட்சியின்திறன், காலத்தைக் கடத்தும் நடவடிக்கையில்' மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது.

விசாரணை பட்டியலிடப்பட்டாலும், அது தாமதப்படுத்தப்பட்டதானது, சாட்சியங்களை அழிக்கவும், பாரிய மக்கள் புதைகுழிகளை புல்டோசர் கொண்டு அழிக்கவும், சாட்சிகளை மிரட்டவும், காணாமல்போகச் செய்யவும், அரசுக்கு அவகாசம் அளித்தது. குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளை, இராஜதந்திர விலக்கு அளிக்கும் தூதர் பதவிகளுக்கு இலங்கை அரசு நியமிக்கவும் செய்தது.

மனித உரிமைகள் கவுன்சிலில் சலனமற்று இருக்கும் நாடுகளின் பிரதிநிதிகளை ஈர்க்கச் செய்வதில் இந்த உத்தியின் வெற்றி தங்கியிருந்தது. இலங்கையின் வார்த்தைகளையே கிளிப்பிள்ளைபோலப் பேசும் சில நாடுகளின் வாக்குகள் எப்போதும் 'இல்லை' என்பதாகவே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவற்றில் பல, ஊசலாடும் நிலையில் இருந்தன என்பது தெளிவாகிறது. உதாரணமாக, இந்தோனேசியா 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளின் தீர்மானங்களுக்கு எதிராக வாக்களித்து, இலங்கைக்கு ஆதரவாக இருந்தது. ஆனால் 2014 இல் வாக்களிக்கவில்லை. அதேபோல், 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் 'இல்லை' என்ற போட்ஸ்வானா, 2014 இல் 'ஆம்' என்றது. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 'ஆம்' என்று வாக்களித்த உருகுவே, மெக்சிகோ மற்றும் நைஜீரியா ஆகியன மேற்கத்திய நாடுகளால் விரும்பப்படும் வலுவான மொழியை ஆதரிக்காது என்பதை வெளிப்படையாகக்கூறின. இலங்கை அமைத்துள்ள உள்நாட்டு வழிமுறைகளின் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்தினர். மேற்கத்திய நாடுகளின் வலுவான நடவடிக்கைக்கான அழுத்தத்தில், அதன் பல சகநாடுகள் இணைவதை இலங்கையால் தடுக்க முடிந்திருந்தது. மேலும் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பலவீனமான தீர்மானங்களுக்கு எதிராக வாக்களிக்க அவர்களில் சிலரை நம்ப வைப்பதும் இயலுமாயிருந்தது.

## மாற்று விளக்கங்களைக் கருத்தில் கொள்ளுதல்

பொறுப்புக்கூறல் பற்றிய அழுத்தத்திற்குப் பதிலளிக்கும் விதமாக இலங்கை அரைகுறை அளவிலான நிறுவனங்களை உருவாக்கியது. இது மனித உரிமை மீறல்களை உதாசீனப்படுத்தும் மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும் என்று நான் வாதிடுகிறேன். ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் அரச குற்றங்கள் மீதான சர்வதேச விசாரணையை உருவாக்க ஒரு கூட்டணியை உருவாக்குவதைச் சீர்குலைக்கவும் இது உதவியது. ஆனால் இலங்கை பயன்படுத்தும் இந்த வகையான அரைகுறை நடவடிக்கைகளுக்கு, குறைந்தது இரண்டு நம்பத்தகுந்த விளக்கங்கள் உள்ளன. இந்த நிறுவனங்களின் உருவாக்கம், குறிப்பிட்ட வகையான பொறுப்புக்கூறல் நிறுவனங்களுக்கான உள்நாட்டுத் தேவையால் உந்தப்பட்டது. இது நல்லெண்ணத்தின் ஒரு பகுதி. ஆனால் சர்வதேசக் கோரிக்கைகளுக்கு இணங்க, போதுமான முயற்சி இல்லாதது என்பது குறிப்பிடத்தக்கது. கிடைக்கக்கூடிய சான்றுகள் இரண்டு விளக்கங்களுக்கும் எதிராகவே பெரிதும் இருக்கின்றன என்று நான் வாதிடுகிறேன்.

## பொறுப்புக்கூறலின் உள்நாட்டு அரசியல்

இலங்கையின் உள்நாட்டு அரசியல், மூன்று காரணங்களுக்காக எந்தவொரு பொறுப்புக்கூறல் பொறிமுறையையும் உருவாக்குவதற்கு எதிராகத் தெளிவாகப் போராடியது. ராஜபக்சே ஆட்சியின் முக்கிய தேர்தல் தொகுதியினரான சிங்கள - பௌத்த வாக்காளர்கள், போர்க்குற்றங்களை ஒப்புக்கொள்வதையோ அல்லது விசாரணை செய்வதையோ எதிர்த்தனர். இரண்டாவதாக, அட்டூழியங்கள் நடத்தியதாகக் கூறப்படும் குற்றவாளிகள் அதிகாரத்தில் இருந்தனர். மூன்றாவதாக, மனித உரிமைகள் பரவலாகவும் முறையாகவும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகத் தொடர்ந்தும் செய்திகள் வந்தன. இதன்விளைவு, நான் கீழே கோடிட்டுக் காட்டியுள்ளபடி, பொறுப்புக்கூறலுக்காக அழுத்தம் கொடுக்கும் உள்நாட்டு வாக்காளர்கள் யாரும் இல்லை என்பது மட்டுமல்ல; ஆட்சியின் அரைகுறை நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கு ஒரு நுட்பமான சமநிலைச் செயலும் தேவைப்பட்டது. அதிகாரத்தின் மீதான அதன்பிடியை ஆபத்தில் ஆழ்த்துவதைத் தவிர்ப்பதற்கு இது உதவியது.

போர் முடிவடைந்து வெறும் ஆறு மாதங்களுக்குப் பிறகு, ராஜபக்ச திட்டமிட்டதைவிட சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார். போரில் பெற்ற வெற்றியின் பலத்தால் எளிதில் வெற்றி பெற்றார். சிங்கள - பௌத்தர்களுடைய தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் கிட்டத்தட்ட 80 சதவீத வாக்குகளைப் பெற்றார். இராணுவ வெற்றியைப் பயங்கரவாதத்தின் தோல்வியாக மட்டுமல்லாமல், சிங்கள - பௌத்த மேலாதிக்கச் சித்தாந்தத்தின் நிரூபணமாகவும் அவர்கள் புரிந்துகொண்டனர். LTTE ஒரு வெளிப்புற ஊடுருவலாகவே கருதப்பட்டது. 'வடக்கிலிருந்து வரும் படையெடுப்பாளர்கள்' என்ற போர்க்குணமிக்க பௌத்தச் சொல்லாட்சி அதற்குப் பயன்பட்டது. எனவே போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்கள், நீதிபெறத் தகுதியான இலங்கை அரசின் சட்டப்பூர்வமான குடிமக்கள் அல்ல; வடக்கிலிருந்து வந்த தோற்கடிக்கப்பட்ட எதிரிகள் ஆனார்கள். உயிரிழப்பு இல்லாத வகையில் பொதுமக்கள் நடத்தப்பட்டார்கள் என்ற அதிகாரபூர்வப் பிரசாரக்கருத்தை பெரும்பாலான சிங்களவர்கள் ஏற்றுக்கொண்டனர். இந்தக் கூற்றின்

அபத்தத்தைக் குறிப்பிட்டவர்கள், சில பொதுமக்கள் இறந்ததாக ஒப்புக்கொண்டனர்; ஆனால் எந்தவொரு மரணமும் 'நியாயமானது' என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

2013 ஆம் ஆண்டில் ஒரு தமிழ் ஆர்வலர் கூறியதுபோல், "இராணுவத்தை நோக்கி விரலை நீட்டுவது விருப்பமானதாக இருக்கவில்லை; சிங்களவர்களால் அது தேசபக்தியற்றதாகக் கருதப்படும்." 2010 தேர்தலில், எதிர்க்கட்சி வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகா, ஜனாதிபதியின் சகோதரரான பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவே போர்க்குற்றங்களுக்கு உத்தரவிட்டதாக பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். அது வியக்கத்தக்கவகையில் பின்விளைவை ஏற்படுத்தியது. தெற்கில் உள்ள சிங்கள - பௌத்தர்களில் பலர் சரத்பொன்சேகாவைத் தனது சொந்த மக்களை விற்றுவிட்ட ஒரு துரோகியாகக் கருதினர். ஜனாதிபதி ராஜபக்ச இப்படியாகத் தான் கருதப்படுவதிலிருந்து தவிர்ப்பதில் கவனமாக இருந்தார். "நாங்கள் உங்களைக் காட்டிக்கொடுக்க மாட்டோம்" என்று இராணுவத்திற்கு மீண்டும் மீண்டும் உறுதியளித்தார்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, ராஜபக்சேவின் LLRC மற்றும் பிறநிறுவனங்களின் உருவாக்கம் அவரது சொந்த ஆதரவுத்தளத்திலிருந்தே குறிப்பிடத்தக்க எதிர்ப்பைச் சந்தித்தது. 2014 மனித உரிமைகள் கவுன்சில் தீர்மானத்தைத் தொடர்ந்து, காணாமல் போனோர் ஆணையத்தின் அதிகாரத்தை ராஜபக்ச விரிவுபடுத்தியபோது எதிர்க்கட்சிகள் விரைவாகத் தாக்கத்தொடங்கின. "படையினரைக் காட்டிக்கொடுப்பதற்குப் பதிலாகவ்மின்சார நாற்காலியில் உட்காருவேன் என்று பெருமையாகக் கூறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, இப்போது ஏன் தலைகீழாக மாறிவிட்டார்?" என்று பொதுமக்களிடம் சொல்ல வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கோரியது.

துருப்புகளுக்கு விசுவாசமாக இருப்பதன் அரசியல் முக்கியத்துவம், சிங்கள மக்கள் உணர்வை மட்டுமல்ல, போருக்குப் பிந்தைய காலத்தில் பாதுகாப்பு அமைப்பின் அதிகரித்த சக்தியையும் பிரதிபலித்தது. 2009 ஆண்டுகளில், இராணுவம் ஒரு பெரிய அமைப்பாக இருந்தது. 1983 இல் போரில் நுழைந்த முப்பத்தைந்தாயிரம் பேரை உடைய படையைவிட நூறு மடங்கு பெரியது. முன்னாள் உயர்மட்டத் தளபதி ஒருவர் எச்சரித்ததுபோல, "இவ்வளவு பெரிய படை சமாதான காலத்திற்கு மாறுவதைக் கடினமாக்கியது".

போருக்குப் பிந்தைய இலங்கையில், இப்படி நடந்துவிட்ட இராணுவத்தின் விரிவாக்கம் உள்நாட்டு சிவில் சமூகத்தின் மீதான கொடூரமான ஒடுக்குமுறையுடன் சேர்ந்துகொண்டது. ஒருவர் பத்திரிகையாளராக இருப்பதற்கு, உலகின் மிகவும் ஆபத்தான இடங்களில் இலங்கையும் ஒன்று என மாறியது. இலங்கை அரசு ஊழியர்கள் 'துரோகிகள்', 'பயங்கரவாதிகள்' அல்லது 'வெளிநாட்டு சக்திகளுக்கான ஏமாற்றுக்காரர்கள்' என்று முத்திரை குத்தப்பட்டனர். ஐ.நா. மற்றும் சர்வதேசத்திற்கு, மனித உரிமைகள் தொடர்பான தகவல்களை வழங்கியதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களை விசாரிக்க, காவல்துறையின் ஒரு சிறப்புப்பிரிவை அரசு உருவாக்கியுள்ளதாக வதந்திகள் பரவின. இதன்விளைவாகப் பொறுப்புக்கூறலுக்கான உள்நாட்டுச் செயற்பாடு என்ற வாதம் கிட்டத்தட்ட முற்றிலும் இல்லாமல் போனது. சிவில் சமூக மற்றும் அமைதிக்குழுக்கள்கூட "பேசாமல் விலகிநிற்பது நல்லது" என்று கூறின.

தேசியவாத மற்றும் இராணுவவாத உணர்வுகளின் எழுச்சி, விமர்சனக்குரல்களை அடக்குதல் ஆகியவற்றுடன், சிங்கள மக்களும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளும் பொறுப்புக்கூறலுக்கு எதிராகக் கடுமையாக விரோதமாக இருந்தனர். ராஜபக்சவின் தேர்தல் உத்தி, வெற்றிபெற்ற இராணுவத்துடனான அவரது நெருங்கிய தொடர்புகளை நம்பியிருந்தது. அதனால் உயர்மட்ட அதிகாரிகள் சர்வதேசக் குற்றங்களில் ஈடுபடாவிட்டாலும், பொறுப்புக்கூறலைப் பின்தொடர்வது அரசியல்ரீதியாக ஆபத்தானதாக இருந்திருக்கும். "ஆட்சிமாற்றம் ஏற்பட்டாலும்கூட, எதிர்கால நிர்வாகம் இராணுவத்துடனான உறவுகளை ஆபத்தில் ஆழ்த்தத் தயங்கும்" என்று 2013 இல் ஒரு சிவில் சமூகத்தலைவர் வாதிட்டார். ஆனால் மூத்த அரசாங்க அதிகாரிகளே போர்க்குற்றங்கள் மற்றும் தொடர்ச்சியான துஷ்பிரயோகங்களுக்கு உடந்தையாக இருப்பதாகக் கூறப்படுவது நீதிக்கான சாத்தியத்தை இன்னும் சிக்கலாக்கியது. ராஜபக்ச ஆட்சி பொறுப்புக்கூறலில் பின்வாங்காது என்று கணித்த மற்றொரு ஆர்வலர், 2013 ஆம் ஆண்டில், "அவர்கள் தேற்கவேண்டும்" என்று மாற்றிச் செல்லும் நிலைக்கு ஆளானார்.

## போதாத நன்நம்பிக்கை முயற்சிகள்

போதுமான அளவு இடைக்கால நீதி நிறுவனங்கள் இல்லாததை உள்நாட்டு அரசியல் கோரிக்கையால் விளக்க முடியாத இடங்களில், அவற்றின்

குறைந்ததிறன் காரணமாக, தோல்வியடையும் சர்வதேசத்தரங்களை பூர்த்தி செய்வதற்கான உண்மையான முயற்சிகளையும் பிரதிபலிக்கக்கூடும். ஆனால் இந்த விளக்கம், இலங்கையின் நடத்தையையும் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. இது, ராஜபக்ச ஆட்சி, பொறுப்புக்கூறலை வழங்குவதற்கு நல்லெண்ண முயற்சியை மேற்கொள்ளவில்லை என்பதைத் தெளிவாகக்காட்டியது. அது, போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை தொடர்ந்து மறுத்தது. நீதிக்கான சர்வதேசக் கோரிக்கைகளை நிராகரித்தது. இந்தப்பிரசாரம், போர் முடிந்த உடனேயே சிலவாரங்களில் தொடங்கிவிட்டது. அப்போது ஜனாதிபதி, 'டைம்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், போர்க்குற்றக் குற்றச்சாட்டுகளை 'பிரசாரம்' என்று வகைப்படுத்தினார். சிலமாதங்களுக்குப் பிறகு, அரசாங்க அமைச்சர் ஒருவர், நீதிக்குப் புறம்பான மரணங்கள் குறித்த ஐ.நா. சிறப்பு அறிக்கை வழங்கியவரை "இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான பயங்கரவாத ஊடக பிரசாரத்தின் மையத்தில்" இருப்பதாகக் குற்றம் சாட்டினார்.

சர்வதேச அழுத்தம் அதிகரித்ததால் இந்த நடத்தை மேலும் தீவிரமடைந்தது. ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டபோது, அரசாங்கம் அதற்குப் பங்களித்ததாக சந்தேகிக்கப்படும் சிவில் சமூக உறுப்பினர்களைக் கடுமையாகச் சாடியது. ஆட்சி மாற்றத்திற்கான மறைமுக முயற்சிகள் செய்கிறார்கள் என்று அவர்கள்மீது குற்றம் சாட்டியது.

2013 ஆம் ஆண்டளவில், அரசாங்கம் பொறுப்புக்கூறல் அழுத்தத்திற்குப் பதிலளிக்கும்விதமாக வழக்கம்போல அடம்பிடிக்கும் குழந்தைப்பிள்ளைத்தனமாக பொதுவெளியில் குளறத் தொடங்கியது. நவிபிள்ளை நாட்டுக்கு வந்தபோது, அரசாங்கம் அவரைது மதிப்பைக் குறைக்கும் பிரசாரத்தைத் தொடங்கியது. அவரது வருகையில் ஈடுபட்ட ஓர் ஆர்வலர் அதை "ஒருங்கிணைந்த, முன்கூட்டியே திட்டமிடப்பட்ட, வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் உத்தி" என்று விவரித்தார். அவரை 'அவமானப்படுத்தவும் இழிவுபடுத்தவும்' இது நடத்தப்பட்டது என்றார். அந்த ஆண்டின் பிற்பகுதியில், பொதுநலவாய அரசாங்கத் தலைவர்கள் மாநாட்டைச் சுற்றியுள்ள அழுத்தங்களுக்கு, அரசாங்கம் அதே அளவு கடுமையாகப் பதிலளித்தது. "நாங்கள் ஓர் இறையாண்மை கொண்ட நாட்டவர்கள். யாராவது இலங்கையிடம் கோரிக்கை வைக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று தகவல் தொடர்பு அமைச்சர் கோபமான வார்த்தைகளில் சொன்னார். மேலும் 2014 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி வெளியுறவுச் செயலாளர் "பொறுமை குறைந்து வருகிறது" என்று எச்சரித்தார். அப்போது, இலங்கை அரசாங்கம் ஆவேசமாகப் பதிலளித்தது. "சர்வதேச சமூகம் நமது ஜனாதிபதியைத் தூக்கிலிட அடித்தளம் அமைத்ததாகக்" குற்றம் சாட்டியது. உலகளாவிய பெண்கள் மாநாட்டுக்கு வரவிருந்த அமெரிக்கத் தூதருக்கு பழிவாங்கும் விதமாக விசாவை மறுத்தது.

இந்த நடவடிக்கைகள், இலங்கை நீதிக்கான கோரிக்கைகளை தீவிரமாக எதிர்த்தது என்பதைக் குறிக்கிறது. இலங்கை அரைகுறை மனித உரிமை நடவடிக்கைக்கான நிறுவனங்களை உருவாக்குவது நேர்மையற்றது என்பதை பொறுப்புக்கூறலைக் கோரும் சர்வதேச நிறுவனங்கள் புரிந்து வைத்திருந்தன. LLRC அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து, ஐ.நா. நிபுணர் குழு, அந்த துரதிர்ஷ்டவசமான மாதங்களில் உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கண்டறியும் (இலங்கையின்) அக்கறையைப்பற்றிக் கடுமையான சந்தேகத்தை எழுப்பியது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த முழுநடவடிக்கையையும் "காலத்தைக் கடத்தும் விளையாட்டு" என்று நிராகரித்தது.

சர்வதேச நெருக்கடிக்குழு இது "அரசாங்கத்தை விடுவிப்பதற்கும்" மற்றும் "சர்வதேச சட்டத்தின் நன்கு நிறுவப்பட்ட கொள்கைகளை மாற்றுவதற்குமான (திசைதிருப்பிவிடுவற்குமான) ஒரு முயற்சி" என்று கண்டனம் செய்தது. சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள், இராணுவ விசாரணை நீதிமன்றத்தைப் பற்றியும் இதேபோலவே கூறின. "உண்மையான சர்வதேச விசாரணைக்கான உலகளாவிய உந்துதலைத் தடுக்கும் ஒரு வெளிப்படையான சூழ்ச்சி இது" என்றன. "காணாமல் போனோருக்கான ஆணையம் என்பது சர்வதேசச் சமூகத்திற்கு எலும்புத்துண்டுகளை வீசுதல்" என்றன. 2014 ஆம் ஆண்டில், மனித உரிமைகள் கவுன்சில் தீர்மானத்தால் பணிக்கப்பட்ட புலனாய்வாளர்களை உள்ளே அனுமதிக்க மாட்டோம் என்று இலங்கை அறிவித்தது. அப்போது நாட்டிற்குள் பதினாறு தமிழ்ப்புலம்பெயர் அமைப்புகளையும் நானூறுக்கும் மேற்பட்ட தனிநபர்களையும் நுழையவும், தடைசெய்யவும் அரசு முனைந்தது.

*உள்ளூர் ஆர்வலர்கள் மற்றும் சர்வதேசப் பார்வையாளர்கள் இந்த நடவடிக்கைகளை சர்வதேச விசாரணைக்குரிய தகவல் பரிமாற்றத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியாகப் புரிந்துகொண்டனர்.*

## விவாதம் மற்றும் முடிவுரை

*2009 ஆம் ஆண்டு போர்க்குற்றங்கள் முதன்முதலில் வெளிச்சத்திற்கு வந்ததிலிருந்து, பாரிய அட்டூழியங்களுக்குப் பொறுப்பானவர்களை விசாரித்து வழக்குத்தொடர இலங்கை மறுப்பது, மேற்கு நாடுகளுடனான சர்ச்சைக்கு ஒரு காரணமாக இருந்து வருகிறது. போருக்குப் பிந்தி உருவான அரசாங்கத்திற்கு, உள்நாட்டு அரசியல் ரீதியான எதிர்ப்புகள், கட்டுப்பாடுகள் என்பன நீதி வழங்குவதை மிகவும் விரும்பத்தக்கதாகக் காட்டிக்கொள்ளுவதற்கான வாய்ப்பாக மாற்றியது. அடையாளம் காணப்பட்ட, சுட்டிக்காட்டப்பட்ட அட்டூழியங்களில் ஆளும் ஆட்சியின் உறுப்பினர்களின் உடன்பாடும் பங்கும் இருந்தது. இதன் காரணமாக, சர்வதேச தலையீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. அதனால் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையுடனான ஒத்துழைப்பு இலங்கை அரசுக்குப் பொருந்திவரவில்லை. ஆயினும்கூட, தொடர்ச்சியான சர்வதேச அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து வருகிறது. பலவீனமான பொறுப்புக்கூறல் நிறுவனங்களினை, தொடர்ச்சியாக மில்லியன் கணக்கான டொலர்களைச் செலவழித்து உருவாக்குகிறது. அதுவும்கூட, சர்வதேச அழுத்தத்திற்கு அடிபணிவதாகச் சொல்லி அதன் தீவிர தேசியவாத ஆதரவாளர்களிடமிருந்து கண்டனங்களைப் பெற்றது. இலங்கையால் அறிமுகப்படுத்தப்பட்ட உள்நாட்டுவழிமுறைகள், நீதியைக் கோருவதில் ஈடுபட்ட பங்கேற்பாளருக்கு நம்பிக்கையளிக்கவில்லை என்பதை, சர்வதேச பார்வையாளர்களின் எதிர்வினைகள் சுட்டிக்காட்டுகின்றன.*

*இலங்கையின் நடத்தை, அறிமுகப்பகுதியில் எழுப்பப்பட்ட கேள்வியை எடுத்துக்காட்டுகிறது: நடவடிக்கை கோருபவர்களை திருப்திப்படுத்தாத அரைகுறை மனித உரிமை நிறுவனங்களை உருவாக்குவதற்கு இவ்வளவு செலவுகளை ஏன் செய்யவேண்டும்? மேற்கத்திய அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து, கினியா மற்றும் பஹ்ரைன் உதாரணங்களைப் போலவே, இலங்கையும் தொடர்ந்து விமர்சனங்களையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டது. ஆனால் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்சிலில் உள்ள சகநாடுகள் மிகவும் மாறுபட்ட எதிர்வினையைக் கொண்டிருந்தன.*

*மேற்கத்திய அரசாங்கங்களால் கொடுமைப்படுத்தப்பட்ட 'இந்த ஏழை மூன்றாம் உலக நாடு' என்று தன்னைச் சித்திரிக்கும் சொல்லாட்சியை இலங்கை பயன்படுத்தியது. அதையும்மீறித் தாமே உள்நாட்டில் செயற்படுவதற்கான சான்றாக, அரைகுறை மனித உரிமை நிறுவனங்களை உருவாக்குவதைச் சுட்டிக்காட்டியது. அந்த உத்தி பலனளித்தது. 2014 ஆம் ஆண்டு விசாரணைக்கு அங்கீகாரம் அளித்த தீர்மானத்திற்குப் பிறகும், ஐ.நா. சபையில் இலங்கையின் நட்பு நாடுகள் இந்த நடவடிக்கையை "குறிப்பாக நாடு அதன் சொந்த உள்நாட்டுச் செயல்முறைகளைச் செயற்படுத்தும் சூழலில் இது தேவையற்றது" என்றன. "இது ஆபத்தானது (முன்னோடியாக உள்ளது); நமது அனைத்து நாடுகளையும் மோசமாகப் பாதிக்கக்கூடும்" என்றும் தொடர்ந்து எதிர்ப்புகளைத் தெரிவித்தன.*

*இந்தக் குறிப்பிட்ட ஆய்வில் காணப்பட்டவற்றின்படி, அடக்குமுறைகள் செய்யும் நாடுகள் மனித உரிமைகளுக்கான அரைகுறை நடவடிக்கைகளைத் தங்களுக்கு எதிராக நாடுகள் அணிசேர்வதைத் தடுக்கும் உத்தியாகப் பயன்படுத்துகின்றன என்ற கோட்பாட்டிற்கு ஆதரவை வழங்குகிறது. வேறுவிதமாக இலங்கையின் நடத்தையை விளக்குவது கடினம். சர்வதேசத் தராதரங்களை நிறைவாக்காத மனித உரிமை நடத்தையை பல சந்தர்ப்பங்களில், உள்நாட்டு அரசியலினை முன்வைத்து எளிதாக விளக்க முடியும். உதாரணமாக, பிரபலமான தலைவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்குதல் என்பது ஒன்று. உண்மையில் இவர்கள் மிகத்தீவிரமான பொறுப்புக்கூறல் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டியவர்களாவர். இலங்கையின் விடயத்தில், உள்நாட்டு அரசியல் ஊக்கிகள், பொறுப்புக்கூறல் குறித்து எதுவும் செய்யாமல் இருப்பதற்கு ஆதரவாகத் தெளிவாகப் போராடின. போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேசவாதத்திற்கு இலங்கை வெளிப்படையாகவே எதிர்ப்புத் தெரிவித்தது. முனைப்பாகச் செயற்பாடும் நாடுகள் மற்றும் சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஐயத்துக்குரிய பதில்கள், இலங்கையின் நடத்தையை அவர்கள் நம்பிக்கையற்றதாகப் புரிந்துகொண்டதையே காட்டுகின்றன.*

*மனித உரிமைகள் குறித்த நேர்மையற்ற*

வாக்குறுதிகள் பற்றிய ஆய்வுச்சான்றுகள் இலங்கையின் இத்தகய நிலையை உறுதிப்படுத்துகின்றன. ஆனால் அரைகுறை மனித உரிமை நிறுவனங்களை உருவாக்குவதும் இயக்குவதும், ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதைவிட கணிசமாக அதிகச் செலவினம் கொண்ட நடத்தையாகும்.

மலினமான கதைகள் பேசுதல் என்பது முக்கியமான செயற்பாட்டின் போக்கைத் தவறவிட்டுவிட்டு, அத்தியாவசியப் புதிருக்குப் பதிலளிக்காமல் போகின்றன. செயலாற்ற விரும்பாத அரசு எதற்காகச் செலவுமிக்க அரைகுறை மனித உரிமை நிறுவனங்களை உருவாக்கும் சிக்கலுக்குச் செல்கிறது? அந்த நிறுவனங்கள் அழுத்தம் கொடுப்பவர்களை திருப்திப்படுத்தப்போவதும் இல்லை.

இந்தக் கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ள கோட்பாடு, மனித உரிமை நடத்தைகளுக்கு இணங்காததற்காக தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான ஒரு நியாயப்படுத்தப்பட்ட சூதாட்டமாக இந்த நடத்தையை விளக்குகிறது. மனித உரிமைகளுக்கான கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான முழுச்செலவுகளையும் தவிர்ப்பதற்கு இது உதவும்.

இது சர்வதேச உறவுகள்சார் வழங்கல்களுக்குப் பல பங்களிப்புகளைச் செய்கிறது. முதலாவதாக, சர்வதேச மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டத்திற்கு எதிராக எவ்வாறு அடக்குமுறை நாடுகள் பின்வாங்குகின்றன என்பது குறித்து வளர்ந்துவரும் ஆவணங்களில் இது சேர்கிறது. இரண்டாவதாக, மனித உரிமைகள் நடத்தைக்கான புதிய பார்வையாளர்களை இது வரையறுக்கிறது. மூன்றாவதாக, போட்டிகளையும் வெற்றுச் சொல்லாடல்களையும் உருவாக்குவதற்கான ஓர் இடம் என்ற வகையில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் பங்கை முன்வைக்கிறது. நான்காவதாக, சர்வதேச உறவுகளில் பாசாங்குத்தனத்திற்கு இன்னும் ஒரு புதிய பங்கு இருப்பதாக இது பரிந்துரைக்கிறது. ஆனால் அது இதற்கான பார்வையாளர்களின் நற்பெயரைப் பாதுகாக்கிறது. இலங்கையிலிருந்து கிடைத்த சான்றுகள், சர்வதேச மனித உரிமைகள் அழுத்தங்களுக்கு பதிலளிக்கும் விதமாக அரைகுறை நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது, அழுத்தத்தை வழங்குபவர்களை திருப்திப்படுத்தாவிட்டாலும்கூட, ஒரு வெற்றிகரமான உத்தியாக இருக்கும் என்ற தத்துவார்த்தக் கணிப்புகளை ஆதரிக்கிறது. பலதரப்பு நடவடிக்கைகளில் வீட்டோ புள்ளிகளாகச் செயற்படக்கூடிய ஊசலாடும் அரசுகளை ஒரேநேரத்தில் தங்கள் ஆதரவை வழங்க வற்புறுத்துவதன் மூலமும், அதற்கான அரசியல் மூடிமறைப்பை வழங்குவதன் மூலமும், அரைகுறை மனித உரிமை நடவடிக்கைகள் செயற்படுகின்றன.

இலங்கை பற்றிய இந்த ஆய்வு, மனித உரிமைகளைச் செயற்படுத்துவதற்கான, கடுமையான பல மாதிரிகளின் தொகுப்பை எடுத்துக்காட்டுகிறது. ஐ. நா. பாதுகாப்பு கவுன்சிலின் 'வீட்டோ'வை வைத்திருக்கும் புரவலரால் பாதுகாக்கப்படுகின்ற, மனித உரிமை மீறும் அரசாங்கங்கள் இவை.

ஆனால் அரைகுறை நடவடிக்கை உத்திகள் இந்த வகையானவற்றுக்குத் தனித்துவமானவை அல்ல. அமெரிக்கா உரிமைகளை ஊக்குவிக்கும் தனது வரலாற்றுப் பங்கிலிருந்து பின்வாங்குவது மனித உரிமைச் செயலாக்கத்தை மேலும் நிச்சயமற்றதாக்குகிறது; கவுன்சிலுக்கு வெளியேயும் அதற்குள்ளும் பலதரப்புகளின் நடவடிக்கைகளைச் சார்ந்ததாக மனித உரிமைகளை ஆக்குகிறது. இவை மனித உரிமையை மீறும் நாடுகளுக்கு பாரிய முறையில் கவர்ச்சிகரமானதாக இருக்க வேண்டும். இந்த செயற்பாட்டுப் போக்கு, தங்கள் சகநாடுகளின் ஆதரவைச் சேர்ப்பதில் மனித உரிமை மீறும் அரசாங்கங்கள் பெறும் வாய்ப்பை அதிகரிக்கும்.

மனித உரிமை நடத்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்த போட்டியை உருவாக்கும் சூழல் இன்று உள்ளது. கூட்டணித் தடுப்பு நடத்தையின் பொருத்தப்பாடு இங்கு ஏன் என்பது, தெளிவாகத் தெரிகிறது. சர்வதேச விதிகளை அமல்படுத்துவதற்கு, சுயநல நோக்கங்கள் இல்லாதநிலையில் மற்ற நாடுகள் செயற்பட வேண்டும் என்றநிலை இன்று. இது சர்வதேச உறவுகளின் பிறபகுதிகளுக்கும் நீண்டுள்ளது.

சர்வதேச சுற்றுச்சூழல் சட்டம் முதல் ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் வரையிலான பல பகுதிகளுக்கு இது நீள்கிறது. பிற அரசுகளின் ஈடுபாட்டிலிருந்து பரஸ்பர நன்மைகள் எதுவும் இல்லாததால், சர்வதேச விதிகளைக் கண்காணித்து செயற்படுத்துவதற்கு அரசுகளுக்கு அதிகம் ஆர்வம் இல்லை. இதன்விளைவாக, இவற்றின் செயலாக்கத்திற்கு பெரும்பாலும் பலதரப்புக் கூட்டுநடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. மனித உரிமையை மீறும் நாடுகள் தங்களுக்கு எதிரான கூட்டணிகள் உருவாவதைத் தடுக்கும் முயற்சியில் அரைகுறை மனித உரிமை நடவடிக்கை உத்திகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை மேலும் திறக்கின்றன.



● சி. அ. யோதிலிங்கம்

சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார்.

'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

# 1921 தொடக்கம் 1949 வரையான காலகட்டம்: ஒற்றையாட்சிக்குள் சமவாய்ப்பு

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

**உதவி : ஜீவராசா டிலக்ஷனா**

**1921** ஆம் ஆண்டு ஆரம்பித்த இக்காலகட்டம் 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி தோற்றம் பெறும்வரை நடைமுறையில் இருந்தது எனக் கூறலாம். இக்காலகட்டத்துடன் தமிழின அரசியல் என்பது ஆரம்பித்துவிட்டது. ஆனாலும் இக்காலகட்டத்து தமிழர் அரசியல் என்பது இலங்கை என்கின்ற ஒற்றையாட்சிக் கட்டமைப்பை ஏற்றுக்கொண்டு அதற்குள் சமவாய்ப்பைக் கோரும் அரசியலாகவே இருந்தது. இதை ஆரம்பித்து வைத்தவர் சேர். பொன்னம்பலம் அருணாசலமாவார். ஆனாலும் இக்காலகட்ட அரசியலை வளர்த்து எடுத்தவராக ஜீ.ஜீ பொன்னம்பலம் விளங்குகின்றார்.

### தமிழர் மகாசபையின் தோற்றம்

இலங்கைத் தேசியக் காங்கிரஸில் இருந்து வெளியேறிய சேர். பொன்னம்பலம் அருணாசலம் 1921 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தமிழர் மகாசபை எனும் இனரீதியான அரசியல் இயக்கத்தை யாழ்ப்பாணத்தில் உருவாக்கினார். இதன் உருவாக்கத்தின்போது தமிழ் அகத்தை வளர்த்தெடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார். இலங்கைத் தீவில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களையும் இணைத்த அரசியலாகவே இக்காலகட்ட அரசியல் இருந்தது. 1924 ஆம் ஆண்டு பொன்னம்பலம் அருணாசலம்; மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வழிபாட்டுக்கு சென்றபோது அங்கு மாரடைப்பினால் மரணமடைந்தார். இதனால் இக்காலகட்ட அரசியலை இவரால் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. முன்னரே கூறியதுபோல ஜீ. ஜீ பொன்னம்பலம் இதனை வளர்த்து எடுத்தார். அவரது '50 : 50' கோரிக்கை இதன் அடிப்படையிலேயே எழுச்சியடைந்தது. இதன் அர்த்தம் அனைத்து விவகாரங்களிலும் 50 சதவீதம் பெரும்பான்மை இனத்திற்கும் மீதி 50 சதவீதம் ஏனைய இனங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதேயாகும். பெரும்பான்மை இனம் ஏனைய இனங்களுக்கு எதிராகச் செயற்படக்கூடாது என்பதற்காகவே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

### யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் - 1924

1924 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் திகதி யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இதன் முன்னோடியாக ஹண்டி பேரின்பநாயகம் கருதப்படுகின்றார். இலங்கைக்கு முழுமையான சுதந்திரம் வேண்டுமென்ற கோரிக்கையை இவ்வமைப்பு முன்வைத்திருந்தது. தமிழின அரசியலில் இவ்வமைப்பு பெரிய அக்கறை காட்டவில்லை. ஆனாலும் தமிழ்ச்சூழலில் சமூக மாற்ற அரசியலை இவர்களே ஆரம்பித்து வைத்தனர். குறிப்பாக, சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப் பல்வேறு பணிகளை மேற்கொண்டனர். இவ்வமைப்பைச் சேர்ந்தவர்கள் இந்தியத் தேசிய காங்கிரஸின் அரசியலினாலும், போராட்டங்களினாலும் கவரப்பட்டவர்களாக இருந்தனர். இந்தியத் தேசிய காங்கிரஸின் இடதுசாரிப் பிரிவுடன் இவர்களுக்கு நெருக்கமான தொடர்பு இருந்தது. இந்தியத் தேசிய காங்கிரஸின் தலைவர்களை, யாழ்ப்பாணத்திற்கு அழைத்து பிரசாரக் கூட்டங்களை நடத்தினர். இந்தியப் பிரதமரான ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தி, சரோஜினி நாயுடு போன்ற இந்தியத் தேசிய தலைவர்கள், இவர்களின் அழைப்பை ஏற்று இலங்கை வந்து யாழ்ப்பாணம் உட்பட பல்வேறு இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக்கூட்டங்களில் உரையாற்றினர்.

### மனிங் டிவென்சயர் அரசியல் சீர்திருத்தம் - 1924

இவ் அரசியல் சீர்திருத்தத்தின்படி சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 49 ஆக காணப்பட்டது. இதில் 37 பேர் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களாகவும், 12 பேர் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்களாகவும் விளங்கினர். உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்களில் 23 பேர் பிரதேசவாரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். சிங்கள மக்களிலிருந்து 16 பேரும், தமிழ் மக்களிலிருந்து 7 பேரும் தெரிவு செய்யப்படக்கூடியதாக இப்பிரதிநிதித்துவம் ஒழுங்கமைக்கப்பட்டது. ஆறு பேர் இனரீதியாகத் தேர்தலின்மூலம் தெரிவு செய்யப்பட்டனர். ஐரோப்பியர் - 3, பறங்கியர் - 2, மேல் மாகாணத் தமிழர் - 1 என்ற வகையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்தவகையில் மேல் மாகாணத் தமிழர் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் அருணாசலம் மகாதேவா ஆவார் .

### கண்டிய தேசிய அவையின் சமஸ்டிக் கோரிக்கை

கண்டிய தேசிய அவை 1925 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கரையோரச் சிங்கள மக்களின் ஆதிக்கம் கண்டியப் பிரதேசத்தில் வளரக்கூடாது என்பதற்காகவே இவ்வமைப்புத் தோற்றம் பெற்றது. இது இலங்கையில் முதன்முதலாக சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்தது. இவ்வமைப்பின் சமஸ்டிக் கோரிக்கை இலங்கையானது கரையோரப்பகுதி, கண்டியப்பகுதி, வடக்கு -

கிழக்குப் பகுதி என மூன்று சமஸ்டிப் பிரதேசங்களை உருவாக்க வேண்டும் என்றும், அம்மூன்றையும் இணைத்து ஒரு மத்திய அரசை உருவாக்க வேண்டும் என்றும் இருந்தது.

1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் சீர்திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டபோது டொனமூர் விசாரணைக்குழு முன்னிலையில் சமஸ்டிக் கோரிக்கையை இவ்வமைப்பு முன்வைத்தது. இக்கோரிக்கையைப் பிரசாரம் செய்வதற்காக யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் கூட்டத்தை நடத்தினர். ஆனால் தமிழ்மக்கள் இவர்களது சமஸ்டிக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை. இந்தச் சமஸ்டிக் கோரிக்கையின் பிரதான ஆதரவாளராக எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா விளங்கினார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் சமஸ்டிக் கோரிக்கையை ஆதரித்து இவர் உரையாற்றினார்.

## சர்வஜன வாக்குரிமையும் மலையக மக்களும்

டொனமூர் யாப்பின்கீழ் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டபோது, மலையக மக்களும் வாக்குரிமை பெற்றுவிடுவார்கள் என்பதற்காக சிங்களத் தலைவர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். இது தொடர்பான விவாதம் சட்டசபையில் இடம்பெற்ற போது டி.எஸ். சேனநாயக்கா "இந்தியர்களுக்கு ஒரு பெரிய நாடு உள்ளது. எங்களுக்கு இச்சிறுதுண்டு நிலமே உள்ளது" எனக் குறிப்பிட்டார். பிரான்சிஸ் மொலமூறே "பழைய காலத்தில் இலங்கையை லிப்டனின் தோட்டம் என்றனர். எதிர்காலத்தில் இலங்கையை இந்திய ஆலமரத் தோட்டம் என குறிப்பிடக்கூடும்" என்றார். சி.டபிள்யூ. கன்னங்கரா "இந்தியரின் வாக்குரிமையை எதிர்க்காதோர் துரோகிகள்" என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார். இறுதியில், நாட்டில் நிலையான அக்கறை உடையோருக்கு அல்லது நாட்டில் நிலையாக வசிப்போருக்கே வாக்குரிமை என டொனமூர் குழுவினர் சிபாரிசு செய்தனர். 1931 ஆம் ஆண்டு தேர்தலில் மலையக மக்களிலிருந்து இருவர் தெரிவு செய்யப்பட்டனர். ஹட்டன் தேர்தல் தொகுதியில் இருந்து பெரிசுந்தரமும், தலவாக்கலை தேர்தல் தொகுதியில் இருந்து எஸ். பி. வைத்திலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

### டொனமூர் அரசியல் யாப்பு - 1931

1927 ஆம் ஆண்டு டொனமூர் குழுவினர் ஓர் அரசியல் யாப்பைச் சிபாரிசு செய்ய இலங்கை வந்தனர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு டொனமூர் அரசியல் யாப்பு என்ற பெயரில் 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்படும் வரை நடைமுறையில் இருந்தது.

டொனமூர் குழுவினரின் மத்தியில், இலங்கையில் செயற்பட்ட அமைப்புகளும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தன. சிங்கள மக்களின் பிரதிநிதிகள் பிரித்தானிய மாதிரியிலான அரசாங்கம் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். கண்டியப் பிரதேச மக்களின் பிரதிநிதிகள் முன்னரே கூறியதுபோல சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்தனர். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கூறினர். ஆனாலும் தமிழ் மக்கள் மத்தியில் செயற்பட்ட யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பூரண சுதந்திரம் என்ற கோரிக்கையை முன்வைத்தது. டொனமூர் குழுவினர் இலங்கைச் சமூகம் ஐக்கியப்பட்ட சமூகமாக இல்லாததனாலும், இலங்கையர்கள் அரசியல் நிர்வாகத்தில் பயிற்சி குறைவுடையவர்களாக இருந்ததனாலும், அரசியல் கட்சிமுறை வளர்ச்சி அடையாமல் இருந்ததனாலும், அரைப் பொறுப்பாட்சி முறையையும், அனைத்துத் தரப்பும் பங்கேற்கக்கூடிய நிர்வாகக்குழு முறையையும் சிபாரிசு செய்தனர். நியமன உறுப்பினர்களும், தேசாதிபதியின் அதிகாரங்களும், நிர்வாகக்குழு முறையும், பொதுச்சேவை ஆணைக்குழு போன்ற நிறுவனங்களும் தமிழர்களின் அதிருப்தியைப் போக்குவதில் பங்காற்றும் எனவும் குறிப்பிட்டனர்.

சேர். பொன்னம்பலம் இராமநாதன் டொனமூர் அரசியல் யாப்பைக் கடுமையாக எதிர்த்தார். "டொனமூர் என்றால், தமிழர் இல்லை" என்று குறிப்பிட்டார். 1927 ஆம் ஆண்டு அரசியலுக்கு வந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் இதனைக் கடுமையாக எதிர்த்தார். டொனமூர் அரசியல் யாப்பு ஏற்கனவே கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தால் உருவாக்கப்பட்ட ஒற்றையாட்சி நிர்வாகக்கட்டமைப்பிடம் பெரும்பான்மை ஜனநாயகம் என்ற அடிப்படையில் அதிகாரத்தை ஒப்படைத்தது. முதன்முதலாக குறைந்த மட்டத்திலாவது பெரும்பான்மை இனம் அதிகாரத்தைக் கையில் எடுக்கும்நிலை உருவானது. சிங்கள - பௌத்தக் கருத்தியல் வளர்ச்சிபெற்ற நிலையில் இருந்ததால், ஏனைய இனங்களை அதிகாரக் கட்டமைப்பில் இருந்து விலக்குவதாகவும், அவர்களை ஒடுக்குவதாகவும்

ஆட்சிமுறை வளரத் தொடங்கியது. 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது தொடக்கம் 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்புவரை, இனப்பிரச்சினைக்கு தீர்வாக இனவாரிப் பிரதிநிதித்துவ முறையையே ஆங்கிலேய ஆட்சியாளர்கள் முன்வைத்தனர். 1921 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையினால் பிரதிநிதித்துவச் சமநிலை குழம்பியது. 13 சிங்களப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட அதேவேளை, 3 தமிழ்ப் பிரதிநிதிகளே தெரிவு செய்யப்பட்டனர். எனினும் ஆட்சி அதிகாரம் முழுமையாக ஆங்கிலேயரிடம் இருந்தமையினால் ஆபத்துகளைத் தொட்டுணரக்கூடிய நிலை இருக்கவில்லை. 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்புடன் பிரதிநிதித்துவச் சமநிலை குலைவுடன், கூடவே பெரும்பான்மை ஆட்சி அதிகாரம் இருந்தமையினால், புறக்கணிப்பைத் தொட்டுணரக்கூடிய நிலை உருவானது.

இதன் அடிப்படையில் தமிழர்கள் கடும் அதிருப்தியைத் தெரிவித்தனர். நியமன உறுப்பினர்களும், தேசாதிபதியின் அதிகாரங்களும், நிர்வாகக்குழுமுறையும், பொதுச்சேவை ஆணைக்குழு போன்ற நிறுவனங்களும், சிறுபான்மையோரின் காப்பீடாக இருக்கும் எனவும் கூறப்பட்டது. 1931 இற்குப் பின்னர் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக மேற்கூறிய பாதுகாப்பு ஏற்பாடுகளே முன்வைக்கப்பட்டன. இராமநாதன், டொனமூர் திட்டத்தை, “தமிழ் மக்களின் தூக்குக் கயிறு” எனக் குறிப்பிட்டார். சட்டசபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஒரு வாக்கினால் இவ் அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்டது. அந்த ஒரு வாக்கினை மட்டக்களப்பைச் சேர்ந்த ஈ.ஆர். தம்பிமுத்து என்பவரே வழங்கியிருந்தார்.

## யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் தேர்தல் பகிஸ்கரிப்பு

டொனமூர் அரசியல் யாப்பின்கீழ் முதலாவது தேர்தல் 1931 ஜூன் மாதம் இடம்பெற்றது. இத்தேர்தலை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பகிஸ்கரித்தது. பகிஸ்கரிப்புக்கான காரணமாக, டொனமூர் அரசியல் யாப்பு இலங்கைக்கு பூரண சுதந்திரத்தை வழங்கவில்லை என்று கூறப்பட்டது. இப்பகிஸ்கரிப்புப் போராட்டத்திற்கு சிங்கள அரசியல் தலைவர்கள் ஆதரவு வழங்குவதாகக் கூறியபோதும், பின்னர் பின்வாங்கினர். இதனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் தேர்தல் பகிஸ்கரிப்பு இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்டத்தின் நான்கு தொகுதிகளிலும் தேர்தல் பகிஸ்கரிப்பு இடம்பெற்றது. 1927 ஆம் ஆண்டு அரசியலுக்கு வந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் டொனமூர் அரசியல் யாப்பை நிராகரித்த போதும், தேர்தல் பகிஸ்கரிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் தேர்தலில் போட்டியிட விரும்பினார். யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட முடியாமையினால் மன்னார் - முல்லைத்தீவு தொகுதியில் போட்டியிட்டு எஸ்.என். ஆனந்தன் என்பவரிடம் தோல்வியடைந்தார்.

1934 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் இடைத்தேர்தல் இடம்பெற்றது. ஜீ.ஜீ. பொன்னம்பலம் பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியடைந்தார். இவ்வெற்றியுடன் தமிழ் அரசியலில் அவரது தலைமைத்துவம் உறுதியாகிவிட்டது. அதேவேளை காங்கேசன்துறை தொகுதியில் இருந்து நடேசன் என்பவரும், யாழ்ப்பாணத் தொகுதியில் அருணாசலம் மகாதேவாவும், ஊர்காவற்துறைத் தொகுதியில் நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளையும், மன்னார் - முல்லைத்தீவுத் தொகுதியில் எஸ்.என். ஆனந்தனும், திருகோணமலைத் தொகுதியில் எம்.எம். சுப்பிரமணியமும், மட்டக்களப்புத் தொகுதியில் ஈ.ஆர். தம்பிமுத்துவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சிங்கள மகாசபை - 1934

19.05.1934 ஆம் ஆண்டு கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள ‘பௌத்த மந்திரய’வில் வைத்து ‘சிங்கள மகாசபை’ அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. மகாகவி ஆனந்த ராஜகருணா, குமாரதுங்க முனிதாச, டீ.எம். ராஜபக்ச (மகிந்த ராஜபக்சவின் தகப்பனார்), பியதாச சிறிசேன போன்றோர் சிங்கள மகாசபையின் ஸ்தாபகர்களாகக் காணப்பட்டனர். சிங்கள மகாசபை என்கிற பெயர் பண்டாரநாயக்கவால் வைக்கப்பட்டதல்ல; வேறு இனத்தவர்களையும் இத்துடன் இணைத்துக்கொள்ளும் நோக்குடன் அவர் ‘சுவதேஷிய மகாசபா’ (*Swadeshiya Maha Sabha* - சுவதேசிய மகாசபை) என்கிற பெயரையே வைக்க விரும்பினார். ஆனால் பிரபல சிங்கள இலக்கியப் பிரமுகரான குமாரதுங்க முனிதாச அந்தப் பரிந்துரையைத் தோற்கடித்தார். பிளவுபட்டிருக்கிற சிங்கள இனத்தை ஒன்று

சேர்த்து தேசாபிமானத்தைக் கட்டியெழுப்பி தேசத்தின் சுதந்திரத்துக்கான போராட்டத்தை முன்னெடுப்பதே இதனை ஆரம்பிப்பதன் பிரதான நோக்கம் என்று அறிவிக்கப்பட்டது. நாட்டுக்கு சிங்கள மகாசபையின் அவசியம் என்ன என்பது குறித்த பண்டாரநாயக்கவின் விளக்கம், 10.05.1934 அன்று, 'லக்மின' பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

சிங்கள மகாசபையினர் மலையகத் தோட்டத் தொழிலாளார்களுக்கு எதிரான கருத்துகளைக் கொண்டிருந்தனர். குறிப்பாக உள்நாட்டில் அவர்களுக்கு உரிமைகள் வழங்குவதை எதிர்த்ததுடன், அவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டியவர்கள் என்கிற நிலைப்பாட்டில் இருந்தனர்.

## லங்கா சமசமாஜக் கட்சியின் தோற்றம் - 1935

1935 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி முதலாவது அரசியல் கட்சியாகவும், முதலாவது இடதுசாரிக் கட்சியாகவும் லங்கா சமசமாஜக் கட்சி தோற்றம் பெற்றது. சூரியமல் இயக்கம், வெள்ளவத்தை நெசவாளர் போராட்டம், மலேரியா நிவாரணச் சேவை என்பன லங்கா சமசமாஜக் கட்சி தோற்றம் பெறுவதற்கு காரணமாக விளங்கின. இவ் இடதுசாரி இயக்கம் தமிழ் மக்களின் நலன்கள்மீதும், மலையக மக்களின் நலன்கள்மீதும் அக்கறைகொண்ட அமைப்பாக விளங்கியது. ஆரம்பத்தில் கட்சி மூன்று இலக்குகளைப் பிரதானமாகக் கொண்டிருந்தது. பூரண சுதந்திரத்தை அடைவது, உற்பத்தி விநியோகப் பரிவர்த்தனை சாதனங்களைத் தேசியமாக்குவது, வர்க்க - சாதி - இன - சமய ஏற்றத்தாழ்வுகள் காரணமாகத் தோன்றும் சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளை ஒழித்துக்கட்டுவது என்பவையே அவையாகும். இடதுசாரி இயக்கத்தினர், இந்தியத் தேசிய காங்கிரஸ் இயக்கத்தினரினால் கவரப்பட்டவர்களாக விளங்கியமையினால், இந்தியத் தேசிய காங்கிரஸ் தலைவர்களை இலங்கைக்கு அழைத்து தென்னிலங்கையில் கூட்டங்களை நடத்தினார். மிக நீண்டகாலம் ஈழத்தமிழ் மக்களின் அபிலாசைகளை ஏற்றவர்களாகவும் அவற்றிற்குக் குரல் கொடுப்பவர்களாகவும் செயற்பட்டனர்.

## 1936 ஆம் ஆண்டுத் தேர்தலும் தனிச்சிங்கள மந்திரி சபையும்

1936 ஆம் ஆண்டுத் தேர்தலில் பின்னர் மந்திரிசபை அமைக்கப்பட்டபோது அனைவரும் சிங்களவர்களாகவே இருந்தனர். அது தனிச்சிங்கள மந்திரி சபையாகவே இருந்தது. இவ்வாறான நிலை எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது என்பதற்காகவே ஜீ.ஜீ. பொன்னம்பலம் '50 : 50' கோரிக்கையை முன்வைத்தார். இதன் பின்னர் '50 : 50' கோரிக்கை ஓர் அரசியல் இயக்கமாக வளர்ச்சியடையத் தொடங்கியது. இத்தேர்தலின் பின்னர் இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவினால் சேர். வைத்திலிங்கம் துரைசாமி சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். வாக்கெடுப்பின்போது சமநிலை காணப்பட்டது. ஆனால் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரான டாக்டர் என்.எம். பெரேராவின் முயற்சியினால் அபயகுணசேகர என்ற உறுப்பினர் சேர். வைத்திலிங்கம் துரைசாமிக்கு ஆதரவாக வாக்களித்தார்.

1942 ஆம் ஆண்டு ரி.டி. ஜெயதிலகவின் உள்நாட்டு மந்திரிப்பதவி வெற்றிடமாக, அவ்விடத்திற்கு அருணாசலம் மகாதேவா அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டார். அமைச்சர் பதவியைத் தொடர்ந்து அருணாசலம் மகாதேவா சிங்களத் தலைவர்களுடன் ஒத்துப்போக முனைந்தார். ஆனால் ஜீ.ஜீ. பொன்னம்பலம் சிங்களத் தலைவர்களிடமிருந்து விலகியே இருந்தார். தமிழ் அரசியலில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் செயற்பாடு மேலும் வளர்ச்சிபெற ஆரம்பித்தது. டொனமூர் காலத்தில் இலங்கையில் வாழ்ந்த, குறிப்பாக நகர்ப்புறங்களில் வாழ்ந்த இந்திய வம்சாவளியினருக்கு எதிராகப் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1935 ஆம் ஆண்டின் 19 ஆவது சட்டமாகிய காணி அபிவிருத்திச் சட்டம், 1940 ஆம் ஆண்டின் 24 ஆவது சட்டமாகிய மீன்பிடிச் சட்டம், 1942 ஆம் ஆண்டின் 47 ஆவது சட்டமாகிய பேருந்து சேவை அனுமதிப்பத்திரச் சட்டம் என்பன அதில் முக்கியமானவையாகும்.

இவற்றில் முதலாவது சட்டம் 1927 ஆம் ஆண்டின் நில ஆணைக்குழு முன்வைத்த சிபாரிசுகளுக்குச் சட்ட உருக்கொடுக்கும் முகமாக ஆக்கப்பட்டதொன்றாகும். அதன் பிரதான நோக்கம் நிலமற்ற குடியான்களுக்கும், மத்திய வகுப்பினருக்கும் காணிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதாகும். இரண்டாவது சட்டமாகிய மீன்பிடிச்சட்டம் இலங்கைக் கடற்பிராந்தியத்தில் இலங்கையர் அல்லாதோர் மீன்பிடிக்க விரும்பினால், அதற்குரிய அனுமதிப்பத்திரத்தை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென விதித்தது. இதன் இலக்கு இந்திய சமூகத்தவர் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதினின்று தடுப்பதாகவே இருந்தது. மறுபுறம் பேருந்து சேவை அனுமதிப்பத்திரச் சட்டம், பேருந்து சேவையை நடத்துவதில்

இலங்கையருக்கு முன்னுரிமை வழங்க முன்வந்தது. இந்தச் சட்டங்கள் இந்தியருக்கு எதிரானவை என்பது நேரடியாக எடுத்துக்கூறப்படாத போதும், நடைமுறையில் அவை இலங்கையிலிருந்த இந்திய வம்சாவளியினரை நாட்டின் பொருளாதார அலுவல்கள் சிலவற்றிலிருந்து ஒதுக்கி, அந்த வாய்ப்புகளை இலங்கையர்பால் திருப்பிவிட முனைந்தன என்பதில் சந்தேகமில்லை.

இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்கள் இத்தொழில்களில் ஈடுபட அனுமதிப்பத்திரம் மறுக்கப்பட்டது. அதேவேளை, இக்காலங்களில் அரச ஊழியர்களாக இந்திய வம்சாவளி மலையக இனத்தவர்கள் பலர் இருந்தனர். 1939 ஆம் ஆண்டு போக்குவரத்து அமைச்சராக இருந்த சேர். ஜோன். கொத்தலாவல, ஒரே நாளில் சுற்று நிரூபணம் ஒன்றைக் கொண்டுவந்து, அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றிய இந்திய வம்சாவளி மக்கள் அனைவரையும் வேலையிலிருந்து நீக்கினார். இதனால் அதிருப்தி அடைந்த நகர்ப்புறங்களில் செயற்பட்ட இந்திய வம்சாவளி மக்களின் அமைப்புகள், இந்தியத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய மகாத்மா காந்தியிடம் இப்பாதிப்புப் பற்றி முறையிட்டனர். காந்தி இவ்விவகாரம் தொடர்பாக இலங்கையின் தலைவர்களோடு பேசித் தீர்த்து வைக்குமாறு ஜவஹர்லால் நேருவை இலங்கைக்கு அனுப்பினார். நேரு இலங்கைத் தலைவர்களுடன் பேசியபோதும், இலங்கைத் தலைவர்கள் எந்த உடன்பாட்டிற்கும் வரவில்லை. இதன்பின்னர் நேருவின் ஆலோசனையின் பெயரில் 1939 ஆம் ஆண்டு இலங்கை - இந்தியக் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இதுவே இந்திய வம்சாவளியினர் மத்தியில் உருவாக்கப்பட்ட முதலாவது அரசியல் இயக்கமாகும்.

1940 ஆம் ஆண்டு அப்புத்தளை கதிரேசன் கோயிலில் இலங்கை - இந்தியக் காங்கிரஸ் தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டது. இது, 1950களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. 1940களின் பிற்பகுதியில் சௌமியமூர்த்தி தொண்டமான், இலங்கை - இந்தியக் காங்கிரஸின் தலைவராகப் பதவியேற்றார். இறக்கும்வரை அவரே அதன் தலைவராக விளங்கினார்.

## கிராம சபைகளும் மலையக மக்களும்

டொனமூர் யாப்பு சில கட்டுப்பாடுகளுடன் மலையக மக்களுக்கு வாக்குரிமையை வழங்கியது. தம்மைப் பதிவுசெய்து வாக்களிப்பதில் மலையக மக்கள் வலுவான அக்கறை காட்டினர். இது சிங்கள அரசியல் தலைவர்களிடையே அச்சத்தைக் கொண்டுவந்தது. அவர்கள் உள்ளூராட்சிச் சபைகளில் மலையக மக்களின் வாக்குரிமையைப் பறிக்க முனைந்தனர்.

1889 ஆண்டின் கிராமிய சபைச் சட்டத்தின்படி ஐரோப்பியர், பறங்கியர், இந்தியர் என்போருக்கு கிராமசபைகளில் பங்குபற்றும் உரிமை மறுக்கப்பட்டது. அவர்கள் கிராமிய வாழ்க்கையுடன் இணைந்த பகுதியினர் அல்லர் என இதற்குக் காரணம் கூறப்பட்டது.

1937 ஆம் ஆண்டு, கிராமப்பகுதிகளில் அமைந்திருக்கும் தோட்டங்களுக்கு வரி அறவிடுவது என்றும், ஐரோப்பியருக்கும் பறங்கியருக்கும் கிராமசபை உறுப்பினர் உரிமை வழங்குவதென்றும் கிராமசபைச் சட்டம் திருத்தப்பட்டது. இந்திய வம்சாவளியினரான மலையக மக்களுக்கு அவ்வுரிமை வழங்கப்படவில்லை. இச்சட்டத்திற்கு இலங்கையிலிருந்த இந்தியச் சங்கங்கள் பல எதிர்ப்புத் தெரிவித்தன. "இச்சட்டம் இன வேறுபாடு காட்டலின் அடிப்படையில் அமைந்தது" என இந்திய அரசாங்கமும் எதிர்ப்புத் தெரிவித்தது. இதன் காரணமாக பெருந்தோட்டத்துறையில் பணிபுரியும் அனைத்துத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் கிராமசபை உறுப்பினர் உரிமையை மறுக்கும் இன்னொரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஆனால் தோட்டங்களில் சிங்களத் தொழிலாளர்கள் மிகக்குறைவாக இருந்ததனால் இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிரானதாகவே இச்சட்டம் அமைந்தது.

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி - 1943

லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து எஸ்.ஏ. விக்ரமசிங்க தலைமையில் வெளியேறிய குழுவினர், 1943 ஆம் ஆண்டு ஜூலை 3 இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினர். சோவியத் யூனியனின் தலைவர்களில் ஒருவரான லியோன் ரொஸ்கிக்கும், சோவியத் யூனியனின் அதிபராக இருந்த ஸ்டாலினிற்கும் இடையே ஏற்பட்ட கொள்கை முரண்பாடுகளே கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்திற்குக் காரணங்களாக அமைந்தன. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது மாநாட்டில் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொண்டதுடன் அதன் சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொண்டது.



ஹண்டி பேரின்பநாயகம்
Image Source: ta.wikipedia.org



ஜீ.ஜீ. பொன்னம்பலம்
Image Source: www.tamilmirror.lk



சேர். வைத்திலிங்கம் துரைசாமி
Image Source: ta.wikipedia.org



சௌமியமூர்த்தி தொண்டமான்
Image Source: www.virakesari.lk

### அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் - 1944

1944 ஆம் ஆண்டு சோல்பரி குழுவினர் இலங்கைக்கென ஒரு புதிய அரசியல் யாப்பை சிபாரிசு செய்வதற்காக இலங்கை வந்தனர். இச்சோல்பரிக் குழு முன்னிலையில் சாட்சியம் அளிப்பதற்காக, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி 1944 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் தேதி கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைவராக ஜீ.ஜீ. பொன்னம்பலம் தெரிவு செய்யப்பட்டார். சோல்பரிக் குழுவினர் முன்னிலையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை முன்வைத்தது. இதன் நோக்கம், பெரும்பான்மைச் சமூகம் ஏனைய சமூக நலன்களுக்கு எதிராகச் செயற்படாதவாறு சமவாய்ப்புகளைக் கோருவதாக இருந்தது.

### போல்சேவிக் லெனினிசக் கட்சி - 1945

1945 ஆம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சியின் முக்கிய தலைவராக விளங்கிய கொல்வின் ஆர். டி. சில்வா, அக்கட்சியில் இருந்து வெளியேறி போல்சேவிக் லெனினிசக் கட்சியை உருவாக்கினர. இக்கட்சி தமிழ்மக்கள் விவகாரங்களில் வலுவான அக்கறையைக் காட்டிய கட்சியாக விளங்கியது.

### ஐக்கிய தேசியக் கட்சி - 1946

சோல்பரி அரசியல் யாப்பு, பாராளுமன்ற அரசாங்கமுறையைச் சிபாரிசு செய்தது. இவ்வரசாங்கமுறைப்படி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற, இலங்கையின் பிரதான இயக்கமாக விளங்கிய இலங்கைத் தேசிய காங்கிரஸ், எஸ். டபுள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவினால் உருவாக்கப்பட்ட சிங்கள மகாசபை, முஸ்லிம் மக்கள் நலன்களைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட முஸ்லிம் லீக் ஆகிய மூன்று அமைப்புகளும் இணைந்து 1946 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கின.

டி.எஸ். சேனநாயக்கா இக்கட்சியின் தலைவராக விளங்கினார். 1947 ஆம் ஆண்டு தேர்தலின்போது இக்கட்சி ஏனைய சிறு கட்சிகளுடனும், சுயேட்சை உறுப்பினர்களுடனும் கூட்டுச்சேர்ந்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. டி.எஸ் சேனாநாயக்கா இலங்கையின் முதலாவது பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதன் உபதலைவர்களாக எஸ்.டபுள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, சேர். ஜோன் கொத்தலாவல, ஜோர்ஜ் ஈ.டி. சில்வா, ரி.பி. ஜாயா, அருணாசலம் மகாதேவா, எஸ். நடேசன் என்போரும்; செயலாளராக எச்.டபுள்யூ. அமரசூரியவும்; பொருளாளர்களாக ஜே.ஆர். ஜெயவர்த்தன, ராசிக் பரீத் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

### சோல்பரி அரசியல் யாப்பு - 1947

சோல்பரி அரசியல் யாப்பு 1947 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பு அமலுக்கு வரும்வரை நடைமுறையில் இருந்தது. இதில் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருந்த இனங்களைப் பாதுகாக்கவென சிறுபான்மையோர் பொதியொன்று

உருவாக்கப்பட்டது. இதில் சிறுபான்மையோர் காப்பீடுகளாக, பின்வருவன கொள்ளப்பட்டன.

1. யாப்பின் 29 ஆவது சரத்து
2. செனட் சபை
3. நியமன உறுப்பினர்
4. பல்லங்கத்தவர் தேர்தல் தொகுதி
5. யாப்பை திருத்த 2/3 பெரும்பான்மை பெறப்படல்
6. அரசாங்க சேவை, நிதிச் சேவை ஆணைக்குழுக்கள்
7. கோமறைக்கழகம்

ஆயினும், இவை எதுவும் நடைமுறையில் பெரிய பயன்களைத் தரவில்லை.

### சோல்பரி யாப்பு மீதான தமிழர்களின் எதிர்ப்பு

சோல்பரி யாப்பின் தீமைகளை, பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்க, ஜீ.ஜீ பொன்னம்பலம் பிரித்தானியா சென்றார். ஆனால் சிங்களத் தலைவரில் ஒருவரான டி.எஸ். சேனநாயக்கா மற்றும் தமிழ்த் தலைவர்களான நடேசன், அருணாசலம் மகாதேவா, தியாகராஜா என்போரின் ஆதரவுடன் சோல்பரி யாப்பு நிறைவேற்றப்பட்டது. இதனால் கோபமுற்ற ஜீ.ஜீ. பொன்னம்பலம், யாப்பிற்கு ஆதரவாக வாக்களித்த தமிழ்ப்பிரதிநிதிகளைத் தேர்தலில் தோற்கடிக்கப்போவதாகச் சபதம் செய்தார்.

### 1947 ஆம் ஆண்டு தேர்தல்

1947 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஏனைய கட்சிகளைவிட அதிக ஆசனங்களைப் பெற்றது. ஆனாலும் அரசாங்கத்தை அமைக்கும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் ஏழு இடங்களில் வெற்றி பெற்றது. சோல்பரி அரசியல் யாப்பிற்குச்சார்பாக வாக்களித்த தமிழ்த் தலைவர்களை, குறிப்பாக அருணாசலம் மகாதேவாவை, தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக ஜீ.ஜீ. பொன்னம்பலம் தனது பிறப்பிடத் தொகுதியான பருத்தித்துறைத் தொகுதியைவிட்டு, யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு, அருணாசலம் மகாதேவாவைத் தோற்கடித்து வெற்றிபெற்றார்.

ஏனைய தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்களான திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காங்கேசன்துறையிலும், ஓடிட்டர் ஜெனரலாக இருந்த திரு கே. கனகரத்தினம் வட்டுக்கோட்டையிலும், திரு சி. வன்னியசிங்கம் கோப்பாயிலும், நீதிபதியாக இருந்த திரு இராமலிங்கம் பருத்தித்துறைத் தொகுதியிலும், திரு வி. குமாரசாமி சாவகச்சேரித் தொகுதியிலும், திரு சிவபாலன் திருகோணமலைத் தொகுதியிலும் வெற்றிபெற்றனர். தேர்தலின் பின்னர் தமிழ்க் காங்கிரஸ், தமிழ்பேசும் மக்களின் தனிப்பெரும் அரசியல் கட்சியாக உருவெடுத்தது. அதன் தலைவர் திரு ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமிழரின் தலைவராகவும் விளங்கினார்.

### பிரஜாவுரிமைச் சட்டங்களும் தேர்தல் திருத்தச் சட்டமும்

1948 ஆம் ஆண்டு முதலாவது பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்படி ஒருவர் இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெற, அவர் இலங்கையில் பிறந்தவர் என்பதை நிரூபிக்க வேண்டும் அல்லது அவரது தந்தை இலங்கையில் பிறந்தவர் என்பதை நிரூபிக்க வேண்டும். இச்செயற்பாடு இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை கிடைக்காமல் செய்தது.

தொடர்ந்து இந்தியாவின் அழுத்தம் காரணமாக 1949 ஆம் ஆண்டு இந்திய - பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்படி இலங்கையர் அல்லாத ஒருவர் பிரஜாவுரிமையைப் பெற வேண்டுமாயின், அவர் திருமணம் செய்தவர் எனில், இலங்கையில் ஏழு வருடம் தொடர்ந்து வசித்தவர் என்பதை நிரூபிக்க வேண்டும். திருமணம் செய்யாதவர் எனில், 10 வருடங்கள் தொடர்ச்சியாக இலங்கையில் வசித்தவர் என்பதை நிரூபிக்க வேண்டும்.

இவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாமையினாலும், பிறப்பைப் பதியும்முறை 1911 இல் அறிமுகமானதாலும், அரசாங்கத்தினால் கேட்கப்பட்ட பல தகவல்களைப் பூர்த்திசெய்ய இவர்களால் முடியவில்லை. இதனால் இவர்களுக்குப் பிரஜாவுரிமை கிடைக்காமல் போனது. தொடர்ந்து இதே ஆண்டு தேர்தல் திருத்தச்சட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, பிரஜாவுரிமை உள்ளோருக்கு மட்டும் வாக்குரிமை வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. இதனால் இந்திய வம்சாவளியினருக்கு வாக்குரிமை இல்லாமல் போனது. 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் கட்சிசார்பாக, ஏழு உறுப்பினர்கள் வெற்றிபெற்றும், 1952 ஆம்



● ஜெகன் அருளையா

இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம் பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக, இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களிலும் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

# ஊக்கி (Uki):
# தொழில்நுட்பத் துறைக்கு வடக்கின் மாற்று வழி!

நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே 'வளரும் வடக்கு' எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.

**தமிழில்: த. சிவதாசன்**

டிசம்பர் 2019 இல் புதிய அரசு பதவியேற்றதும் 64,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைகள் வழங்கப்படுமென அமைச்சரொருவர் அறிவித்திருந்தார். இருந்தும் இலங்கை அவ்வப்போது பல்லாயிரக்கணக்கான புதிய பட்டதாரிகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறது. அத்தனை பேரும் அரச சேவைக்குள்ளேதான் நுழைய விரும்புகின்றனர். அரசசேவைகள் ஏற்கனவே இப்படியானவர்களினால் வீங்கிப்போயிருக்கிறது. அதிகாரிகள் அதிகரிப்பதனால் அதிகாரத்துவமும் (Bureaucracy) அதிகரிக்கிறது. அதிக அதிகாரத்துவம் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்துகிறது. இவ்வேளையில், இலங்கைக்கு மேலும் பட்டதாரிகள் தேவைதானா?

சமீபத்தில், குடிமக்கள் கணக்கெடுப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, 2006 - 2016 காலப்பகுதியில், இலங்கையின் பொதுப்பணித்துறை 30% வளர்ச்சி கண்டுள்ளது எனக் கூறப்படுகிறது. இதே காலப்பகுதியில் இலங்கையின் சனத்தொகை 7.5 வீதமே வளர்ந்துள்ளது. அதிகரித்த இந்த நான்கு மடங்குகளுக்கு ஈடாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் அதிகரித்திருக்கிறதா?

உயர்தரக் கல்வி மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் நுழைவதற்காக 'A'களைத் தேடி ஓடுகிறார்கள். உண்மையில் தொழில்முகவர்கள் எதிர்பார்ப்பது ஒரு தொழிலாளி கொண்டுள்ள மூன்று 'A'களான Attitude, Aptitude, Application ஆகியவற்றையே அல்லாது பாடங்களில் எப்படியான சித்திகளைப் பெற்றுள்ளார் என்பதையல்ல. ஒருவர் பெற்றுக்கொண்ட பட்டப்படிப்பு அவர் இப்படியான 'A'களைக் கொண்டிருக்கிறாரா என்பதைக் காட்டித்தராது. பட்டப்படிப்பு எதுவுமில்லாத ஒருவர் எப்படி நடந்துகொள்கிறார் என்பதைப் பொறுத்து அவரிடம் இந்த 'A'கள் இருப்பதை இலகுவில் அறிந்துகொண்டு விடலாம்.

### எப்படித் தன்னைக் காட்டிக்கொள்வது என்பதை Yarl IT Hub அறிந்துள்ளது

Yarl IT Hub இலங்கையின் வடமாகாணத்தில் வேர்கொண்டு, கொழும்பிலும் வெளிநாடுகளிலும் கிளைகளைப் பரப்பியுள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனம். அவர்களது செயற்கூற்று : "யாழ்ப்பாணத்தை அடுத்த சிலிக்கன் பள்ளத்தாக்கு ஆக்குவது" (To Make Jaffna the Next Silicon Valley). இந்த அமைப்பின் நிறுவன அங்கத்தவர்களில் பலர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை உருவாக்கியும், நிர்வகித்தும், பல்லாயிரக்கணக்கான பணியாளர்களுக்கு வேலைகளை வழங்கியவர்களுமாவர். ஒரு நல்ல பணியாளி எப்படியிருக்கவேண்டுமெனக் கோட்பாடு வகுப்பவர்களல்ல இவர்கள். ஒரு நல்ல பணியாளியில் நிறுவனமே தங்கியுள்ளது என்பதை உணர்ந்தவர்கள் இவர்கள்.

Yarl IT Hub முதலில் செய்த காரியம், அரச பல்கலைக்கழகங்களுக்கோ, தனியார் கல்லூரிகளுக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ போகமுடியாதவர்களது அடிப்படைப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்தது. பின்னர் அவர்களை மையப்படுத்திய ஒரு பயிற்சித் திட்டத்தை உருவாக்கி அதைச் செயலாக்குவதற்காக 'ஊக்கி' (Catalyst) என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தது. 'ஊக்கி' கலிபோர்ணியாவிலிருக்கும் தகவல் தொழில்நுட்பக் கல்வி, முகாமைத்துவ அறக்கட்டளை (Information Technology Education and Entrepreneurship Foundation (ITEE Foundation), GiZ (ஜேர்மனியைத் தளமாகக் கொண்டு ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. ஆகியவற்றின் ஆதரவில் இயங்குமமைப்பு) மற்றும் லெபாரா அறக்கட்டளை (ஈழத்தமிழரின் நிறுவனம்) ஆகிய அமைப்புகளின் ஆதரவுடன் நிர்வகிக்கப்படுகிறது. ஏப்ரல் 2017 இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம், மார்ச் 2019 முதல் கிளிநொச்சியிலும் இயங்கி வருகிறது.

### கிளிநொச்சி 'ஊக்கி' நிறுவனத்தின் நிர்வாகி

கிளிநொச்சி 'ஊக்கி' நிறுவனத்தின் தலைமை நிர்வாகி சயந்தினி செல்வராசாவுடன் நான் பேசினேன். கிளிநொச்சியில் பிறந்து வளர்ந்த சயந்தினி, பிரித்தானியப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கொழும்பிலுள்ள கல்லூரியொன்றில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறார். கொழும்பிலுள்ள ஓறியோன் நகரிலிருக்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனமொன்றில் மென்பொருள் பொறியாளராகப் பணியிலிணைந்த அவர் 'யாழ் ஐ.ரீ. ஹப்' இலும் இணைந்தார். பின்னர் கிளிநொச்சி 'ஊக்கி' நிறுவப்பட்டபோது அதன் தலைமை நிர்வாகியாகும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது.

'ஊக்கி' ஒரு தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம். அதில் சேர்வதற்குத் தகைமையாய், க.பொ.த உயர்தரத்தை வெற்றிகரமாக முடித்திருந்தால் போதுமானது. சித்திகளைப் பற்றிப் பொருட்படுத்த மாட்டார்கள். அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி

மறுக்கப்பட்டவர்கள், தனியார் கல்லூரிகளில் சேர்வதற்கு வசதியற்றவர்கள், தகவல் தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ளவர்கள், சமூக மற்றும் இதர செயற்பாடுகளில் ஈடுபாடுள்ளவர்கள் எனப் பலருக்கும் அது சந்தர்ப்பத்தை வழங்கும் என சயந்தினி கூறுகிறார்.

"'ஊக்கி'யில் இணைவதற்கு நிறைய விண்ணப்பங்கள் இருந்தும், இடப்போதாமையால் அனைவரையும் சேர்த்துக்கொள்ள முடியாமலிருக்கிறது. 20 இடங்களுக்கு 45 விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளன. அவை அத்தனையும் கிளிநொச்சி வளாகத்துக்கு மட்டுமே. வெற்றிகரமான விண்ணப்பதாரிகளுக்கு கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது" என்கிறார் சயந்தினி.

'ஊக்கி'யில் நிரந்தர விரிவுரையாளர்கள் பணியாற்றுகிறார்கள். அதேவேளை 'யாழ் ஐ.ரீ ஹப்' இலிருந்து சிறப்பு வருகை விரிவுரையாளர்கள் வந்து, தகவல் தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல், தொழில் முகாமைத்துவம் போன்ற விடயங்களில் விரிவுரைகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் செய்கிறார்கள். அத்தோடு, 'ஊக்கி' ஆங்கிலமொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகை விரிவுரையாளர்கள் மூலம் ஆங்கிலக்கல்வியையும் போதிக்கிறது. ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பத்தின் இணைப்பு மொழி. அது சிங்கள - தமிழ் மொழி பேசும் பணியாளர் மற்றும் இலங்கையின் வேகமாக வளர்ந்துவரும் சர்வதேச வாடிக்கையாளர் ஆகியோருடன் தொடர்புகளைப் பேணும் மொழியாகவும் உள்ளது. அத்தோடு, ஒரு வணிக நிறுவனத்தை ஆரம்பிக்கவும், நிர்வகிக்கவும் தேவையான ஆரம்ப நெறிமுறைப் பயிற்சிகளையும் 'ஊக்கி' தன் மாணவர்களுக்கு வழங்குகிறது.

### வேலை வாய்ப்புகள்

'ஊக்கி'யில் பயிலும் மாணவர்களைச் சிறந்த நிறுவனங்களில் பயிற்சிப் பணியாளராக அமர்த்தும் உதவிகளையும் இந்நிறுவனம் செய்து கொடுக்கிறது. Kale Systems, 99X Technologies, Idea Factory மற்றும் Cookoo Eats ஆகிய நிறுவனங்கள் 'ஊக்கி' மாணவர்களைப் பயிற்சிப் பணியாளராகச் (Interns) சேர்த்துக்கொள்கின்றன (இவற்றில் ஒரு நிறுவனத்தின் நிறுவுநர் 'ஊக்கி'யில் கல்வி கற்றுத் தேறியவர்).

### சாதனைகள்

'யாழ் ஜீக் சலெஞ்' (Yarl Geek Challenge) என நடத்தப்படும் திறமைப்போட்டியில் கலந்துகொள்ளும் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டியில், 'ஊக்கி' மாணவர்களும் கலந்துகொள்வதுமல்லாது வெற்றியும் ஈட்டி வருகிறார்கள் என்பது, இதில் விசேடமானது. இந்த வருடம் தென்னாபிரிக்காவில் நடைபெறும் உலகத் தொழில் முயற்சி மாணவர் விருது விழாவில் (Global Entrepreneur Students Award) இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யதுஷா குலேந்திரன் ஒரு 'ஊக்கி' மாணவி மட்டுமல்ல, இலங்கைப் பல்கலைக்கழகப் போட்டியாளரை வெற்றிகொண்ட ஒருவருமாவார். அவரது 'ஓலை' (Olai) என்ற தொழில் முயற்சி நிறுவனத்தை இவ்விருது விழாவில் காட்சிப்படுத்தவுள்ளார்.

### ஒரு 'ஊக்கி'யின் பட்டதாரி

சிறீராம் ஜெகதீசன் பாடசாலையில் சறுக்கியதை ஒப்புக்கொள்கிறார். பருத்தித்துறையிலுள்ள பிரபல பாடசாலையான ஹாட்லிக் கல்லூரிக்குச் செல்லக்கூடிய வசதிகளிருந்தும் அவர் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுவதும், தொலைக்காட்சி பார்ப்பதிலும் தன் நேரத்தைச் செலவிடுவதுண்டு. அவர் புத்தகங்களைக் கண்டது பள்ளிக்கூடத்தில் ஆசிரியை ஒருவரின் மேற்பார்வையின்போது தான். அவர் மேற்கொண்டு முயற்சி எடுத்தால் மருத்துவராக உருவாக முடியுமென அவரது இன்னுமொரு ஆசிரியர் சொன்னதாகச் சொல்கிறார் சிறீராம். நான் அவரை, இக்கட்டுரைக்காக செவ்வி கண்டபோது, அவரது ஆங்கிலப் புலமையையும், பேச்சுத் திறனையும், தன்நம்பிக்கையையும் கண்டு அசந்து போனேன். அவரது ஆசிரியர் சொன்னது சரிதான், நான் ஒரு மருத்துவராக வந்திருக்கக்கூடியவருடன் தான் உரையாடுகிறேன் எனப் புரிந்துகொண்டேன். விதி வேறு விதமாக இருந்திருந்தால் நான் அவரது நோயாளியாகவும் இருந்து, அவர் எனது இரத்த அழுத்தம், கொலெஸ்டெரோல், சீனி விடயங்களைப் பற்றி செவ்வி கண்டிருக்கவும் கூடும் (குளிசைகளுக்கு நன்றி, எல்லம் நன்றாகவே உள்ளது).

சித்தியெய்தப் போவதில்லை என உணர்ந்ததும் சிறீராம் 2014 இல் தனது க.பொ.த. உயர்தரப் பரீட்சையை எழுதவில்லை. தனது முயற்சிகளுக்கு மேலும் கால அவகாசம் வாங்கிக்கொள்ளும் அதேவேளை அவர் கிரிக்கெட்டுடனும், 'ரீ. வீ.'யுடனும் காலத்தைப் போக்கினார். 2015, 2016 ஆண்டுகளில் அவர் எடுத்த உயர்தரப் பரீட்சைகள் அவரைக் கைவிட்டுவிட்டன. இத்தோல்விகள் அவரது முயற்சியைத் தூண்டிவிட்டன.

பல்கலைக்கழகம் பற்றி நினைக்கவே முடியாத நிலையில், இலங்கையின் தனியார்

கல்லூரியொன்றில் இணைந்து பட்டப்படிப்பை முடிக்கத் திட்டமிட்டார். பாடசாலையில் படிக்கும்போதே சிறீராம் தனது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஃபோன் மற்றும் கணினிகளைப் பழுதுபார்த்துக் கொடுப்பார். கருவிகளின் மீது அவர் கொண்டிருந்த காதல் அவரை ஒரு தகவல் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெறத் தூண்டியது. இருப்பினும், ஒரு மென்பொருள் நிறுவனத்தில் உயர்பதவி வகிக்கும் அவரது குடும்ப நண்பர் ஒருவர் 'ஊக்கி'யில் இணையும்படி பரிந்துரைத்தார்.

## ஊக்கி கொடுத்த ஊக்கம்

பட்டப்படிப்பு என்றால் குறந்தது 4 அல்லது 5 வருடங்கள் ஆகும். ஆனால் 'ஊக்கி' ஆறு மாதங்களிலேயே ஒருவரைப் பயிற்சிப் பணியில் (Internship) இணைத்துவிடுகிறது. சிறீராம் 'ஊக்கி'யில் சேர்வதற்கு விண்ணப்பித்து 2018 இன் ஆரம்பத்தில் அதில் இணைந்து தன் பயிற்சியைத் தொடங்கினார்.

"ஊக்கி' ஒரு கல்லூரி மாதிரியல்ல. அது ஒரு குடும்பம் மாதிரி" என்கிறார் சிறீராம்.

பல நாட்கள் 'ஊக்கி'யில் மகிழ்ச்சியாகக் கழிந்தன. அரைவாசி நாட்களில் அங்கு 'கோடிங்' (Coding) எனப்படும் மென்பொருள் வகையைத்தான் கற்பித்தார்கள். இன்றைய தகவல் தொழில்நுட்பம் இவ்வகை மென்பொருளை மையப்படுத்தித்தான் இயங்குகிறது. மீதி அரைவாசி நாட்களில் துறைப்பிரவேசத்துக்குத் தேவையான வாழ்க்கைத் திறன்கள் (Life skills) பற்றிய போதனைகள் நடக்கும். காட்சிப்படுத்தல் (Presentation), செவ்வியை எதிர்கொள்ளல் (Interview), உடையணிதல் (How to dress), தொழிலாரம்பம் (How to start a business), ஆரோக்கியத்தைப் பேணுதல் (How to keep fit), ஆங்கிலம் (English) ஆகியன இப்போதனைகளில் சில. நான் சிறீராமை இக்கட்டுரைக்காகச் செவ்வி கண்டபோது இத்தனை திறன்களையும் அவரிடம் அவதானிக்க முடிந்தது.

## ஊக்கியில் வகுப்பு

ஆகஸ்ட் 2018 இல் சிறீராம் தனது பயிற்சிப் பணியை 'அரிமா'வில் ஆரம்பித்தார். அரிமா, யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட ஒரு மென்பொருள் நிறுவனம். இதைப்பற்றி நான் வேறொரு தடவை 'லங்கா பிசினெஸ் ஒன்லைனில்' எழுதியிருக்கிறேன். ஜனவரி 2019 இல் 'அரிமா' சிறீராமுக்கு முழுநேரப் பணியொன்றை வழங்கியது. அசோசியேட் சொஃப்ட்வெயர் எஞ்சினியர் பதயிலிருந்த அவர் சொஃப்ட்வெயர் எஞ்சினியராகப் பதவியுயர்த்தப்பட்டார். தற்போது அவர் 'அரிமா'வின் சகோதர நிறுவனமான 'ஆரோக்யா லைஃப்' (Arogya.Life) எனும் நிறுவனத்தில் முக்கிய பொறியாளர்களில் ஒருவராக இருக்கிறார்.

'ஆரோக்யா' இன்னுமொரு வெற்றியின் அடையாளம். மருத்துவமனைகளின் செயற்பாட்டு முகாமைத்துவத்தை (Critical Hospital Management System) நிர்வகிக்கும் மென்பொருட் தொகுதியை அது வடிவமைக்கிறது. இலங்கையில், கொழும்பு, தலவாட்டுகொடவிலுள்ள ஹேமாஸ் மருத்துவமனை, இரத்தினபுரியிலுள்ள சிங்ஹ மருத்துவமனை, யாழ்ப்பாணத்திலுள்ள மூளாய் மருத்துவமனை ஆகியன இந்நிறுவனத்தின் மென்பொருளையே பாவிக்கின்றன.

'அரிமா'வுக்கு யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் அலுவலகங்கள் இருக்கின்றன. ஆங்கிலத்தையே அது தொடர்பு மொழியாகப் பாவிக்கிறது.

சிறீராமின் சகபாடிகள் ஹாட்லிக் கல்லூரியில் 2014 இல் உயர்தரப் பரீட்சையை எழுதி, 2015 இல் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று 2019 இறுதியில் தமது பட்டங்களைப் பெற்றார்கள். சிறீராம் 2016 வரையில் தனது உயர்தரக் கல்வியைக் குழப்பி வந்தார். 2018 இல் 'ஊக்கி'யில் இணைந்து ஜனவரி 2020 இல் அவர் 'அரிமா'வின் நிரந்தரப் பணியில் முதலாவது பதவியுயர்வையும் பெற்றுவிட்டார்.

## பணி நிறுவனம்

சிறிகரன் அரியகுமார், சிறீராமைப் போலல்லாது, ஹாட்லிக் கல்லூரிக்குச் சென்றார். தற்போது கொழும்பில் வாழ்கிறார். தொழில்நுட்பம், பொறியியல் போன்ற துறைகளில் இலங்கையின் முன்னணிப் பல்கலைக்கழகமான மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் 2008 இல் தன் பட்டக்கல்வியைத் தொடங்கினார். ஒரு தொழில்நுட்ப வணிகத்தின் முதற்தர உதாரணம் அவர். பட்டம் பெற்றபின், இரு வேறு பிரித்தானிய மென்பொருள் நிறுவனங்களுக்குப் பணியாற்றியபின் தற்போது இலங்கையில் இருக்கும் அவரது குடும்பக் கட்டுமான நிறுவனமொன்றில் பணிபுரிகிறார்.

நிறுவனங்களுக்கான வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning (ERP)) என்றொரு மென்பொருளைச் சிறிகரன் வடிவமைத்தார். பின்னர் 2015 இல் அவர் 'ரெக்கோறின்' (Techorin) என்றொரு மென்பொருள் நிறுவனத்தை ஆரம்பித்து அதன்மூலம் தனது மென்பொருள்களை

வடிவமைத்து, சந்தைப்படுத்தி வருகிறார். வடஅமெரிக்க நிறுவனமொன்று அவர் உருவாக்கிய 'வெயர்ஹவுஸ் மனேஜ்மெண்ட் சிஸ்டம்' (Warehouse Management System) ஒன்றைப் பாவித்து வருகிறது. 'ரெக்கோறின்' தற்போது இணைய, கைத்தொலைபேசி அப்பிளிகேசன்களை உருவாக்குவதில் முனைப்புக்காட்டி வருகிறது.

சிறிகரனும் 'யாழ் ஐ.ரீ ஹப்' இல் ஒரு அங்கத்தவர். 'யாழ் ஜீக் சலஞ்' போட்டிக்காகப் பல குழுக்களை அவர் தயார்ப்படுத்தித் தந்திருக்கிறார். 2012 இல் அவர் தயார்ப்படுத்திய குழுக்களில் ஒன்றுதான் 'அரிமா'. 'ஊக்கி' பற்றி நான் சிறிகரனின் அபிப்பிராயத்தைக் கேட்டேன். 'ஊக்கி'யின் மூன்று பயிற்சி மாணவர்கள் அவரிடம் பணிபுரிந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் திமோஷன். 2019, பெப்ரவரியில் திமோஷனை அவர் தனது பயிற்சிப் பொறியாளராகச் சேர்த்திருந்தார். புதியவர்களை அவர்களது சுய விருப்புகளுக்கேற்ப சவால்களை ஏற்றுப் பணியாற்ற அனுமதிப்பது வழக்கம். முன்னணிப் பல்கலைக்கழகங்களிலிருந்து வந்தவர்கள் உட்படப் பலர் 34 நாட்கள் எடுத்து இப்பணிகளைச் செய்து முடிப்பார்கள். திமோஷன் அதை ஒரே நாளில் முடித்துவிட்டார். அவரது திறமையைக் கண்ட சிறிகரன், நிறுவனத்துக்குப் புதிய வரவான திமோஷனுக்குப் பதவி உயர்வு கொடுத்து 'புறொடக்ட் டெவொலப்மென்ட்' (Product Develop ment) திணைக்களத்துக்கு மாற்றிவிட்டார். முன்னரே சில மாதங்களில் அதையும் வெற்றிகரமாக்கிய திமோஷனுக்கு அடுத்த உயர்வு 'மொபைல் அப்ஸ்' திணைக்களத்துக்கு கிடைத்தது. அக்டோபர் மாதம், அவரோடு சமகாலத்தில் இணைந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேலாக, திமோஷன் 'சீனியர் சொப்ட்வெயர் எஞ்சினியராகப்' பதவியுயர்த்தப்பட்டார்.

## எதிர்காலம்

பல்கலைக்கழகத்துக்கான ஓட்டத்தில் பல திறமைகள் அடிபட்டுப் போகின்றன என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக, தனியார் பல்கலைக்கழகங்களுக்குப் போவதற்கு வசதியில்லாத மாணவர்கள் சந்தர்ப்பங்களை இழக்கிறார்கள். அரச புள்ளி விபரங்களின்படி 2018 இல் மட்டும் அரச பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான 167,907 மாணவர்களில் 31,451 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். 130,000க்கும் மேலானவர்கள் தகைமை பெற்றிருந்தும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்றது.

'ஊக்கி'யும் 'யாழ் ஐ.ரீ ஹப்' நிறுவனமும் மிகப்பெரும் சவால்களுடனான திட்டங்களை வகுத்திருக்கின்றன. 2017 இல், அந்நிறுவனங்கள் வகுத்த 5 ஆண்டுத் திட்டத்தின்படி, 10,000 மாணவர்களுக்கு டிஜிட்டல் வழிக் கல்வியும், 1,000 மாணவர்களுக்கு தொழில்நுட்பத் துறையில் வேலை வாய்ப்பும், 100 புதிய தொழில் முயற்சிகளும் வடமாகாணத்தின் வழியாக நிறைவேற்றப்பட வேண்டும். இந்த இரண்டு நிறுவனங்களும் முற்றுமுழுதாகத் தனியார் நிதியில், உலகம் முழுவதிலுமிருந்து தகவல் தொழில்நுட்ப நிபுணர்களின் நேரம், திறமை, ஆதரவு ஆகியவற்றுடன் நிர்வகிக்கப்படுபவை. 'ஊக்கி' தங்கள் தொழில்நுட்பக் கல்வியைப்பெற்றுப் பலன் பெறும்படி மாணவர்களுக்குத் தொடர்ந்தும் அழைப்பு விட்டுக்கொண்டிருக்கிறது. நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த யாராவதோ 'ஊக்கியில்' இணைந்து பலன்பெற விரும்பினால், அவர்களது இணையத்தளம் http://uki.life/ வரவேற்கின்றது.

Uki மற்றும் Yarl IT Hub பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்பினால் பாலதாசன் சயந்தன் அவர்களுடன் sayanthan@yarlithub.org என்ற ஈமெயில் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.



த.சிவதாசன்

1983ஆம் ஆண்டு முதல் கனடாவில் வசித்துவரும் தொழில்முறை மின்பொறியாளரான த. சிவதாசன் அவர்கள் தனது கல்வியை இங்கிலாந்தில் மேற்கொண்டார். கனடாவின் 'TVI' எனும் தொலைக்காட்சியில் 'வெளிச்சம்' என்ற பெயரில் சமகால அரசியல் நிலைவரம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை நடாத்தியிருக்கிறார். விபுலானந்த அடிகளின் யாழ் நூல் மூன்றாம் பதிப்பு, மு. தளையசிங்கம் படைப்புகள் போன்ற நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். எழுத்து, ஆய்வு, விமர்சனம், மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் தீவிரமாகப் பங்கேற்று வரும் இவர், கனடாவில் முதன் முதலாகத் தமிழில் வெளிவந்த 'தமிழ் எழில்', 'நலம்', 'மறுமொழி' ஆகிய சஞ்சிகைகளினதும் 'வீடு' எனும் பத்திரிகையினதும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். 'தாயகம்' என்னும் பெயரில் கனடாவில் வெளிவரும் சஞ்சிகையில் 'அசை' என்னும் தலைப்பில் பத்திகளை எழுதியதால் 'அசை சிவதாசன்' என இலக்கிய வட்டத்தில் அறியப்படுகிறார். 'மறுமொழி.கொம்' என்னும் இணையத்தளத்தைக் கடந்த பதினைந்து வருடங்களாக நடத்தி வருகிறார்



● அருணாசலம் லெட்சுமணன்

‘ம.மா கொத் உனுக்கொட்டுவ தமிழ் வித்தியாலயத்தின்’ அதிபரான அருணாசலம் லெட்சுமணன், ‘நிகர்’ சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதம அமைப்பாளருமாவார். தேசிய, பன்னாட்டு ஆய்வரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்து வருகிறார். 2023இல் மலேசியாவில் இடம்பெற்ற பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஓர் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய, பன்னாட்டு இதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். பயண இலக்கியங்கள், சமூக, கலை, இலக்கிய, கல்வித்துறைச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு கவிஞருமாவார். சிறுவர் பாடல்கள், சிறுவர் இலக்கியம் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகளை தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர் கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்.

# பொன்னர், சங்கர்– மரபும் மாற்றமும்

நாட்டுப்புறத் தெய்வங்களில் பல, கொலைகளில் உருவானதாகவே அமையப்பெற்றுள்ளன. அவ்வாறான சம்பவங்களின் பின்னணியிலேயே பொன்னர் - சங்கர் பற்றிய அறிதல் புலனாகிறது. முன்மாதிரியான செயற்பாடுகள், உதாரணம் பொருந்திய வாழ்க்கை முறைகள் என்பன காலம் கடந்த நிலையிலும் மக்களால் ஆராதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறான சம்பவங்களுள் ஒன்றாகவே பொன்னர் - சங்கர் பற்றிய அவதானம் கைக்கொள்ளப்படுகின்றமையை அறியலாம். தமிழ்நாட்டில் பதினைந்தாம் நூற்றாண்டில் நிகழ்ந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட பொன்னர் - சங்கர் கதைமரபு, நாட்டாரியல்சார் பண்புகளுடனும் நிகழ்த்துகலை வடிவங்களுடனும், அதனுடன் தொடர்புடைய அனுஷ்டிப்புகளுடனும் இணைந்து கைக்கொள்ளப்படுகின்றது எனலாம். அவ் உண்மை வரலாறு, இன்றுவரையில் மீட்டிப்பார்க்கப்படுவதற்கு பல காரணங்கள் ஏதுவாக அமைந்துள்ளன. அச்சம்பவங்கள் மரபுநிலையிலிருந்து காலவோட்டத்திற்கு ஏற்ப எவ்வாறான மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன என்பதை உற்றுநோக்குவதாக இவ் ஆய்வு அமையப்பெறும். அத்தோடு பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியின்போது தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்களும் பொன்னர் - சங்கர் தொடர்பிலான கவனத்தில் அதனை பயில்நிலைக்குரியதாக முக்கியத்துவப்படுத்தி வருகிறார்கள். அண்ணன்மார் கதை, பொன்னர் - சங்கர் நாடகம், பொன்னர் - சங்கர் கூத்து என்றவாறு அதனுடன் தொடர்புபட்ட பாடல்கள், கதைகள், ஆய்வுகள் என்பன வழிபாட்டு நுட்பத்துடனான அணுகுமுறைகளோடு பயில்நிலைக்குரியதாகவுள்ளது. மலையக மக்களும் இவ்வரலாற்றுச் சம்பவம் தொடர்பில் அவதானத்தைச் செலுத்தி வருகிறார்கள். அவ்விடயங்கள் தொடர்பான ஆவணப்படுத்தலோடு அதன் செல்வாக்குநிலை தொடர்பிலான பார்வையைச் செலுத்தும் வகையில் இவ் ஆய்வு விரிவுபெறும். கள ஆய்வுகளில் கிடைக்கப்பெற்ற அனுபவங்களோடு, பொன்னர் - சங்கர் தொடர்பில் ஏலவே இடம்பெற்ற ஆய்வு முடிவுகள், நேர்காணல் மூலமாக பெறப்பட்ட தகவல்கள், எழுத்தாக்க, மின்னியல் ஆவணங்கள் ஊடாக பெறப்பட்ட தகவல்கள் ஆகியவற்றைக்கொண்டு இவ் ஆய்வு ஒருங்கிணைக்கப்படுவதாக அமையப்பெறும்.

பொன்னர் - சங்கர் கதைமரபு நீண்டகாலமாகவே பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் வீரப்பூரில் இடம்பெற்ற உண்மைச் சம்பவங்களைக்கொண்டு புனைவுகளையும் இணைத்து உருவாக்கப்பட்ட கதை அம்சமாக இது கைக்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் இடம்பெற்ற காலம் தொடர்பில் வேறுபட்ட கருத்துகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே சம்பவம் இடம்பெற்ற களங்கள் தொடர்பிலான வேறுபட்ட கருத்துகளும் நிலவுகின்றன. அவ்வாறான கருத்துகளை முன்வைத்தவர்களில் வே.அ. பழனிச்சாமி, கி. பழனிச்சாமி, மு. கருணாநிதி, சாண்டில்யன், கனேடியப் பேராசிரியர் பிருந்தா பெக், க. கனகராசு ஆகியோரின் ஆய்வுப்பணிகள் குறிப்பிடத்தக்கதாகும். காலக்கணக்கெடுப்பு என்ற வகையில் கி.பி 15 ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கு முன்னைய, பின்னைய ஆண்டுகளை அண்மித்ததாகவே இச்சம்பவம் அமைகின்றமை கவனிக்கத்தக்கது. அண்ணன்மார் கதை எனும் சிறப்புப் பெற்ற வகையிலே பொன்னர் - சங்கர் எனும் பாத்திரங்களைப் பிரதானப்படுத்துகின்ற தன்மையிலே, தங்காள் எனும் பாத்திரமும் சிறப்பிற்குரியதாய்ச் சித்திரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேளாண்மையை வாழ்வாதாரமாகக்கொண்ட ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறையினரின் வாழ்க்கைத்தடத்தைப் பதிவு செய்வதாகவே அண்ணன்மார் கதைமரபு அமைகிறது. செவிவழியாகப் பேணப்பட்டு வந்தநிலையில், இக்கதைமரபை ஆவணப்படுத்தும் பிரயத்தனங்கள் முக்கியமானவையாக அமைகின்றன. பாடல் வடிவில் ஆவணப்படுத்தப்பட்ட இக்கதை அம்சத்தை ஈ.சீ. இராமசாமியின் வாயால் இசைக்கக்கேட்டு ஆவணப்படுத்திய முயற்சிகள் மனங்கொள்ளத்தக்கதாகும். பின்னாளில் 'பொன்னழகரென்னும் கள்ளழகர் அம்மானை', 'பொன்னர் சங்கர் அம்மானை', 'அண்ணன்மார் படுகளத்தை தேடி தங்காள் புலம்பல்', 'அண்ணன்மார் சுவாமி கதை', 'அண்ணன்மார் கதை' ஆகிய தலைப்புகளில் ஆவணப்படுத்திய முயற்சிகளும் போற்றுதற்குரியதாகும். தமிழகத்தில் உடுக்கடி பாடல் வடிவம், கூற்றுவகைப் பாடல்களைக் கொண்டு ஆற்றுகைப்படுத்தும் படுகள வடிவம், ஒயில் கும்மி வடிவம், கூத்து வடிவம், தெருக்கூத்து வடிவம், மேடை நாடக வடிவம், வில்லுப்பாடல் வடிவம் என்றவாறு இது பயில்நிலைக்குரியதாகக் கையாளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு இக்கதையம்சத்தோடு

தொடர்புபட்ட பாத்திரங்கள் தெய்வங்களாக அனுஷ்டிக்கப்படுவதையும் காணலாம். அவ்வாறே பாத்திரங்களாக வழிபடப்பட்டவர்கள் தெய்வங்களாக அனுஸ்டிக்கப்படுகின்ற தன்மையையும் காணலாம்.

அதன் தொடர்ச்சிநிலையில் குங்குமம் இதழில் வெளிவந்த சித்திரக் கதை வடிவம், மு. கருணாநிதியின் திரைக்கதை வடிவம், பிருந்தா பெக்கின் கார்ட்டூன் வடிவம், சாண்டில்யனுடைய கதை வடிவம் போற்றனவும் குறிப்பிடத்தக்கது. அண்ணன்மார் கதைத் தொடர்பில் பக்திக்குரிய அனுட்டானங்கள் தொடர்பிலான அவதானம் குறிப்பிடத்தக்கது. கோவை மாவட்டம், வீரத்திருப்பூர், மணப்பாறை ஆகிய இடங்கள் வழிபாட்டுத்தன்மைக்குச் சிறப்பிடங்களாக அமைகின்றன. இக்கதை 'குன்னுடையான் கதை' எனவும் அழைக்கப்படுவதுண்டு. இக்கதையை ஆங்கிலத்தில் அறிமுகப்படுத்திய கனேடியப் பேராசிரியர் பிரெண்டா பெக் அவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். ஐம்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக வீரப்பூர் தளத்தில் இருந்து இக்கதை மரபு தொடர்பில் ஆய்வினை மேற்கொள்ளும் அன்னாரின் ஈடுபாடு கவனிக்கத்தக்கது. களத்தில் இருந்து பாடல்களை ஆவணப்படுத்தியதோடு மாத்திரம் அல்லாமல் அவ்விடயம் தொடர்பில் ஆய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'வலங்கையார், இடங்கையார்' போன்ற நூல்கள் இவ்விடயம் தொடர்பிலான பார்வைக்கு வலிமை சேர்ப்பதாக அமைகின்றன. அத்தோடு அவ் ஆய்வுகளை ஆங்கிலத்திலும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. 'Elder Brother's Story' (Oral Epic of Tamil)' என்ற அவரது நூல் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது. இக்கதை முதலாம் தலைமுறை கோளாத்தார் கவுண்டரை மூத்தவராகக் கொண்டு தொடங்கப்பெறுகிறது. கோளாத்தார் கவுண்டருக்கு ஆறு இளைய சகோரதர்கள். அவர்கள் வாழ்ந்த வெள்ளிவள நாட்டில் கடும் பஞ்சம் ஏற்படுகிறது. கோளாத்தார் கவுண்டர் சோழ அரசனிடம் சென்று பொன்னிவள நாட்டில் விவசாயம் செய்வதற்கான வாய்ப்பைப் பெறுகிறார். சிறிதுகாலம் சென்றவுடன் கோளாத்தாரின் தம்பிமார்களும் வந்து இணைகிறார்கள். எல்லோரின் கடும் உழைப்பால் பொன்னிவள நாடு செல்வச் செழிப்புறுகிறது. பின்னர் கோளாத்தார்மீது தம்பிகளுக்கு ஏற்பட்ட பொறாமையின் காரணமாக முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. கோளாத்தாருக்கும் பவளாத்தாளுக்கும் திருமணம் இடம்பெறுகிறது. 'குன்றுடையான்' மகனாகப் பிறக்கின்றான். குன்றுடையான், 'மண்ணுடையான் கவுண்டர்' எனவும் அழைக்கப்படுகிறான். குன்றுடையான், 'தாமரை நாச்சி' எனும் 'பெரிய நாச்சியை' திருமணம் செய்கிறான். இவர்களுடைய பிறப்பு, வேளாண்மை நுட்பம், வாழ்வியல் அம்சங்கள், இன்ப - துன்பம் ஆகிய நிலைகளில் இருந்து இரண்டாம் தலைமுறை கதையம்சம் நகர்கிறது. குன்றுடையான் - பெரியநாச்சி தம்பதிகளுக்கு நீண்டகாலம் பிள்ளைகள் இன்றி மனம் வருந்திய நிலையில், ஈஸ்வரனை நினைத்துக் கடுந்தவம் இருக்க வேண்டி ஏற்படுகிறது. அதனடிப்படையில் தாமரை நாச்சியாரே இக் கடுந்தவத்தை மேற்கொள்கிறார். தாமரையின் மூக்கில் கிளிகள் கூடுகட்டி வாழும் நிலையிலும், தவம் தொடர்கிறது. அவ்வாறு வாழ்ந்த கிளிகளே இக்கதையின் தொடர்ச்சியில் திருப்பத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றன. இவ் நகர்வுகளில் விஷ்ணுவின் பிரசன்னம் முக்கிய அங்கங்களாக அமைகின்றமை கவனிக்கத்தக்கது.

கடுந்தவத்தில் பேறுபெற்று குன்றுடையான் - தாமரை நாச்சி தம்பதியினர் பொன்னர், சங்கர், தங்காள் ஆகியோரைப் பெற்றெடுப்பதோடு மூன்றாவது தலைமுறை தொடங்கப்பெறுகிறது. குடும்ப உறவுகளைப்போல பகையும் தலைமுறைகளைத் தாண்டி பயணிக்கிறது. கோளாத்தாரின் தம்பிமார்கள் இரண்டாம் தலைமுறையினரான குன்றுடையான் - பெரியநாச்சி ஆகியோருக்கும் தொல்லைகள் கொடுத்த நிலையில், பொன்னர் - சங்கரையும் பிறப்பிலேயே அழிக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக்கொள்கிறார்கள். இவ்விடயத்திற்கு மருத்துவிச்சியின் உதவியை நாடுகிறார்கள். மருத்துவிச்சியும் பொன்னரையும் சங்கரையும் பிறந்தவுடன் கொல்வதற்கு இணங்கி அதற்கான முயற்சியை மேற்கொள்கிறாள். நிலவறையில் புதைக்கப்பட்ட பொன்னரும், சங்கரும் சிவனின் அருளால் ஐந்து வருடங்கள் நிலவறையிலேயே வாழ்வதாகக் கூறப்படுகிறது. மாறாக, செல்லாண்டி அம்மன் வளர்த்ததாகவும் கூறப்படுகிறது. உயிர் அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருந்த நிலையில் சவால்களுக்கு மத்தியில் பொன்னர், சங்கரின் காலம் தொடங்கப்பெறுகிறது. விதிப்படி அவர்கள் இருவரின் வாழ்வும் பதினாறு வயது வரையிலான ஆயுளைக் கொண்டதாகவே அமையப்பெறுகிறது. வித்தைகளில் சிறந்து விளங்கும் இருவரும் விவசாயத்தைக் காப்பதற்கான அணுகுமுறைகளுடன் வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்வது கதையோட்டத்தில் முக்கிய

இடத்தைப் பெறுகின்றது. அவர்கள் தங்கள் தங்கையுடன் மிகுந்த பாசம்கொண்ட சகோதர உறவை உருவாக்குகின்றனர். பொன்னர் - சங்கர் இருவருக்கும் திருமணம் இடம்பெற்றாலும், இல்லற வாழ்வுக்கு இருவரும் முக்கியத்துவம் வழங்காமை பலவீனமான அம்சமாக அமைகிறது. பொன்னர் - சங்கரின் மனைவிகள் வெறுமனே வந்துபோகின்ற பாத்திரங்களாகவே சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

அபூர்வக்கிளிகள் மீதான தங்கையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அண்ணன்மார் இருவரும் காட்டுக்குச் செல்கிறார்கள். இருவரின் வீர சாகச செயல்களுக்குத் துணையாக சாம்புவன் என்ற பாத்திரம் மிக முக்கியத்துவம் பெறுகிறது. பொன்னர், சங்கருடனேயே சாம்புவனின் வாழ்க்கையும் நகர்கிறது. இவ் இருவரின் மரணத்தின் போதே சாம்புவனும் தன்னை மாய்த்துக்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. தங்காள் ஆசைப்படும் கிளிகள் அவர்களுடைய தாய், தவத்தில் இருக்கும்போது தாயின் மூக்கில் கூடுகட்டி வாழ்ந்த கிளிகள் எனவும் சித்திரிக்கப்படுகிறது. கிளிகளைப் பிடிப்பதற்குச் செல்லும் வழியில் வேங்கையொன்றைச் சங்கர் வெட்டிவிடுகிறான். அவ் வேங்கைக்கு உரிமையாளரான காளியுடன் பகை ஆரம்பமாகிறது. தலைமுறைகளைக் கடந்தநிலையில், பொறாமையின் நிமித்தமாக உறவுகளுடன் உட்பகை வளர்கிறது. அதனுடைய தாக்கம் அவ்வப்போது பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. காளியுடன் தொடங்கிய பகைமைநிலை ஒவ்வொரு கட்டமாக மிகையாகின்றது. காளியின் தரப்பினர் பொன்னிவள நாட்டில் கொள்ளையிடுவது முதல் அதனை அண்ணன்மார்கள் மீட்பதுவரை பகைமையின் உக்கிரம் தொடர்கிறது. அண்ணன்மார்களின் திறமையை அறிந்த சோழ மன்னன், பொன்னிவள நாட்டின் காவல் பொறுப்பையும் அவர்களிடத்தே ஒப்படைக்கிறான். இதனை அறிந்த தலையூர் காளியின் கோபம் மேலும் அதிகரிக்கிறது. காளி வளர்த்த பன்றி பொன்னிவள நாட்டின் வேளாண்மைகளுக்குத் தீங்கு விளைவிக்கிறது. இதை அறிந்த சங்கர் அப்பன்றியைக் கொன்று விடுகிறான். இதனால், மேலும் அண்ணன்மார் மீதான கோபம் அதிகரிக்கிறது. பொன்னர் - சங்கரை எவ்வாறேனும் வென்றுவிடல் வேண்டும் என்ற முனைப்புத் தொடர்கின்றது.

நேரடியாக அண்ணன்மாரை வெல்ல முடியாது என்ற காரணத்தால் சூழ்ச்சியினால் வெல்வதற்கான முயற்சிகள் தொடர்கின்றன. செம்பகுலவன் பாத்திரம் ஊடாக சூழ்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. பொன்னர்மீது பழிசுமத்தி அவனை செம்பகுலவன் வெள்ளாங்குளம் அழைத்துச் செல்லும்போது தலையூர் காளியின் படையினர் பொன்னிவள நாட்டை ஆக்கிரமிக்கின்றார்கள். இதனால் சங்கர், சாம்புவன் ஆகியோர் ஸ்தலத்தில் இறக்கிறார்கள். சாம்புவன் முழங்கிய தவிலோசை பொன்னரின் காதில் விழுகிறது. பொன்னர் செம்பகுலவனை வெட்டி வீழ்த்திவிட்டு படுகளம் நோக்கி விரைகின்றான். படுகளத்தின் சங்கரின் நிலையைக் கண்டு பொன்னரும் தன்னை மாய்த்துக் கொள்கின்றான். விடயம் அறிந்த தங்காளும் படுகளம் தேடி வருகிறாள். பின்னர், பெரியகாண்டியம்மனின் துணையுடன் பொன்னரும் சங்கரும் மீண்டெழுகிறார்கள். "மாண்டவர்கள் மீண்டெழுந்தால் மாளிகை இடம் கொள்ளாது என்பார்கள். பரமனின் கட்டளைப்படி பதினாறு வயது வரையிலேயே எங்கள் ஆயுள். அக்காலம் முடிந்துவிட்டது. எங்களுக்குரிய காரியத்தைச் செய்ய வேண்டியது உனது கடமை" என அண்ணன்மார் பணிக்கின்றனர். அதற்கமைய, காரியங்களைச் செய்து முடித்தபின்னர், தங்காளும் இவ்வுலகைவிட்டு விடைபெறுகிறாள்.

பொன்னர் - சங்கரின் மனைவிமாரையும் தங்காளே தீயிட்டுக் கொழுத்துவதாகவும் குறிப்பிடப்படுகிறது. ஆதிக்க சக்தியினரிடமிருந்து பெண்களையும் அவர்களின் குலப் பெருமையையும் காப்பாற்றுவதற்கு தற்கொலை செய்யத் தூண்டுவது, அல்லது கொலை செய்துவிடுவது என்ற தெரிவுகளில் ஒன்றை நிறைவேற்றுவது தவிர்க்க முடியாததாகின்றது. பெண் தெய்வங்களது உருவாக்கத்தின் பின்னணியும் இதுவே. அந்தப் பின்னணியிலேயே பொன்னர், சங்கரின் மனைவிகள் பாதிப்படையக்கூடாது என்பதற்காக தங்காளினால் அவர்கள் தீயிட்டுக் கொழுத்தப்படுவது நியாயப்படுத்தப்படுகின்றது. அவ்வாறே குப்பாயி என்ற பாத்திரம் அவளின் கட்டளைப்படி அண்ணன்மாரால் எரியூட்டிக் கொல்லப்பட்டமையையும், அவள் எரியூட்டப்பட்ட சாம்பலை வைத்து வழிபட்ட இடம் மதுரை மீனாச்சியம்மன் ஆலய வளாகத்துடனும், காமாச்சியம்மன் ஆலயத்துடனும் தொடர்புபடுத்தப்படுவதையும் அறியமுடிகிறது. பொன்னர் - சங்கர் ஆகியோர் உட்பட தங்காளின் மறைவுடன் இக்கதை முடிவுக்கு வருகிறது.

காதலும் வீரமும் தமிழர்களின் அடையாளம் என்ற வகையில் சகோதர பாசத்தை முதன்மைப்படுத்தியதாகவே கதை நகர்கிறது. அண்ணன்மார்களின் மனைவிகள் முக்கியத்துவப்படுத்தப்படாத போக்கிலேயே கதையம்சம் உள்ளது. பல இடங்களில் யதார்த்தம்

இல்லாது சிவன், விஷ்ணு ஆகியோரின் பிரசன்னம் அதிகமாக நிகழ்கின்றது. கிராமியத் தெய்வங்கள் தொடர்பிலான அம்சம் நாட்டார் பண்புநெறியில் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைப் பெற்றுள்ளது. இயற்கை நெறிமுறையுடகள் இக்கதையம்சத்துடன் கட்டியெழுப்பப்படுகின்றமை கவனிக்கத்தக்கது. விவசாய வரிவாக்கத்தின் ஊடாக ஏற்படும் நிலஉரிமை குறித்த விடயமே பகை உணர்வுத் தூண்டுதலுக்குக் காரணமாகிறது. விவசாயத்திற்குத் தீங்காக அமையும் விலங்குகள் தொடர்பான செய்திகளும் இக்கதை அம்சத்தில் கவனிக்கத்தக்கதாகும். கோளாத்தார் கவுண்டர் காலத்தில் பசுக்கள் விவசாய நிலங்களை அழிக்கின்றன. விவசாய நிலத்தில் பன்றிகளும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. விவசாயிகள் பன்றிகளை வேட்டையாடுவதும், அவற்றை உணவாக உட்கொள்வதும் உணவுச்சங்கிலி முறைமையில் தவிர்க்க முடியாததாகின்றது. இயற்கைக் கட்டமைப்பில் வேங்கைகள், பாம்புகள் மனிதர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விலங்குகளாகின்றன. அவற்றை வதம் செய்யும் செயற்பாடுகள் கவனிக்கத்தக்கது. மனிதர்களோடு நேசத்துடன் வாழும் நாய், கிளி போன்ற விலங்குகளுடனான நேசமும் இக்கதையம்சத்துடன் பின்னிப்பிணைந்துள்ளமை அவதானத்திற்குரியதாகும்.

அண்ணன்மார் கதை, மூன்றாவது தலைமுறையினருடன் முடிவடையும் நிலையில், அவர்களின் நெருங்கிய உறவினர்கள் நடுகல் அமைத்து அவர்களை நினைவுகூருகின்றனர். இதில் பொன்னர், சங்கர், நல்லதங்காள் ஆகியோரின் பிரிவு குறித்த கவனத்தை ஈர்க்கின்றது. பின்னாளில் அவர்களைச் சார்ந்த உறவுகள், ஊரவர்கள், வழிபாட்டிற்குரியவர்களாக அவர்களை அனுஷ்டித்துள்ளமையை அறிய முடிகிறது. அதன் தொடர்ச்சி நிலையிலேயே அத்தலைமுறையினருடன் தொடர்புபடும் உறவுகள், நட்புகள், எதிரிகள், துரோகிகள் குறித்த கவனமும் ஏற்படுகிறது. இதனை தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பாடமாகவும் எடுத்துக்கொள்கிறார்கள். இதன் தொடக்கநிலை வீரத்திருப்பூரில் அடையாளமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதன் தொடர்ச்சிநிலையில் அண்ணன்மார்கள், தங்காள் ஆகியோரின் சிலைகள், ஆலயங்கள், வழிபாட்டு வளாகம் போன்றவை விருத்திநிலை அடைந்துள்ளன. அத்தளத்திலிருந்து பொன்னர் - சங்கர் மீதான கவனம் ஏனைய தளங்களுக்கும் எடுத்துச்செல்லப்பட்டது. அவர்களின் உறவுகள், நட்புகள் இப்பணியைத் தொடக்கி வைத்துள்ளார்கள். இதன் பின்னணியிலேயே தமிழகத்தின் பல இடங்களுக்கும் பொன்னர் - சங்கர் கதையாகவும் வழிபாடாகவும் பரிணாமம் பெற்றது. செவிவழியாகப் பேணப்பட்டு வந்ததை மக்களிடம் முன்வைப்பதற்காக, பல நுட்பங்கள் அழகியல் உணர்வுடன்கூடிய வெவ்வேறு வடிவங்களில் உருவாக்கப்பட்டன. அவ்வாறான நகர்விலேயே பிரித்தானியக் காலனித்துவத்தால் தென்னிந்தியாவில் இருந்து இலங்கையின் மலையகத்திற்குப் புலம்பெயர்ந்த தமிழர்களும் இக்கதையம்சத்தை பயில்நிலைக்கு உட்படுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உடுக்கிசைப் பாடல்களாகவும், படுகளப் பாடல்களாகவும், கும்மிப் பாடல்களாகவும், வில்லுப்பாட்டாகவும் இக்கதை மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டது. அதன் தொடர்ச்சிநிலையில் காலம், தொழில்நுட்ப மாற்றங்களோடு இணைந்தவகையில் இக்கதையம்சம் நகர்த்தப்படுகிறது. தெருக்கூத்து, கூத்து வடிவம், மேடை வடிவம் என்ற வகையில் மேலும் அதன் பரிணாம நிலைகள் வளர்ச்சியடைந்தன. படக்கதைகள், தொடர்கதை வடிவம், நூலாக்க முயற்சிகள், சினிமா, கார்ட்டூன் ஆகிய வடிவங்களில் இதனை ஆவணப்படுத்துவதும், யூடியூப்பை உட்பட சமூக வலைத்தளங்களின் ஊடாக இக்கதையைச் சார்ந்த பல்வேறு விடயங்கள் ஆவணமாக்கப்படுவதும், அவை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படுவதும் கவனிக்கத்தக்கதாகும். எந்தவொரு வரலாற்றின் தொடர்ச்சிநிலைக்கும் அதனுள் பொதிந்திருக்கும் காத்திரமான விடயங்கள் முக்கிய காரணமாக அமைகின்றன. இக்கதையம்சமும், ஆவணப்படுத்துவதற்கு எடுத்த பிரயத்தனங்களும், ஆய்வுக்குரிய நோக்கத்துடனான பார்வையில் வெளியாகிய எழுத்துகளும் காலங்களைக் கடந்தநிலையில் செல்வாக்குடன் தொடர்கின்றன எனலாம். இதன் மூலமான கதையம்சத்துடன் கற்பனைகள் சேர்க்கைகளாகவும் திரிபுகளாகவும் இருக்கின்ற அதேவேளை, சில தவிர்ப்புகளும் தவிர்க்கமுடியாததாக அமையப்பெற்றுள்ளன.

பிரித்தானியக் காலனித்துவத்தில் புலம்பெயர்ந்து, இலங்கையில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்த மலையக சமூகத்தினரின் கவனத்தில் இக்கதையம்சம் எவ்வகையான பிரயோகத்தில் கைக்கொள்ளப்படுகிறது என்ற பார்வை முக்கியத்துவம் பெறுகிறது. கூலிகளாக அழைத்துவரப்பட்ட நிலையில் அவர்களோடு ஆன்மீகம்சார்ந்த நம்பிக்கைகளும் கலை, அழகியல்

உணர்வுகளும் இணைந்தே பயணித்தன. அதனை மலையக நாட்டார் பாடல்களில் அறியலாம். இலங்கையின் அரங்கியல்துறை அனுபவத்தில் மலையக நாடக முயற்சிகளே முன்னோடியானது என்ற கவனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. காலம்கடந்த நிலையில்தான் அக்கவனம் எடுத்துரைக்கப்பட்டமை கவனிக்கத்தக்கது. "ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு புது இரத்தம் பாய்ச்சியதாக மலையக இலக்கியம் அமைகிறது" என்பார் பேராசிரியர் க. கைலாசபதி. அவ்வாறே ஈழத்து நாடகத்துறையைப் பற்றிய பதிவுகளை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய அவசியத்தை தேசபக்தன் கோ. நடேசய்யரின் 'தொழிலாளர்களின் அந்தரப்பிழைப்பு' நாடகநூல் ஏற்படுத்தியுள்ளமை கவனத்திற்குரியதாகும்.

இலங்கையின் அரங்கியல்துறை வளர்ச்சியில் மலையகம் கணிசமான பங்களிப்பை வழங்கிவந்துள்ளது. 'மலையகத்தின் முக்கூத்துகள்' என்ற சிறப்பிற்குள் காமன் கூத்து, பொன்னர் - சங்கர், அருச்சுணன் தபசு ஆகிய கூத்துகள் இம்மக்களின் நேசிப்பிற்குரிய கலைகளாகப் பரிணமித்துள்ளன. ஒப்பீட்டளவில் காமன் கூத்து அதிக இடங்களில் வருடந்தோறும் அரங்கேற்றம் செய்யப்படுகிறது. அருச்சுணன் தபசு கூத்தின் முக்கியத்துவம் குறைந்து வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும். பொன்னர் - சங்கர் கூத்து ஓரளவு திருப்தியைத்தரும் வகையில் தெய்வீகக் கலையாக நேசிக்கப்படுகின்றது. இக்கூத்துகள் ஒரு சில இடங்களிலேயே நிகழ்த்தப்பட்டாலும் ஊடகங்கள் வாயிலாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் பார்வையாளர்களையும் ஆர்வலர்களையும் சென்றடைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதேபோல, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாடசாலைகள், சமய மற்றும் சமூக அமைப்புகள் ஆகியவற்றினால் மேடை வடிவத்தில் இவை கைக்கொள்ளப்படுவதும் கவனிக்கத்தக்கதாகும்

பொன்னர் - சங்கர் மூன்று தலைமுறை வாழ்க்கைமுறைகளை அடையாளப்படுத்துகிறது என்பதால் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒவ்வொரு தலைமுறைக் கதை உள்ளடக்கங்களை அவ்வவ் வருடங்களில் நிகழ்த்துகின்றபோக்கு மலையகத் தோட்டங்களில் காணப்படுகிறது. மாறாக, ஒவ்வொரு தலைமுறைக் கதை உள்ளடக்கங்களையும் ஒவ்வொரு நாட்களிலும் வரையறுத்து, மூன்று நாட்கள் கூத்தை நடத்தும் முறையும் காணப்படுகிறது. மேலும், கிளி பிடிக்கும் படலம், பன்றியை வேட்டையாடும் படலம், புலியைக் கொல்லும் படலம், படுகளத்தை அடையாளப்படுத்தும் படலம் ஆகியவற்றோடு வரையறுத்துக்கொண்டு இக்கூத்தை அரங்கேற்றும் தன்மையும் காணப்படுகின்றது. காமன் கூத்து, அருச்சுணன் தபசு போன்ற கூத்துகளை மேடை வடிவத்திற்கு மாற்றுவதைவிட பொன்னர் - சங்கர் கூத்தை மேடை வடிவத்தில் நிகழ்த்துவது இலகுவானது. ஏனெனில் இக்கூத்தின் இயல்பான கட்டமைப்பு மேடைக்குரியதாகவே அமைகிறது. மூன்று தலைமுறையினரின் வரலாற்றை மூன்று நாட்களில் நிகழ்த்த முனையும் எத்தனிப்பு அசாத்தியமானது. இதனால், படுகளம், கம்பம் ஏறுதல் என்ற அடையாளப்படுத்தல்களை மாத்திரம் நிகழ்த்துகின்ற போக்குகளும் உள்ளன. காமன் கூத்தை முழுமையாக அரங்கேற்றும் முனைப்பு ஓரளவு வெற்றிக்குரியதாக அமைகிறது. ஆனால் பொன்னர் - சங்கர் கதை மரபை முழுமையாக அரங்கேற்றுவது சாத்தியமற்ற விடயமாகவே அமைகிறது. இக்கூத்தின் முனைப்பான விடயங்களை மாத்திரம் அடையாளப்படுத்துகின்ற போக்கே இக்கூத்து அணுகுமுறையில் சாத்தியப்பாட்டுக்கு உரியதாக அமைகிறது. இந்நிலைமையைப் போலவே சினிமா முயற்சியும் வரையறைக்குட்பட்டதாக அமைகிறது. பாடல் தொகுப்பு, நாவல் வடிவம், சித்திரக்கதை வடிவம், கார்ட்டூன் அமைப்பு என்பன இக்கதை வரலாற்றின் முழுமையை ஆவணப்படுத்துவதில் திருப்திநிலையைக் கண்டுள்ளன. மலையக மக்களின் சமூகப் பிரயோகத்தில் பொன்னர் - சங்கர் கதையின் மீதான ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையிலேயே அதன் பயில்நிலை முறைமைகள் அமைகின்றன. மேலும், குறிப்பிட்ட முனைப்புகளை மட்டுமே எடுத்துக்காட்டி, அதனை தெய்வீகக்கலையாகவும், கதையாகவும் பார்க்கத் தூண்டும் நோக்கும் அதிகரித்துச் செல்கின்றது.

## உசாத்துணைகள்


1. சக்திக்கனல் (2017) அண்ணன்மார் சுவாமி கதை, நர்மதா பதிப்பகம்.
2. சுந்தரம்பிள்ளை. செ () ஈழத்து மலையகக் கூத்துக்கள்.
3. அம்பிகை. வே (1998) அருச்சுனன் தபசு, குமரன் பப்ளிஸர்ஸ்.
4. சிவலிங்கம். மு (2007) மலையகதத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள், குறிஞ்சி தமிழ் இலக்கிய மன்றம்.
5. மகேஸ்வரன். வ, பாஸ்கரன். சு (2023) மலையகத்தில் அண்ணன்மார் சுவாமி கதை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
6. சோதிமலர். இர (2004) காமன் கூத்தும் மலையகப் பாரம்பரியமும், சன் பிரின்ற்ஸ் பதிப்பகம்.
7. நேர்காணல்:

பேராசிரியர் பிருந்தா பெக் (கனடா).

அண்ணாவியார் க. குணசேகரன், கீழ் பிரிவு, டெஸ்போட் தோட்டம்.

திரு. சுப்பையா கணகலிங்கம், கீழ் பிரிவு, டெஸ்போட் தோட்டம்.



● அமரசிங்கம் கேதீஸ்வரன்

பொருளியல் துறையில் சிரேஸ்ட வளவாளராகவும் பயிற்றுநராகவும் செயற்படும் அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்கள் கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களையும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் திட்டமிடலில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர். இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் II அதிகாரியாக, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பிரதி திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றும் இவர், தேசிய பெண்கள் செயலகத்தின் பிரதிப் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். 2012 இல் 'திட்டமிடல் மூலதத்துவங்கள்' என்ற நூலினையும் 2024 இல் 'மண்' என்ற கவிதை நூலினையும் வெளியீடு செய்துள்ளார். இவர் சிறந்த விமர்சகரும் ஆய்வாளருமாவார். வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் உப தலைவராகவும், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் உபதலைவராகவும், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவராகவும் செயற்பட்டு வரும் ஒரு மூத்த கூட்டுறவாளருமாவார்.

# வடக்கு – கிழக்கு மாகாணங்களின் சமூக நலத்துறையும் அவற்றின் பொருளாதார ரீதியிலான பங்களிப்பும்

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டின் நிலைபேறுகைக்கு ஸ்திரத்தினை வழங்குகின்றது. இலங்கையில் உள்ள வளச் செழிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றக்கூடியது. இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பை வடக்கு – கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, அதில் அடையாளப்படுத்தக்கூடிய வளங்கள் அல்லது இதுவரை கண்டறியப்பட்ட வளங்கள் தொடர்பாக தெளிவுடுத்துவதாகவும், அந்த வளங்களின் இப்போதைய பயன்பாடற்ற முறைமையை மாற்றியமைத்து உச்சப்பயனைப் பெறுதல், அதனூடே வடக்கு – கிழக்கின் விவசாயத்துறை, உட்கட்டமைப்பு, கடல்சார் பொருளாதாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியும் 'வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்' என்ற இந்தக் கட்டுரைத் தொடர் விளக்குகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் வளங்களில் மனிதமூலதனத்தையும் நிதிமூலதனத்தையும் அதிக நலிவுக்குள்ளாக்கும் காரணிகளாக சமூகநலத்துறைச் செலவீனங்கள் இருந்து வருகின்றன. சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை அரசியலில் இலவசமாக வழங்குதல் என்பதுவே சுதேசிய அரசுகளின் பொறுப்பு என்ற எண்ணம் வலுப்பெற்றிருந்ததால், மக்களின் நெருக்கடிகளைத் தீர்ப்பதில் அரசின் இலவச உதவி வழங்கல் மிக முக்கியமானது எனக் கருதப்பட்டது. அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டு உருவாக்கப்பட்ட சுதேச அரசு, மக்கள் நலனில் கவனம் செலுத்தும் நலஅரசு (Welfare State) என்ற கொள்கையை முன்வைத்தது. இதன் அடிப்படையில், அரசின் வருமானத்தை மக்கள் நலனுக்காக இலவச விநியோக வடிவில் பகிரும்முறை இலங்கையில் நிலைபெற்றது. இலவச அரிசி, இலவச மருத்துவம், இலவசக்கல்வி, இலவச உதவியளிப்புகள் என சுதந்திரத்துக்கு பிற்பட்டகால அரசுகள் போட்டிபோட்டுக் கொண்டு செயற்பட ஆரம்பித்தன. ஜனநாயகத்தின் அடிப்படையில் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் அரசுமுறைமைக்குச் சாதகமாக இந்த உதவியளிப்புகள் மக்களுக்கு வழங்கப்படத் தொடங்கியதால், ஒவ்வொரு வருடத்திலும் வெளியிடப்படும் அரசின் வரவுசெலவுத் திட்டமானது ஏதாவதொரு சலுகையை மக்களுக்கு வழங்கத் தொடங்கியது. அது மக்கள் நலனைப் பேணவில்லை என்பதற்குப் பதிலாக அது அதிக மக்கள் கவர்ச்சியை ஆட்சியரசாங்கத்துக்குப் பெற்றுக்கொடுத்து, வாக்கு வங்கியை அதிகரித்துக்கொண்டது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். பொருளாதாரரீதியில் இச்செயன்முறையானது மக்களின் தங்கியிருப்புத் தன்மையை (Dependency Mentality) அதிகரித்து, அரசுநோக்கிக் கையேந்தும் நிலையை உருவாக்கிக் கொண்டது என்பதே வரலாறாகியது. உணவு நிவாரணம் தொடர்பில் அரைக் கொத்து அரிசி, 8 கிலோ அரிசி, உணவுக்காப்பான், உணவு முத்திரை, மண்ணெண்ணை முத்திரை, சமுர்த்தி, திவிநெகும ஆகியவை அரசின் மக்கள் நலக் கொடுப்பனவுகளாகச் செயற்பட்டுள்ளன. இந்த நலத்திட்டங்களை எந்த அரசாங்கமும் முழுமையாகக் கைவிட்டதில்லை. இலங்கையில் ஒருவர் பிறப்பதற்கு முன்னரே, கருவில் வளரும் குழந்தைக்குப் 'போசாக்கு' உணவும், தாய்க்கு ஒரு ஆண்டிற்குரிய சத்துணவுகளும் வழங்கப்படுகின்றன. அரசு வைத்தியசாலையில் ஒருவர் பிரசவிக்கப்பட்ட பின்னர், பிறப்புச் சான்றிதழும் இலவசமாகப் பதிவு செய்யப்படுகிறது. பின்னர், திரிபோசா உள்ளிட்ட போஷாக்கு உணவுக் கூப்பன்கள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. இதற்குப் பிறகு, இலவச வைத்திய சேவை, இலவசக் கல்வி, மற்றும் இலவச உயர்கல்வி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு, முழுமையாக இலவச உதவிகளுடன் உருவாக்கப்படும் இம்மனித மூலதனம், பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பின்பும், வேலைவாய்ப்பின்றி, அரச வேலையை எதிர்பார்த்துப் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை இங்கே புறக்கணிக்க முடியாதுள்ளது. மறுபுறம், இலகுவில் பாதிப்படையும் இலக்குக் குழுக்கள் (Vulnerability target group) அரசினால் பராமரிக்கப்பட வேண்டும் என்ற உண்மைநிலையை நிராகரிக்கவும் முடியாது. இந்நிலையில சமூகப் பாதுகாப்பு தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாணங்களை நோக்கும் போது, மாற்றாற்றல் உள்ளோர், அவயவங்களை இழந்தோர், பிறப்பின் போதான இயலாமைக்கு ஆளானோர், போரினால் ஊனமுற்றோர் போன்ற வெளிப்படையான இயலாமை கொண்டோர் ஒரு தரப்பாகவும்; போரினாலும், இயற்கை நிகழ்வுகளாலும் விதவைகளாக்கப்பட்டு, அவர்களால் தலைமை தாங்கப்படும் குடும்பங்கள் மற்றொரு பகுதியாகவும்; பெற்றோர், பராமரிப்பாளர்கள் இல்லாமல் சிறுவர் மற்றும் முதியோர் காப்பகங்களில் பராமரிக்கப்படுபவர்கள் பிறிதொரு வகையானவர்களாகவும், மூன்று வகையான பிரதான இலகுவில் பாதிப்படையும் குழுவினர்கள் காணப்படுகின்றனர். உள்நாட்டுப்போரின் விளைவுகளால், வடக்கு - கிழக்கில், இந்தப் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை மிக அதிகமாகவும் வேறுபட்ட சமூகத்தாக்கங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இவ்விரு மாகாணங்களிலும் சமூகநலத்துறையின் பணிகள் மிக அதிகளவில் வேண்டியதாகவுள்ளது.

இந்தவகையில் வெளிப்படையான இயலாமைக்குட்பட்டோர் பற்றி ஆராயும்போது, வடக்கு மாகாணத்தில் 21,668 பேரும், கிழக்கு மாகாணத்தில் 18,337 பேரும் முழு அளவிலும், பாதியளவிலுமாக இயலாமைக்கு உட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். பிரதான இயலாமைத் தன்மையின் அடிப்படையில் ஆராயும்போது, பார்வைக்குறைபாடுடையவர்கள் என்ற வகைப்பாட்டில் வடக்கு மாகாணத்தில் 1,826 பேரும், கிழக்கு மாகாணத்தில் 1,598 பேரும் காணப்படுகின்றனர். செவிப்புலன் இழந்தோர், வாய்பேச முடியாதோர் என்ற வகைப்பாட்டின்கீழ் வடக்கில் 3,083 பேரும், கிழக்கில் 2,509 பேரும்

உள்ளனர். அங்கங்களை இழந்தவர்கள் என்றவகைப்பாட்டில், கால் மற்றும் கைகளை இழந்தவர்கள் வடக்கில் 10,581 பேரும், கிழக்கில் 4,228 பேரும் காணப்படுகின்றனர். மனநலப் பாதிப்புக்குட்பட்டோர் என்றவகையில் வடக்கில் 6,182 பேரும், கிழக்கில் 4,887 பேரும் காணப்படுகின்றனர். இந்த நபர்களில், முழுமையாக இயலாமைக்குட்பட்டோராக இல்லங்களில் பராமரிப்புச் செய்யப்படுபவர்கள் எனப்பார்க்கும்போது, கிழக்கு மாகாணத்தில் 8 பராமரிப்பு நிலையங்களில் 221 பேரும், வடக்கு மாகாணத்தில் 3 பராமரிப்பு நிலையங்களில் 193 பேரும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இயலாமைக்குட்பட்டோரின் வெளிப்படையான தகவல்களுக்கிடையில், உட்கிடையாக இருகால்களை இழந்தவர்கள், இருகைகளை இழந்தவர்கள், முள்ளந்தண்டு வடம் பாதிப்படைந்தோர், வலிப்புநோயால் பாதிக்கப்பட்டவர்கள் எனப் பல்வேறு வகையான உப பாதிப்புகளுடன் கூடிய நபர்களும் காணப்படுகின்றனர். இவ்வகையினருக்கு ஏற்படும் பிரச்சினைகள் ஏனைய வகை மக்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளைவிட வேறுபட்டதும் சிக்கலானதுமாகக் காணப்படுகின்றன.

பராமரிப்பாளர்கள் இல்லாதநிலையில், காப்பகங்களில் தங்கியுள்ள முதியோர் எனப்பார்க்கும்பாது, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் 4 தனியார் நிர்வகிப்பு நிலையங்களில் 73 பேரும், மட்டக்களப்பில் 5 தனியார் நிர்வகிப்பு நிலையங்களில் 106 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 2 அரசநிலையங்களில் 40 பேருமாக, 219 பேர் காப்பகங்களில் பராமரிக்கப்படுகின்றனர். வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் 6 இல்லங்களில் 26 பேரும், கிளிநொச்சியில் 01 இல்லத்தில் 18 பேரும், மன்னாரில் 04 இல்லங்களில் 524 பேருமாக, 985 பேர் காப்பகங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். காப்பகங்களில் பராமரிக்கப்படும் பெற்றோர், பாதுகாவலர்கள் இல்லாத பிள்ளைகள் என்ற வகைப்பாட்டில் நோக்கும்போது, கிழக்கு மாகாணத்தில் 57 சிறுவர் இல்லங்களில் 310 பிள்ளைகள் பராமரிக்கப்படுவதுடன், வடக்கு மாகாணத்தில் 37 சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் 1,475 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இந்த இருவகையான இல்லங்களிலும் பெருமளவிலானவை, தனியாரினாலும் தொண்டு நிறுவனங்களாலும் நடாத்தப்படுவதுடன், சமூக சேவைத்திணைக்களம், சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்களத்தினது மேற்பார்வையின் கீழும் இயங்கி வருவனவாகும். சிறுவர் மற்றும் முதியோர் பராமரிப்புத் தொடர்பிலாகப் பேணப்படவேண்டிய தரங்களின் நிர்ணயம், இடவசதி, உணவுமுறை, விடுமுறையளித்தல், சுகாதார நடைமுறைகள், உரிமை சார்ந்த விடயங்கள் அனைத்தும் இவ்விரு திணைக்களங்களினால் வழங்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணப்படும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் என்ற இலகுவில் பாதிக்கப்படும் குழு (Vulnerability group) ஆனது, பாரிய சமூகத் தாக்கங்களுக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றது. இயற்கையினாலும் யுத்தத்தினாலும் உருவாக்கப்படும் குடும்பத் தலைவர்களின் (Breadwinner) இழப்பானது, பெண்களின் தலைமைத்துவத்திற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி, அவர்களை பொருளாதாரச் சுமையைதாங்கும் பிரதான பிரிவினராக மாற்றிவிட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் மாவட்ட அடிப்படையில், வயதுரீதியாக நோக்கும்போது, அதன் விபரம் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| மாவட்டம் | 20க்கும் குறைவு | 21-25 | 26-30 | 31-35 | 36-40 | 41-45 | 46-50 | 51-55 | 56-60 | 60க்கு மேல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 38 | 205 | 613 | 1,131 | 1,853 | 2,282 | 3,628 | 4,347 | 6,108 | 3,753 | 43,958 |
| கிளிநொச்சி | 16 | 110 | 231 | 429 | 585 | 794 | 860 | 1,039 | 1,079 | 3,750 | 8,893 |
| முல்லைத்தீவு | 163 | 206 | 347 | 414 | 607 | 893 | 824 | 987 | 1,234 | 3,046 | 8,721 |
| மன்னார் | 5 | 92 | 102 | 259 | 265 | 560 | 563 | 885 | 891 | 3,033 | 6,651 |
| வவுனியா | 8 | 130 | 229 | 412 | 564 | 753 | 799 | 795 | 1,228 | 3,217 | 8,135 |
| | 226 | 748 | 1,522 | 2,645 | 3,874 | 5,282 | 6,674 | 8,053 | 10,540 | 36,799 | 76,358 |

வட மாகாணத்தின் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் 30 சதவீதமானவை, 50 வயதுக்குக் குறைந்த இளம் விதவைகளைக் கொண்டிருப்பது, பல்வேறு சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. மறுமணம் புரிதல் என்பது சமூக நியமங்களின்படி பெருமளவு வரவேற்புப் பெறாத சமூக அமைப்பினால், இளவயதில் கணவர்களை இழந்தவர்கள் தமது இளமையைத் தியாகம்செய்து வாழ வேண்டியுள்ளது. யுத்தத்தின்போது காணாமற்போனவர்கள் மீண்டும் திரும்பக்கூடும் என்ற எதிர்பார்ப்புத் தொடரும் காரணத்தால், பலர் 'மறுமணம்' செய்ய எண்ணுவதில்லை. ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுடன், வாழ்வாதாரத்திற்காக உழைத்து, பிள்ளைகளையும் வளர்க்கவேண்டிய இரட்டைச்சுமை இவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் யுத்தத்தினால் விதவைகளாக்கப்பட்டோராக 5,268 பேரும், கிழக்கு மாகாணத்தில் 6,577 பேரும் காணப்படுகின்றனர். குடும்ப முரண்பாடுகள் காரணமாக கணவனால் கைவிடப்பட்டவர் என்ற வகையடிப்படையில், வடக்கு மாகாணத்தில் 9036 குடும்பங்களும் கிழக்கு மாகாணத்தில் 9504 குடும்பங்களும் காணப்படுகின்றன. இவ்விரு வகைப்பாடுகளிலும் உள்ளடங்குபவர்கள் பெருமளவுக்கு இளம் தாய்மார்களாகக் காணப்படுவதனால், இவர்கள் பல்வேறு சமூக நெருக்குவாரங்களுக்கும் உட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இயற்கையான இறப்புக் காரணமாக குடும்பத்தலைவர்களை இழந்தவர்கள் வடக்கு மாகாணத்தில் 51,360 பேரும், கிழக்கு மாகாணத்தில் 56,340 பேரும் காணப்படுவதுடன், ஏனைய காரணங்களால் பெண்தலைமைக்கு உட்பட்டவர்கள் என்றவகையில் வடக்கு மாகாணத்தில் 10,654 பேரும், கிழக்கு மாகாணத்தில் 9,509 பேரும் காணப்படுகின்றனர். இந்தவகையில் மாவட்ட அடிப்படையில் இத்தகவல்களை நோக்கும்போது,

மூலம் : சமூக சேவை திணைக்களம், கிளிநொச்சி

மாவட்ட அடிப்படையில் இந்த எண்ணிக்கையை ஆராயும்போது யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அதிக பெண்தலைமைக் குடும்பங்கள் காணப்படுகின்றன. வயதுவாரியாகப் பரிசீலிக்கும்போது முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலேயே இளம் பெண் தலைமையாளர்கள் அதிகமாகக் காணப்படுவதனை அவதானிக்கலாம். இந்தவகையில், ஏனைய மாகாணங்களைவிட வடக்கிலும் கிழக்கிலும் தோன்றியுள்ள இளம்வயதான விதவைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மிகச் சிக்கலானவையாக உள்ளன. அவர்களின் பருவத் தேவைகள் மற்றும் அதனால் உருவாகும் உளவியல் சுமைகள், குடும்பத்தை நடத்தவேண்டிய பொருளாதாரத் தேவை, வேலைக்குச் செல்லும் கட்டாயம் ஆகியவை ஒருபுறமிருக்க, அதனால் பிள்ளைகளை முறையாகப் பராமரிக்க முடியாதநிலையும் உருவாகிறது. இத்துடன், தனிமை, பாதுகாப்புப் பற்றாக்குறை, சமூக நச்சரிப்பு, உட்தொந்தரவு மற்றும் தேவையற்ற அழுத்தங்கள் எனப் பல்வேறு பிரச்சினைகள், இந்தக் குடும்பங்களை ஒரு சங்கிலித் தொடராகத் தொடர்ந்து துரத்திக்கொண்டே செல்கின்றன. வடக்கு மாகாணத்தில் காணப்படும் 76,358 பெண்தலைமைக் குடும்பங்களையும், கிழக்கில் காணப்படும் 78,681 பெண்தலைமைக் குடும்பங்களை உள்ளடக்கிய 155,039 குடும்பங்கள்சார்ந்த விசேட இலக்குக்குழு நோக்கிய தேசிய திட்டங்கள் எதுவும் இதுவரை உருவாக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய முக்கிய விடயமாகும். போருக்கு பின்னரான நிலைமாறுகால நீதி என்ற வகையில் (Transitional Justice) சர்வதேச அமைப்புகளால் வலியுறுத்தப்பட்ட கருத்துகளுக்கு அமைய பெண்களுக்கான தேசிய நிலையம் (National Women

| இல | மாவட்டம் | 20< | 21-25 | 26-30 | 31-35 | 36-40 | 41-45 | 46-50 | 51-55 | 56-60 | 60> | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருகோணமலை | 114 | 306 | 893 | 650 | 907 | 1474 | 1875 | 1955 | 2847 | 7053 | 18020 |
| 2 | மட்டக்களப்பு | 86 | 796 | 1453 | 1827 | 2311 | 2857 | 3066 | 3796 | 4112 | 9682 | 29986 |
| 3 | அம்பாறை | 993 | 893 | 789 | 1239 | 1486 | 1945 | 2283 | 3091 | 4000 | 13960 | 30675 |
| 4 | மொத்தம் | 1193 | 1995 | 3081 | 3716 | 4704 | 6276 | 7224 | 8842 | 10959 | 30691 | 78681 |

Centre) உருவாக்கப்பட்டு, அதன் தலைமை நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டபோதும், அதனூடாக இவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. தேசிய வரவு செலவுத்திட்டத்திலும் கூட இம்மாதிரியான முதன்மை இலக்குக்குழு நோக்கிய கருத்திட்டங்கள் செயலுருப் பெறுவதில்லை.

அரசாங்கத்தின் நிதியளிப்பு மற்றும் உதவி வழங்கல்கள் என்றவகையில் நோக்கும்போது, பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு, காச நோய்க்கான கொடுப்பனவு, புற்றுநோயாளருக்கான கொடுப்பனவு, தொழுநோய்க் கொடுப்பனவு, குருதி உறையா நோய்க் கொடுப்பனவு, முள்ளந்தண்டுவடம் பாதித்தோருக்கான கொடுப்பனவு என்பன நேரடியாகப் பாதிப்புக்குட்பட்டோருக்கு சமூக சேவைத் திணைக்களமூடாக வழங்கப்பட்டு வருகின்றன. எனினும் இதற்காக வழங்கப்படும் தொகைகளும் அது விநியோகிக்கப்பட்டு வரும் முறைகளும் பல நெருக்கடிகளைக் கொண்டே இயங்கி வருகின்றன. பொதுசன மாதாந்த உதவித்தொகையாக ரூ.250 முதல் ரூ.500 வரை வழங்கப்படுகிறது. இந்தத் தொகை அஞ்சலகங்களின் வாயிலாகவே மாதந்தோறும் வழங்கப்படுகிறது. ஆனால், பல கிராமங்களில் அஞ்சலகங்களே இல்லாத காரணத்தால், இதைப் பெறுவதற்காக பயணிக்கும்போது, பெறும் தொகையைவிட அதிக செலவு செய்ய வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. காசநோய், புற்றுநோய், தொழுநோய், குருதி உறையா நோய், முள்ளந்தண்டு வடம் பாதிப்பு ஆகிய கொடுப்பனவுகளுக்கு மாதாந்தம் 5000 ரூபாவே வழங்கப்படுகிறது. அதுவும் பிரதேச செயலர் பிரிவுவாரியாகவுள்ள ஒதுக்கு எண்ணிக்கைக்கமையவே வழங்கப்பட்டு வருகிறது. பாதிப்படைந்துள்ள இலக்குக் குழுக்களுக்கு வழங்கப்படும் ‘அஸ்வெசும’ கொடுப்பனவுகள் சமூகப் பாதுகாப்புச் சபை (Social Security Fund) இனால் வழங்கப்படுகின்றன. இதன்கீழ் மதிப்பாய்வு செய்யப்பட்ட அனைத்து வறுமைக் குடும்பங்களும் நான்கு வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

1. மிக வறுமை (Extremely Poor)
2. வறுமை (Poor)
3. ஆபத்துக்குட்பட்டோர் (Vulnerable)
4. நிலைமாறுதல் (Transitional)

மிக வறுமை என்ற வகைப்பாட்டினுள் வருபவர்கள் 17,500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவை 2026 - யூன் மாதம் வரை பெற்றுக்கொள்வர். வறுமை வகைப்பாட்டில் உள்ளடங்குவோர் 10,000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவை 2026 - யூன் வரை பெற்றுக்கொள்வர். ஆபத்துக்குட்பட்டோர் 5000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவை 2025 - டிசம்பர் வரை பெற்றுக்கொள்வர். நிலைமாறு வகைப்பாட்டில் உள்ளடக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவான ரூபா 5000, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் நிறைவடைந்ததால், அவர்கள் இத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.



Image Source : avarchives.icrc.org

இத்துடன், சமூக சேவைத் திணைக்களத்தால் உதவித் தொகை பெறாமல் உள்ள மாற்றாற்றல் உள்ள நபர்களுக்கு மாதாந்தம் ரூபா 10,500 மற்றும் வயது முதிர்ந்தோருக்கு ரூபா 5,000 என இந்தத் திட்டத்தின்கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது, இந்தத் திட்டத்தின் முதற்கட்டத்தில்



Image Source : vision-of-love.org

சேர்க்கப்படாதவர்கள், இரண்டாம் கட்ட தகவல் சேகரிப்பின் கீழ் உள்வாங்கப்பட்டு, அதற்கான பரிசீலனைகள் முடிவடைந்த பின், பிரதேச செயலாளர்களின் அனுமதி வழங்கும் செயன்முறை நடைபெற்று வருகிறது. இதற்கமைய புதிய தொகுதியினரை விரைவில் இத்திட்டத்தில் மேலதிகமாக இணைந்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். எனினும், ‘அஸ்வெசும’ நலன்தொகை நிகழ்ச்சியில் ‘நிலைமாறு கட்டத்தில்’ இனங்காணப்பட்ட பலர், குறுகிய காலத்திலேயே பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட நிலையில், அவர்கள் மீண்டும் விண்ணப்பித்து மறுபரிசீலனை செய்யும் வாய்ப்பு இல்லாத சூழலில், உதவி வழங்கப்பட வேண்டிய சிலர் தவறவிடப்பட்டுள்ளனர் என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பணவீக்கம், பாரிய தாக்கங்களை இலங்கைமக்கள் மீது, குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்கள் மீது ஏற்படுத்தியுள்ளதனை, அண்மையில் புள்ளிவிவரவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக, அதிகரித்த பணவீக்கம் காரணமாக உயர்ந்துள்ள வாழ்வாதாரச் செலவுகளை எதிர்கொள்வதற்காக, மக்கள் தமது உணவுத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் சொத்துகளை விற்றல், அடகு வைத்தல், கடன் பெறல் போன்ற பல்வேறு வழிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இதன் விளைவாக, பலர் கடனாளிகளாக மாறியுள்ளனர். நாட்டின் மொத்தச் சனத்தொகையில் **54.9%** பேர் கடன்சுமையைக் கொண்டவர்களாகவும், **31%** பேர் சொத்துகளை அடமானம் வைத்தவர்களாகவும், **21.9%** பேர் வங்கிகளில் கடன் பெற்றவர்களாகவும், **9.37%** பேர் வட்டிக்குப் பணம் வாங்கியவர்களாகவும் காணப்படுகின்றனர். கடந்த ஆண்டில் வருமான அதிகரிப்பைக்கொண்ட குடும்பங்கள், **3.4%** ஆக மட்டுமே காணப்படுவதுடன், **36.6%** ஆன குடும்பங்களின் வருமானத்தில் எவ்வித மாறுபாடுகளும் இடம்பெறவில்லை.

இவ்வகையில் பொருளாதார நலிவு காரணமாக இலகுவில் பாதிப்படைவோரது எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதால், வலுவூட்டல் வேலைத்திட்டங்களின் உண்மை நோக்கம் அடையப்படாதுள்ளது. வறுமை வீதம் உயர்ந்து வரும்போது, நலன்புரி சேவைக் கொடுப்பனவுகளைக் குறைக்கவோ, நிறுத்தவோ தீர்மானம் மேற்கொள்ள முடியாதநிலை காணப்படுகிறது. சமூக அபிவிருத்திப் பொறிமுறையின் உதவியளிப்பும் ஆதரவும் தொடர்ந்தும் வரப்போகிறது. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், இந்த நிலைமை மேலும் பாதிப்பை ஏற்படுத்தி, மக்கள் இயல்பான வாழ்க்கை முறையை நோக்கித் திரும்ப முடியாத நிலையை உருவாக்கியுள்ளது. இதனால், அவர்கள் அரசின் நிதியுதவியில் தொடர்ந்தும் சார்ந்திருப்பது தவிர்க்க முடியாததாக உருவாகியுள்ளது.



● சுப்ரமணியம் சிவகுமார்

கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார். பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

# மூலோபாயப் பகுதி பற்றிய அடிப்படைத் தகவல்கள்

## பகுதி 3

இலங்கையின் வறண்ட மண்டலமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதற்கான கொள்கைகள் உருவாக்குவது மிகவும் அவசியமாக உள்ளது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், நிலையான நீர்வள மேலாண்மை சுற்றுச்சூழலுக்கு உதவியாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அமையும். இதன் மூலம், வறண்ட மண்டலங்களில் உள்ள நீர்வளங்கள் பாதுகாக்கப்படும். "வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை எனும் இந்தக் கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளின் நீர்வளங்களின் நிலையை ஆராய்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன், அவற்றின் திறம்பட்ட பயன்பாட்டை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதைக்கூறும்.

## வடக்கு மாகாண நிலத்தடி நீர் கிடைப்பு மற்றும் தரச்சீர்கேடு

நிலத்தடிநீர் என்பது "தரையின் மேற்பரப்பிற்குக் கீழே காணப்படும் அனைத்து நீர்களையும் குறிக்கும் ஒரு சொற்றொடர்". இது "நிறைந்த மண்டலத்தில் காணப்படும் நீர், கனிமத் துகள்களுக்கு இடையிலான இடைவெளிகளையோ அல்லது கல்லில் உள்ள விரிசல்கள் மற்றும் முறிவுகளையோ நிரப்பும் நீர்" என வரையறுக்கப்படுகிறது. இயற்கையாகவே, மழை மற்றும் பனியிலிருந்து பெறப்படும் நீர் மண்ணின் வாயுக்களிலும் அதற்குக் கீழுள்ள பாறைகளின் இடைவெளிகளிலும் ஊறி, நிலத்தடிநீரை நிரப்புகிறது. எனவே, காலநிலை, மேற்பரப்பு மற்றும் கீழ்நிலைப் பண்புகள் மற்றும் அவற்றின் நீரியல் தொடர்புகள் ஆகியவை நிலத்தடிநீரின் அளவையும் குணாதிசயங்களையும் தீர்மானிக்கின்றன.

உலகமக்களின் மூன்றில் ஒரு பகுதி குடிநீருக்காக நிலத்தடிநீரைப் பயன்படுத்துகிறது. மக்கள்தொகை வளர்ச்சி, மேம்பட்ட பாசனமுறைகள், தொழில்துறைப் பயன்பாடுகள் போன்ற காரணங்களால் உலகளவில் நிலத்தடிநீருக்கு தேவையும் அதிகரித்து வருகிறது. மக்கள்தொகை வளர்ச்சி, அதிகரிக்கும் பாசனப் பயன்பாடு மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகியவை சுற்றுச்சூழல் சமநிலையை புறக்கணித்தே நிலத்தடி நீர்ப் பயன்பாட்டை அதிகரித்துள்ளன. உலகளவில், நிலத்தடி நீர் 31% வீடுகளுக்காக, 42% விவசாயத்துக்காக மற்றும் 27% தொழில்துறைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, வளர்ந்துவரும் நாடுகளில் நிலத்தடிநீரின் மீது மிகுந்த அழுத்தம் காணப்படுகிறது.

விவசாயம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கியமானதாகும். இலங்கையில் நீர் கிடைக்கும் தன்மையும், அதன் தேவையும் நிலைப்பற்றாகவே இல்லாமல் மாறிக்கொண்டே இருக்கின்றன. நிலத்தடிநீர் நாடுமுழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில், இது பொதுவாக ஒரு நிலையான நீர் ஆதாரமாகவோ அல்லது மேற்பரப்பின் நீருக்கு ஒரு நம்பகமான மாற்றாகவோ கருதப்படுகிறது. இலங்கையில் 72% கிராமப்புற மக்களும் 22% நகரப்புற மக்களும் குடிநீர் மற்றும் வீட்டுத்தேவைகளுக்காக நிலத்தடிநீரைப் பயன்படுத்துகிறார்கள். இலங்கையில் ஆறு முக்கியமான நிலத்தடிநீர்ப்பரப்புகள் (Aquifers) கீழே உள்ள படத்தில் காட்டியவாறு அடையாளம் காணப்பட்டுள்ளன:

1. யாழ்ப்பாணத் தீவுப்பகுதியின் சிறிதான கார்ஸ்டிக் நீர்ப்பரப்பு Aquifers,
2. ஆழமான கட்டுப்படுத்தப்பட்ட Aquifers,
3. கடற்கரை மணல் Aquifers,
4. அடைவு Aquifers,
5. கடினப் பாறைப் பகுதிகளில் உள்ள மேல்மட்டம் சிதைந்த Aquifer
6. தெற்கு மேற்கு Lateritic (கபூக்) Aquifer.

உலக வங்கியின் கணிப்பின்படி, 2014 ஆம் ஆண்டு இலங்கையின் வருடாந்த நீர்த்தொகை உற்பத்தி 13 பில்லியன் கன மீட்டராக இருந்தது. நாட்டின் உலர்ந்த பகுதிகளில் (Dry Zone) நீர்ப் பற்றாக்குறை மிக முக்கியமான பிரச்சினையாக உள்ளது. அங்கு 85% நிலத்தின் பாசனத்துக்காக நீர் தேவைப்படுகிறது. நாட்டில் 65,610 சதுரகிலோமீட்டர் பரப்பளவில் பலவகை Aquifers மற்றும் நீரியல் அமைப்புகள் உள்ளபோதிலும், விவசாய நோக்கில் நிலத்தடிநீர் வெறும் பருவ நீர்வளமில்லாத வடமாகாண மாவட்டங்களிலேயே (யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்) பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையின் மக்களின் 55%க்கும் மேற்பட்டோர் தங்கள் அன்றாட வீட்டுத்தேவைகளுக்காக நிலத்தடிநீரை நம்புகிறார்கள். சில மாவட்டங்களில், குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நிலத்தடிநீர் வீட்டுநீரின் ஒரே ஆதாரமாக உள்ளது. முழுமையாகப் பார்வையிட்டால், நிலத்தடிநீரின் திறன் மேற்பரப்பின் நீரைவிடக் குறைவாகவே உள்ளது. ஆண்டுக்கு 7.8 பில்லியன் $M^3$ என்ற அளவிலான நிலத்தடிநீரின் திறன் உள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது நாட்டின் மேற்பரப்பின் நீர்த்திறனின் சுமார் 15% ஆகும். மேலும், சுமார் 7 $Km^3$ நீர், மேற்பரப்புத் தளங்களுக்கும், நிலத்தடிநீர்ப் பகுதிகளுக்கும் இடையே பரிமாறப்படுகின்றது.

நிலத்தடிநீர் மிக முக்கியமான இயற்கை வளமாகும், ஏனெனில் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் கிடைக்காத பகுதிகளில் குடிநீரின் முக்கிய ஆதாரமாக இது விளங்குகிறது. நிலத்தடி நீர் மிகவும் நம்பகமானது. ஏனெனில் நீர்நிலை அடுக்குகளின் (Aquifers) வடிகட்டுதல் செயல்முறை காரணமாக இது தூய்மையானதாக உள்ளது. மேலும், இது பின்வரும் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது:

1. உள்நாட்டுப் பயன்பாடு (குடிநீர், சமையல், குளியல்)
2. வணிகம் மற்றும் தொழில்துறை (சிறு, பெரும் தொழிற்சாலைகள்)

3. விவசாயம் (பாசனம், கால்நடை வளர்ப்பு)
4. சிறிய அளவிலான பாசனத் திட்டங்கள் மற்றும் நீர் விநியோகத் திட்டங்கள்

ஆண்டின் சில காலங்களில் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் வறண்டு போகும்போது, நிலத்தடி நீர் மட்டுமே நீர் விநியோகத்தின் ஒரே ஆதாரமாக உள்ளது. எனவே, இந்த மதிப்புமிக்க வளத்தைப் பாதுகாப்பதும், நிலையான முறையில் பயன்படுத்துவதும் மிகவும் அவசியம்.

இலங்கையின் உலர்ந்தபகுதிகளில் வாழும் கிராமப்புற மக்களுக்கு நிலத்தடிநீர் முக்கியமான நீர் ஆதாரமாக உள்ளது. வன்னிப்பெருநிலப் பகுதி (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்) உலர்ந்த பகுதிக்குள் வருகிறது. இங்கு இரண்டு வகை Aquifers உள்ளன: ஆழமான கட்டுப்படுத்தப்பட்ட Aquifers மற்றும் கடினப் பாறைப் பகுதியின் மேல்மட்டம் சிதைந்த Aquifer. இம்மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை மற்றும் இடைமழையால் மழைநீர் கிடைக்கப்பெறுகின்றது. இது கீழ்நிலை Aquiferகளை நிரப்புகிறது.

### நீர்மட்டம் மற்றும் மழைப்பொழிவு:

| மாவட்டம் | சராசரி ஆண்டு மழை (மிமீ) | நிலத்தடிநீர் ஆழம் (மீ) | மறுநிரப்பு விகிதம் (%) |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | 1,200 – 1,500 | 4 – 10 | 60 – 70 |
| கிளிநொச்சி | 1,000 – 1,300 | 5 – 12 | 50 – 60 |
| மன்னார் | 900 – 1,200 | 6 – 15 | 40 – 50 |
| வவுனியா | 800 – 1,100 | 8 – 20 | 30 – 40 |

### வன்னிப்பெருநிலப் பகுதிகளில் நிலத்தடி நீருக்கான சவால்கள்:

1. மிகைபிரித்தல் (Overexploitation): விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்காக அதிக அளவில் நீர் எடுக்கப்படுவதால், நீர்மட்டம் குறைகிறது. கடலோரப் பகுதிகளில் உப்புநீர் ஊடுருவல் (Saltwater Intrusion) ஏற்படுகிறது. மன்னார் மற்றும் முல்லைத்தீவுக் கடலோரப் பகுதிகளில் 15% கிணறுகள் உப்புநீரால் பாதிக்கப்பட்டுள்ளன.
2. நீரின் தரம் பாதிப்பு: விவசாயக் கழிவுகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் நீரில் கலந்து, நச்சுத்தன்மையை ஏற்படுத்துகின்றன. நைட்ரேட் அளவு (விவசாய உரங்களால்) WHO இன் வரம்பை விட 23 மடங்கு அதிகம். பூச்சிக்கொல்லிகளின் செல்வாக்குக் காரணமாக 10% நீர் மூலங்கள் பாதுகாப்பற்றதாகக் கருதப்படுகின்றன.
3. கழிவுநீர் மாசுபாடு: சாக்கடை மற்றும் தொழில்துறைக் கழிவுகள் நிலத்தடி நீரை மாசுபடுத்துகின்றன.
4. காலநிலை மாற்றத்தின் தாக்கம்: ஒழுங்கற்ற மழைப்பொழிவால் வன்னியில் உலர்பருவம் நீடிப்பதால், நீர்வளம் குறைகிறது.
5. நீர்ப் பற்றாக்குறை: மழை குறைவாக இருப்பதால், நிலத்தடி நீர்மட்டத்தின் மறுநிரப்பு விகிதத்தில் குறை ஏற்படுகிறது. நீர்மட்டம் குறைதலுக்கு கிணறுகளின் எண்ணிக்கை அதிகரிப்பும் ஒரு காரணமாகிறது (கிணறுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு (2020 இல் 50,000 கிணறுகள், 2023 இல் 70,000). கோடைகாலத்தில் நீர் மட்டம் 3050% வரை குறைகிறது.

கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களின் நிலத்தடிநீர் இருப்பு சம்பந்தமான வரைபடங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

வன்னிப்பெருநிலப் பகுதி மக்கள் தொகை 2009 இல் 120,000 ஆக இருந்தநிலையில் 2024 இல் இது 450,000 ஆக உயர்ந்துள்ளது. மழைவீழ்ச்சி குறைந்து வருவதாலும், மக்கள்தொகை, பாசனம், வாழ்வாதாரத் தேவைகளுக்கான நீர்தேவை என்பன அதிகரித்து வருவதாலும், உலர்ந்த பகுதிகளில் நிலைத்திருக்கக்கூடிய நிலத்தடி நீர்ப்பயன்பாடு அவசியமாகிறது. 2025க்குள் இலங்கையின் மேலும் பல உலர்ந்த பகுதிகளில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படலாம்.

நீர்வள மேலாண்மையில் நிலத்தடிநீர் முக்கிய பங்கு வகிப்பதால், உலர்ந்த பகுதிகளில் நிலத்தடி நீரின் நிலையான பயன்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியமாகின்றன. மக்கள்தொகை அழுத்தத்தையும் காலநிலை மாற்றத்தையும் எதிர்கொள்ளும் சூழலில், நிலத்தடிநீரைப் பாதுகாத்துக்கொண்டு விவசாய உற்பத்தியை உயர்த்தும் அறிவியல்பூர்வமான நீர் மேலாண்மைத் திட்டங்கள், உலர்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு அவசியமாகின்றன. வன்னிப் பகுதியில் நிலத்தடிநீர் முக்கியமான வளமாக இருந்தாலும், அதன் பயன்பாடு மற்றும் பராமரிப்புக் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். நீர்ச் சேமிப்பு, திறன்மிக்க பயன்பாடு மற்றும் மாசுபாட்டுக் கட்டுப்பாடு ஆகியவற்றின்மூலம் நிலத்தடிநீரை நீண்டகாலமாகப் பாதுகாக்க முடியும். தொடர்புடைய அரசு மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயற்பட வேண்டும்.

இலங்கையில் நிலத்தடிநீர் மற்றும் நீர்நிலை

அடுக்குகள் (*Aquifers*) பற்றிய ஆய்வுகளுக்கு முக்கிய தடையாக, போதுமான ஹைட்ரோஜியாலஜி (நீரியல்) தரவுகளின் பற்றாக்குறை காணப்படுகிறது. “இலங்கையின் உருமாறிய பாறைப் (*Metamorphic Rock*) பகுதிகளுக்கான நிலத்தடிநீர் வளர்ச்சி குறித்த தேசிய கொள்கையை வகுக்க முயற்சிப்பவர்கள், நீரியல் தரவுகளின் பற்றாக்குறைகளால் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்”

மிகவும் குறைந்த வளங்களுடன் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களின் நிலத்தடி நீர் இருப்பு சம்பந்தமான வரைபடங்கள் மேலே ஏற்கனவே தரப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர் கிடைப்பு மற்றும் தரச்சீர்கேட்டு நெருக்கடி**

**நிர்வாகப் பிரதேசங்கள்:**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிர்வாகப் பிரதேசங்களில் மண்டைதீவு, காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய மேற்கே அமைந்துள்ள தீவுகள் அடங்கும். இந்தத் தீவுகளின் கரையோர வடிவங்களும் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளும் ஒரே நிலப்பரப்பின் பிரிந்த பகுதிகளாக இருக்கலாம் என்பதை அவற்றின் ஒற்றுமைகள் காட்டுகின்றன.

இந்தத் தீவுகள் மெதுவாக குடாநாட்டிலிருந்து பிரிந்து நகர்ந்து கொண்டிருக்கின்றன. அதேபோல், யாழ்ப்பாணக் குடாநாடும் இலங்கை முதன்மை நிலப்பகுதியிலிருந்தும், இலங்கைத் தீவும் இந்தியத் துணைக்கண்டத்திலிருந்தும் மெதுவாக விலகி நகர்ந்து கொண்டிருக்கின்றன.

**மக்களின் இனம்:**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல ஆயிரம் ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்கள் (திராவிட மூலத்தைச் சேர்ந்தவர்கள்) அதிகமாக குடியேறியுள்ளனர். இங்குள்ள பெரும்பாலான குடிமக்களின் வாழ்வாதாரம் இன்னும் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்களை நம்பியே உள்ளது.

**யாழ்ப்பாணக் குடாநாட்டின் புவியியல், நீர்நிலவியல் மற்றும் நிலவுருவியல்:**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஆழமற்ற கார்ஸ்டிக் நீர்நிலை (*Aquifer*) ஏற்கனவே குறிப்பிட்ட இலங்கையின் ஆறு முக்கிய நிலத்தடி நீர்நிலைகளில் ஒன்றாகும். இப்பகுதி பெரும்பாலும் மயோசின் காலத்தைய சுண்ணாம்புக்கல் அடுக்குகளால் ஆனது. அவை வடமத்திய மற்றும் சுற்றுப் பகுதிகளின் மேற்பரப்பில் காணப்படுகின்றன. மேற்பரப்பு அடுக்குகள் செம்மண், மணல் கலந்த களிமண் மற்றும் மணல் திட்டுகளால்




**இலங்கையில் ஆறு முக்கியமான நிலத்தடிநீர்ப்பரப்புகள்**

ஆக்கப்பட்டுள்ளன. குடாநாட்டின் வடக்குக் கரையோரத்தில் பவளப்பாறைகள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணச் சுண்ணாம்புக்கல் அடுக்குகள் தட்டையானவை மற்றும் 100 மீட்டருக்கும் மேற்பட்ட செங்குத்துத் தடிமன் கொண்டவை. பாறையில் உள்ள துளையிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள், சுண்ணாம்புக்கல் அடுக்கு 100 மீட்டர் ஆழம்வரை நீண்டுள்ளது என்பதையும், அதற்குகீழே 137 மீட்டருக்கும் மேலான தடித்த மணற்கல் அடுக்குகள் பிரீகேம்பிரியன் அடித்தளத்திற்கு மேல் உள்ளன என்பதையும் காட்டுகின்றன. சுண்ணாம்புக்கல் அடுக்குகளின் சில பகுதிகள் கணிசமான புதைபடிவங்களைக் கொண்டுள்ளன. மற்றும் வானிலை ஆற்றலால் பாதிக்கப்படும் தன்மை காரணமாக மற்ற மண்டலங்களைவிட அதிக நுண்துளைகளைக் கொண்டுள்ளன. விரிசல்கள் மற்றும் சுண்ணாம்புக்கல் கரைவதால் உருவாகும் கரைசல் குகைகள் (*Solution Caverns*) அதிக நீர்ப்பெருக்கத் திறன்கொண்ட நீர்நிலைகளை உருவாக்குகின்றன. இந்த நீர்நிலையின் நுண்துளைத் தன்மை 4.5% முதல் 27% வரை மாறுபடுகிறது; இதன் சராசரி மதிப்பு 15% ஆகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆறுகள் எதுவும் இல்லை. எனவே நிலத்தடி நீர்நிலைகளை நிரப்புவதற்கு ஆண்டு மழைப்பொழிவையே முழுமையாக நம்பவேண்டியுள்ளது. நீர்நிலை நிரப்பப்படுவதற்கான முக்கிய ஆதாரம் வடகிழக்கு பருவமழை ஆகும். இங்கு 84,000க்கும் மேற்பட்ட தோண்டப்பட்ட கிணறுகள் உள்ளன. இவற்றில் 80% வீட்டுத்தேவைகளுக்கும், 20% பாசனத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

நீர்மட்ட அளவீடுகள் மற்றும் மழைப்பொழிவின் விரிவான நீர்ச்சமநிலை பகுப்பாய்வு, நீர்நிலையில் சேமிக்கப்பட்ட நீரின் அளவு ஆண்டு மழைப்பொழிவின் அடிப்படையில் 60 மில்லியன் கன மீட்டர் முதல் 220 மில்லியன் கன மீட்டர்வரை மாறுபடுவதைக் காட்டுகிறது (முறையே 600 மிமீ முதல் 1,600 மிமீ மழைப்பொழிவுக்கு ஏற்ப).

மழைப்பொழிவின் பரவலின் அடிப்படையில், ஆண்டு மழைப்பொழிவின் சுமார் 12% நீர்நிலையை நிரப்புகிறது; மேலும் 25%க்கும் மேற்பட்டது ஓடை மற்றும் தற்காலிக வடிகால் வழிகளின்மூலம் கடலில் கலக்கும் மேற்பரப்பு ஓட்டமாக மாறுகிறது. வடகிழக்கு பருவமழைக்காலத்தில் வெற்று நிலங்களில் உறிஞ்சுதல் மற்றும் ஆவியாகுதல்மூலம் இழக்கப்படும் மழைநீரின் அளவு ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. இதற்குப் பெரும்பாலும் நிலத்தின் சமதளத்தன்மையே காரணமாகும். மழைநீரை நேரடியாக நம்பியுள்ள பயிர்கள், நிலத்தடிநீரை துணைப்பாசனமாகப் பயன்படுத்துகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடத்தப்பட்ட நிலத்தடி நீர்ச்சமநிலை ஆய்வுகள், பல்வேறு பயன்பாடுகளுக்கான சராசரி நீர்ப் பிரித்தெடுப்பை பின்வருமாறு காட்டுகின்றன: விவசாயத்திற்கு 1.2%, வீட்டுத்தேவைகள் (தோட்டங்கள் உட்பட) 16.9%, வீட்டுப் பயன்பாட்டிற்கு 8.5%, மற்றும் பொதுக்கிணறுகளுக்கு 3.4%. 78% வரை நிலத்தடிநீர் நிரப்புதல் இடம்பெறும்நிலையில், 40% பாசனத்திறனை அடிப்படையாகக்கொண்டு, விவசாய உபயோகத்திற்காக இந்தநீரைப் பயன்படுத்த முடியும். நீர் நிரப்புதல் பெப்ரவரியைத் தவிர செப்டம்பர் முதல் மார்ச் வரை நடைபெறுகிறது. ஆய்வுகள், வறண்ட மாதங்களில் அதிகப்படியான நீர்ப்பிரித்தெடுப்புக் காரணமாக ஆண்டு நீர்ச்சமநிலையில் நிகர சேமிப்பு இழப்பு ஏற்படுவதைக் காட்டுகின்றன. இது, நிலையான அடிப்படையில், நிலத்தடி நீரின் பாதுகாப்பான மகசூல் ஆண்டு நிரப்புதல் அளவின் 50% மட்டுமே என்பதைக் காட்டுகிறது. ஆனால் தற்போதைய பிரித்தெடுப்பு 100%க்கும் அதிகமாக உள்ளது. எனவே, தற்போதைய விகிதத்தில் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது நீடித்திருக்க முடியாது.

குடாநாடு முழுவதும் உள்ள சுண்ணாம்புக்கல் அடுக்குகளின் கார்ஸ்டிக் தன்மை காரணமாக, எண்ணற்ற கரைசல் கால்வாய்கள் (Solution Canals) நிலத்தடி நீரைக் கடலில் வெளியேற்றுகின்றன (கீரிமலையில் உள்ள 'கொர்னி' இதற்கு ஒரு சிறந்த உதாரணம்; இது ஒரு வெளியேற்றப் புள்ளியில் அமைந்துள்ளது). இந்த வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது. வடகிழக்கு பருவமழை காலத்தில் நீர் நிரப்புதலை அதிகரிக்க முயற்சிப்பது பெரும்பாலும் பயனற்றது. ஏனெனில் அது கடலில் நீர் வெளியேற்றத்தை அதிகரிக்கும்.

மழைநீரை மேற்பரப்பில் சேமிப்பது வறண்ட காலத்தில் மெதுவாக ஊறுவதன்மூலம் நிலத்தடி நீரை நிரப்பக்கூடும் என்றாலும், இதற்குப் பல சிக்கல்கள் உள்ளன. குடாநாட்டில் எந்த முக்கியமான நில அமைப்புகளும் இல்லாததால், அணைகள் கட்டப்பட்டாலும் கூட, இந்தச் சேமிப்புப் பகுதிகளின் அடிப்பகுதி கசிவைத் தடுக்க முழுமையாக மூடப்பட்டிருக்க வேண்டும். மேலும் கட்டுப்படுத்தப்பட்ட ஊறுதலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆறுகள் எதுவும் இல்லை; அனைத்து நீர் வளங்களின் ஒரே ஆதாரம் பரவலாகக் காணப்படும் நிலத்தடி நீராகும். குடாநாட்டின் எந்த இடமும் கடற்கரையிலிருந்து 10 கிலோமீட்டருக்கு மேல் தொலைவில் இல்லாததால், நிலத்தடி நீர் வளங்கள் உப்பு நீர் உட்புகக்கூடிய ஆபத்தில் உள்ளன. குறிப்பாக பல விவசாயிகள் தங்கள் கிணறுகளில் அதிகமாக நீரை இறைப்பதால் இந்தநிலை மேலும் மோசமடைகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலத்தடி நீர் முழுமையாக மாசடைந்துள்ளது. மேலும் இது குறைந்தது 50 ஆண்டுகளாக இந்தநிலையில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இது மேலும் மோசமாகி வருகிறது. குறிப்பிடப்பட்ட GTZ அறிக்கையின்படி, குடாநாட்டின் கிணற்று நீர் மனித நுகர்வுக்கு ஏற்றதாக இல்லை என நான்கு காரணங்களால் தெரியவருகிறது:

1. உயர் உப்புத்தன்மை: விவசாயk கிணறுகளில் அதிகமாக நீர் இறைப்பதால், நிலத்தடியில் கடல் நீர் ஈர்க்கப்படுகிறது. இதன்விளைவாக கிணற்று நீரில் உப்புத்தன்மை அதிகரிக்கிறது.
2. கந்தகம், நைட்ரேட் மற்றும் பாஸ்பேட் அளவுகளின் அதிகரிப்பு: விவசாயக் கிணறுகளின் நீரில் கந்தகம், நைட்ரேட் மற்றும்

பாஸ்பேட் அளவுகள் மிக அதிகமாக உள்ளன. இது முக்கியமாக உயர் பராமரிப்புப் பயிர்களுக்கு அதிகளவில் வேளாண் ரசாயனங்கள் மற்றும் உரங்கள் பயன்படுத்தப்படுவதால் ஏற்படுகிறது.

3. பூச்சிக்கொல்லி மருந்துகளின் மாசு: விவசாயிகள் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி மருந்துகள் அதிகளவில் நீரில் கரைந்து ஆழமற்ற நிலத்தடி நீரை மாசுபடுத்துகிறது.
4. ஈ.கோலை பாக்டீரியாவால் முழுமையான மாசுபாடு: குடாநாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள சாக்கடைகளில் மனிதமலம் கலந்த நீர் கசிவதால், கிணற்றுநீர் முழுமையாக ஈ.கோலை (*Escherichia Coli*) பாக்டீரியாவால் மாசடைந்துள்ளது. சாக்கடைக்குழிகள் சீல் வைக்கப்படாமலும், நீர் கசிவதாகவும் உள்ளதால், மலம் மற்றும் பாக்டீரியாக்கள் நேரடியாக நிலத்தடி நீரில் கலந்துவிடுகின்றன.




கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களின் நிலத்தடி நீர் இருப்பு சம்பந்தமான வரைபடங்கள்




கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களின் நிலத்தடி நீர் இருப்பு சம்பந்தமான வரைபடங்கள்

### யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள நிலத்தடி நீரைப் பருகுவதால் ஏற்படும் கடுமையான உடல்நலப் பாதிப்புகள்:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பெரும்பாலான மக்கள் கிணற்று நீரைக் கொதிக்க வைக்காமல் நேரடியாகக் குடிக்கின்றனர். இதன்விளைவாக வயிற்றுப்போக்கு (டையரியா) உண்டாகின்றது. பெரியவர்கள் சில நாட்களில் இதிலிருந்து குணமடைந்துவிடுகிறார்கள். ஆனால் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் கடுமையான ஆபத்தில் சிக்குகின்றனர்.

மேலும், முன்பு குறிப்பிட்ட மூன்று முக்கிய காரணங்களால் (A , B, C) இந்த நீரை எந்தவகையிலும் சுத்திகரித்து பாதுகாப்பான குடிநீராக மாற்றமுடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நீரைக் குடிக்கும்போது, ஒருவர் பலரின் கழிவுநீர் கலந்த மாசடைந்த நீரையே உட்கொள்கிறார் என்பதே உண்மையான விவரம். இந்த மூன்று காரணிகளையும் நீக்கிய பிறகும், இலங்கையினதும், WHOவினதும், குடிநீர்த் தரநிலைகளுக்கு ஏற்ப இதனை மாற்ற முடியாது எனவே, யாழ்ப்பாணக் குடாநாட்டில் எந்த கிணற்றுநீரும் குடிப்பதற்கோ உணவு தயாரிப்பதற்கோ ஏற்றதல்ல. சுருக்கமாக, யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலத்தடிநீர் மனித நுகர்வுக்குத் தகுதியற்றது. எனவே, குடிநீர் வேறுவகையான ஆதாரத்திலிருந்தே வழங்கப்பட வேண்டும். அதாவது வன்னிப்பெருநிலப் பரப்பிலிருந்து வழங்கப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட நான்கு காரணங்களில், கடைசிக் காரணம் மட்டுமே (ஈ.கோலை பாக்டீரியா) 10 நிமிடங்களுக்கு நீரைக் கொதிக்கவைத்து, பின்னர் குளிர்வித்துப் பருகுவதன் மூலம் சரிசெய்ய முடியும். இந்தமுறை, பாக்டீரியாவை கொல்லும்.

யாழ்ப்பாணத்தின் நீர் மாசுபாட்டுப் பிரச்சினை ஒரு பெரும் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார

நெருக்கடியாகும். நிலத்தடி நீர் மட்டத்தில் ஏற்படும் குறைவு, கடல்நீர் ஊடுருவல், வேளாண்மையில் ரசாயனங்களின் தவறான பயன்பாடு மற்றும் முறையற்ற கழிவு மேலாண்மை ஆகியவை இதற்கு முக்கிய காரணங்கள். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க, கீழ்வரும் நான்கு விடயங்களில் எமது கவனத்தை செலுத்த வேண்டும்:

1. நீர்ச் சேமிப்பு மற்றும் பயன்பாட்டில் கட்டுப்பாடு
2. கரிம வேளாண்மை முறைகளை ஊக்குவித்தல்
3. சாக்கடை அமைப்புகளை மேம்படுத்துதல்
4. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டங்கள்

கூடுதலாக, உப்பு நீர் ஊடுருவலின் காரணமாக, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களும், கிணறுகளும் பயன்படுத்த முடியாதநிலையில் உள்ளன. உப்பளவு அதிகமாக இருப்பதால், இவை விவசாயத்திற்கும் ஏற்றதல்ல.

## யாழ்ப்பாணக் கழிமுகத்தின் சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல்

நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கு சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பது முக்கியமானது. சில சந்தர்ப்பங்களில் சூழல் நிலைத்தன்மையை உறுதிசெய்யும் வகையில் வளர்ச்சி நடவடிக்கைகளை வடிவமைக்க முடியும். எனினும், பல சந்தர்ப்பங்களில் ஓர் அம்சத்தை மற்றவற்றுடன் சமரசம் செய்ய வேண்டியிருக்கிறது; முன்னுரிமைகளை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

யாழ்ப்பாணக்குடாநாடு பல சூழல் அமைப்புகளைக் கொண்டுள்ளது. இதன் ஈரநிலங்கள் நல்ல சூழல் சமநிலையை உருவாக்குவதிலும், இப்பகுதியின் ஆரோக்கியமான சூழலைப் பராமரிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்கள்தொகை வளர்ச்சியால் வீடமைப்புக்கான தேவை அதிகரித்துள்ளது. இதன்விளைவாக இவ் இயற்கை வாழ்விடங்கள் குறைந்து வருகின்றன.

இந்தக் கழிமுகங்கள் (Lagoons) எழுபதுக்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வலசைப் பறவை இனங்கள், மீன் இனங்கள், இறால், நத்தை, சிறிய நண்டு, கடல்நண்டு, சிப்பி, மட்டி இனங்கள் மற்றும் வனவிலங்குகளின் வாழ்விடமாகவும், இனப்பெருக்கம் மற்றும் உணவுதேடும் இடமாகவும் உள்ளன. இந்தக் கழிமுகங்கள், அவற்றின் சாதகமான சூழல் நிலைமைகள் மற்றும் இயற்கை வளங்கள் காரணமாக உலகத்தரம் வாய்ந்த பறவைச் சரணாலயங்களாக உருவாகும் திறன் கொண்டவை. இவை அனைத்தும் சரணாலயங்களாக அறிவிக்கப்படாவிட்டாலும், தற்போது சட்டவிரோதமான காடழிப்பு, குடியேற்றம், திட்டமிடப்படாத வளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் மீன்பிடிமுறைகள் போன்றவற்றால் அவற்றின் உயிர்வாழ்வுக்கு கடுமையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. மேலும், முறையற்ற கழிவு அகற்றல், வேட்டையாடுதல், விழிப்புணர்வு இல்லாமை மற்றும் மாகாண மற்றும் தேசிய அளவில் இவற்றைச் சரணாலயங்களாக அறிவிக்கும் நிறுவன ஏற்பாடுகள் இல்லாதது போன்ற காரணிகள் இந்தக் கழிமுகங்களின் (La goons) நிலையை மேலும் மோசமாக்குகின்றன.

இந்த இடங்களைச் சரணாலயங்களாக அறிவித்து இந்த ஈரநிலங்களைப் பாதுகாப்பது இப்பகுதியின் புவிசார் சூழல் தரத்தை மேம்படுத்துவதற்கான அவசரத் தேவையாகும். இந்தச் சூழல் அமைப்புகளை எதிர்காலத்தில் பாதுகாக்க உள்ளூர் மக்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் ஆர்வலர் குழுக்கள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணக் கழிமுகத்திற்கான (Lagoons) சூழல் மேலாண்மைத்திட்டம் கழிமுகச்சூழல் அமைப்பின் நிலைத்தன்மையையும் அது வழங்கும் சேவைகளையும் உறுதி செய்ய அவசிமானதாகும். இத்தகைய திட்டத்தின் வெற்றி, வளங்களின் தற்போதைய பயன்பாடு, அதனால் ஏற்படும் பாதிப்புகள், எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள், வளங்களின் மதிப்பு மற்றும் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில உவர்நீர்க் கழிமுகங்களை (Lagoons) நன்னீர் ஏரிகளாக மாற்ற முன்மொழியப்பட்ட திட்டம், உணர்வுபூர்வமான காரணங்களுக்காக இல்லாமல், அதன் முழுமையான இயற்பியல், அறிவியல், பொறியியல், சூழல் மற்றும் சூழலியல் அடிப்படையில் ஆராயப்பட வேண்டும்.

வடமாகாணத்தில் 2025க்கான நீர்த் தேவைகள் 4.6 மில்லியன் கனமீட்டர்/ நாள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 3.3 மில்லியன் கனமீட்டர்/ நாள் நகரமக்கள் தொகைக்கு தேவைப்படுகின்றது. நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பாதுகாக்கும் வகையில், நீர் மேலாண்மைத் திட்டங்களை உருவாக்க வேண்டும். இது விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவும். நிலத்தடிநீரின் தரத்தை மேம்படுத்த, கழிவுநீர் மேலாண்மை மற்றும் நீர்ச் சுத்திகரிப்பு திட்டங்களை செயற்படுத்த வேண்டும். மழைநீர் சேமிப்பு முறைகளை ஊக்குவித்து, நிலத்தடிநீர் ஆதாரங்களை மேம்படுத்த வேண்டும்.



● பொன் பிரபாகரன்

பொன்.பிரபாகரன், யாழ். பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவப் பட்டம் பெற்றவர். பட்டப்பின் டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், ஊடகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மேலும், கொழும்பு வணிகப் பள்ளியில் செயற்றிட்ட முகாமைத்துவப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்ற தளங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். ‘காமன் கூத்து’(மலையக தமிழரின் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு), ‘உப்பு ரொட்டி’ (கவிதைத் தொகுப்பு), ‘மலையகத் தமிழரின் சமூகவியலும் அரசியலும்’ என்பன இவரது நூல்களாகும்.

# இலங்கை மலையகத் தமிழரின் கலைகளும் சமூக உருவாக்கத்தில் அதன் பாத்திரமும்

ம னித இனத்தை அடையாளப்படுத்துவதில் பண்பாடு மிகமுக்கியமான அளவுகோலாகப் பயன்படுத்தப்படுகின்றது. பண்பாட்டு மானிடவியலாளர்கள் பண்பாட்டுக்கு பல்வகைப்பட்ட விளக்கங்களை வழங்கியுள்ளனர். காலமாற்றம், கலாசார - சமூக - அரசியல் - பொருளியல் உற்பத்தி உறவுகள், காலநிலை மாற்றம், அறிவியல் வளர்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள், உடல் - உளவியலியல் மாற்றங்கள், சமூக ஊடாட்டங்கள், கலப்புறவுகள், மணமுறைகளில் ஏற்படும் மாறுபாடுகள், போர்கள், முரண்கள், ஏனைய உயிரினங்களுடனான உறவு, உணவுமுறை, உற்பத்தி நுட்பங்கள், ஆரோக்கிய முயற்சிகள், விருந்தோம்பல், ஆடை - ஆபரணங்கள், சந்தைப் பரவல், இணைய வாணிபம், சடங்குகள், சம்பிரதாயங்கள், கல்விமுறைகள், ஊடகங்கள், சினிமா, ஆட்சிமுறை, சித்தாந்தங்கள், ஆன்மீக வளர்ச்சி, மதவழிபாடு, வாழ்வியல் தரிசனம், பிறப்பு, இறப்பு, திருமணம், அறநெறி, ஆற்றல் இயக்கம் போன்றவை அனைத்தும் பண்பாட்டின்மீது ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

இந்நிலையில் மலையகத் தமிழர்களின் பண்பாட்டு உருவாக்கத்தில் பல கூறுகள் ஆழமான செல்வாக்கைச் செலுத்தியுள்ளன. அவையாவன:

1. இந்தியப் பண்பாடும் வாழ்வியலும்
2. தமிழகப் பண்பாடும் வாழ்வியலும்
3. இந்துமதப் பண்பாடும் வாழ்வியலும்
4. காலனியப் பண்பாடும் வாழ்வியலும்
5. சிங்கள - பௌத்தப் பண்பாடும் வாழ்வியலும்
6. கிறிஸ்தவப் பண்பாடும் வாழ்வியலும்
7. பெருந்தோட்ட உற்பத்திமுறையும் வாழ்வியலும்
8. நிலவியல், நீரியல், வானியல் தோற்றப்பாடுகள்
9. மலையகத் தமிழரின் உள முரண்பாட்டுக் கூறுகள்

1. ஆண் - பெண் உறவுமுறைகள்
2. சாதியமைப்பு, தொழில்முறை அதிகாரக் கட்டமைப்பு
3. அகவர்க்க முரண்கள்
4. மண உறவுகள்
5. மலையகத் தமிழர் - ஈழத்தமிழர் உறவும் முரணும்
6. மலையகத் தமிழர் - முஸ்லிம்கள் உறவும் முரணும்
7. அரசுசாரா அதிகார மையங்கள் (World Vision/ Redo/ Falm)
8. ஊடகச் செல்வாக்கு, சினிமா, மெகா சீரியல்கள்
9. புதிய அறிவியல் தொழில்நுட்பங்களின் செல்வாக்கு
10. உள்ளக - வெளியகப் புலம்பெயர் வாழ்வும் பண்பாடும்

மலையகத் தமிழர்கள் வாழ்நிலையும், சூழ்நிலையும், வரலாற்றின் திசைவழியும் கடந்த இருநூறாண்டுகளில் பாரிய பல்பரிமாணச் சோதனைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், அழுத்தங்களுக்கும் உள்ளாகியுள்ளன. மலையகப் பண்பாடு அடுக்கடுக்கான ஆக்கிரமிப்புச் சட்டங்கள், அடிமைச் சாசனங்கள், திட்டமிட்ட வன்முறைகள், இடப்பெயர்வுகள், பஞ்சம் - பட்டினி, நோய், இயற்கையின் கோரத்தாண்டவம், ஆக்கிரமிப்பு அபிவிருத்தித் திட்டங்கள், பூகோள அரசியல் செல்வாக்கு என்பனவற்றுக்கும்; பெருமுதலாளிய - கார்ப்பரேட் கலாசார மேலாதிக்கம், நிதிமூலதன மேலாண்மை, நிறுவனங்களின் இரக்கமற்ற சுரண்டல் போன்றவற்றிற்கும் உள்ளாகியுள்ளது. ஆயினும், திறந்த பொருளாதாரமுறையின் வலிமையான தாக்கத்தால் வாழ்வாதாரமிழந்த தொழிலாளர்களும், மக்கள் பண்பாட்டு முதுசங்களான முதியவர்கள், இளையோர், சிறுவர்கள் என்போரும், அலையலையாகப் புலம்பெயர்ந்து நகர்ப்புற நாகரிகங்களை நோக்கி உதிரிகளாகச் நகரச்செய்த சூழலிலும், எமது மக்கள் பண்பாட்டையும் அதன் அடையாளக்கூறுகளையும் பற்றிப்பிடித்துப் பாதுகாத்து வருகின்றனர்.

நவீன கல்விமுறையும், மேலெழும்புகின்ற மத்தியதர வர்க்கமும், உதிரிவர்க்கங்களும், மேலைத்தேய வாழ்வியல் கோலமுறைமையும், மேட்டுக்குடி வர்க்கங்களும் வெகுமக்கள் பண்பாட்டை அரவணைக்க மறுத்துவரும்போதிலும், எமது மக்கள், குறிப்பாக தோட்டத்தொழிலாளர்கள் மலையகமக்கள் பண்பாட்டின் காவலர்களாக நிலைத்திருக்கின்றனர். மலையகத்தின் எப்பாகத்திலும் நகர்ப்புற, கிராமப்புறப் பண்பாட்டின் பகுதியான உழைக்கும் வர்க்கத்தின் உயிரோட்டமான பண்பாட்டுக்கூறுகள் பேணப்படுவதோ, பயிலப்படுவதோ, பாதுகாக்கப்படுவதோ இல்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்.

இந்நிலையில் மலையகத்தமிழர்களின் சமூக உருவாக்கத்தில் பண்பாட்டின் பாத்திரம் குறித்துப் பரசீலித்தல் முக்கியத்துவமுடையதாகும். அவ்வகையில்:

01. திருமண முறைகள்
02. சடங்குகள்
03. சம்பிரதாயங்களும் வழக்காறுகளும்
04. நம்பிக்கைகள்
05. ஆலய வழிபாட்டுமுறைகள்
06. சிறுதெய்வ வழிபாடுகளும் நம்பிக்கையும்
07. கலை வடிவங்கள்
08. கூத்து மரபுகள்
09. இசைக்கோலங்கள்
10. மொழியும் வழக்குகளும்
11. உணவுப்பழக்கங்கள்
12. ஆடை, ஆபரணம், ஒப்பனை
13. கலைகளும் இலக்கியங்களும்
14. நாட்டுபுற நடத்தைக்கோலங்கள்
15. பெயரியல், பெயரிடல் முறைகள்
16. குறியீடுகளும், குலக்குறிகளும்
17. உறவுமுறைகள்
18. உடலியல், உளவியல் கோலங்கள்

எனப் பட்டியலிட முடியும். இதனை விரித்தும் குறுக்கியும் பொருள்கோடல் செய்ய முடியும்.

## திருமணமுறைகள்

மலையகத்தமிழர்களின் திருமணமுறைகள், பண்டைத்தமிழரின் திருமணமுறைகளில் பெரிதும் ஒத்தியங்கும் போக்குடையதாகக் காணப்படுகின்றது. பெண்பார்த்தல், மாப்பிள்ளை பார்த்தல், நிச்சயதார்த்தம் செய்தல், திருமணம் செய்தல், அம்மிமிதித்தல், அருந்ததி பார்த்தல், சீர் எடுத்தல், ஆடை சுற்றுதல், நலங்கு வைத்தல், வீட்டுக்கழைத்தல், முதலிரவு என தொடங்கும் திருமணச் சடங்குகள் ஒவ்வொரு குல, கோத்திர மரபுகளுக்கேற்ப பொதுக்கூறுகளையும், சிறப்புக் கூறுகளையும் கொண்டுள்ளன.

மாமன்மாரைத் திருமணம் செய்தல், அக்காள் மகளைத் திருமணம் செய்தல், குல - கோத்திர மரபுகளுக்குள் திருமணம் செய்தல் என இணக்கமுறைத் திருமணங்கள் நடந்து வருகின்றன. பண்டைத் தமிழர்களிடையே காணப்பட்ட மடலேறுதல், ஒருதலைக்காமம், பொருந்தாக்காதல் என்பனவும், பிணக்குமுறையிலமைந்த திருமண, மணவாழ்க்கை முறைகளும் சமூகச் சுவீகாரத்தைப் பெற்றுள்ளன.

திருமணத்திற்கு முன்னர் பெற்றோர், தாய்மாமன்மார், மாமிமார் ஆகிய உறவுமுறைகள் பேரம்பேசும் படலத்தில் ஈடுபடுகின்றனர். ஆயினும் தொழிலாளர் வர்க்கக் குடும்பங்களில் இறுக்கமான சீதனமுறைகள் காணப்படாதது குறிப்பிடத்தக்கதாகும். ஒருதாரமுறை ஏற்கப்பட்ட சமூகவாழ்க்கை முறையாகக் காணப்பட, பல்தார மணமுறையும், அக்காள் - தங்கை மணமுறையும், களவு மணமுறைகளும் அரிதானதாகக் காணப்படுகின்றன. மத்தியதர வர்க்கக் குடும்பங்களிலும், பாட்டாளிகள் - உதிரிப்பாட்டாளிகளிடையேயும் காதல் திருமணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

## சடங்குகள்

மலையகத் தமிழரிடையே வழங்கப்படும் சடங்குகளும் நீண்டநெடிய பண்பாட்டுத் தொடர்புடையன. அவை பண்டைய தமிழர்களின் பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, இராமாயணம், மகாபாரதக் கதைகள், சடங்குகளோடும் தொடர்புடையவை. உதாரணமாக, பொன்னர் - சங்கர் கூத்திலே, தங்காளுக்கு, மாயவர் கூறுவதாக வருகிற "தாயகுக்கருத்தான் தலைமகனார் தந்தைக்கும் தான் இளையவனாம் தலை சிரைத்து கொல்லுவைக்க...." எனும் பாடல் ஈமச்சடங்குகளை எவ்வாறு நிகழ்த்துவது என எடுத்துக்கூறுகின்றது. குடும்பங்களிலே திருமணம், பூப்பெய்தல், பிள்ளை பிறப்பு, முதலிரவு, வளைகாப்பு, புண்ணியதானம், சோறூட்டல், காதுகுத்துதல், துடக்குபார்த்தல் எனப் பல கருமங்கள் சடங்குகளாகவே பேணப்பட்டுவருகின்றன.

புதுமனை புகுதல், காதுகுத்துதல், பெயர் சூட்டுதல், ஆலயச்சடங்குகளில் குறிப்பெடுத்தல், தீமிதிப்பு, கரகம், காவடி பாலித்தல் ஆகியன சிறப்பான மலையக மக்கள் பண்பாட்டுடனும் வழிபாட்டுடனும் தொடர்புடையனவாகும். நகர்ப்புறங்களிலும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஆலயத்திருவிழாக்களுக்கு மாறாக, மலையகத் தமிழரிடையே குறிப்பெடுக்கும், கரகம் பாலிக்கும் சடங்குமுறைகள் காணப்படுகின்றன.

## சம்பிரதாயங்களும், வழக்காறுகளும்

வந்தாரை வாழவைக்கும் தமிழகம் என்றொரு முதுமொழியுண்டு. அது மலையகத் தமிழருக்கும் பொருந்துகின்றது. உறவினரை, நண்பர்களை வரவேற்றல், உபசரித்தல், முதியோரைப் பராமரித்தல், வெற்றிலை வைத்தல், வெற்றிலை -

பாக்கு - பணம் வைத்து மாமனை அழைத்தல், ஆரத்தியெடுத்தல், உலக்கை தாண்டல், அம்மிமிதித்தல், அருந்ததி பார்த்தல், வண்ணான் தீட்டுப் பார்த்தல், பந்தலிடல், திருமணம் - பூப்புனித நீராட்டுவிழா (மாமன்) கொடியேற்றல், மாவிலைத் தோரணம் கட்டுதல், கும்பம் வைத்தல், கற்கண்டும் பொட்டுக்கடலையும் கொடுத்தல், திலகமிடல், கரம்கூப்பி வரவேற்றல் என்பன இம்மக்களின் சம்பிரதாயங்களாகும்.

ஈமச்சடங்குகளில் தாலியறுத்தல், வாய்க்கரிசி போடல், எண்ணெய் வைத்தல், நெய்ப்பந்தமேற்றல், கொள்ளிக்குடம் உடைத்தல், முக்காடு போடல், முக மயிர், தலை சிரைத்தல், நீர்மாலையெடுத்தல், பால் வைத்தல், கருமகாரியம் செய்தல், திதி - திவசம் செய்தல், மோட்ச விளக்கேற்றல், தீபாவளியன்று புடவை - பலகாரம் - உணவு படைத்தல், அமாவாசை - பௌர்ணமி விரதம் பிடித்தல் என்பனவும் காணப்படுகின்றன.

## ஆலய வழிபாடும் வழக்காறும்

மலையக ஆலயங்களின் வழிபாடுகள் எனக் கொள்ளும்போது 1) மாரியம்மன் ஆலயங்கள் 2) முருகன் ஆலயங்கள் 3) பிள்ளையார் ஆலயங்கள் 4) காளியம்மன் ஆலயங்கள் என்பன பிரதான வழிபாட்டு மையங்களாகவும், வழிபாட்டு முறைகளாகவும் காணப்படுகின்றன. ஒரு பருமட்டான மதிப்பீட்டின்படி, மலையகத்தில் மாரியம்மன் ஆலயங்கள் சுமார் 2500 - 3000 வரையில் காணப்படவேண்டும். மாரியம்மன் ஆலயங்கள் மலையகத்தின் தோட்டப்பகுதிகளில் பிரதான வழிபாட்டுமுறையாக அமைகின்றன. முருகன், பிள்ளையார், காளியம்மன் ஆலயங்கள் சுமார் 1000 வரையில் காணப்படவேண்டும். இவை தோட்டங்களில் சிறு ஆலயங்களாகவும் நகர்ப்புறங்களில் பெருந்தெய்வ ஆலயங்களாகவும் காணப்படுகின்றன. முருகன், கந்தன், தண்டாயுதபாணி எனப் பரவிக்காணப்படும் முருக வழிபாட்டில் நகர்ப்புற மக்களே அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர்.

மாத்தளையில் முத்துமாரியம்மன், கண்டியில் கட்டுக்கலை பிள்ளையார், நாவலப்பிட்டியில் கதிரேசன், ஹட்டனில் பிள்ளையார், மஸ்கெலியாவில் சண்முகநாதர், பொகவந்தலாவையில் தண்டாயுதபாணி, இரத்தினபுரியில் சிவன், ஜிந்துப்பிட்டியில் முருகன் எனத் தொடரும் நகர்ப்புறப் பெருந்தெய்வங்களும், தோட்டப்புறச் சிறுதெய்வங்களும் வர்க்கரீதியான பிரிகோட்டில் நிற்கின்றன. நகர்ப்புற வழிபாடும், தோட்டப்புற மக்கள் வழிபாடும் அவற்றின் தோற்றப்பாடுகளிலும் தெளிவான வேறுபாட்டைக் கொண்டிருக்கின்றன. சிறுதெய்வ வழிபாடு தோட்டப்புறங்களின் பரந்துபட்ட வழிபாடாகக் காணப்படுகிறது. கம்பனி, அரச, தனியார் காணிகளில் மலையகமக்களால் வழிபாடு நடத்தப்படும் சுமார் 50,000 சிறுதெய்வ வழிபாட்டிடங்கள் இருக்கக்கூடும்.

சிந்தாகட்டி, மருதைவீரன், மருதையன், காத்தான், காத்தவராயன், சடாமுனி, மகாமுனி, மாடசாமி, காளி, உத்திரகாளி, பத்திரகாளி, கங்கையம்மன், முனியாண்டி, ஐயனார், மாயன், கருப்பு, பத்தினி, சங்கிலிக் கருப்பு, ரோதை முனி என விரியும் இத்தகை வழிபாட்டிடங்கள் மலையகமெங்கும் வியாபித்திருக்கின்றன. இவற்றை வழிபடும் மக்கள் பொதுவழக்கில் தொழில்சார் சடங்குகளை மேற்கொண்டும், சிறப்புநிலையில் கோத்திர - சாதி அடிப்படையிலும் வழிபாடுகளை நிகழ்த்துகின்றனர்.

மூடப்பட்டும், காடாக்கப்பட்டும் கிடக்கும் நூற்றுக்கணக்கான தோட்டப்பகுதிகளில், வேற்றினத்தவரால் சூனியச் சடங்குகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட ஆலயங்களையும் வழிபாட்டிடங்களையும் இப்போது மலையக மக்கள் பேணிக்காத்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும் (உதாரணமாக: அங்குருவலை பத்தினியம்மன், மாரியம்மன், சங்கிலிக்கருப்பர் ஆலயங்கள்).

தோட்டங்களில் கொடிக்கம்பம் நடல், பந்தலிடல், குறிப்பெடுத்தல், கோடாங்கி கரகம் பாலித்தல் என மாரியம்மன் வழிபாடு தொடர, நகர்ப்புறங்களில் கொடியேற்றத்துடன் வழிபாடுகள் ஆரம்பமாகின்றன. நகர்ப்புற வழிபாட்டில் யாழ்ப்பாணத்து ஐயர்கள் பூசகர்களாக - புரோகிதர்களாக இருக்க, தோட்டப்புறங்களில் பண்டாரம், பூசாரிமார்களால் பெரும்பாலும் இவ்வழிபாடுகள் நடாத்தப்படுகின்றன.

தற்போது இந்துமத அடிப்படைவாதக் குழுக்களும், இந்து கலாசார திணைக்களம், இந்திய - இலங்கை அரசுகளும் மலையக மக்களின் வழிபாட்டு முறைகளை சமஸ்கிருதமயப்படுத்தவும், ஆகம நெறிக்குட்படுத்தவும், அடிப்படைவாத சித்தாந்தமயப்படுத்தவும் தீவிரமாக முயன்று வருகின்றன (உதாரணம், செல்வகந்த அம்மன் ஆலயத்தின் கொடியேற்றம், காளி கோவிலில் சமஸ்கிருதப் பாராயணங்கள்). உழைக்கும் வர்க்கத்தினரின் மலையக ஆலய வழிபாடுகள், மேற்பட்ட வர்க்கங்களில் நலன்களைப்

பிரதிபலிப்பனவாக வலிந்து மாற்றப்படுகின்றன. முருக வழிபாடும், பிற சிறுதெய்வ வழிபாடுகளும் சித்திராப் பௌர்ணமியும் கைவிடப்பட்டு ஐயப்பன் வழிபாடு, அம்மா பகவான் வழிபாடு, அனுமான் வழிபாடு, விநாயக சதுர்த்தி என்பன இடையீட்டுத் தெய்வங்களாக, நாகரிக மேட்டுக்குடி வழிபாடாக முன்னெடுக்கப்படுகின்றன.

மறுபுறம் காலனித்துவக் காலத்தைவிட தீவிரமாக, கிறிஸ்தவமயமாக்கம் இடம்பெறுகின்றது. நூற்றுக்கணக்கான கிறிஸ்தவப் பிரிவுகள் மதமாற்றப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளன. ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், எழுத்தாளர்கள் எனப் பலர் மதமாற்ற அரசியலின் பகடைகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.

அசம்பிளி ஒவ் கோட், சிமிர்னா, 7 ஆம் நாள் திருச்சபை, யேசு அழைக்கிறார், குழந்தை யேசு திருச்சபை, ஜெகோவாவின் சாட்சிகள், பைபிள் பெப்டிஸ்ட் சேர்ச், றோமன் கத்தோலிக்கர் எனப் பரவிவரும் மதமாற்றம், காலனியமயமாக்கல் நிகழ்ச்சிநிரலின் ஒரு பகுதியாக நன்கு திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றது. இஸ்லாமியமயமாக்கல் இன்னொரு பண்பாட்டு ஊடுருவலாக இன, மத, கலாசார, அடையாள ஊடறுப்பாகத் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றது. வஹாபிசத்தின் நீட்சியாக இதனைக் காண முடியும். பௌத்தமயமாக்கலின் பகுதியாக, இந்துக் குருமார் பௌத்தத் துறவிகளாக மாற்றப்பட்டு வருகின்றனர். இன - மதக் கலப்பு மணங்கள், ஒரு பண்பாட்டு ஊடாட்டக் கருவியாக பயன்படுத்தப்படுகின்றது. இவ்வூடாட்டம் மலையகத் தமிழின் பண்பாட்டைச் சிதைக்கும் மேலாண்மைக் கருத்தியலோடு இணைக்கப்படுகின்றது (பொகவந்தலாவ சுகுல தேரர், வனராஜா ராகுல தேரர் - நோட்டன்). தோட்டங்களில் புதிதுபுதிதாக முளைக்கும் கிறிஸ்தவ மடாலயங்களும், தேவாலயங்களும் கண்ணாடிக்கூண்டுக்குள் முளைக்கும் மாதா சொரூபங்களும், அந்நிய நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் மத - கலாசார நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியேயாகும். பௌத்த வழிபாட்டுத்தலங்களும் புதிதாக முளைத்துவருகின்றன. இது மௌனமான கலாசார ஆக்கிரமிப்பாக அமைகின்றது.

## கலைவடிவங்கள்

மலையகக் கலைவடிவங்கள் என நோக்கும்போது அவை ஆடல், பாடல், இசை, ஓவியம். சிற்பம், ஒப்பனை, ஆடை - ஆபரணம், சடங்குகள்,



Image Source : www.importmirror.com

சம்பிரதாயங்கள் என விரிவான தன்மையுடையவை. எனினும் இக்கட்டுரையின் பரப்புக்கருதி அவற்றை,

1. பொன்னர் - சங்கர்

2. காமன் கூத்து

3. அருச்சுனன் தபசு

4. பவளக்கொடி

5. காட்டேரி

என வரையறுத்துக்கொள்ளலாம்.

மலையகச் சமூக - தேச உருவாக்கத்தில் பொன்னர் - சங்கர் கூத்து ஒரு சக்திமிக்க பாத்திரத்தை வகித்து வருகின்றது. பொன்னர் - சங்கர், குன்னுடையான் - தாமரைநாச்சியின் பிள்ளைகளின் வாழ்வு, சோகம், வீரம், தாழ்வு, ஏக்கம், பரிவு, பிரிவு, கம்பேறல், படுகளம், மீளாய்வு என விரியும் காட்சிக்கோலங்களில் மானிட வாழ்வின் சகல கூறுகளும் பின்னிப்பிணைந்துள்ளன. மலையகத் தமிழரிடையே உயிர்வாழும் இக்கலையானது சில தோட்டப்பிரிவுகளில் மூன்று நாள் கூத்தாகவும், சில தோட்டங்களில் வருடம் ஒரு கட்டமாகவும் நிகழ்த்தப்படுகின்றது.

இக்கூத்து தமிழரின் உளவியல்சார் கூறுகளுடன் நெருங்கிய ஊடாட்டமுடையதாகக் காணப்படும் அதேவேளை, மலையக அரசியல் - பண்பாட்டுச் சூழலில் பாட்டாளி வர்க்கத்தின் வீரம் செறிந்த குணாம்சம், சாகச உளவியல், தன்னம்பிக்கை, சுய அடையாளத் தேடல், இறுக்கமான குடும்ப உறவுகள் என அனைத்து மானிடப் பரிமாணங்களுடனும் ஊடாட்டம் கொண்டதாகவும் காணப்படுகிறது.

18 ஆம் நூற்றாண்டின் தமிழகத்தின் வறுமை, தாய்நிலத்தின் இழப்பு, காலனிய அடிமைத்தனம், பரம்பரைக் காணிகள் இழக்கப்படல், உற்றார் - உறவினர் - சுற்றத்தினரைப் பிரிந்த துயரம், தமிழகத்திலிருந்து மலையகம் நோக்கியும், மலையகத்திலிருந்து பலகட்டமாக நிகழ்ந்த உள்ளகப் புலப்பெயர்வுகளும் வெளியகப் புலப்பெயர்வுகளும் ஏற்படுத்திய உளவியற்பாடுகள், பண்பாட்டு அதிர்வுகள் போன்றவற்றிற்கான உளவள ஆற்றுப்படுத்தல் பொன்னர் - சங்கர் ஆற்றுகைச் செல்நெறியூடாக நிகழ்கின்றது. இலங்கை - இந்திய அடிமைச் சாசனங்கள் தந்தவலி ஆழமான உளவியல் பாதிப்பாக மலையக மக்களிடையே பொதிந்துள்ளது. தமிழகக் கிராமங்களிலும், இலங்கையின் வெப்பவலய, ஈரவலய மலைக்காடுகளிலும், கோப்பித் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள், வீதிகள், ரயில் பாதைகளிலும் நடந்தேறிய அவலத்தின் ஆற்றுப்படுத்தல் வடிவமாகவும் பொன்னர் சங்கர் கூத்து நிகழ்கின்றது. அது மீண்டும் மீண்டும் முயற்சிக்கும் போராடும் குணாம்சத்தையும், தீராத வேட்கையையும் வெளிப்படுத்துகின்றது. மலையக மக்கள் தம்மைச் சுயமாகத் தகவமைப்பதற்கான பண்பாட்டுக் கருவியாக இக்கலை அவர்களிடையே நிலைத்திருக்கின்றது.

## அருச்சுனன் தபசு

மலையகத் தமிழரிடையே வழங்கிவரும் அருச்சுனன் தபசு, புலப்பெயர்வையும், அப்புலப்பெயர்வின் போது எதிர்கொண்ட அவலங்களையும் உட்பொதிந்துள்ளது.

*"வனமாய் வனம் கடந்து*
*வனம் கடந்து*
*இந்த வனம் கடந்து*
*அடுத்த வனம் தானடைந்தாராம்*
*அருச்சுன ராஜன் (குறவஞ்சி, தெரேசியா ஆறுமுகம் மாஸ்டர்)*

எனவரும் வனம் கடத்தல் படலப் பாடல்களும், 18 வகையான வனங்களில் அருச்சுனன் எதிர்கொள்ளும் சவால்கள், போராட்டங்கள், அவற்றை வெற்றி கொள்வதற்கான உபாயங்கள், உத்திகள், ஆசிகள் என அனைத்தும் ஆச்சரியப்படத்தக்க வகையில் எம்மக்களின் வரலாற்றியலோடும் வாழ்வியலோடும் ஒத்துப்போகின்றன. அவை எதிர்கால வரலாறு முழுமைக்கும் பொருந்திச் செல்லக்கூடியதாகும்.

இந்தியப் புலப்பெயர்வு, உள்ளகப் புலப்பெயர்வு, வடக்கு நோக்கிய புலப்பெயர்வு மட்டுமல்ல; தற்போதைய மத்திய கிழக்குப் புலப்பெயர்வின் அவலங்களுக்கான ஆற்றுப்படுத்தல் மூலமாகவும் அருச்சுனன் தபசும், அதன் ஆடல் பாடல் வடிவங்களும் காணக்கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக,

"ஒண்ணாம் படிகலமாம்
கண்ணுணால கண்டேன்
தருமர் தம்பி அருச்சுணனும்
பாசுபதம் போறேன்
எனவும்
"எந்தப்பக்கம் பார்த்தாலும்
மூங்கில் வனச்சோலை
தருமர் தம்பி அருச்சுணன்
பாசுபதம் போறேன்
எனவும்
"பச்சிபறக்க வேணும்
ஹரிஹர ராமா, ஹரிஹர ராமா,
இந்தப் பாலர்களைக் காக்க வேணும்
ஹரிஹர ராமா, காக்க வேணும்

எனவும்வரும் பாடல் பகுதிகள் மலையகத் தமிழரின் உளவியல் கூறுகளின் வெளிப்பாட்டு வடிவமாகக் காணப்படுகிறது.

## காமன் கூத்து

மலையகத் தமிழர் பண்பாட்டின் மணிமகுடமாகத் திகழும் கலைவடிவமாக காமன்கூத்து காணப்படுகின்றது. மலையகத் தோட்டப்பிரதேசங்களில் சுமார் 500 இடங்களில் நிகழ்த்தப்படும் காமன்கூத்து மலையகத்தின் தேசிய கலையாகப் பரிணமித்திருக்கின்றது. மனித நாகரிகத்திலும், மக்களிடையேயும் ஆழப்புதைந்த காதல், வீரம், அன்பு, அறம், ஆற்றாமை, சமூக அரசியல், உளவியல் - வர்க்க முரண்கள், அக முரண்கள், காலனிய எதிர்ப்பு, துரைத்தன எதிர்ப்பு, மீளத் தகவமைக்கும் - பழி தீர்க்கும் பரிதவிப்பு, உயிர்த்தெழுதல், இரஞ்சுதல், பண்பாட்டு ஊடாட்டங்களால் ஏற்பட்ட வலிகள் என ஏக்கங்களை வெளிப்படுத்தும் காமன்கூத்து மலையகத் தமிழர் வாழ்வியலோடு நீக்கமற நிறைந்துள்ளது. மலையகச் சமூக உருவாக்கத்தில் பண்பாட்டுக் கலைகள் மலையகச் சமூக வாழ்வியலோடு பின்னிப்பிணைந்துவிட்ட நிலையில், சமூகம் அக்கலைகளைப் பாதுகாக்கும் பாசறையாகத் திகழவேண்டியுள்ளது. மலையகப் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டை மீள உருவாக்கும், தகவமைக்கும் வல்லமையுடைய ஆற்றுகைக் கலைகளைப் பாதுகாத்துப் பேணுவது இன்று அவசியமாகியுள்ளது.

# நிகழ்வுகள்

11.05.2025

## ‘நீர்த்த கடல்’ ஆவணப்படத் திரையிடல் மன்னார் வேதசாட்சிகள் இராக்கினி ஆலயம்

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட ‘நீர்த்த கடல்’ என்ற தலைப்பிலான ஆவணப்படமானது, மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர்கள் ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பில் 11.05.2025 அன்று, முற்பகல் 10.00 மணியளவில் மன்னார் வேதசாட்சிகள் இராக்கினி ஆலயத் தோட்டவெளியில் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில் இளைஞர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

வடக்கு – கிழக்கு தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள் மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலிற்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற் சமநிலையும், கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றது.



16.05.2025

## ‘நீர்த்த கடல்’ ஆவணப்படத் திரையிடல் முல்லைத்தீவு திறன்விருத்தி நிலையம்



எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட ‘நீர்த்த கடல்’ என்ற தலைப்பிலான ஆவணப்படமானது, முல்லைத்தீவு – திறன்விருத்தி நிலையத்தின் ஒழுங்கமைப்பில் 16.05.2025 அன்று, பிற்பகல் 2.00 மணியளவில் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில் திறன் விருத்தி நிலையத்தின் கற்கைநெறி மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

வடக்கு – கிழக்கு தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள் மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலிற்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற் சமநிலையும், கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றது.

02.05.2025

## ‘இரச வர்க்கம்’ நூல் அறிமுக நிகழ்வு
### கொழும்புத் தமிழ்ச் சங்கம்

எழுநா மற்றும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஏற்பாட்டில் முனைவர் பால. சிவகடாட்சம் அவர்களின் ‘யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம்’ என்ற நூலின் அறிமுக நிகழ்வானது கடந்த 02.05.2025 அன்று, வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்விற்கு மருத்துவர் விக்ணவேனி செல்வநாதன் தலைமை வகித்திருந்தார். நிகழ்வில் உரையாற்றிய சமூக ஆய்வாளரான திரு. கந்தையா சண்முகலிங்கம், ”பால. சிவகடாட்சம் அவர்கள் ஏட்டுப்பிரதியிலிருந்த ‘இரசவர்க்கம்’ எனும் நூற்பிரதியை அச்சில் பதிப்பித்துள்ளார். இந்நூல் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்ததாகும். செகராசசேகரன் என்ற பெயருடைய மன்னனால் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சமஸ்கிருத மொழியில் பாண்டித்தியம் உடைய அறிஞர்களால் ஆக்குவிக்கப்பட்டது. செகராஜசேகரத்தின் ஒருசில பகுதிகளே கிடைத்துள்ளன. அழிந்து போனதாகக் கருதப்பட்ட ‘இரசவர்க்கம்’ எனும் பகுதியின் ஏட்டுப் பிரதியொன்றை இந்நூலாசிரியரின் குடும்பத்தினர் பாதுகாத்து வைத்திருந்தனர். அப்பிரதி அதிர்ஷ்டவசமாக அறிஞர் பால. சிவகடாட்சத்தின் கையில் கிடைக்கப்பெற்றது. இவ் ஏட்டுப்பிரதியினை வாசித்து அதனை அச்சு நூல் வடிவமாக்கியுள்ளார். இந்நூல் காலத்தின் கட்டாயத் தேவை” எனத் தெரிவித்திருந்தார். இந்நிகழ்வில் அறிவார்ந்த நபர்கள், கல்வி ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். ‘யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம்’ நூலானது எளிமையான வடிவில் பாரம்பரிய மூலிகைகள் தொடர்பில் ஏட்டுச்சுவடியில் இருந்த விடயங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும். இந்நூல், உடலுக்கு ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கும் மருந்துப் பொருட்களின் குணங்களை எடுத்துரைக்கும் வெண்பாக்களாலானது.





21.05.2025

## ‘நீர்த்தகடல்’ ஆவணப்படத் திரையிடல் வவுனியாப் பல்கலைக்கழகம்

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட ‘நீர்த்த கடல்’ என்ற தலைப்பிலான ஆவணப்படமானது, வவுனியாப் பல்கலைக்கழகத்தினுடைய சுற்றுச்சூழல் கழகத்தின் ஒழுங்கமைப்பில் 21.05.2025 அன்று, பிற்பகல் 2.00 மணியளவில் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

இத்திரையிடலில் பங்குபற்றிய மாணவர் ஒருவர், ”வடக்கு – கிழக்குத் தமிழர் தாயகத்தில் கடல் விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக நிறுவப்பட்ட கடலட்டைப் பண்ணைகள், தமிழ் மக்களின் நிலையான பொருளாதார வளங்களையும், அவர்களின் வாழ்வாதாரத்தையும் எவ்வாறு குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன என்பது குறித்த விரிவான விசாரணையை இந்த ஆவணப்படம் வழங்குகிறது” எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

வடக்கு – கிழக்குத் தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள் மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலிற்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற் சமநிலையும், கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றது.

23.05.2025



## ‘நீர்த்த கடல்’ ஆவணப்படத் திரையிடல் பூநகரி ஜெயபுரம் சமாசம்

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட ‘நீர்த்த கடல்’ என்ற தலைப்பிலான ஆவணப்படமானது, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஒழுங்கமைப்பில் பூநகரி, ஜெயபுரம் சமாசத்தில் 23.05.2025 அன்று, பிற்பகல் 12.30 மணியளவில் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில் மக்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில் பங்குபற்றிய நிரஞ்சன் பரிளா,”குறிப்பாக மீன்பிடி சிறுதொழிலாளர்கள் கடலட்டைப் பண்ணைகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். எமது பூநகரியில் கடலட்டைப் பண்ணைகள் அமைப்பதற்கு எதிராகப் போராட்டங்கள் பல முன்னெடுத்திருந்தோம். நானும் அதில் கலந்துகொண்டிருந்தேன். இதுவரையிலும் எமக்கான நிரந்தர தீர்வு கிட்டவில்லை. இவ் ஆவணத்திரைப்படம் எமது பிரச்சினைகளை வெளிப்படுத்தியிருக்கின்றது” என கருத்துத் தெரிவித்திருந்தார்.

வடக்கு – கிழக்குத் தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள் மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலிற்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற் சமநிலையும், கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றது

28.05.2025

## ‘நீர்த்த கடல்’ ஆவணப்படத் திரையிடல் வவுனியா/புதுக்குளம் மகா வித்தியாலயம்

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட ‘நீர்த்த கடல்’ என்ற தலைப்பிலான ஆவணப்படமானது, 28.05.2025 அன்று, பிற்பகல் 12.30 மணியளவில் வவுனியா/புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர். திரையிடலின் பின்னர் குறித்த மாணவர்களுடன் இவ் ஆவணப்படம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு – கிழக்குத் தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள் மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலிற்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற் சமநிலையும், கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றது.



# எழுநா வெளியீடு






















முன்பதிவுகளுக்கு +94 777 97 5029

SpotOn Money



SEND MONEY to SRI LANKA

FIRST TRANSFER FEE FREE*

Immediate Payment to Any Account

*Partnership* with

CargillsBank

BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

0207 341 7300

www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**

#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**

#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



**Nimal Vinayagamoothy, CPA, CGA**

Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

# நூல்சார் செயற்பாடுகள்




தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எமுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் ‘ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்’ எனும் பொருண்மையில் ‘ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org




# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX ELITE**

**021 224 2855 | 0777 44 1113**

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
**(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)**

**BUY-SELL-RENT HOME AND LANDS**

**WWW.REMAXELITE.LK**



We work with 35 financial institutions
Business & Personal Insurance
Free Financial Education for everyone
We work with 35 financial institutions
Long Term Care | Elder's Insurance
Children's Insurance
Best Services
1. RESP/PRSP
2. Life Insurance
3. Auto Insurance
4. Estate Planning
5. Home Insurance
6. Disability Insurance
7. Mortgage Insurance
8. Travel/Visa Insurance
9. Non-Medical Insurance
10. Critical illness Insurance
11. Dental & Drug Insurance
12. Guaranteed Investments
416-731-2829




SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world


வீடு என்பது
ஞாபகங்களின் கலவை
காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள்,
தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள்
உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.
தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து
உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக
விளக்கமளிக்க முடியும்.
நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.
Re/Max Community Realty Inc
ரமணன் சந்திரசேகரமூர்த்தி Bsc, MBA
வாக்குறுதிகள் அல்ல.
வாங்குவதற்கும் விற்பதற்குமான தீர்வு.
அலைபேசி: 416-290-6000

# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**
CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**
ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**
ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**
OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**
EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**
BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**
FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**
LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**
callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**
LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**
NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

Helping you harness the power around you
**NEW DAWN ENERGY SOLUTIONS**



## SOLAR POWER சூரிய சக்தி

SAFE ☼ CLEAN ☼ FREE ☼ பாதுகாப்பானது ☼ இலவசமானது ☼ சுத்தமானது

**AUTOMATIC OPERATION | NO REFUELLING | POWER DIRECTLY TO YOUR HOME**

**GRID-TIED SOLAR**
With this solar system you can earn up to $3850 annually for 20 years.

**NANO GRID SOLAR**
With this solar system you can cut your electricity bill to zero and you are never without electricity.

**ENERGY CONSERVATION**
With this solutions you can reduce your energy bill.

**OFF-GRID SOLAR**
With this solar system you can have electricity wherever you want.

**SOLAR POOL HEATER**
With this solar system you can cut your pool heating bill to zero.

info@NewDawn-ES.Com | www.NewDawn-ES.Com | 416-855-9377

HomeStars
Read Our Reviews
www.homestars.com

A+ Rating BBB ACCREDITED BUSINESS

500 2015 TOP SOLAR CONTRACTORS

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**

Netwyn.Place

# Unleash Your Potential

www.netwyn.place

10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4

**+1 416-906-1414**




**BOOK YOUR TOUR TODAY**



